லூக்கா - முன்னுரை

காலம்

கி.பி. 58-63 - இடம் சரியாகத் தெரியவில்லை.

ஆசிரியர்

லூக்கா. இவர் ஒரு மருத்துவர். (கொலோ 4:14; 2தீமோ 4:11; பிலே 1:24) லூக்கா சில வசனங்களில் தன்னைப் பன்மைச் சுட்டுப் பெயரால் "நாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அப் 16:10-17; அப் 20:5-15; அப் 21:1-18; அப் 27:1-28:16) இவர் ஒரு யூதர். ஒருவேளை லூகியாக இருக்கலாம். (ரோமர் 16:21; அப் 13:1) லூக்காவும், லூகியும் ஒரே நபரென்றால் லூக்கா பவுலின் உறவினர் ஆவார்.

மையக்கருத்து

இயேசு கிறிஸ்து தேவன் எதிர்பார்க்கும் புருஷன். (God's ideal Man) (சக 6:12) இவர் பிதாவைச் சார்ந்திருந்தார். (லூக்கா 3:21) பாவிகளுக்குச் சிநேகிதர் (லூக்கா 5:29; லூக்கா 7:29-37); கிருபையுள்ளவர் (லூக்கா 7:13; லூக்கா 13:1); பிறன் (லூக்கா 10:30);

லூக்கா எழுதின சுவிசேஷத்தில் காணப்படும் விசேஷித்த காரியங்கள்

அற்புதங்கள்

1. திரளான மீன்களைப் பிடித்தல் (லூக்கா 5:4-11)
2. நாயீன் ஊரில் மரித்த வாலிபனை உயிரோடு எழுப்புதல் (லூக்கா 7:11-18)
3. நிமிரக்கூடாத கூனியைச் சொஸ்தமாக்குதல் (லூக்கா 13:11-17)
4. நீர்க்கோவை வியாதியுள்ள மனுஷனைச் சொஸ்தமாக்குதல் (லூக்கா 14:1-6)
5. பத்துக் குஷ்டரோகிகளைச் சுத்தமாக்குதல் (லூக்கா 17:11-19)
6. பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் வலதுகாதைச் சொஸ்தமாக்குதல் (லூக்கா 22:50-51)

உவமைகள்

1. கடன் கொடுக்கிறவன் (லூக்கா 7:41-43)
2. நல்ல சமாரியன் (லூக்கா 10:30-37)
3. உதவி புரியும் சிநேகிதன் (லூக்கா 11:5-8)
4. ஐசுவரியமுள்ள மதிகேடன் (லூக்கா 12:16-21)
5. கனிகொடாத அத்திமரம் (லூக்கா 13:6-9)
6. காணாமல்போன வெள்ளிக்காசு (லூக்கா 15:8-10)
7. இளைய குமாரன் (லூக்கா 15:11-32)
8. விடாமுயற்சியுள்ள விதவை (லூக்கா 18:1-8)
9. ஜெபம் பண்ணும் இரண்டு மனுஷர் (லூக்கா 18:9-14)

சம்பாஷணைகள்

1. லூக்கா 1:5-80
2. லூக்கா 2:1-52
3. லூக்கா 3:10-14
4. லூக்கா 10:1-20
5. லூக்கா 19:1-10,41-44
6. லூக்கா 22:44
7. லூக்கா 23:7-12
8. லூக்கா 23:27-31
9. லூக்கா 23:34
10. லூக்கா 23:40-43
11. லூக்கா 24:50-53).

லூக்கா - முன்னுரை

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 24

வசனங்கள் - 1,151

கேள்விகள் - 165

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 9

புதிய தீர்க்கதரிசனங்கள் - 54

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 930

பொருளடக்கம்

I. யோவான் ஸ்நானனின் பிறப்பு

1. லூக்கா எழுதின சுவிசேஷத்திற்கு முன்னுரை - (1:1-4)
2. யோவான் ஸ்நானனுடைய பெற்றோரின் வரலாறு - (1:5-7)
3. யோவான் ஸ்நானனின் பிறப்பைப் பற்றிய முன்னறிவிப்பு - (1:8-17)
4. சகரியாவிற்கு அடையாளம் - (1:18-20)
5. எலிசபெத்து கர்ப்பவதியாகிறாள் - (1:21-25)
6. இயேசுவின் பிறப்பைப் பற்றிய முன்னறிவிப்பு - (1:26-38)
7. மரியாள் எலிசபெத்தைச் சந்திக்க வருகிறாள் - (1:39-45)
8. கர்த்தரை மகிமைப்படுத்தி பாடிய பாடல் - (1:46-56)
9. யோவான் ஸ்நானனின் பிறப்பும் விருத்தசேதனமும் - (1:57-63)
10. சகரியாவின் வாய்திறக்கப்பட்டு நாவு கட்டவிழ்க்கப்படுகிறது - (1:64-66)
11. சகரியாவின் தீர்க்கதரிசனம் - (1:67-79)
12. யோவான் ஸ்நானனின் குழந்தைப் பருவம் - (1:80)

II. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு முற்பட்ட காலம்

1. இயேசுவின் பிறப்பு - (2:1-7)
2. மேய்ப்பர்களுக்கு கர்த்தருடைய தூதனின் அறிவிப்பு - (2:8-12)
3. பரமசேனையின் திரள் தேவனைத் துதிக்கிறார்கள் - (2:13-14)
4. இயேசுவின் பிறப்பை மேய்ப்பர்கள் உறுதி பண்ணுகிறார்கள் - (2:15-20)
5. இயேசுவிற்கு விருத்தசேதனமும் பெயரிடப்படுவதும் - (2:21)
6. மரியாளின் சுத்திகரிப்பு - (2:22-24)
7. சிமியோனின் தீர்க்கதரிசனம் - (2:25-35)
8. அன்னாள் கர்த்தரைப் புகழ்ந்து பேசுகிறாள் - (2:36-37)
9. இயேசுவின் குழந்தைப்பருவம் - (2:38-50)
10. இயேசு தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நமக்கு ஒரு முன்மாதிரியைக் காண்பிக்கிறார் - (2:51-52)

III. யோவான் ஸ்நானனின் ஊழியம் -

1. யோவான் ஸ்நானனின் காலமும் அழைப்பும் - (3:1-2)
2. யோவான் ஸ்நானனுடைய ஊழியத்தின் நோக்கம் - (3:3-6)
3. யோவான் ஸ்நானன் ஜனங்களுக்கு கூறிய ஏழு அம்ச செய்தி - (3:7-11)
4. ஆயக்காரருக்கும் போர்ச்சேவகருக்கும் யோவான் ஸ்நானன் கூறிய நான்கு அம்ச செய்தி - (3:12-14)
5. இயேசு கிறிஸ்து பற்றி யோவான் ஸ்நானன் முன்குறித்துக் கூறுகிறான் - (3:15-18)
6. ஏரோது யோவான் ஸ்நானனைக் கைது பண்ணுகிறான் - (3:19-20)

லூக்கா - முன்னுரை

IV. தமது ஊழியத்திற்காக இயேசு கிறிஸ்துவின் இறுதி ஆயத்தம் -

1. தண்ணீர் ஞானஸ்நானம் - *(3:21)*

2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - *(3:22)*

3. மரியாள், யோசேப்பு ஆகியோரின் வம்சவரலாறு

   (1) இயேசுவிலிருந்து தாவீது வரையிலும் - *(3:23-31)*

   (2) தாவீதிலிருந்து ஆபிரகாம் வரையிலும் - *(3:32-34)*

   (3) ஆபிரகாமிலிருந்து ஆதாம் வரையிலும் - *(3:35-38)*

4. இயேசுவை சாத்தான் சோதிக்கிறான் - *(4:1-13)*

V. இயேசுவின் ஊழியமும் உபதேசமும் -

1. இயேசு கலிலேயாவில் தமது ஊழியத்தை ஆரம்பிக்கிறார் - *(4:14)*

2. தாம் வளர்ந்த ஊரில் இயேசுவின் முதலாவது பிரசங்கம் - *(4:15-27)*

3. இயேசுவின் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு - இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - *(4:28-30)*

4. இயேசு கப்பர்நகூமை தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - *(4:31-32)*

5. இயேசு அசுத்த ஆவியை துரத்துகிறார் - *(4:33-37)*

6. பேதுருவின் மாமியை சொஸ்தமாக்குகிறார் - *(4:38-39)*

7. பிசாசுகளைத் துரத்துகிறார் - அநேகரை சொஸ்தமாக்குகிறார் - *(4:40-41)*

8. கலிலேயாவிற்கு இயேசுவின் இரண்டாவது பிரயாணம் - *(4:42-44)*

9. படவில் உட்கார்ந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணுகிறார் -

10. இயேசு அற்புதம் செய்து படவை பயன்படுத்தியதற்கு கிரயம் செலுத்துகிறார் - *(5:4-7)*

11. பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - *(5:8-11)*

12. இயேசு குஷ்டரோகியை சுத்தமாக்குகிறார் - *(5:12-14)*

13. இயேசு திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - இயேசுவின் கீர்த்தி அதிகமாகப் பரம்பிற்று - *(5:15-16)*

1 அதிகாரம்

I. யோவான் ஸ்நானனின் பிறப்பு - (லூக் 1:1-80)

1. லூக்கா எழுதின சுவிசேஷத்திற்கு முன்னுரை -

லூக்கா 1:1 மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை,

லூக்கா 1:2 ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால்,

லூக்கா 1:3 ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று,

லூக்கா 1:4 அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைப் பலர் எழுதினார்கள். பரிசுத்த வேதாகமத்தில் அந்தச் சரித்திரங்கள் எல்லாம் இடம்பெறவில்லை. நான்கு புஸ்தகங்கள் மட்டுமே சுவிசேஷப் புஸ்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மற்றவையெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டன. வேதாகம வரலாற்றில் 46 புஸ்தகங்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, அவை தள்ளுபடி ஆகமங்கள் என்று அழைக்கப் படுகிறது. அவற்றில் 20 பழைய ஏற்பாட்டு தள்ளுபடி ஆகமங்கள். 26 புதிய ஏற்பாட்டு தள்ளுபடி ஆகமங்கள்.

தற்போது நமது பரிசுத்த வேதாகமத்தில் 66 புஸ்தகங்கள் அங்கீகரிக்கப்பட்டு, கோர்க்கப் பட்டிருக்கிறது. லூக்காவின் காலத்தில் பல தள்ளுபடி ஆகமங்கள் வழக்கத்தில் இருந்தன. அதைப் பற்றி லூக்கா எழுதும்போது "அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால்" என்று எழுதியிருக்கிறார்.

"சங்கதி" - இதற்கான கிரேக்கச் சொல் "டையிஜிஸ்" (**diegesis**) இந்தச் சொல் புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு வரலாறு என்று பொருள்.

சங்கதி (**declaration**) - διήγησις - **dieegeesis** - 1335

பெண்பால் பெயர்ச்சொல் - சங்கதி

"நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகள்" - சான்றுகளால் நிரூபிக்கப்பட்ட சத்தியங்கள். இயேசு கிறிஸ்து கூறிய சத்தியங்களுக்கும், செய்த அற்புதங்களுக்கும் ஆயிரக்கணக்கானோர் சாட்சிகளாக இருந்தார்கள். அவை இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தத்துவத்தையும், அவருடைய தெய்வீக ஊழியத்தையும் நிரூபிக்கின்றன. ஆகையினால், இந்தச் சங்கதிகளை லூக்காவும், அவனோடு சேர்ந்திருந்தவர்களும் நம்புகிறார்கள்.

"ஆரம்பமுதல்" - கிறிஸ்துவின் ஜீவியத்தின் ஆரம்பமுதல். (அப் 1:21-22)

கண்ணாரக் காணுதல் (**eyewitnesses**) - αὐτόπτης - **autoptees** - 845

ஆண்பால் பெயர்ச்சொல் - கண்ணாரக் காணுதல் - ஒருவர் தன்னுடைய சொந்தக் கண்களால் காணபது.

போதித்தவர்கள் (**ministers**) - ὑπηρέτης - **hypeeretees** - 5257

ஆண்பால் பெயர்ச்சொல் - போதித்தவர்கள், சேவகன், வேலைக்காரன், பணிவிடைக்காரன், ஊழியக்காரர், உதவிக்காரர்

இந்தக் கிரேக்கச்சொல் தமிழ் மொழியில் பல்வேறு விதமாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. சேவகன் "**office**" (மத் 5:25; யோவான் 7:32,45-46; யோவான் 18:3, 12,18,22; யோவான் 19:6; அப் 5:22,26) பணிவிடைக்காரன் "**minister**" (லூக்கா 1:2; லூக்கா 4:20; அப் 13:5; அப் 26:16; 2கொரி 4:1) உதவிக்காரன் "**servant**" (மத் 26:58; மாற்கு 14:54,65; யோவான் 18:36).

லூக்கா – தொகுப்புரை

1 அதிகாரம்

"ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும்........அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று" - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பல சத்தியங்கள் லூக்காவிற்குத் தெரிந்திருந்தது. ஆகையினால் அவற்றை லூக்கா எழுத வேண்டுமென்று விரும்பினார்.

சத்தியங்களை லூக்கா தெரிந்து கொண்ட விதம்

1. கண்ணாரக்கண்ட சாட்சிகள் (லூக்கா 1:2)
2. வசனத்தைப் போதித்தவர்கள் (லூக்கா 1:2)
3. எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அறிதல். (லூக்கா 1:3)
4. ஆதிமுதல்

ஆதிமுதல் **(from above)** - ἄνωθεν - **anoothen** - 509

வினையடை - மேலிருந்து, ஆதிமுதல், மறுபடியும், பரத்திலிருந்து, உன்னதத்திலிருந்து (யோவான் 3:3,7,31; யோவான் 19:11,23) இந்த வாக்கியம் தெய்வீக ஏவுதலையும் குறிக்கும். (2 தீமோ 3:16)

"மகா கனம்பொருந்தியவர்" - சமுதாயத்தில் கொடுக்கப்படும் பட்டம். இந்தப் பட்டத்திற்கும் அவருடைய நீதிநெறி வாழ்விற்கும் சம்மந்தம் இருக்காது. (அப் 23:26; அப் 26:25).

"தேயோப்பிலு" - இந்தப் பெயர் இந்த வசனத்திலும் அப் 1:1 ஆவது வசனத்திலும் மட்டுமே வந்திருக்கிறது. யோசபஸ் **(Josephus)** என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் தேயோப்பிலு என்னும் பெயரை இரண்டு இடங்களில் இரண்டு நபர்களுக்குக் குறிப்பிடுகிறார். இவர்கள் பிரதான ஆசாரியர்கள். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு இவருக்கு உபதேசிக்கப்பட்டது. (லூக்கா 1:3)

2. யோவான் ஸ்நானனுடைய பெற்றோரின் வரலாறு -

லூக்கா 1:5 யூதேயாதேசத்தின் ராஜாவாகிய ஏரோதின் நாட்களில், அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா என்னும் பேர் கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி, அவள் பேர் எலிசபெத்து.

லூக்கா 1:6 அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்.

லூக்கா 1:7 எலிசபெத்து மலடியாயிருந்த படியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது; இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்.

"யூதேயாதேசத்தின் ராஜா" - ரோமப்பேரரசின் பாராளுமன்றத்தார் தாங்கள் விரும்பும் ஒருவருக்கு இப்படிப்பட்ட பட்டத்தைச் சூட்டுவார்கள். (மத் 2:3)

"சகரியா" - சாதாரண ஆசாரியன். தேவாலயத்துச் சேவைக்காக தாவீது நியமித்த ஆசாரிய வகுப்பில் இவனுடைய முன்னோர்கள் வருகிறார்கள். லூக்கா 1:8-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற சேவைகளை ஒருவாரக்காலத்திற்கு ஒவ்வொரு ஆசாரிய வகுப்பாரும் நிறைவேற்றுவார்கள். (1 நாளா 24:1). மொத்தம் 24 ஆசாரிய வகுப்பினர் இருந்தார்கள்.

"அபியா என்னும் ஆசாரிய வகுப்பு" - (1 நாளா 24:10; நெகே 12:17)

"ஆரோனுடைய குமாரத்திகள்" - ஒரு ஆசாரியன் லேவிய ஸ்திரீயை திருமணம் செய்து கொள்வது சட்டப்பிரகாரம் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. ஆயினும் ஆசாரியன் தன் ஆசாரிய வகுப்பிற்குள்ளேயே திருமணம் செய்து கொள்வதை அக்காலத்து ஆசாரிய வகுப்பார் விரும்பினார்கள். (லேவி 21:14)

"எலிசபெத்" - ஆரோனுடைய மனைவியின் பெயரும் எலிசபெத். (யாத் 6:23)

1 அதிகாரம்

"குற்றமற்றவர்கள்" - பவுலைப் போல இவர்களும் மார்க்கச்சடங்குகளில் குற்றமற்றவர்களாக இருந்தார்கள். (பிலி 3:6) கர்த்தரிட்ட சகல கற்பனைகளையும் நியமங்களையும் தங்கள் ஜீவியங்களில் வழுவாமல் கடைப்பிடித்து வந்தார்கள்.

"எலிசபெத்து மலடியாயிருந்தபடியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது" - இது சாபமும், நிந்தையுமான காரியம். (ஆதி 16:2; ஆதி 29:32; ஆதி 30:1-13; உபா 28:18; 1சாமு 1:6; ஏசா 4:1)

"இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சாராளையும், ஆபிரகாமையும்போல வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள். (ஆதி 11:30; ஆதி 17:17) யோவானின் பிறப்பு ஈசாக்கின் பிறப்பைப்போன்று ஓர் அற்புதமான காரியம். (ரோமர் 4:17-21; எபி 11:11)

3. யோவான் ஸ்நானனின் பிறப்பைப் பற்றிய முன்னறிவிப்பு -

லூக்கா 1:8 அப்படியிருக்க, அவன் தன் ஆசாரிய வகுப்பின் முறைப்படி தேவசந்நிதியிலே ஆசாரிய ஊழியம் செய்துவருகிற காலத்தில்,

லூக்கா 1:9 ஆசாரிய ஊழிய முறைமையின்படி அவன் தேவாலயத்துக்குள் பிரவேசித்து தூபங்காட்டுகிறதற்குச் சீட்டைப் பெற்றான்.

லூக்கா 1:10 தூபங்காட்டுகிற வேளையிலே ஜனங்களெல்லாரும் கூட்டமாய் வெளியே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

லூக்கா 1:11 அப்பொழுது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலது பக்கத்திலே நின்று அவனுக்குத் தரிசனமானான்.

லூக்கா 1:12 சகரியா அவனைக்கண்டு கலங்கி, பயமடைந்தான்.

லூக்கா 1:13 தூதன் அவனை நோக்கி: சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக.

லூக்கா 1:14 உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்.

லூக்கா 1:15 அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்.

லூக்கா 1:16 அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான்.

லூக்கா 1:17 பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளை களிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப் படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்.

தூபங்காட்டு **(burn incense)** - θυμιάω - **thymiaoo** - 2370

வினைச்சொல் - தூபங்காட்டு.

தூபங்காட்டுவதைப் பற்றிய முதலாவது குறிப்பு எண்ணாகமத்தில் வருகிறது. (எண் 16:6) அங்கு கீழ்ப்படியாமையைப் பற்றிக் கூறப்படுகிறது. தூபங்காட்டுவதைப் பற்றிய கடைசிக்குறிப்பில் அவிசுவாசத்தைப் பற்றிக் கூறப்படுகிறது. (லூக்கா 1:20)

மகாபரிசுத்த ஸ்தலமுள்ள ஆலயம். இதன் கிரேக்கச்சொல் "நவோஸ்" **(naos)** "ஹைரோன்" **(hieron)** தேவாலயத்தின் பிரகாரத்தைக் குறிக்கும்.

1 அதிகாரம்

தேவாலயம் (temple) - ναός - naos - 3485

ஆண்பால் பெயர்ச்சொல் - தேவாலயம், ஆலயம்

தேவாலயப்பிரகாரம் (temple) - ἱερόν - hieron - 2411

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- தேவாலயப்பிரகாரம், தேவாலயம், ஆலயம், கோவில்

"கர்த்தருடைய தூதன்" - லூக்கா எழுதின சுவிசேஷத்தில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் தூதர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (லூக்கா 1:11,26; லூக்கா 2:9,15,21; லூக்கா 12:8; லூக்கா 15:10; லூக்கா 16:22; லூக்கா 22:43; லூக்கா 24:4,23)

"தூபபீடம்" - (யாத் 30:1; யாத் 37:25-28; 1இராஜா 7:48)

"சகரியா அவனைக்கண்டு கலங்கி, பயமடைந்தான்" - (தானி 10:7; மாற்கு 16:8; வெளி 1:17)

தீர்க்கதரிசன எண் - 1

"தூதன் அவனை நோக்கி: சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக................" (லூக்கா 1:13-17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"உன் வேண்டுதல் கேட்கப்பட்டது" - எபிரெய மொழியின் இலக்கணத்தின் பிரகாரம் நிறைவு பெற்ற காரியத்தைக் குறிக்கும் வினைச்சொல் ஆகும். (aorist) சகரியா இப்பொழுது இந்தக் காரியத்திற்காக ஜெபம் பண்ணவில்லை. அவனுக்கு வயதாயிற்று. ஆயினும் அவனுடைய வாலிப நாட்களில் அவன் ஏறெடுத்த வேண்டுதல்களைக் கர்த்தர் கேட்டார்.

"யோவான்" - இந்தப் பெயருக்கு "யெகோவா கிருபை அளித்திருக்கிறார்" என்று பொருள். வேதாகமத்தில் ஏழு நபர்களுக்கு அவர்கள் பிறப்பதற்கு முன்பாகவே பெயர் கொடுக்கப்பட்டது. (மத் 1:21) அவர்களில் யோவானும் ஒருவன். யோவானைப் பற்றி முன்னறிவிக்கப்பட்ட காரியங்களைலூக்கா 1:13-17 ஆகிய வசனங்களில் நாம் வாசித்தறியலாம்.

"கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான்" - தன்னைத்தான் தாழ்த்துகிறவன் பெரியவனாக இருப்பான். தன்னைத்தான் உயர்த்துகிறவன் தள்ளிவிடப் படுவான். யோவான் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துவதினால் அவன் கர்த்தருடைய சமுகத்தில் பெரியவனாக இருக்கிறான். கர்த்தரே யோவானைப் பெரியவனாக்கியிருக்கிறார்.

"திராட்சரசமும் மதுவும் குடியான்" - திராட்சைப்பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட திராட்சரசத்தையும், போதையைத் தரும் வேறு எந்த மதுபானத்தையும் யோவான் குடிக்கமாட்டான்.

"தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்" - யோவான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான். ஆனால் அவன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. (மத் 3:14).

லூக்கா எழுதின சுவிசேஷத்தில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள்

1. யோவான் ஸ்நானன் (லூக் 1:15-17,80)
2. மரியாள் (லூக் 1:35,46-55)
3. எலிசபெத்து (லூக் 1:41-45)
4. சகரியா (லூக் 1:67-79)
5. சிமியோன் (லூக் 2:25-35)
6. அன்னாள் (லூக் 2:36-38)
7. சீஷர்கள் (லூக் 9:1-6; லூக் 10:1-20 = மத் 10:1-8, 20)
8. இயேசு கிறிஸ்து (லூக் 2:40-52)

1 அதிகாரம்

இயேசுவும், சீஷர்களும், மரியாளும் பின்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

“அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவன்” - எலிசாவிடம் எலியாவின் ஆவியையும், பலத்தையும்போல இரட்டிப்பான மடங்கு இருந்தது. (2இராஜா 2:9) எலியாவிடம் ஆவியும், பலமும் இருந்த அளவிற்கு யோவானிடம் இருந்தது. மோசேயின் அளவு (எண் 11:17) அல்லது இயேசுவிடம் இருந்ததுபோன்று ஆவியானவரின் அளவில்லாத முழுமை. (யோவான் 3:34)

“பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்துவான்” - யோவானுடைய ஊழியத்தின் மூன்று நோக்கங்கள்.

1. இஸ்ரவேல் குடும்பத்தாரை ஒன்று சேர்ப்பான்.
2. கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்குத் திருப்புவான்.
3. உத்தமமான ஜனத்தை இயேசு கிறிஸ்துவிற்கு ஆயத்தப்படுத்துவான் (மத் 3:1-3,11; யோவான் 1:31)

4. சகரியாவிற்கு அடையாளம்

லூக்கா 1:18 அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி: இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே என்றான்.

லூக்கா 1:19 தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்;

லூக்கா 1:20 இதோ, தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய் என்றான்.

“இதை நான் எதினால் அறிவேன்” - தனக்கு வயதான காரணத்தினால் இனிமேல் பிள்ளை பெறும் சிலாக்கியம் தனக்கு இல்லை என்று சகரியா நினைத்தான். ஆகையினால் இந்தக் கேள்வியைக் கேட்கிறான். மரியாளுக்கோ திருமணம் ஆவதற்கு முன்பாகவே பிள்ளையைப்பெறவேண்டிய வாய்ப்பு வருகிறது. (லூக்கா 1:34)

“நான் காபிரியேல் என்பவன்” - தானியேலிடம் வந்த அதே தூதன் (தானி 8:16; தானி 9:21) மரியாளிடம் அனுப்பப்பட்டவன் (லூக்கா 1:26) வேதாகமத்தில் நான்கு தூதர்களின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அவர்களில் இரண்டு பேர் விழுந்துபோன தூதர்களான லூசிபரும், அபத்தோனும். மற்ற இருவரும் நல்ல தூதர்கள். அவர்களின் பெயர் மிகாவேல், காபிரியேல்.

1. லூசிபர் (ஏசா 14:12; எசே 28:11-17)
2. மிகாவேல் (தானி 10:13,21; தானி 12:1; யூதா 1:9; வெளி 12:7)
3. காபிரியேல் (தானி 8:16; தானி 9:21; லூக் 1:19,26)
4. அபத்தோன் அல்லது அப்பல்லியோன் (வெளி 9:11)

செப்துவஜிந்த் பழைய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1. எந்த நற்செய்தியும் (1சாமு 31:9; 2சாமு 1:20; 1நாளா 10:9)
2. தேவனுடைய கிருபை (சங் 36:10; சங் 96:2)
3. மேசியாவின் ஆசீர்வாதங்கள் (ஏசா 40:9; ஏசா 61:1)

1 அதிகாரம்

புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1. தேவனுடைய ராஜ்யமும், பரலோக ராஜ்யமும் (மத் 4:23; மத் 9:35; மத் 24:14; மாற்கு 1:14)
2. தேவன் (ரோமர் 1:1; ரோமர் 15:16)
3. இயேசு கிறிஸ்து (மாற்கு 1:1; ரோமர் 1:16; ரோமர் 15:29; 1கொரி 9:12-18)
4. இரட்சிப்பு (மாற்கு 16:15; லூக்கா 4:18; எபே 1:3)
5. தேவனுடைய கிருபை (அப் 20:24)
6. சமாதானம் (ரோமர் 10:15; எபே 6:15)
7. வாக்குத்தத்தங்கள் (எபே 3:6; எபி 8:6)
8. சத்தியம் (எபே 1:13; கொலோ 1:5)
9. விசுவாசம் (பிலி 1:27)
10. நம்பிக்கை (கொலோ 1:23)
11. நித்தியம் (2தீமோ 1:10)
12. புதிய உடன்படிக்கையின் பொதுவான ஆசீர்வாதங்கள் (மாற்கு 16:15; கலா 1:11; கலா 3:8)

சுவிசேஷம் ஒன்றே. மத்தேயுவிலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் உள்ள செய்தியே சுவிசேஷம். இதற்கு யூதரும், புறஜாதியாரும் கீழ்ப்படிய வேண்டும். (மத் 28:20; அப் 1:1-2; ரோமர் 10:12; 1கொரி 12:13; கலா 3:28; எபே 2:11-22; எபே 3:5-11)

ராஜ்யத்தின் சுவிசேஷம் என்பது வரப்போகிற ராஜ்யத்தையும் குறிக்கும். அதேசமயத்தில் இரட்சிப்பையும் கிறிஸ்துவின் நற்செய்தியினால் வரும் எல்லா ஆசீர்வாதங்களையும் குறிக்கும். (மத் 6:33; மத் 13:11-50; மத் 18:1-35; மாற்கு 1:14-15; யோவான் 3:3-5; அப் 8:12; அப் 20:25; அப் 28:23,31; ரோமர் 14:17; 2கொரி 4:20; 2கொரி 6:9; கொலோ 1:13)

தீர்க்கதரிசன எண் - 2

"தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய்" (லூக்கா 1:20) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இதோ, தகுந்தகாலத்திலே நிறைவேறப் போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாத படியினால்" - சகரியா தேவனைச் சந்தேகப்பட்டான். தேவன் தனக்குக் கூறிய காரியம் நிறைவேறுவதற்கு ஒரு அடையாளத்தைக் கேட்டான். அவனிடம் அவிசுவாசம் இருந்தது. கர்த்தர் அவனுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுத்தார். ஆனால் அந்த அடையாளமே அவனுக்குத் தண்டனையாயிற்று. அவன் பேசக்கூடாத ஊமையானான்.

5. எலிசபெத்து கர்ப்பவதியாகிறாள்

லூக்கா 1:21 ஜனங்கள் சகரியாவுக்குக் காத்திருந்து, அவன் தேவாலயத்தில் தாமதித்ததினால் ஆச்சரியப்பட்டார்கள்.

லூக்கா 1:22 அவன் வெளியே வந்தபோது அவர்களிடத்தில் பேசக்கூடாமலிருந்தான்; அதினாலே தேவாலயத்தில் ஒரு தரிசனத்தைக் கண்டானென்று அறிந்தார்கள். அவனும் அவர்களுக்குச் சைகை காட்டி ஊமையாயிருந்தான்.

லூக்கா 1:23 அவனுடைய ஊழியத்தின் நாட்கள் நிறைவேறினவுடனே தன் வீட்டுக்குப் போனான்.

லூக்கா 1:24 அந்நாட்களுக்குப்பின்பு, அவன் மனைவியாகிய எலிசபெத்து கர்ப்பவதியாகி: ஜனங்களுக்குள்ளே எனக்கு உண்டாயிருந்த நிந்தையை நீக்கும்படியாகக் கர்த்தர் இந்த நாட்களில் என்மேல் கடாட்சம் வைத்து,

லூக்கா 1:25 எனக்கு இப்படிச் செய்தருளினார் என்று சொல்லி, ஐந்து மாதம் வெளிப்படாதிருந்தாள்.

1 அதிகாரம்

"ஜனங்கள் சகரியாவுக்குக் காத்திருந்து, அவன் தேவாலயத்தில் தாமதித்ததினால் ஆச்சரியப்பட்டார்கள்" - ஆசாரியன் தூபம்காட்டும்போது ஜனங்கள் சிறிது நேரம் மட்டுமே காத்திருப்பார்கள். அதன்பின்பு, ஆசாரியன் வெளியே வந்து, காத்திருக்கும் ஜனங்களை ஆசீர்வதிப்பான். இந்த முறை ஜனங்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதம் கிடைக்கிறது. அவர்கள் அற்புதத்தைக் கண்டார்கள். தேவதூதன் வந்ததினால் ஏற்பட்ட விளைவுகளைக் கண்டார்கள்.

"அவனுடைய ஊழியத்தின் நாட்கள் நிறைவேறினவுடனே தன் வீட்டுக்குப் போனான்" - சகரியா ஊமையானான். ஊமையாக இருந்தாலும் அவன் தனக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை விட்டு ஓடிவிடவில்லை. தன்னுடைய வீட்டிற்குப்போய் தன் மனைவியிடம் இந்த நற்செய்தியைச் சொல்வதற்காக அவசரப்பட்டு ஓடிப்போகவில்லை. அவனுக்கு நியமிக்கப்பட்ட கடமையைப் பொறுமையோடு நிறைவேற்றிய பின்பு, சகரியா தன்வீட்டிற்குப்போனான்.

"அவன் மனைவியாகிய எலிசபெத்து கர்ப்பவதியாகி..............ஐந்து மாதம் வெளிப்படாதிருந்தாள்" - லூக்கா 1:13 ஆவது வசனம் நிறைவேற ஆரம்பிக்கிறது. தேவனுடைய இரக்கம் பரிபூரணமாக நிரூபிக்கப்பட வேண்டுமென்று எலிசபெத்து விரும்பினாள். தன்னுடைய ஜீவியத்தில் ஏற்பட்ட நற்செய்தியை ஜனங்கள் மத்தியில் சென்று அறிவிப்பதற்கு முன்பாக ஐந்து மாதம் காத்திருந்து, கர்த்தருடைய கிருபையை உறுதிசெய்து கொண்டாள்.

6. இயேசுவின் பிறப்பைப் பற்றிய முன்னறிவிப்பு

லூக்கா 1:26 ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில்,

லூக்கா 1:27 தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்.

லூக்கா 1:28 அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

லூக்கா 1:29 அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

லூக்கா 1:30 தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்.

லூக்கா 1:31 இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.

லூக்கா 1:32 அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.

லூக்கா 1:33 அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.

லூக்கா 1:34 அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.

லூக்கா 1:35 தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.

லூக்கா 1:36 இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப் பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்.

1 அதிகாரம்

லூக்கா 1:37 தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்.

லூக்கா 1:38 அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.

"ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன்.........அனுப்பப்பட்டான்" - எலிசபெத்து கர்ப்பவதியாகி ஆறு மாதத்திற்குப் பின்பு (லூக்கா 1:36) இதன் பிரகாரம் யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைவிட ஆறு மாதங்கள் வயதில் மூத்தவர்.

"நாசரேத்து" - இயேசு கிறிஸ்து வளர்ந்த ஊர். (லூக்கா 2:39; லூக்கா 4:23; மத் 13:54).

"கன்னிகை" - மரியாள் கன்னிகையாக இருந்தாள். ஏசா 7:14-இல் கூறப்பட்டிருக்கிற கிரேக்கச்சொல் "அல்மா" **(almah).** புதிய ஏற்பாட்டில் கன்னிகை என்று பொருள்படும் கிரேக்கச்சொல் "பர்த்தினோஸ்" **(parthenos)** ஆகும். புருஷனை அறியாதவள், இதுவரையிலும் சரீரப்பிரகாரமாக உடலுறவில் ஈடுபடாதவள் என்று பொருள். (மத் 1:23; மத் 25:1,7,11; லூக்கா 1:27; லூக்கா 2:36; அப் 21:9; 1கொரி 7:25,28,34,36,37; 2கொரி11:2; வெளி 14:4) மரியாள் புருஷனை அறியாதவள். (லூக்கா 1:34)

கன்னிகை **(virgin) - עַלְמָה - al-maw' - 5959**

பெ.பெ.சொ. - பெண், கன்னிகை, கன்னியர்

கன்னிகை **(virgin) - παρθένος - parthenos** - 3933

பெண்பால் பெயர்ச்சொல் - கன்னிகை, கன்னியாஸ்திரீ

"புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்தவள்" - (மத் 1:18)

"தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு" - யோசேப்பும், மரியாளும் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். (மத் 1:6; லூக்கா 8:19)

தீர்க்கதரிசன எண் - 3

"கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்" (லூக்கா 1:28) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"கிருபை பெற்றவளே" - மத்தேயுவும், மாற்குவும் கிருபை என்னும் சொல்லைப் பயன்படுத்தவில்லை. இந்த வசனத்திலும், எபே 1:6-இல் மட்டுமே இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"கலங்கினாள்" - கலக்கத்தில் இரண்டு வகை உள்ளது. ஒன்று முழுவதுமாகக் கலங்குதல். மற்றொன்று ஓரளவு கலங்குதல். இந்த வாக்கியத்தில் முழுவதுமாகக் கலங்குதல் என்று பொருள்படும் "டையடாராசோ" **(diatarasso)** என்னும்கிரேக்கச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஓரளவு கலங்குதல் என்னும் பொருளைத் தரும் கிரேக்கச்சொல் "தாராசோ" **(tarasso).**

கலங்கு **(troubled) - διαταράσσω - diatarassoo** - 1298

வினைச்சொல் - கலங்கு - முழுவதுமாக கலங்குதல் **(to disturb wholly)**

கலங்கு **(troubled) - ταράσσω - tarassoo** - 5015

வினைச்சொல் - கலங்கு, கலக்கமடை, துயரமடை - ஓரளவு கலங்குதல் **(partial or light agitation)** (லூக்கா 1:12)

"மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்" - (ஆதி 26:24)

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 4

"நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக................." (லூக்கா 1:30-33) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 1:30 ஆவது வசனத்திலிருந்து 32 ஆவது வசனத்தின் முன்பகுதி வரையிலும் நிறைவேறிற்று. "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக்கா 1:32-33) மேசியா பூமியை ஆளுகை செய்யும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14; வெளி 11:15; வெளி 22:4-5).

"இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" - இயேசு கிறிஸ்துவைப் பற்றி நான்கு சுவிசேஷங்களிலும் நான்கு முக்கியமான சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவற்றை இந்த வசனம் தெளிவாகக் கூறுகிறது.

1. நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் - "இதோ அந்த மனுஷன்" - லூக்காவின் விளக்கம்.

2. அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக - "இதோ என் தாசன்" - மாற்குவின் விளக்கம்

3. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார் - "இதோ உன் தேவன்" - யோவானின் விளக்கம்.

4. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் - "இதோ உன் ராஜா" - மத்தேயுவின் விளக்கம்.

"இயேசு" - (மத் 1:21)

"அவர் பெரியவராயிருப்பார்" - இயேசுவும், யோவானும் பெரியவர்களாக இருந்தார்கள். (லூக்கா 1:15,32) ஆனாலும் இயேசு எல்லோரையும் விட பெரியவர். (மத் 11:11; யோவான் 3:27-30)

உன்னதமானவர் (Highest) - ὕψιστος - hypsistos - 5310

வினையடை - உன்னதமானவர் - லூக்கா ஏழு இடங்களில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். (லூக்கா 1:32,35,76; லூக்கா 2:14; லூக்கா 6:35; லூக்கா 8:28; லூக்கா 19:38) இதுபோக, புதிய ஏற்பாட்டில் மேலும் ஆறு இடங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 21:9; மாற்கு 5:7; மாற்கு 11:10; அப் 7:48; அப் 16:17; எபி 7:1).

"கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்" - (2சாமு 7:16; ஏசா 9:6-7; ஏசா 16:5; சங் 132:11; லூக்கா 22:29-30)

"யாக்கோபு" - இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரத்தாரையும் யாக்கோபு குறிக்கிறார். (எசே 48; லூக்கா 22:29-30; அப் 26:7; வெளி 7:1-8; வெளி 21:12).

"அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" - இயேசு கிறிஸ்துவின் ராஜ்யம் ஆயிரம் வருஷ அரசாட்சியில் முடிந்து போவதில்லை. அவருடைய ராஜ்யம் நித்தியகாலமாக நீடித்திருக்கும். (ஆதி 8:22; ஆதி 9:12,16; ஆதி 17:7-19; 2சாமு 7; சங் 72:5; சங் 79:13; சங் 89:4; ஏசா 9:6-7; ஏசா 51:8; ஏசா 59:21; எசே 37:24-28; தானி 2:44-45; தானி 7:13-14,27; லூக்கா 1:33,55; வெளி 11:15; வெளி 22:4-5).

"இது எப்படியாகும்? புருஷனை அறியேனே" - மரியாள் அவிசுவாசத்தினால் இவ்வாறு கூறவில்லை. விளக்கம் கேட்கிறாள். சகரியாவிடம் தேவதூதன் கூறியபோது அவன் அவிசுவாசத்தோடு கேள்வி கேட்டான். (லூக்கா 1:18-20)

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 5

"பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்..................." (லூக்கா 1:35-37) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"தேவனுடைய குமாரன்" - இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவம் என்பது அவருடைய மானிடத்தையே குறிக்கும். அவருடைய தெய்வத்துவத்தைக் குறிக்காது. தேவனாக இருக்கும் இயேசு கிறிஸ்துவிற்குத் துவக்கம் இல்லை. (மீகா 5:2; யோவான் 1:1-2) அவரே ஆதியும் அந்தமுமாக இருக்கிறார். தேவனாக இருக்கும் இயேசு கிறிஸ்து பிதாவின் ஒரேபேறானவர் அல்ல. அவர் பிதாவின் ஒரேபேறானவராக இருப்பார் என்றால் அவருக்கு ஒரு துவக்கம் இருக்கும். ஆனால் தேவனுக்குத் துவக்கம் இல்லை. மனுஷனாக இருக்கும் இயேசு கிறிஸ்துவிற்கு துவக்கம் உண்டு. அவர் பிதாவின் ஒரேபேறான குமாரன். (சங் 2:7,12; மத் 1:18-25; லூக்கா 1:35; எபி 1:5-6)

இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தையும், தெய்வத்துவத்தையும் விளக்கும்போது இந்தச் சத்தியங்களையெல்லாம் நாம் மனதில் வைத்துக்கொண்டு வியாக்கியானம் பண்ண வேண்டும்.

"இனத்தாள்" - இனத்தாள் என்பது உறவின் முறையைக் குறிக்காது. ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் **(countryman)** என்னும் பொருளையே தரும். ஏனெனில் மரியாளும், யோசேப்பும் தாவீதின் மூலமாக யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். எலிசபெத்து லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவள். (லூக்கா 1:5)

இனத்தாள் **(cousin)** - **συγγενής** - **syngenees** - 4773

பெயரடை - இனத்தானாகிய, உறவின் முறையான, பந்து ஜனங்களான - இந்தக் கிரேக்கச்சொல் பல்வேறு விதமான மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. உறவினள் **"cousin"** (லூக்கா 1:36,58) உறவினன் **"kin"** (மாற்கு 6:4) உறவினர் **"kinsmen"** (லூக்கா 14:12; யோவான் 18:26; அப் 10:24; ரோமர் 9:3; ரோமர் 16:7,11,21) உற்றார் **"kinsfolk"** (லூக்கா 2:44; லூக்கா 21:16)

7. மரியாள் எலிசபெத்தைச் சந்திக்க வருகிறாள்

லூக்கா 1:39 அந்நாட்களில் மரியாள் எழுந்து, மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய்,

லூக்கா 1:40 சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள்.

லூக்கா 1:41 எலிசபெத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு,

லூக்கா 1:42 உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது.

லூக்கா 1:43 என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது.

லூக்கா 1:44 இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று.

லூக்கா 1:45 விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்.

"யூதாவிலுள்ள ஒரு பட்டணம்" - இயேசு கிறிஸ்து இருந்த கிராமத்திலேயே யோவானும் இருந்தார்.

1 அதிகாரம்

"எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாள்" - (லூக்கா 1:15)

தீர்க்கதரிசன எண் - 6

"ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது..............." (லூக்கா 1:42-45) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" - எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, இயேசுவை "ஆண்டவர்" என்று அழைக்கிறாள்.

8. கர்த்தரை மகிமைப்படுத்தி பாடிய பாடல் - (1சாமு 2:1)

லூக்கா 1:46 அப்பொழுது மரியாள்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.

லூக்கா 1:47 என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.

லூக்கா 1:48 அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்; இதோ, இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்.

லூக்கா 1:49 வல்லமையுடைவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

லூக்கா 1:50 அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது.

லூக்கா 1:51 தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்; இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.

லூக்கா 1:52 பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

லூக்கா 1:53 பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.

லூக்கா 1:54 நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கு அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய்ய நினைத்து,

லூக்கா 1:55 தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார் என்றாள்.

லூக்கா 1:56 மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்து, தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்.

தீர்க்கதரிசன எண் - 7

"என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது..............." (லூக்கா 1:46-55) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, நிறைவேறிக்கொண்டு வருகிறது.

"என் இரட்சகர்" - என்று மரியாள் கூறுகிறாள். மரியாளைப் பற்றி விளக்கம் தருகிறவர்களில் சிலர் அவளிடத்தில் பாவமேயில்லை என்று கூறுகிறார்கள். **(immaculate conception)** ஆனால் மரியாளோ இயேசுவை "என் இரட்சகர்" என்று அழைக்கிறாள். இயேசு கிறிஸ்து மரியாளின் இரட்சகராக இருப்பார் என்றால் மரியாள் இரட்சிக்கப்படவேண்டியவளே. மரியாள் ஒரு பாவமும் செய்யவில்லையென்று எந்த வேதவசனமும் கூறவில்லை.

"அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது" - பயந்திருக்கிறவர்கள் என்பது கர்த்தரிடத்தில் பயபக்தியாக இருப்பதைக் குறிப்பிடும்.

ஆசனங்களிலிருந்து தள்ளப்பட்ட பலவான்கள்

1. பார்வோன் (யாத் 15:1-11)

லூக்கா - தொகுப்புரை

1 அதிகாரம்

2. கோராகும், அவனுடைய புத்திரரும் (எண் 16)

3. ஆமான் (எஸ் 6:6-14)

4. நேபுகாத்நேச்சார் (தானி 4:24-37)

5. பெல்ஷாத்சார் (தானி 5)

6. அமத்சியா (2இராஜா 14:10)

7. உசியா (2நாளா 26:16)

8. பெருமையுள்ளோர் அனைவரும் (சங் 33:10; 1பேதுரு 5:5; யாக் 4:6)

உயர்த்தப்பட்ட தாழ்மையுடையவர்கள்

1. யோசேப்பு (ஆதி 41:38-45)

2. தாவீது (1சாமு 18; 2சாமு 7)

3. மொர்தெகாய் (எஸ் 6:6-14)

4. தானியேல் (தானி 1:8-21)

5. யோவான் (மத் 3:4; மத் 11:11)

6. மரியாள் (லூக்கா 1:48)

7. இயேசு (பிலி 2:5-11)

8. தாழ்மையுடையவர் அனைவரும் (மத் 23:12; யாக் 4:6; 1பேதுரு 5:3-6)

"பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பினார்" - (மத் 5:6; யோவான் 7:37-39; சங் 34:10)

"ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்" - (பிர 6:2; 1கொரி 1:26-29)

"மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்தாள்" - யோவான் பிறக்கும் வரையிலும் அவளுடனே கூட இருந்திருக்க வேண்டும். (லூக்கா 1:36 = லூக்கா 1:56).

"தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்" - நாசரேத்திற்குத் திரும்பிப்போனாள். யோசேப்பும், மரியாளும் இன்னும் சேர்ந்து வாழவில்லை. மரியாள் வீட்டை விட்டுச் சென்றபோது அவள் கர்ப்பமாக இருக்கிற விஷயம் தெரியவந்தது. மத் 1:18-25 ஆகிய வசனங்களில் உள்ள நிகழ்ச்சிகள் யூதேயாவில் மரியாள் தங்கியிருந்த மூன்று மாதங்களுக்குப்பின்பு நடந்தவையாகும்.

9. யோவான் ஸ்நானனின் பிறப்பும் விருத்தசேதனமும் - (2:21)

லூக்கா 1:57 எலிசபெத்துக்குப் பிரசவக் காலம் நிறைவேறினபோது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள்.

லூக்கா 1:58 கர்த்தர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை விளங்கப் பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்துஜனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனேகூடச் சந்தோஷப்பட்டார்கள்.

லூக்கா 1:59 எட்டாம் நாளிலே பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும் படிக்கு அவர்கள் வந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிடப்போனார்கள்.

லூக்கா 1:60 அப்பொழுது அதின் தாய்: அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள்.

லூக்கா 1:61 அதற்கு அவர்கள்: உன் உறவின் முறையாரில் இந்தப் பேருள்ளவன் ஒருவனும் இல்லையே என்று சொல்லி,

லூக்கா 1:62 அதின் தகப்பனை நோக்கி: இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள்.

லூக்கா 1:63 அவன் எழுத்துப் பலகையைக் கேட்டு வாங்கி, இவன் பேர் யோவான் என்று எழுதினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

பெற்றாள் (brought forth) - γεννάω - gennaoo - 1080

வினைச்சொல் - பெற்றாள், பெறு, பிறந்திரு, உண்டாயிரு, எழும்பு, ஜநித்திரு, (ஜென்ம), ஜெநிப்பி (மத் 1:3)

1 அதிகாரம்

"கர்த்தர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை விளங்கப்பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்துஜனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனேகூடச் சந்தோஷப் பட்டார்கள்" - (லூக்கா 1:36)

"எட்டாம் நாளிலே பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்படிக்கு அவர்கள் வந்தார்கள்" - (ஆதி 17:12; லேவி 12:3)

"அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிடப்போனார்கள்" - சகரியாவின் அயலகத்தாரும், பந்து ஜனங்களும் தந்தையின் பெயரைப் பின்பற்றி குழந்தைக்குச் சகரியா என்று பெயரிடப் போனார்கள். ஆனால் அந்தக் குழந்தைக்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்பதாக தேவதூதன் சகரியாவிற்கு ஏற்கெனவே அறிவித்திருந்தான். (லூக்கா 1:13)

பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்போது பேரிடுவது வழக்கம். ஆபிராம், சாராய் ஆகியோரின் பெயரைத் தேவன் விருத்தசேதனத்தை நியமனம் பண்ணியபோது ஆபிரகாம், சாராள் என்று மாற்றினார். (ஆதி 17) யூதமார்க்கத்துக் குருமார்கள் இதை மனதில் கொண்டு, குழந்தைக்கு விருத்தசேதனத்தின்போது பேரிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

பொதுவாகத் தந்தையின் பெயரை மகனுக்குச் சூட்டுவதில்லை. ஆனால் இங்கு சகரியாவின் பெயரைக் குழந்தைக்குச் சூட்டவேண்டுமென்று அயலகத்தாரும், பந்துஜனங்களும் தீர்மானம் பண்ணுகிறார்கள். இதற்கு ஏதாவது விசேஷித்த காரணம் இருக்கலாம்.

ஒவ்வொரு தேசத்திலும் பிள்ளைகளுக்கு விசேஷித்த நாட்களில் பெயரிடுவார்கள். ரோமர்கள் ஒன்பதாவது நாளிலும், கிரேக்கர்கள் பத்தாவது நாளிலும் மற்ற தேசங்களில் குழந்தை பிறந்து ஏழாவது நாளிலும் பெயர்சூட்டுவது வழக்கம்.

"இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள்" - ஒன்பது மாதங்களாக சகரியா பேசமுடியாத ஊமையாக இருக்கிறான். (லூக்கா 1:20).

"எழுத்துப் பலகை" - பல தேசங்களில் எழுத்துப்பலகை பயன்படுத்தப்பட்டு வந்தது. (ஏசா 30:8; ஆப 2:2; நீதி 3:3; எரே 17:1; 2கொரி 3:3).

"யோவான்" - யெகோவாவின் கிருபை என்று பொருள். இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரப்போகிற சத்தியத்தையும், கிருபையையும் யோவான் அறிமுகப்படுத்தப்போகிறான். (யோவான் 1:17).

10. சகரியாவின் வாய்திறக்கப்பட்டு நாவு கட்டவிழ்க்கப்படுகிறது - (1:20)

லூக்கா 1:64 உடனே அவனுடைய வாய் திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான்.

லூக்கா 1:65 அதினால் அவர்களைச்சுற்றி வாசமாயிருந்த யாவருக்கும் பயமுண்டாயிற்று. மேலும் யூதேயாவின் மலைநாடெங்கும் இந்த வர்த்தமானங்களெல்லாம் சொல்லிக் கொள்ளப்பட்டது.

லூக்கா 1:66 அவைகளைக் கேள்விப் பட்டவர்களெல்லாரும் தங்கள் மனதிலே அவைகளை வைத்துகொண்டு, இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாயிருக்குமோ என்றார்கள். கர்த்தருடைய கரம் அந்தப் பிள்ளையோடே இருந்தது.

"உடனே அவனுடைய வாய் திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான்" - யோவானுடைய பிறப்பு சம்பந்தமாக நடைபெற்ற இரண்டாவது அற்புதம். (லூக்கா 1:20,64)

"யூதேயாவின் மலைநாடெங்கும் இந்த வர்த்தமானங்களெல்லாம் சொல்லிக் கொள்ளப்பட்டது" - யோவானுடைய பிறப்பு, சகரியா ஊமையானது, மறுபடியும் பேசியது ஆகிய எல்லா வர்த்தமானங்களையும் இந்தப் பகுதியிலுள்ள ஜனங்கள் ஆச்சரியத்தோடு பேசிக்கொண்டார்கள்.

1 அதிகாரம்

11. சகரியாவின் தீர்க்கதரிசனம்

லூக்கா 1:67 அவனுடைய தகப்பனாகிய சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, தீர்க்கதரிசனமாக:

லூக்கா 1:68 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

லூக்கா 1:69 அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்;

லூக்கா 1:70 தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி:

லூக்கா 1:71 உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப் பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று,

லூக்கா 1:72 அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்;

லூக்கா 1:73 ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே,

லூக்கா 1:74 தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு,

லூக்கா 1:75 தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்.

லூக்கா 1:76 நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும்,

லூக்கா 1:77 நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப் படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய்.

லூக்கா 1:78 அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர் களுக்கு வெளிச்சம்தரவும்.

லூக்கா 1:79 நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலி ருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான்.

"சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, தீர்க்கதரிசனம் கூறினான்" - (லூக்கா 1:15)

தீர்க்கதரிசன எண் - 8

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக............" (லூக்கா 1:67-79) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 1:67-70,76-79 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. லூக்கா 1:71-75 ஆகிய வசனங்கள் நிறைவேறி வருகின்றன.

"இரட்சணியக்கொம்பு" - கொம்புகள் அதிகாரங்களுக்கு அடையாளம். (1இராஜா 22:11; தானி 8:3) சில இடங்களில் இது ராஜரீகத்திற்கு அடையாளம். (தானி 7:23-24; தானி 8:20-23; வெளி 17:12) கொம்பை உயர்த்துதல் என்னும் வாக்கியம் "அதிகாரம் செலுத்துதல்" என்று பொருள்படும். (1சாமு 2:10; சங் 75:4; சங் 89:24) இரட்சணியக்கொம்பு என்பது வல்லமையுள்ள இரட்சிப்பு அல்லது சர்வவல்ல இரட்சகர் என்று பொருள்படும். (2சாமு 22:3; சங் 18:2) இஸ்ரவேலின் கொம்பு அல்லது தாவீதின் கொம்பு என்பது இஸ்ரவேல், தாவீது ஆகியோரின் வலிமையைக் குறிப்பிடும். (சங் 132:17)

"தாவீதின் வம்சம்" - தாவீதின் சந்ததியார். (லூக்கா 1:27,33,69; லூக்கா 2:4)

1 அதிகாரம்

இரட்சிக்கப்படுவதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1. சத்துருக்களிடமிருந்து விடுதலை (லூக்கா 1:71,74; 1யோவான் 5:18)
2. தேவனுடைய கிருபை (லூக்கா 1:72; எபே 2:4-9; தீத்து 3:4-5)
3. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் (லூக்கா 1:72-73; கலா 3:6-15)
4. தேவனோடு சமாதானம் (லூக்கா 1:74; ரோமர் 5:1-11; எபே 2:14-18)
5. பரிசுத்தமும், நீதியும் (லூக்கா 1:75; எபே 4:24; தீத்து 2:11-12)
6. தேவனோடு ஒப்புரவாகுதல் (லூக்கா 1:77; 2கொரி 5:14-21; கொலோ 1:20)
7. வெளிச்சமும் வழிநடத்துதலும் (லூக்கா 1:79; 1யோவான் 1:7; யோவான் 16:7-14)

"ஆபிரகாமுக்கு இட்ட ஆணை" - கர்த்தர் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கை. (ஆதி 12:1-4, ஆதி 17:4; ஆதி 22:16-17)

"பயமில்லாமல்" - இரட்சிக்கப்படுவதினால் கிடைக்கும் சிலாக்கியம். (ரோமர் 8:14-16; 2தீமோ 1:7)

"கர்த்தருக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும்" - ஒருவிசுவாசியினுடைய ஜீவியத்தில் சாதாரணமாக நடைபெறும் காரியம். (கலா 5:19-24; எபே 4:24; 1தெச 4:7; எபி 12:14)

"உயிரோடிருக்கும் நாளெல்லாம்" - நாம் உயிரோடிருக்கும் இந்த ஜீவியத்தில் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டும். இந்த ஜீவியத்தில் இரட்சிக்கப்படவில்லையென்றால் இனிமேல் இரட்சிக்கப் படுவதற்கு வாய்ப்பில்லை. (லூக்கா 1:75; தீத்து 2:11-12; எபி 12:14; வெளி 22:11).

"நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ண...........அவருக்கு முன்னாக நடந்துபோவாய்" - ஏசா 40:1-3; மல் 3:1. ஆகிய வசனங்கள் உறுதிப்பண்ணப்படுகிறது.

"பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு" - நமது பாவங்களைக் கர்த்தர் மன்னிக்கும் பொழுது நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. (ரோமர் 8:14-16)

அருணோதயம் (dayspring) - ἀνατολή - anatolee - 395

பெண்பால் பெயர்ச்சொல் - அருணோதயம், கிழக்கு, சூரியன் உதிக்கும் திசை, நட்சத்திரம் அல்லது சூரியன் ஆகியவற்றின் உதயம் - சில இடங்களில் இந்தக் கிரேக்கச்சொல் கிழக்கு என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. (மத் 2:1,2,9; மத் 8:11; மத் 24:27; லூக்கா 13:29; வெளி 7:2; வெளி 16:12; வெளி 21:13) யோவானுடைய வருகையினால் உதிக்கப் போகும் வெளிச்சம் (யோவான் 5:35) உலகத்தின் வெளிச்சமாகிய இயேசு கிறிஸ்து (மத் 4:16; லூக்கா 2:32; யோவான் 1:5-9; யோவான் 3:19-21; யோவான் 8:12; யோவான் 9:5; யோவான் 12:35-36,46)

12. யோவான் ஸ்நானனின் குழந்தைப் பருவம்

லூக்கா 1:80 அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்.

"அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" - யோவான் சரீரத்திலும், ஆவிக்குரிய வல்லமையிலும் வளர்ந்து வந்தார். (லூக்கா 1:17) ஊழியம் செய்வதற்கு நியமிக்கப்பட்ட வயது வரையிலும் வனாந்தரத்தில் இருந்தார். (எண் 4:3) யோவானின் வளர்ச்சியையும், இயேசுவின் வளர்ச்சியையும் லூக்கா 2:40,52 ஆகிய வசனங்களில் நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

2 அதிகாரம்

II. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு முற்பட்ட காலம் - (மத் 1:1)

1. இயேசுவின் பிறப்பு - (மத் 1:18)

லூக்கா 2:1 அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது.

லூக்கா 2:2 சீரியாநாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று.

லூக்கா 2:3 அந்தப்படி குடி மதிப்பெழுதப்படும் படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

லூக்கா 2:4 அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த படியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப் பெழுதப்படும்படி,

லூக்கா 2:5 கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான்.

லூக்கா 2:6 அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது.

லூக்கா 2:7 அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்த படியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்.

"அந்நாட்களில்" (And it came to pass) - இந்த வாக்கியத்தை லூக்கா தான் எழுதின சுவிசேஷத்திலும், அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் 54 இடங்களில் பயன் படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் இந்த வாக்கியம் 11 இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"அகஸ்துராயன்" (Caesar Augustus) - ஜூலியஸ் சீசருக்குப் பின்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவன். இவனுடைய சுவீகாரப் புத்திரன் கி.மு. 29 முதல் கி.பி. 14 வரையிலும் இவன் ஆட்சிபுரிந்தான். இவனுடைய மறுபெயர் காயூஸ் ஆக்டோவியஸ் (Caius Octavius)

"உலகமெங்கும்" - இது ஒரு உருவகச்சொல். அந்தப் பிரதேசம் முழுவதிலும் என்று பொருள்படும். (ஆதி 6:17; 2சாமு 6:5,15; 1இராஜா 11:16-17; தானி 2:37-38; தானி 7:23; மத் 3:5-6; லூக்கா 2:1-3; ரோமர் 1:8; கொலோ 1:23; வெளி 13:8,16)

"சிரேனியு" (Cyrenius) - இவனுக்கு கிரேனியு (Quirinus) என்று மறுபெயரும் உண்டு. இந்த வசனத்தைக் குறித்து பலவிதமான கருத்துக் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்து பிறந்து பத்து அல்லது பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்பே இவன் சீரியா நாட்டிலே தேசாதிபதியாக இருந்தான். கி.மு. 12-இல் சிரேனியு ரோமப்பேரரசின் ஆலோசனைச் சங்கத்து உறுப்பினராக இருந்தான். இதன் மூலமாக தேசாதிபதியாக ஆவதற்குத் தகுதியைப் பெற்றான். கி.மு. 12-முதல் கி.மு. 4 வரையிலும் ஆட்சி புரிந்த தேசாதிபதிகளின் பெயர்கள் தெரியவருகிறது. கி.மு. 4-முதல் கி.பி. 4 வரையிலும் ஆட்சி புரிந்த தேசாதிபதிகளின் பெயர்கள் தெரியவில்லை.

இந்தக் காலக்கட்டத்தில்தான் குடிமதிப்பு உண்டாயிற்று. சீரிய நாட்டிலே இக்காலத்தில் சிரேனியு என்பவன் தேசாதிபதியாக இருந்தான் என்று லூக்கா எழுதுகிறார். இந்த வாக்கியத்தில் "முதலாம்" குடிமதிப்பு உண்டாயிற்று என்பதை "சிரேனியு என்பவன் தேசாதிபதியாய் இருந்ததற்கு முன்பு குடிமதிப்பு உண்டாயிற்று" என்று மொழிபெயர்க்க வேண்டும். (This census was before Cyrenius was governor of Syria)

முன்பு (before) - πρώτος - prootos - 4413

பெயரடை - முன்பு, முந்தின, முதலாவதான, மூத்தவனான, மூப்பரான, ஆதியான

2 அதிகாரம்

"கலிலேயா நாடு" - எருசலேம் கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி உயரத்தில் உள்ளது. நாசரேத்தைவிட உயரமான பகுதி.

"தாவீதின் ஊர்" - தாவீது இந்த ஊரில் வளர்ந்தான். (1சாமு 20:6) சீயோன் என்று இதற்கு மறுபெயரும் உண்டு. (2சாமு 5:9; 2சாமு 6:10-16).

"பெத்லகேம்" **(Bethlehem)** - இந்தப் பெயருக்கு "அப்பத்தின்வீடு" என்று பொருள். எருசலேமிலிருந்து தெற்கே 5 மைல் தூரத்தில் உள்ளது.

"தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த படியினாலே" - (மத் 1:1-17)

"தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே" - யோசேப்பு தேவதூதனுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, மரியாளைத் திருமணம் செய்து கொள்கிறான்.

"அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்றாள்" - (மத் 1:3)

"பிள்ளையைத் துணிகளில் சுற்றினாள்" - (லூக்கா 2:12)

முன்னணை **(manger)** - **φάτνη** - **phatnee** - 5336

பெண்பால் பெயர்ச்சொல் - முன்னணை, தொழுவம் **(feeding place)** (லூக்கா 2:7-16; லூக்கா 13:15) முன்னணை **(crib)** (யோபு 39:9; நீதி 14:4; ஏசா 1:3)

"சத்திரம்" - ஒரு சில சத்திரங்களில் விலங்குகளைத் தொழுவத்தில் கட்டி வைத்திருப்பார்கள். அந்தத் தொழுவத்தைச் சுற்றிலும் அவற்றை மேய்ப்பவர்கள் சிறிய குடிசைகளில் தங்கியிருப்பார்கள்.

2. மேய்ப்பர்களுக்கு கர்த்தருடைய தூதனின் அறிவிப்பு - (மத் 2:1-12)

லூக்கா 2:8 அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

லூக்கா 2:9 அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

லூக்கா 2:10 தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

லூக்கா 2:11 இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

லூக்கா 2:12 பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலேகிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்.

"கர்த்தருடைய மகிமை" - தேவனுடைய பிரசன்னம். **(The Shekinah, or glory)** (யாத் 24:16; 1இராஜா 8:10; ஏசா 6:1-3)

"அவர்கள் மிகவும் பயந்தார்கள்" - (தானி 10; மாற்கு 16:8; வெளி 1:17)

தீர்க்கதரிசன எண் - 9

"பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்............" (லூக்கா 2:10-12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

புதிய ஏற்பாட்டில் சந்தோஷம் அடைந்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. சாஸ்திரி (மத் 2:10)
2. எலிசபெத்து (லூக்கா 1:41-45)

லூக்கா – தொகுப்புரை

2 அதிகாரம்

3. மரியாள் (லூக்கா 1:46-56)

4. சகரியா (லூக்கா 1:64-79)

5. மேய்ப்பர்கள் (லூக்கா 2:20)

6. எல்லா ஜனங்களும் (லூக்கா 2:10)

7. எழுபதுபேர் (லூக்கா 10:17)

8. தந்தையும், வேலையாட்களும் (லூக்கா 15:24)

9. மனந்திரும்பும்போது தேவதூதர்கள் (லூக்கா 15:10)

10. சகேயு (லூக்கா 19:6)

11. இயேசு வெற்றிப்பவனி வந்தபோது (மத் 21:9)

12. உயிர்த்தெழுதலின்போது (மத் 28:8)

13. அவர் தரிசனம் தந்தபோது (லூக்கா 24:41)

14. அவர் பரமேறியபோது (லூக்கா 24:52)

15. முழுச்சபை (அப் 2:46; அப் 15:3)

16. சப்பாணி குணமாக்கப்பட்டபோது (அப் 3:8)

17. புதிதாக மனந்திருந்தியவர்கள் (அப் 8:8; அப் 13:52)

18. பவுல் (2கொரி 2:3; 2கொரி 7:4,13)

19. எல்லா விசுவாசிகளும் (1பேதுரு 1:8)

20. கிறிஸ்து (யோவான் 15:11; எபி 12:2)

"இன்று" - இந்தக் குறிப்பிட்ட நாளில் தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிறக்கிறார். (சங் 2:7; லூக்கா 1:35; எபி 1:5-7) வேறு எந்தக் காலத்திலும் தேவனுக்குக் குமாரன் பிறந்ததாக வேதத்தில் சான்றுகள் எதுவும் இல்லை. ஒரேபேறான குமாரன் என்பது இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தைக் குறிக்கும். அவருடைய தெய்வீகத்துவத்தைக் குறிக்காது. (அப் 13:33)

"தாவீதின் ஊர்" - பெத்லகேம். தாவீதினுடைய பிறந்த ஊர். (மீகா 5:1-2; 1சாமு 16:1)

இரட்சகர் (Saviour) - σωτήρ - **sooteer** - 4990

ஆண்பால் பெயர்ச்சொல் - இரட்சகர் **(savior, deliverer, preserver)** (லூக்கா 1:47; லூக்கா 2:11; யோவான் 4:42; அப் 5:31; அப் 13:23; எபே 5:23; பிலி 3:20; 1தீமோ 1:1; 1தீமோ 2:3; 1தீமோ 4:10; 2தீமோ 1:10; தீத்து 1:3,4; தீத்து 2:10,13; தீத்து 3:4,6; 2பேதுரு 1:1,11; 2பேதுரு 2:20; 2பேதுரு 3:2,18; 1யோவான் 4:14; யூதா 1:25).

"கிறிஸ்து" - (மத் 1:1)

"கர்த்தர்" - எல்லா வல்லமைகளுக்கும் ஆண்டவர். அவரால் இரட்சிக்க முடியும். (ரோமர் 14:9; 1கொரி 8:6) இயேசு இரட்சகராகவும், கிறிஸ்துவாகவும், ஆண்டவராகவும் இருக்கிறார். லூக்கா 2:10-இல் கூறப்பட்டிருக்கிற நற்செய்தி ஒரு மார்க்கத்தைப் பற்றியது அல்ல. தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியது.

"இதுவே உங்களுக்கு அடையாளம்" - (யோவான் 2:11)

"பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்" - இயேசு கிறிஸ்து உன்னதமானவர். உயர்ந்தவர். ஆனால் அவருடைய ஆரம்பம் மிகவும் தாழ்மையாக இருக்கிறது. (எபே 1:21-23; பிலி 2:9-11; கொலோ 1:16-18; 1பேதுரு 3:22)

"துணிகளில் சுற்றி" - குழந்தை பிறந்தவுடன் அதைத் துணிகளில் சுற்றுவார்கள். மெல்லிய துணிகளில் குழந்தையைச் சுற்றுவார்கள். கை, கால் எதுவும் வெளியே தெரியாதபடி குழந்தையை மொத்தமாகச் சுற்றிவிடுவார்கள். தலையும் சுற்றப்பட்டிருக்கும். கண்கள் மட்டுமே வெளியே தெரியும். கிழக்கு நாடுகளில் இப்படி ஒரு பழக்கம் இருந்தது. (யோபு 38:9; புல 2:22; எசே 16:4)

2 அதிகாரம்

3. பரமசேனையின் திரள் தேவனைத் துதிக்கிறார்கள் - (எபி 1:6; வெளி 5:13)

லூக்கா 2:13 அந்தக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி:

லூக்கா 2:14 உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.

"பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி,........தேவனைத் துதித்தார்கள்" - இயேசு கிறிஸ்து பிறந்த வேளையில் தெய்வீக வல்லமையும், அற்புத அடையாளங்களும் வெளிப்படுவதை நாம் காண்கிறோம்.

"சமாதானம்" - இயேசு கிறிஸ்து சமாதான பிரபு. (ஏசா 9:6) சமாதானப்பிரபுவைக் கொலைசெய்துவிட்டு அவர்கள் சமாதானத்தைப் பற்றி வீணாகப் பேசுகிறார்கள். கிறிஸ்து வரும்வரையிலும் இந்தப் பூமியில் மெய்யான சமாதானம் இராது. (வெளி 19:20).

"மனுஷர்மேல் பிரியம்" - இது தேவனுடைய சித்தம். மனுஷருடைய நன்மையையே தேவன் நாடுகிறார். மனுஷருக்கு இதைப் புரிய வைக்க விரும்புகிறார். (சங் 84:11; 1தீமோ 2:4; 1பேதுரு 3:9)

4. இயேசுவின் பிறப்பை மேய்ப்பர்கள் உறுதி பண்ணுகிறார்கள்

லூக்கா 2:15 தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி,

லூக்கா 2:16 தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்.

லூக்கா 2:17 கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள்.

லூக்கா 2:18 மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப் பட்டார்கள்.

லூக்கா 2:19 மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனை பண்ணினாள்.

லூக்கா 2:20 மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டபடியே கேட்டு கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப் போனார்கள்.

"மேய்ப்பர்கள் தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்" தேவன் சொன்னது உண்மை என்பதை மனுஷர் எப்போதுமே காண்பார்கள். (2தீமோ 3:16-17)

5. இயேசுவிற்கு விருத்தசேதனமும் பெயரிடப்படுவதும்

லூக்கா 2:21 பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய எட்டாம் நாளிலே, அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே, அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்.

"பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ண வேண்டிய எட்டாம் நாளிலே" - இது பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் நிறைவேற்றம். (லேவி 12:3) ஆபிரகாமின் உடன்படிக்கையின் அடையாளம். (ஆதி 17:10-14)

"இயேசு" - இயேசு என்னும் பெயருக்கு "இரட்சகர்" அல்லது "இரட்சிப்பாக இருக்கிற தேவன்" என்று பொருள். (மத் 1:21)

2 அதிகாரம்

"அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே, அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்" - பிறப்பதற்கு முன்பாகவே பேரிடப்பட்டவர்களில் இயேசு கிறிஸ்துவும் ஒருவர். (மத் 1:21)

6. மரியாளின் சுத்திகரிப்பு

லூக்கா 2:22 மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படியே அவர்களுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின போது,

லூக்கா 2:23 முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும்,

லூக்கா 2:24 கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒரு ஜோடு காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலி யாகச் செலுத்தவும், அவரை எருசலேமுக்குக் கொண்டு போனார்கள்.

"சுத்திகரிப்பின் நாட்கள்" - ஆண்குழந்தை பிறந்ததிலிருந்து நாற்பது நாட்கள். பெண்குழந்தை பிறந்ததிலிருந்து எண்பது நாட்கள். லேவி 12:1-6)

"மோசேயின் நியாயப்பிரமாணம்" - இந்த அதிகாரத்தில் மட்டும் மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் பற்றி லூக்கா ஐந்து தடவை குறிப்பிட்டிருக்கிறார். கலா 4:4-இல் கூறப்பட்டிருக்கிற சத்தியத்தை வலியுறுத்துவதற்காக இவ்வாறு எழுதப் பட்டிருக்கிறது.

"அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்கவும்" - யாத் 13:12; யாத் 22:29; யாத் 34:19; எண் 3:12-13; எண் 18:15 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம்.

"முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும்" - யாத் 13:2; எண் 18:15 ஆகிய வசனங்களின் மேற்கோள்.

"ஒரு ஜோடு காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும்" - மரியாளும், யோசேப்பும் எளியவர்கள். ஆகையினால் காட்டுப்புறாவையோ அல்லது புறாக்குஞ்சுகளையோ பலியாகச் செலுத்துகிறார்கள். அவர்கள் ஐசுவரியவான்களாக இருந்திருந்தால் ஆட்டுக்குட்டியைப் பலியாகச் செலுத்துவார்கள். (லேவி 12:8) அக்காலத்தில் பாலஸ்தீன தேசத்தில் காட்டுப்புறாக்களும், புறாக் குஞ்சுகளும் ஏராளமாக இருந்தன. அவற்றின் விலையும் அதிகமில்லை.

7. சிமியோனின் தீர்க்கதரிசனம்

லூக்கா 2:25 அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன்மேல் பரிசுத்தஆவி இருந்தார்.

லூக்கா 2:26 கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணு முன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டு மிருந்தது.

லூக்கா 2:27 அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டு வருகையில்,

லூக்கா 2:28 அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து:

லூக்கா 2:29 ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்;

2 அதிகாரம்

லூக்கா 2:30 புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்குக் மகிமையாகவும்,

லூக்கா 2:31 தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின

லூக்கா 2:32 உம்முடைய இரட்சணியத்தை என்கண்கள் கண்டது என்றான்.

லூக்கா 2:33 அவரைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளுக்காக யோசேப்பும் அவருடைய தாயாரும் ஆச்சரியப் பட்டார்கள்.

லூக்கா 2:34. பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியாளை நோக்கி: இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

லூக்கா 2:35 உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற ஐந்து சிமியோன்கள்

1. யாக்கோபின் குமாரன் (ஆதி 29:33)
2. இயேசுவின் முன்னோர்களில் ஒருவர் (லூக்கா 3:30)
3. சீஷன் (அப் 13:1)
4. பேதுரு (அப் 15:14)
5. எருசலேமில் இருந்த ஒரு யூதன்

எருசலேமிலிருந்த சிமியோனின் குணாதிசயங்கள்

1. அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவன் (லூக்கா 2:25)
2. இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவனாய் இருந்தான். (லூக்கா 2:25)
3. அவன்மேல் பரிசுத்தஆவி இருந்தார் (லூக்கா 2:25)
4. தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றிருந்தான் (லூக்கா 2:26)
5. பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டான் (லூக்கா 2:27)
6. இயேசுவைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டான் (லூக்கா 2:28; 1யோவான் 1)
7. தீர்க்கதரிசனம் கூறினான் (லூக்கா 2:28-35)
8. யோசேப்பையும், மரியாளையும் ஆசீர்வதித்தான். (லூக்கா 2:34)

"இஸ்ரவேலின் ஆறுதல்" - மேசியாவின் வருகையையும், அவருடைய ஊழியத்தையும் குறிக்கும் வழக்குச்சொல்.

லூக்கா எழுதின சுவிசேஷத்தில் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்களாகக் கூறப்பட்டிருக்கிறவர்கள்

1. யோவான் ஸ்நானன் (லூக்கா 1:15-17,80)
2. மரியாள் (லூக்கா 1:35,46-55)
3. எலிசபெத்து (லூக்கா 1:41-45)
4. சகரியா (லூக்கா 1:67-79)
5. சிமியோன் (லூக்கா 2:25-35)
6. அன்னாள் (லூக்கா 2:36-38)
7. சீஷர்கள் (லூக்கா 9:1-6; லூக்கா 10:1-20 = மத் 10:1-8,20)
8. இயேசு கிறிஸ்து (லூக்கா 2:40-52)

இயேசுவும், சீஷர்களும், மரியாளும் பின்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். (லூக்கா 3:22; அப் 1:4-14; அப் 2:1-11)

2 அதிகாரம்

அறிவிக்கப்பட்டிருந்தது (revealed) - χρηματίζω - chreematizoo - 5537

வினைச்சொல் - எச்சரி, அறிவி, கட்டளையிடு, அழைக்கப்பட்டு - எச்சரி **(to be warned)** (மத் 2:12,22; அப் 10:22; எபி 11:7); கட்டளையிடு **(to be admonished)** (எபி 8:5); அழைக்கப்படு **to be called** (அப் 11:26; ரோமர் 7:3); வெளிப்படுத்து **(to reveal)** (லூக்கா 2:26); அறிவி **(to speak)** (எபி 12:25) இந்தக் கிரேக்கச்சொல் ஏழு இடங்களில் தெய்வீக சம்பாஷணையையும், இரண்டு இடங்களில் மனுஷ சம்பாஷணையையும் குறிக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 10

"கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணு முன்னே மரணமடையமாட்டாய்" (லூக்கா 2:26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான்" - லூக்கா 2:26-ஐ நிறைவேற்றுவதற்காக அவன் தேவாலயத்திற்குப் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு வந்திருந்தான்.

ஆல் (by) - ἐν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல், இல், உடன்

"தேவாலயம்" - தேவாலயத்துப் பிரகாரங்களுக்கு வந்தான். பரிசுத்த ஸ்தலத்திற்கோ, மகாபரிசுத்த ஸ்தலத்திற்கோ அவனால் வரமுடியாது. ஆசாரியர்கள் மட்டுமே அங்குச் செல்லமுடியும்.

"நியாயப்பிரமாண முறைமை" - இங்கு நியாயப்பிரமாணத்தின் ஐந்து முறைமைகள் நிறைவேற்றப்படுகிறது. அவையாவன:

1. விருத்தசேதனம் (ஆதி 17; லேவி 12:3)
2. பிள்ளைக்குப் பேரிடுதல்
3. மரியாளின் சுத்திகரிப்பு
4. இயேசுவைத் தேவனிடத்தில் பிரதிஷ்டை பண்ணுதல்
5. பலிகளைச் செலுத்துதல் (லேவி 12)

"அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்தான்" - இவ்வாறு செய்வது அக்காலத்து வழக்கம். (மத் 19:13-15)

தீர்க்கதரிசன எண் - 11

"ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்................" (லூக்கா 2:28-32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"உம்முடைய இரட்சணியத்தை என்கண்கள் கண்டது" - சிமியோனே முதன்முதலாக ஜீவவார்த்தையைக் கண்டவன். (1யோவான் 1:1) தேவனுடைய இரட்சிப்பு என்பது சாதாரண மீட்பு மட்டும் அல்ல. அது மீட்பராகிய தெய்வீக நபரையும் குறிக்கும். (ஏசா 62:11; லூக்கா 3:6; யோவான் 3:16)

"சகல ஜனங்களுக்கும் முன்பாக" - இது இரகசியமாக நடைபெறும் காரியமல்ல. எல்லோருக்கும் வெளியரங்கமாகத் தெரியும் காரியம்.

"புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்" - யூதமார்க்கத்துத் தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவைப் புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளி என்று முதன்முறையாக அறிவிக்கிறான். (ஏசா 42:6) இரட்சிப்பு யூதருக்கு மட்டுமே உரியது என்று அப்போஸ்தலர்கள் முதலாவதாக நினைத்தார்கள். தெய்வீகக் கடிந்து கொள்ளுதலின் பின்பே அவர்கள் இரட்சிப்பு புறஜாதியாருக்கும்உரியது என்று அங்கீகரித்தார்கள். (அப் 10:18; அப் 11:18) ஆதித்திருச்சபையில் இந்தப் பிரச்சனை வலுவாக இருந்தது. (அப் 15; கலா 2).

"அவரைக்குறித்துச் சொல்லப் பட்டவைகளுக்காக யோசேப்பும் அவருடைய தாயாரும் ஆச்சரியப்பட்டார்கள்" - அவர்கள் ஆச்சரியப்பட்டு இந்தக் காரியங்களைத் தங்கள் இருதயத்திலே வைத்துக் கொண்டார்கள். (லூக்கா 2:19)

2 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 12

"இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப் பட்டிருக்கிறார்................" (லூக்கா 2:34-35) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும்" - இயேசு கிறிஸ்துவை இஸ்ரவேலர்கள் மறுதலிக்கும்போது அவர்களுக்கு அவர் தடைக்கல்லாக இருந்து அவர்கள் விழுவதற்கு காரணமாக இருப்பார். (ஏசா 8:14; மத் 21:42-44; அப் 4:11; ரோமர் 9:33; 1கொரி 1:23) அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது இஸ்ரவேலுக்கு இரட்சிப்பாக இருந்து, அவர்கள் எழுந்திருப்பதற்கு உதவி புரிவார். (சக 12:10-13:1; ரோமர் 11:25-29; அப் 15:13-15)

"விரோதமாகப் பேசப்படும் அடையாளம்" - (யோவான் 2:11)

பட்டயம் (sword) - 'ρομφαία - **rhomphaia** - 4501

பெண்பால் பெயர்ச்சொல் - பட்டயம் - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் வெளி 1:16; வெளி 2:12,16; வெளி 6:8; வெளி 19:15,21. ஆகிய வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவித்த போது மரியாளுடைய ஆத்துமா வியாகுலமடைந்தது.

8. அன்னாள் கர்த்தரைப் புகழ்ந்து பேசுகிறாள்

லூக்கா 2:36 ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள்.

லூக்கா 2:37 ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்.

"அன்னாள் அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி" - (யாத் 15:20)

9. இயேசுவின் குழந்தைப்பருவம் - (மத் 2)

லூக்கா 2:38 அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்.

லூக்கா 2:39 கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்தபின்பு, கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள்.

லூக்கா 2:40 பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது.

லூக்கா 2:41 அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள்.

லூக்கா 2:42 அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது, அவர்கள் அந்தப் பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப்போய்,

லூக்கா 2:43 பண்டிகை நாட்கள் முடிந்து, திரும்பி வருகிறபோது, பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்; இது அவருடைய தாயாருக்கும் யோசேப்புக்கும் தெரியாதிருந்தது.

லூக்கா 2:44 அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று அவர்கள் நினைத்து, ஒரு நாள் பிரயாணம் வந்து, உறவின் முறையாரிடத்திலும் அறிமுகமானவர் களிடத்திலும் அவரைத் தேடினார்கள்.

2 அதிகாரம்

லூக்கா 2:45 காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்.

லூக்கா 2:46 மூன்றுநாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள்.

லூக்கா 2:47 அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்கள்.

லூக்கா 2:48 தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள்.

லூக்கா 2:49 அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத் தவைகளில் நான்இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார்.

லூக்கா 2:50 தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை.

தீர்க்கதரிசன எண் - 13

"கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்" (லூக்கா 2:38) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"கர்த்தருடைய நியாயப்பிரமாணம்" - மோசேயின் நியாயப்பிரமாணமும், கர்த்தருடைய நியாயப்பிரமாணமும் ஒன்றுதான்.

"கலிலேயாநாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள்" - (மத் 2:11,14,16)

"பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது" - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள் இங்கே கூறப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. சரீரத்தில் வளர்ந்தார் (லூக்கா 2:40)
2. ஆவியிலே பெலன்கொண்டார் (லூக்கா 2:40)
3. ஞானத்தினால் நிறைந்திருந்தார் (லூக்கா 2:40)
4. தேவனுடைய கிருபையில் ஜீவித்தார் (லூக்கா 2:40)
5. உபதேசம் பண்ணும் வரம் அவரிடம் இருந்தது. (லூக்கா 2:47)
6. தமது ஊழியத்தைத் தெரிந்து வைத்திருந்தார். (லூக்கா 2:49)
7. எல்லோருக்கும் முன்மாதிரியாக இருந்தார். (லூக்கா 2:51)
8. ஞானத்தில் விருத்தியடைந்தார். (லூக்கா 2:52)
9. சரீரத்தில் வளர்ச்சி பெற்றார் (லூக்கா 2:52)
10. மனுஷரிடத்திலும், தேவனிடத்திலும் கிருபையில் வளர்ந்தார். (லூக்கா 2:52; சங் 119:97-104; ஏசா 50:4)

"பஸ்கா" - (யாத் 12, லேவி 23)

"அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது" - இந்த வயதில் யூதமார்க்கத்து ஆண்பிள்ளைகள் அனைவரும் நியாயப் பிரமாணத்தின் குமாரராக ஆவார்கள். யோசேப்பு மீட்பின் கிரயம் செலுத்தி, இந்தப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறார். (எண் 3:47; எண் 18:16) இதன்மூலமாக அவர் சட்டப்படி தந்தையாகிறார். அவருடைய குமாரன் தனக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று கோரும் உரிமை அவருக்கு வருகிறது. (லூக்கா 2:48-51)

பிள்ளை (child) - παις - pais - 3816

2 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - வேலைக்காரர், வேலைக்காரன், தாசன், ஊழியக்காரர் - நியாயப்பிரமாணத்தின் குமாரன் - தேவனுடைய ஊழியக்காரராகத் தமது ஜீவியத்தைத் துவக்குவதற்கு அவருக்குப் பக்குவம் வருகிறது.

"இது அவருடைய தாயாருக்கும் யோசப்புக்கும் தெரியாதிருந்தது" - இயேசு கிறிஸ்துவின் பாலகப்பருவம் வேதாகமத்தில் அதிகமாக விளக்கப்படவில்லை. அவர் நியாயப்பிரமாணத்தின் குமாரனானார். இதைத் தெய்வீகச் சித்தமாக நாம் பார்க்க வேண்டும்.

"பிரயாணக்காரரின் கூட்டம்" - பிரயாணம் பண்ணும் நண்பர்களும், உறவினர்களும்

"ஒரு நாள் பிரயாணம்" - ஒருநாளில் சுமாராக 18 முதல் 30 மைல்கள் வரையிலும் பிரயாணம் பண்ணுவார்கள். ஆனாலும் முதலாவது நாளில் 3 முதல் 8 மைல்கள் வரையிலும் மாத்திரமே பிரயாணம் பண்ணுவார்கள். தவறுதலாக எதையாவது மறந்து அந்த ஊரில் வைத்துவிட்டு வந்துவிட்டால், மறுநாளில் அதை ஒருவர் விரைவாகப்போய் எடுத்துக்கொண்டு வருவதற்கு ஏதுவாக, முதல்நாளில் சிறிது தூரம் மட்டுமே பிரயாணம் செய்வது வழக்கம். எருசலேமிலிருந்து பிரயாணம் பண்ணும்போது, முதலாவது தங்கும் இடம் பீரோத் (Beeroth, Bireh) என்னும் பட்டணமாகும். எருசலேமிற்கு வடக்கே 6 மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

"மூன்றுநாளைக்குப் பின்பு, அவரைத் தேவாலயத்தில் கண்டார்கள்" - இதன்பின்பு பிரயாணக்கூட்டத்தாரோடு சேர்ந்து பயணம் செய்வது கடினம். என்றாலும் அவர்கள் இயேசுவைக் கண்டார்கள். தேவாலயத்தில் பல இடங்களில் போதகர்கள் தங்கள் சீஷர்களுக்கு நியாயப்பிரமாணத்தை விளக்கிக் கூறுவார்கள். தேவாலய ஆராதனை முடிந்த பின்பு, யாராவது போதகரிடம் நியாயப்பிரமாணத்திலிருந்து ஏதாவது சந்தேகம் கேட்டால் அந்தச் சந்தேகத்தை அவர்கள் நிவர்த்தி செய்வார்கள்.

"அவர் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும் கண்டார்கள்" - போதகர் உபதேசம் பண்ணும்போது சீஷர்கள் அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருப்பது வழக்கம். (மத் 5:1; மத் 13:1-2; மத் 15:29; மத் 24:3; லூக்கா 4:20; லூக்கா 5:3)

"அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்கள்" - இயேசுவிற்குப் பன்னிரெண்டு வயதாகிறது. இந்த வயதிலேயே அவருக்குத் தெய்வீக வெளிப்பாடு அதிகமாக இருந்தது. இதுவரையிலும் இந்த வயதிலுள்ள யாரிடமிருந்தும் இப்படிப்பட்ட தெய்வீக ஞானத்தை யாரும் கேள்விப் பட்டதில்லை. (ஏசா 50:4) இயேசு சரீரப் பிரகாரமாக வளர்ச்சியடைந்தபோது, பரிசுத்த ஆவியானவர் அவருடைய சிந்தையில் உபதேசம்பண்ணிக்கொண்டு வந்தார். இயேசு கிறிஸ்துவிற்கு மார்க்கப்போதகர்கள் உபதேசம் பண்ணிக்கொண்டு வந்த போதிலும், ஞானத்திலும், அறிவிலும் அவர் தமது போதகர்களைவிடச் சிறந்தவராக விளங்கினார். (சங் 119:97-104).

"தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்" - இயேசு கிறிஸ்து ஒருவேளை, தமது வீட்டில் தெய்வீக ஞானத்தை வெளிப்படுத்தாமல் அமைதியாக இருந்திருக்கலாம். தேவாலயத்தில் அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையும் இயேசுவின் பெற்றோர் பார்த்தபோது, மிகவும் பிரமித்தார்கள்.

"உன் தகப்பன்" - சட்டப்பிரகாரம் யோசேப்பு இயேசுவின் தகப்பன். ஆனால் ஆவிக்குரிய பிரகாரம் பிதாவாகிய தேவனே இயேசுவின் தந்தை. மரியாளின் பேச்சைக் கேட்டவுடன் இயேசு கிறிஸ்து அதைத் திருத்தும் விதமாகவும், தமது தெய்வீக ஊழியத்தை மரியாளுக்கு ஞாபகப்படுத்தும் விதமாகவும் "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியது என்று அறியீர்களா" என்று பதில் கூறுகிறார். (லூக்கா 2:49)

"நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா" - சங் 40:5-11 ஆவது வசனங்களிலிருந்து இயேசு கிறிஸ்து முதன் முறையாக பேசுகிறார். இந்த வசனங்களிலிருந்து இயேசு பேசிய கடைசி வார்த்தை "முடிந்தது" என்பதாகும். அதாவது பிதாவின் ஊழியத்தைச் செய்வதற்காக இயேசு பூமிக்கு வந்தார். அந்த ஊழியத்தைச் செய்து முடித்துவிட்டார்.

2 அதிகாரம்

"தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை" - இயேசு கிறிஸ்து கன்னி மரியாளின் வயிற்றில் உற்பத்தியாகி இருக்கும்போதே, தேவதூதர் மூலமாக யோசேப்பிற்கும், மரியாளுக்கும் அவரைப் பற்றிய சத்தியங்கள் கூறப்பட்டிருந்தது. ஆனாலும் அவர்கள் மற்றவர்களைப் போலவே தேவதூதருடைய பேச்சைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தையும் உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிப் படுத்தப்பட்ட சத்தியத்தை அவர்கள் விசுவாசிக்க வில்லை. (மத் 1:18-25; லூக்கா 1:27-56)

10. இயேசு தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நமக்கு ஒரு முன்மாதிரியைக் காண்பிக்கிறார்

லூக்கா 2:51 பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள்.

லூக்கா 2:52 இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.

"அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்தார்" - நாசரேத்திலிருந்து எருசலேம் 1,500 அடி உயரத்தில் இருக்கிறது. (லூக்கா 2:4,42)

"அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்" - மேலும் பதினெட்டு வருஷங்கள் இயேசு கிறிஸ்து தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார். (லூக்கா 3:23).

"அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள்" - (லூக்கா 2:33,48)

"இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" - இயேசு கிறிஸ்துவிடம் தெய்வீகத் தன்மை இருந்தது. அந்தத் தன்மையை இயேசு தமது மானிடத் தன்மைக்குள் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். அவர் பூமியிலே தமது மாம்சத்தில் இருந்த நாட்களில் அவர் தேவனாக இருந்தாலும் முழுவதுமாக மனுஷனாகவும் இருந்தார். இயேசு தமது சரீரத்தில் ஒரு பாவமும் செய்யவில்லை. மனுக்குலத்தார் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும் ஜீவியத்தை வாழ்ந்து காட்டினார். சாத்தானைத் தோற்கடிப்பதற்காக அவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார். (லூக்கா 2:40,52; பிலி 2:5-11; எபி 2:10-18; எபி 4:14-16; 1பேதுரு 2:21; 1பேதுரு 4:1) இந்த வல்லமை அவருக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலமாகவே வந்தது. வேறு எந்த விதத்திலும் வரவில்லை. (மத் 3:16-17; மத் 12:28; அப் 10:38; ஏசா 11:1-2; ஏசா 42:1-5; ஏசா 61:1-2; லூக்கா 4:16-21) எந்த மனுஷனும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும் போது அவரும் தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்வார். இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரம் அவருடைய ஊழியத்தை வல்லமையோடு செய்வார். (மத் 18:18; மாற்கு 16:15-20; யோவான் 14:12) இயேசு தாமாக ஒரு கிரியையும் செய்யவில்லை என்று பல இடங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். (யோவான் 8:28) பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக கிரியை நடப்பிக்கின்றன. விசுவாசிகளும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்ளலாம். கர்த்தருக்காக வல்லமையோடு ஊழியம் செய்யலாம். (மத் 17:20-21; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:17-20; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12; யோவான் 17:18; அப் 1:1-8).

3 அதிகாரம்

III. யோவான் ஸ்நானனின் ஊழியம் - (மத் 3:1)

1. யோவான் ஸ்நானனின் காலமும் அழைப்பும்

லூக்கா 3:1 திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே, பொந்தியுபிலாத்து யூதேயாவுக்குத் தேசாதிபதியாயும், ஏரோது காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு அதிபதியாயும், அவன் சகோதரனாகிய பிலிப்பு காற்பங்கு தேசமாகிய இத்துரேயாவுக்கும் திராகொனித்தி நாட்டிற்கும் அதிபதியாயும், லிசானியா காற்பங்கு தேசமாகிய அபிலேனேக்கு அதிபதியாயும்,

லூக்கா 3:2 அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்தில் வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று.

"திபேரியுராயன்" - கிபி. 14 முதல் 37 வரையிலும் ராஜ்யபாரம் பண்ணினான்.

"பிலாத்து" - யூதேயாவின் தேசாதிபதி. ரோமப்பேரரசினால் நியமிக்கப்பட்டவன். (மத் 27:2) கலிலேயரைக் கொலைசெய்தவன். (லூக்கா 13:1); இயேசுவை விசாரணை செய்து அவரைச் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக் கொடுத்தவன். (மத் 27; மாற்கு 15; லூக்கா 23; யோவான் 18-19; அப் 3:13; அப் 4:27; அப் 13:28; 1தீமோ 6:13); இயேசுவின் சரீரத்தை யோசேப்பிடம் கொடுத்தவன். (மத் 27:57-58; மாற்கு 15:43-45; லூக்கா 23:52; யோவான் 9:38).

"ஏரோது" - (மத் 2:3)

"காற்பங்கு தேசமாகிய கலிலேயா" - (மத் 14:1)

"அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்தகாலத்தில்" - சுழற்சி முறையில் பிரதான ஆசாரியரின் பட்டம் ஆசாரியருக்குக் கிடைக்கும். காய்பா, அன்னாவின் மருமகன். அன்னாவின்கீழ் தேவாலயத்தைக் காய்பா ஆட்சி புரிந்தான்.

"வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று" - தெய்வீக அழைப்பு வரும் விதம். (ஆதி 15:1; 1சாமு 15:10; 2சாமு 7:4; 2சாமு 24:11; 1இராஜா 6:11; 1இராஜா 13:20; 1இராஜா 16:1; 1இராஜா 17:2; 1இராஜா 18:1,31; 1இராஜா 19:9) யோவான் தீர்க்கதரிசிகளில் கடைசியும், பெரியவனுமாக இருந்தவன். (மத் 11:11).

2. யோவான் ஸ்நானனுடைய ஊழியத்தின் நோக்கம்

லூக்கா 3:3 அப்பொழுது: கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள் என்றும்,

லூக்கா 3:4 பள்ளங்களெல்லாம் நிரப்பப் படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானவைகள் செவ்வையாகும், கரடானவைகள் சமமாகும் என்றும்,

லூக்கா 3:5 மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும், வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிறபிரகாரம்,

லூக்கா 3:6 அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்கும் போய், பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக் கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தான்.

"பிரசங்கித்தான்" - (மத் 3:1)

"பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக் கேற்ற ஞானஸ்நானம்" - (மத் 3:6)

3 அதிகாரம்

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும்" (லூக்கா 3:4-6; ஏசா 40:3-5)

3. யோவான் ஸ்நானன் ஜனங்களுக்கு கூறிய ஏழு அம்ச செய்தி

லூக்கா 3:7 அவன், தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படிக்குப் புறப்பட்டுவந்த திரளான ஜனங்களை நோக்கி: விரியன்பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்?

லூக்கா 3:8 மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 3:9 இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.

லூக்கா 3:10 அப்பொழுது ஜனங்கள் அவனை நோக்கி: அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.

லூக்கா 3:11 அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக: இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக் கடவன் என்றான்.

"விரியன்பாம்புக் குட்டிகளே!" - விரியன்பாம்புகளேப் போலவே அவற்றின் குட்டிகளும் விஷம் மிகுந்தவை. (மத் 3:7-9)

"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" - மனந்திரும்புங்கள். அதேசமயத்தில் உங்கள் மனந்திரும்புதலை நிரூபிக்கும் விதமாக உங்கள் ஜீவியத்தின் மூலமாக நல்ல சுபாவங்களை வெளிப்படுத்திக் காண்பியுங்கள்.

தீர்க்கதரிசன எண் - 14

"இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (லூக்கா 3:9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. தேசம் உடனடியாக அழிக்கப்படும். கனிகொடாத அத்திமரம் சபிக்கப்பட்டவுடன் பட்டுப்போயிற்று. அதுபோலவே இதுவரையிலும் கனிகொடாத இஸ்ரவேல் தேசம் இப்போது கனிதரவேண்டும். இல்லையேல் அது அழிக்கப்படும். கிபி. 70 ஆம் ஆண்டில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. நீரோ மன்னன் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் சிதறி ஓடிப்போனார்கள். (மத் 3:10)

"இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக் கடவன்" - மனந்திரும்புவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று ஜனங்கள் யோவானிடம் கேட்கிறார்கள். அதற்கு யோவான் இவ்வாறு பதில் கூறுகிறான். ஜனங்கள் மத்தியில் விசுவாசிகள் நீதியையும், இரக்கத்தையும் காண்பிக்கவேண்டும். தன்னுடைய தேவைக்கு மேல் அதிகமாக வைத்திருக்கிறவன் தேவையுள்ளவர்களுக்கு மனப்பூரணமாகக் கொடுத்து உதவி புரியவேண்டும். சோம்பேறிக்கு உதவி செய்து, அவனை மேலும் சோம்பேறி ஆக்க வேண்டாம். என்றாலும் தேவைப் படுவோருக்கு முகம் கோணாமல் உதவி புரிவது விசுவாசிகளின் கடமை. அதே சமயத்தில் விசுவாசி தன்னையும், தன்னுடைய குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும். குடும்பத்தைப் பராமரிக்காமல் இருப்பது தவறு. (1தீமோ 5:8)

3 அதிகாரம்

4. ஆயக்காரருக்கும் போர்ச்சேவகருக்கும் யோவான் ஸ்நானன் கூறிய நான்கு அம்ச செய்தி

லூக்கா 3:12 ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறவந்து, அவனை நோக்கி: போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.

லூக்கா 3:13 அதற்கு அவன்: உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள் என்றான்.

லூக்கா 3:14 போர்ச்சேவகரும் அவனை நோக்கி: நாங்கள் என்னசெய்யவேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு அவன்: நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள் என்றான்.

"போதகரே, நாங்கள் என்னசெய்யவேண்டும்" என்று ஆயக்காரர் யோவானிடம் கேட்கிறார்கள். அவர்கள் யோவானைப் போதகரே என்று அழைக்கிறார்கள். அவர்களிடம் யோவான் "உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்" என்றான்.

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teacher, doctor) (லூக்கா 9:38)

"போர்ச்சேவகரும் அவனை நோக்கி: நாங்கள் என்னசெய்யவேண்டும் என்று கேட்டார்கள்" - யோவான் அவர்களுக்குக் கூறிய மூன்று காரியங்கள். அவையாவன:

1. நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண்செய்யாமல் இருங்கள்.
2. பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமல் இருங்கள்.
3. உங்கள் சம்பளமே போதுமென்று இருங்கள்.

5. இயேசு கிறிஸ்து பற்றி யோவான் ஸ்நானன் முன்குறித்துக் கூறுகிறான்

லூக்கா 3:15 யோவானைக்குறித்து: இவன்தான் கிறிஸ்துவோ என்று ஜனங்களெல்லாரும் எண்ணங்கொண்டு, தங்கள் இருதயங்களில் யோசனையாயிருக்கையில்,

லூக்கா 3:16 யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

லூக்கா 3:17 தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளங்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.

லூக்கா 3:18 வேறு அநேக புத்திமதிகளையும் அவன் ஜனங்களுக்குச் சொல்லிப் பிரசங்கித்தான்.

"யோவானைக்குறித்து: இவன்தான் கிறிஸ்துவோ என்று ஜனங்களெல்லாரும் எண்ணங்கொண்டு, தங்கள் இருதயங்களில் யோசனையாயிருக்கையில்" - ஜனங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. மிகுந்த குழப்பத்தில் இருக்கிறார்கள். யோவான் கிறிஸ்துவாக இருப்பாரோ என்று தங்களுக்குள் யோசனை பண்ணுகிறார்கள். யூதர்கள் தங்களை விடுதலை பண்ணுவதற்காக யெகோவா தேவன் ஒரு மேசியாவை அனுப்புவார் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். யோவான்தான் அந்த மேசியாவோ என்று அவர்களுக்குள் சந்தேகம் வந்து விட்டது.

3 அதிகாரம்

"எல்லாருக்கும்" - (லூக்கா 2:1; மத் 3:6)

தீர்க்கதரிசன எண் - 15

"நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்..............." (லூக்கா 3:16-17) லூக்கா 3:16 நிறைவேறிற்று. நிறைவேறிக் கொண்டிருக்கிறது. லூக்கா 3:17 இந்தக் காலத்தின் முடிவிலும், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின்போதும் நிறைவேறும். (மத் 13:40-50; மத் 25:41,46; வெளி 20:11-15)

"நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்" - (மத் 3:6,11)

"அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" - (மாற்கு 1:7)

பரிசுத்த ஆவியானவருக்குக் கூறப் பட்டிருக்கும் அடையாளங்கள்

1. அக்கினி **(Fire)** - வைராக்கியம், பட்சிக்கும் வல்லமை **(zeal and refining power)** (சங் 104:4; ஏசா 4:3-4; மல் 3:1-4; மத் 3:11; லூக்கா 3:16; யோவான் 2:17; அப் 2:3)
2. புறா **(Dove)** - சாந்தம், தீங்குசெய்யாமை, ஆறுதலிக்கும் வல்லமை **(gentleness, harmlessness, and comforting power)** (லூக்கா 3:22; யோவான் 1:32-33)
3. தண்ணீர் **(Water)** - ஜீவனைக் கொடுக்கும் அளவில்லாத வல்லமை **(life-giving and infinite power)** (யோவான் 7:37-39)
4. காற்று **(Wind)** - உயிர்த்தெழும் வல்லமை **(resurrection power)** (எசே 37:9; யோவான் 3:8; அப் 2:2)
5. எண்ணெய் **(Oil)** - பிரதிஷ்டை பண்ணி அபிஷேகிக்கும் வல்லமை **(consecration and anointing power)** (சங் 45:7; ஏசா 61:1-3; லூக்கா 4:16-21; எபி 1:9; யாக் 5:14-16)
6. முத்திரை **(Seal)** - மீட்டுக் காத்துக் கொள்ளும் வல்லமை **(redemptive and keeping power)** (எபே 1:13; எபே 4:30; 1பேதுரு 1:5)
7. அச்சாரம் **(Earnest)** - சொந்தமாக்கிக் கொள்ள உறுதி கொடுக்கும் வல்லமை **(ownership and guarantee power)** (2கொரி 1:22; எபே 1:13-14)
8. மழை, மாரி **(Rain)** - ஜீவனைக் கொடுத்து உயிர்ப்பிக்கும் வல்லமை **(life-giving and quickening power)** (சங் 1:3; ஓசி 6:3; ஓசி 10:12; யோவே 2:23-32; சக 10:1; யாக் 5:7)
9. பனி **(Dew)** - புதுப்பிக்கும் வல்லமை **(refreshing and invigorating power)** (சங் 72:6; ஓசி 14:5)
10. வரம் **(Gift)** - சந்தோஷம், கிருபை, விடுதலையளிக்கும் வல்லமை **(joyful, gracious, and liberating power)** (அப் 2:38-39; அப் 4:31-33; 2கொரி 3:17-18; எபி 1:9)

"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளங்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" - தானியத்தைத் திறந்த வெளியில் காற்றில் தூவுவார்கள். அறுத்த கதிர்களை விலங்குகளை விட்டு மிதிக்க விடுவார்கள். சில சமயங்களில் இதற்கு எந்திரங்களையும் பயன்படுத்துவார்கள். (உபா 25:4, ஏசா 28:27)

3 அதிகாரம்

தானியத்தில் சேர்ந்திருக்கும் உமியைச் சுளகினால் புடைப்பார்கள். உமி காற்றில் பறக்கும். தானியம் தரையில் கீழே விழும். அந்தத் தானியத்தைக் கூட்டிச்சேர்ப்பார்கள். உமியைத் தீயிட்டு எரிப்பார்கள். மனுஷருக்கு வரும் நியாயத்தீர்ப்பை விளக்குவதற்கு இந்த உவமை பல இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (யோபு 21:17-20; சங் 1:4; ஏசா 29:5; ஏசா 41:16; தானி 2:35)

"அவன் ஜனங்களுக்குச் சொல்லிப் பிரசங்கித்தான்" - யோவான் பிரசங்கித்த உபதேசங்களை மத் 3:1 ஆவது வசனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில் காணலாம்.

6. ஏரோது யோவான் ஸ்நானனைக் கைது பண்ணுகிறான் - (மத் 11:2; மாற்கு 6:14; லூக் 9:7)

லூக்கா 3:19 காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது தன் சகோதரனான பிலிப்புவின் மனைவி ஏரோதியாளினிமித்தமாகவும், தான் செய்த மற்றப் பொல்லாங்குகளினிமித்த மாகவும், யோவானாலே கடிந்து கொள்ளப்பட்ட போது,

லூக்கா 3:20 தான் செய்த மற்றெல்லாப் பொல்லாங்குகளும் தவிர, யோவானையும் காவலில் அடைத்துவைத்தான்.

"ஏரோது" - (மத் 2:3)

"காற்பங்கு" - (மத் 14:1)

"ஏரோதியாள்" - (மத் 14:3)

தான் செய்த மற்றெல்லாப் பொல்லாங்குகளும் தவிர, யோவானையும் காவலில் அடைத்துவைத்து தன்னுடைய பொல்லாங்குகளைக் கூட்டினான். கிரேக்க பாஷை புதிய ஏற்பாட்டில் ஏரோது தன் பொல்லாங்குகளைக் கூட்டினான் என்பதற்கு "ப்ரோஸ்டிதேமி" (prostithemi) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது மருத்துவர்கள் பயன்படுத்தும் சொல். மருந்து போடுதல், அல்லது வைத்தியம் பார்த்தல் என்பது இதற்குப் பொருள். லூக்காவிலும், அப்போஸ்தலரிலும் இந்தச் சொல் 13 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டின் மற்ற புஸ்தகங்களில் 5 இடங்களில் மட்டுமே இந்த வார்த்தையைக் காண்கிறோம்.

கூட்டு (Added) - προστίθημι - **prostitheemi** - 4369

வினைச்சொல் - கூட்டு, கூடக்கொடு, அதிகம் கொடு, வர்த்திக்கப் பண்ணு

"யோவானைக் காவலில் அடைத்து வைத்தான்" - திருச்சபை வரலாற்று ஆசிரியர் யோசபஸ் (Josephus) இதைப் பற்றி எழுதும்போது ஏரோது யோவானை மக்கெரஸ் (Macherus) கோட்டையில் அடைத்து வைத்ததாக எழுதுகிறார். சவக்கடலுக்கு வடக்கில் அரபியாவின் எல்லையில் இந்தக் கோட்டை அமைந்திருக்கிறது.

IV. தமது ஊழியத்திற்காக இயேசு கிறிஸ்துவின் இறுதி ஆயத்தம் - (மத் 3:13; மாற்கு 1:9; யோவான் 1:31)

1. தண்ணீர் ஞானஸ்நானம் - (மத் 3:13; மாற்கு 1:9)

லூக்கா 3:21 ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது;

"ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" - (லூக்கா 2:1)

"இயேசுவும் ஞானஸ்நானம் பெற்றார்" - பாவங்களைக் கழுவுவதற்காகவோ அல்லது பாவங்களை மன்னிப்பதற்காகவோ யாரும் ஞானஸ்நானம் பெறுவதில்லை. ஏனெனில் ஒருபாவமும் செய்யாத இயேசு கிறிஸ்துவும் ஞானஸ்நானம் பெற்றார். (1பேதுரு 2:21-23) கிறிஸ்துவின் மரணம், அடக்கம்பண்ணுதல், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு அடையாளமாகவே விசுவாசிகள் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். (1பேதுரு 3:21) இயேசு கிறிஸ்து தமது மரணம், தாம் அடக்கம்பண்ணப்படுதல், தமது உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு அடையாளமாகவே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். (யோவான் 1:31)

3 அதிகாரம்

“இயேசு ஜெபம்பண்ணுகையில்” - லூக்கா தான் எழுதிய சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து ஏழு இடங்களில் ஜெபம் பண்ணியதாக குறிப்பிட்டிருக்கிறார். அவற்றுள் இதுவும் ஒன்று. (லூக்கா 3:21; லூக்கா 5:16; லூக்கா 6:12; லூக்கா 9:18,28; லூக்கா 11:1; லூக்கா 22:41-44).

2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (மத் 3:16; மாற்கு 1:10; யோவான் 3:34)

லூக்கா 3:22 பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

“பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்” என்று உரைத்தது - திரித்துவத்தைத் தெளிவாக விளக்கும் வாக்கியம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள். இந்த வசனத்திலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய சத்தியங்கள்.

1. பிதா வானத்திலிருந்து பேசுகிறார்.

2. குமாரன் பூமியிலிருந்து வானத்திலிருக்கும் பிதாவிடம் ஜெபிக்கிறார்.

3. பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலுள்ள பிதாவிடமிருந்து இறங்கி வந்து, பூமியிலுள்ள குமாரனை அபிஷேகம் பண்ணுவதற்காகவும், வல்லமையினால் நிரப்புவதற்காகவும் வருகிறார். (ஏசா 11:1; ஏசா 42:1-5; ஏசா 48:16; ஏசா 61:1; லூக்கா 4:16-18; அப் 10:38; 1யோவான் 5:7)

“நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்” - இந்த வசனம் மத் 3:17-இல் வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. பிதா இவ்விரண்டு வாக்கியங்களையும் கூறியிருக்கலாம். அல்லது பிதா கூறியதன் கருத்தை இவ்விரண்டு சுவிசேஷ ஆசிரியர்களும் தங்களுடைய இலக்கிய நடையில் எழுதியிருக்கலாம். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, எழுதப்படும்போது என்பது சில சமயங்களில் கருத்துக்கள் மட்டும் ஏவப்பட்டிருக்கும். வார்த்தைகள் ஏவப் பட்டிருக்காது. ஆனாலும் பயன்படுத்திய வார்த்தைகளில் முரண்பாடு எதுவும் இருக்காது. பரிசுத்த ஆவியானவர் தங்களுக்கு ஏவியிருக்கிற கருத்துக்களை வேதாகம ஆசிரியர்கள் தங்களுடைய இலக்கிய நடையிலேயே எழுதியிருக்கிறார்கள்.

3. மரியாள், யோசேப்பு ஆகியோரின் வம்சவரலாறு - (மத் 1:1)

(1) இயேசுவிலிருந்து தாவீது வரையிலும்

லூக்கா 3:23 அப்பொழுது இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார். அவர் யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார். அந்த யோசேப்பு ஏலியின் குமாரன்;

லூக்கா 3:24 ஏலி மாத்தாதின் குமாரன்; மாத்தாத் லேவியின் குமாரன்; லேவி மெல்கியின் குமாரன்; மெல்கி யன்னாவின் குமாரன்; யன்னா யோசேப்பின் குமாரன்;

லூக்கா 3:25 யோசேப்பு மத்தத்தியாவின் குமாரன்; மத்தத்தியா ஆமோசின் குமாரன்; ஆமோஸ் நாகூமின் குமாரன்; நாகூம் எஸ்லியின் குமாரன்; எஸ்லி நங்காயின் குமாரன்.

லூக்கா 3:26 நங்காய் மாகாத்தின் குமாரன்; மாகாத் மத்தத்தியாவின் குமாரன்; மத்தத்தியா சேமேயின் குமாரன்; சேமேய் யோசேப்பின் குமாரன்; யோசேப்பு யூதாவின் குமாரன்; யூதா யோவன்னாவின் குமாரன்.

3 அதிகாரம்

லூக்கா 3:27 யோவன்னா ரேசாவின் குமாரன்; ரேசா சொரொபாபேலின் குமாரன்; சொரொபாபேல் சலாத்தியேலின் குமாரன்; சலாத்தியேல் நேரியின் குமாரன்.

லூக்கா 3:28 நேரி மெல்கியின் குமாரன்; மெல்கி அத்தியின் குமாரன்; அத்தி கோசாமின் குமாரன்; கோசாம் எல்மோதாமின் குமாரன்; எல்மோதாம் ஏரின் குமாரன்; ஏர் யோசேயின் குமாரன்.

லூக்கா 3:29 யோசே எலியேசரின் குமாரன்; எலியேசர் யோரீமின் குமாரன்; யோரீம் மாத்தாத்தின் குமாரன்; மாத்தாத் லேவியின் குமாரன்.

லூக்கா 3:30 லேவி சிமியோனின் குமாரன்; சிமியோன் யூதாவின் குமாரன்; யூதா யோசேப்பின் குமாரன்; சோசேப்பு யோனானின் குமாரன்; யோனான் எலியாக்கீமின் குமாரன்.

லூக்கா 3:31 எலியாக்கீம் மெலெயாவின் குமாரன; மெலெயா மயினானின் குமாரன்; மயினான் மாத்தாத்தாவின் குமாரன்; மாத்தாத்தா நாத்தானின் குமாரன்; நாத்தான் தாவீதின் குமாரன்.

"அப்பொழுது இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார்" - இயேசுவுக்கு முப்பது வயது ஆயிற்று. நியாயப்பிரமாணத்திற்குக் கீழேயுள்ள ஆசாரியர்கள் இந்த வயதில்தான் ஆசாரிய ஊழியத்தைச் செய்ய ஆரம்பிப்பார்கள். ஆசாரியர்கள் கிறிஸ்துவின் அடையாளமாக இருக்கிறார்கள். (எண் 4:23; 1நாளா 23:3)

"யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார்" - இயேசு சட்டப்படியாக யோசேப்பின் குமாரன். ஆனால் உண்மையில் அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரன். மரியாளின் வயிற்றில் உற்பத்தியானவர். (மத் 1:18-25; லூக்கா 1:35) யோசேப்பு யாக்கோபின் குமாரன். இந்த உறவு அவர்களுடைய சரீரப்பிரகாரமான உறவுகளினால் வருகிறது. (மத் 1:16)

"யோசேப்பின் குமாரன்" - வம்சவரலாற்றை எழுதும்போது பெண்களின் பெயரைக் குறிப்பிடுவதில்லை. இந்த வம்சவரலாற்றில் ஏலி மரியாளின் இடத்திற்கு வருகிறார். வம்சவரலாறு எழுதப்படுகின்ற நியமனத்தின்படி ஆண்களுடைய வம்சவரலாறுகளே எழுதப்படும். இந்த அதிகாரத்தில் யோசேப்பின் வம்சவரலாறு சொரொபாபேல் வரையிலும் எழுதப்படுகிறது. (லூக்கா 3:23-27) இவனுடைய பெயர் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஒருசில தலைமுறைகளுக்கு முந்தினவனாக இவன் இருக்கக்கூடும்.

"சொரொபாபேல் சலாத்தியேலின் குமாரன்" - சலாத்தியேலின் இயற்கையான குமாரன். (எஸ்றா 3:8; எஸ்றா 5:2; நெகே 12:1; ஆகாய் 1:1,12-14; ஆகாய் 2:2,23) 1நாளா 3:19 -இல் சொரொபாபேலின் தகப்பனாக பேதாயா குறிப்பிடப்பட்டிருக்கிறான். இந்த வம்ச வரலாற்றில் இருக்கும் குழப்பத்தை ஒருசில வியாக்கியானங்கள் மூலமாக தெளிவுபடுத்தலாம். அவையாவன:

1. சலாத்தியேலும், பேதாயாவும் ஒரே நபராக இருக்கலாம்.

2. அவர்கள் இருவரும் சகோதரராக இருக்கலாம். மத் 1:12-இல் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் சொரொபாபேல் சலாத்தியேலின் உண்மையான குமாரனாக இருக்கலாம். அவனுடைய தந்தை மரித்தபோது இவன் பேதாயாவின் சட்டப்படியான குமாரனாக வந்திருக்கலாம். (உபா 25:5-6).

3. சொரொபாபேல் பேதாயாவின் மருமகனாக இருக்கலாம். யோசேப்பு ஏலியின் மருமகனாக இருப்பதுபோல. (லூக்கா 3:23) சலாத்தியேல் நேரியின் மருமகனாக இருக்கலாம். (லூக்கா 3:27) அவன் எகொனியாவின் குமாரன். (மத் 1:12; 1நாளா 3:17).

4. பழைய ஏற்பாட்டுப் பெயர்கள் புதிய ஏற்பாட்டில் சிலஇடங்களில் வித்தியாசமாக எழுதப்பட்டிருக்கின்றன. ரூத் 4:18-22; ஆதி 5; ஆதி 11; ஆதி 38 ஆகிய வசனங்களிலுள்ள பெயர்களை லூக் 3:32-38 ஆகிய வசனங்களிலுள்ள பெயர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

3 அதிகாரம்

5. பெண்கள் சில சமயங்களில் திருமணமான பின்பு, தங்களுடைய கணவன்மார்களின் பெயர்களைச் சேர்த்துக் கொள்வதற்குப் பதிலாக தங்கள் பெற்றோரின் குடும்பப் பெயரையே சேர்த்துக் கொள்வார்கள். (எஸ்றா 2:61).

இயேசுவின் வம்சவரலாற்றில் ஏதாவது குழப்பம் இருக்குமென்றால் அது வேதபாரகருக்கும், பரிசேயருக்கும் நிச்சயமாகத் தெரிந்திருக்கும். அதை வைத்துக் கொண்டு, அவர்கள் ஒரு பெரிய பிரச்சனையையே எழுப்பியிருப்பார்கள்.

“சலாத்தியேல்” - இவன் தாவீதின் வம்சத்திலும், நாத்தானின் வம்சத்திலும் வருகிறான். நேரியின் குமாரத்தியை சலாத்தியேல் திருமணம் செய்து, நாத்தானின் வம்சத்தில் வருகிறான். சாலொமோனின் குமாரனாக தாவீதின் வம்சத்தில் வருகிறான். நேரிக்கு ஆண் குழந்தை எதுவும் பிறக்கவில்லை. இவ்வாறாக தாவீதின் இரண்டு கிளைகள் சொரொபாபேலோடு இணைகின்றன. இயேசு கிறிஸ்து தாவீதின் குடும்பத்தில் வாரிசாக வருகிறார்.

“நாத்தான்” - சாலொமோனின் மூத்த சகோதரன். (1நாளா 3:5) சாலொமோனைப் போல பழைய ஏற்பாட்டு வசனங்களில் இவனுடைய பெயர் அதிகமாகக் குறிப்பிடப்பட வில்லை.

(2) தாவீதிலிருந்து ஆபிரகாம் வரையிலும்

லூக்கா 3:32 தாவீது ஈசாயின் குமாரன்; ஈசாய் ஓபேதின் குமாரன்; ஓபேத் போவாசின் குமாரன்; போவாஸ் சல்மோனின் குமாரன்; சல்மோன் நகசோனின் குமாரன்.

லூக்கா 3:33 நகசோன் அம்மினதாபின் குமாரன்; அம்மினதாப் ஆராமின் குமாரன்; ஆராம் எஸ்ரோமின் குமாரன்; எஸ்ரோம் பாரேசின் குமாரன்; பாரேஸ் யூதாவின் குமாரன்; யூதா யாக்கோபின் குமாரன்.

லூக்கா 3:34 யாக்கோபு ஈசாக்கின் குமாரன்; ஈசாக்கு ஆபிரகாமின் குமாரன்; ஆபிரகாம் தேராவின் குமாரன்; தேரா நாகோரின் குமாரன்.

“தாவீது ஈசாயின் குமாரன்; ஈசாய் ஓபேதின் குமாரன்; ஓபேத் போவாசின் குமாரன்” - (லூக்கா 3:32-38, ரூத் 4:18-22; ஆதி 5; ஆதி 11; ஆதி 25; ஆதி 29; ஆதி 30; ஆதி 38)

(3) ஆபிரகாமிலிருந்து ஆதாம் வரையிலும்

லூக்கா 3:35 நாகோர் சேரூக்கின் குமாரன்; சேரூக் ரெகூவின் குமாரன்; ரெகூ பேலேக்கின் குமாரன்; பேலேக் ஏபேரின் குமாரன்; ஏபேர் சாலாவின் குமாரன்.

லூக்கா 3:36 சாலா காயினானின் குமாரன்; காயினான் அர்ப்பகசாத்தின் குமாரன்; அர்ப்பகசாத் சேமின் குமாரன்; சேம் நோவாவின் குமாரன்; நோவா லாமேக்கின் குமாரன்.

லூக்கா 3:37 லாமேக்கு மெல்தூசலாவின் குமாரன்; மெத்தூசலா ஏனோக்கின் குமாரன்; ஏனோக்கு யாரேதின் குமாரன்; யாரேத் மகலாலெயேலின் குமாரன்; மகலாலெயேல் கேனானின் குமாரன்; கேனான் ஏனோசின் குமாரன்.

லூக்கா 3:38 ஏனோஸ் சேத்தின் குமாரன்; சேத் ஆதாமின் குமாரன்; ஆதாம் தேவனால் உண்டானவன்.

“சாலா காயினானின் குமாரன்” - இங்கு மறுபடியும் வம்சவரலாறு மருமகன் பெயர் மூலமாக வருகிறது. ஆதி 11:12-16 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற சாலா என்பவனே காயினானாக இருக்கலாம்.

“ஆதாம் தேவனால் உண்டானவன்” - தேவன் ஆதாமைச் சிருஷ்டித்தார். மற்றவர்கள் எல்லோருமே மனுஷருக்குப் பிறந்தவர்கள். மனுஷருக்கும், விலங்குகளுக்கும் தங்கள் தங்கள் ஜாதிகளை விருத்தி பண்ணும் அதிகாரத்தைத் தேவன் கொடுத்தார். (ஆதி 1:20-28) எரேமியா, இஸ்ரேல் ஆகியோர் கர்ப்பத்தில் உற்பத்தியாவதைக் குறித்து தேவன் குறிப்பிட்டிருக்கிறார். (எரே 1:5, ஏசா 43:1; ஏசா 44:2)

3 அதிகாரம்

தேவனுடைய பிரமாணத்தின் பிரகாரமாக ஜீவராசிகள் தங்களுடைய இனத்தை உற்பத்தி பண்ணுகின்றன. ஆதியிலே தேவன் ஆதாமைச் சிருஷ்டித்தார். நாம் நம்முடைய பெற்றோருக்குப் பிறந்திருக்கிறோம். நம்முடைய மூதாதையர் யாரென்று ஆராய்ந்து பார்ப்போம் என்றால் அது ஆதாமில் போய் முடியும். இதுவே கர்த்தருடைய உற்பத்திப் பிரமாணம்.

4 அதிகாரம்

4. இயேசுவை சாத்தான் சோதிக்கிறான் - (மத் 4:1)

லூக்கா 4:1 இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு,

லூக்கா 4:2 நாற்பதுநாள் பிசாசினாலே சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று.

லூக்கா 4:3 அப்பொழுது பிசாசு அவரை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என்றான்.

லூக்கா 4:4 அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

லூக்கா 4:5 பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து.

லூக்கா 4:6 இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக் கொடுப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன்.

லூக்கா 4:7 நீர் என்னைப் பணிந்துகொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்.

லூக்கா 4:8 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

லூக்கா 4:9 அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும்.

லூக்கா 4:10 ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் என்றும்,

லூக்கா 4:11 உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும், எழுதியிருக்கிறது என்று சொன்னான்.

லூக்கா 4:12 அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறதே என்றார்.

லூக்கா 4:13 பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்.

"இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய்" - ஆவியினால் நிறைந்தவர் என்னும் வாக்கியம் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும். பரிசுத்த ஆவியானவர் மனுஷரைப் பல்வேறு அளவுகளில் அபிஷேகம் பண்ணுகிறார். இயேசு கிறிஸ்துவைப் பொருத்தவரையில் ஆவியானவர் அவரை அளவிடமுடியாத அளவிற்கு அல்லது பூரண நிறைவாக அபிஷேகம் பண்ணினார். (யோவான் 3:34; அப் 10:38) பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் அளவு ஒரு வரையறைக்குட் பட்டிருந்தது. ஒருகுறிப்பிட்ட வரத்தினால், குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட ஆற்றலில் பரிசுத்த ஆவியானவர் தனி நபர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களை நிரப்பினார். (யாத் 28:3; யாத் 31:3; யாத் 35:31; உபா 34:9; மீகா 3:8; லூக்கா 1:15-17,41,67).

4 அதிகாரம்

பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு பரிசுத்த ஆவியானவர் மனுஷரை நிறைத்தார். (அப் 2:4; அப் 4:8,31; அப் 6:3-8; அப் 7:55; அப் 9:17; அப் 11:24; அப் 13:9,52) "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் பரிசுத்த ஆவியானவர் மனுஷரை நிறைத்தார்". (எபே 3:19; ரோமர் 15:29) பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தின் பல்வேறு அளவுகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (எண் 11:16-25; 2இராஜா 2:9; லூக்கா 1:17; யோவான் 3:34)

"நாற்பதுநாள் பிசாசினாலே சோதிக்கப்பட்டார்" - இயேசு கிறிஸ்துவைப் பிசாசு நாற்பதுநாள் சோதித்தான். இந்த நாற்பது நாள் காலத்தில் அவருக்குப் பல சோதனைகளைக் கொடுத்திருப்பான். (மத் 4:1-11)

"இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும்" - யூதேயா தேசத்திலுள்ள மலைகளில் சிதறிக்கிடக்கும் கற்கள் பார்ப்பதற்கு அப்பங்களைப் போலவே இருக்கும். (மத் 7:9)

"மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" - உபா 8:3 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன்" - சாத்தான் இந்த உலகத்தின் அதிபதி. என்றாலும் இந்த உலகத்தை ஆளும் அதிகாரம் அவனுக்கு இல்லை. தனக்கு அதிகாரம் இருப்பதுபோன்று ஏமாற்றுகிறான். (யோவான் 12:31; 2கொரி 4:4; வெளி 13:2,7; எபே 2:1-3) தேவனே சர்வ வல்லமையுள்ளவர். தேவனுடைய வல்லமையைச் சாத்தானால் தனக்கு இஷ்டமானவனுக்குக் கொடுக்க முடியாது. (தானி 2:20-22; தானி 4:17,25, 32-36; தானி 5:23-31).

"எனக்குப் பின்னாகப்போ சாத்தானே" - தேவவசனத்தில் இந்த வாக்கியம் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 16:23; யாக் 4:7; 1பேதுரு 5:8-9; எபே 6:10-18).

"உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" - உபா 6:13; உபா 10:20 ஆகிய வசனங்கள் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"தேவாலயத்து உப்பரிகை" - கெதரோன் பள்ளத்தாக்கிலிருந்து 700 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது.

"உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்" - சங் 91:11-12 வசனங்களைச் சாத்தான் தவறுதலாக மேற்கோளிட்டுக் கூறுகிறான்.

காத்துக்கொள் (keep) - διαφυλάσσω - diaphylassoo - 1314

வினைச்சொல் - காத்துக்கொள் **(thoroughly protect)** - இந்தக் கிரேக்கச் சொல் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வாக்குத் தத்தத்தினால் நாம் கர்த்தரைச் சோதிக்கக் கூடாது. பிசாசானவன் இயேசு கிறிஸ்துவைத் தற்கொலை செய்து கொள்வதற்குத் தூண்டினான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைச் சோதிப்பதற்காக யாரும் தற்கொலை பண்ண முயற்சி பண்ணக்கூடாது.

"உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" - உபா 6:16 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தான்" - எல்லா சோதனைகளும் முடிந்தது. அதன் பின்பு சில காலம் மட்டும் அவரை விட்டு விலகிப்போனான். இதன் பொருள் என்னவெனில், சில காலம் கழித்து அவன் இயேசுவை மறுபடியும் சோதிக்க வந்தான். வித்தியாசமான சூழ்நிலைகளில், வித்தியாசமான சோதனைகளினால் சாத்தான் இயேசுவைச் சோதித்திருக்கலாம். (மத் 4:11)

4 அதிகாரம்

V. இயேசுவின் ஊழியமும் உபதேசமும் - (மத் 4:12; மாற்கு 1:14; யோவான் 1:35)

1. இயேசு கலிலேயாவில் தமது ஊழியத்தை ஆரம்பிக்கிறார் - (மத் 4:12; மாற்கு 1:14)

லூக்கா 4:14 பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப்போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று.

"பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்" - இயேசு கிறிஸ்து நாற்பது நாட்களாக பரிசுத்த ஆவியினாலே ஜீவித்து வழிநடத்தப் பட்டார். அதே பரிசுத்த ஆவியானவருடைய பலத்தினாலே அவர் கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். (லூக்கா 4:1)

"கலிலேயா" - கலிலேயாவின் இருளில் இயேசு கிறிஸ்து வெளிச்சம் தரும் தமது ஊழியத்தைச் செய்யப்போகிறார். இது அவருடைய ஊழியத்தைக் குறித்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம். (ஏசா 9:1-2; மத் 4:12-25).

கீர்த்தி (fame) - φήμη - pheemee - 5345

பெண்பால் பெயர்ச்சொல் - சங்கதி, கீர்த்தி (report, spread of news) (மத் 9:26, லூக்கா 4:14) - இந்த வார்த்தையும், லூக்கா 4:37-இல் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்கச் சொல்லும் ஒன்றல்ல. இது ஆரவாரம் அல்லது கடலின் கொந்தளிப்பின் சத்தம் என்று பொருள் தரும்.

2. தாம் வளர்ந்த ஊரில் இயேசுவின் முதலாவது பிரசங்கம் - (மாற்கு 6:1-6)

லூக்கா 4:15 அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் உபதேசித்து, எல்லாராலும் புகழப்பட்டார்.

லூக்கா 4:16 தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்.

லூக்கா 4:17 அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது:

லூக்கா 4:18 கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப் பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங் குண்டவர்களை விடுதலையாக்கவும்,

லூக்கா 4:19 கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு,

லூக்கா 4:20 வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார். ஜெபஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது.

லூக்கா 4:21 அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையதினம் நிறைவேறிற்று என்றார்.

லூக்கா 4:22 எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்.

லூக்கா 4:23 அவர் அவர்களை நோக்கி: வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக்கொள் என்கிற பழமொழியைச் சொல்லி, நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர் நகூமூரில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள் என்பது நிச்சயம்.

4 அதிகாரம்

லூக்கா 4:24 ஆனாலும் தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப் படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 4:25 அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள்.

லூக்கா 4:26 ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்து ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப் பட்டானேயல்லாமல் மற்றொருத்தி யினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை.

லூக்கா 4:27 அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப் படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"ஜெபாலயங்கள்" - (மாற்கு 1:21)

"தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்தார்" - தமது ஊரில் உள்ள ஜெபாலயத்தில் இயேசு கிறிஸ்துவின் அந்தஸ்தையும், ஸ்தானத்தையும் இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு ஓய்வுநாளின்போதும் வேதவாக்கியத்தை ஏழு பேர் வாசிக்க வேண்டும். ஒரு ஆசாரியன், ஒரு லேவியன், ஐந்து இஸ்ரவேல் ஜனங்கள் ஆகியோர் வேதவாக்கியங்களை வாசிப்பார்கள்.

"வாசிக்க எழுந்து நின்றார்" - வேதவாக்கியங்களை வாசிக்கிறவர்கள் வாசிக்கும்போதும், ஜெபிக்கும்போதும் எழுந்து நிற்க வேண்டும். இது ஜெபாலயத்து வழக்கம். தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கொடுக்கப்படும் பயபக்தியையும், மரியாதையையும் எழுந்துநிற்பதன் மூலமாக வெளிப்படுத்துகிறார்கள். (1இராஜா 8:14,22,55; நெகே 8:4-7; நெகே 9:2-4; மாற்கு 11:25; லூக்கா 4:16; லூக்கா 18:11)

"ஏசாயா தீர்க்கதரிசி" - ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தைப் பற்றி தற்காலத்து, வேதவல்லுநர்களில் சிலர் வித்தியாசமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். ஏசா 1-39 ஆகிய அதிகாரங்களை மட்டும் ஏசாயா எழுதினார் என்றும், ஏசா 40-66 ஆகிய அதிகாரங்களைச் சிறையிருப்பிற்குப் பின்பு வேறொருவர் எழுதினார் என்றும் இவர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள். புதிய ஏற்பாட்டில் ஏசாயாவின் பெயர் 21 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 12 இடங்களில் ஏசாயா தீர்க்கதரிசன புஸ்தகத்தில் உள்ள வசனங்கள் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"புஸ்தகம்" - பெரிய தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்ளெல்லாம் ஒரே புஸ்தகமாக கோர்க்கப்பட்டிருக்கும். 12 சிறிய தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்கள் தனியாக வேறொரு புஸ்தகமாகக் கோர்க்கப்பட்டிருக்கும்.

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்............" (ஏசா 61:1-2; லூக்கா 4:18-19)

"என்மேலிருக்கிறார்" - பரிசுத்த ஆவியானவர் ஒருவர்மேல் இருக்கிறார் என்றால் அவரை ஒரு விசேஷித்த கிரியை நடப்பிப்பதற்கு வழிநடத்துகிறார் என்று பொருள். (எண் 11:17-29; எண் 24:2; நியா 3:10; நியா 6:34; நியா 11:29; நியா 14:6,19; நியா 15:14; 1சாமு 10:6,10; 1சாமு 11:6; 1சாமு 16:13; 1சாமு 19:20-23; 2நாளா 15:1; 2நாளா 24:20) பரிசுத்த ஆவியானவர் யார்மீதெல்லாம் வந்திறங் கினாரோ அவர்கள் எல்லோரையுமே பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தியிருக்கிறார்.

4. அதிகாரம்

"தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்க என்னை அனுப்பினார்" - மேசியாவின் இரண்டு அம்ச ஊழியம்.

1. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்.
2. குணமாக்குவதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்.

பிரசங்கிக்க வேண்டிய காரியங்கள்

1. தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்.
2. பாவத்திலும், வியாதியிலும், மரணத்திலும் அடிமைகளாக இருப்பவர்களை விடுதலை பண்ண வேண்டும். (அப் 10:38; எபே 4:8-10; எபி 2:14-15)
3. கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்த வேண்டும். யூபிலி வருஷத்தில் எல்லோருக்கும் விடுதலை பிரசித்தப்படுத்தப் படும். (லேவி 25:8-13) ஒருவன் இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியை ஏற்றுக் கொள்ளும்போது அவனுடைய பாவம், சாபம், வியாதி ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுகிறான்.

குணமாக்க வேண்டியவர்கள்

1. இருதயம், ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றில் நருங்குண்டவர்கள் (அப் 10:38)
2. சரீரம், ஆவி, ஆத்துமா ஆகியவற்றில் குருடராக இருக்கிறவர்கள். (மத் 4:16; லூக்கா 1:79; லூக்கா 2:32; யோவான் 1:4-9; யோவான் 3:16-21; யோவான் 8:32; அப் 26:18; கொலோ 1:13)
3. நொருங் குண்டவர்களை விடுதலையாக்க வேண்டும். (ஏசா 58:6-14; மாற்கு 5:1-20; லூக்கா 13:16)

"வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டினார்" - இயேசு கிறிஸ்துவின் காலத்தில் வேதாகம புஸ்தகம் சுருளாக சுருட்டப்பட்டிருக்கும். அதை வாசிக்கும்போது சுருளை அவிழ்த்து, திறந்து வாசிக்க வேண்டும். வாசித்த பின்பு, சுருளை மறுபடியும் சுருட்ட வேண்டும்.

"பணிவிடைக்காரன்" - ஜெபாலயங்களில் பணிவிடைக்காரன் என்பவன் மிகவும் தாழ்மையான உத்தியோகம் பார்க்கிறவன். எல்லோருக்கும் கடைசி அந்தஸ்தில் இருக்கிறவன்.

"உட்கார்ந்தார்" - (லூக்கா 2:46)

"உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையதினம் நிறைவேறிற்று" - இயேசு கிறிஸ்துவின் வார்த்தை எல்லோரையும் ஆச்சரியப்படுத்திற்று. இயேசு கிறிஸ்து இந்த ஜனங்களோடு கடந்த முப்பது வருஷங்களாக ஜீவித்து வந்திருக்கிறார். அந்த நாட்களில் அவர் இப்படிப்பட்ட வார்த்தை எதுவும் கூறியதில்லை. முதன் முறையாக இயேசு கிறிஸ்து தமது தெய்வீக அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார்.

"வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக்கொள்" - (ஆதி 50:2)

"தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான்" - தீர்க்க தரிசிகளுடைய வரலாற்றில் இந்த வாக்கியம் சத்தியமானது என்று பல சமயங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 11:50; எபி 11:4-40).

"எலியா" - (1இராஜா 17:1-18:46; யாக் 5:17).

"எலிசா" - (2இராஜா 5:1-27).

3. இயேசுவின் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு - இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - (மத் 2:16; 26:3)

லூக்கா 4:28 ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரும், இவைகளைக் கேட்டபொழுது, கோபமூண்டு,

லூக்கா – தொகுப்புரை

4 அதிகாரம்

லூக்கா 4:29 எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டு போனார்கள்.

லூக்கா 4:30 அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்.

மனுஷரை நிரப்பிய காரியங்கள்

1. கொடுமை **(Violence)** *(ஆதி 6:11; மீகா 6:12)*
2. அப்பம் **(Food)** *(யாத் 16:12; மத் 14:20)*
3. ஆவி **(Spirit)** *(யாத் 28:3; லூக்கா 1:15-67)*
4. ஞானம் **(Wisdom)** *(யாத் 35:35; லூக்கா 2:40; லூக்கா 4:1)*
5. நன்மை **(Good things)** *(சங் 104:28)*
6. நிந்தனை, இகழ்ச்சி **(Contempt and scorn)** *(சங் 123:3-4)*
7. துன்மார்க்க யோசனைகள் **(Wicked devices)** *(நீதி 1:31)*
8. தீமை **(Mischief)** *(நீதி 12:21)*
9. தன் வழிகள் **(Own ways)** *(நீதி 14:14)*
10. அவனவன் உதடுகளின் விளைவு **(Own words)** *(நீதி 18:20)*
11. சலிப்பு **(Indignation)** *(எரே 15:17; அப் 5:17)*
12. கசப்பு **(Bitterness)** *(புல 3:15)*
13. நிந்தை **(Reproach)** *(புல 3:30)*
14. குடி(வெறி) **(Drink)** *(எசே 23:33; ஆகாய் 1:6)*
15. இலச்சை **(Shame)** *(ஆப 2:16)*
16. கோபம் **(Wrath)** *(லூக்கா 4:28; எஸ் 3:5)*
17. பயம் **(Fear)** *(லூக்கா 5:26)*
18. மூர்க்கவெறி **(Madness)** *(லூக்கா 6:11)*
19. துக்கம் **(Sorrow)** *(யோவான் 16:6)*
20. ஆச்சரியம் **(Wonder)** *(அப் 3:10)*
21. பொறாமை **(Envy)** *(அப் 13:45)*
22. சந்தோஷம் **(Joy)** *(அப் 13:52; 2தீமோ 1:4)*
23. கலகம் / அவமானம் **(Confusion)** *(அப் 19:29; யோபு 10:15)*
24. அநியாயம் **(Unrighteousness)** *(ரோமர் 1:29)*
25. அறிவு **(Knowledge)** *(ரோமர் 15:14)*
26. ஆறுதல் **(Comfort)** *(2கொரி 7:4)*
27. நீதி **(Righteousness)** *(பிலி 1:11)*
28. சகாயம் **(Company)** *(ரோமர் 15:24)*
29. வாய்ச்சாலகம் **(Talk)** *(யோபு 11:2)*
30. சஞ்சலம் **(Trouble)** *(யோபு 14:1; சங் 88:3)*
31. பாவங்கள் **(Sins)** *(யோபு 20:11; ரோமர் 1:29-32)*
32. சபிப்பு - கசப்பு **(Cursing-bitterness)** *(ரோமர் 3:14)*
33. பரிதானம் **(Bribes)** *(சங் 26:10)*

4. அதிகாரம்

34. வேதனை **(Heaviness)** *(சங் 69:20)*

35. உக்கிரம் **(Divine fury)** *(எரே 6:11)*

36. பலம் **(Power)** *(மீகா 3:8; அப் 6:8)*

37. வஞ்சகம், கொடுமை **(Lies and robbery)** *(நாகூம் 3:1)*

38. கொள்ளை - அநீதம் **(Extortion-excess)** *(மத் 23:25)*

39. மரித்தவர்களின் எலும்புகள் **(Dead men's bones)** *(மத் 23:27)*

40. மாயம், அக்கிரமம் **(Hypocrisy-iniquity)** *(மத் 23:28)*

41. குஷ்டரோகம் **(Leprosy)** *(லூக்கா 5:12)*

42. கொள்ளை, பொல்லாப்பு **(Ravening-wickedness)** *(லூக்கா 11:39)*

43. கிருபை, சத்தியம் **(Grace and truth)** *(யோவான் 1:14)*

44. விசுவாசம் **(Faith)** *(அப் 6:3-8)*

45. நற்கிரியைகள் **(Good works)** *(அப் 9:36)*

46. கபடம், பொல்லாப்பு **(Subtlety-mischief)** *(அப் 13:10)*

47. நற்குணம் **(Goodness)** *(ரோமர் 15:14)*

48. வியாகுலம் **(Heaviness)** *(பிலி 2:26)*

49. வெளிச்சம் **(Light)** *(லூக்கா 11:34-36)*

50. இருள் **(Darkness)** *(லூக்கா 11:34-36)*

கோபத்திற்குக் காரணங்கள்

1. இயேசு கிறிஸ்து அதே ஊரைச் சேர்ந்தவர். சிறு வயது முதல் இயேசுவை அவர்களுக்கு நன்றாக தெரியும். யூதர்கள் எலியாவையும், எலிசாவையும் மிகப்பெரிய தீர்க்கதரிசிகளாக அங்கீகரித்து, அவர்கள்மீது மரியாதை வைத்திருந்தனர். இயேசு கிறிஸ்துவோ அந்தத் தீர்க்கதரிசிகளோடு தம்மை ஒப்பிட்டுக் கூறுகிறார்.

2. தேவனுடைய ஆசீர்வாதம் புறஜாதியாருக்கும் உரியது என்று இயேசு கூறுகிறார். இதை யூதர்கள் அங்கீகரிப்பதில்லை. தேவனுடைய ஆசீர்வாதங்களை யூதர்கள் புறஜாதியாரோடு பகிர்ந்து கொள்வதில்லை. தேவஆசீர்வாதம் பெறுவதற்கு புறஜாதியார் தகுதியற்றவர்கள் என்று நினைத்தார்கள்.

"செங்குத்தான மலையின் சிகரம்" - நாசரேத்து, மலையின்மீது கட்டப்பட்ட பட்டணம். அந்த மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள்.

"அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்" - லூக்கா 24:16-இல் நாம் வாசிக்கிற பிரகாரம் அவர்களுடைய கண்களிலிருந்து அவர் மறைந்திருக்க வேண்டும். அல்லது யோவான் 18:6-இல் நாம் வாசிக்கிற பிரகாரமாக இயேசுவைக் காணாக்கூடாதவாறு அவர்களுடைய கண்கள் மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. இயேசு கப்பர்நகூமை தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (மத் 4:13; மாற்கு 1:21)

லூக்கா 4:31 பின்பு அவர் கலிலேயாவிலுள்ள கப்பர்நகூம் பட்டணத்துக்கு வந்து, ஓய்வுநாட்களில் ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார்.

லூக்கா 4:32 அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக் குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

"கப்பர்நகூம்" - (மத் 11:23)

4 அதிகாரம்

"அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தது" - இயேசு கிறிஸ்துவின் உபதேசம் தெய்வீக அதிகாரமும், அங்கீகாரமும் உள்ளது. (மத் 7:28-29)

5. இயேசு அசுத்த ஆவியை துரத்துகிறார் - (மாற்கு 1:23)

லூக்கா 4:33 ஜெபஆலயத்திலே அசுத்த ஆவிபிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான்.

லூக்கா 4:34 அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன்; நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று உரத்த சத்தமிட்டான்.

லூக்கா 4:35 அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுபோ என்று அதை அதட்டினார்; அப்பொழுது பிசாசு அவனை ஜனங்களின் நடுவே விழத்தள்ளி, அவனுக்கு ஒரு சேதமுஞ் செய்யாமல், அவனை விட்டுப் போய்விட்டது.

லூக்கா 4:36 எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

லூக்கா 4:37 அவருடைய கீர்த்தி சுற்றிலுமிருந்த நாடுகளிலுள்ள இடங்களிலெல்லாம் பிரசித்தமாயிற்று.

"ஜெபஆலயத்திலே அசுத்த ஆவிபிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான்" - அசுத்த என்னும் தமிழ்ச்சொல் "அகதர்டோஸ்" (akathartos) என்னும் கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு. 23 இடங்களில் இந்தச் சொல் பிசாசுகளைக் குறிக்கிறது. (மத் 10:1; மத் 12:43; மாற்கு 1:23-27; மாற்கு 3:11,30; மாற்கு 5:2-13; மாற்கு 6:7; மாற்கு 7:25; மாற்கு 9:25; லூக்கா 4:33-36; லூக்கா 6:18; லூக்கா 8:29; லூக்கா 9:42; லூக்கா 11:24; அப் 5:16; அப் 8:7; வெளி 16:13; வெளி 18:2) இரண்டு இடங்களில் மனுஷரைக் குறிக்கிறது. (1கொரி 7:14; எபே 5:5)

அசுத்த (unclean) - ἀκάθαρτος - akathartos - 169

பெயரடை - அசுத்த (impure, lewd, or foul)

(அ) சடங்காச்சாரத்தின் படி தீட்டும் அசுத்தமாகவும் இருப்பது

(ஆ) ஆன்மீக அசுத்தம் எபே. 5:5

"ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன்; நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று உரத்த சத்தமிட்டான்" - இயேசு கிறிஸ்து தேவனுடைய பரிசுத்தமானவர் என்பது பிசாசுகளுக்கு நன்றாக தெரியும். பிசாசுகளின் முடிவும், அவைகளுக்கு நன்றாக தெரியும். தேவனுடைய நித்திய திட்டம், தங்களுடைய பாடுகள், ஆகியவையும் பிசாசுகளுக்கு மறைவாக இருக்கவில்லை. (மத் 8:29; மத் 25:41; லூக்கா 4:34; லூக்கா 8:28)

"நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுபோ" - பிசாசுகள் பேசக்கூடியவைகள். தாங்கள் விரும்பும் சரீரத்திற்குள் விரும்பிய நேரத்திற்கு வரும். தாங்கள் விரும்பிய நேரத்தில் அவற்றிலிருந்து புறப்பட்டுச் செல்லும். பிசாசுகள் மனுஷரைப் பாடாதபாடு படுத்தும். ஆகையினால்தான், இயேசு கிறிஸ்து இந்தப் பிசாசைப் பேசாமல் இருக்குமாறு அதட்டி அவனை விட்டுப் போகுமாறு கட்டளையிடுகிறார்.

4 அதிகாரம்

விழத்தள்ளு (thrown) - ῥίπτω - rhiptoo - 4496

வினைச்சொல் - சிதறு, எறி, விழத்தள்ளு, வை, தள்ளு (a medical word for convulsions) (மத் 9:36; மத் 15:30; மத் 27:5; லூக்கா 4:35; லூக்கா 17:2; அப் 22:23; அப் 27:19,29)

சேதஞ்செய் (hurt) - βλάπτω - blaptoo - 984

வினைச்சொல் - சேதப்படுத்து, சேதஞ்செய் (a medical word meaning opposed to benefit) (மாற்கு 16:18)

"அவருடைய கீர்த்தி சுற்றிலுமிருந்த நாடுகளிலுள்ள இடங்களிலெல்லாம் பிரசித்தமாயிற்று" - இயேசு கிறிஸ்துவினுடைய கீர்த்தி கடல் முழக்கம்போல சுற்றிலுமிருந்த இடங்களுக்குப் பரவிற்று. இதன் கிரேக்கச் சொல் "எக்கோஸ்" (echos). இந்த வசனத்திலும் அப் 2:2 ஆகிய வசனத்திலும், எபிரெயரிலும் மட்டுமே இச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதற்கு எதிரொலி, முழக்கம், பேரோசை என்றும் பொருள் கூறலாம்.

கீர்த்தி (fame) - ἦχος - eechos - 2279

ஆண்பால் பெயர்ச்சொல் - கீர்த்தி, முழக்கம்

6. பேதுருவின் மாமியை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:14; மாற்கு 1:29; 1கொரி 9:5)

லூக்கா 4:38 பின்பு அவர் ஜெப ஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, சீமோன் வீட்டில் பிரவேசித்தார், சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய்க் கிடந்தாள். அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள்.

லூக்கா 4:39 அவர் அவளிடத்தில் குனிந்து நின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

"சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய்க் கிடந்தாள்" - ஜுரத்தினால் மிகுந்த பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்தாள். (அப் 28:8)

"அவர் அவளிடத்தில் குனிந்து நின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார்" - ஜுரம் வந்தவர்களுக்கு அருகில் சென்றாலே நமக்கும் ஜுரம் வந்துவிடும் என்று ஜனங்கள் பயப்படுவார்கள். வியாதிகள் தொற்றிப்பரவக் கூடியது என்பதால் முன்னெச்சரிக்கையாக சற்று விலகியே இருப்பார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அவளிடத்தில் குனிந்து நின்றார் என்று வாசிக்கிறோம். தமக்கும் ஜுரம் வந்துவிடும் என்னும் பயம் இயேசுவிற்கு இல்லை. எல்லா வியாதிகளின் மீதும் இயேசு சர்வ அதிகாரம் உடையவர். சாத்தானை ஜெயித்தவர்.

7. பிசாசுகளைத் துரத்துகிறார் - அநேகரை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:16; மாற்கு 1:32)

லூக்கா 4:40 சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப் பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

லூக்கா 4:41 பிசாசுகளும்: நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டு, அநேகரைவிட்டுப் புறப்பட்டது. அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்.

"சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்" - சூரியன் அஸ்தமிக்கும்போது, ஓய்வுநாள் முடிவு பெறுகிறது. ஓய்வுநாளில் யூதர்கள் ஒரு வேலையும் செய்யமாட்டார்கள்.

4 அதிகாரம்

வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்குவதையும் ஒருவேலையாக அவர்கள் கருதினார்கள். ஆகையினால், ஓய்வுநாளின் பகல் பொழுதில் தங்களிடமுள்ள வியாதியஸ்தரை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வராமல் சூரியன் அஸ்தமித்த பின்பு, கொண்டு வருகிறார்கள். (லூக்கா 13:14).

"அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து, அவர்களைச் சொஸ்தமாக்கினார்" - (மத் 8:3; மாற்கு 16:18)

"அவர்கள் ஒவ்வொருவர்மேலும்" - (மத் 13:58)

"அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்" - பிசாசுகளுக்கு இயேசுவே மேசியா அல்லது கிறிஸ்து என்பது தெரியும். ஆனால் இயேசு அவைகளைப் பேச அனுமதிக்கவில்லை. அவைகளின் சாட்சியை இயேசு ஏற்றுக் கொள்ளவில்லை. பிசாசுகளைச் சாட்சிச் சொல்ல அனுமதித்தால் தாம் பிசாசோடு சேர்ந்துகொண்டு, கூட்டாகக் கிரியை செய்வதாக பரிசேயர்கள் தம்மீது குற்றம் சுமத்துவார்கள் என்பது இயேசுவிற்கு நன்றாக தெரியும். ஆகையினால் தமது ஊழியத்தையும், உபதேசத்தையும் சாத்தான் அவமதித்து, அழித்துவிடாதவாறு மிகவும் எச்சரிக்கையாக இருந்து, அவைகளைப் பேசவிடாமல் அதட்டினார்.

8. கலிலேயாவிற்கு இயேசுவின் இரண்டாவது பிரயாணம் - (மத் 4:23; மத் 9:35; மாற்கு 1:38)

லூக்கா 4:42 உதயமானபோது, அவர் புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போனார். திரளான ஜனங்கள் அவரைத் தேடி, அவரிடத்தில் வந்து, தங்களை விட்டுப்போகாதபடிக்கு அவரை நிறுத்திக்கொண்டார்கள்.

லூக்கா 4:43 அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்.

லூக்கா 4:44 அந்தப்படியே கலிலேயா நாட்டிலுள்ள ஜெபஆலயங்களில் பிரசங்கம் பண்ணிக்கொண்டுவந்தார்.

"உதயமானபோது, அவர் புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போனார்" - சூரியன் அஸ்தமனமான சாயங்கால வேளையிலிருந்து, இயேசு கிறிஸ்து வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கிக் கொண்டிருக்கிறார். ஒருவேளை அவர் இரவு முழுவதும் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கிக்கொண்டு இருந்திருக்கலாம். பொழுது விடிந்து விடுகிறது. இயேசு கிறிஸ்து கடைசியாக இருக்கும் வியாதியஸ்தரையும் சுகமாக்குகிறார். (லூக்கா 4:40-42) ஒரு வனாந்தரமான இடத்திற்குச் சென்று அங்கு ஓய்வெடுக்கலாம் என்று விரும்பினார். தேவனுடைய அற்புதத்தைச் செய்யும் ஊழியக்காரருக்கு ஓய்வு ஏது? இயேசுவின் கீர்த்தி வேகமாகப் பரவுகிறது. ஏராளமான வியாதியஸ்தர்களை இயேசு கிறிஸ்து இருக்கும் இடத்தைத் தேடி, அங்கு கொண்டு வருகிறார்கள். தேவனுடைய வல்லமை நம் மூலமாகக் கிரியை செய்யுமென்றால் நாம் வனாந்தரம்போன்ற இடத்தில் இருந்தாலும், ஜனங்கள் நம்மைத் தேடி வருவார்கள்.

"திரளான ஜனங்கள் அவரைத் தேடி, அவரிடத்தில் வந்து, தங்களை விட்டுப்போகாதபடிக்கு அவரை நிறுத்திக் கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து தங்களுக்கு வேண்டும் என்று அவரிடம் விண்ணப்பம் பண்ணுகிறார்கள். அதில் தவறொன்றும் இல்லை. ஆனால் அவர் தங்களுக்கு மட்டும்தான் வேண்டும் என்று நினைப்பது தவறு. இயேசுவின் நேரம், அவருடைய ஊழியம் எல்லாமே தங்களுடைய ஊரார் மத்தியில் மட்டுமே செய்ய வேண்டும் என்று விரும்பி தங்களை விட்டுப்போகாதபடிக்கு அவரை நிறுத்திக் கொண்டார்கள். இந்த வாக்கியத்தில் "நிறுத்திக்கொள்ளுதல்" என்னும் தமிழ்ச் சொல்லின் கிரேக்கச்சொல் "கடேகோ" **(katecho).** இதற்குப் பிடித்தல், தடைபண்ணுதல், கட்டிப்பிடித்தல், நிறுத்துதல் என்று பொருள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ தமது பிதாவின் சித்தத்தைச் செய்வதற்காக வந்திருக்கிறார். தம்முடைய ஊழியக்காலத்தில் எங்கெல்லாம் போகவேண்டுமோ அங்கெல்லாம் சென்று பிதாவின் ஊழியத்தைச் செய்வது அவருக்குச் சித்தமாக இருந்தது. (லூக்கா 2:49; அப் 10:38).

4 அதிகாரம்

நிறுத்திக்கொள் (stayed) - κατέχω - katechoo - 2722

வினைச்சொல் - கட்டிக்கொள், நிறுத்திக்கொள் (to hold fast, restrain, hinder) (லூக்கா 4:42; லூக்கா 8:15; லூக்கா 14:9; மத் 21:38; யோவான் 5:4; அப் 27:40; ரோமர் 1:18; ரோமர் 7:6; 1கொரி 7:30; 1கொரி 11:2; 1கொரி 15:2; 2கொரி 6:10; 1தெச 5:21; 2தெச 2:6; பிலே 1:13; எபி 3:6,14; எபி 10:23)

"அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப் பட்டேன் என்றார்" - தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கிப்பது தெய்வீக ஊழியம். தெய்வீக அதிகாரத்தோடும், வல்லமையோடும் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும். அற்புதங்களும், அடையாளங்களும் வசனங்களை உறுதி பண்ண வேண்டும். (யோவான் 5:36; யோவான் 9:4; யோவான் 10:38; யோவான் 14:11) பவுல் தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறும்போது "தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது" என்றார். (1கொரி 4:20; ரோமர் 15:18-19,29; எபி 2:3-4)

"கலிலேயா நாட்டிலுள்ள ஜெபஆலயங்கள்" - (மாற்கு 1:21)

5 அதிகாரம்

9. படவில் உட்கார்ந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணுகிறார்

லூக்கா 5:1 பின்பு அவர் கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள்.

லூக்கா 5:2 அப்பொழுது கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்கள் அவைகளை விட்டிறங்கி, வலைகளை அலைசிக் கொண்டிருந்தார்கள்.

லூக்கா 5:3 அப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடைய தாயிருந்தது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப் படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார்.

"திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள்" - ஆவிக்குரிய எழுப்புதல் ஏற்படும்பொழுது, ஜனங்கள் திருவசனத்தைக் கேட்பதற்காகக் கூடி வருவார்கள். எழுப்புதலுக்கு இதுதான் அடையாளம். ஆகையினால் சபையில் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணும் காரியம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

"கெனேசரேத்துக் கடல்" - மறுபெயர்கள் - திபேரியாக்கடல் **(Sea of Tiberias)** (யோவான் 21:1), கின்னரேத்துக் கடல் **(Sea of Chinnereth)** (எண் 34:11; உபா 3:17; யோசு 12:3; யோசு 13:27), கலிலேயாக்கடல் **(Sea of Galilee)** (மத் 4:18; மத் 15:29; மாற்கு 1:16; மாற்கு 7:31).

"கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகள்" - கலிலேயாக்கடலில் எப்போதுமே நாலாயிரம் படவுகளுக்கு மேல் இருக்குமென்று கூறுகிறார்கள். அந்தப் படவுகளில் இரண்டு படவுகள் விசேஷித்தவை. ஒன்று பேதுருவிற்குரியது. மற்றொன்று அவருடைய நண்பர் ஒருவருக்குரியது.

"கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டார்" - லூக்கா 5:16-இல் கேட்பது என்பது தேவனிடம் விண்ணப்பம் பண்ணுவதைக் குறிக்கும். இங்கு இயேசு கிறிஸ்து சீமோனிடம் கேட்டது விண்ணப்பம் அல்ல. ஜெபமும் அல்ல. சாதாரண வேண்டுகோள் மட்டுமேயாகும்.

"அந்தப் படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார்" - (லூக்கா 2:46)

10. இயேசு அற்புதம் செய்து படவை பயன்படுத்தியதற்கு கிரயம் செலுத்துகிறார்

லூக்கா 5:4 அவர் போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்.

லூக்கா 5:5 அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்.

லூக்கா 5:6 அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்.

லூக்கா 5:7 அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிக்குச் சைகைகாட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள்.

"ஐயரே" - பேதுரு இயேசு கிறிஸ்துவைக் கடலுக்கும், மீனுக்கும் ஆண்டவராக அங்கீகரிக்கிறார். (சங் 8). இரவு முழுவதும் மீன்பிடித்தும் ஒன்றும் அகப்படவில்லை என்று இயேசுவிடம் முறையிடுகிறார். என்றாலும் ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும்போது வலை கிழிந்து போகத்தக்கதாக, படவு தண்ணீரில் மூழ்கத்தக்கதாக திரளான மீன்களைப் பிடிக்கிறார்கள்.

5 அதிகாரம்

ஐயர் (Master) - **ἐπιστάτης** - **epistatees** - 1988

ஆண்பால் பெயர்ச்சொல் - ஐயர் (a **superintendent, commander**) - அதிகாரமுடையவர். (லூக்கா 9:38)

"கூட்டாளிகள்" - யாக்கோபும், யோவானும் பேதுரு, அந்திரேயா ஆகியோரின் கூட்டாளிகள். (லூக்கா 5:10).

11. பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (மத் 4:18; மாற்கு 1:16)

லூக்கா 5:8 சீமோன் பேதுரு அதைக் கண்டு இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்றான்.

லூக்கா 5:9 அவர்கள் திரளான மீன்களைப் பிடித்ததினிமித்தம், அவனுக்கும் அவனோடுகூட இருந்த யாவருக்கும் பிரமிப்புண்டானபடியினால் அப்படிச் சொன்னான்.

லூக்கா 5:10 சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.

லூக்கா 5:11 அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.

"நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்" - திரளான மீன்கள் கிடைத்தது. இது ஒரு பெரிய அற்புதம். தன்னுடைய உணர்ச்சியை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. இருந்தாலும் இந்த ஆச்சரியத்திற்கு மத்தியிலும் பேதுரு தன்னுடைய உண்மை நிலையை உணருகிறான். தான் ஒரு பாவியான மனுஷன் என்று அறிக்கையிடுகிறான். ஆகையினால் பாவியாகிய தன்னோடு சேரவேண்டாம், தன்னைவிட்டுப் போகவேண்டும் என்று இயேசுவிடம் அறிவிக்கிறான்.

"நான் பாவியான மனுஷன்" - பேதுரு தன்னைப் பற்றிக் கூறிய உண்மையான அறிக்கை. அவனுடைய சுபாவம், நடத்தை எல்லாமே பாவமானது என்பதைக் கர்த்தரிடம் அறிக்கையிடுகிறான். (நியா 13:22; 1சாமு 6:20; 2சாமு 12:13; யோபு 40:4)

"ஆண்டவரே" - இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தைப் பேதுரு அங்கீகரிக்கிறான். (1கொரி 12:3).

"அவனுக்கும் அவனோடுகூட இருந்த யாவருக்கும் பிரமிப்புண்டானது" - இயேசு கிறிஸ்து எங்கே சென்றாலும் ஆச்சரியமும், பிரமிப்பும் அவரைத் தொடர்ந்து வருகிறது. ஏனெனில் அவர் அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் தமது வசனத்தை உறுதிப்படுத்தினார். ஜனங்கள் இதுவரையிலும் இப்படிப்பட்ட காரியங்களைத் தங்கள் கண்களால் கண்டதுமில்லை, தங்கள் காதுகளால் கேட்டதுமில்லை.

"யாக்கோபு" - (லூக்கா 24:10)

தீர்க்கதரிசன எண் - 16

"பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" (லூக்கா 5:10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"பிடிக்கிறவன்" - உயிரோடு பிடிக்கிறவன், சிறைப்பிடிக்கிறவன். **(to take alive, or capture)** சாத்தான் பாவத்தில் ஜீவிப்பவர்களைச் சிறைப்பிடிப்பது போன்றது. (2தீமோ 2:26) சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறவர்களுடைய ஆத்துமாக்களைத் தேவனுடைய ஊழியக்காரர்கள் தேவனுக்காகச் சிறைப்பிடிக்க வேண்டும். இந்த வசனத்தில் ஆத்துமஆதாயம் என்பது மீன்களை உயிரோடு பிடிப்பதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது.

5 அதிகாரம்

பிடி (catch) - ζωγρέω - zoogreoo - 2221

வினைச்சொல் - பிடி, பிடிக்கிறவனாயிரு

"அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" - சுவிசேஷம் நம்மிடம் எதிர்பார்க்கும் காரியம் இதுதான். (மத் 19:27-30) நாம் செலுத்த வேண்டிய கிரயம் எதுவாக இருந்தாலும் அதைச் செலுத்தி கர்த்தரை மனப்பூர்வமாக பின்பற்றிச் செல்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். நமக்கு இருக்கும் பொறுப்புக்களை உதறித்தள்ளிவிடவேண்டும் என்பது இதன் பொருளல்ல. எல்லாவற்றையும் விட்டு, அவரைப் பின்பற்றிச் சென்ற இவர்களுக்குக் குடும்பப் பொறுப்புக்களும், இதர பொறுப்புக்களுக்கும் இருந்தன. (1தீமோ 5:8) இந்த வசனத்தின் மையக்கருத்து என்னவென்றால் நமது ஜீவியத்தில் கர்த்தருக்கு முதலிடம் தரவேண்டும் என்பதுதான். (மத் 22:37; லூக்கா 14:16-27).

12. இயேசு குஷ்டரோகியை சுத்தமாக்குகிறார் - (மத் 8:1; மாற்கு 1:40)

லூக்கா 5:12 பின்பு அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில், குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்டு, முகங்குப்புற விழுந்து: ஆண்டவரே, உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக்கொண்டான்.

லூக்கா 5:13 அவர் தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்; உடனே குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கிற்று.

லூக்கா 5:14 அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல், போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, நீ சுத்தமான தினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாக பலி செலுத்து என்று கட்டளையிட்டார்.

"குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன்" - அவனுடைய சரீரம் முழுவதிலும் குஷ்டரோகம் இருந்தது.

வேண்டிக்கொள் (besought) - δέομαι - deomai - 1189

வினைச்சொல் - வேண்டிக்கொள், உத்தரவுகேள், ஜெபம் பண்ணு, கேட்டுக்கொள் **(to supplicate, plead)**

"ஆண்டவரே, உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும்" - இயேசு கிறிஸ்துவால் தன்னைச் சுத்தமாக்க முடியும் என்று இந்த மனுஷன் நம்பினான். ஆனால் அவர் தன்னைச் சுத்தப்படுத்துவாரா என்று சந்தேகப்பட்டான். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததின் நோக்கமே நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காகவும், நம்முடைய வியாதிகளைச் சுகமாக்குவதற்காகவும் தான் வந்திருக்கிறார். ஆகையினால் நம்மைச் சுத்தப்படுத்துவது தேவனுடைய சித்தமா இல்லையா என்று நாம் சந்தேகப்படத் தேவையில்லை. (யோவான் 10:10; அப் 10:38; மத் 8:17; 1பேதுரு 2:24).

"எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" - தம்முடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேண்டுமென்று தம்முடைய பிள்ளைகள் தம்மிடத்தில் வரும்போது தேவன் எப்போதும் கூறும் காரியம் இதுதான். "எனக்குச் சித்தமுண்டு". (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16; எபி 11:6; யாக் 1:5-8) தேவனுடைய சித்தம் நமக்கு ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் சிந்தித்துச் செயல்பட வேண்டியது மனுஷனுடைய பொறுப்பு.

"நீ இதை ஒருவருக்கும் சொல்லாதே" - (மத் 8:4)

5 அதிகாரம்

“நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாக பலிசெலுத்து” - இந்த மனுஷன் முழுவதுமாக சுத்தமாக்கப்பட்டான் என்று ஆசாரியர் சாட்சி கூறவேண்டுமென்று இயேசு கிறிஸ்து விரும்பினார். தேவனுடைய வல்லமைக்கு ஆசாரியர் சாட்சி பகரவேண்டும். ஆகையினால் சுத்தமாக்கப்பட்ட அந்த மனுஷனை ஆசாரியரிடத்திற்கு இயேசு கிறிஸ்து அனுப்புகிறார். ((லேவி 13; லேவி 14; மத் 8:4).

“மோசே” - பத்து இடங்களில் லூக்கா மோசையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். (லூக்கா 2:22; லூக்கா 5:14; லூக்கா 9:30,33; லூக்கா 16:29,31; லூக்கா 20:28,37; லூக்கா 24:27,44).

13. இயேசு திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - இயேசுவின் கீர்த்தி அதிகமாகப் பரம்பிற்று - (மாற்கு 1:45)

லூக்கா 5:15 அப்படியிருந்தும் அவருடைய கீர்த்தி அதிகமாகப் பரம்பிற்று. திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும் அவராலே தங்கள் பிணிகள் நீங்கிச் சவுக்கியமடைவதற்கும் கூடிவந்தார்கள்.

லூக்கா 5:16 அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய், ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்.

“கீர்த்தி” - (லூக்கா 4:37)

“திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும் அவராலே தங்கள் பிணிகள் நீங்கிச் சவுக்கியமடைவதற்கும் கூடிவந்தார்கள்” - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்காகவும், தங்களுடைய பிணிகள் நீங்கி சௌக்கியமடைவதற்காகவும் ஜனங்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறார்கள்.

“பிணிகள்” (infirmities) - சரீரம், சிந்தை, நீதிநெறி ஆகியவற்றில் பலவீனங்கள், குறைபாடுகள். (மத் 8:17)

“அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய், ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்” - இயேசு கிறிஸ்து பலதடவை திரளான ஜனங்களை விட்டு வனாந்தரத்திற்குப் போய் தனியாக ஜெபம் பண்ண விரும்பினார். ஆனால் ஜனங்களோ அவர் எங்கு சென்றாலும் அவரைக் கூட்டமாகத் தேடிச் சென்று கொண்டிருக்கிறார்கள். (மத் 12:15; மத் 14:13-35; மத் 15:29-39; மாற்கு 3:7-12; லூக்கா 12:1; யோவான் 8:59; யோவான் 12:36)

“அவர் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்” - (லூக்கா 3:21)

14. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனைக் குணப் படுத்துகிறார் - (மத் 9:1; மாற்கு 2:1; யோவான் 2:12)

லூக்கா 5:17 பின்பு ஒருநாள் அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிறபோது, கலிலேயா யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாய சாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள்; அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத் தக்கதாகக் கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று.

லூக்கா 5:18 அப்பொழுது சில மனுஷர் திமிர்வாதக்காரன் ஒருவனைப் படுக்கையோடுடே எடுத்துக் கொண்டு வந்து, அவனை உள்ளே கொண்டு போகவும் அவர் முன்பாக வைக்கவும் வகைதேடினார்கள்.

லூக்கா 5:19 ஜனக்கூட்டம் மிகுதியாயிருந்தபடியால் அவனை உள்ளே கொண்டு போகிறதற்கு வகைகாணாமல், வீட்டின்மேல் ஏறி, தட்டோடுகள் வழியாய் ஜனங்களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள்.

5 அதிகாரம்

லூக்கா 5:20 அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு, திமிர்வாதக் காரனை நோக்கி: மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது என்றார்.

லூக்கா 5:21 அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணி, தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத் தக்கவர் யார் என்றார்கள்.

லூக்கா 5:22 இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன?

லூக்கா 5:23 உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?

லூக்கா 5:24 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 5:25 உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தேவனை மகிமைப்படுத்தி, தன்வீட்டுக்குப் போனான்.

லூக்கா 5:26 அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத் தினார்கள்; அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி, அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்றார்கள்.

நியாயசாஸ்திரி (doctors of the law) - **νομοδιδάσκαλος** - **nomodidaskalos** - 3547

ஆண்பால் பெயர்ச்சொல் - நியாயசாஸ்திரி, நியாயப்பிரமாண போதகர் - லூக்கா 5:17, அப் 5:34; 1தீமோ 1:7 ஆகிய வசனங்களில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **(teachers of the law)**

திமிர்வாதம் (palsy) - **παραλύω** - **paralyoo** - 3886

வினைச்சொல் - திமிர்வாதகாரனாயிரு **(paralyzed)**

பெயரடை - தளர்ந்த (மத் 9:2; மாற்கு 2:4)

“அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டார்” - திமிர்வாதக்காரனுடைய விசுவாசத்தையும், அவனைக் கொண்டு வந்தவர்களுடைய விசுவாசத்தையும் இயேசு கிறிஸ்து கண்டார்.

“வேதபாரகரும் பரிசேயரும் யோசனை பண்ணினார்கள்” - யோசனை பண்ணுவதே அவிசுவாசத்திற்கு ஆரம்பம். யோசனை விவாவத்திலும், தர்க்கத்திலும்தான் முடிவு பெறும்.

“தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத் தக்கவர் யார்” - திரித்துவத்தில் இயேசு கிறிஸ்துவும் ஒருவர் என்னும் சத்தியத்தை அவர்கள் அறியவில்லை. (மத் 28:19; யோவான் 1:1-2,14; யோவான் 20:23, 1யோவான் 5:7).

“இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்தார்” - இயேசு கிறிஸ்து தம்மிடம் இருந்த ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தின் மூலமாக அவர்களுடைய சிந்தனைகளை அறிந்தார். இந்த வரம் இயேசுவிடம் தாராளமான அளவில் இருந்தது. (யோவான் 3:34; ஏசா 11:1-2; 1கொரி 12:8-11)

5 அதிகாரம்

"உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?" - குணமாக்குவது எளிது என்று ஆதித்திருச்சபையார் நம்பினார்கள். ஆனால் இக்காலத்து மனுஷரோ பாவங்கள் மன்னிக்கப்படுவதுதான் எளிது என்று நம்புகிறார்கள். தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. தேவனால் வியாதிகளையும் குணப்படுத்த முடியும். மனுஷருடைய பாவங்களையும் மன்னிக்க முடியும்.

"உடனே" - இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களெல்லாம் உடனே நடைபெற்றது. தவணை முறையில் நடைபெறவில்லை. (லூக்கா 1:64; லூக்கா 4:39; லூக்கா 5:13,25; லூக்கா 8:44,47; லூக்கா 13:13; லூக்கா 18:43; லூக்கா 22:60)

"அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தேவனை மகிமைப்படுத்தி, தன்வீட்டுக்குப் போனான்" - திமிர்வாதக்காரன் பரிபூரணமாகச் சொஸ்தமாக்கப் பட்டிருக்கிறான் என்பதற்கு இது ஓர் அடையாளம்.

"அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்" - ஆச்சரியம் அவர்களை ஆளுகை செய்தது.

"அவர்கள் பயம் நிறைந்தவர்களானார்கள்" - (லூக்கா 4:28)

அதிசயமான காரியங்கள் (strange things) - παράδοξος - paradoxos -3861

பெயரடை - அதிசயமான காரியங்கள், எதிர்பாராத காரியங்கள் (anything unexpected), பொதுவாக மனுஷர் காணும் காரியங்களுக்கு முரண்பட்ட காரியங்கள். (contrary to what is usually seen)

15. லேவி என்னும் மத்தேயுவின் அழைப்பு - (மத் 9:9; மத் 2:13-14)

லூக்கா 5:27 இவைகளுக்குப் பின்பு, அவர் புறப்பட்டு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பேருடைய ஒரு ஆயக்காரனைக் கண்டு: எனக்குப் பின்சென்று வா என்றார்.

லூக்கா 5:28 அவன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்குப் பின் சென்றான்.

லூக்கா 5:29 அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்து பண்ணினான். அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோடேகூடப் பந்தியிருந்தார்கள்.

"ஆயக்காரன்" - ரோமப்பேரரசிற்கு வரிவசூல் பண்ணுகிறவன். (மத் 5:46; மத் 9:10-11; மத் 11:19; மத் 21:31; மாற்கு 2:15-16) அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டபோது மனந் திரும்பினார்கள். (மத் 21:32; லூக்கா 3:12; லூக்கா 7:29) மத்தேயு, சகேயு ஆகியோர் இரட்சிக்கப்பட்ட ஆயக்காரர்கள். (மத் 9:9; மத் 10:3; மாற்கு 2:14; லூக்கா 5:27; லூக்கா 19:1-10).

"லேவி" - மத்தேயுவின் மறுபெயர். (மத் 10:3; மாற்கு 2:14; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப் 1:13).

"ஆயத்துறை" - சுங்கவரி வசூல் பண்ணுகிற இடம். மத்தேயு சுங்கவரி வசூலிக்கும் அதிகாரி.

"அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்துபண்ணினான்" - மத்தேயுவும், சகேயுவும் இயேசு கிறிஸ்துவிற்குத் தங்கள் வீட்டிலே அவரை வரவேற்கும் விதமாக விருந்து பண்ணினார்கள். (லூக்கா 19:5-7)

16. பரிசேயருக்கு இயேசு கூறிய பதிலுரை - (மத் 9:10; மாற்கு 2:15)

லூக்கா 5:30 வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்.

5 அதிகாரம்

லூக்கா 5:31 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே யல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை.

லூக்கா 5:32 நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்.

"வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள்" - கலிலேயாவிலுள்ள பரிசேயரும், வேதபாரகரும் யூதேயா, எருசலேமிலுள்ள வேதபாரகர், பரிசேயர் ஆகியோரும் வித்தியாசமானவர்கள். (மத் 15:1)

"அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள்" - முறுமுறுப்பது வேதவாக்கியத்தில் தடைபண்ணப் பட்டிருக்கிறது. (சங் 37:1; 1கொரி 10:10; பிலி 2:14; யாக் 5:9)

முறுமுறுத்தவர்களுக்கு எடுத்துக் காட்டானவர்கள்

1. காயீன் (ஆதி 4:13-14)
2. ராகேல் (ஆதி 30:1)
3. மோசே (யாத் 3:11)
4. இஸ்ரவேலர் (யாத் 5:19)
5. கோராகு (எண் 16:8-11)
6. மிரியாமும், ஆரோனும் (எண் 12)
7. யோபு (யோபு 3; யோபு 6; யோபு 9; யோபு 10)
8. தாவீது (2சாமு 6:8; சங் 116:10)
9. ஆசாப் (சங் 73)
10. எலியா (1இராஜா 19:4-10)
11. சாலொமோன் (பிர 2:17-18)
12. எசேக்கியா (ஏசா 38:10-18)
13. எரேமியா (எரே 20:14-18; புல 3)
14. யோவான் (யோனா 4)
15. யூதர்கள் (லூக்கா 5:30; யோவான் 6:41-52)
16. சுயபுணர்ச்சிக்காரர்கள் (யூதா 1:16)

சுகமுள்ளவர் **(healthy)** - **ὑγιαίνω** - **hygiainoo** - 5198

விணைச்சொல் - சுகமடைந்திரு, சுகமாயிரு - மருத்துவ வார்த்தை (லூக்கா 7:10; லூக்கா 15:27; 3யோவான் 1:2). பவுல் இந்த வார்த்தையை நீதிநெறிக்குப் பயன் படுத்துகிறார். (1தீமோ 1:10; 1தீமோ 6:3; 2தீமோ 1:13; 2தீமோ 4:3; தீத்து 1:9,13; தீத்து 2:1-2

பிணியாளி **(sick)** - **κακός** - **kakos** - 2556

பெயரடை - கொடிய, பொல்லாத, பொல்லாப்புசெய்த, தீமைகளை அநுபவித்த, தகாத, கெடுதியான, தீங்கு அடைந்த, தீமைசெய்கிற, துர்க் கிரியையான, ஆகாத, துர்இச்சையான, துஷ்ட **(sickly, depraved in nature, an evil condition)**

"நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்"

இயேசு கிறிஸ்து வந்ததற்கான நோக்கங்கள்

1. பாவங்களிலிருந்து இரட்சிக்க (மத் 1:21)
2. யூதர்களுக்கு இராஜாவாக இருக்க (யோவான் 18:37).
3. நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற (மத் 5:17).
4. மனந்திரும்புவதற்குப் பாவிகளை அழைக்க (மத் 9:13; லூக்கா 5:32; லூக்கா 13:1-5).
5. பிரிவினை உண்டுபண்ண (மத் 10:34-36)

5 அதிகாரம்

6. இளைப்பாறுதல் தர (மத் 11:28-30)

7. அழிவிலிருந்து இரட்சிக்க (லூக்கா 9:56).

8. சபைக்கு ஜீவனைக் கொடுக்க (எபே 5:26)

9. பலவீனத்திலிருந்து இரட்சிக்க (தீத்து 2:14).

10. காணாமல்போனவர்களைத் தேடிக் கண்டுபிடித்து இரட்சிக்க (லூக்கா 19:10).

11. புதிய உடன்படிக்கையை உண்டாக்க (மத் 26:28; எபி 8:6; எபி 9:15).

12. பாவத்தை அகற்ற (எபி 9:26)

13. ஜனங்களுக்காக பாடு அனுபவிக்க (யோவான் 12:27; 1பேதுரு 3:18; 1பேதுரு 4:1-2).

14. ஜனங்களைக் கிரயம் செலுத்தி மீட்க (மத் 20:28; 1தீமோ 2:6).

15. உபதேசம் பண்ணி சுகமாக்க (மத் 4:23-24; மாற்கு 1:38-39; லூக்கா 4:18; அப் 10:38).

16. உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமல் இரட்சிக்க (யோவான் 3:16-18; யோவான் 12:27).

17. பூமியின்மீது அக்கினையை அனுப்ப (லூக்கா 12:49)

18. இரட்சிப்பாக இருக்க (1தீமோ 1:15).

19. பரிசுத்த ஆவியானவரில் அபிஷேகம் பண்ண (மத் 3:11; யோவான் 1:31-33; யோவான் 7:37-39)

20. தீமையிலிருந்து இரட்சிக்க (கலா 1:4).

21. நியாயத்தீர்ப்பைக் கொண்டு வர (யோவான் 9:39)

22. பரிபூரண ஜீவனைக் கொடுக்க (யோவான் 10:10)

23. வியாதிகளைச் சுமக்க (மத் 8:17; 1பேதுரு 2:24; ஏசா 53).

24. உலகத்திற்கு வெளிச்சமாக இருக்க (யோவான் 12:46).

25. நித்திய ஜீவனைக் கொடுக்க (யோவான் 17:3)

26. ஜனங்களுக்கு ஊழியம் செய்ய (மத் 20:28).

27. கிருபையையும், சத்தியத்தையும் கொண்டுவர (யோவான் 1:17).

28. தேவனுடைய சித்தத்தைச் செய்ய (யோவான் 6:38).

29. சாத்தானுடைய கிரியையை அழிக்க (1யோவான் 3:8).

30. முன்மாதிரியாக இருக்க (1பேதுரு 1:21)

31. பாவங்களுக்கு மரிக்க (1கொரி 15:3; கலா 1:4).

32. நம்மைச் சுத்திகரிக்க (தீத்து 2:14)

17. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்கு இயேசு கூறிய பதிலுரை - (மத் 9:14; மாற்கு 2:18)

லூக்கா 5:33 பின்பு அவர்கள் அவரை நோக்கி: யோவானுடைய சீஷர் அநேகந்தரம் உபவாசித்து ஜெபம்பண்ணிக் கொண்டு வருகிறார்கள், பரிசேயருடைய சீஷரும் அப்படியே செய்கிறார்கள், உம்முடைய சீஷர் போஜனபானம் பண்ணுகிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள்.

லூக்கா 5:34 அதற்கு அவர்: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர்களை நீங்கள்உபவாசிக்கச் செய்யக்கூடுமா?

லூக்கா 5:35 மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள் என்றார்.

5 அதிகாரம்

"அநேகந்தரம் உபவாசித்து ஜெபம்பண்ணிக் கொண்டு வருகிறார்கள்" - பலர் இதைச் சடங்காச்சாரமாகச் செய்து வருகிறார்கள். ஆனால் இவர்கள் ஒருபோதும் தேவனிடத்தில் ஜெபம்பண்ணுவதில்லை. (மத் 6:5= லூக்கா 18:9-14)

உவமை எண் - 1

"மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர்களை நீங்கள் உபவாசிக்கச் செய்யக்கூடுமா?" (லூக்கா 5:34-35) இயேசு கிறிஸ்து தமது சீஷர்களோடு இருப்பதையும், அவர்களைவிட்டுப் பிரிந்து போவதையும் இந்த உவமை விளக்குகிறது. (யோவான் 3:13)

"உபவாசம்"- (சங் 69:10)

தீர்க்கதரிசன எண் - 17

"மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்" (லூக்கா 5:35) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

18. வஸ்திரம், துருத்திகள் பற்றி உவமை - (மத் 9:16; மாற்கு 2:21)

லூக்கா 5:36 அவர்களுக்கு ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்க மாட்டான், இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும்; புதிய வஸ்திரத்துண்டு பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது.

லூக்கா 5:37 ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வார்த்து வைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்.

லூக்கா 5:38 புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும், அப்பொழுது இரண்டும் பத்திரப் பட்டிருக்கும்.

லூக்கா 5:39 அன்றியும் ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார்.

உவமை எண்கள் - 2, 3

"ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்க மாட்டான்........." (லூக்கா 5:36-39) நியாயப்பிரமாணத்தையும், சுவிசேஷத்தையும் ஒன்றாகக் கலக்க முடியாது. சுவிசேஷத்தில் பங்குபெற வேண்டுமானால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும். பழைய மார்க்கத்தில் மூழ்கியிருக்கிறவர்கள் முதலாவதாக மனம்மாறி, புதுசிருஷ்டியாக வேண்டும்.

6 அதிகாரம்

19. இயேசு ஓய்வுநாளுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (மத் 12:1; மாற்கு 2:23)

லூக்கா 6:1 பஸ்காபண்டிகையின் இரண்டாம் நாளைக்குப் பின்வந்த முதலாம் ஓய்வுநாளிலே, அவர் பயிர்வழியே நடந்து போகையில், அவருடைய சீஷர்கள் கதிர்களைக் கொய்து, கைகளினால் நிமிட்டித் தின்றார்கள்.

லூக்கா 6:2 பரிசேயரில் சிலர் அவர்களை நோக்கி: ஓய்வுநாளில் செய்யத்தகாததை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள்.

லூக்கா 6:3 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் மாத்திரமே தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைக் கேட்டு வாங்கி,

லூக்கா 6:4 தான் புசித்ததுமன்றி, தன்னுடனே கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தானே என்று சொன்னார்.

லூக்கா 6:5 மேலும் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்.

"பஸ்காபண்டிகையின் இரண்டாம் நாளைக்குப் பின்வந்த முதலாம் ஓய்வுநாளிலே" - புளிப்பில்லா அப்பப் பண்டிகை ஏழு நாட்களுக்கு ஆசரிக்கப்படும். நிசான் மாதம் 15ஆம் நாளில் இப்பண்டிகை துவங்கும். (லேவி 23:6-8) ஏழு நாள் பண்டிகை விசேஷித்த ஓய்வுநாளாக ஆசரிக்கப்படும். இது தவிர, ஒவ்வொரு வாரத்திற்கும் ஓய்வுநாளும் உண்டு. இந்த வசனத்தில் கூறப்படுவது வாரத்தின் ஓய்வுநாளாகும். (மத் 12:1-8)

இரண்டாம் நாளைக்குப் பின்வந்த முதலாம் ஓய்வுநாள் (the second sabbath) - **δευτερόπρωτος** - **deuteroprootos** - 1207

பெயரடை - இரண்டாம் நாளைக்குப் பின்வந்த முதலாம்

"பரிசேயரில் சிலர் அவர்களை நோக்கி: ஓய்வுநாளில் செய்யத்தகாததை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள்" - ஓய்வுநாளில் பரிசேயர்களும் சில காரியங்களைச் செய்வார்கள். சிறுபிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்வார்கள். பள்ளத்தில் விழுந்துவிட்ட விலங்குகளை வெளியே தூக்கிவிடுவார்கள். (மத் 12:5,11) ஆனால் மனுஷரைப் பராமரிக்கும் காரியங்களைப் பொறுத்த அளவில் ஒன்றும் செய்யக்கூடாது. ஓய்வுநாளில் அவை தடைபண்ணப்பட்டிருக்கிறது என்பார்கள். (லூக்கா 6:6-11; லூக்கா 13:10-17).

"தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா?" - இயேசு கிறிஸ்து ஓய்வுநாளைக் குறித்த பரிசேயரின் மாய்மாலத்தை இந்தக் கேள்வியினால் கடிந்து கொள்கிறார். தாவீதும், அவனோடிருந்தவர்களும் பசியாக இருந்தபோது, அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர்மாத்திரமே தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைக் கேட்டு வாங்கி, தான் புசித்ததுமன்றி, தன்னுடனே கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தான். (யாத் 25:30; யாத் 29:23-33; லேவி 8:12; லேவி 24:5-9=1சாமு 21:3-6)

ஆண்டவர் (Lord) - **κύριος** - **kyrios** - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர் (owner, Lord, and Master of the sabbath) - இயேசு கிறிஸ்து ஓய்வுநாளுக்கும் ஆண்டவர். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பட்டதை இஸ்ரவேலர் நினைவுகூர வேண்டுமென்று கர்த்தர் தாமே அவர்களுக்குக் கூறியிருக்கிறார். (உபா 5:15).

6 அதிகாரம்

20. ஓய்வுநாளில் சூம்பின கையையுடைய மனுஷனை சொஸ்தமாக்குகிறார் - (மத் 12:9; மாற்கு 3:1)

லூக்கா 6:6 வேறொரு ஓய்வுநாளிலே, அவர் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து உபதேசித்தார். அங்கே சூம்பின வலதுகையையுடைய ஒரு மனுஷன் இருந்தான்.

லூக்கா 6:7 அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் குற்றம் பிடிக்கும்படி, ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவாரோ என்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்.

லூக்கா 6:8 அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து, சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: நீ எழுந்து, நடுவே நில் என்றார். அவன் எழுந்து நின்றான்.

லூக்கா 6:9 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன்; ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம் என்று கேட்டு,

லூக்கா 6:10 அவர்களெல்லாரையும் சுற்றிப்பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அப்படியே அவன் தன் கையை நீட்டினான், உடனே அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று.

லூக்கா 6:11 அவர்களோ மூர்க்க வெறிகொண்டு, இயேசுவை என்ன செய்யலாமென்று ஒருவரோடொருவர் ஆலோசித்தார்கள்.

"வேறொரு ஓய்வுநாளிலே" - ஓய்வுநாளைக் குறித்து இயேசு கிறிஸ்துவிற்கும் பரிசேயருக்கும் எப்போதும் பிரச்சனை ஏற்படுகிறது. (மாற்கு 3:1-7).

"ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவாரோ என்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்" - வேதபாரகரும், பரிசேயரும் இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்கு சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகையினால் இயேசுவின் மீது ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க முடியுமா என்று அவரைக் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

"அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்தார்" - இயேசு கிறிஸ்துவிடம் அறிவை உணர்த்தும் வசனமும், ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் இருந்தது. (லூக்கா 5:22; 1கொரி 12:4-11)

"ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம்" - தேவனுடைய சித்தத்தை இயேசு வெளிப்படுத்துகிறார். ஓய்வுநாளாக இருந்தாலும் வேறு எந்த விசேஷித்த நாளாக இருந்தாலும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். பிரமாணம் மனுஷருக்காக உண்டாக்கப் பட்டிருக்கிறது. மனுஷர் பிரமாணத்திற்காக உண்டாக்கப்படவில்லை. ஆண்டவர் மனுஷனைப் பிரமாணத்திற்கு அடிமையாக்கவில்லை. மனுஷன் ஒய்வு நாளுக்கும் எஜமானனாகஇருக்கிறான். ஒய்வு நாளில் நற்கிரியைகளைச் செய்வதற்கு மனுஷனுக்கு உரிமையுண்டு.

"அவர்களெல்லாரையும் சுற்றிப்பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார்" - இந்த வாக்கியத்தை மாற்கு எழுதும்போது, இயேசு கிறிஸ்து அங்கு கூடியிருந்தவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர்களைக் கோபத்தோடு பார்த்ததாகக் கூறுகிறார். பரிசேயரும், வேதபாரகரும் இயேசுவின் கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை. ஆகையினால், தமக்குப் பிரச்சனை வருமென்று தெரிந்தபோதிலும், பரிதாபமாக இருக்கும் சூம்பின கையையுடைய மனுஷனுக்கு உதவி புரிகிறார். ஓய்வுநாளில் இயேசு கிறிஸ்து கிரியை செய்கிறார். பாவம் செய்யவில்லை. பரிதாபமான அந்த மனுஷனுக்கு உதவிபுரிகிறார். இது தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான செயல் ஆகாது. (எபே 4:26).

"அவர்களோ மூர்க்கவெறிகொண்டார்கள்" - இயேசு நன்மை செய்தார். சூம்பின கையையுடையவன் குணமடைந்தான். ஆனால் வேதபாரகரும், பரிசேயரும் கோபமடைகிறார்கள். தங்களுடைய பாரம்பரிய பழக்கவழக்கங்களுக்கு அவர்கள் முக்கியத் துவம் தருகிறார்கள். ஆனால் தேவையுள்ள ஒரு மனுஷனுக்கு உதவிபுரிய அவர்கள் முன்வரவில்லை. மற்றவர் உதவி புரிவதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

6 அதிகாரம்

21. பன்னிரெண்டு பேரை அபிஷேகம் பண்ணுகிறார் - (மத் 10:1; மாற்கு 3:13; 6:7; லூக் 9:1)

லூக்கா 6:12 அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்.

லூக்கா 6:13 பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்.

லூக்கா 6:14 அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு,

லூக்கா 6:15 மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன்,

லூக்கா 6:16 யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே.

"அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்" - நமது ஊழியத்தில் ஆண்டவர் நமக்கு ஒரு வெற்றியைத் தரும்பொழுது, நாமும் தேவனிடம் அதிக நேரம் ஜெபம்பண்ண வேண்டும். இப்படி ஜெபம் பண்ணினால், நமக்குள் பெருமை வராது. ஆண்டவர் நம்மைத் தொடர்ந்து ஆசீர்வதிப்பார். தேவனுடைய சமூகத்தில் நம்மை எப்போதும் தாழ்த்தவேண்டும். இதற்கும் தேவனுடைய உதவி தேவை. ஆகையினால் நம்முடைய ஊழிய அனுபவங்களில் தோல்விகள் ஏற்பட்டாலும், வெற்றிகள் ஏற்பட்டாலும் தேவனிடத்தில் அதிகநேரம் நம்மைத் தாழ்த்தி, ஜெபிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

"பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" - தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்புவதற்கு முன்பாக இயேசு கிறிஸ்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார் என்பது தெரியவருகிறது. (லூக்கா 9, மாற்கு 3:13-19=மாற்கு 6:7-13) அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை பன்னிரெண்டு பேர். (மத் 10:2-4; மாற்கு 3:16-19; லூக்கா 6:14-16; அப் 1:13)

"அந்திரேயா" - (மத் 4:18)

"யாக்கோபு" - (மத் 4:21)

"பிலிப்பு" - பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர். (மத் 10:3; மாற்கு 3:18; அப் 1:13) இவருடைய ஊழிய அழைப்பு (யோவான் 1:43). நாத்தான்வேலை இயேசுவிடம் அழைத்து வருகிறவர். (யோவான் 1:45-50). நாத்தான்வேலின் சகோதரர். (லூக்கா 6:16) திரளான ஜனங்களுக்கு போஜனம் கொடுத்தபோது பந்திவிசாரிப்பில் உதவி புரிந்தவர். (யோவான் 6:4-7). கிரேக்கரை இயேசுவிடம் அழைத்து வந்தவர். (யோவான் 12:20-22). இயேசுவிடம் பிதாவைக் காண்பிக்குமாறு கேட்டவர். (யோவான் 14:8-13).

"பர்த்தொலொமேயு" - (மத் 10:3)

"அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு" - (லூக்கா 24:10)

"செலோத்தே என்னப்பட்ட சீமோன்" - பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர். கானானியர் என்று அழைக்கப்பட்டவர். (மத் 10:4; மாற்கு 3:18) செலோத்தே என்பவர்கள் யூதமார்க்கத்தில் வைராக்கியமான பிரிவினர். ரோமருக்கு எதிராகக் கலகம் பண்ணியவர்கள்.(லூக்கா 6:15; அப் 1:13). திருச்சபை வரலாற்றின் பிரகாரமாக சீமோனைச் சீரிய தேசத்திலே சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இவன் யாக்கோபு, மத்தேயு, யூதாஸ் ஆகியோரின் சகோதரர் எனவும் சீமோனைப் பற்றி ஒரு கருத்து இருக்கிறது.

"யூதா" - ததேயு, லபேயு (மத் 10:3)

"யாக்கோபின் சகோதரன்" - இயேசுவின் சீஷர்களில் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளான சகோதரர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களுடைய விவரம் வருமாறு.

6 அதிகாரம்

1. பேதுருவும், அந்திரேயாவும் (மத் 4:18)

2. யாக்கோபும், யோவானும் (மத் 4:21)

3. பிலிப்புவும், நாத்தான்வேல் என்னும் பர்த்தொலொமேயுவும் (யோவான் 1:43-51).

4. யாக்கோபும், யூதாவும் (யூதாஸ்காரியோத்து அல்ல), ஒரு வேளை மத்தேயுவும் (மாற்கு 2:14; லூக்கா 6:16; அப் 1:13) இந்த யூதா ததேயு, லபேயு எனவும் அழைக்கப்பட்டான்.(மத் 10:3; மாற்கு 3:18) செலோத்தே என்னப்பட்ட சீமோனும் யாக்கோபு, யூதா ஆகியோரின் சகோதரராக இருக்கலாம் என்று ஒரு வரலாறு கூறுகிறது."யூதாஸ்காரியோத்து" - இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுடைய பெயர் பட்டியல் மூன்று இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. இம்மூன்று இடங்களிலும் இவனுடைய பெயரே கடைசியாக வருகிறது. (மத் 10:4; மாற்கு 3:19; லூக்கா 6:16).

"துரோகி" - யூதாஸ்காரியோத்தைப் பற்றிக் கூறும்போதெல்லாம் அவன் துரோகி என்று அழைக்கப்படுகிறான். மனுஷ வரலாற்றில் துரோகி என்னும் பட்டம் அவனைவிட்டு அகலாது.

22. இயேசு திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - (மத் 12:15; மாற்கு 3:7)

லூக்கா 6:17 பின்பு அவர் அவர்களுடனே கூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷரில் அநேகம் பேரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும் படிக்கும், யூதேயா தேசத்துத் திசைகள் யாவற்றிலிருந்தும், எருசலேம் நகரத்திலிருந்தும், தீரு சீதோன் பட்டணங்கள் இருக்கிற கடலோரத்திலிருந்தும் வந்தவர்களாகிய திரளான ஜனங்களும் இருந்தார்கள்.

லூக்கா 6:18 அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து, ஆரோக்கிய மடைந்தார்கள்.

லூக்கா 6:19 அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கின படியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்.

"பின்பு அவர் அவர்களுடனேகூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார்" - இயேசு கிறிஸ்து மலையிலே இரவு முழுவதும் ஜெபம் பண்ணிவிட்டு, இப்பொழுது சமமான இடத்திற்கு இறங்கி வருகிறார். வியாதியஸ்தர்களை அடுத்த நாளில் குணமாக்குவதற்கு ஆவிக்குரிய ரீதியாக இயேசு கிறிஸ்து தம்மை ஆயத்தப்படுத்தி இருக்கிறார்.

வாதிக்கப்பட்டவர் (vexed) - **ὀχλέω** - **ochleoo** - 3791

வினைச்சொல் - வாதி **(to mob, beset, harass)** (அப் 5:16).

"அசுத்த ஆவிகள்" - (லூக்கா 43:3)

வல்லமை (virtue) - **δύναμις** - **dynamis** - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - வல்லமை, பலத்த செய்கைகள், அற்புதங்கள், திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி(2பேதுரு 1:3)

"எல்லாரையும் குணமாக்கினார்" - தம்மிடத்தில் வந்த வியாதியஸ்தர் அனைவரையும் இயேசு குணமாக்கினார். அவரால் குணமாக்க முடியாத வியாதி என்று எதுவுமில்லை. வந்தவர்கள் அனைவருமே சுகமானார்கள். (மத் 13:58)

23. மலைப்பிரசங்கத்தின் ஒரு பகுதி

(1) நான்கு பாக்கியவான்கள் - (மத் 5:3)

லூக்கா 6:20 அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்து: தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது.

6 அதிகாரம்

லூக்கா 6:21 இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்; திருப்தியடைவீர்கள். இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்.

லூக்கா 6:22 மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

லூக்கா 6:23 அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

தீர்க்கதரிசன எண் - 18

"தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது............" (லூக்கா 6:20-26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. மத் 5-7 ஆகிய அதிகாரங்களில் இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தை வாசிக்கிறோம். லூக்கா இங்கு எழுதியிருப்பது மலைப்பிரசங்கம் அல்ல. வேறொரு வேளையில் வேறொரு இடத்தில் இயேசு கிறிஸ்து கூறிய உபதேசங்களை லூக்கா இங்கே எழுதியிருக்கிறார். மத் 5-7 ஆகிய அதிகாரங்கள் இயேசு கிறிஸ்து மலையில் அமர்ந்து பேசியவையாகும். ஆனால் லூக்கா எழுதியிருக்கும் இந்தப் பிரசங்கமும், இயேசு கிறிஸ்து சமமான ஒருஇடத்திலே நின்று பேசியவையாகும். (லூக்கா 6:17) இயேசு கிறிஸ்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஊழியம் செய்து வந்தார். அக்காலத்தில் தாம் ஏற்கெனவே கூறியிருந்த சத்தியங்களை மறுபடியுமாகக் கூறியிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

"இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்; திருப்தியடைவீர்கள்" - வருங்காலத்தில் யாரெல்லாம் பாக்கியவான்களாக இருப்பார்கள் என்று இயேசு கிறிஸ்து நான்கு பிரிவினரைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார். (லூக்கா 6:20-23)

1. தரித்திரர் (லூக்கா 6:20; மத் 5:3)
2. பசியாயிருக்கிறவர்கள் (லூக்கா 6:21; மத் 5:6)
3. அழுகிறவர்கள் (லூக்கா 6:21,மத் 5:4)
4. பகைக்கப்படுகிறவர்கள் (லூக்கா 6:22, மத் 5:10-12)

"அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்" - நீங்கள் குதித்துக் களிகூருங்கள் (**leap for joy**). உங்களைப் புறம்பாக்கி உங்களைப் பகைத்து, உங்களை நிந்திக்கும்போது இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீங்கள் சந்தோஷத்தோடு குதித்துப் பாருங்கள். அப்போது தேவனுடைய ஆசீர்வாதம் உங்கள்மீது இறங்குவதை உணருவீர்கள்.

"பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" - புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் தேவனுடைய பிள்ளைகளுக்குப் பல வெகுமதிகள் வாக்குத் தத்தம் பண்ணப் பட்டிருக்கிறது. (சங் 19:11; சங் 58:11; சங் 91:8; நீதி 11:18; ஏசா 40:10; ஏசா 62:11; மத் 5:12; மத் 6:1-18; மத் 10:41-42; மத் 16:27; மாற்கு 9:41; லூக்கா 6:23,35; 1கொரி 3:8-15; 1கொரி 9:17-18; கொலோ 2:18; கொலோ 3:24; 2தீமோ 4:14; எபி 10:35; வெளி 11:18; வெளி 22:12)

"அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" - பிதாக்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் அவர்கள் நான்கு விதமான நிந்தையைக் கொடுத்தார்கள். அவையாவன:

1. பகைத்தார்கள் (1இராஜா 18:4; 1இராஜா 22:8)
2. புறம்பாக்கினார்கள் (எரே 12:9-11)
3. நிந்தித்தார்கள் (1இராஜா 22:24-28; 2நாளா 36:16; நெகே 9:26)

6 அதிகாரம்

4. பாடுகளை அனுபவிக்க வைத்தார்கள் (2நாளா 24:20-22; மத் 23:34-36)

(2) நான்கு ஐயோக்கள் - (மத் 23:23)

லூக்கா 6:24 ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ; உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது.

லூக்கா 6:25 திருப்தியுள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ; பசியாயிருப்பீர்கள். இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள்.

லூக்கா 6:26 எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

"ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ" - தண்டனை பெறும் நான்கு பிரிவினர்கள்.

1. அநீதியான ஐசுவரியவான்கள் (லூக்கா 6:24; யாக் 5)
2. பேராசையுள்ளவர்கள் (லூக்கா 6:25; லூக்கா 12:15-21; 1தீமோ 6:9)
3. புகழ்ச்சியை விரும்புகிறவர்கள் (லூக்கா 6:25; 2தீமோ 3; 1யோவான் 2:15-17)
4. மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்கள் (லூக்கா 6:26; கலா 1:10; யோவான் 12:43)

(3) அன்பின் நான்கு பிரமாணங்கள் - (மத் 5:38)

லூக்கா 6:27 எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.

லூக்கா 6:28 உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்.

"நான் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்" - (மத் 5:39-48)

(4) பழிவாங்குதலின் நான்கு பிரமாணங்கள் - (மத் 5:38)

லூக்கா 6:29 உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு; உன் அங்கியை எடுத்துக் கொள்ளுகிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் எடுத்துக்கொள்ளத் தடைபண்ணாதே.

லூக்கா 6:30 உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே.

"அங்கி" (cloke) - பிரயாணம் செய்யும் போது அல்லது வேலையில்லாமல் ஓய்வாக இருக்கும் போது சரீரத்திற்கு வெளியே அணியும் வஸ்திரம்.

"வஸ்திரம்" - அங்கிக்கு உள்ளே அணியும் வஸ்திரம்.

"உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே" - இந்த வாக்கியம் போர்ச் சேவகர்களையும், வரிவசூலிக்கும் ஆயக்காரர்களையும் குறிக்கிறது. அவர்கள் ஜனங்களிடத்திலே எந்தவித இரக்கமும் காண்பிக்காமல் பலாத்காரத்தோடு அபகரித்துக் கொள்வார்கள். வரிக்கட்டுவதற்காக ஏழை ஜனங்கள் தங்களிடமுள்ள உடமைகளை எல்லாம் சில வேளைகளில் விற்றுவிடுவதுமுண்டு. (மத் 18:25,28-30,34) இராஜாவின் சேவர்கள் தங்களுக்குத் தேவையானதைப் பொது ஜனங்களிடம் பலாத்காரமாக அபகரித்துக் கொள்வார்கள். ஜனங்களுடைய பொருட்களை மட்டுமல்ல தங்களுக்குத் தேவையானால், ஜனங்கள் தங்களுக்குச் சேவை புரிய வேண்டுமென்றும் வற்புறுத்துவார்கள். (மத் 5:41) ராஜாவின் சேவகருக்குப் பணிபுரிய மறுப்பது ராஜாவை அவமதிக்கும் செயலாகக் கருதப்பட்டது.

6 அதிகாரம்

(5) தங்கச்சட்டம் - (மத் 7:12)

லூக்கா 6:31 மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

லூக்கா 6:32 உங்களைச் சிநேகிக்கிறவர் களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக் கிறவர்களைச் சிநேக்கிறார்களே.

லூக்கா 6:33 உங்களுக்கு நன்மைசெய்கிறவர் களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே.

லூக்கா 6:34 திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே.

"மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" - இந்த வாக்கியம் தங்கச்சட்டம் **(The golden rule)** என்று அழைக்கப்படுகிறது. லேவி 19:18 ஆவது வசனம் கூறும் உபதேசமும், தங்கச்சட்டம் என்று அழைக்கப்படுகிறது. "பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவது போல் பிறனிலும் அன்புகூருவாயாக". நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் மற்றவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும் என்பது இதன் பொருளல்ல. ஏனெனில் மற்றவர்கள் தங்களிடம் உள்ள எல்லாப் பொருள்களையும் நமக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று நாமும் எதிர்பார்ப்பதில்லை. அப்படி எதிர்பார்ப்பது பேராசையாகும். நாம் பிறருடைய பொருளை இச்சிக்கக்கூடாது. (யாத் 20:17; உபா 5:21; ரோமர் 13:9; 1கொரி 5:11; 1கொரி 6:9-11 எபே 5:5).

இந்த வசனத்தின் மையக்கருத்து, நாம் இரக்கமுள்ளவர் களாகவும், அன்புள்ளவர் களாகவும், நீதியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

"உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன?........." - இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் தங்கச்சட்டத்தை மூன்று விதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்.

1. பாவிகள் சிநேகிப்பதுபோல சிநேகிக்காமல், தேவனுடைய பிள்ளைகளாகச் சிநேகியுங்கள்
2. பாவிகள் நன்மை செய்கிறதுபோல நன்மை செய்யாமல், தேவனுடைய பிள்ளைகளாக நன்மை செய்யுங்கள்.
3. பாவிகள் கடன்கொடுப்பதுபோல கடன் கொடுக்காமல் தேவனுடைய பிள்ளைகளாகக் கடன்கொடுங்கள்.

தங்கச்சட்டத்தில் நான்கு விதமான காரியங்கள் அடங்கியுள்ளன. அவையாவன:

1. அன்பின் நான்கு பிரமாணங்கள் (லூக்கா 6:27-28)
2. எதிர்த்து நிற்கும் நான்கு பிரமாணங்கள் (லூக்கா 6:29-30)
3. இரக்கத்தின் நான்கு பிரமாணங்கள் (லூக்கா 6:35-36)
4. நீதியின் நான்கு பிரமாணங்கள் (லூக்கா 6:37-38)

(6) இரக்கத்தின் ஐந்து பிரமாணங்கள்

லூக்கா 6:35 உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகி களுக்கும் நன்மை செய்கிறாரே.

லூக்கா 6:36 ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.

6 அதிகாரம்

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள்"- லூக்கா 6:32-34 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற அன்பு, நன்மைசெய்தல், கடன்கொடுத்தல் ஆகிய பிரமாணங்கள் மறுபடியுமாகக் கூறப் பட்டிருக்கிறது. இவற்றோடு இரக்கத்தின் பிரமாணம் சேர்க்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 6:35-36)

கடன்கொடுப்பது

"திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப் படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. இவர்களுக்கு தேவனிடத்தில் ஒரு பலனும் இல்லை. கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள்" (லூக்கா 6:34-35)

நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் சகோதரரிடம் வட்டி வாங்கக்கூடாது. (யாத் 22:25-27; லேவி 25:35-37; உபா 23:19-20; நெகே 5:1-13; சங் 15:5; நீதி 28:8; எசே 18:8-17; எசே 22:12) பலாத்காரமாக கடன் கொடுத்ததற்கு அடமானமாக எதையும் அபகரிக்கக்கூடாது. (உபா 24:6-17) மனுஷருக்கு உதவி புரியும் நோக்கத்தோடு கடன் கொடுக்க வேண்டும். (சங் 37:25-26; சங் 112:5). ஏழைக்கு இறங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். (நீதி 19:17) கடன் வாங்குகிறவன் கடன் கொடுக்கிறவனுக்கு அடிமையாகிறான். (நீதி 22:7)

விசுவாசிகள் தேவையுள்ளவர்களுக்கு உதவி புரிய வேண்டும். கைம்மாறு கருதாமல், பிரதிபலன் எதிர்பாராமல், உதவி புரிய வேண்டும். (மத் 5:42;லூக்கா 6:34-35) கடன் வாங்கியவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை யென்றால் அவர்களுடைய பொருட்கள் எதையும் அபகரிக்கக்கூடாது. அவ்வாறு அபகரித்தால் தேவனிடத்தில் அவர்களுக்குப் பலன் இல்லை. கடன் வாங்கியவன் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்புள்ளவன்.(யாத் 22:14-15; சங் 37:21) வாங்கிய எல்லாக் கடன்களையும் உரிய நேரத்தில் செலுத்தி விடவேண்டும். (யாத் 22:10-15; லேவி 25:14-25; மத் 5:25-26,40; 2இராஜா 4:1-7; லூக்கா 6:31).

"உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்" - லூக்கா 6:27-38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியும்போது இரண்டு ஆசீர்வாதங்கள் கிடைக்கும். அவையாவன:

1. பலன் மிகுதியாயிருக்கும். (லூக்கா 6:35; லூக்கா 6:23)
2. உன்னதமான தேவனுக்கு பிள்ளைகளாக இருப்பார்கள். (லூக்கா 6:35)

நன்றி (kind) - χρηστότης - **chreestotees** - 5543

பெயரடை - மெதுவான, நல்ல, நன்மையான, தயவான, தயையுள்ள **(morally good, kind, generous)** - ஆவியின் கனி (கலா 5:22-23) நல்லவராக இருக்க வேண்டுமென்னும் கட்டளை (லேவி 19:34; லூக்கா 6:35-36; ரோமர் 15:1-5; கலா 6:10;எபே 4:32;கொலோ 3:12-14; 1பேதுரு 3:8; 1பேதுரு 4:8; 2பேதுரு 1:7; 1யோவான் 3:17-18)

நற்குணத்திற்கு எடுத்துக்காட்டுக்கள்

1. தேவன் (சங் 25:8; சங் 107:1; லூக்கா 6:35)
2. இயேசு (அப் 10:38)
3. யாக்கோபிடம் பார்வோன் (ஆதி 47:5-6)
4. வேவுகாரரிடம் ராகாப் (யோசு 2:6-16)
5. சவுலிடம் தாவீது (1சாமு 24)
6. யோனாதாத்திடம் ஆகாப் (1இராஜா 20:31)
7. மரியாளிடம் யோசேப்பு (மத் 1:19)

6 அதிகாரம்

இரக்கமுள்ள (merciful) - οἰκτίρμων-oiktirmoon - 3629

பெயரடை - இரக்கமுள்ள (merciful, compassionate) (லூக்கா 6:36; யாக் 5:11) இரக்கமுள்ளவர்கள் மற்றவர்களைக் கேட்காமலேயே மன்னித்து விடுவார்கள். தங்களுக்குத் தீங்கு நேர்ந்தாலும் தொடர்ந்து பிறருக்கு நன்மையையே செய்வார்கள். தங்களுக்கு ஏற்பட்ட மனக்காயங்களை விரைவில் மறந்து விடுவார்கள். இரக்கமுள்ளவர்களுக்கு வேத வாக்கியத்தில் பல ஆசீர்வாதங்கள் கூறப்பட்டிருக்கிறது. (மத் 5:7; கொலோ 3:12-13; யாக் 2:13; சங் 18:25; நீதி 3:3-4; நீதி 11:17; நீதி 14:21-22,31;நீதி 21:21; ஓசி 12:6; மீகா 6:8).

இரக்கமுள்ளவர்களுக்கு எடுத்துக்காட்டு

1. தேவன் (லூக்கா 6:36; லூக்கா 18:13-14; சங் 103:13)
2. இயேசு (மத் 9:36; மத் 14:14)
3. யோசேப்பிடம் சிறைச்சாலைக் காவல்காரன் (ஆதி 39:21-23)
4. ராகாபிடம் யோசுவா (யோசு 6:25)
5. சவுலிடம் தாவீது (1சாமு 24:10-17)
6. ஆண்டவன் ஊழியக்காரனிடம் (மத் 18:27)
7. இஸ்ரவேலின் இராஜாக்கள் (1இராஜா 20:31)

(7) நீதியின் நான்கு பிரமாணங்கள் - (மத் 7:1)

லூக்கா 6:37 மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படா திருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக் குள்ளாக்கும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படாதிருப்பீர்கள்; விடுதலை பண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப்படுவீர்கள்.

லூக்கா 6:38 கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.

"மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்" - (மத் 7:1-5; ரோமர் 2:1-3; ரோமர் 14:4)

"விடுதலைபண்ணுங்கள்" (forgiven) - (மத் 6:14-15; மாற்கு 11:25-26)

"மடி" (bosom) - வஸ்திரத்தின் மடிப்புக்களுக்கு மடி என்று பெயர். இதன் பயன்பாடுகள். சிறுபிள்ளைகளை மடியில் தூக்கிச் செல்வார்கள். (எண் 11:12) ஆடுகளையும் (2சாமு 12:3), மேலும் பல பொருட்களையும் (சங் 17:23; சங் 21:14; 2இராஜா 4:39) மடியில் தூக்கிச் செல்வது வழக்கம். உள்ளான ஜீவியத்தையும் , உணர்வுகளையும் உருவகமாகக் குறிப்பதற்கு மடி என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. (யோபு 31:33; சங் 79:12; சங் 89:50). நன்மை செய்வதற்காக இரட்டிப்பான நன்மைகள் என்னும் பொருளில் லூக்கா6:38-இல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

(8) குருடரான தலைவர்களைப் பின்பற்றுவதற்கு எதிரான எச்சரிப்பு - (மத் 15:1)

லூக்கா 6:39 பின்னும் அவர் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டக் கூடுமோ? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா?

உவமை எண் - 4

"குருடனுக்குக் குருடன் வழிகாட்டக் கூடுமோ? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா?" (லூக்கா 6:39). ஆவிக்குரிய குருட்டுத் தன்மையையும், அழிவையும் விளக்குகிறது.(ஏசா 56:10; மத் 15:14).

6 அதிகாரம்

(9)ஒவ்வொரு விசுவாசியின் இலக்கு - (மத் 5:48;10:24;1யோவான் 3:7; 4:17)

லூக்கா 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.

“சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான்” - இயேசு கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கிற பிரகாரம் நாம் அவரைப்போல இருக்க வேண்டும். (மத் 10:25) இயேசு கிறிஸ்துவிற்கு மேலாக இருக்கலாம் என்று நாம் சிந்திக்கக் கூடாது. அதே சமயத்தில் அவர் நம்மிடம் எதிர்பார்க்கும் அளவைவிட குறைவாகவும் இருக்கக்கூடாது. (யோவான் 14:12; யோவான் 17:18; யோவான் 20:21; எபே 4:13; 1யோவான் 2:6; 1யோவான் 4:17).

(10) துரும்பும், உத்திரமும் - (மத் 7:1; ரோமர் 2:1; யாக் 5:16)

லூக்கா 6:41 நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

லூக்கா 6:42 அல்லது நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரனை நோக்கி: சகோதரனே, நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.

உவமை எண் - 5

“நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?” (லூக்கா 6:41-42). நம்முடைய குற்றங்களையும், நம்மிடத்தில் காணப்படும் தவறுகளையும் கவனித்துப் பார்க்காமல், எப்போதும் மற்றவர்களுடைய குற்றங்களையும், மற்றவர்களுடைய தவறுகளையும் கவனித்துக் கொண்டு இருக்கக்கூடாது.

(11) வாயின் பேச்சும் கிரியைகளும் - (மத் 7:15)

லூக்கா 6:43 நல்ல மரமானது கெட்ட கனிகொடாது, கெட்ட மரமானது நல்ல கனிகொடாது.

லூக்கா 6:44 அந்தந்தமரம் அதனதன் கனியினால் அறியப்படும்; முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச்செடியில் திராட்சைப் பழங்களைப் பறிக்கிறதுமில்லை.

லூக்கா 6:45 நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.

லூக்கா 6:46 என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?

உவமை எண் - 6

“நல்ல மரமானது கெட்ட கனிகொடாது, கெட்ட மரமானது நல்ல கனிகொடாது” (லூக்கா 6:43-45). மனுஷருடைய இருதயத்திலிருந்து வெளிவரும் நன்மையையும், தீமையையும் விளக்குகிறது. (மத் 7:15-23; மத் 12:33-35; ரோமர் 2:1-3)

முட்செடி (bramble) - βάτος1 - batos1 - 942

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - முட்செடி (bush) (லூக்கா 6:44; லூக்கா 20:37; மாற்கு 12:26; அப் 7:30-35). செப்துவஜிந்த் கிரேக்க மொழி பழைய ஏற்பாட்டிலும் இதே சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.(யாத்3:2-4)

6 அதிகாரம்

"நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்" - (1கொரி 13:4-8; கலா 5:22-23; கொலோ 3:12-15; 2பேதுரு 1:3-8)

"பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்" - (மத் 15:19; மாற்கு 7:21; ரோமர் 1:21-32; 1கொரி 6:9-11;கலா 5:19-21)

"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?" - நாம் நம்மை இயேசுவின் விசுவாசிகள் என்று கூறிக்கொண்டாலும், இயேசு கிறிஸ்துவை ஆண்டவர் என்று கூறிக்கொண்டாலும் அவருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பது மிகவும் முக்கியம். (மத் 7:21-23; 1கொரி 6:9-11; கலா 5:19-21; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13).

(12) இரண்டு அஸ்திபாரங்களைப் பற்றிய உவமை - (6:47-49)

(மத் 7:24)

லூக்கா 6:47 என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன்.

லூக்கா 6:48 ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.

லூக்கா 6:49 என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

உவமை எண் - 7

"ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்............." (லூக்கா 6:48-49). தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் ஏற்படும் இரண்டு வெவ்வேறு விளைவுகளை இந்த உவமை விளக்குகிறது.

"என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ" - "என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன்" என்று லூக்கா 6:37 ஆவது வசனத்தில் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவினுடைய உபதேசங்களைக் கேட்டும், அதற்குக் கீழ்ப்படியவில்லையென்றால் மனுஷனுக்கு ஆசீர்வாதமில்லை.

7 அதிகாரம்

24. இயேசு நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:5)

லூக்கா 7:1 அவர் தம்முடைய வார்த்தைகளையெல்லாம் ஜனங்களுடைய காதுகள் கேட்கும்படி சொல்லி முடித்தபின்பு, கப்பர்நகூமுக்குப் போனார்.

லூக்கா 7:2 அங்கே நூற்றுக்கு அதிபதியாகிய ஒருவனுக்குப் பிரியமான வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையாயிருந்தான்.

லூக்கா 7:3 அவன் இயேசுவைக்குறித்துக் கேள்விப் பட்டபோது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்க வேண்டுமென்று, அவரை வேண்டிக் கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான்.

லூக்கா 7:4 அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக் கொண்டு: நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான்.

லூக்கா 7:5 அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெபஆலயத்தையும் கட்டினான் என்றார்கள்.

லூக்கா 7:6 அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப்போனார். வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி: நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்பட வேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல;

லூக்கா 7:7 நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

லூக்கா 7:8 நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான்; என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர்களை அனுப்பினான்.

லூக்கா 7:9 இயேசு இவைகளைக் கேட்டு, அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தமக்குப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 7:10 அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பிவந்தபோது, வியாதியாய்க் கிடந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிறதைக் கண்டார்கள்.

"அவர் தம்முடைய வார்த்தைகளையெல்லாம் ஜனங்களுடைய காதுகள் கேட்கும்படி சொல்லி முடித்தபின்பு"- சமனான பிரதேசத்தில் இயேசு கிறிஸ்து தமது பிரசங்கத்தைக் கூறி முடிந்த பின்பு என்று பொருள்படும். (லூக்கா 6:17). இந்தப் பூமியில் இயேசு கொடுக்க வேண்டிய எல்லா உபதேசங்களும் என்று பொருள்படாது. ஏனெனில் அவர் இன்னும் அநேகக் காரியங்களைப் பிரசங்கம் பண்ண வேண்டியிருக்கிறது. இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார். உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை. (மத் 13:34) இந்த வாக்கியத்தை ஒருசிலர் தவறுதலாகப் புரிந்து கொண்டு இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் எல்லா உபதேசங்களுமே உவமைகள் தான் என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள். மத் 13-ஆவது அதிகாரத்திலுள்ள செய்திக்கு மட்டுமே இந்த வசனம் பொருந்தும். இதுபோலவே, "அவர் சொல்லி முடிந்தபின்பு" (லூக்கா 7:1)என்னும் வாக்கியம் இந்தக் குறிப்பிட்ட பிரசங்கத்தைச் செய்து முடித்தபின்பு என்று பொருள்படும்.

"கப்பர்நகூம்" - இயேசு கிறிஸ்துவைத் தமது சொந்த ஊராகிய நாசரேத்தில் ஜனங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.(மத் 4:13) அதன்பின்பு அவர் தமது ஊழிய ஸ்தலத்தைக் கப்பர்நகூமிற்கு மாற்றினார். நாசரேத்திலுள்ள ஜனங்கள் தங்களுடைய அவிசுவாசத்தினாலும், இருதயக் கடினத்தினாலும் தேவனுடைய மகிமையைக் காணமுடியாதவர்களாக இருந்தார்கள்.

7 அதிகாரம்

"நூற்றுக்கு அதிபதியாகிய ஒருவனுக்குப் பிரியமான வேலைக்காரன்" - மத் 8:5-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியமும், இதுவும் ஒன்றுதானா என்பது தெரியவில்லை. ஒருசிலர் இரண்டு வசனப் பகுதிகளிலும் கூறப்பட்டிருக்கும் நூற்றுக்கதிபதி ஒரே நபர்தான் என்று கூறுகிறார்கள். ஆனால் வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்கிறார்கள்.

"வியாதிப்பட்டு மரண அவஸ்தையாயிருந்தான்" - மத்தேயு 8 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற வியாதி திமிர்வாதமாகும்.

"நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான்" - நூற்றுக்கதிபதி மிகவும் நல்ல மனுஷன். அவன் யூதரை நேசிக்கிறான். யூதருக்கு ஒரு ஜெபாலயமும் கட்டிக் கொடுத்திருக்கிறான். ஆனால் நூற்றுக்கதிபதியோ தனக்கு எந்த புகழ்ச்சியையும் நாடவில்லை. இயேசு கிறிஸ்து தனது வீட்டிற்கு வருவதற்குக்கூட தான் பாத்திரவான் அல்ல என்று தன்னைத் தாழ்த்துகிறான். (லூக்கா 7:6-8) இயேசு கிறிஸ்து அவ்விரண்டு பிரிவினருடைய பேச்சுக்குச் செவிகொடுக்காமல் நூற்றுக் கதிபதியிடம் காணப்படும் விசுவாசத்தைக் கண்டார். இயேசு கிறிஸ்து ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும். அப்போது தன் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று நூற்றுக்கதிபதிநம்பினான்.(லூக்கா 7:7-9) நம்முடைய ஜெபங்களுக்கு நமது விசுவாசத் திற்கு ஏற்ற பிரகாரம் கர்த்தர் பதில் தருவார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8)

"நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி: நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்பட வேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல" - மத் 8:5-13-இல் நாம் வாசிக்கும் நூற்றுக்கதிபதி இயேசு கிறிஸ்துவிடம் நேரடியாக வருகிறான். ஆனால் இந்த நூற்றுக்கதிபதி இயேசு கிறிஸ்துவிடம் தனது சிநேகிதரை அனுப்புகிறான்.

"இயேசு இவைகளைக் கேட்டு, அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டார்" - இயேசு இரண்டு இடங்களில் ஆச்சரியப்பட்டதாக வாசிக்கிறோம். ஒன்று இந்த வசனத்தில், நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தைக் குறித்து. மற்றொரு இடத்தில் நாசரேத்து ஊர் ஜனங்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்படுகிறார். (மாற்கு 6:6)

"அனுப்பப்பட்டவர்கள்" - நூற்றுக்கதிபதியின் சிநேகிதராக இருக்கலாம். (லூக்கா 7:6)

25. விதவையின் மகனை இயேசு உயிருடன் எழுப்புகிறார்-(மத் 9:18)

லூக்கா 7:11 மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப் போனார்கள்.

லூக்கா 7:12 அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப் போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டு வந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகுஜனங்கள் அவளுடனே கூட வந்தார்கள்.

லூக்கா 7:13 கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி,

லூக்கா 7:14 கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 7:15 மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்.

லூக்கா 7:16 எல்லாரும் பயமடைந்து: மகாதீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப் படுத்தினார்கள்.

லூக்கா 7:17 இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

7 அதிகாரம்

லூக்கா 7:18 இவைகளையெல்லாம் யோவானுடைய சீஷர்கள் அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து,

"மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்" - லூக்கா 7:1-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு.

"நாயீன்" (Nain) - கப்பர்நகூமிலிருந்து 21 மைல் தூரத்தில் உள்ள ஊர்.

"அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப் போனார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்குப் பன்னிரெண்டு சீஷர்கள் இருந்ததாக நாம் பொதுவாக நினைக்கிறோம். ஆனால் உண்மையில் அவருடைய சீஷர் எத்தனைபேர் என்பது தெளிவாகத் தெரிய வில்லை. இயேசு தேசம் முழுவதும் சென்று, ஆயிரக்கணக்கான வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்குகிறார். அவருக்கு அநேகர் சீஷராக இருந்திருக் கலாம். ஒரு இடத்தில் 500 பேருக்கு அதிகமான சகோதரர் (1கொரி 15:6) என்று அதிக எண்ணிக்கையில் இயேசுவின் சீஷர்களைப் பற்றி ஒரு குறிப்பு காணப்படுகிறது.

"ஊரின் வாசல்" - தற்போதுள்ள நாயீன் ஊரில் வாசல் எதுவும் இல்லை. இயேசுவின் காலத்தில் இருந்த நாயீன் ஊரில் வாசல் இருந்திருக்கலாம்.

"மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள்" - மரித்துப் போனவர்களை ஊருக்கு வெளியில் அடக்கம் பண்ணுவது வழக்கம். பட்டணத்திற்கு உள்ளும், ஜெபாலயங்களுக்கு அருகிலும் இறந்தவர்களை அடக்கம் பண்ணமாட்டார்கள். ராஜ வம்சத்தினருக்கு மட்டும் பட்டணத்திற்குள் அடக்கம் பண்ணும் சிலாக்கியம் கிடைக்கும். (1இராஜா 2:10) இயேசுவைப் பின்பற்றி வரும் திரளான ஜனங்களும், மரித்துப் போனவனை அடக்கம்பண்ண வரும் ஜனங்களும், ஊரின் வாசலில் சந்திக்கிறார்கள். (லூக்கா 7:11-12)

"அவள் மேல் மனதுருகினார்" - இயேசு மனதுருக்கம் நிறைந்தவர். (மத் 9:36)

"பாடை" (bier) - மரித்தவரைத் தூக்கிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் கம்புகள். சடலத்தைத் துணிகளால் சுற்றி, கம்புகளின் மீது வைப்பார்கள். நான்குபேர் தங்கள் தோள்களின்மீது பாடையைச் சுமந்து செல்வார்கள்.

"வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்" - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் இயேசு கிறிஸ்துவிற்கு மரணத்தின்மீது அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.(யோவான் 3:34). அப்பொழுது தான் மரித்துப்போன ஒரு சிறுமியை இயேசு உயிரோடுஎழுப்பினார். (லூக்கா 8:42-56) அடக்கம் பண்ணப் படுவதற்குக் கொண்டு போகப்பட்ட மரித்தவனை இயேசு உயிரோடு எழுப்பினார். (லூக்கா 7:12) மரித்துப்போய் நான்கு நாட்கள் ஆனபின்பு இயேசு ஒருவனைஉயிரோடுஎழுப்பினார்.(யோவான்11).

உட்கார்ந்தான் (sat up) - ἀνακαθίζω -amakathizoo- 339

செய்யப்படுபொருள் - உட்கார் - இது மருத்துவ உலகில் பயன்படுத்தும் வாக்கியம். இந்த வசனத்திலும் அப் 9:40-இலும் மட்டுமே இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"மகாதீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" - அவர்கள் கூறியது மெய்தான். இவை பல தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகும். (உபா 18:15-19; ஏசா 9:6-7;லூக்கா 1:67-79)

"யோவான்" - யோவான்ஸ்நானன் இந்த வேளையில் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருக்கிறான். (மத் 4:12; மத் 9:14) இயேசு கிறிஸ்து மரித்தோரை எழுப்புகிறார். அப்பேர்ப்பட்ட வல்லமையுள்ளவர் இருக்கும்போது தான் ஏன் சிறைச்சாலையில் அடைப்பட்டிருக்க வேண்டும் என்று ஆச்சரியப்பட்டிருப்பான்.

26.யோவான் ஸ்நானன் இயேசுவைப் பற்றி கேட்ட கேள்விகள்-(மத் 11:2)

லூக்கா 7:19 நீங்கள் இயேசுவினிடத்திற்குப் போய்: வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா? என்று கேளுங்கள் என்று சொல்லி அனுப்பினான்.

7 அதிகாரம்

லூக்கா 7:20 அந்தப்படி அவர்கள் அவரிடத்தில் வந்து: வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா? என்று கேட்கும்படி யோவான்ஸ்நானன் எங்களை உம்மிடத்திற்கு அனுப்பினார் என்றார்கள்.

"அப்பொழுது யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து...அவர்களை இயேசுவினிடத்திற்கு அனுப்பினான்"-மத் 11 ஆவது அதிகாரத்தில் காணப்படும் அதே நிகழ்ச்சி.

"வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா? - இயேசுவிற்கு யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தான். அவனுக்கு இயேசுவைப் பற்றி நன்றாகத் தெரியும். இருந்தாலும் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறான். அவன் இயேசுவைப் பற்றிச் சாட்சிக் கூறியிருக்கிறான். (மத் 3:11; யோவான் 1:29-33). யோவானுடைய கேள்விக்கு இயேசு கிறிஸ்து நேரடியாகப் பதில் கூறாமல், அவனுடைய சீஷர்களிடம் "நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்" என்று பதில் கூறுகிறார். தாமே மேசியா என்பதுதான் இதன் பொருள். தம்மைப் பற்றி தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த காரியங்களை இயேசு கிறிஸ்து யோவானின் சீஷர்களுக்கு முன்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். வேதவாக்கியம் இயேசு கிறிஸ்து மூலமாக நிறைவேறுகிறது. (லூக்கா 7:21-23)

27. இயேசு கிரியைகளினால் யோவான் ஸ்நானனுக்கு பதில் கூறுகிறார் - (மத் 11:4)

லூக்கா 7:21 அந்தச் சமயத்திலே நோய்களையும் கொடிய வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகரை அவர் குணமாக்கி, அநேகங் குருடருக்குப் பார்வையளித்தார்.

லூக்கா 7:22 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

லூக்கா 7:23 என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்.

"நோய்களையும் கொடிய வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகர்" - லூக்கா ஒரு மருத்துவர். இவர் வியாதிகளை வகைப்படுத்துகிறார். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வியாதிகள்.

1. நோய்கள் **(infirmities)**
2. கொடிய வியாதிகள் **(plagues)**
3. பொல்லாத ஆவிகள் **(evil spirits)**

சாதாரண வியாதிகளுக்கும், பிசாசின் கிரியைகளின் மூலமாக வரும் வியாதிகளுக்கும் வித்தியாசம் உண்டு.

இயேசு கிறிஸ்து மேசியா என்பதை நிரூபிக்கும் அடையாளங்கள்

1. குருடர் பார்வையடைகிறார்கள் (ஏசா 29:18; ஏசா 35:5)
2. சப்பாணிகள் நடக்கிறார்கள் (ஏசா 35:6; ஏசா61:1)
3. குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள் (ஏசா 61:1)
4. செவிடர் கேட்கிறார்கள் (ஏசா 29:18; ஏசா 35:5)
5. மரித்தோர் எழுந்திருக்கிறார்கள் (ஏசா 11:2)
6. தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுகிறது (ஏசா 11:2; ஏசா 42:1-5;ஏசா 60:1-3; ஏசா 61:1-2)

7 அதிகாரம்

28. யோவான் ஸ்நானனைப் பற்றி இயேசு கூறிய சாட்சி - (மத் 11:7)

லூக்கா 7:24 யோவானுடைய தூதர்கள் போன பின்பு அவர் யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ?

லூக்கா 7:25 அல்லவென்றால், எதைப்பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? அலங்கார வஸ்திரந்தரித்துச் செல்வமாய் வாழ்கிறவர்கள் அரசர் மாளிகைகளிலே இருக்கிறார்கள்.

லூக்கா 7:26 அல்லவென்றால், எதைப்பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 7:27 இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.

லூக்கா 7:28 ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை; ஆகிலும், தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 7:29 யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்.

"எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்?" - "பார்க்க" (for to see, to look at) என்னும் வாக்கியம் ஐந்து இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லூக்கா 7:24-26; மத் 11:8-9) இயேசு கிறிஸ்து கீழே கொடுக்கப்பட்டிருக்கும் காரியங்களைப் பார்க்கப்போனீர்களா என்று கேட்கிறார்.

1. காற்றினால் அசையும் நாணலையோ?
2. மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ?
3. தீர்க்கதரிசியையோ?

இவ்வாறு கேள்விகளைக் கேட்டுவிட்டு, இதற்கு இயேசு கிறிஸ்துவே பதில் கூறுகிறார். "ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச்சொல்லுகிறேன்"(லூக்கா 7:26).

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம்பண்ணுவான்" (லூக்கா 7:27; மல 3:1; ஏசா 40:3)

பிறந்த (born) - γεννητός - genneetos - 1084

பெயரடை - பிறந்த (brought into the world) (மத் 1:3)

"யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி" - பெரிய தீர்க்கதரிசி என்னும் வாக்கியம் ஒரு ஒப்புமை மட்டுமே ஆகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யோவானை விட பெரிய தீர்க்கதரிசிகளெல்லாம் இருந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள். ஆனால் யோவானோ புதிய ஏற்பாட்டின் பிரமாணத்திற்கு உட்பட்டவன். ஆகையினால் யோவான் மற்ற தீர்க்கதரிசிகளைவிட பெரியவனாக இருக்கிறான். (2கொரி 3:6-15; எபி 8:6).

7 அதிகாரம்

"தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" - இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்குத் தமது கிருபையையும், முழுமையான ஆசீர்வாதத்தையும் கொடுக்க வந்திருக்கிறார். (யோவான் 1:16-17) ஆவியானவரின் ஒரு அளவை மட்டுமே யோவான் பெற்றிருந்தான்.(யோவான் 1:15-17; மத் 3:14) ஆனால் விசுவாசிகளாகிய நமக்கோ பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பூரணமாகக் கிடைத்திருக்கிறது. (லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12-15;அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; எபே 3:19) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்தவான் களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஒரு சில வரங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்காலத்து விசுவாசிகளுக்கு ஆவியானவரின் அனைத்து வரங்களும் அனுக்கிரகம் பண்ணப்பட்டிருக்கிறது. (மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; 1கொரி 12). சுவிசேஷப் புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கும் வாக்குத் தத்த ஆசீர்வாதங்கள் இயேசு கிறிஸ்துவின் காலத்திற்கு முந்தி ஜீவித்தவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட வில்லை. (2கொரி 3:6-15; எபி 8:6;1பேதுரு 1:10-12) ஆகையினால் "தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" என்று இயேசு கூறுகிறார்.

"யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்" - யோவானுடைய உபதேசத்தைக் கேட்டவர்கள் தேவனை நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். மனந்திரும்பி பாவமன்னிப்பு கேட்கும் எல்லா பாவியையும் இயேசு கிருபையுடன் மன்னிக்கிறார். யோவான் ஊழியத்தின் மூலமாக இயேசு மகிமை பெறுகிறார்.

29. இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார் - (மத் 11:16)

லூக்கா 7:30 பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்.

லூக்கா 7:31 பின்னும் கர்த்தர் சொன்னது: இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பாயிருக்கிறார்கள்?

லூக்கா 7:32 சந்தை வெளியில் உட்கார்ந்து, ஒருவரையொருவர் பார்த்து: உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை; உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் அழவில்லை என்று குறை சொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

லூக்கா 7:33 எப்படியெனில், யோவான் ஸ்நானன் அப்பம் புசியாதவனும் திராட்சரசம் குடியாதவனுமாய் வந்தான்; அதற்கு நீங்கள்: அவன் பிசாசு பிடித்திருக்கிறவன் என்கிறீர்கள்.

லூக்கா 7:34 மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்; அதற்கு நீங்கள்: இதோ, போஜனப் பிரியனும் மதுபானப் பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறீர்கள்.

லூக்கா 7:35 ஆனாலும் ஞானமானது அதன் பிள்ளைகளெல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்றார்.

"தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்" - தேவனுடைய உபதேசங்களைத் தங்களுடைய உள்ளங்களில் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தார்கள். (மத் 11:16-26).

"இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பாயிருக்கிறார்கள்?" - (மத் 11:16-19)

உவமை எண் - 8

"சந்தை வெளியில் உட்கார்ந்து, ஒருவரையொருவர் பார்த்து: உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாட வில்லை........" (லூக்கா 7:32-35). யூதருக்கு சுவிசேஷத்தில் ஆர்வமில்லை என்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 11:16)

"அவன் பிசாசுபிடித்திருக்கிறவன்" - (மத் 11:18-19)

7 அதிகாரம்

"ஞானமானது அதன் பிள்ளைகளெல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும்" - (மத் 11:19)

30. இயேசுவின் முதலாவது அபிஷேகம் - பரிசேயனாகிய சீமோன் -(மத் 26:6; யோவான் 12:1)

லூக்கா 7:36 பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ண வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டான்; அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்.

லூக்கா 7:37 அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தி யிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து,

லூக்கா 7:38 அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள்.

லூக்கா 7:39 அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப் பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

லூக்கா 7:40 இயேசு அவனை நோக்கி: சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்ல வேண்டும் என்றார். அதற்கு அவன்: போதகரே, சொல்லும் என்றான்.

"பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்; அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்" - இந்த நிகழ்ச்சி லூக்காவில் மட்டுமே காணப்படுகிறது. மாற்கு 14:3-9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சி வேறு.

"அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ" - இவள் மகதலேனா மரியாள் அல்ல. நாயீன் ஊரில் இருந்தவள். (லூக்கா 7:11-35) மகதலா கலிலேயா கடற்கரையில் உள்ளது. நாயீன் ஊரார் இந்த ஸ்திரீயைப் பாவியாய் இருக்கிறவள் என்று அறிந்திருந்தார்கள். (லூக்கா 7:39) மரியாள் லூக்கா 8:2-இல் குறிப்பிடப் பட்டிருக்கிறாள். ஆகையினால் இவளும் நாயீன் ஊர் ஸ்திரீயும் வெவ்வேறானவர்கள். இந்த ஸ்திரீ பாவியானவள் என்பதினால் இவள் வேசியானவள் என்பதற்கு ஆதாரமில்லை.

"பரணி" **(alabaster box)** - தைலம் வைப்பதற்குச்சலவைக்கல்லினால் செய்யப்பட்ட குடுவை. எகிப்து தேசத்தில் இது பிரபலிய மானது.இவற்றின் அளவும், வடிவமும் வெவ் வேறாக இருக்கும். (மத் 26:7; மாற்கு 14:3)

"தைலம்" **(ointment)** - (யாத் 30:25)

"அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்தாள்" - இந்த ஸ்திரீ இயேசுவிற்குப் பின்னாக வந்து, அவருடைய பாதங்களைக் கண்ணீரினால் நனைக்கிறாள்.

"அவருடைய பாதங்களை முத்தஞ்செய்தாள்" - யூதர், கிரேக்கர், ரோமாபுரியார் ஆகியோர் மத்தியில் அன்பையும், பக்தியையும் வெளிப்படுத்தும் வழக்கம். வெற்றி பெற்ற அரசர்கள் முன்பாகத் தோல்வி பெற்றவர்கள் தங்களுடைய கீழ்ப்படிதலை வெளிப் படுத்துவதற்கு இப்படித்தான் நடந்து கொள்வார்கள்.

"பரிமளதைலத்தைப் பூசினாள்" - இயேசு மூன்று முறை பரிமளதைலத்தினால் அபிஷேகிக் கப்படுகிறார். அதில் இது முதலாவது தடவை. மற்ற இரண்டு முறைகளும் அவர் மரிக்கும் வாரத்தில் நடைபெறுகிறது.(மத் 26:7-13; மாற்கு 14:3-9; யோவான் 12:3-8)

7 அதிகாரம்

"அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்" - இயேசு கிறிஸ்துவிற்குத் தம்மைத் தொடுகிற ஸ்திரீயைப் பற்றியும் தெரியும். தன்மனத்திற்குள்ளே இவ்வாறு சொல்லிக் கொண்ட பரிசேயனைப் பற்றியும் தெரியும். அவர் பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் சகலத்தையும் அறிந்திருக்கிறார். பரிசேயனுக்கு விளக்கம் கூறும் விதமாக சீமோன் பேதுருவிடம் ஒரு காரியத்தைக் கூறுகிறார். (லூக்கா 7:41-50).

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற சீமோன்கள்

1. சீமோன் பேதுரு (மத் 10:2)
2. கானானியனாகிய சீமோன் (மத் 10:4; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப் 1:13
3. இயேசுவின் சகோதரன் (மத் 13:55; மாற்கு 6:3)
4. நாயீன் ஊரானாகிய சீமோன் (லூக்கா 7:36-50)
5. பெத்தானியாவிலுள்ள குஷ்டரோகி (மத் 26:6)
6. யூதாஸ்காரியாத்தின் தகப்பன் (யோவான் 6:71; யோவான் 12:4; யோவான் 13:2,26)
7. சீரேனே ஊரானாகிய சீமோன் (மத் 27:32; மாற்கு 15:21; லூக்கா 23:26)
8. மாயவித்தைக்காரனாகிய சீமோன் (அப் 8:9-24)
9. தோல்பதனிடுகிறவனாகிய சீமோன் (அப் 9:43; அப் 10:6-32)

31. கடன்பட்ட இரண்டு பேரைப் பற்றிய உவமை

லூக்கா 7:41 அப்பொழுது அவர்: ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன் பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது.

லூக்கா 7:42 கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார்.

லூக்கா 7:43 சீமோன் பிரதியுத்தரமாக: எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான்; அதற்கு அவர்: சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி,

லூக்கா 7:44 ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே; நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள்.

லூக்கா 7:45 நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்.

லூக்கா 7:46 நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்.

லூக்கா 7:47 ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் என்று சொல்லி;

7 அதிகாரம்

உவமை எண் - 9

"ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்..........."(லூக்கா 7:41-47). தேவனிடத்தில் அன்பு செலுத்தும் அளவை இந்த உவமை விளக்குகிறது.

"கடன்கொடுக்கிறவன்" **(creditor, a moneylender)** - நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரம். ஆனால் இது நீதியாக நடைபெற வேண்டும். (யாத் 22:25-27; லேவி 25:14-17,35-37; உபா 23:19-20; உபா 24:6-17) ஏழு வருஷத்திற்கு ஒருமுறை சகோதரருடைய கடன்களையெல்லாம் தள்ளுபடி பண்ண வேண்டும். அந்நியருடைய கடனைத் தள்ளுபடி பண்ண வேண்டியதில்லை. (யாத் 21:2-6;உபா 15:2-3) விசுவாசிகள் கடன் கொடுப்பதற்கு புதிய ஏற்பாட்டில் வேறுவிதமாக ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. (மத் 5:42; லூக்கா 6:34).

"அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்?" - இந்த உவமையின் மூலமாக கூறப்படும் உட்கருத்து இதுதான். (லூக்கா 7:43-47).

"இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே" - இந்த உவமையை இயேசு ஸ்திரீக்கும், சீமோனுக்கும் பயன்படுத்துகிறார். ஸ்திரீயின் கிரியைகளைவிளக்குகிறார்.(லூக்கா7:47-50)

"நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை" - இயேசு கிறிஸ்து சீமோனிடம் அவனைப் பற்றிக் கூறும் காரியங்கள்.

1. நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை
2. நீ என்னை முத்தஞ்செய்யவில்லை,
3. நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை

இயேசு கிறிஸ்து சீமோனிடம் அந்த ஸ்திரீயைப் பற்றிக் கூறும் காரியங்கள்

1. இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்தாள்.
2. தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள்
3. என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்
4. இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்

வீட்டிற்கு விருந்தினர் வரும்போது அவர்களுடைய பாதங்களைச் சுத்தம் பண்ணுவதற்காக தண்ணீர் தரும் பழக்கம் பாலஸ்தீன தேசத்தில் இருந்தது. கால்களைக் கழுவிய பின்பு, விருந்தினர்களுக்குப் புசிப்பதற்கு ஆகாரமும், தங்குவதற்கு இடமும் தருவார்கள்.(ஆதி 18:4; ஆதி 24:32; ஆதி 43:24)கால்களைக் கழுவுவதற்காக அதற்குரிய பாத்திரங்களில் தண்ணீர் எப்போதும் நிரப்பப்பட்டிருக்கும். இதற்காக வேலைக்காரர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள். (1சாமு 25:41; 1தீமோ 5:10).

"முத்தஞ்செய்தல்" - பாலஸ்தீன தேசத்தில் மனுஷர் தங்கள் உற்றார், உறவினரையும், நண்பர்களையும் முத்தஞ்செய்து வாழ்த்துவது வழக்கம்.(ஆதி 27:27;ஆதி 29:13;ஆதி 33:4; ஆதி 45:15; ஆதி 48:10; யாத் 4:27; யாத் 18:7; 1சாமு 20:41; லூக்கா 15:20; அப் 20:37) முத்தம் செய்வது மரியாதைக் குரிய செயல். (சங் 2:12; 1சாமு 10:1; 1இராஜா 19:18; யோபு 31:27; ஓசி 13:2) விசுவாசிகள் மத்தியிலும் இந்தப் பழக்கம் இருந்தது. (ரோமர் 16:16; 1கொரி 16:20; 2கொரி 13:12)

"தலையில் எண்ணெய் பூசுதல்" - இராஜாக்கள் முடிசூட்டும்போது அவர்களுடைய தலைகளில் விலையுயர்ந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணுவது வழக்கம். (2இராஜா 11:12) அதுபோலவே பிரதான ஆசாரியரைப் பிரதிஷ்டை பண்ணும்போதும் செய்தார்கள். (சங் 133:2) விருந்தினர்களைக் கௌரவிக்கும் வகையில் அவர்களுடைய தலைகளில் எண்ணெய் பூசினார்கள்.(லூக்கா7:46,சங்23:5;சங் 92:10; சங் 105:15; உபா 28:40; ரூத் 3:3; பிர 9:8; மீகா 6:15; மத் 6:17) தலையில் எண்ணெய் பூசாமல் இருப்பது துக்கமாக இருப்பதற்கு அடையாளம். (2சாமு 14:2; தானி 10:3; மத் 6:17-18) முகத்தில் எண்ணெய் பூசுவது சந்தோஷத்தின் அடையாளம். (சங் 45:7; எபி 1:9).

லூக்கா - தொகுப்புரை

7 அதிகாரம்

32. பாவியான ஸ்திரீயை இயேசு மன்னிக்கிறார்

லூக்கா 7:48 அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்.

லூக்கா 7:49 அப்பொழுது கூடப் பந்தியிருந்த வர்கள்: பாவங்களை மன்னிக்கிற இவன் யார் என்று தங்களுக்குள்ளே சொல்லி கொண்டார்கள்.

லூக்கா 7:50 அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.

"உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" - தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே இயேசு கிறிஸ்து பலருடைய பாவங்களை மன்னித்திருக்கிறார். (மத் 9:1-7,22; மாற்கு 5:34; மாற்கு 10:52; லூக்கா 7:48; லூக்கா 17:19; லூக்கா 18:9-14,42; லூக்கா 19:1-9; லூக்கா 23:43; யோவான் 4:49-53; யோவான் 7:31; யோவான் 8:30-31)

"பாவங்களை மன்னிக்கிற இவன் யார்" - (மத் 9:3)

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" - இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திலும், அவருடைய நாமத்திலும் விசுவாசம் வைக்கும்போது மனுஷருக்கு இரட்சிப்பு உண்டாகிறது. (மத் 1:21;லூக்கா 13:1-5; ரோமர் 3:24; ரோமர் 10:9-10;எபே 1:7; எபே 2:8-9; எபி 9:22; 1யோவான் 1:9).

8 அதிகாரம்

33. கலிலேயாவிற்கு இயேசுவின் நான்காவது பிரயாணம் - (மத் 11:1; 4:23)

லூக்கா 8:1 பின்பு, அவர் பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள்.

லூக்கா 8:2 அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும்,

லூக்கா 8:3 ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.

"அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும்" - (மத் 15:22)

"மகதலேனாள் என்னப்பட்ட மரியாள்" - (லூக்கா 24:10)

"ஏழு பிசாசுகள் நீங்கினவள்" - இந்த ஸ்திரீயைக் குறித்து விளக்கம் கூறும்போது இவளை ஒரு வேசி என்று கூறுகிறார்கள். ஆனால் வேதத்தில் இதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. பிசாசு பிடித்திருக்கும் நபரை நாம் எளிதாக அடையாளம் கண்டுபிடித்து விடலாம். ஆனால் அந்த நபருக்குள் எத்தனை பிசாசுகள் இருக்கின்றன என்பதை எண்ணுவது கடினம்.

"ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாள்" - இந்த ஸ்திரீயின் கணவன் மூலமாக ஏரோது இயேசு கிறிஸ்துவைப் பற்றி பல காரியங்களைக் கேள்விப்பட்டிருக்கிறான். (மாற்கு 6:14-16; லூக்கா 23:8)

"சூசன்னாள்" - இந்த வசனத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறாள்.

"தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்துகொண்டு வந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் எவ்வாறு ஊழியக்காரர்களாக ஆதரிக்கப்பட்டார்கள் என்பதற்கு முதலாவது குறிப்பு இந்த வசனத்தில் காணப்படுகிறது. இயேசு கிறிஸ்து பட்டணம் தோறும் போனபோது அவரையும், அவருடைய சீஷர்களையும் அந்தந்த ஊரார் அன்போடு ஏற்றுக் கொண்டு அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கொடுத்து, புசிப்பதற்கு போஜனம் கொடுத்து, வந்திருக்கிறார்கள். சில வேளைகளில், ஒருசில அப்பங்களை இயேசு கிறிஸ்து ஆசீர்வதித்து, திரளான ஜனங்களுக்குப் போஜனமாகக் கொடுத்திருக்கிறார். தேவாலயத்து வரியை அற்புதமாக மீனின் வாயிலிருந்து வெள்ளிப் பணமாகப் பெற்றுச் செலுத்தியிருக்கிறார்

மத் 21:19; லூக்கா 5:5-10; லூக்கா 7:36; லூக்கா 19:5) இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றிருக்கிறவர். அவருக்குத் தமது சொந்த தேவைகளைச் சந்திப்பது ஒரு பெரிய பிரச்சனையே அல்ல.(யோவான் 3:34)

34. விதைப்பவனைப் பற்றிய உவமை - (மத் 13:3,18; மாற்கு 4:1)

லூக்கா 8:4 சகல பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் அவரிடத்தில் வந்து கூடினபோது, அவர் உவமையாகச் சொன்னது:

லூக்கா 8:5 விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்து மிதியுண்டது, ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டது.

லூக்கா 8:6 சில விதை கற்பாறையின் மேல் விழுந்தது; அது முளைத்தபின் அதற்கு ஈரமில்லாததினால் உலர்ந்து போயிற்று.

லூக்கா 8:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் கூட வளர்ந்து, அதை நெருக்கிப்போட்டது.

8 அதிகாரம்

லூக்கா 8:8 சில விதை நல்ல நிலத்தில் விழுந்தது, அது முளைத்து, ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது என்றார். இவைகளைச் சொல்லி, கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று சத்தமிட்டுக் கூறினார்.

உவமை எண் - 10

"விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்........." (லூக்கா 8:5-8,11-15). சுவிசேஷச் செய்தி பிரசங்கிக்கப்படுவதையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் இந்த உவமை விளக்குகிறது. (மத் 13:1-9,18-23; மாற்கு 4:3-20)

"காதுள்ளவன்கேட்கக்கடவன்"-(மத் 11:15)

35. உவமைகளால் பேசுவதற்கு காரணம்-(மத் 13:10,34; மாற்கு 4:10)

லூக்கா 8:9 அப்பொழுது அவருடைய சீஷர்கள், இந்த உவமையின் கருத்து என்னவென்று அவரிடத்தில் கேட்டார்கள்.

லூக்கா 8:10 அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத் தக்கதாக, அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது.

"உவமை" - (மத் 13:3)

"இரகசியங்கள்" - (மத் 13:11)

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

"மற்றவர்களுக்கோ....... அவைகள் உவமைகளாகச்சொல்லப்படுகிறது"-(மத் 13:11)

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத் தக்கதாக" - (லூக்கா 8:10; ஏசா 6:9-10)

36. விதைப்பவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (மத் 13:18; மாற்கு 4:13)

லூக்கா 8:11 அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்.

லூக்கா 8:12 வழியருகே விதைக்கப் பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக் கிறார்கள்; அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப் படாதபடிக்குப் பிசாசானவன் வந்து, அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான்.

லூக்கா 8:13 கற்பாறையின் மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும் போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர் கொள்ளாத படியினாலே, கொஞ்சக் காலமாத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்.

லூக்கா 8:14 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக் கிறார்கள்; கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின் பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன் கொடாதிருக்கிறார்கள்.

லூக்கா 8:15 நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

"விதை தேவனுடைய வசனம்" - விதைக்கப்பட்ட விதையே தேவனுடைய வசனமாகும்.

8 அதிகாரம்

"வழியருகே" - (மாற்கு 4:15)

"கற்பாறையின் மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும் போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்" - (மாற்கு 4:16)

"முள்ளுள்ள இடங்களில் விதைக்கப் பட்டவர்கள்" - (மாற்கு 4:18)

"பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும்" - இந்தக் காரியங்களின் சுபாவங்கள்

1. பாவமானவை (எபி 11:25); மாம்சத்திற்குரியவை (கலா 5:19-21); தற்காலிகமானவை (யோபு 21:12-13; எபி 11:25); மாயையானவை (பிர 2:1-11); மதியீனமானவை (பிர 7:4); துன்மார்க்கரின் சுபாவம் (ஏசா 47:8; எபே 4:17-19;2தீமோ 3:4; தீத்து 3:3; 1பேதுரு 4:3); ஆவிக்குரிய மரணத்திற்கு அடையாளம்(1தீமோ 5:6); ஐசுவரியவங்களைத் தவறுதலாகப் பயன்படுத்துதல் (யாக் 5:1-5); தேவனால் நியாயந்தீர்க்கதப்படும் (1கொரி 6:9-11; கலா 5:19-21).

2. தேவனுடைய வார்த்தையை இவை இருதயத்தில் நெருக்கிப்போடுகிறது (லூக்கா 8:14); தேவனை மறுதலிக்கக் காரணமாக இருக்கிறது (லூக்கா 21:34); தரித்திரத்தைத் தருகிறது (நீதி 21:17); தேவனுடைய ராஜ்யத்திலிருந்து வெளியேற்றுகிறது (கலா 5:19-21; 2தெச 2:12); வருத்தத்திலும், நித்திய தண்டனையிலும் முடிவு பெறுகிறது (மாற்கு 4:20,யோபு 20:12-16; நீதி 21:17; 1கொரி 6:9-11; ரோமர் 1:29-32; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:19-21)

"பொறுமையுடனே பலன் கொடுக்கிற வர்களாயிருக்கிறார்கள்" - இரட்சிக்கப் பட்டதற்கு இது ஒரு அடையாளமாகும்.

இரட்சிக்கப்படுவதற்கு நிபந்தனைகள்

1. தேவனுடைய வார்த்தையைக் கேட்க வேண்டும். (லூக்கா 8:12).
2. விசுவாசித்து, இரட்சிக்கப்பட வேண்டும். (லூக்கா 8:12; மாற்கு 16:16).
3. கண்ணியமான நல்ல இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். (லூக்கா 8:12; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13).
4. இருதயத்தில் தேவனுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ள வேண்டும். (லூக்கா 8:12; யோவான் 15:7).
5. சத்தியத்தில் வேரூன்றி நிலைத்து நிற்க வேண்டும். கீழே விழுந்துவிடக்கூடாது. (லூக்கா 8:13; கொலோ 1:23; கொலோ 2:6-7; எபி 3:6,12-14; எபி 12:14-15).
6. தேவனுடைய வார்த்தைக்குக்கு கீழ்ப்படிய வேண்டும். (லூக்கா 8:15,21; யாக் 2:14-23; ரோமர் 1:16).
7. பொறுமையுடனே பலன் கொடுக்க வேண்டும். (லூக்கா 8:15; யோவான் 6:27; யோவான் 15:1-8)

37. கொளுத்தப்பட்ட விளக்கைப் பற்றிய உவமை - (மத் 5:13; மாற்கு 4:21; லூக் 11:33)

லூக்கா 8:16 ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தினாலே மூடவுமாட்டான், கட்டிலின் கீழே வைக்கவுமாட்டான்; உள்ளே பிரவேசிக்கிறவர்கள் அதின் வெளிச்சத்தைக் காணும்படிக்கு அதை விளக்குத்தண்டின் மேல் வைப்பான்.

லூக்கா 8:17 வெளியரங்கமாகாத இரகசியமு மில்லை, அறியப்பட்டு வெளிக்குவராத மறைபொருளுமில்லை.

லூக்கா 8:18 ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்; உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் என்றார்.

8 அதிகாரம்

உவமை எண் - 11

"ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தினாலே மூடவுமாட்டான், கட்டிலின் கீழே வைக்கவுமாட்டான்; உள்ளே பிரவேசிக்கிறவர்கள் அதின் வெளிச்சத்தைக் காணும்படிக்கு அதை விளக்குத்தண்டின் மேல் வைப்பான்" (லூக்கா 8:16). சத்தியத்தையும், வெளிச்சத்தையும் மூடக்கூடாது, மூடவும் முடியாது.

தீர்க்கதரிசன எண் - 19

"ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தினாலே மூடவுமாட்டான்.............." (லூக்கா 8:16-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. நியாயத் தீர்ப்பின்போது முழுவதுமாக நிறைவேறும்.

"விளக்கு" - (மத் 5:15; மத் 10:26; மாற்கு 4:21-22)

வெளியரங்கமாதல் (manifest) - φανερός - phaneros - 5318

பெயரடை - வெளியரங்கமான, பிரசித்த, புறம்பான (made visible or known) - இப்போது இரகசியமாக இருக்கும் வார்த்தைகளும், கிரியைகளும் ஒருகாலத்தில் வெளிப்படுத்தப்படும். மனுஷருடைய இரகசிய பாவங்களெல்லாம் ஒருநாளில் எல்லாருக்கும் தெரியவரும். (ரோமர் 2:16).

"நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்" - தேவனுடைய வார்த்தையை மிகுந்த கவனத்தோடும், பக்தியோடும் கவனித்துக் கேட்க வேண்டும். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் நமக்கு ஆசீர்வாதம் உண்டாக வேண்டும். வசனத்தைக் கேட்டால் மட்டும் போதாது. அதை நமது இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். வசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவர்கள் தம்முடைய உறவினர்கள் என்று இயேசு கிறிஸ்து அறிவித்திருக்கிறார். (லூக்கா 8:19-21) வசனத்தைக் கேட்டுக் கீழ்ப்படிந்தால் நமது ஜீவியத்தில் ஆவிக்குரிய வெளிச்சத்தை மேன்மேலும் பெறுவோம். தவறினால் ஆவிக்குரிய இருளில் இருப்போம். (மத் 11:29)

"உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்" - இது ஒரு ஆவிக்குரிய பிரமாணம். சத்தியம் யாரிடத்தில் இருக்கிறதோ அவனுக்கு மேலும் அதிகமாகச் சத்தியம் கொடுக்கப்படும். அவன் சத்தியத்தையே நாடுகிறான். ஆகையினால் வேறு எதையும் பெற்றுக் கொள்ளாமல் அவன் சத்தியத்தையே பெற்றுக் கொள்வான்.

"இல்லாதவனெவனோ அவன் தனக்கு ண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்" - இதுவும் ஒரு தெய்வீகப் பிரமாணம். சத்தியத்தை முழு இருதயத்தோடு தேடாமல் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிக் கீழ்ப்படியாமல் போகிறவர்களுக்கும், சத்தியத்தைக் கேட்பதற்கு மனதில்லாதவர்களுக்கும் சத்தியம் கொடுக்கப்படமாட்டாது. அவர்களிடத்தில் உள்ள சத்தியமும் அகன்றுபோய், அவர்கள் ஆவிக்குரிய இருளில் ஜீவிப்பார்கள்.

நினை (seemeth) - δοκέω - dokeoo - 1380

வினைச்சொல் - நினை, தோன்று, எண்ணு, உண்டாக்கு,நலமாகக் காண், விளக்கு,யோசித்துப்பார் (to suppose, be of the opinion, reputed) - சந்தேகமான காரியங்களை இந்த வார்த்தை குறிக்கிறது. அதேசமயத்தில் நிச்சயமான காரியங்களையும் இந்த வார்த்தை குறிக்கும். (எபி 4:1,மத் 3:9; லூக்கா 22:24; யோவான் 5:39; 1கொரி 7:40;1கொரி 10:12; 1கொரி 11:16; கலா 2:9; பிலி 3:4). இந்த மனுஷனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் காரியம் ஆவியின் கனியை வெளிப்படுத்தும் தேவனுடைய வார்த்தையாகும். (லூக்கா 8:11,15,18) தேவனுடைய வசனமாகிய விதையானதுஇருதயத்திலே லூக்கா8:14-இல் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் நெருக்கப்பட்டால் அந்த வசனம் அவனுடைய இருதயத்திலிருந்து எடுத்துப் போடப்படும். ஆகையினால், தன்னிடத்தில் விதைக்கப் பட்டிருக்கிற சத்திய வசனம் எடுத்துப் போடப்படுவதற்கு முன்பாகவே ஆவியின் கனியைத் தரவேண்டும்.

8 அதிகாரம்

38. இயேசுவின் புதிய உறவினர்கள் - (மத் 12:46; மாற்கு 3:31)

லூக்கா 8:19 அப்பொழுது அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் வந்தார்கள்; ஜனக்கூட்டத்தினாலே அவரண்டையில் அவர்கள் சேரக்கூடாதிருந்தது.

லூக்கா 8:20 அப்பொழுது: உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மைப் பார்க்க வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்று அவருக்கு அறிவித்தார்கள்.

லூக்கா 8:21 அதற்கு அவர்: தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படியே செய்கிறவர்களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமாயிருக்கிறார்கள் என்றார்.

"அவருடைய சகோதரர்" - மரியாளுக்கு இயேசுவைத் தவிர மற்ற பிள்ளைகளும் உண்டு. இயேசுவுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தார்கள். யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பது அவர்களுடைய பெயர்களாகும். இயேசுவிற்கு மூன்று சகோதரிகள் இருந்திருக்கலாம். இயேசு கிறிஸ்துவிற்கு உலகப்பிரகாரமாக இப்படிப்பட்ட உறவுகள் இருந்தாலும் அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரரானவர். இயேசு மரியாளின் வயிற்றில் பரிசுத்த ஆவியானவரால் உற்பத்தியானவர். இவர் யோசேப்பின் குமாரன் அல்ல. (மத் 13:55-56; மாற்கு 6:3).

கர்த்தர் மரியாளின் முதற்பேறான குமாரன் என்று அழைக்கப்படுகிறார். (மத் 1:25;லூக்கா 2:7)இதனால் மரியாளுக்கு மேலும் சில பிள்ளைகள் பிறந்திருக்கலாம்.

முதற்பேறு (firstborn) - πρωτότοκος - **prootokos** - 4416

பெயரடை - முதற்பேறான, முதற்பிறந்த

இந்த வார்த்தை ரோமர் 8:29; கொலோ 1:15-18; எபி 1:6; எபி 11:28; எபி 12:23; வெளி 1:5 ஆகிய வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றவர்களில் முதன்மையானவர் என்பது இதன் பொருள். இயேசு கிறிஸ்து மரியாளுடைய ஒரேபேறான குமாரனாக இருப்பார் என்றால் அதற்காகப் பயன்படுத்த வேண்டிய கிரேக்கச்சொல் "மோனோஜீனஸ்" (monogenees) ஆகும்.

ஒரே (only son) - μονογενής - **monogenees** - 3439

பெயரடை - ஒரே, ஒரே பேறான

இந்த வார்த்தை லூக்கா 7:12; லூக்கா 8:42; லூக்கா 9:38 ஆகிய வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பெற்றோருக்கு ஒரே ஒரு குமாரனோ அல்லது ஒரேஒரு குமாரத்தியோ இருக்கும்போது இந்த வார்த்தை பயன்படுத்தப்படும்.

இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய ஒரேபேறான குமாரன். (யோவான் 1:14,18; யோவான் 3:16,18; 1யோவான் 4:9).

மரியாளுக்கு மேலும் சில குழந்தைகள் பிறக்கும் என்பது ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசனமாகும். "என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன். உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது. உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" (சங் 69:8-9).

அவருடைய தாயாரும், அவருடைய சகோதரரும் கப்பர்நகூமிற்கு அவரைத் தேடி வருகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைத் தடைபண்ணுகிறார்கள். (மத் 12:46-50; மாற்கு 3:31-35; லூக்கா 8:19-21; யோவான் 2:12)

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுகின்ற வரையிலும் அவருடைய சகோதரர் அவரை விசுவாசிக்கவில்லை. (யோவான் 7:3-10; அப் 1:14)

யாக்கோபு இயேசு கிறிஸ்துவின் சகோதரர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். (மாற்கு 6:3, கலா 1:19)

8 அதிகாரம்

"தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படியே செய்கிறவர்கள்"-(லூக்கா 8:15)

39. இயேசு புயல்காற்றை அமைதிப்படுத்துகிறார் - (மத் 8:23; மாற்கு 4:35)

லூக்கா 8:22 பின்பு ஒரு நாள் அவர் தமது சீஷரோடுங்கூடப் படவில் ஏறி: கடலின் அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்; அப்படியே புறப்பட்டுப் போனார்கள்.

லூக்கா 8:23 படவு ஓடுகையில் அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே சுழல் காற்றுண்டானதால், அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு ஜலத்தினால் நிறைந்தது.

லூக்கா 8:24 அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம் என்று அவரை எழுப்பினார்கள்; அவர் எழுந்து, காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்று போய், அமைதலுண்டாயிற்று.

லூக்கா 8:25 அவர் அவர்களை நோக்கி: உங்கள் விசுவாசம் எங்கே என்றார். அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு: இவர் யாரோ, காற்றுக்கும் ஜலத்துக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

"கடலிலே சுழல் காற்றுண்டானது" - (மத் 8:24-27)

"படவு ஜலத்தினால் நிறைந்தது" - படவிற்குள் தண்ணீர் புகுந்து படகு தண்ணீரினால் நிறைந்து விடுகிறது.

"உங்கள் விசுவாசம் எங்கே" - நம் ஒவ்வொருவருடைய ஜீவியத்திலும் நாம் கேட்க வேண்டிய முக்கியமான கேள்வி இதுதான். ஒருவருக்கு விசுவாசம் இருக்குமென்றால் அவர் தேவனிடமிருந்து தன்னுடைய விண்ணப்பத்திற்குப் பதிலைப் பெற்றுக் கொள்வார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8).

40. கதரேனருடைய நாட்டிலிருந்த பிசாசுகள் பிடித்தவன் - (மத் 8:28; மாற்கு 5:1)

லூக்கா 8:26 பின்பு கலிலேயாவுக்கு எதிரான கதரேனருடைய நாட்டில் சேர்ந்தார்கள்.

லூக்கா 8:27 அவர் கரையிலிறங்கின போது, நெடுநாளாய் பிசாசுகள் பிடித்தவனும், வஸ்திரந்தரியாதவனும், வீட்டில் தங்காமல் பிரேதக் கல்லறைகளிலே தங்கினவனுமாயிருந்த அந்தப் பட்டணத்து மனுஷன் ஒருவன் அவருக்கு எதிராக வந்தான்.

லூக்கா 8:28 அவன் இயேசுவைக் கண்டபோது கூக்குரலிட்டு, அவருக்கு முன்பாக விழுந்து: இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்று மகா சத்தத்தோடே சொன்னான்.

லூக்கா 8:29 அந்த அசுத்த ஆவி அவனை விட்டுப் போகும்படி இயேசு கட்டளையிட்ட படியினாலே அப்படிச் சொன்னான். அந்த அசுத்த ஆவி வெகுகாலமாய் அவனைப் பிடித்திருந்தது; அவன் சங்கிலி களினாலும் விலங்குகளினாலும் கட்டுண்டு காவல்பண்ணப்பட்டிருந்தும் கட்டுகளை முறித்துப் போட்டுப் பிசாசினால் வனாந்தரங்களுக்குத் துரத்தப் பட்டிருந்தான்.

லூக்கா 8:30 இயேசு அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார்; அதற்கு அவன்: லேகியோன் என்றான்; அநேகம் பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் அந்தப் பேரைச் சொன்னான்.

லூக்கா 8:31 தங்களைப் பாதாளத்திலே போகக் கட்டளையிடாதபடிக்கு அவைகள் அவரை வேண்டிக்கொண்டன.

8 அதிகாரம்

லூக்கா 8:32 அவ்விடத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தது. அந்தப் பன்றிகளுக்குள் போகும்படி தங்களுக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டன; அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார்.

லூக்கா 8:33 அப்படியே பிசாசுகள் அந்த மனுஷனைவிட்டு நீங்கி, பன்றிகளுக்குள் புகுந்தன; அப்பொழுது அந்தப் பன்றிக்கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, அமிழ்ந்து, மாண்டது

லூக்கா 8:34 அவைகளை மேய்த்தவர்கள் சம்பவித்ததைக் கண்டு, ஓடிப்போய், பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள்.

லூக்கா 8:35 அப்பொழுது, சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு, இயேசுவினிடத்தில் வந்து, பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் வஸ்திரந்தரித்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்திதெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள்.

லூக்கா 8:36 பிசாசுகள் பிடித்திருந்தவன் சொஸ்தமாக்கப் பட்டதைக் கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

லூக்கா 8:37 அப்பொழுது கதரேனருடைய சுற்றுப்புறத்திலுள்ள திரளான ஜனங்கள் எல்லாரும் மிகவும் பயமடைந்தபடியினாலே, தங்களை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள். அந்தப்படி அவர் படவில் ஏறி, திரும்பிப் போனார்.

லூக்கா 8:38 பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோடே கூட இருக்கும்படி உத்தரவு கேட்டான்.

லூக்கா 8:39 இயேசு அவனை நோக்கி: நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய், தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி என்று சொல்லி, அவனை அனுப்பிவிட்டார். அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் பட்டணத்தில் எங்கும் பிரசித்தப்படுத்தினான்.

"கதரேனர்" - (மத் 8:28-34)

"லேகியோன்" - அநேகம் பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் அந்தப் பேரைச் சொன்னான். லேகியோன் என்றால் 6,000 என்று பொருள். பிசாசுகள் ஒரு மனுஷனுக்குள் புகுந்து கொள்ளும் போது அவற்றிற்கு அதிகமான இடவசதி தேவைப்படாது.

பாதாளம் (deep) - **ἄβυσσος** - **Abussos** - 12

பெண்பால் பெயர்ச்சொல் - ஆழம் காண முடியாத பாதாளம் என்று ஏழு இடங்களிலும், ஆழம் என்று இரண்டு இடங்களிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. **(bottomless, unbounded)** (வெளி 20:3)

(அ)மரித்தவர்களின் இருப்பிடம் ரோம. 10:7

(ஆ)பிசாசுகளின் சிறைச்சாலை லூக். 8:31; வெளி. 20:3

"அவ்விடத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தது" - பன்றியின் மாம்சம் புசிப்பதற்குத் தடைபண்ணப் பட்டிருந்தது. (லேவி 11:7; உபா 14:8) ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ இந்தப் பிரமாணத்தை மீறி விட்டார்கள். (ஏசா 65:4; ஏசா 66:17) பலிகளிலும் பன்றிகளைப் பயன்படுத்தினார்கள். (ஏசா 66:3) பன்றிகள் அசுத்த மிருகங்களாகக் கூறப்பட்டிருக்கிறது. (நீதி 11:22; மத் 7:6; லூக்கா 15:15-16; 2பேதுரு 2:22)

"பன்றிகளுக்குள் புகுந்தன" - பிசாசுகள் ஒரு சரீரத்திலிருந்து இன்னொரு சரீரத்திற்குத் தங்களுடைய சொந்த விருப்பத்தின்படி போகக்கூடியவை. அவற்றை நாம் அதட்டி, அடக்கித் துரத்த வேண்டும். (மத் 12:43; மாற்கு 16:17)

"அவைகளை மேய்த்தவர்கள்" - பன்றிகளை மேய்ப்பது மிகவும் தாழ்மையான வேலை. (லூக்கா 15:15-16).

8 அதிகாரம்

"புத்திதெளிந்திருக்கிறான்" - பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் இப்போது வஸ்திரம் தரித்திருக்கிறான். புத்திதெளிந்திருக்கிறான். இயேசுவின் பாதத்தருகே அமர்ந்திருக்கிறான். மனுஷர் தங்களுடைய முயற்சியினால் இதையெல்லாம் செய்ய முடியாது. ஆனால் இயேசு கிறிஸ்து ஒரு நிமிஷ நேரத்திற்குள் இந்த மனுஷனுக்கு மறுவாழ்வு கொடுத்திருக்கிறார்.

இந்த மனுஷன் இதுவரையிலும் புத்திதெளிவில்லாதவனாக இருந்தான். சரீரப்பிரகாரமான பலவீனங்களினாலோ, பிசாசின் கிரியைகளினாலோ அல்லது மருத்துவ ரீதியான வேறு ஏதாவது காரணத்தினாலோ ஒருவனுக்கு புத்தி சுயாதீனமில்லாமல் போவதற்கு வாய்ப்புண்டு. பொதுவாக பிசாசுகளே இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்குக் காரணமாக இருக்கும்.

தெளிவாக இருக்கும் மனுஷருக்குள் பிசாசு புகுந்துவிட்டால், அவர்கள் தங்கள் புத்தியில் குழப்பம் அடைந்து விடுவார்கள். கர்த்தரிடத்தில்விசுவாசமாக இருந்து, இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் மனுஷரை வருத்தும் பிசாசுகளைத் துரத்த வேண்டும். விசுவாசிகளுக்குத் தேவன் பிசாசுகளின்மீது அதிகாரம் கொடுத்திருக்கிறார்.

"பிசாசுகள் பிடித்திருந்தவன் சொஸ்தமாக்கப் பட்டதைக் கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள்" - அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கு சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனுடைய முன்நிலைமையும் தெரியும். பின் நிலைமையும் தெரியும்.

"தங்களை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்துவிடம் அந்த ஊர் ஜனங்கள் தங்கள் ஊரைவிட்டுப் போகுமாறு கேட்டுக் கொள்கிறார்கள். இயேசு கிறிஸ்துவும் அந்த ஊரை விட்டுப் போய்விட்டார். அதன்பின்பு, அவர் அந்த ஊருக்குத் திரும்பி வரவில்லை. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்பாத ஜனங்களை அவர் ஒருபோதும் கட்டாயப் படுத்துவதில்லை. யாரையும் அவர் பலவந்தம் பண்ணுவதுமில்லை. மனுஷர் தாங்களாகவே தீர்மானம் பண்ணி, இயேசு கிறிஸ்துவிடம் வரவேண்டும். தம்மிடம் வருகிற யாரையும் அவர் புறம்பே தள்ளமாட்டார். இயேசு கிறிஸ்துவிடம் வந்து தங்களுடைய ஜீவனை ஒப்புக் கொடுக்காதவர்கள் நித்திய ஆக்கினையை அடைவார்கள். யாரை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தாரோ அந்த ஜனங்களே அவரை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கிறார்கள்.

"பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோடே கூட இருக்கும்படி உத்தரவு கேட்டான்" - பிசாசுகள் நீங்கிய மனுஷன் இயேசு கிறிஸ்துவைத் தம்மோடு இருக்குமாறு கேட்டுக் கொள்கிறான். ஆனால் புத்தி தெளிவாக இருக்கும் மனுஷரோ இயேசு கிறிஸ்துவைத் தங்களைவிட்டு போகும்படி வேண்டிக் கொள்கிறார்கள். (லூக்கா 8:37)

"இயேசு அவனை அனுப்பிவிட்டார்" - இந்த நிகழ்ச்சியில் இயேசு கிறிஸ்து மூன்று ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கிறார். அவையாவன:

1. பிசாசுகளின் விண்ணப்பம் (லூக்கா 8:32-33)

2. இரட்சிக்கப்படாத மனுஷரின் விண்ணப்பம் (லூக்கா 8:37)

3. புத்திதெளிந்தவனுடைய விண்ணப்பம் (லூக்கா 8:38-39)

புத்திதெளிந்தவன் இயேசுவோடு தான் இருக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினான். ஆனால் இயேசு கிறிஸ்து அவனுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் தன் வீட்டிற்குப்போய் தாம் அவனுக்குச் செய்தவைகளை அறிவிக்க வேண்டுமென்று இயேசு அவனை அனுப்பி விடுகிறார்.

இயேசுகிறிஸ்து செய்கிற நற்காரியங்களை இரட்சிக்கப்பட்டவர்கள் மற்ற ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும்.எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிப்பது தேவனுடைய சித்தம். அந்தச் சித்தத்திற்கு விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டும். நம்முடைய சுய சித்தத்தைத் தேவன் அங்கீகரிக்க வில்லையென்று வருத்தப்படக் கூடாது. கர்த்தருடைய சித்தம் நிறைவேற நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். இந்த வசனப்பகுதியில் பிசாசு பிடித்திருந்த மனுஷன் புத்திதெளிந்தவனாக இருக்கிறான். கிறிஸ்துவிடம் அவன் தன் விருப்பத்தைக் கூறுகிறான். ஆனால் கிறிஸ்து அவனுடைய விருப்பத்தை ஏற்றுக் கொள்ளாமல் தம் முடைய சித்தத்தைச் செய்யுமாறு கூறுகிறார். அந்த மனுஷன் இயேசுவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, புறப்பட்டுப் போனான்.

8 அதிகாரம்

நாம் ஜெபம்பண்ணும்போது தேவனுடைய சித்தம் என்னவென்று தெரிந்து ஜெபிக்க வேண்டும். (எபி 11:6)

"பட்டணம்" - லூக்கா 8:34-இல் கூறப் பட்டிருக்கிற பட்டணம். இவர்கள் இயேசுவை அங்கீகரிக்கவில்லை. (லூக்கா 8:37) இப்படிப்பட்ட காரியம் இக்காலத்திலும் நடைபெறுகிறது. ஒருசில ஜனங்கள் ஒரு ஊழியக்காரரைஏற்றுக் கொள்ளமாட்டார்கள். வேறு ஊழியக்காரரை ஏற்றுக் கொள் வார்கள். இதனால் ஊழியக்காரர்கள் தங்களுக்குள் பொறாமைப்படவேண்டியதில்லை. மனம் வருத்தப்பட வேண்டியதுமில்லை. ஊழியக்காரரை அவர்கள் ஏற்றுக்கொள்ளா விட்டாலும், தேவனுடைய சத்தியத்தை ஜனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். வேதவசனத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ள வில்லையென்றால் அவர்களுடைய வருங்காலத்திற்கு நம்பிக்கை இல்லை.

41. பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - யவீருவின் மகளை இயேசு உயிருடன் எழுப்புகிறார்-(மத் 9:18,மாற்கு 5:21)

லூக்கா 8:40 இயேசு திரும்பி வந்தபோது ஜனங்களெல்லாரும் அவருக்காகக் காத்திருந்தபடியால் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்.

லூக்கா 8:41 அப்பொழுது ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்த படியால்,

லூக்கா 8:42 தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டான். அவர் போகையில் திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள்.

லூக்கா 8:43 அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும் ஒருவனாலும் சொஸ்தமாக்கப் படாதிருந்த ஒரு ஸ்திரீ,

லூக்கா 8:44 அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடுநின்று போயிற்று.

லூக்கா 8:45 அப்பொழுது இயேசு: என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்ன போது, பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும்: ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே, என்னைத் தொட்டது யார் என்று எப்படி கேட்கிறீர் என்றார்கள்.

லூக்கா 8:46 அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்.

லூக்கா 8:47 அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லை யென்று கண்டு நடுங்கி வந்து, அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும்உடனே தான் சொஸ்தமானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள்.

லூக்கா 8:48 அவர் அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.

லூக்கா 8:49 அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், ஜெப ஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து, அவனை நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான்.

லூக்கா 8:50 இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்.

8 அதிகாரம்

லூக்கா 8:51 அவர் வீட்டில் வந்த போது, பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணின் தகப்பனையும் தாயையும் தவிர வேறொருவரையும் உள்ளே வரவொட்டாமல்,

லூக்கா 8:52 எல்லாரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங் கொண்டாடுகிறதைக் கண்டு: அழாதேயுங்கள், அவள் மரித்துப் போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார்.

லூக்கா 8:53 அவள் மரித்துப் போனாளென்று அவர்கள் அறிந்ததினால், அவரைப் பார்த்து நகைத்தார்கள்.

லூக்கா 8:54 எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து: பிள்ளையே எழுந்திரு என்றார்.

லூக்கா 8:55 அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது; உடனே அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகாரங் கொடுக்கக் கட்டளையிட்டார்.

லூக்கா 8:56 அவள் தாய் தகப்பன்மார் ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது நடந்ததை ஒருவருக்கும் சொல்லாமலிருக்கும் படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

"இயேசு திரும்பி வந்தார்" - இயேசு கடலின் மறுகரைக்குத் திரும்பி வருகிறார். அவர் அங்கிருந்துதான் புறப்பட்டார். (லூக்கா 8:22,26)."ஜனங்களெல்லாரும் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்" - ஒரு கூட்டம் ஜனத்தார் சத்தியத்தை ஏற்றுக் கொள்ள வில்லையென்றால் மற்றொரு கூட்டம் ஜனத்தார் சத்தியத்தைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் விசுவாசத்தோடு வேதவசனத்தைத் தொடர்ந்து பிரசங்கம் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும். (மத் 28:19-20; மாற்கு 16:15-20; அப் 1:8) இயேசு கிறிஸ்துவை ஒரு ஊரார் ஏற்றுக் கொள்ளவில்லை. மற்றொரு ஊராரோ அவர் எப்போது வருவார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"ஜனங்களெல்லாரும் அவருக்காகக் காத்திருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்காகவும், தங்கள் சரீரத்திலும், ஆவியிலும், ஆத்துமாவிலும் கிறிஸ்துவின் மூலமாக ஆசீர்வாதம் பெறுவதற்காகவும் ஜனங்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்குச் சத்திய வசனம் போதிக்கப்படும்போது அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது புறஜாதியார் இரட்சிக்கப்படும் காலம். ஆகையினால் விசுவாசப்பிள்ளைகள் பின்வாங்கிப்போய் விடாதவாறு எச்சரிப்போடு இருக்க வேண்டும். (ரோமர் 2:12-16).

"யவீரு" (Jairus) - இஸ்ரவேலருடைய பெயர். யாவீர் (Jair) . (எண் 32:41; யோசு 13:30; நியா 10:3).

"ஜெப ஆலயத்தலைவன்" - ஜெபாலயத்திலுள்ள மூப்பர்களுக்குத் தலைவன். (மத் 9:18-33; மாற்கு 5:21-43)

"பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்த ஸ்திரீ" - (மத் 9:20-22; மாற்கு 5:25-34)

"பெரும்பாடு" (issue of blood) (லேவி 15:19; மத் 9:20; மாற்கு 5:25)

நின்று போயிற்று (stanched) - ἵστημι - histeemi - 2476

வினைச்சொல் - நில், நிறுத்து, நிலவரப்படுத்து, உடன்படு, சுமத்து (to stop, stand still)

"என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்" - (லூக்கா 6:19)

"அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்க வில்லையென்று கண்டு நடுங்கி வந்து, அவர் முன்பாக விழுந்தாள்" - பன்னிரெண்டு வருஷமாக இந்த ஸ்திரீக்கு உதிரப்போக்கு இருந்தது. அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். பன்னிரெண்டு வருஷமாக மருத்துவச்சிகிச்சை பெற்றாள். அது அவளுக்கு எந்த பலனும் தரவில்லை. இப்பொழுது அவள் இயேசுவைத் தொட்டவுடன் அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று. அதனால் அவள் ஆச்சரியமடைந்தாள். அதே வேளையில், பயத்தினால் நடுங்கினாள்.

8 அதிகாரம்

"மகளே, திடன்கொள்" - அந்த ஸ்திரீ தவறான காரியம் ஒன்றும் செய்யவில்லை. ஆகையினால் பயப்படவேண்டாம் என்று அவளுக்கு ஆறுதலாகக் கூறுகிறார்.

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" - இந்த ஸ்திரீயிடம் விசுவாசம் இருந்தது. இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டால் தான் குணமடையலாம் என்னும் விசுவாசம் இருந்தது. அந்த விசுவாசத்தின் மூலமாக குணமடைகிறாள். இயேசுகிறிஸ்துவிடமிருந்து வல்லமை புறப்பட்டது என்றுதான் வாசிக்கிறோம். இயேசுவிடமிருந்து விசுவாசம் வெளிப்பட்டது என்று வாசிக்கவில்லை. ஸ்திரீயிடமிருந்துதான் விசுவாசம் வெளிப்பட்டது. இக்காலத்தில் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்போது ஜெபிக்கும் ஊழியக்காரர் வரம் பெற்றவரா, விசுவாசமுள்ளவரா என்று அவருடைய விசுவாசத்தை நாம் பார்க்கிறோம். நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தத் தவறி விடுகிறோம். ஆகையினால்தான் பலருடைய வியாதி குணமாவதில்லை. நம்முடைய வியாதி குணமடைய வேண்டுமென்று நாம் விசுவாசிக்க வேண்டும்.

நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது, தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவோம். (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 11:22-25; யோவான் 15:4; எபி 11:6; யாக் 1:5-8) விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினாலும், (ரோமர் 10:17) பரிசுத்த ஆவியானாலும் வரும். (1கொரி 12:4-11) விசுவாசிக்கிறவனுக்கு அக்காலத்தில் எல்லாம் கூடியது. அதுபோலவே இக்காலத் திலும் கூடும். (மத் 17:20; மாற்கு 9:23)

"உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம்" - அந்தக் குழந்தையின் தந்தைக்குப் பெரிய அதிர்ச்சி தரக்கூடிய வாக்கியம். யவீருவின் நிலைமை தடுமாறிற்று. அவனுடைய விசுவாசம் தளர்ந்து போனது. மகள் மரித்துப்போனாள். இனிமேல் விசுவாசித்து, என்ன பிரயோஜனம் என்று நினைத்திருப்பான். ஆனால் இயேசுவின் விசுவாசம் பெரியது. எந்தச் சூழ்நிலையிலும் இயேசுவால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை.

"பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்" - தன் மகள் மரித்துப் போன செய்தியைக் கேட்டு, யவீரு கலங்கிக் கொண்டிருக்கிறான். அவனிடம் இயேசு விசுவாசமுள்ளவனாக இரு என்று கூறுகிறார். இயேசு நம்மிடம் எதிர்பார்க்கும் காரியம் இதுதான். நாம் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; லூக்கா 15:7, (மாற்கு 11:22-25; எபி 11:6; யாக் 1:5-8))

"பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும்" - இம்மூவரும் இயேசு கிறிஸ்துவோடு பல சூழ்நிலைகளில் கூடவே இருந்தார்கள். (மாற்கு 9:2; மாற்கு 14:33; லூக்கா 8:51)

"எல்லாரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங்கொண்டாடுகிறதைக் கண்டார்" - இவர்கள் துக்க வீட்டில் ஒப்பாரி பாடுவதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள். (மத் 9:23; எரே 9:17-18)

"அவள் மரித்துப்போனாளென்று அவர்கள் அறிந்திருந்தார்கள்" - அவள் மரித்துப் போனாள் என்று அவர்களுக்குத் தெரிந்ததுபோலவே, இயேசு கிறிஸ்துவிற்கும் தெரியும். ஆனால் அவள் மரித்தவளாகவே இருக்கப்போவதில்லை உயிரோடு எழும்பப் போகிறாள் என்பது இயேசுவிற்கு மட்டுமே தெரியும்.

"எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து: பிள்ளையே எழுந்திரு என்றார்" - (மாற்கு 5:40)

"அவள் உயிர் திரும்ப வந்தது" - அவள் மரித்துப் போனாள். அவளுடைய ஆவி அவளை விட்டுப் பிரிந்து போய்விட்டது. இப்பொழுது அவளுடைய உயிர் அதாவது அவளுடைய ஆவி திரும்பவும் அவளுடைய சரீரத்திற்குள் வருகிறது. (யாக் 2:26)

"அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார்" - அந்தச் சிறுமி பசியாக இருப்பதை இயேசு உணர்ந்தார். ஆகையினால் அவளுக்கு ஆகாரம் கொடுக்குமாறு இயேசு கட்டளையிடுகிறார். பொதுவாக வியாதியாக இருக்கிறவர்களுக்குச் சரியாக ஆகாரம் கொடுக்கமாட்டார்கள். அவர்களாலும், சரியாகச் சாப்பிடமுடியாது. ஆனால் இந்தச் சிறுமிக்கு இப்பொழுது ஒரு பிரச்சனையும் இல்லை. ஆகையினால் அவளுக்கு ஆகாரம் கொடுக்குமாறு இயேசு கூறுகிறார்.

8 அதிகாரம்

42. இயேசு பன்னிரெண்டு பேரை ஊழியம் செய்வதற்கு அபிஷேகம் பண்ணுகிறார் - (6:12; மத் 10:1; மாற்கு 3:13; 6:7-13)

லூக்கா 9:1 அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதி யுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து,

லூக்கா 9:2 தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்.

லூக்கா 9:3 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக்கொண்டு போகவேண்டாம்; இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்.

லூக்கா 9:4 எந்த வீட்டிலே பிரவேசிக்கிறீர்களோ, அங்கே தங்கி, அங்கிருந்து புறப் படுங்கள்.

லூக்கா 9:5 உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எவர்களோ அவர்களுடைய ஊரைவிட்டு நீங்கள் புறப்படும்போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள் என்றார்.

லூக்கா 9:6 அவர்கள் புறப்பட்டுபோய், கிராமங்கள்தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளி களைக் குணமாக்கினார்கள்.

"அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்தார்" - லூக்கா 6:12-16 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை அப்போஸ்தலர்களாக பிரதிஷ்டை பண்ணுவதற்கு அழைத்தார். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியம் தம்முடைய சீஷர்கள் தமது ஊழியத்தைச் செய்வதற்கு வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அழைக்கப்படும் அழைப்பாகும். (மத் 10:1-8)

"சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்" - இயேசு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் என்று வாசிக்கிறோம். அதாவது இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கொடுக்கும் வரையிலும் அவர்களுக்கு வல்லமையுமில்லை. அதிகாரமுமில்லை. வியாதிகளை அவர்களால் குணப்படுத்தவும் முடியாது. ஆனால் இப்போதோ இயேசு கிறிஸ்துவிடமிருந்து வல்லமையையும், அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள். இப்போது இவர்களால் வியாதியஸ்தர்களைக் குணமாக்க முடியும். (மாற்கு 6:7-13; லூக்கா 9:6)

"சகல பிசாசுகளையும் துரத்தும், வல்லமையும் அதிகாரமும்" - (மத் 10:1-8; லூக்கா 10:1-20)

"வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக் கொண்டு போகவேண்டாம்; இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்" - (மத் 10:9-15;லூக்கா 10:3-12)

"அவர்கள் புறப்பட்டுபோய், கிராமங்கள் தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்" - இதுதான் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற ஊழியம்.

1. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். (மாற்கு 16:15)

2. சுவிசேஷ வசனத்தை உறுதிபண்ண வேண்டும். (மாற்கு 6:30; மத் 28:20, அப் 1:1-8)

43.ஏரோதுவின் கலங்கிய மனச்சாட்சி - யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுகிறான் - (மத் 14:1; மாற்கு 6:14)

லூக்கா 9:7 அப்பொழுது காற்பங்கு தேசாதி பதியாகிய ஏரோது அவரால் செய்யப்பட்ட யாவையும் கேள்விப் பட்டதுமன்றி; சிலர் யோவான் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்றும்,

9 அதிகாரம்

42. இயேசு பன்னிரெண்டு பேரை ஊழியம் செய்வதற்கு அபிஷேகம் பண்ணுகிறார் - (6:12; மத் 10:1; மாற்கு 3:13; 6:7-13)

லூக்கா 9:1 அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதி யுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து,

லூக்கா 9:2 தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்.

லூக்கா 9:3 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக்கொண்டு போகவேண்டாம்; இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்.

லூக்கா 9:4 எந்த வீட்டிலே பிரவேசிக்கிறீர் களோ, அங்கே தங்கி, அங்கிருந்து புறப் படுங்கள்.

லூக்கா 9:5 உங்களை ஏற்றுக்கொள்ள தாவர்கள் எவர்களோ அவர்களுடைய ஊரைவிட்டு நீங்கள் புறப்படும்போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள் என்றார்.

லூக்கா 9:6 அவர்கள் புறப்பட்டுபோய், கிராமங்கள்தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளி களைக் குணமாக்கினார்கள்.

"அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்தார்" - லூக்கா 6:12-16 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை அப்போஸ்தலர்களாக பிரதிஷ்டை பண்ணுவதற்கு அழைத்தார். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியம் தம்முடைய சீஷர்கள் தமது ஊழியத்தைச் செய்வதற்கு வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அழைக்கப்படும் அழைப்பாகும். (மத் 10:1-8)

"சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்" - இயேசு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் என்று வாசிக்கிறோம். அதாவது இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கொடுக்கும் வரையிலும் அவர்களுக்கு வல்லமையுமில்லை. அதிகாரமுமில்லை. வியாதிகளை அவர்களால் குணப்படுத்தவும் முடியாது. ஆனால் இப்போதோ இயேசு கிறிஸ்துவிடமிருந்து வல்லமையையும், அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள். இப்போது இவர்களால் வியாதியஸ்தர்களைக் குணமாக்க முடியும். (மாற்கு 6:7-13; லூக்கா 9:6)

"சகல பிசாசுகளையும் துரத்தும், வல்லமையும் அதிகாரமும்" - (மத் 10:1-8; லூக்கா 10:1-20)

"வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக் கொண்டு போகவேண்டாம்; இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்" - (மத் 10:9-15;லூக்கா 10:3-12)

"அவர்கள் புறப்பட்டுபோய், கிராமங்கள் தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்" - இதுதான் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற ஊழியம்.

1. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். (மாற்கு 16:15)

2. சுவிசேஷ வசனத்தை உறுதிபண்ண வேண்டும். (மாற்கு 6:30; மத் 28:20, அப் 1:1-8)

43.ஏரோதுவின் கலங்கிய மனச்சாட்சி - யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுகிறான் - (மத் 14:1; மாற்கு 6:14)

லூக்கா 9:7 அப்பொழுது காற்பங்கு தேசாதி பதியாகிய ஏரோது அவரால் செய்யப்பட்ட யாவையும் கேள்விப் பட்டதுமன்றி; சிலர் யோவான் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்றும்,

9 அதிகாரம்

லூக்கா 9:8 சிலர் எலியா தோன்றினான் என்றும், வேறு சிலர் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிர்த்தெழுந்தான் என்றும் சொல்லிக் கொண்டபடியால், கலக்கமடைந்து:

லூக்கா 9:9 யோவானை நான் சிரச்சேதம்பண்ணினேன், இவன் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறான் என்று கேள்விப்படுகிறேனே! இவன் யார்? என்று ஏரோது சொல்லி, அவரைப் பார்க்க விரும்பினான்.

"ஏரோது" **(Herod)** - *(மத் 2:3)*

"காற்பங்கு" **(tetrarch)** - *(மத் 14:1)*

கலக்கமடைந்தான் **(perplexed)** - **διαπορέω** - **diaporeoo** - 1280

வினைச்சொல்-கலக்கமடை, சந்தேகப்படு **(entirely at a loss with one's self)** *(லூக்கா 9:7 ;லூக்கா 24:4; அப் 5:24)*

"எலியா" **(Elias, Elijah)** - *(1இராஜா 17 - 2இராஜா 2)*. ஒருசிலர் இயேசு கிறிஸ்துவை எலியா என்று நினைத்தார்கள். இதற்கான காரணங்கள்.

1. மேசியா வருவதற்கு முன்பாக எலியா வருவார் என்று மல்கியா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார். *(லூக்கா 4:5-6)*

2. எலியாவும் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார்.

"பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிர்த்தெழுந்தான்" - தீர்க்கதரிசிகளுடைய காலங்களுக்குப் பின்பு, அவர்களைப் பற்றியும், அவர்களுடைய கிரியைகளைப் பற்றியும் பல விதமான கதைகளைக் கூறினார்கள். அவற்றில் ஒன்றுதான் இது. அந்தத் தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிரோடு எழும்பிவந்திருக்கலாம்என்று நினைத்தார்கள்.

"இவன் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறான் என்று கேள்விப்படுகிறேனே! இவன் யார்?" - ஏரோது யோவானைச் சிரச்சேதம் பண்ணிவிட்டான். அவன் செய்த பாவம் அவனுடைய மனச்சாட்சியைக் குற்றப்படுத்தியது. இப்போது இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஏரோது கேள்விப்படுகிறான். *(லூக்கா 8:2-3)* இயேசுவின் கீர்த்தி அந்தத் தேசமெங்கும் பரவியிருந்தது. *(லூக்கா 4:14,37)*.

44.பன்னிரெண்டு சீஷர்களும் திரும்பி வருகிறார்கள் - *(மாற்கு 6:30)*

லூக்கா 9:10 அப்போஸ்தலர் திரும்பிவந்து, தாங்கள் செய்த யாவையும் அவருக்கு விவரித்துச் சொன்னார்கள். அப்பொழுது அவர் அவர்களைக் கூட்டிக்கொண்டு, தனித்திருக்கும்படி பெத்சாயிதா என்னும் பட்டணத்தைச் சேர்ந்த வனாந்தரமான ஒரு இடத்துக்குப் போனார்.

"தாங்கள் செய்த யாவையும்" -*(மத் 10:1-8. மாற்கு 6:7-13; லூக்கா 9:6)*

"தனித்திருக்கும்படி வனாந்தரமான ஒரு இடத்துக்குப் போனார்" - இவ்வாறு வனாந்தரமான இடத்தில் இயேசு கிறிஸ்து ஓய்வு எடுப்பதற்காகவும், தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ணுவதற்காகவும் போவது வழக்கம்.

"பெத்சாயிதா" **(Bethsaida)** - கலிலேயா கடலுக்கு அருகில் உள்ள பட்டணமும், அதைச் சார்ந்த வனாந்தரமான பகுதியும். இங்கு பல அப்போஸ்தலர்கள் வசித்து வந்தார்கள். *(மாற்கு 6:32,45; மாற்கு 8:22; யோவான் 1:44; யோவான் 12:21)* இந்தப் பட்டணத்திற்கு எதிராக சாபம் கூறப்பட்டது. *(மத் 11:21; மத் 14:13; லூக்கா 9:10; லூக்கா 10:13)* பெத்சாயிதா என்னும் பெயரில் இரண்டு பட்டணங்கள் இருந்தன. ஒரு பட்டணம் கலிலேயாவின் மேற்குக்கரையில் இருந்தது. மற்றொரு பட்டணம் யோர்தானுக்குக் கிழக்கிலும், கலிலேயாவிற்கு வடகிழக்கிலும் இருந்தது.

45. திரளான ஜனங்களை இயேசு சொஸ்தப்படுத்துகிறார் - *(மாற்கு 14:13)*

லூக்கா 9:11 ஜனங்கள் அதை அறிந்து, அவர் பின்னே போனார்கள்; அவர்களை அவர் ஏற்றுக்கொண்டு, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அவர்களுடனே பேசி, சொஸ்தமடைய வேண்டு மென்றிருந்தவர்களைச் சொஸ்தப் படுத்தினார்.

9 அதிகாரம்

"சொஸ்தமடையவேண்டுமென்றிருந்தவர்களைச் சொஸ்தப்படுத்தினார்" - (மத் 13:58)

46. ஐயாயிரம் பேரை இயேசு அற்புதமாக போஷிக்கிறார் - (மத் 14:15,மாற்கு 6:32,யோவான் 6:1)

லூக்கா 9:12 சாயங்காலமாகிறபோது, பன்னிருவரும் சேர்ந்துவந்து, அவரை நோக்கி; நாம் இருக்கிற இடம் வனாந்தரமாயிருக்கிறது, சுற்றியிருக்கிற ஊர்களிலும் கிராமங்களிலும் ஜனங்கள் போய்த் தங்கி, போஜனபதார்த்தங்களைச் சம்பாதித்துக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள்.

லூக்கா 9:13 அவர் அவர்களை நோக்கி: நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள்: எங்களிடத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமாத்திரமுண்டு, இந்த ஜனங்களெல்லாருக்கும் போஜனங் கொடுக்கவேண்டியதானால், நாங்கள் போய் வாங்கிக்கொண்டுவர வேண்டுமே என்றார்கள்.

லூக்கா 9:14 ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர் இருந்தார்கள். அவர்களைப் பந்திக்கு ஐம்பது ஐம்பதுபேராக உட்காரும்படி சொல்லுங்கள் என்று தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார்.

லூக்கா 9:15 அவர்கள் அந்தப்படியே எல்லாரையும் உட்காரும்படி செய்தார்கள்.

லூக்கா 9:16 அப்பொழுது அவர் அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, அவைகளை ஆசீர்வதித்து, பிட்டு, ஜனங்கள்முன் வைக்கும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார்.

லூக்கா 9:17 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகள் பன்னிரண்டு கூடை நிறைய எடுக்கப்பட்டது.

"போஜனபதார்த்தங்களைச் சம்பாதித்துக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட வேண்டும்"-(லூக்கா 9:12-17, மத் 14:16-20).

47. பேதுருவின் அறிக்கை - (மத் 16:13; மாற்கு 8:27; யோவான் 6:67)

லூக்கா 9:18 பின்பு அவர் தமது சீஷரோடே கூடத் தனித்து ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கையில், அவர்களை நோக்கி; ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

லூக்கா 9:19 அதற்கு அவர்கள்; சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் உயிர்த்தெழுந்தார் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

லூக்கா 9:20 அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்; பேதுரு பிரதியுத்தரமாக: நீர் தேவனுடைய கிறிஸ்து என்றான்.

"ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்" - லூக்கா 9:7-9; மத் 16:13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் விடைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும். ஜனங்கள் தம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று இயேசு கிறிஸ்து பொது ஜனங்களின் கருத்தை அறிய விரும்புகிறார். ஒருசிலர் பொது ஜனங்களின் கருத்துக்களுக்குப் பயப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்.

1. குருடனுடைய பெற்றோர். (யோவான் 9:22)
2. யூதமார்க்கத்துத் தலைவர்கள் (யோவான் 12:42-43)
3. பிரதான ஆசாரியர் (மத் 21:26)
4. யூதமார்க்கத்து மூப்பர் (அப் 4:21; அப் 5:26)
5. பவுல் (அப் 16:3)
6. சபைத்தலைவர்கள் (அப் 21:18-26)
7. யூதமார்க்கத்தமைந்த கிறிஸ்தவர்கள் (கலா 6:12)

9 அதிகாரம்

8. பேதுருவும், பர்னபாவும் (கலா 2:12)

9. சவுல் ராஜா (1சாமு 15:24)

10. சிதேக்கியா (எரே 38:19-27)

11. ஆபிரகாம் (ஆதி 12, ஆதி 20)

12. ஈசாக்கு (ஆதி 26:7-11)

பொதுஜனங்களைப் பிரியப் படுத்தியவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. ஏரோது (அப் 12:1-3; மாற்கு 6:26)

2. பிலாத்து (மாற்கு 15:15)

3. பேலிக்ஸ் (அப் 24:27)

4. பெஸ்து (அப் 25:9)

5. தாவீது (2நாளா 20:21)

"தேவனுடைய கிறிஸ்து" - தேவனிடம் நமது ஜீவனை முழு இருதயத்தோடு அர்ப்பணித்து "நீர் தேவனுடைய கிறிஸ்து" என்று நமது முழு மனதோடு அறிக்கையிடும்போது நாம் புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம். (1யோவான் 5:1; ரோமர் 10:9-10)

48. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முற் குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

லூக்கா 9:21 அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும்சொல்லாதபடிக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்.

லூக்கா 9:22 மேலும் மனுஷகுமாரன் பல பாடுகள் படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும், மூன்றாம்நாளில் உயிர்த் தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார்.

"அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும்சொல்லாதபடிக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்" - தாமே கிறிஸ்து என்பதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று கட்டளையிடுகிறார். (மத் 16:20) முடிந்த வரையிலும், பிரச்சனை இல்லாமல் சமாதானமாகத் தமது ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். வேளை வரும்போது எதுவும் மறைவாக இருக்காது. எல்லாம் வெளியரங்கமாகும். (யோவான் 8:40,மத் 8:4)

"அதை" - தாம் மேசியா என்று தம்மைப் பற்றி வெளிப்படுத்திய சத்தியம். (லூக்கா 9:20; மத் 16:20).

தீர்க்கதரிசன எண் - 20

"மனுஷகுமாரன் பல பாடுகள் படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப் படவும், கொல்லப்படவும், மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும்" - (லூக்கா 9:22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இந்தத் தீர்க்கதரிசனத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சத்தியங்கள்.

1. "பல பாடுகள் படவும்" - இயேசு தமது பாடுகளைக் குறித்து, முதன்முறையாக வெளிப்படுத்துகிறார். எங்கெல்லாம் தமது பாடுகளைக் குறித்து வெளிப்படுத்துகிறாரோ அங்கெல்லாம் தமது மகிமையைக் குறித்தும் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியிருக்கிறார்.

2. 'மூன்றாம்நாள்" - இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு தொடர்புபடுத்தி, இந்த வாக்கியம் 11 இடங்களில்பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 16:21; மத் 17:23; மத் 20:19; மாற்கு 9:31,மாற்கு 10:34; லூக்கா 9:22; லூக்கா 18:33; லூக்கா 24:7,46;அப் 10:40; 1கொரி 15:4) "மூன்று நாளைக்குப் பின்பு" என்று மத் 12:40, மாற்கு 8:31 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். மூன்றுநாள் என்பது மூன்று முழு இரவுகளையும், மூன்று முழுப் பகல்களையும் குறிக்கும்.

9 அதிகாரம்

49. சீஷத்துவத்திற்குப் பரீட்ஷை - ஆத்துமாவின் மதிப்பு - (மத் 8:18; 10:37; 16:24; மாற்கு 8:35)

லூக்கா 9:23 பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

லூக்கா 9:24 தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன்ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்.

லூக்கா 9:25 மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

லூக்கா 9:26 என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்.

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" - இயேசு கிறிஸ்துவை நாம் பின்பற்றும்போது ஏனோதானோ என்று பின்பற்ற முடியாது. அவர் கூறும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்ற வேண்டும்.

இரட்சிக்கப்படுவதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. கிறிஸ்துவைப் பின்பற்ற மனதுடையவர்களாக இருக்க வேண்டும். (யோவான் 7:17; வெளி 22:17)
2. தன்னைத்தான் வெறுக்க வேண்டும். (மாற்கு 8:34)
3. அனுதினமும் தன் சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டும். எப்போதாவது நமக்கு விருப்பமான நேரத்தில் நமக்குத் தோதான நேரத்தில், நமக்கு ஆதாயம் வரும் நேரத்தில் இயேசுவைப் பின்பற்றலாம் என்று நினைக்கக்கூடாது. (மாற்கு 8:34)
4. முடிவு வரையிலும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். ஒரு சில காலம் மட்டும் இயேசுவைப் பின்பற்றி விட்டு, பின்பு பின்வாங்கிப்போய் விடலாம் என்று நினைக்கக்கூடாது. (லூக்கா 8:13; எபி 3:6-14).
5. தன் ஜீவனை இரட்சிக்கக்கூடாது. இழந்துபோக அனுமதிக்க வேண்டும். (லூக்கா 9:24; மாற்கு 8:35)
6. உலக சிநேகிதத்திலிருந்து விடுபட்டு ஜீவிக்க வேண்டும். (லூக்கா 9:25; யோவான் 15:18-19;யோவான் 17:14-16; ரோமர் 12:1-2; யாக் 4:4; 1யோவான் 2:15-17).
7. கிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய வார்த்தையைக் குறித்தும் வெட்கப்படக் கூடாது. (லூக்கா 9:26; மாற்கு 8:38).

"தன்னைத்தான் வெறுக்க வேண்டும்" - புதிய ஏற்பாட்டில் பல வசனங்களில் நம்மை நாமே வெறுக்க வேண்டும் என்று நமக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத் 5:29-30; மத் 10:37-39; மத் 16:24-25; மத் 18:8-9; மாற்கு 8:34; லூக்கா 9:23; லூக்கா 14:26-33; ரோமர் 6; ரோமர் 8:1-13; ரோமர் 13:14; ரோமர் 14:19-22;ரோமர் 15:1-5; 1கொரி 9:27;1கொரி 10:23-24;கலா 5:16-26; பிலி 2:1-11; தீத்து 2:12; எபி 13:13; 1பேதுரு 2:11-16; 1பேதுரு 4:1-2).

தன்னைத்தான் வெறுத்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. ஆபிரகாம் (ஆதி 13:9; ஆதி 22:1-12)
2. மோசே (எண் 16:15; எபி 11:25)
3. சாமுவேல் (1சாமு 12:3-4)
4. சாரிபாத் ஊரிலுள்ள விதவை (1இராஜா 17:8-16)

9 அதிகாரம்

5. எஸ்தர் (எஸ் 4:16)

6. ரெகாபியர் (எரே 35:6-7)

7. அப்போஸ்தலர்கள் (மத் 4:20,22; மத் 9:9; மத் 19:27; அப் 20:24; பிலி 3:7-8)

தீர்க்கதரிசன எண் - 21

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன்ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்..............." (லூக்கா 9:24-27) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 9:24-25 ஆகிய வசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. லூக்கா 9:26 ஆவது வசனம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும், அவருடைய ஆளுகை யின்போதும் நிறைவேறும். லூக்கா 9:27 ஆவது வசனம் இயேசு கிறிஸ்து மறுரூபமானபோது நிறைவேறிற்று (லூக்கா 9:27-36). (மாற்கு 8:35)

"என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப் படுகிறானோ, அவனைக்குறித்து......மனுஷ குமாரனும் வெட்கப்படுவார்" - (மாற்கு 8:38)

"மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வருவார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வசனம் குறிக்கிறது. (மத் 16:27; மத் 24:29-31; மத் 25:31-46; வெளி 19; சக 14; 2தெச 1:7-10; 2தெச 2:8-12; யூதா 1:14)

50. மறுரூபமாதல் - வரப்போகிற இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் - (மத் 16:28-17:1; மாற்கு 9:1; 2பேதுரு 1:16)

லூக்கா 9:27 இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யத்தைக் காணும்முன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 9:28 இந்த வார்த்தைகளை அவர் சொல்லி ஏறக்குறைய எட்டு நாளானபின்பு, அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக் கொண்டு, ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார்.

லூக்கா 9:29 அவர் ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது.

லூக்கா 9:30 அன்றியும் மோசே எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே சம்பாஷணை பண்ணி,

லூக்கா 9:31 அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக்குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

லூக்கா 9:32 பேதுருவும் அவனோடிருந் தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். ஆகிலும் அவர்கள் விழித்து அவருடைய மகிமையையும் அவரோடே நின்ற அவ்விரண்டுபேரையும் கண்டார்கள்.

லூக்கா 9:33 அவ்விருவரும் அவரை விட்டுப் பிரிந்துபோகையில், பேதுரு இயேசுவை நோக்கி: ஐயரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்கு ஒருகூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று, தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான்.

லூக்கா 9:34 இப்படி அவன் பேசுகையில், ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட்டது; அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள்.

லூக்கா 9:35 அப்பொழுது: இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலி ருந்து ஒரு சத்த முண்டாயிற்று.

9 அதிகாரம்

லூக்கா 9:36 அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார். தாங்கள் கண்டவைகளில் ஒன்றையும் அவர்கள் அந்நாட்களில் ஒருவருக்கும் சொல்லாமல் அடக்கி வைத்திருந்தார்கள்.

"தேவனுடைய ராஜ்யத்தைக் காணும்முன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை" - இந்த வாக்கியம் நிறைவேறிற்று. எட்டு நாட்களுக்குப் பின்பு, இயேசு கிறிஸ்து அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். தேவனுடைய ராஜ்யத்தில் அவர் எப்படி இருப்பாரோ அப்படி அவர்களுக்கு தரிசனம் ஆனார்.(லூக்கா 9:28-35; மத் 16:28-17:8; மாற்கு 9:1-8; 2பேதுரு 1:16-18)

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

"ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார்" - இயேசு கிறிஸ்து ஜெபம் பண்ணுவதற்காகவும் ஏறினார். அதேசமயத்தில் லூக்கா 9:27 ஆவது வசனத்தில் கூறப் பட்டிருக்கிற தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்காகவும் அங்குப் போனார். (லூக்கா 3:21)

மற்ற சுவிசேஷங்களில் எழுதப்பட்டிராத சில விசேஷித்த காரியங்களை லூக்கா தான் எழுதிய சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார்.

1. ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார்

2. ஜெபம்பண்ணுகிறபோது இயேசு மறுரூபமானார்.

3. இயேசு கிறிஸ்து எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்து மோசேயும், எலியாவும் இயேசுவோடு பேசிக் கொண்டிருந்தார்கள். (மத் 17:1-9)

"எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணம்" - இயேசு கிறிஸ்துவின் மரணம் எதிர்பாராத காரியம் அல்ல. இயேசுவிற்குத் தெரியாத காரியம் ஒன்றுமில்லை. தமது மரணத்தைத் தாமே நிறைவேற்றப் போகிறார். (யோவான் 10:18) சாத்தானை ஜெயிக்கிறதற்காகவும், மனுஷரை மீட்பதற்காகவும் இயேசு கிறிஸ்து தமது ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுக்கப் போகிறார். (கொலோ 2:14-17;1பேதுரு 2:24; எபி 2:14-15)

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" - (மத் 3:17; மத் 17:5; மாற்கு 9:7; யோவான் 12:28)

"அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரேகாணப்பட்டார்"-இயேசுகிறிஸ்துஇந்தப் பூமியில் மனுஷராக இருந்த காலத்தில் பிதாவும், பரிசுத்த ஆவியானவரும் எத்தனை முறை வானத்திலிருந்து இறங்கி வந்து, குமாரனோடு ஐக்கியமாக இருந்தார்கள் என்று தெரியவில்லை. (உபா 29:29).

51. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வவல்லமையுள்ள கிறிஸ்துவும் - (மத் 17:14; மாற்கு 9:14)

லூக்கா 9:37 மறுநாளில் அவர்கள் மலையிருந்திறங்கினபோது, திரளான ஜனங்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்தார்கள்.

லூக்கா 9:38 அவர்களில் ஒருவன் சத்தமிட்டு: போதகரே, என் மகனைக் கடாட்சித்தருள வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன், அவன் எனக்கு ஒரே பிள்ளையாயிருக்கிறான்.

லூக்கா 9:39 ஒரு ஆவி அவனைப் பிடிக்கிறது, அப்பொழுது அலறுகிறான், அது அவனை நுரைதள்ள அலைக்கழித்து, அவனைக் கசக்கின பின்பும் அவனை விட்டு நீங்குவது அரிதாயிருக்கிறது.

லூக்கா 9:40 அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரை வேண்டிக் கொண்டேன், அவர்களால் கூடாமற் போயிற்று என்றான். லூக்கா 9:41 இயேசு பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடிருந்து, உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்? உன் மகனை இங்கே கொண்டுவா என்றார்.

9 அதிகாரம்

லூக்கா 9:42 அவன் சமீபத்துவருகையில், பிசாசு அவனைக் கீழே தள்ளி,அலைக்கழித்தது. இயேசு அந்த அசுத்தஆவியை அதட்டி, இளைஞனைக் குணமாக்கி, அவன் தகப்பனிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தார்.

லூக்கா 9:43 அப்பொழுது எல்லாரும் தேவனுடைய மகத்துவத்தைக் குறித்துப் பிரமித்தார்கள். இயேசு செய்த யாவையுங் குறித்து அனைவரும் ஆச்சரியப் படுகையில் அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி:

"போதகரே" - கிரேக்கமொழியில் எட்டு வார்த்தைகள் போதகர் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:

1. ஆண்டவர் **(Lord) - κύριος - kyrios** - 2962

   ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர் - கர்த்தர் **"Lord"** 721 தடவைகள், ஆண்டவர் **"master"** 11 தடவைகள், ஐயா **"sir"** 12 தடவைகள், உடையவர் **"owner"** (லூக்கா 19:33). இந்தச் சொல் தேவனையும், கிறிஸ்துவையும், மனுஷரையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

2. ஆண்டவர் **(Lord) - δεσπότης - despotees** - 1203

   ஆண்பால் பெயர்ச்சொல் - ஆண்டவர், கர்த்தர், எஜமான் - ஆண்டவர் **"Lord"** 5 தடவைகள், எஜமான் **"master"** 5 தடவைகள் (நான்கு இடங்களில் மனுஷ எஜமானனையும், ஒரு இடத்தில் தேவனையும் குறிக்கும்).

3. வீட்டெஜமான் **(master of the house) - οἰκοδεσπότης - oikodespotees** - 3617

   ஆண்பால் பெயர்ச்சொல் - வீட்டெஜமான் **(master of the house)** -12 இடங்களில் கிறிஸ்துவையும், மனுஷரையும் குறிப்பதற்கு இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

4. ஐயர் **(master) - ἐπιστάτης - epistatees** - 1988

   ஆண்பால் பெயர்ச்சொல் - ஐயர் **(commander, overseer)** - 7 இடங்களில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவை அனைத்துமே கிறிஸ்துவைக் குறிக்கும். (லூக்கா 5:5; லூக்கா 8:24,45; லூக்கா 9:33,49; லூக்கா 17:13).

5. போதகர் **(teacher) - διδάσκαλος-didaskalos** - 1320

   ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு **(teacher, doctor)** - 58 இடங்களில் இந்தச் சொல் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. 10 இடங்களில் போதகர் எனவும், ஒரு இடத்தில் வேதபாரகர் எனவும், மற்ற இடங்களில் ஆண்டவர் எனவும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

6. போதகர் **(master) - καθηγητής - katheegeetees** - 2519

   ஆண்பால் பெயர்ச்சொல் - போதகர், குரு **(guide, leader)** (மத் 23:8,10).

7. ரபீ **(Rabbi)-ῥαββί- rhabbi** - 4461

   ஆண்பால் பெயர்ச்சொல் - ரபீ **(my teacher, Rabbi,Master)**(மத் 23:7)

8. ரபூனி **(Lord) - ῥαββονί - rhabboni** - 4462

   ஆண்பால் பெயர் - ஆண்டவர், ரபூனி - ரபீ என்பதன் அரமாயிக் மொழி வடிவம். (யோவான் 20:16) இந்தச் சொல் மாற்கு 10:51-இல் ஆண்டவர் எனவும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

9 அதிகாரம்

"அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன், அவர்களால் கூடாமற்போயிற்று" - இன்றைக்கு அநேகர் இந்த மனுஷனைப் போலத்தான் இருக்கிறார்கள். தங்களுக்குப் பிரச்சனை வரும் பொழுது உதவி தேடி இயேசுவிடம் வருகிறார்கள்.இயேசு கிறிஸ்துவையும், அவருடைய வல்லமையையும் இவர்கள் பூரணமாக விசுவாசிப்பதில்லை. மாற்கு 16:15-20; லூக்கா 10:19; யோவான் 14:12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்களை இவர்கள் வாசித்துப் புரிந்து கொள்வதில்லை. சீஷர்கள் இயேசு கிறிஸ்துவிடம் பிசாசுகளைத் துரத்தும் வல்லமையையும், அதிகாரத்தையும் பெற்றிருந்தார்கள். பிசாசுகளைத் துரத்துவதற்காகத் தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்த வல்லமையையும், அதிகாரத்தையும் பயன்படுத்தினார்கள். (மத் 10:1-8,மாற்கு 6:7-13; லூக்கா 9:1-5; லூக்கா 10:1-20)

"விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடிருந்து, உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்?" - சீஷர்கள் பிசாசைத் துரத்துவதற்கு முயற்சி பண்ணியதற்காகவோ அல்லது பிள்ளையின் தந்தை தன்னிடத்தில் முறையிட்டதற்காகவோ இயேசு யாரையும் கடிந்து கொள்ளவில்லை. தம்முடைய சீஷர்களிடம் காணப்பட்ட அவிசுவாசத்திற்காகவே இயேசு கிறிஸ்து அவர்களைக் கடிந்து கொள்கிறார். "விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே" என்று கூறுகிறார்.

"உன் மகனை இங்கே கொண்டுவா" - இயேசு கிறிஸ்து அதிகாரத்தோடு கூறுகிறார் உன்னதத்திலிருந்து வரும் பலனைப் பெற்றிருக்கும் யாவரும் விசுவாசத்தோடு இவ்வாறு கூறலாம். (லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 3:6; அப் 5:15-16; அப் 6:8; அப் 8:7,13; அப் 14:10; அப் 16:18)

"அசுத்த ஆவி" - (லுக்கா 4:33)

"இளைஞனைக் குணமாக்கினார்" - பிசாசு பிடித்திருந்த இளைஞனைக் குணமாக்குவது இயேசுவிற்கு எளிதான காரியம். பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் அவர் மீது தங்கியிருந்தது.

மாற்கு 9:14-29 ஆகிய வசனங்களில் இந்த நிகழ்ச்சி இன்னும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இது தொடர்பான கூடுதல் விவரத்தை மத் 17:16-20 ஆகிய வசனங்களில் நாம் வாசித்தறியலாம்.

52. இயேசு தமது மரணத்தை மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

லூக்கா 9:44 நீங்கள் இந்த வார்த்தைகளைக் கவனமாய்க் கேளுங்கள்; மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப் போகிறார் என்றார்.

லூக்கா 9:45 அவர்கள் அந்த வார்த்தையின் கருத்தை அறிந்து கொள்ளவில்லை; அது அவர்களுக்குத் தோன்றாமல் மறைபொருளாயிருந்தது; அந்த வார்த்தையைக் குறித்து அவரிடத்தில் விசாரிக்கவும் பயந்தார்கள்.

தீர்க்கதரிசன எண் - 22

"மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படப்போகிறார்" - (லூக்கா 9:44) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இந்த உலகத்திற்கு இயேசு கிறிஸ்து வந்ததன் நோக்கம் அவருடைய சிந்தையில் எப்போதும் இருக்கிறது. தாம் அனுபவிக்கப் போகும் பாடுகளைக் குறித்து லூக்கா எழுதின சுவிசேஷத்தில் இயேசு இரண்டாம் முறையாக அறிவிக்கிறார். ஆனால் கிறிஸ்துவின் ஊழியத்தைக் குறித்தும், அவருடைய வார்த்தையின் கருத்தைக் குறித்தும், அவருடைய சீஷர்கள் அறிந்து கொள்ளவில்லை. அது அவர்களுக்குத் தோன்றாமல் மறை பொருளாயிருந்தது; அந்த வார்த்தையைக் குறித்து அவரிடத்தில் விசாரிக்கவும் பயந்தார்கள். (மாற்கு 16:14; லூக்கா 24:45).

53. தாழ்மையைப் பற்றிய உபதேசம் - (மத் 18:1; மாற்கு 9:33)

லூக்கா 9:46 பின்பு தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று.

9 அதிகாரம்

லூக்கா 9:47 இயேசு அவர்கள் இருதயத்தின் யோசனையை அறிந்து, ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதைத் தமதருகே நிறுத்தி,

லூக்கா 9:48 அவர்களை நோக்கி: இந்தச் சிறுபிள்ளை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்; உங்களெல்லாருக்குள்ளும் எவன் சிறியவனாயிருக்கிறானோ அவனே பெரியவனாயிருப்பான் என்றார்.

"தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று" - இயேசு கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து சீஷர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் தங்களுக்குள் எவன் பெரியவனாக இருப்பான் என்று விவாதம் பண்ணத் தெரிந்திருந்தது. எல்லோருமே தலைவராக வேண்டுமென்று விரும்புகிறார்கள். (மத் 18:1)

"ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதைத் தமதருகே நிறுத்தினார்" - மேட்டிமையான ஆவியை இயேசு கிறிஸ்து கடைசி இராப்போஜன வேளையிலும், கடிந்து கொள்கிறார். (லூக்கா 22:24-27; யோவான் 13:2-17).

54. இயேசு பிரிவினையைக் கடிந்து கொள்கிறார் - (மாற்கு 9:38; அப் 10:15,35; 20:30)

லூக்கா 9:49 அப்பொழுது யோவான் அவரை நோக்கி: ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால், அவனைத் தடுத்தோம் என்றான்.

லூக்கா 9:50 அதற்கு இயேசு: தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார்.

ஐயர் (Master) - ἐπιστάτης - **epistatees** - 1988

ஆண்பால் பெயர்ச்சொல் - ஐயர் (லூக்கா 9:38)

"தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்" - நற்கிரியைகளைச் செய்கிறவர்கள் எந்த சபைப்பிரிவினராக இருந்தாலும் அவர்களைக் குறைகூற வேண்டாம்.

55. சமாரியர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை - (யோவான் 4:4-45; அப் 8:5-25)

லூக்கா 9:51 பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி,

லூக்கா 9:52 தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள்.

லூக்கா 9:53 அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

"அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது" - கர்த்தருடைய ஊழியத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி நிறைவு பெறுகிறது. சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம் பண்ணுவது, வியாதியஸ்தரைக் குணமாக்குவது, பிசாசின் பிடியில் அகப்பட்டிருப்போரை விடுவிப்பது ஆகிய ஊழியங்களை இயேசு கிறிஸ்து நிறைவேற்றி வந்திருக்கிறார். (அப் 10:38)இந்த ஊழியப் பகுதி நிறைவேறப்போகிறது. இதன் பின்பு, எருசலேமில் இயேசு கிறிஸ்து ஊழியத்தை ஆரம்பிக்கப் போகிறார். நம் ஒவ்வொருவருடைய பாவத்திற்காகவும், அவர் பாவநிவாரண பலியாக எருசலேமிலே மரிக்கப்போகிறார். இது இயேசு கிறிஸ்துவின் மற்றொரு ஊழியப்பகுதியாகும்.(எபி 2:14-15; மத் 20:28; மாற்கு 10:45; 1தீமோ 2:4-6; கலா 1:4; தீத்து 2:14; 1பேதுரு 2:24; 1பேதுரு 3:18; வெளி 1:5).

9 அதிகாரம்

எடுத்துக்கொள்ளப்படுதல் (received up) -ἀνάληψις-analeempsis- 354

பெண்பால் - பெயர்ச்சொல் எடுத்துக் கொள்ளப்படுதல் - இந்த வசனத்தில் மட்டுமே இந்தச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. செப்துவஜிந்தில் எலியா எடுத்துக் கொள்ளப்பட்டதையும், புதிய ஏற்பாட்டில் கர்த்தர் எடுத்துக் கொள்ளப்பட்டதையும் குறிப்பதற்கு "அனலாம்பானோ" (analambano) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டி ருக்கிறது.(2இராஜா 2:11,மாற்கு 16:19; அப் 1:2,11,22,1தீமோ. 3:16)

ஏற்று (received) - ἀναλαμβάνω - analambanoo - 353

வினைச்சொல் - எடு, ஏற்று, கூட்டு, பிடி, ஏறெடு

"அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பினார்" - அவர் தமது முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினார். (ஏசா 50:7, லூக்கா 9:31)

தூதர்கள் (angels) - αγγελος - angelos - 32

ஆண்பால் பெயர்ச்சொல் - தூதன், தூதர் (angels or messengers) - இவர்கள் மனுஷதூதர்களாகிய அவருடைய சீஷர்கள். (லூக்கா 7:24)

"சமாரியர்" - இஸ்ரவேல் ஜனங்கள் சிறையிருப்பில் இருந்தபோது சமாரியாவில் புறஜாதியார் குடியிருந்தார்கள். இவர்கள் மத்தியில் சில யூதர்களும், குடியிருந்தார்கள். (2இராஜா 17:24-34) இவர்களுடைய புறஜாதி மார்க்கமும், யூதமார்க்கமும் இணைந்து, சமாரிய மார்க்கம் என்னும் கலப்பு மார்க்கத்தை உண்டாக்கினார்கள். இவர்கள் பஞ்சாகமத்தை மட்டுமே பரிசுத்த வேதாகமமாக அங்கீகரிக்கிறார்கள் சீகேமிற்கு அருகில் கி.மு. 331-இல் கெர்சீம் மலையில் ஒரு தேவாலயத்தைக் கட்டினார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பிப்போன சமாரியர்கள் எருசலேமையும், தேவாலயத்தையும் கட்டுவதற்கு உதவி புரிய மறுத்து விட்டார்கள். (எஸ்றா 4; நெகே 1; நெகே 4; நெகே 6)

காலப்போக்கில் யூதருக்கும், சமாரியருக்கும் இடையிலுள்ள பிரிவினை அதிகமாயிற்று. யூதர் சமாரியாவின் தேசத்தின் வழியாகப் பிரயாணம் பண்ணுவதைத் தவிர்த்தார்கள். கலிலேயாவிற்குப் போவதற்கு சமாரியாவே சுருக்கு வழி. ஆனால் யூதர்கள் இவர்களுடைய தேசத்தின் வழியாகப் போகாமல், யோர்தானின் கிழக்குப் பகுதியைச் சுற்றி, கலிலேயாவிற்குப் பிரயாணம் மேற்கொண்டார்கள். (யோவான் 4:9; யோவான் 8:48)

சமாரியருடைய உபதேசத்தின் பிரகாரம் மோசேயே பெரியவர். மேசியாவைவிட மோசேயை இவர்கள் பெரியவராக கருதினார்கள். மோசே வழிநடத்துவார் என்பது இவர்களுடைய நம்பிக்கை.

"அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" - (எண் 20:14-21)

56. பழிவாங்குவதைப் பற்றிய உபதேசங்கள் - (2இராஜா 1:9; மத் 5:43)

லூக்கா 9:54 அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள்.

லூக்கா 9:55 அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்க ளென்பதை அறியீர்கள் என்று அதட்டி,

லூக்கா 9:56 மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். அதன்பின்பு அவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போனார்கள்.

9 அதிகாரம்

ஆண்டவர் (Lord)-κύριος-kyrios- 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர் (லூக்கா 9:38)

"எலியா" (Elias, Elijah) - (2இராஜா 1:8-15)

"அறியீர்கள்" - தாங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதைச் சீஷர்கள் அறிந்து கொள்ளவில்லை. வேதத்தைத் தியானித்து, சுயத்தைச் சிலுவையில் அறையும்போது நாம் என்ன ஆவி உள்ளவர்கள் என்பதை அறிந்து கொள்வோம். (கலா 2:20; 2தீமோ 2:15; 2தீமோ 3:17) வைராக்கியத்தையும், கோபத்தையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும். தெளிந்த சிந்தையோடு செயல்பட வேண்டும். (ரோமர் 10:1-4; யோவான் 16:2) இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் சீஷர்கள் புரிந்து கொள்ளவில்லை. (லூக்கா 9:44-45).

"இன்ன ஆவி" - பழிவாங்குதல் பரிசுத்த ஆவியானவரின் சுபாவமல்ல. மோசேயின் பிரமாணம் கூட பழிவாங்குவதை ஏற்றுக் கொள்ளவில்லை. (லேவி 19:18; நீதி 24:29) எல்லோரிடத்திலும் அன்பாக இருக்க வேண்டும் என்பிதே சுவிசேஷச் செய்தி. (மத் 5:38-44; மத் 7:1-2; லூக்கா 9:52-55; ரோமர் 12:17; 1கொரி 6:7-8; 1தெச 5:15; 1பேதுரு 3:9) மனுஷன் பாவம் செய்யும்போது அவனுடைய இருதயம் கடினப்படுகிறது. சுவிசேஷத்திற்கும், நியாயப்பிரமாணத்திற்கும் செவிகொடுக்காமல் தனக்கு இஷ்டமானபடி செயல்படுகிறான். (யாத் 21:23-25; லேவி 24:17-22;உபா 19:19-21;ரோமர் 13:1-8)

"மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" - (லூக்கா 5:32)

57. சீஷத்துவத்திற்கு பரீட்சை- (மத் 8:18)

லூக்கா 9:57 அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப்பின்பற்றி வருவேன் என்றான்.

லூக்கா 9:58 அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்.

லூக்கா 9:59 வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.

லூக்கா 9:60 அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்.

லூக்கா 9:61 பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன்,ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.

லூக்கா 9:62 அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்.

"ஒருவன்" - வேதபாரகன் (மத் 8:19) இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இவர்களுக்குச் சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதும் கடினம், அவர்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இஸ்ரவேல் தேசத்து ஆட்சியாளர்களுடன் இவர்கள் நெருங்கிய உறவில் இருந்தார்கள். சமுதாயத்திலும் இவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து இருந்ததினால் சாதாரண ஜனங்களால் இவர்களைச் சந்திக்க முடியாது.

"மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" -தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவர். அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்று திரித்துவத்தில் இருக்கிறார். மனுஷருடைய பாவங்களைப் போக்குவதற்காக இயேசு கிறிஸ்து மனுஷ ரூபம் எடுத்தார். உலகத்தைச் சிருஷ்டித்த இயேசு கிறிஸ்து தம்மை அதிகமாகத் தாழ்த்தியிருக்கிறார். நமக்காகத் தாழ்த்து கிறார். ஓய்வெடுக்க வேண்டிய சூழ்நிலையோ, களைப்போ தேவனுக்கு வராது. ஆனாலும், அவர் மனுஷ சாயலாக ஆனதினால் ஓய்வு எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார். இருந்தாலும் மனுஷகுமாரனுக்குத் தலைசாய்க்க இடமில்லை.

லூக்கா - தொகுப்புரை

9 அதிகாரம்

"நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" - (மத் 8:21)

"மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி" - (மத் 8:22)

"கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" - லூக்கா 9:61 ஆவது வசனத்திற்கு இயேசு இந்த வசனத்தில் விடை கூறுகிறார். இது சற்றுக் கடினமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இது முடியாத காரியமல்ல. இந்த மனுஷன் வீட்டிற்குப் போனால் அங்கு அவிசுவாசிகள்தான் நிறைந்திருப்பார்கள். அவர்கள் இவனுடைய தீர்மானத்தைக் கலைத்துவிடுவார்கள். இயேசுவைப் பின்பற்றுவதிலிருந்து வழிவிலகிச் சென்றுவிடுவான்.

"கலப்பை" - இந்தக் கலப்பைக்கு ஒரு கை மட்டுமே இருக்கும். ஒருவர் மட்டுமே தன்னுடைய கையை வைக்க முடியும். (1இராஜா 19:19)

10 அதிகாரம்

58. இயேசு எழுபது பேரை அபிஷேகிக்கிறார் -

(1) ஊழியத்தைக் கொடுத்து அவர்களை அனுப்புகிறார்

லூக்கா 10:1 இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.

லூக்கா 10:2 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

லூக்கா 10:3 புறப்பட்டுபோங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்.

லூக்கா 10:4 பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டு போக வேண்டாம்; வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம்.

"கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்தார்" - இந்த வசனத்திலும் அப் 1:23 ஆவது வசனத்திலும்.

"எழுபதுபேர்" - ஏற்கெனவே பன்னிரெண்டு சீஷர்கள் இருக்கிறார்கள். இவர்களோடு எழுபதுபேர் சேர்ந்து, இப்போது மொத்தம் 82 பேர் பிரசங்கித்து நோய்களைக் குணமாக்குகிறார்கள்.

"இரண்டிரண்டு பேர்" - ஒருவரைத் தனியாக அனுப்புவதற்குப் பதிலாக இரண்டு பேராக அனுப்புவதினால் சில அனுகூலங்கள் உள்ளன. அவையானவ:

1. சோதனைகளிலும், தனிமையிலும், சோர்வுகளிலும் ஒருவருக்கொருவர் உதவி புரிவார்கள். (பிர 4:9-12; ரோமர் 15:1-4)
2. ஒருவர் விழுந்தாலும் மற்றவர் அவரைத் தூக்கி விடுவார். (பிர 4:9-10; பிர 12:9-10; கலா 6:1)
3. சோதனைகள் வரும்போது பலவீனத்தில் பலப்படுத்துவதற்கு (ரோமர் 15:1-5; கலா 6:2)
4. ஜெபத்தில் ஒற்றுமை உண்டாக்குவதற்கு (மத் 18:19)
5. சாத்தான் தாக்கும்பொழுது பாதுகாப்பதற்கு(பிர 4:12; உபா 32:30)
6. பிரசங்கத்தை உறுதிபண்ணுவதற்கு (உபா 17:6; உபா 19:15; மத் 18:16)

"அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" - அறுப்பும், வேலையாட்களும் சுவிசேஷ ஊழியர்களையும், ஆதாயம் பண்ண வேண்டிய ஆத்துமாக்களையும் குறிக்கும்.

வேண்டிக்கொள் **(pray)** - **δέομαι** - **deomai** - 1189

வினைச்சொல் - வேண்டிக்கொள், உத்தரவுகேள், ஜெபம் பண்ணு, கேட்டுக்கொள் - நமது தேவை சந்திக்கப்படும் வரையிலும் தொடர்ந்து விண்ணப்பம் பண்ணுவது என்பது இந்த வார்த்தையின் பொருள்.

அனுப்பும்படி **(send forth)** - **ἐκβάλλω** - **ekballoo** - 1544

வினைச்சொல் - எடுத்துப்போடு, துரத்து,வெளியே அனுப்புபிடுங்கு, எறி **(to eject, cast out, expel, or send away)**-இதற்கு இணையான மற்றொரு வார்த்தை "அப்போஸ்டெல்லோ" **apostelloo** இதற்கு லூக்கா 10:3-இல் உள்ளபடி சாதாரணமாக அனுப்புதல் என்று பொருள். "எக்பால்லோ" **(ekballoo)** என்பது வலிமையோடு வெளியே அனுப்புதல் என்று பொருள்படும்.

அனுப்பு **(send)** - **ἀποστέλλω** - **apostelloo** - 649

வினைச்சொல் - அனுப்பு, அனுப்பிவிடு, துரத்திவிடு

10 அதிகாரம்

"ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்" - (மத் 10:16)

பணப்பை (purse) - βαλλάντιον - **ballantion** - 905

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணப்பை (money bag) - லூக்கா மட்டுமே இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார். (லூக்கா 10:4; லூக்கா 12:33; லூக்கா 22:35,36).

"பாதரட்சைகள்"-இரண்டாவது பாதரட்சை - மாற்றி அணிவதற்குப் பயன்படும்.

"வழியிலே ஒருவரையும் வினவ வேண்டாம்" - வழியில் காணும் யாரையும் அன்பாக விசாரிக்கக்கூடாது என்பது இதன் பொருளல்ல. விசுவாசிகள் ஒருவரையொருவர் அன்புடன் விசாரித்துக் கொள்ள வேண்டும். (1பேதுரு 3:8) கனம்பண்ணுவதில் ஒருவரையொருவர் முந்திக் கொள்ள வேண்டும். ஆனால் கிழக்குத் தேசங்களில் வழியில் போவோர் வருவோர் எல்லோரிடமும் மணிக்கணக்காகப் பேசி தங்களுடைய பொன்னான நேரத்தை வீணாகச் செலவிடுவார்கள். நேரத்தை வீணடிக்கும் இப்படிப்பட்ட பழக்கம் தேவையில்லை என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும். எலிசா தன்னுடைய ஊழியக்காரனை அனுப்பும்போது வழியில் வீணாக நேரத்தைச் செலவு பண்ண வேண்டாம் என்று எச்சரித்து அனுப்பினான். (2இராஜா 4:29).

(2) போகும் இடங்களில் அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதம் - (மத் 10:10-15)

லூக்கா 10:5 ஒரு வீட்டில் பிரவேசிக்கிற போது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள்.

லூக்கா 10:6 சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்.

லூக்கா 10:7 அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்.

லூக்கா 10:8 ஒரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக் கொண்டால் அவர்கள் உங்கள்முன் வைக்கிறவைகளை நீங்கள் புசித்து,

"சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்" - ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். இவ்வாறு சொல்வது அக்காலத்து வழக்கம். அந்த வீட்டின் உரிமையாளர் சமாதானமுள்ள மனுஷனாக இருந்தால் உங்கள் ஆசீர்வாதம் அந்த வீட்டில் தங்கும். அவன் சமாதானத்தை விரும்பவில்லை என்றால் நீங்கள் கூறிய ஆசீர்வாதம் உங்களிடத்திற்கே திரும்பி வரும். உங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் உங்கள் காலில் படிந்துள்ள தூசியை உதறித்தள்ளிவிட்டு, அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுப் போங்கள். (மத் 10:14) ஒரு மனுஷனிடம் எந்தப் பழக்கம் காணப்படுகிறதோ அந்தப் பழக்கத்தின் குமாரன் என்று யூதர்கள் அவனை அழைப்பார்கள். எடுத்துக்காட்டாக "சமாதானபாத்திரன்". (யோவான் 17:12)

"அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள்; வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்" - கிழக்குத் தேசத்தில் தேவையில்லாமல் வீட்டுக்கு வீடு சென்று ஊர் வம்பு பேசுவார்கள். ஊழியக்காரர்கள் இதைத் தவிர்க்க வேண்டும். அவர்களுடைய நேரம் முக்கியமானது. ஊர்க்கதை பேசுவதற்கு அவர்கள் அனுப்பப்படவில்லை. இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கே அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். (லூக்கா 9:4)

10 அதிகாரம்

(3) செய்தியும் வல்லமையும் - (மத் 10; மாற்கு 3:13; 6:7; லூக் 6:12)

லூக்கா 10:9 அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.

"பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்" - தேவனுடைய ஊழியக்காரர்கள் எந்த ஊருக்கெல்லாம் போகிறார்களோ அந்த ஊரிலுள்ள பிணியாளிகள் எல்லோரையும் சொஸ்தமாக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யம் அவர்களுக்குச் சமீபமாக வந்திருக்கிறது என்பதற்கு இது அடையாளம். தேவனுடைய ஊழியக்காரர்கள் அவர்கள் நடுவில் இருக்கிறார்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வார்கள். தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பலத்திலே இருக்கிறது. (1கொரி 4:20; 2தீமோ 1:7).

(4) அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று இயேசு முன் குறித்துக் கூறுகிறார்-(மத் 10:14)

லூக்கா 10:10 யாதொரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின் வீதிகளிலே நீங்கள் போய்:

லூக்கா 10:11 எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் தூசியையும் உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்போடுகிறோம்; ஆயினும் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறதென்பதை அறிந்து கொள்வீர்களாக என்று சொல்லுங்கள்.

"எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் தூசி" - (மத் 10:14)

"ஒட்டினது" - இது ஒரு மருத்துவச் சொல். காயங்களைக் கட்டுதல் என்பது இதன் பொருள்.

"தூசியையும் உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்போடுகிறோம்" - ஊழியக்காரர்கள் ஜனங்களுடையபொருளுக்காகவோ அவர்கள் தரும் வந்தனங்களுக்காகவோ ஊழியம் செய்யவரவில்லை. அவர்களுடைய ஆத்துமாக்களைத் தேவனிடம் ஆதாயப்படுத்த வேண்டும்என்னும் ஒரே நோக்கத்திற்காகவே வருகிறார்கள். தேவனுடைய கிருபையை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய சரீர வியாதி குணமாக வேண்டும். அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும். இதுவே ஊழியக்காரர்களுடைய நோக்கம். இதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் அவர்களிடத்தில் வேறொன்றையும் நீங்கள் எதிர்பார்த்து வரவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக உங்கள் கால்களில் ஒட்டின அவர்களுடையபட்டணத்தின் தூசியை துடைத்துப் போட வேண்டும். இந்தப் பழக்கம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு எதிராக வெளிப்படுவதையும் குறிக்கும். (லூக்கா 10:12; மத் 10:14-15) தங்களுக்குக் கேடுண்டாகவே அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் போகிறார்கள்.

(5) விசுவாசியாத பட்டணங்கள்மீது இயேசு நியாயத்தீர்ப்பை முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 11:20)

லூக்கா 10:12 அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் அந்த நாளிலே சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 10:13 கோராசீன் பட்டணமே, உனக்கு ஐயோ, பெத்சாயிதா பட்டணமே, உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந் ததானால், அப்பொழுதே இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, மனந்திரும்பியிருப்பார்கள்.

லூக்கா 10:14 நியாயத்தீர்ப்புநாளில் உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும்.

லூக்கா 10:15 வானபரியந்தம் உயர்த்தப் பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய் என்று சொல்லி,

10 அதிகாரம்

லூக்கா 10:16 சீஷரை நோக்கி: உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான், உங்களை அசட்டை பண்ணுகிறவன் என்னை அசட்டை பண்ணுகிறான், என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறான் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 23

"அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் அந்த நாளிலே சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்............" (லூக்கா 10:12-16) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 10:12-15 ஆவது வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. இது நியாயத்தீர்ப்பின் நாளைக் குறிக்கும். (வெளி 20:11-15) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 10:16 ஆவது வசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"இலகுவாயிருக்கும்" - சோதோமிற்குத் தேவனுடைய தண்டனை கிடைத்தது. அது மிகவும் கடுமையாக இருந்தது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத ஜனங்கள் வசிக்கும்ஊரின்மீதும்,தேவனுடையதண்டனை வரும். சோதோமின்மீது வந்த தண்டனையை விட இது அதிகமாக இருக்கும்.

"கோராசீன் பட்டணமே, உனக்கு ஐயோ, பெத்சாயிதா பட்டணமே, உனக்கு ஐயோ" - (மத் 11:21-24)

"அப்பொழுதே இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, மனந்திரும்பியிருப்பார்கள்" - புறஜாதியாரைவிட யூதர்கள் கடின இருதயம் உடையவர்களாக இருக்கிறார்கள். (அப் 7:51; ரோமர் 2:5, 1இராஜா 20:31).

பாதாளம் (hell) - ᾅδης - hadees - 86

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம், இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலியமாகத் தங்கும் இடம் (லூக்கா 16:23)

(6) **எழுபது பேரும் திரும்பி வருகிறார்கள் - சாத்தான்மீது அதிகாரம்** - (மத் 18:18)

லூக்கா 10:17 பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்.

லூக்கா 10:18 அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்.

லூக்கா 10:19 இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகலவல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.

லூக்கா 10:20 ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்.

"சந்தோஷம்" - கிறிஸ்துவின் சந்தோஷத்தையும், எழுபதுபேரின் சந்தோஷத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சந்தோஷத்திற்கான காரணத்தையும் ஆதாரத்தையும் நாம் வாசித்தறியலாம். (லூக்கா 10:17-22)

"சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறான்" - ஆதாமின் காலத்திற்கு முன்பாக சாத்தான் வானத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான். (ஏசா 14:12-14;எரே 4:23-26; எசே 28:11-17; ஆதி 1:1-2; 2பேதுரு 3:5-8) ஆதாமின் வீழ்ச்சிக்குப் பிறகு சாத்தான் மறுபடியும் தன் கிரியைகளை மனுஷர் மத்தியில் நடப்பித்து வருகிறான். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக அவன் மறுபடியும் பாதாளத்தில் தள்ளப்படுவான்.(வெளி 12:7-12)

"இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது" - இயேசு கிறிஸ்து இந்த வாக்குத்தத்தை அவரோடு ஊழியம் செய்த 82 பேருக்கும் கொடுத்தார். அதேசமயத்தில், இந்த வாக்குத்தத்தம் இக்காலத்தில் விசுவாசிகளாக இருக்கும் நமக்கும் உரியது. (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; யோவான் 14:12)

10 அதிகாரம்

அதிகாரம் (power) - ἐξουσία - **exousia** - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் **(delegated authority)** - சாத்தானுடைய கிரியைகளை அழிப்பதற்கு தேவன் கொடுத்திருக்கும் அதிகாரத்தைத் தேவைப்படும்போது பயன்படுத்துவது.

"மேற்கொள்ள" - சாத்தானுடைய அந்தகார சக்திகளை மேற்கொள்வதற்கு இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். (சங் 91:13; சங் 108:13;ஏசா 10:6;ஏசா 63:6;தானி 7:23; மீகா 5:5; வெளி 11:2) சர்ப்பங்கள், தேள்கள் என்பவை சாத்தானுடைய அந்தகார வல்லமையைக் குறிக்கும். இவற்றை விசுவாசிகள் மேற்கொள்ளலாம். (சங் 91; மாற்கு 16:17-18; அப் 28:5).

"ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" - ஆவிகள் நமக்குக் கீழ்ப்படிகிறது. இது சந்தோஷமான காரியமே என்றாலும் நமது சந்தோஷத்திற்கான ஆதாரம் இதுவாக இருக்கக்கூடாது. நமது பெயர்கள் பரலோகத்தில் கர்த்தருடைய ஜீவப்புஸ்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது. நாம் அதற்காகச் சந்தோஷப்பட வேண்டும். (யாத் 32:32;சங் 69:28;தானி 12:1; பிலி 4:3; எபி12:23;வெளி 3:5;வெளி 13:8;வெளி 17:8; வெளி 20:12;வெளி 21:27; வெளி 22:19). நம் மூலமாக கர்த்தர் அற்புதம் செய்யும்போது கர்த்தருடைய சமூகத்தில் நம்மை நாமே தாழ்த்த வேண்டும். நமக்குள் பெருமை வந்துவிடக்கூடாது. விசுவாசிகள் மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும்.

59. விசுவாசத்தின் எளிமைக்காக இயேசு ஆவியிலே களிகூருகிறார் - (மத் 11:25)

லூக்கா 10:21 அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது.

லூக்கா 10:22 சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான், குமாரனும், குமாரன் அவரை எவனுக்கு வெளிப் படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந் தவிர, வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான் என்றார்.

"ஆவியிலே" - இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியிலே களிகூர்ந்தார். இதுவே சந்தோஷத்தின் உண்மையான ஆதாரம். ஆவியில் களிகூரும்போது நமக்கு ஆவிக்குரிய பெருமை வராது. (கலா 5:22).

"பிதாவே" - இயேசு கிறிஸ்து "பிதாவே" என்னும் வார்த்தையை 180 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். ஜெபத்தில் தேவனைக் குறிப்பிடும்போது "பிதா" என்னும் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். யோவான் சுவிசேஷத்தில் மட்டும் "பிதா" என்னும் வார்த்தையை 112 தடவை பயன் படுத்தியிருக்கிறார். யோவான் சுவிசேஷம் பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் விரிவாக விளக்குகிறது. மேலும் "பிதா" என்னும் சொல் மத்தேயு சுவிசேஷத்தில் 44 தடவைகளும், மாற்கு சுவிசேஷத்தில் 5 தடவைகளும் லூக்கா சுவிசேஷத்தில் 17 தடவைகளும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் இரண்டு தடவைகளும், புதிய ஏற்பாட்டின் மற்ற புஸ்தகங்களில் 88 தடவைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பிதாவிற்கு வழங்கப்பட்டிருக்கிற பெயர்கள்

1. என் பிதா (யோவான் 5:17-18; யோவான்8:16-38,54;யோவான் 14:28)
2. பரமபிதா (மத் 6:14-32)
3. வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர் (மத் 11:25; லூக்கா 10:21)
4. பரிசுத்த பிதா (யோவான் 17:11)
5. நீதியுள்ள பிதா (யோவான் 17:25)

10 அதிகாரம்

6. நம்முடைய பிதாவாகிய தேவன் (ரோமர் 1:7; 1கொரி 1:3)

7. பிதாவாகிய ஒரே தேவன் (1கொரி 8:6; கலா 1:1; 1தெச 1:1)

8. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதா (2கொரி 1:3; 2கொரி 11:31; எபே 1:3; எபே 3:14; எபே 6:23; கொலோ 1:3)

9. இரக்கங்களின் பிதா (2கொரி 1:3)

10. மகிமையின் பிதா (எபே 1:17)

11. ஆவிகளின் பிதா (எபி 12:9)

12. சோதிகளின் பிதா (யாக் 1:17)

60. சுவிசேஷத்தை விசுவாசிப்போருக்கு வெகுமதிகள் - (மத் 21:21; யோவான் 14:12)

லூக்கா 10:23 பின்பு தமது சீஷரிடத்தில் திரும்பி, தனித்து அவர்களை நோக்கி: நீங்கள் காண்கிறவைகளைக் காணுங் கண்கள் பாக்கியமுள்ளவைகள்.

லூக்கா 10:24 அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

61. நியாய சாஸ்திரி இயேசுவிடம் கேள்வி கேட்கிறான் - (மத் 22:34; மாற்கு 12:28)

லூக்கா 10:25 அப்பொழுது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து, அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்னசெய்ய வேண்டும் என்று கேட்டான்.

லூக்கா 10:26 அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார்.

லூக்கா 10:27 அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்.

லூக்கா 10:28 அவர் அவனை நோக்கி: நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார்.

லூக்கா 10:29 அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: எனக்குப் பிறன் யார் என்று கேட்டான்.

"நியாயசாஸ்திரி" - நியாயப்பிரமாணத்தை உபதேசிக்கிறவர்.

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (லூக்கா 9:38)

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" - (மத் 19:16-22; மத் 22:35-40)

"அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்" - இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறி பிரச்சனையைத் தீர்த்து வைக்கிறார். ஒருவன் மறுபடியும் பிறவாமல் இந்தக் காரியங்களைச் செய்ய முடியாது. (யோவான் 3:3-5; 2கொரி 5:17).

"அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இருந்தான்" - சாதாரண மனுஷர்கள் இவனைப்போலத் தான் நடந்து கொள்கிறார்கள். அவர்களிடத்தில் உண்மையும் இராது, கண்ணியமும் இராது.

10 அதிகாரம்

62. நல்ல சமாரியனின் உவமை

லூக்கா 10:30 இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப்போனார்கள்.

லூக்கா 10:31 அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

லூக்கா 10:32 அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான்.

லூக்கா 10:33 பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி,

லூக்கா 10:34 கிட்டவந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களை கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்.

லூக்கா 10:35 மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பிவரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்.

லூக்கா 10:36 இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித்தோன்றுகிறது என்றார்.

லூக்கா 10:37 அதற்கு அவன்: அவனுக்குக் இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனைநோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்.

பிரதியுத்தரமாக **ὑπολαμβάνω** - **hypolambanoo** - 5274

வினைச்சொல்-நினை, பதில் சொல் **(to take the ground from under him)**-(லூக்கா7:43;அப் 1:9;அப் 2:15)

உவமை எண் - 12

"ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்........." (லூக்கா 10:30-37) இந்த உவமை பிறர்மீது அன்புகூரவேண்டு மென்பதை விளக்குகிறது.

"எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில்" - இந்தப் பாதை மலையில் இருந்து தாழ்வாக இறங்கும் சாலையாகும். 18 மைல்கள் கிழக்கு முகமாக இந்தச் சாலையில்பிரயாணம் பண்ண வேண்டும். பாலஸ்தீன தேசத்தில் இந்தப் பாதை மிகவும் ஆபத்தானது. ஏனெனில் கள்ளருடைய தொந்தரவு இந்தப் பாதையில் அடிக்கடி வரும்.

கள்ளர் அந்த மனுஷனுக்குச் செய்த காரியங்கள்

1. அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டார்கள்.
2. அவனைக் காயப்படுத்தினார்கள்.
3. குற்றுயிராக விட்டுவிட்டு விட்டார்கள்.
4. அவனை விட்டுப் போனார்கள்

"ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்தான்" - எரிகோ ஆசாரியரின் பட்டணம். அங்கு 12,000 ஆசாரியர்கள் இருந்தார்கள். தேவாலயத்தில் ஊழியம் செய்வதற்காக அவர்கள் அந்தச் சாலை வழியாகச் செல்வது வழக்கம். இது பேரீச்சை மரங்களின் பட்டணமாகும். (உபா 34:3; நியா 1:16) எருசலேமிலிருந்து 18 மைல்கள் தூரத்திலும், யோர்தானிலிருந்து 6 மைல்கள் தூரத்திலும் அமைந்துள்ளது.(யோசு 6:26=1இராஜா 16:34)

10 அதிகாரம்

"ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்" - லேவியர்கள் மார்க்கக் காரியங்களில் சிறந்து விளங்கியவர்கள். பிரமாணங்களையும், பாரம்பரியங்களையும் நன்றாக கடைப் பிடிப்பார்கள். ஆனால் ஒரு மனுஷனுக்கு ஆபத்து வரும்போது, உதவி புரிய மாட்டார்கள். இங்கு நாம் வாசிக்கும் லேவியன் இரண்டு காரியங்களைச் செய்கிறான். அவையாவன: 1. அவனைக் கண்டான். 2. பக்கமாய் விலகிப் போனான். தனக்கு அந்த மனுஷன் மூலமாக எந்தத் தீட்டும் வந்துவிடக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கிறான். இரக்கக்குணமுள்ள எந்த மனுஷனும் குற்றுயிராக இருக்கும் மனுஷனுக்கு உதவி புரிவான். அதனால் தனக்கு வரப்போகும் தீட்டைக் குறித்து, கவலைப்படமாட்டான். தன்னை மறுபடியும் சுத்திகரித்துக் கொள்வான். பிரமாணங்களைவிட சுவிசேஷமே சிறந்தது என்பதை இயேசுகிறிஸ்து பல இடங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

"சமாரியன்" - யூதர்கள் சமாரியரை வெறுத்தார்கள். (லூக்கா 9:52) ஆனால் இந்தச் சமாரியன்தான் இரக்கக்குணமுள்ளவனாக இருக்கிறான். குற்றுயிராக இருப்பவனுக்கு உதவி புரிய முன்வருகிறான். ஆசாரியரும், லேவியரும் அந்த மனுஷனைக் கைவிட்டுவிட்டார்கள். சமாரியனும், அவர்களால் கைவிடப்பட்டவனே. என்றாலும் சமாரியன் அவனுக்கு அன்போடு உதவி புரிகிறான்.

"சமாரியன் அவனைக் கண்டு, மனதுருகினான்" - சமாரியனிடம் மனதுருக்கம் இருந்தது. அவனுக்கு யூதமார்க்கத்தைப் பற்றி சரியாக தெரிந்திருக்காது. ஆனால் மனுஷனுக்கு உதவி புரியத் தெரிந்திருந்தது. (லூக்கா 10:33-35)

சமாரியன் செய்த காரியங்கள்

1. அவனைக் கண்டான்.
2. மனதுருகினான்
3. கிட்டவந்தான்.
4. அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்தான்
5. காயங்களைக் கட்டினான்
6. அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றினான்
7. அவனைச் சத்திரத்துக்குக் கொண்டு போனான்
8. அவனைப் பராமரித்தான்
9. இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்தான்
10. நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பிவரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்

"இரண்டு பணம்" - ஒருவனுடைய ஜீவனை மீட்கும் கிரயப்பணம். (யாத் 30:12-13). சாதாரண வேலையாளுக்கு இது இரண்டுநாள் சம்பளம். (மத் 20:1-16) சத்திரத்தானுக்கு சமாரியன் போதுமான அளவு பணம் கொடுத்திருக்கிறான்.

"இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது" - இந்த உவமையின் மூலமாக இயேசு கிறிஸ்து கூறவிரும்பும் விளக்கம் இதுதான். இயேசு கிறிஸ்துவின் உபதேசம் எப்போதும் தெளிவாக இருக்கும். நாம்தான் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். பலசமயங் களில்ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் உப தேசங்களைக் கேட்பார்கள். ஆனால் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி உபதேசத் திற்குச் செவிகொடுக்க மாட்டார்கள். சத்தி யத்தைஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதனால் அவர்களுக்குக் கேடு வரும். (மத் 13:11-15)

"நீயும் போய் அந்தப்படியே செய்" - நியாயசாஸ்திரிக்கு இயேசு கிறிஸ்து கூறிய காரியம் இதுதான். நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவன் இதைத் தான் செய்ய வேண்டும். நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிற மனுஷன் இந்தக் காரியங் களைத் தானாகவே செய்வான். (1யோவான்3:15-18;1கொரி 13)யாருக்கு உதவி தேவைப்படுகிறதோ அவன்தான் பிறன்.

10 அதிகாரம்

63. மார்த்தாளும் மரியாளும் - (யோவான் 11:19-46)

லூக்கா 10:38 பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன்வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்.

லூக்கா 10:39 அவளுக்கு மரியாள் என்னப்பட்டஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

லூக்கா 10:40 மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும் படி அவளுக்குச் சொல்லும் என்றாள்.

லூக்கா 10:41 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.

லூக்கா 10:42 தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.

"ஒரு கிராமம்" - பெத்தானியா **(Bethany)**(யோவான் 11:1;யோவான் 12:1-3) பெயர் குறிப்பிடப்படாமல் "ஒரு" என்று குறிப்பிடப் பட்டிருக்கும் நபர்களும், இடங் களுக்கும் இந்த அதிகாரத்தில் சில இடங் களில் வருகிறது. (லூக்கா 10:25,31-33,38) லூக்காசுவிசேஷத்திலும்,அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் இந்த வாக்கியம் 101 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வேதா கமத்தின் மற்ற புஸ்தகங்களின் "ஒரு" **(certain)**என்னும்வாக்கியம் 95 இடங்களில் வருகிறது. மற்ற சுவிசேஷங்களில் 26 இடங்களிலும், எல்லா நிருபங்களிலும் 9 இடங்களிலும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"மார்த்தாள் அவரைத் தன்வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்" - மார்த்தாள் எப்போதும் பற்பல வேலைகளைச் செய்து கொண்டிருப்பாள். அவளுடைய சகோதரியின் பெயர் மரியாள். இயேசுவிடம் மரியாளைப் பற்றி மார்த்தாள் குறைகூறுவதாக வாசிக்கிறோம். ஆயினும் மார்த்தாளிடம் சில நல்ல சுபாவங்கள் காணப்படுகின்றன.

1. அவள் இயேசுவை ஏற்றுக் கொண்டாள். (லூக்கா 10:38).
2. அவள் இயேசுவைச் சேவித்தாள். (லூக்கா 10:40; யோவான் 12:2).
3. தேவை ஏற்படும்போது அவரிடத்தில் இவளே முதலாவது சென்றாள். (யோவான் 11:20,30).
4. இயேசுவிடத்தில் விசுவாசம் வைத்திருந்தாள். (யோவான் 11:21-22).
5. சரீர உயிர்த்தெழுதலையும், நித்திய ஜீவனையும் விசுவாசித்தாள். (யோவான் 11:23-27)
6. இயேசுவை கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரன் என்றும் அறிக்கை செய்தாள்.(யோவான் 11:27).
7. கிறிஸ்துவின் செய்தியை மரியாளுக்கு எடுத்துச் சென்றாள்.(யோவான் 11:28).

"மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்தாள்" - அளவிற்கு அதிகமாக வேலை செய்து கொண்டிருந்தாள். (லூக்கா 10:42; லூக்கா 21:34)

"மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" - மார்த்தாள் அநேகக் காரியங்களில் ஆர்வத்தோடும், கலக்கத்தோடும், குழப்பத்தோடும் இருக்கிறாள். (மத் 6:25).

"தேவையானது ஒன்றே" - மனுஷனுக்கு போஜனம் மட்டும் இருந்தால் போதாது. அதேவிட முக்கியமாகத் தேவனுடைய வார்த்தை வேண்டும். இதுவே ஆவிக்குரிய போஜனம். மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள். (லூக்கா 10:42)

லூக்கா - தொகுப்புரை

10 அதிகாரம்

மரியாளிடம் காணப்படும் நல்ல சுபாவங்கள்

1. இயேசுவின் பாதத்தருகே அமர்ந்திருந்தாள். (லூக்கா 10:39)
2. இயேசுவின் வார்த்தையைக் கேட்டாள். (லூக்கா 10:39)
3. முக்கியமான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்தாள். (லூக்கா 10:42)
4. இயேசுவை எண்ணெயால் அபிஷேகம் பண்ணினாள். (யோவான் 11:2; யோவான் 12:3).
5. இயேசுவில் விசுவாசம் வைத்திருந்தாள். (யோவான் 11:32)
6. இயேசுவிற்கு முன்பாக தாழவிழுந்த ஒன்பது பேரில் இவளும் ஒருத்தி. (யோவான் 11:32).

11 அதிகாரம்

64. ஜெபம் - ஜெபம் பண்ண போதிக்குமாறு இயேசுவிடம் விண்ணப்பம் - (மத் 6:5-15)

லூக்கா 11:1 அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்.

"அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தார்" - (லூக்கா 3:21)

"ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப்போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்" - இயேசுவின் சீஷர்கள் அவர் செய்யும் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசு ஜெபம் பண்ணுவதையும், அவருடைய ஜெபங்கள் கேட்கப்பட்டு, பதில் கொடுக்கப்படுவதையும், பார்க்கிறார்கள். ஜெபத்தின் மூலமாக அவருக்கு வல்லமை வருவதையும் காண்கிறார்கள். ஆகையினால் தாங்களும் அவரைப் போல ஜெபிக்க வேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுக்குள் உண்டாயிற்று. ஆனால் அவர்களுக்கு ஜெபிக்கத் தெரியாது. தங்களுக்கு ஜெபம் பண்ணப் போதிக்குமாறு இயேசுவிடம் கேட்கிறார்கள்.

65. மாதிரி ஜெபம் - (மத் 6:9)

லூக்கா 11:2 அதற்கு அவர்: நீங்கள் ஜெபம் பண்ணும்போது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக;

லூக்கா 11:3 எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்;

லூக்கா 11:4 எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமா; எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், என்று சொல்லுங்கள் என்றார்.

"நீங்கள் ஜெபம் பண்ணும்போது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத் திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" - இயேசு கிறிஸ்து இந்த உபதேசத்தைப் பலஇடங்களில் பல வேளைகளில் கூறுகிறார். லூக்கா 11:1-இல் சீஷர்கள் கேட்கும் விண்ணப்பத்திற்கு இயேசு கூறும் பதில் இதுதான். நாம் ஜெபிக்கும்போது தேவனுடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று அறிவிக்க வேண்டும்.

ஜெபிக்கும்போது நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள்

1. ஜெபத்தின் விதிமுறைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்றபடி ஜெபிக்க வேண்டும்.

2. தேவனிடத்தில் ஒரு நண்பரிடம் பேசுவது போலத் தைரியமாகப் பேசவேண்டும். (லூக்கா 11:5-8; லூக்கா 18:1-8; எபி 4:14-16; எபி 10:19-23,36).

3. நமது ஜெபத்திற்குத் தேவன் பதில் கொடுப்பார் என்னும் விசுவாசமும், நிச்சயமும் நமக்குள் காணப்படவேண்டும். (லூக்கா 11:9-10; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:21; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3:19-22; 1யோவான் 5:14-15)

11 அதிகாரம்

4. ஜெபிக்கும்போது தேவனுடைய கர்த்தத்துவத்தையும், அவருடைய சர்வவல்லமையையும், விசுவாசிக்க வேண்டும். அவருடைய சித்தப்படி ஜெபிக்கும்போது நமது ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்று விசுவாசிக்க வேண்டும். (லூக்கா 11:11-13; மத் 7:7-11; 1யோவான் 3:19-22; 1யோவான் 5:14-15; சங் 84:11).

5. நமது தேவையைச் சந்திப்பது தேவனுடைய சித்தம் என்று விசுவாசிக்க வேண்டும். (லூக்கா 11:9-13; சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; மத் 17:20; மத் 21:21; மாற்கு 11:22-24; யோவான்15:7)

6. பரிசுத்த ஆவியானவரையும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களையும் நாம் தேவனிடம் கேட்க வேண்டும். (லூக்கா 11:13; ரோமர் 8:26-27; எபே 2:18; எபே 6:18; யூதா 1:20; யோவான் 7:37-39)

7. தேவனிடம் யார் ஜெபித்தாலும் பதில் தருவார் என்னும் எண்ணம் நமக்குள் வரவேண்டும். பெரிய ஊழியக்காரர்கள் ஜெபித்தால்தான் தேவன் பதில் கொடுப்பார். நாம் ஜெபித்தால் தேவன் செவிகொடுக்க மாட்டார் என்று சோர்ந்து போகக்கூடாது. (லூக்கா 11:9-13; மத் 7:7-11; மாற்கு 9:23; மாற்கு 11:24; யோவான் 14:12-15; ரோமர் 2:11)

ஜெபத்தின் விதிமுறைகள்

1. ஜெபத்தை எப்படி ஆரம்பிப்பது (லூக்கா 11:2; மத் 11:25)

2. யாரிடம் ஜெபிப்பது (லூக்கா 11:2; யோவான் 14:13-15; யோவான் 15:16; யோவான் 16:23-26; மத் 6:9)

3. யாருடைய பெயரைப் பரிசுத்தப்படுத்துவது (லூக்கா 11:2)

4. யாருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவது (லூக்கா 11:2)

5. யாருடைய விருப்பத்திற்குச் சேவைசெய்வது (லூக்கா 11:2; மத் 22:37)

6. எதைக் கேட்பது (லூக்கா 11:2-4)

7. தேவனிடம் எவ்வாறு ஐக்கியமாக இருப்பது (லூக்கா 11:4; 1யோவான் 3:21-22)

8. மற்றவர்களிடம் எவ்வாறு ஐக்கியமாக இருப்பது (லூக்கா 11:4; மாற்கு 11:25-26; எபே 4)

9. தேவனோடு எவ்வாறு ஜீவிப்பது (லூக்கா 11:4; 1யோவான் 1:3-9; யோவான் 17:2-3)

10. பாவத்திலிருந்து விலகி எவ்வாறு ஜீவிப்பது (லூக்கா 11:4; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13)

66. வருந்தி கேட்கும் மனுஷனைப் பற்றிய உவமை - தேவனுடைய நண்பர்களின் தைரியம்

லூக்கா 11:5 பின்னும் அவர் அவர்களை நோக்கி: உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிற அவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்: சிநேகிதனே,

லூக்கா 11:6 என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

லூக்கா 11:7 வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக: என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான்.

11 அதிகாரம்

உவமை எண் - 13

“உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதி ராத்திரியிலே போய்: சிநேகிதனே..........” (லூக்கா 11:5-8). ஜெபத்தில் நாம் தைரியத்தோடு கேட்க வேண்டும் என்பதை இந்த உவமை விளக்குகிறது.

“பாதிராத்திரி” - பாலஸ்தீனதேசம் பாலைவனமாக இருப்பதினால் பகலில் வெயிலும், உஷ்ணமும் அதிகமாக இருக்கும். ஆகையினால் பகலில் ஜனங்கள் பிரயாணம் பண்ணாமல் இரவின் குளிர்ச்சிவேளையில் பிரயாணம் பண்ணுவார்கள். ஆகையினால் இந்த வசனத்தில் பாதிராத்திரியிலே ஒருவன் வீட்டிற்குள் வருவது அவர்களுக்குப் புதுமையான காரியமல்ல.

“அப்பங்கள்” (loaves) - யூதர்களுடைய அப்பம் மெல்லியதாகவும், தட்டையாகவும் இருக்கும். இதுவே அவர்களுடைய பிரதான உணவு.

“என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது” - கிழக்கு தேசங்களில் பெற்றோரும், பிள்ளைகளும் ஒரே அறையில் படுத்துத் தூங்கும் வழக்கம் இருக்கிறது.

வருத்திக் கேட்பது (importunity) - ἀναίδεια - anaideia - 335

பெண்பால் பெயர்ச்சொல் - வருத்திக் கேட்பது, வெட்கப்படாமல், திரும்பத் திரும்பக் கேட்பது (shamelessness, impudence) - ஒருவன் சிநேகிதனிடத்தில் வருந்திக் கேட்கும் போது அவன் கேட்டதைத் தந்து விடுகிறான். நமது பரமபிதாவிடம் நாம் எதையாவது வருந்திக் கேட்கும்போது அவரும் நிச்சயமாக நமக்குத் தருவார்.

வருந்திக் கேட்டு ஜெபித்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. ஆபிரகாம் (ஆதி 18:23-32)
2. யாக்கோபு (ஆதி 32:24-29)
3. மோசே (யாத் 32:32; உபா 9:25)
4. கிதியோன் (நியா 6:36-40)
5. அன்னாள் (1சாமு 1:10-18)
6. சாலொமோன் (1இராஜா 8:22-30)
7. எஸ்றா (எஸ்றா 9:5-6)
8. நெகேமியா (நெகே 1:4-6)
9. தாவீது (சங் 55:1,16-17; சங் 141:1-2)
10. தானியேல் (தானி 9:3-19; தானி 10:1-3)
11. புறஜாதி ஸ்திரீ (மத் 15:2-28)
12. விதவை (லூக்கா 18:1-8)

67. ஜெபத்திற்கு பதில் கொடுக்கப்படும் என்னும் நிச்சயம் - (மத் 7:7; 21:21; மாற்கு 9:23; 11:22; யோவான் 14:12; 15:7,16)

லூக்கா 11:9 மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

லூக்கா 11:10 ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

“கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்” - (மத் 7:7-11)

11 அதிகாரம்

68. தேவன் நமது பரமபிதாவானவர் - (மத் 7:7; அப் 2:39; 5:32)

லூக்கா 11:11 உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?

லூக்கா 11:12 அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?

லூக்கா 11:13 பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.

உவமை எண் - 14

"உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா?........" (லூக்கா 11:11-13). தேவனுடைய நித்திய பிதா தத்துவத்தை இந்த உவமை விளக்குகிறது.

லூக்கா 11:11-13 ஆகிய வசனங்களில் கூறப்படும் மாறுபட்ட காரியங்கள்

1. அப்பம் - கல்
2. மீன் - பாம்பு
3. முட்டை - தேள்
4. நல்ல ஈவுகள் - பரிசுத்த ஆவி

பாலஸ்தீன தேசத்தில் ஏராளமான தேள்கள் இருந்தன. கருந்தேள்கள். கொடுக்கு கொடிய விஷம் உடையது. சீனாய் வனாந்தரத்தில் நான்கு விதமான தேள்கள் காணப்படுகின்றன. இவை பூச்சிகளைத் தின்று வாழும். கற்களுக்கு இடையிலும், குழிகளிலும் மறைந்திருக்கும்.

"பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" - தேவன் தம்முடைய பிள்ளைகளை அதிகமாக நேசிக்கிறார். உலகப்பிரகாரமான பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நேசிப்பதைவிட தேவனுடைய அன்பு மிகப்பெரியது. தேவன் தமது சித்தத்தைப் பரிசுத்த வேதாகமத்தில் தெளிவு படுத்தியிருக்கிறார். அவருடைய சித்தத்தின் பிரகாரம் நாம் எதைக் கேட்டாலும் அதை நமக்கு அன்போடு தருவார். மகன் செய்த பாவத்தைத் தந்தையால் மன்னிக்க முடியாது. மகனுக்கு மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அவனுடைய தந்தையால் தர இயலாது. நமது பரலோகப் பிதாவிடம் சென்று நம்மை மன்னிக்குமாறு விண்ணப்பம் பண்ணுவோமானால் அவர் நமது பாவங்களை மன்னிப்பார். நமக்கு மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுப்பார். நமது வியாதிகளைச் சொஸ்தமாக்குவார். பிசாசின் கிரியைகளிலிருந்து நம்மை விடுவிப்பார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:14-15; சங் 91; 1பேதுரு 2:24).

"பரிசுத்த ஆவி" - பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பார். இந்த வாக்கியம் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு வல்லமையையும் குறிக்கும். (லூக்கா 24:49; யோவான் 7:37-39; அப் 2:33,38-39; அப் 5:32; மத் 3:11; கலா 3:13-14) ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது அவருக்குப் பரிசுத்த ஆவியானவர் ஓரளவு கொடுக்கப்படுகிறார். (யோவான் 3:3,5; ரோமர் 8:9,14-16; கலா 4:6), பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். (அப் 1:4-8; அப் 2:1-16) நாம் தேவனிடத்தில் நம்மைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுமாறு கேட்கும்போது அவர் நம்மை அபிஷேகிக்கிறார். (அப் 9:17; அப் 8:1-22; அப் 10:44-48; அப் 11:14-18; அப் 15:7-11; அப் 19:1-7)

11 அதிகாரம்

69. இயேசு பிசாசைத் துரத்துகிறார் - பரிசேயர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தேவதூஷணம் கூறுகிறார்கள் - (மத் 12:24)

லூக்கா 11:14 பின்பு அவர் ஊமையாயிருந்த ஒரு பிசாசைத் துரத்தினார். பிசாசு புறப்பட்டுபோன பின்பு ஊமையன் பேசினான்; ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

லூக்கா 11:15 அவர்களில் சிலர்; இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலைக் கொண்டு பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.

"பெயெல்செபூல்" **(Beelzebub)** - (மத் 10:25)

70. பிரிந்திருக்கிற இராஜ்ஜியம் - (மத் 12:25; மாற்கு 3:23)

லூக்கா 11:16 வேறு சிலர் அவரைச் சோதிக்கும் படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டுமென்று அவரிடத்தில் கேட்டார்கள்.

லூக்கா 11:17 அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து, அவர்களை நோக்கி; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம்.

லூக்கா 11:18 சாத்தானும் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? இப்படியிருக்க, பெயெல்செபூலைக் கொண்டு நான் பிசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்களே.

லூக்கா 11:19 நான் பெயெல் செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந் தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்.

லூக்கா 11:20 நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிற படியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.

லூக்கா 11:21 ஆயுதந்தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிறபோது, அவனுடைய பொருள் பத்திரப்பட்டிருக்கும்.

லூக்கா 11:22 அவனிலும் அதிக பலவான் வந்து, அவனை மேற்கொள்வானேயாகில் அவன் நம்பியிருந்த சகல ஆயுத வர்க்கத்தையும் பறித்துக் கொண்டு, அவனுடைய கொள்ளைப்பொருளைப் பங்கிடுவான்.

லூக்கா 11:23 என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.

சோதி **(tempting)** - **πειράζω** - **peirazoo** - 3985

வினைச்சொல் - சோதி, சோதனைக்காரனாயிரு, பிரயத்தனம் பண்ணு, சோதனைக்குட்படுத்து, பரீட்சை பார், முயற்சி செய், தூண்டிவிடு

"சிந்தனைகள்" **(thoughts, Intents, motives)** - (மத் 9:4; மத் 12:25; லூக்கா 5:22; லூக்கா 6:8; லூக்கா 11:17; யோவான் 2:25).

"தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம்" - (மத் 12:25; மாற்கு 3:24)

லூக்கா - தொகுப்புரை

11 அதிகாரம்

"பெயெல்செபூலைக் கொண்டு நான் பிசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்களே" - பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தேவதூஷணம் கூறும் காரியம். இது மன்னிக்கக்கூடாத பாவம். (மத் 12:24-32; மாற்கு 3:28-30; 1யோவான் 5:16).

"உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்?" - இயேசு பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தவில்லை. அவர்களுடைய பிள்ளைகள் பிசாசின் பிள்ளைகள். ஆகையினால் அவர்கள் பிசாசுகளைத் துரத்தவில்லை. இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் துரத்துகிறார். இதனால் அவர் பரிசுத்த ஆவியானவரால் கிரியை செய்கிறார் என்பது உறுதியாகிறது. (யோவான் 3:1-2) யூதர்களுக்கு எதிராக அவர்களுடைய பிள்ளைகளே நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களுக்கு எதிராகச் சாட்சி கூறுவார்கள்.

"நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" - பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளம்.(மத் 12:28) தேவனுடைய ராஜ்யம் இனிமேல் வரப்போகிறது. எகிப்தின் மந்திரவாதிகள் மோசே செய்த அற்புதங்களைக் கண்டபோது "இது தேவனுடைய விரல்" என்று கூறினார்கள். (யாத் 8:19) கர்த்தருக்கு உருவம் உண்டா இல்லையா என்று வேதபண்டிதர்கள் பலவிதமாகக் கருத்துக் கூறுகிறார்கள். (நீதி 7:3; உன் 5:5).

உவமை எண் - 15

"ஆயுதந்தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிறபோது, அவனுடைய பொருள் பத்திரப் பட்டிருக்கும்................" (லூக்கா 11:21-22). சாத்தானின் தோல்வியை இந்த உவமை விளக்குகிறது. (மத் 12:29; மாற்கு 3:27)

"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" - (மத் 12:30; லூக்கா 9:50)

71. பின்மாறிப் போனவர்களின் நிலைமை - (மத் 12:43; 2பேதுரு 2:20-22)

லூக்கா 11:24 அசுத்தஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்; நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி,

லூக்கா 11:25 அதில் வரும்போது, அது பெருக்கி ஜோடிக்கப்பட்டிருக்கக் கண்டு,

லூக்கா 11:26 திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் என்றார்.

உவமை எண் - 16

"அசுத்தஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்; நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன்........" - (லூக்கா 11:24-26). இரட்சிக்கப்பட்டவர்கள் பின்வாங்கிப் போய்விடக் கூடாது. பின்வாங்கிப் போனவர்களுடைய பின்நிலைமை முன்நிலைமையைவிட மிகவும் மோசமாக இருக்கும்.

பிசாசுகளைப் பற்றிய சில செய்திகள் (லூக்கா 11:24-26)

1. அவை அசுத்தமானவை (லூக்கா 11:24).

2. மனுஷருடைய சரீரத்திற்கு உள்ளே போகும் வெளியே வரும். (லூக்கா 11:24-26)

11 அதிகாரம்

3. அவை நடக்கும் (லூக்கா 11:24)

4. அவை இளைப்பாறுதலைத் தேடும் (லூக்கா 11:24).

5. அவை பேசும் (லூக்கா 11:24).

6. அவை தீர்மானம் பண்ணும் (லூக்கா 11:24).

7. இடங்களை வேறுபடுத்திப் பார்க்கும் (லூக்கா 11:24-26)

8. பிசாசுகள் ஒன்றுக்கொன்று ஐக்கியமாக சேர்ந்திருக்கும். (லூக்கா 11:26).

9. அவை பொல்லாதவை (லூக்கா11:26)

10. அவை மனுஷரை ஆளுகை செய்ய விரும்பும். (லூக்கா11:24-26).

"அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்" - இஸ்ரவேலின் மோசமான நிலைமையை விளக்குவதற்கு இயேசு இந்த உவமையைப் பயன்படுத்துகிறார். (மத் 12:45) இரட்சிக்கப்பட்டு, பின்வாங்கிப் போனவர்களுடைய நிலைமையும் அதிகக் கேடுள்ளதாயிருக்கும். (2பேதுரு 2:20-22; எபி 6:4-9; எபி 10:26-29).

72. பாக்கியவானைக் குறித்து இரண்டு வெவ்வேறு கருத்துக்கள் - (மத் 5:3; லூக் 6:20)

லூக்கா 11:27 அவர் இவைகளைச் சொல்லுகையில், ஜனக் கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீ அவரை நோக்கி; உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சத்தமிட்டுச் சொன்னாள்.

லூக்கா 11:28 அதற்கு அவர்; அப்படியனாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்.

"ஜனக்கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீ" - (லூக்கா 10:38)

"உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள்" - இது இயேசுவின் தாயாகிய மரியாளின்மீது கூறப்பட்ட ஆசீர்வாதம். மனுஷர் மரியாளை உயர்த்துகிறார்கள். ஆனால் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து மரியாளை உயர்த்தவில்லை. தேவன் தம்மிடத்தில் எதைக் கூறுமாறு சொல்லியிருக்கிறாரோ அதையே இயேசு கிறிஸ்து கூறுகிறார். "தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்" என்று இயேசு கிறிஸ்து அறிவிக்கிறார்.

73. யோனாவின் அடையாளம் - (மத் 12:38)

லூக்கா 11:29 ஜனங்கள் திரளாய்க் கூடிவந்திருக்கிற பொழுது அவர்: இந்தச் சந்ததியார் பொல்லாதவர் களாயிருக்கிறார்கள், அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

லூக்கா 11:30 யோனா நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாயிருந்தது போல, மனுஷகுமாரனும் இந்தச் சந்ததிக்கு அடையாளமாயிருப்பார்.

தீர்க்கதரிசன எண் - 24

"இந்தச் சந்ததியார் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள், அடையாளத்தைத் தேடுகிறார்கள்..............." (லூக்கா 11:29-32) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 11:29-30 ஆவது வசனங்கள் நிறைவேறியுள்ளன. லூக்கா 11:31-32 ஆகிய வசனங்கள் வெளி 20:11-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற நியாயத்தீர்ப்பின்போது நிறைவேறும்.

11 அதிகாரம்

"பொல்லாத சந்ததியார்" - தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்குப் பதிலாக அவர்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள். அவர்களுக்கு அற்புதங்களும், அடையாளங்களும் நடந்தாலும் அவர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதில்லை. பாவத்தை நேசித்து, சத்தியத்தை வெறுக்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்தைத் தேவனுடைய வார்த்தை என்று விசுவாசிக்க வேண்டும். இதை விசுவாசிக்காதவர்கள் அற்புதங்கள் நடந்தாலும், அது தேவனுடைய கிரியை என்று விசுவாசிக்க மாட்டார்கள். தேவனுடைய கிரியைகளைச் சாத்தானுடைய கிரியைகள் என்று கூறிவிடுவார்கள்.

"யோனா" **(Jonas, Jonah)** - (மத் 12:40-42; லூக்கா 2:34)

"இந்தச் சந்ததி" - (மத் 11:16)

74. இயேசு யூதர்களைக் கடிந்து கொள்கிறார் - (மத் 12:41; 11:20)

லூக்கா 11:31 தென்தேசத்து ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க பூமியின் எல்லைகளிலிருந்து வந்தாள்; இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்; ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியரோடெழுந்து நின்று, இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்.

லூக்கா 11:32 யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்; ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று, இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்.

"தென்தேசத்து ராஜஸ்திரீ" **(queen of the south)** - (1இராஜா 10:1; 2நாளா 9:1; மத் 12:42)

"நினிவே" **(Nineve, Nineveh)** - (யோனா 3:5-10; மத் 12:41).

75. கொளுத்தப்பட்ட விளக்கு - (மத் 5:13; மாற்கு 4:21; லூக் 8:16)

லூக்கா 11:33 ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, மறைவிடத்திலாவது, மரக்காலின் கீழேயாவது வைக்காமல், உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படி, அதை விளக்குத்தண்டின் மேல் வைப்பான்.

லூக்கா 11:34 கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்; உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.

லூக்கா 11:35 ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

உவமை எண் - 17

"ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, மறைவிடத்திலாவது, மரக்காலின் கீழேயாவது வைக்காமல், உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படி, அதை விளக்குத்தண்டின்மேல் வைப்பான்............" (லூக்கா 11:33-36). நம்முடைய வெளிச்சம் பிரகாசமாக எரிய வேண்டும். (மத் 5:15-16) தீமையிலிருந்தும், இருட்டிலிருந்தும் நாம் விலகியிருக்க வேண்டும்.

"விளக்கு" **(candle)** - கையில் எடுத்துச் செல்லும் எண்ணெய் விளக்கு. ஆசரிப்புக் கூடாரத்தில் விளக்கு எப்போதும் எரிந்து கொண்டிருக்கும். (யாத் 25:31-40; யாத் 27:20-21).

விளக்குகளின் உருவகப்பயன்பாடுகள்

1. தேவன் (2சாமு 22:29)
2. பரிசுத்த ஆவியானவர் (வெளி 4:5)
3. தேவனுடைய வார்த்தை (சங் 119:105; நீதி 6:23)

11 அதிகாரம்

4. இரட்சிப்பு (ஏசா 62:1)

5. மனுஷனுடைய ஜீவன் (யோபு 18:6; யோபு 21:17; சங் 18:28; நீதி 20:20)

6. மனுஷனுடைய ஆவி (நீதி 20:27)

7. ராஜா (1இராஜா 15:4; சங் 132:17)

8. மனுஷனுடைய கண் (மத் 6:22)

ஆபிகாமின் பலியைக் கடந்து சென்றது அக்கினி ஜுவாலையாகும். அது சாதாரண விளக்கு அல்ல. (ஆதி 15:17) வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் எல்லா விளக்குகளுக்கும் ஒரே மாதிரியாக பொருள்கூறக்கூடாது. மத் 25:1-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருப்பவை உருவகமல்ல. உண்மையிலே விளக்குகள்.

"கண்ணானது சரீரத்தின் விளக்காய் இருக்கிறது" - கண் விளக்கைப் போன்றது. சரீரத்திற்கு வெளிச்சம் தருகிறது (மத் 6:22).

தெளிவு **(single)** - **ἁπλόος** - **haploos** - 573

பெயரடை - தெளிவு (**simple, single, whole, good, and sound**) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் மத் 6:22 -இல் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கண் தெளிவாக இருக்குமென்றால் அதன் பார்வையும் தெளிவாக இருக்கும். பார்க்க வேண்டிய பிரகாரமாகப் பார்க்கும். ஒளியும், இருளும் ஆவிக்குரிய காரியத்தை விளக்குகிறது. ஒளி ஆவிக்குரிய ஞானத்தையும், இருள் ஆவிக்குரிய குருட்டுத்தன்மையையும் குறிக்கும். (மத் 4:16; லூக்கா 1:79; யோவான் 1:5; யோவான் 3:19; யோவான் 8:12; யோவான் 12:35,46; 1யோவான் 1:5-7; 1யோவான் 2:8-11) கண்கள் இச்சைகளினாலும், விபச்சாரத்தினாலும் நிறைந்திருந்தால் அதன் சரீரமும் இருளில் இருக்கும். சரீரத்தின் ஜீவன் குருடாய் இருக்கும். (2பேதுரு 1:9; 2பேதுரு 2:14; 1யோவான்2:15-17; வெளி 3:17-18)

"ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" - இது மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பொறுப்பு. சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கிற நிபந்தனைகளைக் கைக்கொண்டு, நம்மிடத்திலுள்ள வெளிச்சம் இருள் ஆகாதபடிக்கு நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். (2பேதுரு 1:4-10; 1யோவான் 2:15-17; கலா 5:16-26)

76. பரிசேயரின் சுயநீதிக்காக இயேசு அவர்களைக் கடிந்து கொள்கிறார் - (மத் 23)

லூக்கா 11:36 உன் சரீரம் ஒருபுறத்திலும் இருளடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால், ஒரு விளக்கு தன் பிரகாசத்தினாலே உனக்கு வெளிச்சம் கொடுக்கிறது போலே, உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும் என்றார்.

லூக்கா 11:37 அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், பரிசேயன் ஒருவன் தன்னுடனே கூட அவர் பகற்போஜனம் பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்; அவர் போய்ப் பந்தியிருந்தார்.

லூக்கா 11:38 அவர் போஜனம் பண்ணுகிறதற்கு முன் கை கழுவாமலிருந்ததைப் பரிசேயன் கண்டு, ஆச்சரியப்பட்டான்.

லூக்கா 11:39 கர்த்தர் அவனை நோக்கி: பரிசேயராகிய நீங்கள் போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும்பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது.

லூக்கா 11:40 மதிகேடரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும்உண்டாக்கவில்லையோ?

லூக்கா 11:41 உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்.

11 அதிகாரம்

"உன் சரீரம் ஒருபுறத்திலும் இருளடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால், ஒரு விளக்கு தன் பிரகாசத்தினாலே உனக்கு வெளிச்சம் கொடுக்கிறது போலே, உன் சரீர முழுவதும்வெளிச்சமாயிருக்கும்" - நம்முடைய கண்களைப் பரிசுத்தமாக வைத்திருந்தால் நம்முடைய சரீரமும் பரிசுத்தமாக இருக்கும். நம்முடைய சரீரம் பரிசுத்தமாக இருக்கும்போது நமது ஆவியும், ஆத்துமாவும் பரிசுத்தமாக இருக்கும். (ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13; ரோமர் 12:1-2; 1கொரி 3:13-17; 1கொரி 6:19-20; 1கொரி 9:27; 2கொரி 4:10; 2கொரி 7:1; கொலோ 2:11-13; எபே 1:4; எபே 5:25-27; 1தெச 4:3-7; தீத்து 2:11-14)

போஜனம் பண்ணு (dine) - ἀριστάω - aristaoo – 709

வினைச்சொல் - போஜனம் பண்ணு - காலை போஜனம் சாப்பிடுதல் (breakfast) (லூக்கா 14:12; யோவான் 21:12,15)

போஜனம் பண்ணு (sup) - δειπνέω - deipneoo - 1172

வினைச்சொல் - சாப்பாடு பண்ணு, போஜனம் பண்ணு - இரவுபோஜனம் சாப்பிடுதல் (sup, supper) (லூக்கா 17:8; லூக்கா 22:20; 2கொரி 11:25; வெளி 3:20)

"அவர் போஜனம் பண்ணுகிறதற்கு முன் கைகழுவாமலிருந்ததைப் பரிசேயன் கண்டு, ஆச்சரியப்பட்டான்" - மார்க்கத்தலைவர்கள் சிறிய காரியங்களைக்கூடப் பெரிது படுத்துகிறார்கள். ஆனால் முக்கியமான காரியங்களைக் கவனிக்காமல் மறந்து விடுகிறார்கள்.

கழுவு (washed) - βαπτίζω - bapti

வினைச்சொல் - முழுக்கு, கழுவு, ஞானஸ்நானம் பெறு, ஞானஸ்நானம் கொடு, ஸ்நானம் பண்ணு, கைகழுவு (to dip) - இந்த வார்த்தை இரண்டு இடங்களில் "கழுவு" (wash) என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. (மாற்கு 7:4; லூக்கா 11:38) "பேப்டிஸோ" (baptizoo) என்னும் சொல் "பேப்டோ" (baptoo) என்னும் சொல்லிருந்து வந்திருக்கிறது.

கழுவு (wash) - βάπτω - baptoo - 911

வினைச்சொல் - கழுவு

"போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்" - மார்க்கச் சடங்குகளின் பிரகாரமாக கைகளையும், பாத்திரங்களையும், கழுவுகிறார்கள். (மாற்கு 7:4) பரிசேயர்கள் மாய்மாலக்காரர்கள். தங்களுடைய மார்க்கத்தின் சடங்குகளை எல்லோருக்கும் தெரியும் விதமாக விளம்பரப்படுத்தி கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளமோ கொள்ளையினாலும், பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது. (லூக்கா 11:40; மத் 23:1-33)

பொல்லாப்பு (wickedness) - πονηρία - poneeria - 4189

பெண்பால் பெயர்ச்சொல் - துர்குணம், துரோகம், பொல்லாப்பு, துஷ்டத்தனம் (மத் 12:39; லூக்கா 11:29).

மதிகேடர் (fools) - ἄφρων - aphroon - 878

பெயரடை - மதிகேடான, பேதை, புத்தியீன, புத்தியில்லாத, மதியற்ற (senseless ones; without reason; foolish, stupid, acting without intelligence) (லூக்கா 11:40; லூக்கா 12:20; ரோமர் 2:20; 1கொரி 15:36; 2கொரி 11:16,19; எபே 5:17; 1பேதுரு 2:15)

11 அதிகாரம்

"வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ?" - தேவன் மார்க்கத்தின் வெளிப்புறத்தையும், உட்புறத்தையும் விரும்புகிறார். மனுஷனுடைய ஆத்துமாவும், சரீரமும் சுத்தமாக இருக்க வேண்டுமென்பதே கர்த்தருடைய விருப்பம்.

"உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள்" - உங்களுடைய பாத்திரங்களில் உள்ள உணவைத் தேவைப்படுகிறவர்களுக்கு பிச்சையாகக் கொடுங்கள். வெளிப்புறமான சுத்தத்தைப் பற்றி அதிகமாகக் கவலைப்படாதிருங்கள்.

"சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்" - பிச்சைக் கொடுப்பது மிகவும் புனிதமானது என்று பரிசேயர்கள் நினைத்தார்கள். பிச்சை கொடுத்தால் தாங்கள் செய்த பாவங்களெல்லாம் சரியாகிவிடும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அவர்கள் பாவமான காரியங்களைச் செய்தாலும் பிச்சைக் கொடுப்பதின் மூலமாகத் தங்களுடைய பாவங்கள் நீங்கும் என்று நினைக்கிறார்கள்.

77. பரிசேயர், நியாய சாஸ்திரிகள் மீது ஆறு ஐயோக்கள் - (மத் 6:23)

(1) சுயநீதி - (ஏசா 64:6; மத் 23)

லூக்கா 11:42 பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாம் மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசமபாகம் கொடுத்து, நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே.

"பரிசேயரே, உங்களுக்கு ஐயோ" - (மத் 23:29)

(2) தன்னை உயர்த்துவது

லூக்கா 11:43 பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள்.

"ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங் களையும், சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள்" - (மத் 23:6; மாற்கு 12:38-39; லூக்கா 20:46)

(3) மாயமாலம்

லூக்கா 11:44 மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, மறைந்திருக்கிற பிரேதக் குழிகளைப் போலிருக்கிறீர்கள், அவைகள்மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்கிறது என்றார்.

"மறைந்திருக்கிற பிரேக்குழிகளைப் போலிருக்கிறீர்கள், அவைகள்மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்கிறது" - இந்த வாக்கியம் மத் 23:27-28 ஆகிய வசனங்களுக்கு நேர்மாறாக உள்ளது. யூதர்கள் தங்களுடைய பழக்கங்களை மறந்து விடுகிறார்கள். பிரேதக்குழிகளை வெள்ளையடிப்பது அவர்களுடைய வழக்கம். ஆனால் இங்கு அவர்கள் வெள்ளையடிக்காமல் விட்டுவிடுகிறார்கள். அந்த வழியாகப் போகும் மனுஷருக்கு அது பிரேதக்குழி என்று தெரியாமல் அதன்மீதே நடந்துபோகிறார்கள்.

(4) சுமக்கக்கூடாத பாரம்

லூக்கா 11:45 அப்பொழுது நியாய சாஸ்திரிகளில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, நீர் இப்படிச் சொல்லுகிறதினால் எங்களையும் நிந்திக்கிறீரே என்றான்.

லூக்கா 11:46 அதற்கு அவர்: நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, சுமக்க அரிதான சுமைகளை மனுஷர் மேல் சுமத்துகிறீர்கள்; நீங்களோ உங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்தச் சுமைகளைத் தொடவும்மாட்டீர்கள்.

11 அதிகாரம்

"நியாயசாஸ்திரிகள்" (lawyers, teacher of the law) - கல்வியறிவு மிக்கவர்கள். நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு உபதேசிக்கிறவர்கள். நியாயாதிபதிகள். இவர்கள் வேதபாரகராகவும் இருந்தார்கள். எல்லா வேதபாரகரையும் நியாயசாஸ்திரிகள் என்று கூறமுடியாது. (மத் 22:35 = மாற்கு 12:28) நியாயசாஸ்திரிகளை இயேசு கிறிஸ்து பரிசேயரோடும், வேதபாரகரோடும் சேர்க்காமல் தனியாகக் குறிப்பிடுகிறார். (லூக்கா 11:44-52; லூக்கா 7:30; லூக்கா 10:25; லூக்கா 14:3) நியாயசாஸ்திரிகளில் ஒருவன் இயேசுவைப் பின்பற்றினான். (தீத்து 3:13).

நியாயசாஸ்திரிகள் (lawyers) - νομικός - nomikos - 3544

பெயரடை - நியாயசாஸ்திரியான

"சுமக்க அரிதான சுமைகளைமனுஷர்மேல் சுமத்துகிறீர்கள்" - நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டவை போக இன்னும் அநேக பிரமாணங்களை இவர்கள் ஜனங்கள்மீது சுமத்துகிறார்கள். இவை நியாயப்பிரமாணத்தில் எழுதப்படவில்லை. வாய்வழியாகக் கூறப்பட்டு வரும் பிரமாணங்கள். இவற்றைக் கடைப்பிடிப்பதும் கடினம். (அப் 15:10; கலா 2:14)

தொடு (touch) - προσψαύω - prospsauoo - 4379

வினைச்சொல் - தொடு, மெதுவாக தொடுதல், உடம்பில் புண் இருக்கும் இடத்தை மெதுவாகத் தடவுவதுபோன்று தொடுதல் (touch gently, feeling the pulse or some sore place on the body)

(5) இரத்தச்சாட்சிகளின் இரத்தம்

லூக்கா 11:47 உங்களுக்கு ஐயோ, உங்கள் பிதாக்கள் கொலைசெய்த தீர்க்கதரிசிகளுக்குக் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்.

லூக்கா 11:48 ஆகையால் உங்கள் பிதாக்களுடைய கிரியைகளுக்கு நீங்களும் உடன்பட்டவர்களென்று சாட்சியிடுகிறீர்கள்; எப்படியென்றால், உங்கள் பிதாக்கள் அவர்களைக் கொலைசெய்தார்கள், நீங்களோ அவர்களுக்குக் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்.

லூக்கா 11:49 ஆதலால் தேவஞானமானது: நான் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலர்களையும் அவர்களிடத்தில் அனுப்புவேன்; அவர்களில் சிலரைக் கொலைசெய்து, சிலரைத் துன்பப்படுத்துவார்கள்.

லூக்கா 11:50 ஆபேலின் இரத்தமுதல் பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்ட சகரியாவின் இரத்தம் வரைக்கும், உலகத்தோற்ற முதற்கொண்டு சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தப்பழியும் இந்தச் சந்ததியினிடத்தில் கேட்கப்படத் தக்கதாக அப்படிச் செய்வார்கள் என்று சொல்லுகிறது.

லூக்கா 11:51 நிச்சயமாகவே இந்தச் சந்ததியினிடத்தில் அது கேட்கப்படும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்.

"உங்கள் பிதாக்களுடைய கிரியைகளுக்கு நீங்களும் உடன்பட்டவர்களென்று சாட்சியிடுகிறீர்கள்; எப்படியென்றால், உங்கள் பிதாக்கள் அவர்களைக் கொலை செய்தார்கள், நீங்களோ அவர்களுக்குக் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்" - மத் 23:29-32 ஆகிய வசனங்களில் பரிசேயர்கள் தங்கள் பிதாக்களுடைய செய்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை. இந்த வசனத்திலும், தங்களுடைய பிதாக்களுடைய கிரியைகளுக்கு உடன்படுகிறார்கள். அவர்களுடைய துன்மார்க்கமான உபதேசங்களை இவர்களும் உபதேசித்து, அவற்றைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

"தேவஞானம்" - இந்த வார்த்தை இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடும். (மத் 23:34, 1கொரி 1:24,30)

தீர்க்கதரிசன எண் - 25

"நான் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலர்களையும் அவர்களிடத்தில் அனுப்புவேன்............" (லூக்கா 11:49-51) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

11 அதிகாரம்

"தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலர்களையும்" - (அப் 11:27; அப் 15:33)

"அவர்களில் சிலரைக் கொலைசெய்து, சிலரைத் துன்பப்படுத்துவார்கள்" - கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் இந்த வேதவாக்கியம் நிறைவேறிற்று. (அப் 4:1-21; அப் 5:17-42; அப் 6:9-15; அப் 7:54-60; அப் 8:1-4; அப் 9:1-4; அப் 12:1-18; அப் 13:45; அப் 14:1-5; அப் 16:19-40; அப் 17:5; அப் 19:24-41; அப் 21:33-28:31)

"உலகத் தோற்றம்" - (மத் 13:35)

"இந்தச் சந்ததியினிடத்தில் கேட்கப்பட்டது" - (மத் 23:35)

"சகரியா" (Zacharias) - (மத் 23:35)

(6) ஆத்துமாக்களின் அழிவு

லூக்கா 11:52 நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக் கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்.

"அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள்" - ஜனங்களிடமிருந்து தேவனைப் பற்றிய அறிவை எடுத்துப்போட்டார்கள். மனுஷருடைய பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்குமாறு அவர்களை வலியுறுத்தி, தேவனுடைய கற்பனைகளை அவர்களிடத்திலிருந்து எடுத்துப் போடுகிறார்கள். (மத் 15:1-9; மத் 16:6-12)

"நீங்களும் உட்பிரவேசிக் கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடை பண்ணுகிறீர்கள்" - அவர்களும் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு, தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். மற்றவர்களையும் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க விடாமல் துரத்திவிடுகிறார்கள். (மத் 23:13)

78. இயேசுவிற்கு எதிரான சதியாலோசனை - (மத் 12:14; 26:3)

லூக்கா 11:53 இவைகளை அவர்களுக்கு அவர் சொல்லுகையில், வேதபாரகரும் பரிசேயரும் அவர்மேல் குற்றஞ்சாட்டும் பொருட்டு, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்கவேண்டும் என்று உபாயம்பண்ணி அவரை மிகவும் நெருக்கவும்,

லூக்கா 11:54 அநேக காரியங்களைக் குறித்துப் பேசும்படி அவரை ஏவவும் தொடங்கினார்கள்.

"அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்கவேண்டும் என்று உபாயம்பண்ணி அவரை மிகவும் நெருக்கவும், அநேக காரியங்களைக்குறித்துப் பேசும்படி அவரை ஏவவும் தொடங்கினார்கள்" - பரிசேயர்கள் இயேசுவைப் பல காரியங்களைப் பேசுமாறு வலியுறுத்துகிறார்கள். சத்தியத்தைக் கேட்க வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமல்ல. அவரிடத்தில் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க வேண்டும். இதற்காகவே அவரை அதிகமாகப் பேசும்படி கூறுகிறார்கள்.

12 அதிகாரம்

79. மாயமாலத்திற்கு எதிரான எச்சரிப்பு - (மத் 10:26-27)

லூக்கா 12:1 அத்தருணத்திலே அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாகக் கூடி வந்திருக்கையில், அவர் முதலாவது தம்முடைய சீஷரை நோக்கி: நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

லூக்கா 12:2 வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை.

லூக்கா 12:3 ஆதலால், நீங்கள் இருளிலே பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின்மேல் கூறப்படும்.

அநேகமாயிரம் (innumerable multitude) - μυριάς - myrias - 3461

பெண்பால் பெயர்ச்சொல் - அநேகமாயிரம், பதினாயிரம், ஆயிரமாயிரம் (myriads, or tens of thousands of people) - ஒருவரையொருவர் மிதிக்கத்தக்க அளவிற்கு கூடியிருக்கும் ஜனங்கள்.

"நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" - இயேசு கிறிஸ்து வேறொரு வேளையில் இக்காரியத்தைக் கூறியிருக்கிறார். (மத் 16:6)

"பரிசேயருடைய புளித்தமாவு" - இது பரிசேயருடைய கள்ளஉபதேசங்களைக் குறிக்கும். தேவனுடைய வார்த்தையை ஆவிக்குரிய ரீதியாக வியாக்கியானம் பண்ணுவதற்குப் பதிலாக மனுஷருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் வியாக்கியானம் பண்ணுதல். (மத் 15:1-9; மத் 16:6-12; மத் 23:1-33; லூக்கா 11:37-52) பரிசேயரின் கள்ளஉபதேசங்கள் "மாயம்" (hypocrisy) என்று கூறப்பட்டிருக்கிறது. பரிசேயருக்கு வேதத்தின் உபதேசம் தெரியும். அவர்கள் தேவன்மீது விசுவாசமாக இராமலேயே அவரிடத்தில் விசுவாசமாக இருப்பதாக நடிக்கிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 26

"வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை.............." (லூக்கா 12:2-5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. வெளி 20:11-15 ஆவது வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பின்போது இது முழுமையாக நிறைவேறும்.

"நீங்கள் இருளிலே பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின்மேல் கூறப்படும்" - (மத் 10:26-27; லூக்கா 12:2)

80. மனுஷ பயத்திற்கு எதிரான எச்சரிப்பு - (மத் 10:28-33)

லூக்கா 12:4 என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: சரீரத்தைக் கொலை செய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.

லூக்கா 12:5 நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலைசெய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா - தொகுப்புரை

12 அதிகாரம்

லூக்கா 12:6 இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை.

லூக்கா 12:7 உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகையால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்

லூக்கா 12:8 அன்றியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கைபண்ணுவார்.

லூக்கா 12:9 மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் தேவதூதர் முன்பாக மறுதலிக்கப்படுவான்.

சிநேகிதன் (friend) - φίλος - philos - 5384

பெயரடை - சிநேகிதனாயிருக்கிற, தோழனாகிய (friend, associate) (மத் 11:19; மத் 26:50; லூக்கா 7:34; லூக்கா 12:4; யோவான் 11:11; யோவான் 15:13-15).

"சரீரத்தைக் கொலை செய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" - மனுஷனால் சரீரத்தைத்தான் கொல்ல முடியும். அவனால் ஆத்துமாவையோ ஆவியையோ கொல்லமுடியாது. அவை நித்தியமானவை. (1பேதுரு 3:4)

"நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவர்" - மரித்த சரீரத்தை மனுஷனால் சவக்குழியில்தான் தள்ளமுடியும். ஆனால் தேவனோ நரகத்தில் தள்ளிவிடுவார். (வெளி 20:11-15; சங் 9:17).

நரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம், எரிகிற அக்கினிக்கடல் (வெளி 19:20; வெளி 20:10-15; வெளி 21:8).

நரகத்தைப் பற்றி ஒருசில காரியங்கள்

1. ஒருசிலருக்கு மட்டுமே நரகம் நியமிக்கப்பட்டிருக்கிறது. (மத் 5:22; மத் 23:15,33).
2. பாவத்திலிருந்து மன்னிக்கப்பட்டு, மறுபடியும் பிறக்கிறவர்கள் நரகத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். (மத் 5:29-30; மத் 18:9; வெளி 21:8).
3. சரீரமும், ஆத்துமாவும் நரகத்திற்குப் போகும். (மத் 10:28; லூக்கா 12:5).
4. நரகம் அழிவின் இடம். (மத் 23:33; மத் 25:41,46; வெளி 14:9-11; வெளி 19:20; வெளி 20:11-15; வெளி 21:8; ஏசா 66:22-24).
5. நியாயத்தீர்ப்பு வரும் வரையிலும் சரீரங்கள் நரகத்தில் தள்ளப்படும். (வெளி 20:11-15).
6. ஒருவனை நரகத்திற்குள் தள்ளுவதற்குத் தேவனுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. (லூக்கா 12:5; மத் 10:28).
7. நரகம் எரிகிற அக்கினி. (யாக் 3:6).
8. துன்மார்க்கர் மட்டுமே நரகத்திற்குப் போவார்கள். (வெளி 20:11-15; வெளி 21:8; சங் 9:17).
9. நரகத்தின் தண்டனை வெவ்வேறு அளவில் இருக்கும். (வெளி 20:13; மத் 23:14-15)
10. மனுஷர் மனந்திரும்பி, நரக ஆக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். (மத் 3:2-8; மத் 23:33).
11. நரகத்தின் அக்கினி அவியாது. அங்கு புழு சாகாது. (மாற்கு 9:43-49; மத் 25:41,46; வெளி 14:9-11; வெளி 20:10-15).

12 அதிகாரம்

12. நரகத்தின் அக்கினி, தண்டனை, நியாயத்தீர்ப்பு, அழிவு ஆகியவை நித்தியமானவை. (மத் 25:41,46; மாற்கு 3:29; மாற்கு 9:43-49; எபி 6:2; யூதா 1:7; வெளி 14:9-11; தானி 12:2).

13. நரகத்தில் அழுகையும், வேதனையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (மத் 8:12; மத் 13:42,50; மத் 24:51).

14. ஜனங்கள் நரகத்திற்குள் உயிரோடு தள்ளப்படுவார்கள். (வெளி 19:20; வெளி 20:11-15).

15. பாதாளத்தில் **(tartarus)** - (2பேதுரு 2:4; யூதா 1:6-7), **(the abyss)** (லூக்கா 8:31; வெளி 9; வெளி 20:3) இருக்கும் துன்மார்க்கர் நரகத்திலே தள்ளப்படுவார்கள். (வெளி 20:10-15).

16. நரகத்தில் அக்கினியும், கந்தகமும் எரிந்து கொண்டிருக்கும். (வெளி 14:9-11; வெளி 20:10-15).

"இரண்டுகாசு" - (மத் 10:29)

"உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்படிருக்கிறது" - தேவனுடைய பராமரிப்பையும், அவர் நம்மீது காண்பிக்கும் கவனிப்பையும் இந்த வாக்கியம் குறிக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 27

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கை பண்ணுவார்............" (லூக்கா 12:8-10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. வெளி20:11-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நியாயத் தீர்ப்பின்போது இது முழுமையாக நிறைவேறும்.

81. மன்னிக்கக்கூடாத பாவம் - (மத் 12:31)

லூக்கா 12:10 எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான விசேஷத்தைச் சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப் படும்; பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணஞ் சொல்லுகிறவனுக்கோ மன்னிக்கப்படுவதில்லை.

"பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணஞ் சொல்லுகிறவனுக்கோ மன்னிக்கப்படுவதில்லை" - (மத் 12:31-32; மாற்கு 3:28-29)

82. சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பைப் பற்றிய முன்னறிவிப்பு - (மத் 10:16)

லூக்கா 12:11 அன்றியும், ஜெப ஆலயத் தலைவர்களுக்கும் துரைத்தனத் தார்களுக்கும் அதிகாரமுள்ளவர்களுக்கும் முன்பாக உங்களைக் கொண்டுபோய் விடும்போது: எப்படி, என்னத்தை மாறுத்தரமாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப் படாதிருங்கள்.

லூக்கா 12:12 நீங்கள் பேச வேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார் என்றார்.

"துரைத்தனத்தார்கள்" **(magistrates)** - தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு அதிகாரரி. (நியா 18:7; எஸ்றா 7:25; லூக்கா 12:11,58; அப் 16:20-22,35-38; தீத்து 3:1)

"எப்படி, என்னத்தை மாறுத்தரமாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்" - (மத் 6:25)

83. பேராசைக்கு எதிரான எச்சரிப்பு

லூக்கா 12:13 அப்பொழுது ஜனக் கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குக் கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

12 அதிகாரம்

லூக்கா 12:14 அதற்கு அவர்: மனுஷனே, என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவனாகவும் வைத்தவன் யார் என்றார்.

லூக்கா 12:15 பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்.

"ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி" - (உபா 21:15-17)

"பொருளாசை" - "ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" பொருளாசை தடைபண்ணப் பட்டிருக்கிறது. (யாத் 20:17; மத் 6:19-21; ரோமர் 13:9; எபே 5:3; எபி 13:5; 1யோவான் 2:15-17). தலைவர்களும், அதிகாரிகளும், மார்க்கவாதிகளும் பொருளாசையை வெறுக்க வேண்டும். (யாத் 18:21; 1தீமோ 3:3; தீத்து 1:7; 1பேதுரு 5:2) பொருளாசை ஆத்துமாவை அழிக்கும். (1கொரி 5:11; எபே 5:3-5; 1தீமோ 6:9-11; 2பேதுரு 2:3,14). பொருளாசையை நாம் முழுவதுமாக அகற்ற வேண்டும். (கொலோ 3:2-6)

பொருளாசையினால் ஏற்படும் விளைவுகள்

1. பேராசையும், கொலைபாதகமும் (நீதி 1:19; ஏசா 56:11; எரே 22:17)
2. ஏழ்மையும், கலகமும் (நீதி 11:24)
3. ஒடுக்குதலும், முரட்டாட்டமும் (நீதி 22:16; எரே 22:17; மீகா 2:2)
4. தேவனை மறுதலிப்பது (நீதி 30:8-9)
5. அநீதி (ஏசா 1:23; மீகா 7:3)
6. பின்வாங்கிப்போதல் (மீகா 3:11)
7. ஏமாற்றுதல் (மத் 13:22)
8. தீட்டு (மாற்கு 7:21-23)
9. சோதனைகளும், ஆசைகளும் (1தீமோ 6:9-11; 1யோவான் 2:15-17)
10. குறுகிய ஜீவனும், அதன் முடிவும் (எரே 17:11; லூக்கா 12:16-21)

பேராசைக்கு எடுத்துக்காட்டானவர்கள்

1. ஏவாள் - தடைபண்ணப்பட்டிருந்த கனி (ஆதி 3:6)
2. லோத்து - நிலங்கள் (ஆதி 13:10-13)
3. யாக்கோபு - சேஷ்டபுத்திரபாகமும், தகப்பனுடைய ஆசீர்வாதமும் (ஆதி 25:31; ஆதி 27:6-29)
4. பிலேயாம் - வெகுமதிகள் (2பேதுரு 2:15)
5. ஆகான் - பணம் (யோசு 7:21)
6. தாவீது - ஸ்திரீ (2சாமு 11:2-5)
7. ஆகாப் - திராட்சைத்தோட்டம் (1இராஜா 21:2-16)
8. கேயாசி - வெகுமதிகள் (2இராஜா 5:20-27)
9. மதிகேடான ஐசுவரியவான் - பாதுகாப்பு (லூக்கா 12:17)
10. யூதாஸ்காரியோத்து - வெள்ளிக்காசு (மத் 26:15-16)
11. பரிசேயர் - ஐசுவரியங்கள் (லூக்கா 16:14)
12. சீமோன் (Simon Magus) - பரிசுத்த ஆவியானவரின் வல்லமை (அப் 8:18-23)
13. பேலிக்ஸ் (Festus) - பணம் (அப் 24:26)
14. தேமா (Demas) - இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை (2தீமோ 4:10)

12 அதிகாரம்

84. ஐசுவரியமுள்ளவனைப் பற்றிய உவமை

லூக்கா 12:16 அல்லாமலும், ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.

லூக்கா 12:17 அப்பொழுது அவன்: நான் என்னசெய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே:

லூக்கா 12:18 நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து,

லூக்கா 12:19 பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேக பொருட்கள் சேர்த்துவைக்கப் பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான்.

லூக்கா 12:20 தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.

லூக்கா 12:21 தேவனிடத்தில் ஐசுவரியவனாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.

உவமை எண் - 18

"ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது............" (லூக்கா 12:16-21). நம்முடைய ஆஸ்தி நமக்கு ஜீவனல்ல என்பதை இந்த உவமை விளக்குகிறது.

"ஐசுவரியமுள்ள ஒருவன்" - (லூக்கா 10:38)

தானியங்கள் (fruits) - καρπός - karpos - 2590

ஆண்பால் பெயர்ச்சொல் - கனி, பலன், கதிர், விளைச்சல் (crops of the trees, vines, and fields)

"மதிகேடனே" - (லூக்கா 11:40)

"உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்" - தேவனுக்கு நம்முடைய ஆத்துமாவைத் தாம் விரும்பும் எந்த வேளையிலும் எடுத்துக் கொள்ளும் அதிகாரம் உள்ளது. அதை எதிர்த்துக் கேள்வி கேட்கும் உரிமை யாருக்கும் இல்லை.

"அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடைய தாகும்" - இந்தக் கேள்வியை நாம் எப்போதும் நம்மனதிற்குள் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

"தேவனிடத்தில் ஐசுவரியவனாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்" - லூக்கா 12:15 இல் "ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்னும் சத்தியம் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து இங்கு கூறியிருக்கும் உவமை இந்தச் சத்தியத்தை விளக்குகிறது.

85. கவலைப்படுவதற்கு எதிரான பிரமாணம் - (மத் 6:25; லூக் 21:34)

லூக்கா 12:22 பின்னும் அவர் தம்முடைய சீஷரை நோக்கி: இப்படியிருக்கிற படியினால், என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா - தொகுப்புரை

12 அதிகாரம்

லூக்கா 12:23 ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது.

லூக்கா 12:24 காகங்களைக் கவனித்துப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்; பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

லூக்கா 12:25 கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்.

லூக்கா 12:26 மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக் கூடாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன?

லூக்கா 12:27 காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை, என்றாலும் சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 12:28 இப்படியிருக்க, அற்பவிசுவாசிகளே, இன்றைக்குக் காட்டிலிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

லூக்கா 12:29 ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று, நீங்கள் கேளாமலும் சந்தேகப்படாமலும் இருங்கள்.

லூக்கா 12:30 இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித் தேடுகிறார்கள்; இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்.

லூக்கா 12:31 தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

லூக்கா 12:32 பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.

"அவர் தம்முடைய சீஷரை நோக்கி.........என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்".

இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கூறிய இந்த உபதேசத்தில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சத்தியங்களைக் காணலாம்.

1. மாய்மாலத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.(லூக்கா 12:1)
2. எல்லா இரகசியங்களும் வெளிப்படுத்தப்படும். (லூக்கா 12:2-3).
3. மனுஷனுக்குப் பயப்படவேண்டாம். தேவனுக்கு மட்டுமே பயப்படவேண்டும். (லூக்கா 12:4-5).
4. தேவனுடைய பராமரிப்பு எல்லோருக்கும் கிடைக்கும். (லூக்கா 12:7)
5. கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும். (லூக்கா 12:8-9).
6. பரிசுத்த ஆவியானவரைக் கனம்பண்ண வேண்டும். (லூக்கா 12:10).
7. பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும். (லூக்கா 12:12)

12 அதிகாரம்

8. மற்றவர்களுடைய வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு முன்நிற்கக்கூடாது. (லூக்கா 12:13-14)

9. பேராசையைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். (லூக்கா 12:15).

10. ஆஸ்தியைவிட ஜீவன் உயர்ந்தது. (லூக்கா 12:15)

11. ஆஸ்தியில் பாதுகாப்பு இல்லை. (லூக்கா 12:20).

12. ஐசுவரியத்தை நாடக்கூடாது. (லூக்கா 12:15-21)

13. ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது. (லூக்கா 12:15-21).

14. நமது ஜீவன் நிலையற்றது. (லூக்கா 12:18-20).

15. மரணம் உறுதி. (லூக்கா 12:20).

16. நீண்டகாலம் ஜீவிக்கலாம் என்னும் மனுஷனுடைய திட்டம் வீணானது. (லூக்கா 12:18-21; சங் 91).

17. தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும். (லூக்கா 12:20-21)

18. நமது ஐசுவரியங்களை ஞானமாக பயன்படுத்த வேண்டும். (லூக்கா 12:20).

19. சரீரத்தைவிட ஆத்துமாவை நன்றாகப் பராமரிக்க வேண்டும். (லூக்கா 12:18-21).

20. ஆவியை அழித்துப்போட்டு, ஐசுவரியத்தைத் தேடக்கூடாது. (லூக்கா 12:18-20).

21. ஐசுவரியத்தைத் தேடுவதற்காக ஜீவனை வீணாக்கக்கூடாது. முக்கியமான காரியங்களுக்கு நம் வாழ்வில் முன்னுரிமை தரவேண்டும். (லூக்கா 12:16-21)

22. இந்தப் பூமியில் ஐசுவரியங்களைச் சேர்த்து வைப்பது நமது ஆத்துமாவை அழித்துப் போடும். (லூக்கா 12:21,33-34).

23. நமது ஜீவியத்தின் தேவைகளுக்காகக் கவலைப்படக் கூடாது. (லூக்கா 12:22-30; மத் 6:25-34).

24. ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவன் விசேஷித்தது. (லூக்கா 12:23)

25. உடையைப் பார்க்கிலும் சரீரம் விசேஷித்தது. (லூக்கா 12:23).

26. பறவைகளைப் பார்க்கிலும் மனுஷர் விசேஷித்தவர். (லூக்கா 12:24).

27. கவலைப்படுவது பாவம். (லூக்கா 12:22,25-26).

28. காட்டுப்புஷ்பங்களை விட தேவன் மனுஷர்மீது அதிக அக்கரையுள்ளவராக இருக்கிறார். (லூக்கா 12:27-28).

29. சந்தேகப்படாமல் ஜீவிக்க வேண்டும். (லூக்கா 12:28-29)

30. முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடவேண்டும். அப்போது உலக ஆசீர்வாதங்கள் நமக்குக்கூடக் கொடுக்கப்படும். (லூக்கா 12:29-31).

31. நம்முடைய எல்லாத் தேவைகளையும் தேவன் அறிந்திருக்கிறார். (லூக்கா 12:29-31).

32. வருங்காலத்திற்காகப் பயப்படக்கூடாது. (லூக்கா 12:32)

33. தம்முடைய பிள்ளைகளைத் தமது ராஜ்ஜியத்தில் சேர்ப்பது தேவனுக்குப் பிரியமான காரியம். (லூக்கா 12:32)

34. பரலோகத்தில் சேர்த்து வைக்கப் பட்டிருக்கும் பொக்கிஷங்கள் நிலைத்திருக்கும். (லூக்கா 12:33-34)

35. கிறிஸ்துவின் வருகைக்காக நாம் காத்திருக்கிற மனுஷரைப் போல இருக்க வேண்டும். (லூக்கா12:35-38)

12 அதிகாரம்

36. கிறிஸ்துவின் வருகைக்காக நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். (லூக்கா 12:39-40)

37. கிறிஸ்துவின் வருகைக்காக உண்மையும், விவேகமும் உள்ள விசாரணைக்காரராக இருக்க வேண்டும். (லூக்கா 12:41-48)

38. நமக்கு விரோதமாக இருக்கிறவர்களோடு ஒப்புரவாக வேண்டும். (லூக்கா 12:49-53)

39. காலத்தை அறிந்து கொள்ளுங்கள் (லூக்கா 12:54-57)

40. எல்லா ஜனங்களோடும் சமாதானமாக ஜீவனம் பண்ணுங்கள். (லூக்கா 12:58-59).

உவமை எண் - 19

"காகங்களைக் கவனித்துப்பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்; பறவைகளைப்பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" (லூக்கா 12:24). கவலைப்படக்கூடாது என்பதை இந்த உவமை விளக்குகிறது.

உவமை எண் - 20

"காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறது மில்லை, நூற்கிறதுமில்லை, என்றாலும் சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை" (லூக்கா 12:27) கவலைப்படக்கூடாது என்பதை இந்த உவமை விளக்குகிறது.

மனுஷர் கவனித்துப் பார்க்க வேண்டிய காரியங்கள்

1. தேவன் (உபா 4:39; உபா 8:5)
2. தேவனுடைய நன்மை (1சாமு 12:24)
3. தேவனுடைய கிரியைகள் (யோபு 37:14; சங் 8:3)
4. இயேசு கிறிஸ்து (எபி 3:1; எபி 12:3)
5. ஒருவரையொருவர் (எபி 10:24)
6. கடந்த காலத்தையும், வருங்காலத்தையும் (உபா 32:7,29)
7. தங்களுடைய வழிகள் (ஆகாய் 1:5-7)
8. எறும்பையும், அதன் வழிகளையும் (நீதி 6:6)
9. காட்டுப்புஷ்பங்கள் (மத் 6:28)
10. காகங்கள் (லூக்கா 12:24)

"என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று, நீங்கள் கேளாமலும் சந்தேகப்படாமலும் இருங்கள்" - தேவனையும், அவருடைய நீதியையும் நாம் ஆர்வத்தோடு தேடவேண்டும். இதற்கே முக்கியத்துவம் தரவேண்டும். இதைத் தேடும்போது மற்றவைகளெல்லாம் நமக்குக் கூடக் கொடுக்கப்படும். (லூக்கா 12:31; மத் 6:33)

சந்தேகப்படு (doubtful) - μετεωρίζομαι - meteoorizomai - 3349

வினைச்சொல் - சந்தேகப்படு (to raise in mid-air, suspend, fluctuate, be anxious, or be carried about as meteors moved about with the currents, tossed up and down between hope and fear) - சந்தேகப்படுவது புறஜாதியாருடைய பழக்கம். அவர்கள் மாயவித்தைகளையும், அஞ்சனம் பார்க்குதலையும், குறி சொல்லுவதையும், சந்தேகத்தோடே செய்வார்கள். தாங்கள் கூறியது நிறைவேறுமா, நிறைவேறாதா என்னும் நிச்சயம் அவர்களிடத்தில் இராது. இவை பிசாசின் கிரியைகள். பிசாசு பொய் கூறும்.

12 அதிகாரம்

தடைபண்ணப்பட்டிருக்கிற பழக்க வழக்கங்கள்

1. மந்திரவித்தை (Enchantments) (யாத் 7:11,22; யாத் 8:7,18; லேவி 19:26; உபா 18:10; 2நாளா 33:6; 2இராஜா 17:17; 2இராஜா 21:6; ஏசா 47:9,12; எரே 27:9; தானி 1:20)

2. சூனியம் (Witchcraft) (யாத் 22:18; உபா 18:10; 1சாமு 15:23; 2நாளா 33:6; 2இராஜா 9:22; மீகா 5:12; நாகூம் 3:4; கலா 5:19-21)

3. சூனியம் (Sorcery) (யாத் 7:11; ஏசா 47:9,12; ஏசா 57:3; எரே 27:9; தானி 2:2; மல் 3:5; அப் 8:9-11; அப் 13:6-8; வெளி 9:21; வெளி 18:23; வெளி 21:8; வெளி 22:15)

4. நாள்பார்த்தல் (Soothsaying) (ஏசா 2:6; தானி 2:27; தானி 4:7; தானி 5:7,11; மீகா 5:12)

5. குறிசொல்லுதல் (Divination) (எண் 22:7; எண் 23:23; உபா 18:10-14; 2இராஜா 17:17; 1சாமு 6:2; எரே 14:14; எரே 27:9; எரே 29:8; எசே 12:24; எசே 13:6-7,23; எசே 21:22-29; எசே 22:28; மீகா 3:7; சக 10:2; அப் 16:16)

6. சூனியம் (Wizardry) (யாத் 22:18; லேவி 19:31; லேவி 20:6,27; உபா 18:11; 1சாமு 28:3,9; 2இராஜா 21:6; 2இராஜா 23:24; 2நாளா 33:6; ஏசா 19:3)

7. செத்தவர்களிடத்தில் குறிகேட்டல் (Necromancy) (உபா 18:11; ஏசா 8:19; 1சாமு 28;1நாளா 10:13)

8. மந்திரவாதம் (Magic) (ஆதி 41:8,24; யாத் 7:11,22; யாத் 8:7, 18-19; யாத் 9:11; தானி 1:20; தானி 2:2,10,27; தானி 4:7,9; தானி 5:11; அப் 19:19)

9. சன்னதம் கூறுதல் (ஏவல் செய்தல்) (Charm) (உபா 18:11; ஏசா 19:3)

10. ஜோசியம் (Prognostication) (ஏசா 47:13)

11. ஜோசியம் (Observing times) (லேவி 19:26; லேவி 18:10; 2இராஜா 21:6; 2நாளா 33:6)

12. ஜாதகம் (Astrology and star gazing) (ஏசா 47:13; எரே 10:2; தானி 1:20; தானி 2:2,10; தானி 4:7; தானி 5:7-15)

கர்த்தரை நாம் விசுவாசிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவருடைய ஆலோசனையைக் கேட்க வேண்டும். இப்படிச் செய்வதற்குப் பதிலாகப் புறஜாதியார்கள் பிசாசுகளையும், அசுத்த ஆவிகளையும் நம்பி, அவற்றின் ஆலோசனையைக் கேட்கிறார்கள். அவற்றின் முடிவு அழிவு. (லேவி 19:31; லேவி 20:6; உபா 18:11; 1சாமு 28; 2இராஜா 21:6; 2இராஜா 23:24; 1நாளா 10:13; 2நாளா 33:6; ஏசா 8:19; ஏசா 19:3; ஏசா 29:4. 1தீமோ 4:1-8; 2தெச 2:8-12; மத் 24:24; வெளி 13; வெளி 16:13-16; வெளி 19:20).

"சிறுமந்தை" - இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகளின் கூட்டம். (மத் 7:14,21; 1பேதுரு 4:18).

86. ஐசுவரியங்கள் மீது நம்பிக்கை வைப்பதற்கு எதிரான பிரமாணம் - (மத் 6:19)

லூக்கா 12:33 உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை.

12 அதிகாரம்

லூக்கா 12:34 உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

"உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள்" - கர்த்தர் தடை பண்ணியிருக்கும் ஐசுவரியம் நம்மிடத்தில் இருக்குமென்றால் அதை விற்று, பிச்சை கொடுத்து விடவேண்டும். (மத் 6:19; மத் 19:21; லூக்கா 12:21,33-34) நமக்குத் தேவைப்படும் வீடு, வாசலை விற்று, பிச்சை கொடுக்க வேண்டுமென்று இந்த வசனம் கூறவில்லை. (லூக்கா 12:34) தன்னுடைய குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு மனுஷனுக்கு உண்டு. (1தீமோ 5:8) நம்மிடத்தில் பேராசை இருக்கக்கூடாது என்பதே இங்கு வலியுறுத்திக் கூறப்படும் சத்தியமாகும். (லூக்கா 12:13-21)

"பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை" - அரசாங்கத்தின் கஜானாக்களில் பொக்கிஷங்களைப் பணப்பைகளில் சேர்த்து, மூட்டையாகக் கட்டியிருப்பார்கள். பணப்பைகளைப் பற்றிய குறிப்பு சில வேதவசனங்களில் காணப்படுகிறது. (2இராஜா 5:23; 2இராஜா 12:10; யோபு 14:17; யோவான் 12:6; யோவான் 13:29) நாம் இந்த உலகத்தில் ஐசுவரியங்களைச் சேர்ப்பதற்கு முக்கியத்துவம் தராமல் பரலோகத்தில் ஐசுவரியங்களைச் சேர்ப்பதற்கே முக்கியத்துவம் தரவேண்டும். ஏனெனில் நம்முடைய பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே நம்முடைய இருதயமும் இருக்கும்.

87. விழித்திருக்கும் ஊழியக்காரரைப் பற்றிய உவமை - (மத் 25:14; மாற்கு 13:34)

லூக்கா 12:35 உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும்,

லூக்கா 12:36 தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்.

லூக்கா 12:37 எஜமான் வரும் போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 12:38 அவர் இரண்டாம் ஜாமத்திலாவது மூன்றாம் ஜாமத்திலாவது வந்து, அவர்கள் அப்படியே இருக்கக் கண்டால், அவ்வூழியக்காரர் பாக்கியவான்கள்.

தீர்க்கதரிசன எண் - 28

"உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும்............" (லூக்கா 12:35-40) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"அரைகள் கட்டப்பட்டதாகவும்" - பிரயாணத்திற்கு எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். (யாத் 12:11)

"உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும்" - எப்போதும் விழித்திருக்க வேண்டும். எஜமானுடைய வரவை எதிர்பார்த்து, அவரை வரவேற்பதற்காக ஆயத்தமாக இருக்க வேண்டும். (லூக்கா 12:37; மத் 25:1-13).

உவமை எண் - 21

"தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும்இருங்கள்............"(லூக்கா 12:36-38). இயேசு கிறிஸ்து வரும்போது நாம் விழித்திருக்கிறவர்களாகவும், ஆயத்த முள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை இந்த உவமை விளக்குகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வசனம் குறிக்கும் என்றும், சபை எடுத்துக் கொள்ளப்படுவதை இந்த வசனம் குறிக்காது என்றும் சிலர் இந்த வசனத்திற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள்.

12 அதிகாரம்

"எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது" - வெளி 19:1-10 ஆவது வசனங்களில் மணவாட்டியின் கலியாண விருந்து கூறப்பட்டிருக்கிறது. இந்தத் திருமண விருந்திற்குப் பின்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும். (வெளி 19:11-21).

"அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்" - இயேசு கிறிஸ்து தாமே தமது அரையைக் கட்டிக்கொண்டு, தமது ஊழியக்காரருக்கு வெகுமதி அளிப்பார்.

"இரண்டாம் ஜாமம்" - இரவு 9 மணி முதல் நடுஇரவு 12 மணி வரையிலும்.

"மூன்றாம் ஜாமம்" - நடுஇரவு 12 மணி முதல் அதிகாலை 3 மணி வரையிலும்.

88. வீட்டெஜமானைப் பற்றிய உவமை - (மத் 24:43)

லூக்கா 12:39 திருடன் இன்னநேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள்.

லூக்கா 12:40 அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்.

உவமை எண் - 22

"திருடன் இன்னநேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிட வொட்டான்............" (லூக்கா 12:39-40). இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது தேவனுடைய பிள்ளைகள் ஆயத்தமாக இருக்க வேண்டும். (மத் 24:43).

வீட்டெஜமான் (goodman) - οἰκοδεσπότης - oikodespotees - 3617

ஆண்பால் பெயர்ச்சொல் - வீட்டெஜமான் (லூக்கா 9:38)

89. உண்மையில்லாத வேலைக்காரனைப் பற்றிய உவமை - (மத் 24:45)

லூக்கா 12:41 அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, இந்த உவமையை எங்களுக்குமாத்திரம் சொல்லுகிறீரோ, எல்லாருக்கும் சொல்லுகிறீரோ என்று கேட்டான்.

லூக்கா 12:42 அதற்குக் கர்த்தர்: பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன் யாவன்?

லூக்கா 12:43 எஜமான் வரும்போது அப்படியே செய்கிறவனாய்க் காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான்.

லூக்கா 12:44 தனக்குள்ளதெல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 12:45 அந்த ஊழியக்காரனோ, என் எஜமான் வர நாள் செல்லும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு, வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும், புசித்துக் குடித்து வெறிக்கவும் தலைப்பட்டால்,

லூக்கா 12:46 அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும், அந்த ஊழியக்காரனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, உண்மையில்லாதவர்களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்.

12 அதிகாரம்

லூக்கா 12:47 தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்.

லூக்கா 12:48 அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்.

தீர்க்கதரிசன எண் - 29

"பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக் காரன் யாவன்?................" (லூக்கா 12:42-53) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 12:42-48 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. லூக்கா 12:49-53 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன.

உவமை எண் - 23

"பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக் காரன் யாவன்?............." (லூக்கா 12:42-48). இயேசு கிறிஸ்து வரும்போது உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 24:45-51)

"பாக்கியவான்" - இவன் தன்னுடைய சொந்த நன்மையைக் கவனிப்பதற்குப் பதிலாக எஜமானுடைய நன்மையையே அதிகமாக கவனித்தான். உண்மையுள்ளவனாக இருந்தான். ஆகையினால் எஜமான் இவனைக் கனப்படுத்துவான். (லூக்கா 12:45-46)

"தனக்குள்ளே சொல்லிக் கொண்டு" - இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய சத்தியம் நமது இருதயத்திற்குள் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். சபை எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையாக இருந்தாலும் இந்தச் செய்தி நமது இருதயத்திற்குள் எப்போதும் தொனித்துக் கொண்டே இருக்க வேண்டும். (தீத்து 2:13; 1யோவான் 3:1-3).

வேலைக்காரன் (**menservants**) - παῖς - **pais** - 3816

ஆண்பால் பெயர்ச்சொல் - வேலைக்காரர், வேலைக்காரன், தாசன், ஊழியக்காரர் - உண்மையில்லாதவேலைக்காரர்களைக் குறிக்கும் சொல்.

உண்மையில்லாத ஊழியக்காரன் செய்யும் பாவங்கள்

1. அவனுடைய இருதயத்தில் அவனுடைய எஜமானனைப் பற்றிய எண்ணம் இல்லை.
2. தன் வேலைக்காரனை அடிக்கிறான்.
3. பெருந்தீனி தின்கிறான்.
4. புசித்துக் குடிக்கிறான். (கலா 5:19-20; 1கொரி 6:9-11).

"அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும், அந்த ஊழியக்காரனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, உண்மையில்லாதவர்களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்" - இந்த எஜமான் யாரென்று நமக்கு அறிவிக்கப்படவில்லை. நமக்கு எஜமான் இயேசு கிறிஸ்து. அவர் வரும்போது அவர் நம்மை விசாரிப்பார். அவருடைய நன்மைக்குப் பாத்திரவான்களாக நாம் நடந்து கொள்ள வேண்டும். (மத் 24:45-51).

12 அதிகாரம்

"அவனைக் கடினமாய்த் தண்டிப்பார்" - அழுகையும், பற்கடிப்பும் உள்ள நரகத்திற்குத் தள்ளிவிடுவார். (மத் 24:51; மத் 25: 30, 41, 46).

"உண்மையில்லாதவர் களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பார்" - அவிசுவாசிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இடம் நரகம். (வெளி 21:8)

"தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்" - நாம் ஏற்றுக் கொண்ட சத்தியத்தின் பிரகாரம் நமக்கு நியாயத்தீர்ப்பு உண்டு. (லூக்கா 12:47-48, ரோமர் 2:12-16) இந்த ஊழியக்காரனுக்கு எஜமானுடைய சித்தம் தெரியும். இருந்தாலும் அவன் ஆயத்தமாக இல்லை. ஆகையினால் அவனுக்கு அநேக அடிகள் கிடைக்கிறது. யூதருடைய பிரமாணத்தின் பிரகாரமாக அவர்கள் 40 தடவைகள் அடித்தார்கள். (உபா 25:3) இதன்பின்பு, ஒவ்வொரு குற்றத்திற்கும் இதைப் போன்று யூதர்கள் அடிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

"அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான்" - யூதமார்க்கத்து பிரமாணத்தின் பிரகாரம் சிறிய தவறு செய்தவனுக்கு ஒருசில அடிகள் மட்டுமே கிடைக்கும். அதுபோலவே இந்த வசனத்தில் அறியாமல் தவறு செய்கிறவனுக்குச் சில அடிகள் மட்டுமே கிடைக்கிறது. எஜமானுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு வரும்போது அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது தவறு. ஆவிக்குரிய ஜீவியத்தில், நமக்கு சத்தியம் அறிவிக்கப்படுகிறது. சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாமல் போவது நியாயத்தீர்ப்பு ஏதுவான குற்றமாகக் கருதப்படும். (யோவான் 1:13; 1கொரி 14:38).

"எவனிடத்தில் அதிகங் கொடுக்கப் படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்" - லூக்கா 12:47-48 ஆகிய வசனங்களில் விளக்கப்பட்டிருக்கும் மையக்கருத்து இதுதான்.

90. சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பை இயேசு மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (வசனம் 11)

> லூக்கா 12:49 பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்றுவிரும்புகிறேன்.
>
> லூக்கா 12:50 ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப் படுகிறேன்.
>
> லூக்கா 12:51 நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
>
> லூக்கா 12:52 எப்படியெனில், இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்றுபேரும், மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள்.
>
> லூக்கா 12:53 தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருந்திருப்பார்கள் என்றார்.

"பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன்" - (லூக்கா 5:32)

12 அதிகாரம்

அக்கினி உருவகமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கும் விதம்

1. எரிச்சல் (உபா 4:24; எசே 36:5)
2. மனுஷனுடைய கோபம் (நீதி 16:27; சங் 39:3)
3. தேவனுடைய வார்த்தை (எரே 5:14; எரே 23:29)
4. பாவம் (நீதி 6:27; ஏசா 9:18)
5. நாவு (யாக் 3:5-6)
6. ஊழியக்காரர்கள் (சங் 104:4; எபி 1:7)
7. கிறிஸ்து (மல் 3:2)
8. பரிசுத்த ஆவியானவர் (மத் 3:11; வெளி 4:5)
9. உபத்திரவம் (சங் 66:12; 1பேதுரு 1:7)
10. தேவனுடைய கோபம் (ஏசா 31:9; எரே 4:4; எரே 21:12; எசே 36:5)
11. நியாயத்தீர்ப்பு (சக 13:9; ஏசா 10:16-17;எரே 17:27; எரே 50:32)
12. சுவிசேஷத்தின் நிமித்தமாக உபத்திரவமும், பிரிவினையும் (லூக்கா 12:49)

"அது இப்பொழுதே பற்றி எரியவேண்டு மென்றுவிரும்புகிறேன்" - சுவிசேஷத்தின் நிமித்தமாகப் பிரிவினைகளும், உபத்திரவங்களும், கலகங்களும் ஏற்கெனவே துவங்கி விட்டன.

"நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு" - பாடுகளின் ஞானஸ்நானம். (லூக்கா 24:26; அப் 3:18; 1பேதுரு 3:18, மத் 3:6)

நெருக்கப்படு - συνέχω - **synechoo** - 4912

வினைச்சொல் - கூடக்கிட, அடைத்துக்கொள், வருத்தப்பட்டுக்கிட **(pressed)** (அப் 18:5; பிலி 1:23; லூக்கா 22:41-42).

"பிரிவினை" - பிரிவினைக்கு இயேசு கிறிஸ்து காரணமல்ல. சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஜனங்கள் கலகம் பண்ணுவதே பிரிவினைக்குக் காரணம். (2கொரி 2:14-17).

"தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி, மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோத மாய்ப் பிரிந்திருந்திருப்பார்கள்" - சாத்தான் மூலமாக சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பை இந்த வாக்கியம் கூறுகிறது.

91. இயேசு பரிசேயரை மறுபடியும் கடிந்து கொள்கிறார் - (மத் 16:1; மாற்கு 8:10)

லூக்கா 12:54 பின்பு அவர் ஜனங்களை நோக்கி: மேற்கே மேகம் எழும்புகிறதை நீங்கள் காணும்போது, மழை வருமென்று சொல்லுகிறீர்கள்; அந்தப்படியுமாகும்.

லூக்கா 12:55 தென்றல் அடிக்கிறதை நீங்கள் காணும்போது உஷ்ணம் உண்டாகுமென்று சொல்லுகிறீர்கள், அந்தப்படியுமாகும்.

லூக்கா 12:56 மாயக்காரரே, பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, இந்தக் காலத்தையோ நிதானியாமற் போகிறதென்ன?

லூக்கா 12:57 நியாயம் இன்னதென்று நீங்களே தீர்மானியாமலிருக்கிறதென்ன?

"பின்பு அவர் ஜனங்களை நோக்கி" - லூக்கா 12:22-53 ஆகிய வசனங்களை இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு உபதேசம் பண்ணினார். இப்போது லூக்கா 12:54-59 ஆகிய வசனங்களை ஜனங்களுக்கு உபதேசம் பண்ணுகிறார்.

13 அதிகாரம்

"மேற்கே" - மத்தியதரைக்கடலுக்கு மேற்குப் பகுதி. அந்தப் பகுதியில் மேகம் வந்தால் மழை நிச்சயமாக வரும் என்பதற்கு அடையாளம். (1இராஜா 18:43-45)

"தென்றல் அடிக்கிறதை நீங்கள் காணும்போது உஷ்ணம் உண்டாகுமென்று சொல்லுகிறீர்கள்" - தென்றல் என்பது தென்பகுதிக் காற்றைக் குறிக்கும். பாலஸ்தீன தேசத்தின் தென்பகுதியில் பாலைவனம் இருக்கிறது. பாலைவனத்திலிருந்து வரும் காற்று உஷ்ணமாக இருக்கும்.

"மாயக்காரரே, பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, இந்தக் காலத்தையோ நிதானியாமற் போகிறதென்ன?" - ஜனங்களால் நிதானிக்க முடிந்த இரண்டு பொதுவான காரியங்களை இயேசு கிறிஸ்து கூறுகிறார். (லூக்கா 12:54-55) அதன்பின்பு, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய காலத்தை அவர்கள் நிதானிக்க மனதில்லாமல் இருக்கிறதைக் கண்டு, அவர் அவர்களைக் கடிந்து கொள்கிறார். (லூக்கா 12:56-57; மத் 16:1-4)

92. ஒப்புரவாகுதலைக் குறித்து உபதேசம் - (மத் 5:23-26)

லூக்கா 12:58 உனக்கு எதிராளியானவன் உன்னை அதிகாரியினிடத்திற்குக் கொண்டு போகிறபோது, வழியிலேதானே அவனிடத்திலிருந்து விடுதலையாகும்படி பிரயாசப்படு, இல்லாவிட்டால், அவன் உன்னை நியாயாதிபதிக்கு முன்பாகக் கொண்டுபோவான், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக் கொடுப்பான், சேவகன் உன்னைச் சிறைச்சாலையில் போடுவான்.

லூக்கா 12:59 நீ கடைசிக்காசைக் கொடுத்துத் தீர்க்குமட்டும், அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"அதிகாரி" (magistrate, a civil officer) (லூக்கா 12:11).

"உனக்கு எதிராளியானவன் உன்னை அதிகாரியினிடத்திற்குக் கொண்டு போகிறபோது, வழியிலேதானே அவனிடத்திலிருந்து விடுதலையாகும்படி பிரயாசப்படு" - லூக்கா 12 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து 20 கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். அவையாவன: (லூக்கா 12:1,4,5,11, 15,22,24,27,29,31, 32,33,35,36,40,58).

காசு (mite) - λεπτός - leptos - 3016

பெயரடை - காசு - குறைந்த மதிப்புள்ள தாமிரக்காசு (the smallest copper coin)

13 அதிகாரம்

93. நியாயம் தீர்க்காமல் மனந்திரும்ப வேண்டும் -

லூக்கா 13:1 பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்; அந்த வேளையிலே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள்.

லூக்கா 13:2 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களோ?

லூக்கா 13:3 அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.

லூக்கா 13:4 சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள்குற்றவாளிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களோ?

லூக்கா 13:5 அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்றார்.

'பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்" - யோசபஸ் (ஓர்ள்ங்ல்ட்ன்ள்) என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் இதைப் பற்றி எழுதும்போது பிலாத்து கலிலேயரைக் கொலைசெய்ததாக எழுதுகிறார்.

"அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார் களென்று நினைக்கிறீர்களோ?" - கலிலேயர் அதிக உபத்திரவங்களை அனுபவித்தார்கள். இதனால் அவர்கள் மிகப்பெரிய பாவிகளென்று ஜனங்கள் நினைத்தார்கள். இதற்கு இயேசு இவ்வாறு பதில் கூறுகிறார். ஒருவருடைய வாழ்வில் அதிக உபத்திரவங்கள் வருவதினால் அவர்கள் பெரிய பாவிகள் ஆவதில்லை. எல்லோருமே பாவிகள் தான். தேவனுக்கு முன்பாக எல்லோருமே ஆக்கினைத்தீர்ப்பு அடையவேண்டியவர்களே. (லூக்கா 13:3,5; ரோமர் 3:23).

மனந்திரும்பு (Repent) - μετανοέω - metanoeoo - 3340

வினைச்சொல் - மனந்திரும்பு, மனஸ்தாபப்படு - தேவனுடைய கிருபையையும், மன்னிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு மனந்திரும்புதல் அவசியமாய் இருக்கிறது. (லூக்கா 13:3,5; லூக்கா 15:7; லூக்கா 24:47; அப் 2:38; அப் 3:19; அப் 17:30; மத் 4:17)

மனந் திரும்பியவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. யோசேப்பின் சகோதரர் (ஆதி 50:17)
2. இஸ்ரவேல் (எண் 21:7-9; நியா 2:4; எஸ்றா 9:4-14; நெகே 1:6-7)
3. தாவீது (2சாமு 24:10-17; சங் 51)
4. ஆகாப் (1இராஜா 21:25-29)
5. யோசியா (2இராஜா 22:11-20)
6. மனாசே (2நாளா 33:1-13)
7. நினிவே ஊரார் (யோனா 3; லூக்கா 11:32)
8. யூதர் (மத் 3:6; லூக்கா 3:7-15)
9. கெட்ட குமாரன் (லூக்கா 15:17-21)
10. ஆயக்காரர் (லூக்கா 18:9-14)

13 அதிகாரம்

11. பேதுரு (மத் 26:75; லூக்கா 22:62)

12. கொரிந்தியர் (2கொரி 7:9-11)

தீர்க்கதரிசன எண் - 30

"எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" - (லூக்கா 13:3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களில் சிலர் பிலாத்துவின் கரங்களினால் கலிலேயர் எவ்வாறு மடிந்து போனார்களோ அதுபோலவே மடிந்து போனார்கள். கிபி. 70 ஆம் ஆண்டில் இந்தத் தீர்க்கதரிசனம் ரோமர்கள் மூலமாக யூதருக்கு நிறைவேறிற்று. யூதர்கள் பலிகளைச் செலுத்தியபோது அவர்களில் ஏராளமான பேரை ரோமர்கள் கொலைசெய்தார்கள்.

"சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே" - இந்த நிகழ்ச்சியைப் பற்றி எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. அக்காலத்தில் நடைபெற்ற ஒரு முக்கியமான நிகழ்ச்சியான இருக்கலாம்.

தீர்க்கதரிசன எண் - 31

"எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" - (லூக்கா 13:5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. சீலோவாம் கோபுரம் விழுந்து, ஜனங்கள் எப்படி செத்துப்போனார்களோ அதுபோலவே இயேசு கிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களில் சிலரும் செத்துப் போனார்கள். கிபி. 70 ஆம் ஆண்டில் எருசலேமின் கட்டடங்களும், அலங்கங்களும் இடிக்கப்பட்டு விழுந்தபோது ஏராளமான யூதர்கள் செத்துப் போனார்கள்.

94. கனிகொடாத அத்திமரத்தைப் பற்றிய உவமை

லூக்கா 13:6 அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை.

லூக்கா 13:7 அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்.

லூக்கா 13:8 அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன்,

லூக்கா 13:9 கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்.

உவமை எண் - 24

"ஒருவன் தன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை..............." (லூக்கா 13:6-9). இஸ்ரவேலரின் கனிகொடாத தன்மையையும், அவர்கள் கனிகொடாவிட்டால் அழிந்து போவார்கள் என்னும் உண்மையையும் இந்த உவமை விளக்குகிறது. (லூக்கா 13:8-10,25-35; மத் 21:33-46; ஏசா 5:1-7)

"திராட்சைத்தோட்டம்" - பாலஸ்தீன தேசத்திலும், எகிப்து தேசத்திலும் திராட்சைத் தோட்டங்கள் ஏராளமாக இருந்தன.

"இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன், ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு" - இயேசு கிறிஸ்து மூன்று வருஷங்கள் ஜனங்கள் மத்தியிலே ஊழியம் செய்தார். "இந்த வருஷம்" என்பது நான்காம் வருஷத்தைக் குறிக்கும்.

13 அதிகாரம்

"இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது" - 2,000 வருஷங்களாக இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்குச் செவிகொடுக்கவில்லை. அவர்களோடு ஏன் போராடவேண்டும். இதுவரையிலும் இல்லாத அளவிற்கு இப்போது அதிகமாகக் கலகம் பண்ணுகிறார்கள். (லூக்கா 11:47-50; அப் 7:51)

"இனிமேல் இதை வெட்டிப்போடலாம்" - இஸ்ரவேல் ஜனங்களுடைய நியாயத்தீர்ப்பிற்கு முன்பாக அவர்களுக்கு 40 வருஷங்கள் கூட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது. (லூக்கா 21:12-24)

95. இயேசு நிமிரக்கூடாத கூனியை சொஸ்தமாக்குகிறார்

லூக்கா 13:10 ஒரு ஓய்வுநாளில் அவர் ஜெபஆலயத்தில் போதகம்பண்ணிக் கொண்டிருந்தார்.

லூக்கா 13:11 அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்.

லூக்கா 13:12 இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப் பட்டாய் என்று சொல்லி,

லூக்கா 13:13 அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்.

லூக்கா 13:14 இயேசு ஓய்வுநாளிலே சொஸ்தமாக்கின படியால், ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்து, ஜனங்களை நோக்கி: வேலை செய்கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக் கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான்.

லூக்கா 13:15 கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டு போய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா?

லூக்கா 13:16 இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்து விடவேண்டியதில்லையா என்றார்.

லூக்கா 13:17 அவர் அப்படிச் சொன்னபோது, அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள்.ஜனங்களெல்லாரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக் குறித்தும் சந்தோஷப்பட்டார்கள்.

"பலவீனப்படுத்தும் ஆவி" - ஒரு அசுத்த ஆவி அந்த ஸ்திரீயைப் பதினெட்டு வருஷமாகப் பிடித்திருந்தது. சாத்தான் பதினெட்டு வருஷமாக அவளைக் கட்டியிருந்தான். (லூக்கா 13:16) பிசாசே மனுஷருடைய நோய்களுக்கும், பலவீனங்களுக்கும் காரணமானவன். நோய்கள் தேவனிடமிருந்து வரவில்லை. பிசாசுகளிடமிருந்தே வருகின்றன. (மத் 4:23-24; யோவான் 10:10; அப் 10:38) எல்லா வியாதிகளையும் பலவீனங்களையும் ஏற்றுக் கொண்டு எல்லா மனுஷரையும் குணமாக்குவதற்காகவே இயேசு கிறிஸ்து வந்திருக்கிறார். (மத் 8:16-17; யோவான் 10:10; 1பேதுரு 2:24; ஏசா 53) மனுஷரை வியாதியிலிருந்து விடுவிப்பது தேவனுடைய கிரியை.

"பலவீனம்"- (மத் 8:17)

"ஜெப ஆலயத் தலைவன் கோபமடைந்தான்" - மார்க்கத்தலைவர்கள் கோபப்படக்கூடாது. நீடிய பொறுமையுடன் இருக்க வேண்டும். தேவனுடைய அன்பை வெளிப்படுத்த வேண்டும். ஜெபாலயத் தலைவனுக்கு மனுஷருடைய தேவையை விட சட்டதிட்டங்களே முக்கியமானவையாகத் தோன்றிற்று.

13 அதிகாரம்

"இயேசு ஒய்வு நாளிலே சொஸ்தமாக்கினார்" - யூதமார்க்கத் தலைவர்களுக்கு இயேசு கிறிஸ்து செய்த காரியம் மிகப்பெரிய குற்றமாகத் தெரிகிறது. (மத் 12:1-12; மாற்கு 1:21-27; மாற்கு 2:23-28; மாற்கு 3:1-7; லூக்கா 6:1-9; லூக்கா 13:10-16; லூக்கா 14:1-6; யோவான் 5:1-18; யோவான் 7:22-23; யோவான் 9:1-16).

"வெட்கப்பட்டார்கள்" - மாய்மாலமும், பாவமும் மனுஷருக்கு வெட்கத்தைக் கொடுக்கும். (எஸ்றா 9:6)

மனுஷரை வெட்கப்படுத்தும் காரியங்கள்

1. பின்மாற்றம் (எரே 17:13),
2. மனுஷ பயம் (நீதி 29:25; மாற்கு 8:38)
3. சுயம் (லூக்கா 14:9)
4. தவறான செய்கை (ரோமர் 6:21)

மனுஷரை வெட்கப்படுத்தாத காரியங்கள்

1. பாவமறியாத சுபாவம் (சங் 2:25)
2. தேவனைச் சார்ந்திருப்பது (சங் 25:2)
3. நம்பிக்கை (ரோமர் 5:5)
4. சுவிசேஷம் (ரோமர் 1:16)
5. விசுவாசம் (ரோமர் 9:33; ரோமர் 10:11)
6. வளர்ச்சி (2தீமோ 2:15),
7. நீதி (சங் 119:6)

இயேசு கிறிஸ்துவிடத்தில் விசுவாசமாக இருக்கிறவன் எவனோ அவன் வெட்கப் படுவதில்லை. (ரோமர் 9:33) வெட்கத்திலிருந்தும், மாய்மாலத்திலிருந்தும் விடுதலை பெறவேண்டுமென்றால் நாம் சத்தியத்தை அறிய வேண்டும். சத்தியம் நம்மை விடுதலையாக்கும். (யோவான் 8:32-36; ரோமர் 1:16)

96. கடுகு விதையின் ஒப்புமை - (மத் 13:31; மாற்கு 4:30)

லூக்கா 13:18 அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யம் எதற்கொப்பாயிருக்கிறது; அதை எதற்கு ஒப்பிடுவேன்?

லூக்கா 13:19 அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் தோட்டத்திலே போட்டான்; அது வளர்ந்து, பெரிய மரமாயிற்று; ஆகாயத்துப் பறவைகள் வந்து, அதின் கிளைகளில் அடைந்தது என்றார்.

"தேவனுடைய ராஜ்யம் எதற்கொப்பாயிருக்கிறது; அதை எதற்கு ஒப்பிடுவேன்?" - (மத் 4:17; மத் 19:24).

உவமை எண் - 25

"அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் தோட்டத்திலே போட்டான்; அது வளர்ந்து, பெரிய மரமாயிற்று; ஆகாயத்துப் பறவைகள் வந்து, அதின் கிளைகளில் அடைந்தது" (லூக்கா 13:19). பரலோக ராஜ்யத்தின் அளவிட முடியாத வளர்ச்சியை இந்த உவமை விளக்குகிறது. (மத் 13:31).

97. புளித்தமாவைப் பற்றிய ஒப்புமை - (மத் 13:13; 16:6; மாற்கு 8:15; லூக் 12:1)

லூக்கா 13:20 மேலும் அவர்: தேவனுடைய ராஜ்யத்தை நான் எதற்கு ஒப்பிடுவேன்?

லூக்கா 13:21 அது புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து முழுவதும் புளிக்கும்வரைக்கும் மூன்றுபடிமாவிலே அடக்கிவைத்தாள் என்றார்.

உவமை எண் - 26

"அது புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து முழுவதும் புளிக்கும்வரைக்கும் மூன்றுபடிமாவிலே அடக்கிவைத்தாள்" (லூக்கா 13:21). தேவனுடைய ராஜ்யத்தில் காணப்படும் கலப்படத்தை இந்த உவமை விளக்குகிறது. (மத் 13:33)

13 அதிகாரம்

98 கிரியை செய்யாமல் பேச மட்டும் செய்வதற்கு எதிரான எச்சரிப்பு - (மத் 7:13-23)

லூக்கா 13:22 அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது, பட்டணங்கள் தோறும் கிராமங்கள்தோறும் உபதேசம் பண்ணிக்கொண்டு போனார்.

லூக்கா 13:23 அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, இரட்சிக்கப் படுகிறவர்கள் சிலபேர்தானோ என்று கேட்டான்; அதற்கு அவர்:

லூக்கா 13:24 இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 13:25 வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும் போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார்.

லூக்கா 13:26 அப்பொழுது நீங்கள்: உம்முடைய சமுகத்தில் போஜனபானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே என்று சொல்லுவீர்கள்.

லூக்கா 13:27 ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது" - எருசலேமிற்கு இயேசு கிறிஸ்து மேற்கொண்ட கடைசிப் பிரயாணம். தமது சுவிசேஷ ஊழியத்தை இதுவரையிலும் நிறைவேற்றி விட்டு, தமது பாடுகளை அனுபவிக்கும் இறுதி ஊழியத்திற்கு இயேசு கிறிஸ்து முன்னேறிச் செல்கிறார். (கொலோ2:14-17; 1பேதுரு 2:24)

"இரட்சிக்கப்படுகிறவர்கள் சில பேர்தானோ" - (மத் 7:14)

"இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்" - பிரயாசப்படுதல் என்பதைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச்சொல் "அக்கோனிசோமாய்" **(agoonizomai)** ஆகும். இதற்கு நான்கு விதமான பொருள் உண்டு. அவையாவன:

1. போட்டியில் கலந்து கொள்ளுதல்
2. எதிராளியோடு சண்டையிடுதல்
3. துன்பங்களுக்கும், பாடுகளுக்கும், ஆபத்துக்களுக்கும் நடுவில் போராடுதல்
4. வெற்றி பெற்று பரிசைப் பெறுவோம் என்னும் வைராக்கியத்தோடு தொடர்ந்து போராடுதல்.

பிரயாசப்படு (Strive) - ἀγωνίζομαι - **agoonizomai** - 75

வினைச்சொல் - போராடு

(அ) சண்டையிடு. (யோவா. 18:36)

(ஆ) பிரயாசப்படு. (கொலோ. 1:21)

தீர்க்கதரிசன எண் - 32

"அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும்................" (லூக்கா 13:24-30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை.

13 அதிகாரம்

ஜனங்கள் இரட்சிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணங்கள்

1. தவறான வழியைத் தேடுகிறார்கள் (லூக்கா 13:24; ரோமர் 10:9-10)

2. தவறான காலத்தைத் தேடுகிறார்கள் (லூக்கா 13:25; மத் 7:21).

3. தவறான இடத்தில் தேடுகிறார்கள் (லூக்கா 13:25; வெளி 3:20)

4. தவறாக விண்ணப்பம் பண்ணுகிறார்கள் (லூக்கா 13:26; மத் 7:21).

5. வாயினால் விண்ணப்பம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய இருதயம் தேவனுக்குத் தூரமாக இருக்கிறது. (லூக்கா 13:26; ஏசா 29:13; மத் 15:8).

உவமை எண் - 27

"வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டினபின்பு..............." (லூக்கா 13:25-27). காலம் கடந்த பின்பு, இரட்சிக்கப்பட முடியாது என்பதை இந்த உவமை விளக்குகிறது. (எபி 9:27)

வீட்டெஜமான் (master) - οἰκοδεσπότης - oikodespotees - 3617

ஆண்பால் பெயர்ச்சொல் - வீட்டெஜமான் (லூக்கா 9:38)

"ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார்" (மத் 7:21; மத் 25:11-13)

99. வெறும் வாய்பேச்சின் விளைவுகள் - (மத் 7:21; 8:11; 13:26)

லூக்கா 13:28 நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்.

லூக்கா 13:29 கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து, தேவனுடைய ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள்.

லூக்கா 13:30 அப்பொழுது முந்தினோர் பிந்தினோராவார்கள், பிந்தினோர் முந்தினோராவார்கள் என்றார்.

"நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடையராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்" - நியாயத்தீர்ப்பின்போது இந்தக் காரியங்கள் நிறைவேறும். (லூக்கா 13:24-27, வெளி 20:11-15; வெளி 21:8; மத் 7:21-23). நரகத்தில் எப்படிப்பட்ட வேதனை இருக்குமென்று 7 இடங்களில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. (மத் 8:12; மத் 13:42,50; மத் 22:13; மத் 24:51; மத் 25:30; லூக்கா 13:28) நரகத்தில் பற்கடிப்பு, அழுகை, ஆகியவை உண்டாயிருக்கும் என்று 118 இடங்களில் நாம் வாசித்தறிகிறோம். (யோபு 16:9; சங் 35:16; சங் 37:12; சங் 112:10; புல 2:16; மாற்கு 9:18 முதலிய வசனங்கள்). இவை உருவகமல்ல. உண்மையிலேயே நடைபெறப் போகும் காரியம்.

"அப்பொழுது முந்தினோர் பிந்தினோரா வார்கள், பிந்தினோர் முந்தினோராவார்கள்" - தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். (மத் 19:27-30,மத் 20:1-16.)

13 அதிகாரம்

100. ஏரோதுவை இயேசு கடிந்து கொள்கிறார்

லூக்கா 13:31 அந்த நாளிலே சில பரிசேயர் அவரிடத்தில் வந்து: நீர் இவ்விடத்தை விட்டுப்போய்விடும்; ஏரோது உம்மைக் கொலைசெய்ய மனதாய் இருக்கிறான் என்றார்கள்.

லூக்கா 13:32 அதற்கு அவர்: நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச்சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்.

லூக்கா 13:33 இன்றைக்கும் நாளைக்கும் மறுநாளைக்கும் நான் நடமாடவேண்டும்; எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்துபோகிறதில்லை யென்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்.

மனதாயிரு **(will)** - **θέλω** - **theloo** - 2309

வினைச்சொல் - மனதாயிரு, விரும்பு, கேள், வேண்டுமென்றிரு, சம்மதி, சித்தமாயிரு, இஷ்டமாயிரு **(wish, desire)** - மனதில் தோன்றும் எண்ணம் பின்பு செயல்வடிவம் பெறும்.

தீர்க்கதரிசன எண் - 33

"நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்........................"(லூக்கா13:32-35) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 13:32-33 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. லூக்கா 13:34-35 ஆகிய வசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் ஜனங்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளும்போது இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும். (ரோமர் 11:25-27; சக 12:10-13:1; ஏசா 66:7-8; அப் 15:13-18)

"நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்" - இந்த வசனத்தில் நரி ஏரோதைக் குறிக்கும்.

"நரி" - குகையில் வாழும். (மத் 8:20; லூக்கா 9:58) அழிக்கும் தன்மையுடையவை. (சங் 63:10; உன் 2:15, நெகே 4:3) சிம்சோன் நரிகளைப் பயன்படுத்தி தன் விரோதிகளை அழித்தான். (நியா 15:4) கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறிப்பதற்கு நரி என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எசே 13:4)

நிறைவேற்று **(perfected)** - **τελειόω** - **teleiooo** - 5048

வினைச்சொல் - முடி, தேறு, நிறைவேற்று, பூரணப்படுத்து **(to complete, finish, bring to an end)** - இயேசு கிறிஸ்து இரண்டு நாட்களுக்குக் கிரியை செய்யப் போகிறார். மூன்றாம் நாளில் தமது ஜீவனை ஒப்புக் கொடுப்பார். யோவான் 11:40-44 ஆகிய வசனங்களின் அற்புதங்கள் நிறைவடைகின்றன. இயேசு கிறிஸ்து செய்த பல அற்புதங்கள் அவருடைய ஊழியத்தை உறுதி பண்ணுகின்றது. (லூக்கா 13:33). இயேசு கிறிஸ்துவின் கிரியைகள் மூன்று நாளில் நிறைவு பெறும். அத்துடன் ஏரோதுவின் தேசத்திலும், பிலாத்துவின் ஆளுகையிலும் இயேசு கிறிஸ்துவிற்கு நியமிக்கப்பட்டிருந்த காலமும் நிறைவு பெறும். (லூக்கா 23:5-12)

"இன்றைக்கும் நாளைக்கும் மறுநாளைக்கும் நான் நடமாடவேண்டும்" - எருசலேமிலிருந்து மூன்று நாட்கள் பிரயாணம்.

101. இயேசு எருசலேமிற்காக அழுகிறார் - (மத் 23:37; லூக் 19:41; 21:12)

லூக்கா 13:34 எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப் பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று.

13 அதிகாரம்

லூக்கா 13:35 இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்; கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர் களைக் கல்லெறிகிறவளே..............." - (மத் 23:37-39)

"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" - தானி 9:24-27 -இல் கூறப்பட்டிருக்கிற 69 ஆவது வாரத்தின் கடைசியில் இஸ்ரவேல் தேசமாக இராதவாறு அழிக்கப்படும். தேவன் தானியேல் கூறியிருக்கும் 70 ஆவது வாரத்தின் காரியங்களை நிறைவேற்றுவார். கடைசி ஏழு வருஷங்களில் வெளி 6:1-19:21; தானி 9:27; மத் 24:15-31 ஆகிய வசனங்களும் மற்ற தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும்.

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள்" - (வெளி 1:7; வெளி 19:11-21; சக 14:1-5)

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர்" - சங் 118:26 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொல் "ஈலோஜீயோ" **eulogeoo**

ஸ்தோத்திரிக்கப்பட்டவர் **(Blessed)** - **εὐλογέω** - **eulogeoo** - 2127

விணைச்சொல் - ஆசீர்வதி, ஸ்தோத்திரி, துதி **(praise, bless, blessing, blessed, praised)** (லூக்கா 1:64) இந்தச் சொல் 44 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

பாக்கியவான் என்னும் சொல்லும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்னும் சொல்லும் ஒன்றல்ல. பாக்கியவானுடைய கிரேக்கச் சொல் "மக்காரீயோஸ்" **(makarios)**

பாக்கியம் **(blessed)** - **μακάριος** - **makarios** - 3107

ஆண்பால் பெயர்ச்சொல் - பாக்கியம் **(blessed, happy, happier)** இந்தச் சொல் 49 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

14 அதிகாரம்

102. இயேசு ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறார்

லூக்கா 14:1 ஒரு ஓய்வுநாளிலே பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே அவர்போஜனம் பண்ணும் படிக்குப் போயிருந்தார்.

லூக்கா 14:2 அப்பொழுது நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான். என்ன செய்வாரோவென்று ஜனங்கள் அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்.

லூக்கா 14:3 இயேசு நியாய சாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வு நாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்.

லூக்கா 14:4 அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள் அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டு,

லூக்கா 14:5 அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ என்றார்.

லூக்கா 14:6 அதற்கு உத்தரவுசொல்ல அவர்களால் கூடாமற்போயிற்று.

"பரிசேயரில் தலைவனாகிய ஒருவன்" - இவன் யூதருடைய அதிகாரியாக இருக்கலாம். அல்லது ஆலோசனைச் சங்கத்தில் ஒரு மூப்பனாக இருக்கலாம். (யோவான் 3:1; யோவான் 19:38).

"ஜனங்கள் அவர்மேல் நோக்கமாய் இருந்தார்கள்" - இயேசு கிறிஸ்து செய்யப்போகிற காரியங்களைப் பார்ப்பதற்கு ஆவலாக இருந்தார்கள்.

நீர்க்கோவை வியாதி (dropsy) - ὑδρωπικός - hydroopikos - 5203

பெரைடை - நீர்க்கோவை வியாதி (dropsical) - சரீரத்தில் தண்ணீர் சத்து அதிகமாக இருப்பதினால் உடம்பு உப்பிக்காணப்படுதல்.

"ஓய்வுநாள்" - (லூக்கா 13:14)

"அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டார்" - வியாதியாக இருந்த மனுஷனுடைய சரீரம் உப்பியிருந்தது. இயேசு அவனைச் சொஸ்தமாக்கியவுடன் அவனுடைய உப்பிய சரீரம் வற்றிவிட்டது. இயேசு கிறிஸ்து சொஸ்தமாக்கும்போது வியாதியஸ்தர்கள் உடனடியாக சுகமடைகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகவோ, தவணை முறையிலோ இயேசு சுகமாக்குவதில்லை. ஒருசமயம், இயேசு கிறிஸ்து குருடன்மீது இரண்டு முறை தமது கரங்களை வைத்து ஜெபித்ததாக வாசிக்கிறோம். (மாற்கு 8:23-25) இயேசு கிறிஸ்து ஒரு சிறுபிள்ளையைச் சாகிறதற்கு முன்பாக குணமாக்கினார். (யோவான் 4:51-52) இவ்விரண்டு இடங்களிலுமே சுகமாதல் உடனடியாக நடைபெற்றது.

"உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ" - இயேசு கிறிஸ்து எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கூறுவார் என்று பரிசேயருக்கு நன்றாக தெரியும். ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா என்னும் கேள்வியைக் கேட்டவரே இயேசு கிறிஸ்துதான். பரிசேயரும், நியாயசாஸ்திரிகளும் இயேசுவின் கேள்விக்குப் பதில் கூறாமல் பேசாமல் இருந்தார்கள். அவர்களால் பதில் கூறமுடியாது. இயேசு கிறிஸ்து ஓய்வுநாளில் ஒரு வியாதியஸ்தனைக் குணமாக்கினார். ஆனால் அவர்களோ ஓய்வுநாளில் பல்வேறு வேலைகளைச் செய்கிறார்கள். அவர்களுடைய கண்களில் உத்திரம் இருக்கிறது. யூதர்கள் ஓய்வுநாளில் விசேஷித்த போஜனங்களைப் புசித்து, ஓய்வுநாள் ஆசரிப்பார்கள். அவர்கள் ஓய்வுநாளைக் கொண்டாடுகிறார்களா அல்லது தங்களுடைய வயிறுகளைக் கொண்டாடுகிறார்களா.

லூக்கா - தொகுப்புரை

14 அதிகாரம்

103. தாழ்மையைப் பற்றிய உபதேசம் - (லூக் 9:46)

லூக்கா 14:7 விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்த்து, அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்:

லூக்கா 14:8 ஒருவனால் கலியாணத்துக்கு நீ அழைக்கப்பட்டிருக்கும் போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே; உன்னிலும் கனமுள்ளவன் ஒருவேளை அவனால் அழைக்கப்பட்டிருப்பான்.

லூக்கா 14:9 அப்பொழுது உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து: இவருக்கு இடங்கொடு என்பான்; அப்பொழுது நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிருக்கும்.

லூக்கா 14:10 நீ அழைக்கப்பட்டிருக்கும் போது, போய், தாழ்ந்த இடத்தில் உட்காரு அப்பொழுது உன்னை அழைத்தவன் வந்து: சிநேகிதனே, உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும்போது , உன்னுடனே கூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாகும்.

லூக்கா 14:11 தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப் படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

உவமை எண் - 28

"ஒருவனால் கலியாணத்துக்கு நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே" - (லூக்கா 14:8-11) இந்த உவமை தாழ்மையை விளக்குகிறது

"பந்தியில் முதன்மையான இடம்" - விசேஷித்த அறைகள் (லூக்கா 14:7-8; லூக்கா 20:46; மத் 23:6) "இடங்கொடு" (லூக்கா 14:9-10) என்னும் வாக்கியத்திலும் இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. விருந்தில் எல்லோருக்கும் இடமிருக்கும். விசேஷித்த விருந்தினர்களுக்கு முதன்மையான இடங்களைக் கொடுத்து அவர்களைக் கௌரவிப்பார்கள்.

சிநேகிதன் **(Friend)** - **φίλος** - **philos** - 5384

பெயரடை - சிநேகிதனாயிருக்கிற, தோழனாகிய

கனம் **(worship)** - **δόξα** - **doxa** - 1391

பெண்பால் பெயர்ச்சொல் - மகிமை, மகத்துவம், துதி, கனம் **(glory, honor, respect)**

"தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிற வன்உயர்த்தப்படுவான்" - லூக்கா 14:7-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற உவமையின் விளக்கம். (லூக்கா 13:30) தன்னைத்தான் உயர்த்துவது தடைபண்ணப் பட்டிருக்கிறது. அது சாபமான பழக்கம். (எசே 31:10-14; ஒப 1:3-4; 2கொரி 10:5,17-18; கலா 6:3; 2தெச 2:4, 8-12; மத் 1:23).

தன்னைத்தான் உயர்த்துகிறவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1. லூசிபர் (ஏசா 14:12-14; எசே 28:11-17; 1தீமோ 3:6)
2. ஆதாமும், ஏவாளும் (ஆதி 3:8; யோபு 31:33)
3. பார்வோன் (யாத் 9:17)
4. கோராகும், அவன் புத்திரரும் (எண் 16)
5. சனகெரிப் (2நாளா 32:9-19)
6. நேபுகாத்நேச்சார் (தானி 4:30; தானி 5:20)

14 அதிகாரம்

7. பெல்ஷாத்சார் (தானி 5)

8. ஆமான் (எஸ் 3:1-15; எஸ் 5:8-10)

9. மாயவித்தைக்காரனாகிய சீமோன் (அப் 8:9)

10. ஏரோது (அப் 12:20-23)

"தன்னைத்தான் உயர்த்துகிறவன்" - (மத் 23:12; லூக்கா 18:14; யாக் 4:10)

104. உண்மையான கிறிஸ்தவ விருந்து - (ஏசா 58:1-14)

லூக்கா 14:12 அன்றியும் அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி: நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், உன் பந்து ஜனங்களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம்; அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்.

லூக்கா 14:13 நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக.

லூக்கா 14:14 அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்.

லூக்கா 14:15 அவரோடேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்டபொழுது, அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்.

"அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி..........." - தம்மை விருந்துக்கு அழைத்த பரிசேயரிடம் இயேசு கிறிஸ்து பேசுகிறார்.

லூக்கா 14:7-11 ஆகிய வசனங்கள் விருந்தினர்களிடம் கூறப்பட்டவை. பரிசேயரிடம் கூறப்பட்டவை அல்ல. இந்த வசனம் விருந்து கொடுக்கும் பரிசேயரிடம் கூறப்பட்டது.

உவமை எண் - 29

"நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது................" (லூக்கா 14:12-14) இந்த உவமை சுயநலமின்மையை விளக்குகிறது. ஐசுவரியவான்களை உபசரிப்பது தவறல்ல. என்றாலும் ஏழைகளையும் தேவையுள்ளோரையும் சந்தித்து, அவர்களுக்கு உதவி புரிவது மிகவும் முக்கியமான காரியம்.

"அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்" - மனுஷர் பதிலுக்குப் பதில் செய்துவிட்டால் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதம் வராது. ஏழைகளுக்கு உதவும்போது அவர்களால் பதிலுக்கு உதவ முடியாது. அப்பேர்ப்பட்ட உதவிகளுக்குத் தேவன் பலன் அளிப்பார். (லூக்கா 14:14; மத் 10:40-42)

தீர்க்கதரிசன எண் - 34

"அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்" - (லூக்கா14:14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்தை இந்தத் தீர்க்கதரிசனம் விளக்குகிறது. நீதிமான்களின் உயிர்த்தெழுதல் அல்லது சபை எடுத்துக் கொள்ளப்படுவதின்போது பரிசுத்தவான்களுக்கு வெகுமதிகள் அளிக்கப்படும். (மத் 16:27; ரோமர் 14:10; 1கொரி 3:11-15; 2கொரி 5:10; வெளி 22:12).

"தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான்" - உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் நித்திய காலமாகத் தேவனுடைய ராஜ்ஜியத்தில் போஜனம் பண்ணுவார்கள். (லூக்கா 22:16,18,30; வெளி 2:7,17; வெளி 19:7-10; வெளி 22:2,14). தேவனும், தேவதூதர்களும் போஜனம் பண்ணுவார்கள். (ஆதி 18:8; ஆதி 19:3; யாத் 24:11; சங் 78:25).

14 அதிகாரம்

105. பெரிய விருந்தைப் பற்றிய உவமை - (மத் 22:1-14)

லூக்கா 14:16 அதற்கு அவர்: ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான்.

லூக்கா 14:17 விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி: நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள், என்று சொல்லென்று அவனை அனுப்பினான்.

லூக்கா 14:18 அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன்: ஒரு வயலைக்கொண்டேன், நான் அகத்தியமாய்ப் போய், அதைப் பார்க்க வேண்டும், என்னை மன்னிக்கும் படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்.

லூக்கா 14:19 வேறொருவன்: ஐந்தேர் மாடு கொண்டேன், அதைச் சோதித்துப் பார்க்கப்போகிறேன், என்னை மன்னிக்கும் படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்.

லூக்கா 14:20 வேறொருவன்: பெண்ணை விவாகம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான்.

லூக்கா 14:21 அந்த ஊழியக்காரன் வந்து, இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா என்றான்.

லூக்கா 14:22 ஊழியக்காரன் அப்படியே செய்து: ஆண்டவரே, நீர் கட்டளையிட்ட படி செய்தாயிற்று, இன்னும் இடம் இருக்கிறது என்றான்.

லூக்கா 14:23 அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக் கொண்டுவா;

லூக்கா 14:24 அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று சொன்னார்.

உவமை எண் - 30

"ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான்................" (லூக்கா 14:16-24) தேவன் செய்த நன்மைகளை நினைத்து அவரை ஸ்தோத்தரிக்காமல் வெறுப்பதை இந்த உவமை விளக்குகிறது.

"அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள்" - பாவிகள் எல்லோரும் இந்தக் காரியத்தில் ஒன்று சேருகிறார்கள். தேவனைச் சேவிக்காமல் இருப்பதற்கும், பாவம் செய்யாமல் பாவத்தை வெறுத்து ஒதுங்கி வராமல் இருப்பதற்கும் ஏதாவது காரணம் கண்டுபிடித்துக் கூறுகிறார்கள்.

போக்குச்சொன்னவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. ஆதாமும், ஏவாளும் (ஆதி 3:12-13)
2. மோசே (யாத் 4:1-12)
3. ஆரோன் (யாத் 32:22-24)
4. கிதியோன் (நியா 6:12-17)
5. எலிசா (1இராஜா 19:19-21)
6. நாகமான் (2இராஜா 5:10-14)
7. எரேமியா (எரே 1:1-10)
8. பேலிக்ஸ் (அப் 24:25)
9. மற்றவர்கள் (மத் 8:21; லூக்கா 9:59-62)

சாக்குப் போக்குச் சொல்லுகிறவர்களுக்கு மன்னிப்பு இல்லை. (உபா 30:11-14; ரோமர் 1:20; ரோமர் 2:1)

14 அதிகாரம்

“ஒரு வயலைக்கொண்டேன், நான் அகத்தியமாய்ப் போய், அதைப் பார்க்கவேண்டும்” - கண்ணால் பார்க்காத ஒரு நிலத்தை யாரும் விலைக்கு வாங்கமாட்டார்கள். அப்படி ஒருவன் வாங்குவது நல்ல வியாபாரம் ஆகாது.

“ஐந்தேர் மாடு கொண்டேன், அதைச் சோதித்துப் பார்க்கப்போகிறேன்” - பார்க்காமல் நிலத்தை வாங்குவதைவிட இது மோசமான காரியம். ஏர்மாடு வாங்குவதற்கு முன்பாக அது நல்ல மாடா, கிழடு மாடா, செக்குமாடா, உழவுமாடா என்பதைச் சோதித்துப் பார்த்துதான் வாங்குவார்கள். இவன் வாங்கிய பின்பு சோதித்துப் பார்க்கிறான்.

“பெண்ணை விவாகம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது” - மற்றவர்களை விட இவன் மிகவும் மோசமாக சாக்குப்போக்குக் கூறுகிறான். இவன் தன் மனைவியோடு 24 மணிநேரமும் இருக்கப்போவதில்லை. ஒருமணி நேரம் வந்து விருந்தில் கலந்து கொள்ளலாம். விருந்து ஆயத்தம் பண்ணினவன் இவனை விவாகரத்து பண்ணிவிட்டு, வரச்சொல்ல வில்லை. விருந்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறான். மனமிருந்தால் மார்க்கமுண்டு.

எஜமான் (master) - οἰκοδεσπότης - oikodespotees - 3617

ஆண்பால் பெயர்ச்சொல் - வீட்டெஜமான், எஜமான் (லூக்கா 9:38)

“கோபமடைந்தான்” - எஜமான் கோபப்படுவதற்குக் காரணம் இருக்கிறது. அவன் யாரையெல்லாம் விருந்திற்கு அழைத்தானோ அவர்கள் எல்லோருமே அவனை அவமானப் படுத்தி விட்டார்கள்.

“நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா” - விருந்து ஏற்கெனவே ஆயத்தமாகிவிட்டது. அதை விருந்தினர்கள் அவசியம் புசிக்க வேண்டும். இல்லையேல் உணவு பாழாய்ப்போய்விடும். இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சுவிசேஷம் முதலாவது அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எல்லோருமே சுவிசேஷத்தைப் புறக்கணித்து விட்டார்கள். (மத் 10:6; மத் 15:24; மத் 21:33-46; யோவான் 1:11-12; ரோமர் 1:16; அப் 13:46) யூதர்கள் புறக்கணித்த சுவிசேஷத்தைப் புறஜாதியார் ஏற்றுக் கொண்டார்கள். (அப் 15:13-18; ரோமர் 11:1-32).

கட்டாயப்படுத்து (compel) - ἀναγκάζω - anankazoo - 315

வினைச்சொல் - வருந்திக் கூட்டிக்கொண்டுவா, கட்டாயப்படுத்து, அவயமிடு, பலவந்தப்படுத்து, கட்டாயம் பண்ணு (to necessitate, drive to, constrain by all means such as force, threats, persuasion, and entreaties) - இந்த வாக்கியம் “கட்டாயப்படுத்து” (compel) என்று 5 இடங்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. (லூக்கா 14:23; அப் 26:11; 2கொரி 12:11; கலா 2:3,14) “வருந்திச்செய்” (constrain) என்று 4 இடங்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. (மத் 14:22; மாற்கு 6:45; அப் 28:19; கலா 6:12).

“வருந்திக் கூட்டிக்கொண்டுவா” - ஜனங்களை வருந்திக் கூட்டிக்கொண்டு வந்தால்தான் வீடு விருந்தினர்களினால் நிறையும். இந்த மனுஷன் என்ன செய்து வருந்திக் கூட்டிக்கொண்டு வந்தான் என்று தெரியவில்லை. கர்த்தர் தமது சுவிசேஷச் செய்தியை அறிவிக்கும்போது சத்தியம், புத்திமதி, கடிந்துகொள்ளுதல், உபதேசம், நீடியபொறுமை, தாழ்மை, அன்பு போன்ற காரியங்களைப் பயன்படுத்தி வருந்திக் கூப்பிடுகிறார். வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து, எச்சரிக்கிறார். நரகத்தின் பாடுகளைக் கூறி துன்மார்க்கரை எச்சரிக்கிறார். நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளலாம் என்று வாக்குத்தத்தம் பண்ணுகிறார்.

14 அதிகாரம்

இயேசு கிறிஸ்து எப்படித்தான் வருந்திக் கூப்பிட்டாலும், ஒருவருடைய சொந்த சித்தத்திற்கு எதிராக அவர் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. வருந்திக் கூப்பிடுதல் அவசியம்தான். ஏனெனில் ஜனங்கள் கீழே விழுந்தால் அவர்களால் எழுந்திருக்க முடியாது. ஆதாமும், ஏவாளும் பாவம்செய்து மொத்த மனுக்குலத்திற்கே சாபத்தைக் கொண்டு வந்துவிட்டார்கள். வருந்திக் கூப்பிட்டாலும், அழைப்பை ஏற்றுக் கொள்ளவதா வேண்டாமா என்று முடிவு பண்ணுவது மனுஷனே. (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

106. சீஷத்துவத்தைப் பற்றி மறுபடியும் பரீட்சை - (மத் 16:24)

லூக்கா 14:25 பின்பு அநேக ஜனங்கள் அவரோடே கூடப் பிரயாணமாய்ப் போகையில், அவர்களிடமாய் அவர் திரும்பிப் பார்த்து:

லூக்கா 14:26 யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.

லூக்கா 14:27 தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.

"அநேக ஜனங்கள் அவரோடே கூடப் பிரயாணமாய்ப் போனார்கள்" - லூக்கா 13:32-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மூன்று நாட்களுக்குப் பின்பு இயேசு கிறிஸ்து தமது கடைசிக்கால ஊழியத்தைச் செய்வதற்காக எருசலேமிற்குப் பிரயாணமாக போகிறார். யூதேயா தேசத்திற்குக் கலிலேயா வழியாகவும், சமாரியா வழியாகவும் போகிறார். (லூக்கா 17:11; லூக்கா 18:31), எரிகோ வழியாகவும் செல்கிறார். (லூக்கா 18:35; லூக்கா 19:1) எருசலேமிற்கு செல்லும் பாதை என்று சில வசனங்களில் வாசிக்கிறோம். (லூக்கா 19:11,28-48) லூக்கா 13:31-19:27 ஆகிய வசனங்கள் எருசலேமிற்குச் செல்லும் பாதையில் நடைபெற்றவையாகும்.

"தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரி களையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" - இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை விளக்கும் யூதருடைய வழக்குச்சொல். (மத் 6:24; மத் 10:37; ரோமர் 9:13; மல் 1:2-3; ஆதி 29:30-31; உபா 21:15-17) நாம் எல்லாவற்றையும்விட தேவனையும், அவருடைய சத்தியத்தையும் அதிகமாக நேசிக்க வேண்டும். (மத் 22:37). தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதே வேதாகமத்தின் மைய உபதேசம்.

"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" - இந்த வசனத்தின் மூலமாக இயேசு கிறிஸ்து ஜனங்களிடம் நான்கு காரியங்களை எதிர்பார்க்கிறார் அவையாவன:

1. எல்லாவற்றையும்விட தேவனை நேசிக்க வேண்டும். (லூக்கா 14:26; மத் 22:37)
2. தன் சிலுவையைச் சுமந்து கொள்ள வேண்டும். (லூக்கா 14:27; மத் 10:38; மத் 16:24; மாற்கு 8:34)
3. கிறிஸ்துவை எப்போதும் பின்பற்ற வேண்டும். (லூக்கா 14:27; யோவான் 10:26-30)
4. இவையெல்லாவற்றையும் எப்போதாவது செய்யலாம் என்றில்லாமல் அனுதினமும் செய்ய வேண்டும். (லூக்கா 9:23)

107. கோபுரத்தைப் பற்றிய உவமை

லூக்கா 14:28 உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து,

14 அதிகாரம்

லூக்கா 14:29 அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற் போனால், பார்க்கிறவர்களெல்லாரும்.

லூக்கா 14:30 இந்த மனுஷன் கட்டத் தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற் போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ் செலவைக் கணக்குப் பாராமலிருப்பனோ?

உவமை எண் - 31

"உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து,................." (லூக்கா 14:28-30,33) இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் செல்லும் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும் என்பதை விளக்கும் உவமை. இயேசுவைப் பின்பற்றும்போது உலகம், மாம்சம், சாத்தானின் அந்தகாரச் சக்திகள் ஆகியவை நமக்கு எதிராக வரும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் இயேசுவையே சார்ந்திருக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் எதிர்பார்த்துத்தான் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். (யோவான் 10:27-29; ரோமர் 8:33-39; 2கொரி 10:4-7; எபே 6:10-18; 1பேதுரு1:5-13; 1யோவான் 4:4; யூதா 1:20-24).

108. யுத்தம் செய்யும் இராஜாவைப் பற்றிய உவமை

லூக்கா 14:31 அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணமலிருப்பானோ?

லூக்கா 14:32 கூடாதென்று கண்டால், மற்றவன் இன்னும் தூரத்திலிருக்கும் போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி, சமாதானத்துக் கானவைகளைக் கேட்டுக்கொள்வானே.

லூக்கா 14:33 அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளை எல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.

உவமை எண் - 32

"அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக் கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணாமலிருப்பானோ?" (லூக்கா 14:31-33) ஒருவன் எல்லாவற்றையும் வெறுக்காவிட்டால் அவன் இரட்சிக்கப்படமாட்டான் என்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 19:29)

109. சாரமற்றுப்போன உப்பைப் பற்றிய உவமை - (மத் 5:13; மாற்கு 9:49)

லூக்கா 14:34 உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?

லூக்கா 14:35 அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப்போடுவார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்றார்.

உவமை எண் - 33

"உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்?.........." (லூக்கா 14:34-35), இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகள் பின்வாங்கிப் போய்விட்டால் அவர்கள் தேவனுக்கும், மற்றவர்களுக்கும் பிரயோஜனமாக இருக்கமாட்டார்கள். (மத்24:51; மத் 25:30; லூக்கா 9:62; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 9:27; கலா 5:19-21; கலா 6:7-8; எபி 6:4-9; எபி 10:26-29;2பேதுரு 2:20-22).

14 அதிகாரம்

"உப்பு சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்?" - மழை, வெயில், காற்று ஆகியவற்றில் உப்பைப் போட்டுவிட்டால், அது தன் சாரத்தை இழந்துவிடும். விசுவாசிகள் உலகத்திற்கு உப்பாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சாரத்தை இழந்துவிட்டால், அவர்களால் மறுபடியும் உலகத்திற்கு உப்பாக இருக்கமுடியாது. (மத் 5:13; மாற்கு 9:49-50)

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" - (மத் 11:15)

15 அதிகாரம்

110. முறுமுறுக்கும் பரிசேயர்

லூக்கா 15:1 சகல ஆயக்காரரும் பாவிகளும் அவருடைய வசனங்களைக் கேட்கும் படி அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

லூக்கா 15:2 அப்பொழுது பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து: இவர் பாவிகளை ஏற்றுக் கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள்.

"சகல ஆயக்காரரும் பாவிகளும்" - அந்த இடத்தில் இருந்த ஆயக்காரரும், பாவிகளும். உலகத்திலுள்ள எல்லா ஆயக்காரர்களும், பாவிகளும் என்று பொருள்படாது. (வெளி 13:8-18)

"இவர் பாவிகளை ஏற்றுக் கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" - தம்முடைய சீஷர்களிடம் லூக்கா 16:1 ஆகிய வசனத்திலிருந்து மறுபடியும் பேச ஆரம்பிப்பதற்கு முன்பாக ஒருசில உவமைகளைக் கூறுகிறார். அவர் உவமைகளைக் கூறியதின் காரணம் பரிசேயரும், வேதபாரகரும் முறுமுறுத்து இவ்வாறு கூறியதுதான். கிறிஸ்துவின் ஊழியத்தையும், அவர் கூறும் சத்தியத்தையும் இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. (லூக்கா 5:32)

111. காணாமல் போன ஆட்டைப் பற்றிய உவமை - (மத் 9:10; மாற்கு 2:15; லூக் 5:30)

லூக்கா 15:3 அவர்களுக்கு அவர் சொன்ன உவமையாவது:

லூக்கா 15:4 உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற் போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணமற் போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் அளவும் தேடித்திரியானோ?

லூக்கா 15:5 கண்டுபிடித்தபின்பு, அவன் சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின்மேல் போட்டுக் கொண்டு,

லூக்கா 15:6 வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடு கூட சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா?

லூக்கா 15:7 அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாததொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அவர்களுக்கு" - முறுமுறுக்கும் பரிசேயருக்கு (லூக்கா 15:2)

உவமை எண் - 34

"உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணமற்போன ஆட்டைக் கண்டு பிடிக்கு மளவும் தேடித்திரியானோ?............" (லூக்கா 15:4-7) காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதை இந்த உவமை விளக்குகிறது.

காணாமல் போன ஆடு என்பது ஒரு நம்பிக்கையும் இல்லாமல் பாவத்தில் சிக்கியிருக்கும் பாவிகளைக் குறிப்பிடும். இவர்கள் பாவத்திற்கு தங்களை ஒப்புக் கொடுக்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். எல்லோருக்குமே தங்கள் வீட்டிற்குப் போவதற்குப் பாதை தெரியும். மிருகங்கள் தங்கள் வசிப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லும். பறவைகளும், தங்கள் கூடுகளுக்குத் திரும்பும். பாதைமாறி காணாமல்போய்விட்டால், யாருக்கும் பாதுகாப்பு இல்லை. இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் உவமைக்கு யாரும் எளிதாகப் பதில் கூறிவிடுவார்கள். காணாமல்போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் அளவும் மேய்ப்பன் நிச்சயமாகவே அதைத் தேடித்திரிவான். (லூக்கா 15:7) இந்த உவமை மத் 18:12 ஆவது வசனத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

15 அதிகாரம்

"பரலோகத்தில்" - இங்கு சந்தோஷப் படுகிறவர்கள் யார்? தேவனும், தேவதூதர்களும், சந்தோஷமடைவார்கள். (லூக்கா 15:10; லூக்கா 12:8; மத் 18:10)

"மனந்திரும்புகிற பாவி" - (லூக்கா 13:3)

"மனந்திரும்ப அவசியமில்லாத நீதிமான்கள்" - நீதிமான்கள் நீதியுடையவர்கள். அவர்கள் மனந்திரும்ப வேண்டிய அவசியமில்லை. (லூக்கா 5:32) அவர்கள் ஏற்கெனவே மனந்திரும்பி விட்டார்கள். தங்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறார்கள். (ரோமர் 1:16-17; ரோமர் 5:1; 2கொரி 7:9-10). தொண்ணூற்றொன்பது நீதிமான்களும் மனந்திருந்தியபோது நிச்சயமாகவே பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருந்திருக்கும். அதுபோலவே ஒருபாவி மனந்திரும்பும்போதும் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும். பாவிகளை இரட்சிப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். பரிசேயர் இயேசுவின் ஊழியத்தைக் குறித்து, முறுமுறுப்பதில் அர்த்தமேயில்லை. இயேசு கிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தையே செய்கிறார்.

112. காணாமல் போன வெள்ளிக்காசைப் பற்றிய உவமை - (மத் 18:11; லூக் 19:10)

லூக்கா 15:8 அன்றியும், ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணமற் போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டு பிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ?

லூக்கா 15:9 கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக் காரிகளையும் கூட வரவழைத்து: காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா?

லூக்கா 15:10 அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உவமை எண் - 35

"ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? ...." (லூக்கா 15:8-10) காணாமல் போனதைத் தேடுவதைக் குறித்து இந்த உவமை விளக்குகிறது.

காணாமல்போன காசு இரட்சிக்கப்படாத பாவிக்கு ஒப்பாயிருக்கிறது. ஒருபொருள் காணாமல்போய் அதிக காலம் ஆகிவிட்டால் அதைத் தேடுவது கடினம். அதுபோலவே ஒரு பாவி பாவத்தில் ஆழமாக மூழ்கிவிட்டால் அவனை மீட்பதும் கடினம். அவனுடைய இருதயம் கடினமாகி விடும். தன் இருதயக் கடினத்தினிமித்தம் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் நித்திய அழிவில் போய்ச் சேர்ந்துவிடுவான்.

காணாமல்போன ஆடும், காணாமல்போன வெள்ளிக்காசும்

1. காணாமல்போனது - ஒருஆடு, ஒரு வெள்ளிக்காசு (லூக்கா 15:4,8)
2. தேடுகிறவன் செய்தது - கருத்தாய் தேடுகிறான் (லூக்கா 15:4,8)
3. தேடுகிறவனின் உறுதி - கண்டுபிடிக்கும் வரையிலும் தேடுகிறான்
4. தேடுகிறவன் அன்பு - திரும்பக் கொண்டு வருகிறான்
5. தேடுகிறவனின் சந்தோஷம் - சந்தோஷமடைகிறான் (லூக்கா 15:6,9)
6. தேடுகிறவனின் ஐக்கியம் - தன்னுடைய நண்பர்களோடும், உறவினர் களோடும் சந்தோஷப்படுகிறான்.

15 அதிகாரம்

வெள்ளிக்காசு (pieces of silver) - δραχμή - drachmee - 1406

பெண்பால் பெயர்ச்சொல் - வெள்ளிக்காசு - இந்தக் காசு ரோமப்பேரரசின் "தினோரியோன்" (deenarion) என்னும் காசுக்கு இணையானது. இது ஒரு வேலையாளுடைய ஒருநாள் சம்பளம். (மத் 20:1-16)

காசு (cent) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

"அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது" - (லூக்கா 15:4-7)

"மனந்திரும்புகிற பாவி" - (லூக்கா 13:3)

113. கெட்ட குமாரனைப் பற்றிய உவமை

(1) கெட்ட குமாரன் பிரிந்து போவதும் அவனுடைய பாவங்களும்

லூக்கா 15:11 பின்னும் அவர் சொன்னது: ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்.

லூக்கா 15:12 அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான்.

லூக்கா 15:13 சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டு போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான்.

உவமை எண் - 36

"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்..................." (லூக்கா 15:11-32) காணாமல்போன ஆத்துமாவை இரட்சிப்பது தேவனுடைய பிரியம். பரிசேயரின் முறுமுறுப்பையும், தேவனுடைய பிரியத்தையும் இந்த உவமை விளக்குகிறது.

"இரண்டு குமாரர்" - இயேசு கிறிஸ்து கூறிய உவமைகளில் நூறு ஆடுகள், (லூக்கா 15:4), பத்து வெள்ளிக்காசுகள்(லூக்கா 15:8), என்று பார்த்தோம். இப்பொழுது இரண்டு குமாரர்களைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறுகிறார். காணாமல்போன ஆட்டையும், காணாமல்போன வெள்ளிக்காசையும் அவைக் கிடைக்கும் வரையிலும் தேடினார்கள். வெள்ளிக்காசுக்கும், ஆட்டிற்கும் சுயாதீனமாகத் தீர்மானம் பண்ணும் ஆறாவது அறிவு இல்லை. இந்த உவமையில் கூறப்பட்டிருக்கும் குமாரன் பகுத்தறிவு உள்ளவன். தன்னுடைய முடிவிற்கு இவனே காரணம். தன்னுடைய சுயத் தீர்மானத்தினாலேயே இவன் காணாமல் போனான். இப்பொழுது அதே தீர்மானத்தினாலேயே திரும்பி வந்திருக்கிறான். இவன் கண்டுபிடிக்கப்பட்ட போதும், வீட்டில் சந்தோஷம் உண்டாயிற்று. (லூக்கா 15:7,9, 22-24).

"அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான்" - ரோமருடைய பிரமாணத்தின் படியும், யூதருடைய பிரமாணத்தின் படியும் ஒரு தந்தை தன்னுடைய எல்லா சொத்துக்களையும் தன் இஷ்டம்போல செலவு செய்துவிட முடியாது. குமாரர்களுக்குச் சுதந்தரவீதம் கொடுக்க வேண்டும். அந்த தகப்பனுக்குக் குமாரர்கள் இல்லையென்றால் குமாரத்திகள் அவர்களுடைய பங்கைப் பெற்றுக் கொள்வார்கள். (ஆதி 31:14; எண் 27:8) யோபுவின் காரியம் சற்று வித்தியாசமாக இருக்கிறது. (யோபு 42:15) மூத்தகுமாரன் இரட்டிப்பான பங்கைப் பெற்றுக் கொள்வான். (உபா 21:17)

15 அதிகாரம்

துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணுதல் **(ruinously)** - ἀσώτως - **asootoos** - 811

வினையடை - துன்மார்க்கமாய், துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணுதல் **(riotous living, living ruinously)** - இந்தக் கிரேக்கச்சொல் மற்ற இடங்களில் துன்மார்க்கமான ஜீவியம், அடங்காத ஜீவியம், வெறிகொண்ட ஜீவியம் என்று அதன் பெயர்ச்சொல் மூலமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

துன்மார்க்கம் **(ruinously)** - ἀσωτία - **asootia** - 810

பெண்பால் பெயர்ச்சொல் - வெறிகொண்டது, அடங்காதது, துன்மார்க்கம்

(2) கெட்ட குமாரன் அனுபவித்த துயரங்கள்

லூக்கா 15:14 எல்லாவற்றையும் அவன் செலவழித்த பின்பு, அந்த தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி,

லூக்கா 15:15 அந்த தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான்.

லூக்கா 15:16 அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினால் தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.

செலவழி **(spent)** - δαπανάω - **dapanaoo** - 1159

வினைச்சொல் - செலவழி, செலவுசெய், செலவுபண்ணு **(to spend, waste, squander)** - இதன் மற்ற பொருள்கள். செலவு செய்தல் **(spend)** (மாற்கு 5:26; 2கொரி 12:15), செலவழி **(consume)** (யாக் 4:3), செலவு செய்தல் **(be at charges)** (அப் 21:24)

"அவன் குறைவுபடத்தொடங்கினான்" - பாவ சந்தோஷத்தில் மூழ்கியிருப்போர் எல்லோருமே குறைவுபடத்தொடங்குவார்கள். (கலா 6:7-8). இந்த வசனத்தை லூக்கா 15:24 வசனத்தோடு ஒப்பிடவும்.

"அந்த தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக் கொண்டான்" - அறிமுகமில்லாத அந்நியரிடத்தில் போய்ச்சேர்வதினால் இவனுடைய பாதுகாப்பிற்கு உறுதியில்லை.

"தேசத்துக் குடிகளில் ஒருவன்" - எந்தத் தேசம் என்று குறிப்பிடப்படவில்லை. இவனுடைய வீட்டிலிருந்து தூரதேசமாக இருக்க வேண்டும். (லூக்கா 15:13; அப் 2:39; எபே 2:17)

"பன்றிகளை மேய்த்தான்" - பன்றிகளை மேய்ப்பது யூதமார்க்கத்திலும், வேறுபல மார்க்கங்களிலும் இழிவான வேலையாக கருதப்பட்டது. எகிப்து தேசத்தில் பன்றிகளை மேய்க்கிறவர்கள் சமுதாயத்திலிருந்து தள்ளிவைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களால் எகிப்தியரின் தெய்வங்களை ஆராதிப்பதற்கு அவற்றின் கோவில்களுக்கு வரமுடியாது. கெட்ட குமாரனுடைய பரிதாபமான நிலையை விளக்கிக் கூறுவதற்காகவே இயேசு கிறிஸ்து அவனைப் பன்றிகளை மேய்க்கிறவனாகக் குறிப்பிடுகிறார். பாவிகளுடைய நிலைமையும் இதைப்போல பரிதாபமாகவே இருக்கிறது.

"பன்றிகள் தின்கிற தவிட்டினால் தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான்" - அவன் தன் விருப்பத்திற்கு மாறாக அடிமையாக இருக்கிறான். கடினமாக வேலைசெய்கிறான். ஆனால் அவனுக்கு உணவு கொடுக்கப் படவில்லை. பன்றிகள் தின்கிற தவிட்டைத் தின்பதற்குக்கூட விரும்புகிறான். ஆனால் அதுகூட அவனுக்குக் கிடைக்கவில்லை. பன்றியின் தவிட்டை அவன் தின்றுவிட்டால் அவனைக் களவு செய்தவனாகக் கருதி, பிடித்துத் தண்டிப்பார்கள்.

15 அதிகாரம்

(3) கெட்ட குமாரன் தன் பாவத்தை உணருகிறான்

லூக்கா 15:17 அவனுக்குப் புத்தி தெளிந்த போது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்.

லூக்கா 15:18 நான் எழுந்து, என் தகப் பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்.

லூக்கா 15:19 இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலி க்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி;

"அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்:என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்" - அவனுடைய பரிதாபமான சூழ்நிலை அவனுடைய புத்தியைத் தெளிய வைக்கிறது. இந்த வேலையை அவன் தொடர்ந்து செய்து வந்தால் பட்டினியாகக் கிடந்து மரித்தே போவான். அதையும் சிந்தித்துப் பார்க்கிறான். தன்னுடைய தகப்பனுடைய கூலிக்காரரைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்கிறான். (லூக்கா 15:17-19).

"தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்" - இதுவே உண்மையான மனந்திரும்புதல். பாவத்தை அறிக்கை செய்தல், உண்மையாகவே பாவத்திற்காக வருந்துதல், பாவத்தின் நிமித்தமாகத் தன்னைத் தாழ்த்துதல் (லூக்கா 13:3)

(4) கெட்ட குமாரன் தன் தகப்பனிடம் திரும்பி வருகிறான் - ஏற்றுக் கொள்ளப்படுகிறான்

லூக்கா 15:20 எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.

"கெட்ட குமாரன் எழுந்து புறப்பட்டான்" - மனந்திரும்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினால் மட்டும் போதாது. அதைச் செயலிலும் காண்பிக்க வேண்டும். உண்மையான மனந்திரும்புதல் நமது வார்த்தைகளிலும், கிரியைகளிலும் வெளிப்படும்.

"தன் தகப்பனிடத்தில் வந்தான்" - இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தன்னை ஆதரிக்கும் தகப்பனிடம்தான் வரவேண்டும். இது நல்ல தீர்மானம்.

"அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டான்" - லூக்கா 15:20-24 ஆகிய வசனங்களில் தகப்பன் செய்த காரியங்களை நாம் வாசிக்கிறோம்.

1. அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டான்.

2. மனதுருகினான்

3. அவனைச் சந்தித்து தன்னுடைய வீட்டிற்கு அழைப்பதற்காக ஓடினான்.

4. அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.

5. தன் குமாரனின் பாவஅறிக்கையைக் கேட்டு அவனை மன்னித்தான்.

6. உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து, அவனுக்கு உடுத்தினான்.

7. அவன் கைக்கு மோதிரத்தைப் போட்டான்.

8. அவன் கால்களுக்குப் பாதரட்சைகளைப் போட்டான்.

15 அதிகாரம்

9. பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணினான்.

10. சந்தோஷப்படத் தொடங்கினான்.

(5) பாவ அறிக்கையும் மனந்திரும்புவதும்

லூக்கா 15:21 குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்.

(6) வீட்டில் சந்தோஷம்

லூக்கா 15:22 அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்.

லூக்கா 15:23 கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்.

லூக்கா 15:24 என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.

"இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்" - அடிமையானவனுக்கு மோதிரம், பாதரட்சையும் கிடையாது. விடுதலையோடு வேலை செய்கிறவனுக்கே இவை கொடுக்கப்படும். (ஆதி 41:42; Iஇராஜா 21:8; எஸ் 8:2; தானி 6:17; யாக் 2:2) பழங்காலத்தில் அடிமைகளின் பாதரட்சைகளை அகற்றி விடுவார்கள். (ஏசா 20:2) அவர்கள் விடுதலை பெறும்போது மறுபடியும் அவர்களுக்கு பாதரட்சைகளைக் கொடுப்பார்கள்.

(7) மூத்த குமாரனின் பொறாமையும் கோபமும்

லூக்கா 15:25 அவனுடைய மூத்தகுமாரன் வயலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீத வாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு;

லூக்கா 15:26 ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து: இதென்ன என்று விசாரித்தான்.

லூக்கா 15:27 அதற்கு அவன்: உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான்.

லூக்கா 15:28 அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்.

லூக்கா 15:29 அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக் குட்டியையாவது கொடுக்கவில்லை.

லூக்கா 15:30 வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்.

லூக்கா 15:31 அதற்குத் தகப்பன்: மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளது எல்லாம் உன்னுடையதாயிருக்கிறது.

15 அதிகாரம்

லூக்கா 15:32 உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற் போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே என்று சொன்னான் என்றார்.

இளைய குமாரனின் சுபாவங்கள் (லூக்கா 15:12-24)

1. புத்தி குறைந்திருந்தது - விளைவுகள் (லூக்கா 15:12-16)
2. மனந்திரும்புவதும், தாழ்மையும் (லூக்கா 15:17-19)
3. வீட்டிற்குத் திரும்பி வருவதும், ஏற்றுக் கொள்ளப்படுவதும் (லூக்கா 15:20)
4. தந்தையின் மனதுருக்கம் (லூக்கா 15:20)
5. தந்தையிடம் பாவஅறிக்கை செய்வதும் அவனுடைய தாழ்மைக்கு எடுத்துக்காட்டும். (லூக்கா 15:21)
6. தந்தையின் வெகுமதிகள் (லூக்கா 15:22-23)
7. காரணம் (லூக்கா 15:24)

மூத்த குமாரனின் சுபாவங்கள் (லூக்கா 15:25-32)

1. புத்தி குறைந்திருந்தது - விளைவுகள் (லூக்கா 15:25-28)
2. கோபம் (லூக்கா 15:28)
3. தந்தையின் சமாதான வார்த்தை (லூக்கா 15:28)
4. தன்னைப் பற்றி உயர்த்திக் கூறுதல் (லூக்கா 15:29)
5. தன் தந்தையையும், சகோதரனையும் குறைகூறுதல் (லூக்கா 15:29-30)
6. தந்தையின் வெகுமதிகள் (லூக்கா 15:31-32)
7. காரணங்கள் (லூக்கா 15:32)

“அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான்” - மூத்த குமாரனும், பரிசேயரும் பல விஷயங்களில் ஒன்றுபோலவே இருக்கிறார்கள்.

மூத்த குமாரனுக்கும், பரிசேயருக்கும் இடையே காணப்படும் ஒப்புமைகள்

1. இருவரும் முறுமுறுத்தார்கள் (லூக்கா 15:2,29-30)
2. பாவிகள் மீது இருவரும் பொறாமையோடு இருந்தார்கள் (லூக்கா 15:2,30).
3. பாவிகள் மீது இருவருக்கும் அன்பில்லை (லூக்கா 15:2,27-32).
4. இருவரும் பாவிகள் மன்னிப்பு பெறுவதில் மனதில்லாமல் இருந்தார்கள் (லூக்கா 15:2,28).
5. பாவிகள் ஆசீர்வதிக்கப்படுவதை இருவரும் கண்டார்கள் (லூக்கா 15:1-2,25-27).
6. நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களை இருவரும்புரிந்து கொள்ளவில்லை (லூக்கா 15:1-2,26).
7. இருவரும் கோபமடைந்தார்கள் (லூக்கா 15:2,28).
8. இருவருக்கும் விளக்கம் கூறப்பட்டது (லூக்கா 15:3-7,28).
9. இருவரும் தங்கள் செயல்களை நியாயமானதாக விவாதம் பண்ணினார்கள் (லூக்கா 15:7,29-30).
10. பாவிகளை ஆசீர்வதிக்கக்கூடாது என்று இருவரும் எதிர்பார்த்தார்கள் (லூக்கா 15:2,28-32).

15 அதிகாரம்

11. பாவிகள் மீது இருவருக்கும் அன்பில்லை. (லூக்கா 15:2,28-32).

12. இருவரும் தங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று விரும்பினார்கள் (லூக்கா 15:29; லூக்கா 18:9-14).

13. இருவரும் சுயநீதியுடையவர்கள் (லூக்கா 15:29; மத் 23:28).

14. இருவரும் பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதாகக் கூறினார்கள். (லூக்கா 15:29; லூக்கா 18:9-14; மத் 23:3).

15. இருவரும் குற்றம் கண்டுபிடித்தார்கள். (லூக்கா 15:2,29).

"அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக் குட்டியையாவது கொடுக்கவில்லை" - தந்தையின் பதிலும், மூத்த குமாரனின் பதிலும் லூக்கா 15:29-32 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. லூக்கா 15:2 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து முறுமுறுத்த பரிசேயருக்கு பதில் கூறியதுபோன்று இருக்கிறது.

16 அதிகாரம்

114. உண்மையில்லாத உக்கிராணக் காரனைப் பற்றிய உவமை - (லூக் 12:4)

லூக்கா 16:1 பின்னும் அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக் காரன் இருந்தான்; அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப் போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப் பட்டது.

லூக்கா 16:2 அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து: உன்னைக் குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிற தென்ன? உன் உக்கிராணக்கணக்கை யொப்புவி, இனி நீ உக்கிராணக் காரனாயிருக்கக்கூடாது என்றான்.

லூக்கா 16:3 அப்பொழுது உக்கிராணக் காரன்: நான் என்ன செய்வேன், என் எஜமான் உக்கிராண விசாரிப்பிலிருந்து என்னைத் தள்ளிப் போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன்.

லூக்கா 16:4 உக்கிராண விசாரிப்பை விட்டு நான் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்யவேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியவந்தது, என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு;

லூக்கா 16:5 தன் எஜமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக வரவழைத்து: முதலாவது வந்தவனை நோக்கி: நீ என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்றான்.

லூக்கா 16:6 அவன்: நூறுகுடம் எண்ணெய் என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி: நீ உன் சீட்டை வாங்கி, உட்கார்ந்து, ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான்.

லூக்கா 16:7 பின்பு அவன் வேறொருவனை நோக்கி: நீ பட்ட கடன் எவ்வளவு என்றான். நூறு கலம் கோதுமை என்றான். அப்பொழுது அவன்: நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது என்றான்.

லூக்கா 16:8 அநீதியுள்ள உக்கிராணக் காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்.

உவமை எண் - 37

"ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்..............." (லூக்கா 16:1-13) நாம் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகவும், உண்மை யுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இரண்டு எஜமானருக்கு யாராலும் ஊழியம் செய்ய முடியாது.

"உக்கிராணக்காரன்" - ஒரு எஜமானுடைய வீட்டையும், வீட்டிலுள்ள பொருட்களையும் வீட்டில் வேலை பார்க்கும் வேலையாட்களையும் பராமரிக்கிறவன். தன்னுடைய எஜமானுக்கு நன்மை செய்து அவனுடைய பிள்ளைகளுக்கும் இவன் பயிற்சி கொடுக்க வேண்டும். (ஆதி 15:2; ஆதி 24:2; ஆதி 43:19; லூக்கா 12:35-42; லூக்கா 19:12).

" அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப் போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது" - உக்கிராணக்காரன்மீது குற்றம் சுமத்தப்படுகிறது. தன்னுடைய உக்கிராண ஊழியத்தில் அவன் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை. அவன் மூலமாக எஜமானுக்கு இலாபம் வருவதற்குப் பதிலாக ஒருவேளை நஷ்டம் வந்திருக்கலாம்.

"இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது" - அவனுடைய கணக்கு வழக்குகள் சரியாக இருந்து, அவனிடத்தில் ஒரு தவறும் இல்லையென்று நிரூபிக்கப்படும் வரையிலும் அவனால் உக்கிராணக்காரனாக தொடர்ந்து வேலை செய்ய முடியாது.

16 அதிகாரம்

“கொத்துகிறதற்குஎனக்குப் பெலனில்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன்” - உக்கிராணக்காரனுடைய சரீரத்தில் வேலை செய்வதற்குப் பெலனில்லை. பிச்சை எடுத்து பிழைப்பதற்கும் வெட்கப்படுகிறான். ஆனால் தன் எஜமானை ஏமாற்ற அவன் வெட்கப்பட வில்லை.

“என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்ய வேண்டியது” - தன்னுடைய எஜமானிடம் கடன் பட்டவர்கள் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஒருசில காரியங்களைச் செய்கிறான்.

“நூறுகுடம் எண்ணெய்” - அக்காலத்தில் எண்ணெயை அளப்பதற்குக் குடத்தைப் பயன்படுத்தினார்கள். ஒரு குடம் என்பது சுமாராக 40 லிட்டர் அளவாகும்.

நூறுகுடம் எண்ணெய் (hundred measures of oil) - βάτος - batos - 943

ஆண்பால் பெயர்ச்சொல் - குடம்

“நூறு கலம் கோதுமை” - தானியத்தை அளப்பதற்குப் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பயன்படுத்தப்பட்ட அளவு. ஒரு கலம் என்பது சுமார் 10 மரக்கால் அல்லது 80 லிட்டர் அளவாகும்.

நூறு கலம் கோதுமை (hundred measures of wheat) - κόρος - koros - 2884

ஆண்பால் பெயர்ச்சொல் - கலம்

கலம் (bushels) - כֹּר - kore - 3734

ஆண்பால் பெயர்ச்சொல் - மரக்கால், கலம்.

“நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது” - உக்கிராணக்காரனுக்கு எஜமான் சில பொறுப்புக்களைக் கொடுத்திருந்தான். கடன் கொடுப்பது, ஒப்பந்தங்கள் செய்வது, குத்தகைக்கு விடுவது, அதற்குரிய ஒப்பந்தங்களை எழுதுவது ஆகியவை எல்லாமே உக்கிராணக்காரனுடைய வேலை.

“நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது” - உக்கிராணக்காரனுக்கு எஜமான் சில பொறுப்புக்களைக் கொடுத்திருந்தான். கடன் கொடுப்பது, ஒப்பந்தங்கள் செய்வது, குத்தகைக்கு விடுவது, அதற்குரிய ஒப்பந்தங்களை எழுதுவது ஆகியவை எல்லாமே உக்கிராணக்காரனுடைய வேலை. எஜமானிடம் கடன்பட்டவர்களிடத்தில் இந்த உக்கிராணக்காரன் சென்று, கடன் ஒப்பந்தப் பத்திரங்களை எல்லாம் மாற்றி எழுதுமாறு கூறுகிறான். இதன் மூலமாக கடன் பட்டவர்களுக்கு ஆதாயம் உண்டாகும். உக்கிராணக்காரன் வேலையிலிருந்து நின்றபிறகு கடனாளிகள் இவனுக்கு நண்பர்களாக இருப்பார்கள்.

“அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான்” - அந்த உக்கிராணக் காரனுடைய எஜமான் அவனை மெச்சிக் கொண்டான். ஆனால் இயேசு கிறிஸ்து அவனைப் பாராட்டவில்லை.

“ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்” - ஒளியின் பிள்ளைகள் என்பது விசுவாசிகளைக் குறிக்கும். இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் என்பது அவிசுவாசிகளைக் குறிக்கும்.

115. இருமனமாக இருப்பதை இயேசு கடிந்து கொள்கிறார் - (மத் 6:22)

லூக்கா 16:9 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண் டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்.

லூக்கா 16:10 கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ள வனாயிருக்கிறான்.

லூக்கா 16:11 அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிரா விட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?

16 அதிகாரம்

லூக்கா 16:12 வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?

லூக்கா 16:13 எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றான்.

"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ள வனாயிருக்கிறான்" - லூக்கா 16:9 ஆவது வசனத்தின் உண்மையான பொருளை லூக்கா 16:10-13 ஆவது வசனங்களில் விளக்குகிறார். நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்கிறவன், உண்மையுள்ளவனாகவும், நீதியுள்ள வனாகவும் இருக்க வேண்டும். (லூக்கா 16:10) ஒருவன் உலக ஐசுவரியத்தில் உண்மையுள்ளவனாக இருந்தால்தான் அவனுக்கு பரலோகத்தின் ஐசுவரியம் கிடைக்கும். (லூக்கா 16:11) நம்மிடத்தில் மற்றவர்கள் பொறுப்பாக ஒப்படைத்துள்ள காரியங்களுக்கு நாம் உத்திரவாதம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். (லூக்கா 16:12) ஏனெனில் இரண்டு எஜமான்களுக்கு ஒரே வேளையில் யாராலும் ஊழியஞ்செய்ய முடியாது. (லூக்கா 16:13)

"எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களாலே கூடாது" - இயேசு கிறிஸ்து இதை வலியுறுத்திக் கூறியிருக்கிறார். (மத் 6:24; மத் 7:21,24-29; மத் 12:50; மத் 13:20-22; மத் 18:15-17;யோவான்6:27, யோவான் 8:34-36; யோவான் 15:1-8).

தேவனுடைய ஊழியக்காரர்களும் இந்தச் சத்தியத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; 1கொரி 9:27; கலா 1:6-7; கலா 5:4,19-21; கலா6:7-8; 1தெச3:8; 1தீமோ 5:11-15; 1தீமோ 6:19-21; 2தெச 2:12-18; எபி 3:6,12-14; எபி 6:4-9; எபி 10:26-29; யாக் 5:19-20; 1பேதுரு 3:8,15; 2பேதுரு 1:3-10; 2பேதுரு 2:20-22; 2யோவான் 1:9-10; யூதா 1:20-24).

"தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களாலே கூடாது" - தேவனுக்கும் சாத்தானுக்கும் ஒரே வேளையில் யாராலும் ஊழியஞ்செய்ய முடியாது. சாத்தானுக்கு ஊழியஞ்செய்கிறவர்கள் அவனோடு தங்களுடைய முடிவை அனுபவிப்பார்கள். (மத் 25:41,46). தேவனுக்கு ஊழியஞ் செய்பவர்கள் தேவனோடு நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். (1தெச 4:16; யோவான் 14:1-3).

116. ஜீவியத்தின் இரண்டு வெவ்வேறு நிலைகள் - (1சாமு 16:7; 1கொரி 1:27)

லூக்கா 16:14 இவைகளையெல்லாம் பொருளாசைக் காரராகிய பரிசேயரும் கேட்டு, அவரைப் பரியாசம் பண்ணினார்கள்.

லூக்கா 16:15 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது.

பொருளாசைக்காரன் (covetous) - φιλάργυρος - philagyros - 5366

பெயரடை - பொருளாசைக்காரரான, பணப்பிரியரான (money-lovers) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் 2தீமோ 3:2 ஆவது வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

16 அதிகாரம்

பரியாசம் பண்ணு (derided) - ἐκμυκτηρίζω - ekmukteerizoo - 1592

வினைச்சொல் - இகழ், பரியாசம் பண்ணு (to sneer at, turn up the nose at, deride) இந்த வார்த்தை இந்த வசனத்திலும் லூக்கா 23:35 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தக் கிரேக்கச் சொல்லிற்கு இணையான எபிரெய வார்த்தை "லாஅக்" law-ag ஆகும்.

பரிகாசம் (deride) - לָעַג - law-ag' - 3932

வினைச்சொல் - பரிகாசம், நகை, சந்தோஷப்படு (சங் 2:4; சங் 22:7; சங் 59:8; எசே 23:32; எசே 36:4; ஓசி 7:16).

"நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்" - (மத் 23, மாற்கு 7:1-12)

117. இரண்டு வெவ்வேறு திருவசனங்கள் - (யோவன் 1:17; 2கொரி 3:6-15; கலா 3:17-25; 4:21-31; கொலோ 2:14-17; எபி 7-10)

லூக்கா 16:16 நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்.

லூக்கா 16:17 வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும்ஒழிந்துபோவதுஎளிதாயிருக்கும்.

"நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கி வந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்" - (மத் 11:12-13)

"வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்" - (மத் 24:35)

118. மனைவியைத் தள்ளிவிடுவது சம்பந்தமான பிரமாணம் - (மத் 19:3)

லூக்கா 16:18 தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரஞ் செய்கிறான், புருஷனாலே தள்ளப் பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறான்.

"தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன் விபசாரஞ்செய்கிறான், புருஷனாலே தள்ளப் பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறான்" - (மத் 5:31-32; மத் 19:1-9)

119. ஐசுவரியமுள்ளவன், தரித்திரன் ஆகிய இருவரின் அனுபவங்கள்

(1) பூமியில் அவர்களுடைய வாழ்க்கை

லூக்கா 16:19 ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய்வாழ்ந்துகொண்டிருந்தான்.

லூக்கா 16:20 லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து,

லூக்கா 16:21 அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று.

16 அதிகாரம்

"ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்" - இதை ஒரு உவமை போல இயேசு கிறிஸ்து கூறியிருந்தாலும், இது உண்மைச் சம்பவம் போலவே தெரிகிறது. இந்தச் சம்பவத்தில் இரண்டு பிச்சைக்காரர்கள் வருகிறார்கள். ஒருவன் இம்மையில் பிச்சையெடுக்கிறான். மற்றொருவன் மறுமையில் பிச்சையெடுக்கிறான். மரித்த ஆத்துமாக்களின் உண்மை நிலைமையை இந்த நிகழ்ச்சி விளக்குகிறது.

லாசருவையும், ஐசுவரியவானையும் பற்றிய காரியங்கள்

1. இம்மையில் நாம் வாழும் வாழ்வும், மறுமையில் நாம் வாழும் வாழ்வும் வித்தியாசமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. (லூக்கா 16:22-32).
2. ஏழைகள் இம்மையில் இரட்சிக்கப் பட்டிருந்தால் மறுமையில் ஐசுவரியவான்களைப் போல இருப்பார்கள். இரட்சிக்கப்படாவிட்டால் நரகத்தில்பாடுகளை அனுபவிப்பார்கள்.
3. ஐசுவரியவான்கள் இம்மையில் இரட்சிக்கப் பட்டால் மறுமையில் ஐசுவரியவான்களாகவும் இருப்பார்கள். இரட்சிக்கப்படாவிட்டால் நரகத்தில் பாடுகளை அனுபவிப்பார்கள்.
4. இம்மையில் ஏழையாக இருந்தாலும், ஐசுவரியவானாக இருந்தாலும் மறுமைக்குரிய காரியங்களைச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.
5. ஏழைக்கும், ஐசுவரியவானுக்கும் மரணம் நிச்சயம் வரும். அவர்களுடைய சரீரங்கள் அடக்கம் பண்ணப்படும்.
6. இரட்சிக்கப்பட்டவர்களைத் தேவ தூதர்கள் பரதீசிற்கு எடுத்துச் செல்வார்கள். (லூக்கா 16:22; லூக்கா 23:43) பரதீசு அப்போது பூமியின் ஆழத்தில் இருந்தது. (மத் 12:40; சங் 16:10) எபே 4:8-10, எபி 2:14-15 ஆகிய வசனங்களுக்கு பின்பு நீதிமான்கள் பரலோகத்திற்குச் செல்கிறார்கள். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23; வெளி 6:9-11).
7. மரித்தவர்களின் ஆத்துமாக்களை வைப்பதற்கு ஒரு இடம் உண்டு. (லூக்கா 16:22).
8. இரட்சிக்கப்படாதவர்கள் மரித்தபின்பு, நரகத்திற்குப் போவார்கள். (லூக்கா 16:23; யாக் 2:26; ஏசா 14:9; வெளி 20:7-15; சங் 9:17; சங் 55:15).
9. இரட்சிக்கப்படாதவர்கள் நரகத்தில் வேதனைகளை அனுபவிப்பார்கள். (லூக்கா 16:23-28; உபா32:22; 2சாமு 22:6; சங் 18:5; சங்16:3; சங் 139:8; ஏசா 14:9-11; எசே 32:21; உன் 8:6; ஆப 2:5).
10. பௌதீக சரீரத்தைப் போலவே ஆவியும், ஆத்துமாவும் பேசும், வஸ்திரம் அணிந்து கொள்ளும், உணர்வுடன் இருக்கும். (லூக்கா 16:22-24; ஏசா 14:9-11; மத் 17:3; சங் 16:10; எபி 12:22-23; வெளி 6:9-11).
11. ஒருவனை நரகத்திற்குள் தள்ளுவதற்கு தேவனுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. (லூக்கா 16:22-32; எசே 31:16; சங் 9:17; மத் 10:28; லூக்கா 12:4-5;வெளி 20:10-15; மத் 25:41,46; 2பேதுரு 2:4; யூதா1:6-7).
12. நரகத்திலும், பரலோகத்திலும் உள்ள ஆத்துமாக்கள் நித்திய காலமாக இருக்கும். (லூக்கா 16:22-32; 1பேதுரு 3:4; 1பேதுரு 4:6; லூக்கா 20:38; 2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23; வெளி 6:9-11).
13. நரகத்திலும், பரலோகத்திலும் ஜெபமும், சம்பாஷணையும் தொடர்ந்து நடைபெறும். (லூக்கா 16:22-32; ஏசா 14:9-11; யோவான் 2:2; எசே 32:21; வெளி 6:9-11).

16 அதிகாரம்

14. அக்கினியும், வேதனையும் நரகத்தில் எப்போதும் இருக்கும். (லூக்கா 16:22-32; வெளி 14:9-11; வெளி 19:20; வெளி 20:10-15; வெளி 21:8; ஏசா 66:22-24; மத்8:12,மத்13:42,49-50,மத் 24:51; மத் 25:41,46; மாற்கு 9:43-49).

15. இரட்சிக்கப்படாதவர்கள் தாங்கள் மரித்த பின்பு, நியாயத்தீர்ப்பு நாள் வரையிலும்நரகத்திலேயே இருப்பார்கள். (லூக்கா 16:26; வெளி 20:11-15).

16. இம்மையில் நாம் இரட்சிக்கப் பட்டிருந்தால், நரகத்தின் ஆக்கினை யிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். (நீதி 23:14 23:14; யோவான் 3:16; யூதா 2:11-14; லூக்கா 13:1-5; 2கொரி 5:17-21).

17. தற்கால நரகமும், நித்திய நரகமும் பூமியின் தாழ்வான பகுதிகளில் உள்ளன. **(lower parts of the earth)** (சங் 63:9; எபே 4:8-10; மத் 12:40) பூமியின் ஆழத்தில் உள்ளன. **(nether parts of the earth)** (எசே 31:14-18; எசே 32:18-27) பூமிக்கு அடியில் உள்ளன. **(beneath the earth)** (நீதி 15:24; ஏசா 14:9-15; எசே 31:14-18; எசே 32:18-27; வெளி 21:8).

18. சாத்தான், அவனுடைய தூதர்கள், பிசாசுகள், இரட்சிக்கப்படாத மனுஷர்கள் எல்லோருமே நித்திய நரகத்தில் தள்ளப்படுவார்கள். (மத்8:29; மத் 25:41; வெளி 20:10-15; 2பேதுரு 2:4; யூதா 1:6-7).

நரகமும், கல்லறையும் ஒன்றல்ல. கல்லறை சரீரம் அடக்கம் பண்ணப்படும் இடம். நரகம் இரட்சிக்கப்படாதோரின் ஆத்துமா போய் சேரவேண்டிய இடம். (சங் 9:17; லூக்கா12:5; லூக்கா 16:26; வெளி 20:3; ஏசா 30:33)

(2) மரித்த பின்பு அவர்களுடைய அனுபவம்

லூக்கா 16:22 பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்.

லாசருவைப் பற்றிய காரியங்கள்

1. அவன் ஒரு தரித்திரன். சரீரத்தில் பருக்கள் நிறைந்தவன். (லூக்கா 16:20-22).

2. ஐசுவரியவானுடைய வாசலருகே அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் (லூக்கா 16:21).

3. அவன் மரித்தான். அவனுடைய சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது. (லூக்கா 16:22).

4. தேவதூதர் அவனை ஆபிரகாமுடைய மடியிலே (பரதீசிலே) கொண்டுபோய் விட்டார்கள். (லூக்கா 16:22).

5. அவன் ஆபிரகாமோடும், இரட்சிக்கப்பட்ட எல்லோரோடும் இருந்தான். (லூக்கா 16:23).

6. அவன் ஆறுதலாக இருந்தான். அவனுக்குபாடுகளும், வேதனைகளும் இல்லை. இரட்சிக்கப் பட்டவர்களிடமிருந்து அவன் தள்ளி வைக்கப்படவில்லை. அவன் இரக்கத்திற்காகக் கெஞ்சவில்லை. தன் கடந்த காலத்திற்காக வருந்தவில்லை. அவனுக்குத் தாகம் எடுக்கவில்லை. (லூக்கா 16:23-25).

16 அதிகாரம்

லாசருவைப் பற்றிய காரியங்கள்

1. அவன் ஒரு தரித்திரன். சரீரத்தில் பருக்கள் நிறைந்தவன். (லூக்கா 16:20-22).

2. ஐசுவரியவானுடைய வாசலருகே அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் (லூக்கா 16:21).

3. அவன் மரித்தான். அவனுடைய சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது. (லூக்கா 16:22).

4. தேவதூதர் அவனை ஆபிரகாமுடைய மடியிலே (பரதீசிலே) கொண்டுபோய் விட்டார்கள். (லூக்கா 16:22).

5. அவன் ஆபிரகாமோடும், இரட்சிக்கப்பட்ட எல்லோரோடும் இருந்தான். (லூக்கா 16:23).

6. அவன் ஆறுதலாக இருந்தான். அவனுக்குபாடுகளும், வேதனைகளும் இல்லை. இரட்சிக்கப் பட்டவர்களிடமிருந்து அவன் தள்ளி வைக்கப்படவில்லை. அவன் இரக்கத்திற்காகக் கெஞ்சவில்லை. தன் கடந்த காலத்திற்காக வருந்தவில்லை. அவனுக்குத் தாகம் எடுக்கவில்லை. (லூக்கா 16:23-25).

7. அவனுடைய ஆத்துமாவும், ஆவியும் தேவனோடு நித்திய காலமாக சந்தோஷமாக இருந்தது. (லூக்கா 16:24-26).

"தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்" - தேவதூதர்கள் மரித்த சரீரத்தைக் கல்லறைக்குகொண்டுபோய் விடமாட்டார்கள். பரதீசிற்குக் கொண்டுபோய் விடுவார்கள். (லூக்கா 16:22; எபி 12:23; வெளி 6:9-11; 2கொரி 5:8; பிலி 1:21-24).

"ஆபிரகாமின் மடி" - இது யூதருடைய வழக்குச்சொல். பரதீசு என்பது இதன் பொருள். லூக்கா 23:43 ஆவது வசனத்தில் இது பரதீசு என்று அழைக்கப்படுகிறது. பரதீசு பூமியின் தாழ்விடங்களில் உள்ளது. (எபே 4:8-10; மத் 12:40) மூன்றாம் வானத்தில் வேறொரு பரதீசும் உள்ளது. (2கொரி 12:1-4; வெளி 2:7).

பரதீசு (paradise) - παράδεισος - **paradeisos** - 3857

ஆண்பால் பெயர்ச்சொல் - பரதீசு **(park, forest, orchard)** - ஏதேன் தோட்டத்தைக் குறிப்பதற்கு செப்துவஜிந்தில் இச்சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வனம் (garden) - פַּרְדֵּס - par-dace' - **6508**

ஆண்பால் பெயர்ச்சொல் - வனம், சிங்காரவனம் - பழத்தோட்டம் **(orchard)** (உன் 4:13; பிர 2:5) வனம் **(forest)** (நெகே 2:8)

"மடியில் இருப்பது" என்னும் வாக்கியம் அந்த வேளையில் அந்த நபரோடு நெருங்கி இருப்பது என்னும் பொருளைத் தரும். (யோவான் 13:23) நெருங்கிய உறவு என்றும் இந்த வாக்கியத்திற்கு ஒரு பொருள் உள்ளது. (2சாமு 12:3; ஏசா 40:11; யோவான் 1:18).

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கு முன்பாக நீதிமான்களில் அநேகர் மரித்திருக்கிறார்கள். அவர்கள் மரித்த பின்பு, அவர்களுடைய ஆத்துமாக்களைப் பிசாசு அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக பாதாளத்தில் சிறைப்பிடித்து வைத்திருந்தான். (எபி 2:14-15).

இயேசு கிறிஸ்து மரித்தபோது அவருடைய சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். அவர் பாதாளத்திற்குச் சென்று அங்கு சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கி, தம்மோடு கூட அழைத்து வந்தார். அவர் பரலோகத்திற்குப் பரமேறியபோது,பிசாசின் சிறையிருப்பிலிருந்து தம்மால் விடுவிக்கப்பட்டவர்களையும், தம்மோடு அழைத்துச் சென்றார். (மத் 12:40; எபே 4:8-10).

லூக்கா - தொகுப்புரை

16 அதிகாரம்

இயேசு கிறிஸ்து பாதாளத்தில் மரித்துப் போன நீதிமான்களைச் சாத்தானின் சிறையிருப்பிலிருந்து விடுவித்த பின்பு, அந்த இடம் வெறுமையாக இருக்கிறது. ஏனெனில் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, மரித்துப்போன பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைப் பிசாசு பாதாளத்தில் சிறைப்பிடித்து வைப்பதில்லை. பரிசுத்தவான்கள் மரித்தவுடன் அவர்களுடைய ஆத்துமாக்கள் உடனடியாகப் பரலோகத்திற்குச் சென்று தங்களுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (2கொரி5:8; பிலி 1:21-24; எபி 12:22-24; வெளி 6:9-11)

இயேசு கிறிஸ்துவிடம் இப்போது பாதாளத்தின் திறவுகோல்களும், மரணத்தின் திறவுகோல்களும் உள்ளன. (வெளி 1:18) பூமிக்குக் கீழேயுள்ள பாதாளத்தில் இரண்டு பிரிவு உண்டு. ஒன்று நீதிமான்களின் ஆத்துமாக்கள் தங்குமிடம். மற்றொன்று பாவிகளின் ஆத்துமாக்கள் தங்குமிடம். இயேசு கிறிஸ்து பாதாளத்திலுள்ள நீதிமான்களை விடுதலை பண்ணிய பின்பு, அந்த இடம், இன்று வரையிலும் காலியாகவே இருக்கிறது. ஆனால் பாதாளத்தில் பாவிகளின் ஆத்துமாக்கள் தங்குமிடத்தில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. அன்றாடம் மரித்துப் போகும் பாவிகளுடைய ஆத்துமாக்கள் இங்குதான் வரும்.

ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் பாதாளம் தன்னிடத்திலுள்ள ஆத்துமாக்களைக் கணக்கொப்புவிக்கும். அந்த நாள் வரையிலும் மரித்துப் போன பாவிகளின் ஆத்துமாக்கள் அங்கேதான் தங்கியிருக்கும். பாதாளம் தன்னிடத்தில் சிறைப்பிடிக்கப் பட்டிருந்த ஆத்துமாக்களைக் கணக்கொப்புவிக்கும்போது கல்லறைகளும் தங்களிடத்திலுள்ள சரீரங்களையும் கணக்கொப்புவிக்கும்.

அதன்பின்பு, துன்மார்க்கருடைய சரீரம், ஆத்துமா, ஆவி எல்லாமே நித்திய நரகத்தில் நித்திய காலத்திற்கும் தள்ளப்படும். (வெளி 20:11-15).

1. அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான் (லூக்கா 16:19).

2. அவன் மரித்தான். அவனுடைய சரீரத்தை அடக்கம் பண்ணினார்கள். (லூக்கா 16:22).

3. அவனுடையஆத்துமா பாதாளத்திற்குச் சென்றது. (லூக்கா 16:23).

4. அவன் பாதாளத்தில் வேதனைப் பட்டான். (லூக்கா 16:23-25,28).

5. அவனுக்குக் கண்கள் இருந்தன. அவனால் பார்க்க முடிந்தது. ஆட்களை அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. (லூக்கா 16:23).

6. அவன் நரகத்திலிருந்து "தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும் படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப் படுகிறேனே" என்று கூப்பிட்டான். (லூக்கா 16:24).

7. அவனுக்கு நாவு, கண்கள், நினைவு, உணர்வு, சித்தம், சத்தம், தன்னுடைய சகோதரர்களைக் குறித்த உணர்வு ஆகிய எல்லாமே இருந்தது. (லூக்கா 16:23-31).

(3) மரித்த பின்பு அவர்களுடைய ஜீவியங்கள்

லூக்கா 16:23 பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்.

லூக்கா 16:24 அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.

16 அதிகாரம்

லூக்கா 16:25 அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்.

பாதாளம் **(hell)** - ᾅδης - **hadees** - 86

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம், இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலியமாகத் தங்கும் இடம் **(the unseen world of departed spirits)** - 10 இடங்களில் நரகம், பாதாளம் **(hell)** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 11:23; மத் 16:18; லூக்கா 10:15; லூக்கா 16:23; அப் 2:27,31; வெளி 1:18; வெளி 6:8; வெளி 20:13-14) ஒரே வசனத்தில் மட்டும் “கல்லறை” **(grave)** என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (1கொரி 15:55). நரகம் என்பதே இதன் சரியான மொழிபெயர்ப்பாகும். இந்தக் கிரேக்கச் சொல்லிற்கு இணையான எபிரெய வார்த்தை “சீயோல்” **(sheh-ole’, sheh-ole)**

பாதாளம் (hell) - שְׁאוֹל - **sheh-ole’, sheh-ole’ - 7585**

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம், நரகம் (சங் 9:17)

வேதனை **(torments)** - βάσανος - **basanos** - 931

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதனை **(going to the bottom, the lowest torture or torment)** (லூக்கா 16:23,28)

வேதனை **(torments)** - βασανίζω - **basanizoo** - 928

வினைச்சொல் - வேதனைப்படு, அலைவுபடு, வருத்தப்படு, வாதிக்கப்படு, வேதனையடை **(to torture, be in pain)** (மத் 8:6,29; மாற்கு 5:7; லூக்கா 8:28; வெளி 9:5; வெளி 11:10; வெளி 14:10; வெளி 20:10);

வேதனை **(torture)** - βασανισμός - **basanismos** - 929

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதனை, வாதை **torture** (வெளி14:11)

வேதனைப்படு **(sorrow)** - ὀδυνάω - **odynaoo** - 3600

வினைச்சொல் - வேதனைப்படு, துக்கப்படு **(the state of grief, sorrow, and torment)** (லூக்கா 16:24-25)

இரட்சிக்கப்படாதவர்கள் நரகத்தில் வேதனை அனுபவிப்பதற்கான காரணங்கள்

1. பரலோகத்தில் நீதிமான்கள் மகிமையின் வஸ்திரம் தரித்து, நித்திய ஜீவனை அனுபவிப்பதை நரகத்திலிருந்து காணும்போது வேதனை உண்டாகும். (லூக்கா 16:23)

2. தங்களுடைய பாவத்தினாலேயே தங்களுடைய ஆத்துமா கெட்டுப்போய், இப்போது நரகத்தில் தள்ளப்பட்டிருக்கிறதுஎன்னும் உணர்வு. (லூக்கா 16:25)

3. இந்த வேதனையிலிருந்து விடுபட்டு, நன்மையைப் பெற வேண்டும் என்னும் நித்திய ஆவல். (லூக்கா 16:25)

4. இம்மையில் இரட்சிக்கப்படுவதற்கு இருந்த வாய்ப்புக்களையும், அதைத் தவற விட்டதையும் எண்ணி ஏங்குவது. (லூக்கா 16:25)

5. இம்மையில் தாங்கள் செய்த துர்க்கிரியைகளுக்காக மனம் வருந்துவது. இனிமேல் அதற்காக மனம்வருந்தி பயனில்லை. இனிமேல் இரட்சிக்கப் படுவதற்கு வாய்ப்பில்லை. (லூக்கா 16:25)

16 அதிகாரம்

6. நரகத்தின் பாடுகளிலிருந்து தப்பிப்பதற்கு வழியும் இல்லை, நம்பிக்கையும் இல்லை.(லூக்கா 16:26)

7. தங்களுக்குப்பிரியமானவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இரட்சிக்கப் பட்டவர்கள் இருக்கும் இடத்திற்கு இவர்களால் கடந்து போக முடியாதபடி இவர்களுக்கு நடுவில் ஒரு பெரும்பிளப்புஉண்டாக்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 16:23-26)

8. தங்களுடைய மோசமான ஜீவியத்தினால் தங்களுடைய நண்பர்களும், தங்களுக்குப் பிரியமானவர்களும் தங்களுடைய ஆத்துமாக்களை அழித்துப் போட்டார்கள் என்னும் குற்ற உணர்வு. (லூக்கா 16:27-31)

9. தங்களுக்குப் பிரியமானவர்கள் இரட்சிக்கப் படவேண்டும் என்று விரும்பியும் தங்களால் எதுவும் செய்ய முடியாத பரிதாபமான நிலைமை. (லூக்கா 16:29-31)

10. அக்கினியும், கந்தகமும் அவர்களை வாட்டுகிறது. (லூக்கா 16:23-31; யோவான் 25:41,46; வெளி14:9-11; வெளி 20:11-15; வெளி 21:8; வெளி 66:22-24)

(4) நடுவேயுள்ள பெரும் பிளப்பு

லூக்கா 16:26 அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப் பட்டிருக்கிறது என்றான்.

பிளப்பு (gulf) - χάσμα - chasma - 5490

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிளப்பு (a gaping opening, a chasm, an impassible gulf)

(5) பூமியில் உள்ளவர்களுக்கு சுவிசேஷம்

லூக்கா 16:27 அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு,

லூக்கா 16:28 நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

"நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" - மரித்துப்போன பரிசுத்தவானிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம் வேதாகமத்தில் இந்த வசனத்தில் மட்டுமே வருகிறது. இந்த ஜெபத்தினால் எந்தப் பிரயோஜனமுமில்லை.

"வேதனையுள்ள இந்த இடம்" - நரகமே வேதனையுள்ள இடம்.

(6) தேவனுடைய வார்த்தை இறுதியான அதிகாரம் உடையவை

லூக்கா 16:29 ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான்.

லூக்கா 16:30 அதற்கு அவன்: அப்படியல்ல,தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.

16 அதிகாரம்

(5) பூமியில் உள்ளவர்களுக்கு சுவிசேஷம்

லூக்கா 16:27 அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு,

லூக்கா 16:28 நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

"நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" - மரித்துப்போன பரிசுத்தவானிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம் வேதாகமத்தில் இந்த வசனத்தில் மட்டுமே வருகிறது. இந்த ஜெபத்தினால் எந்தப் பிரயோஜனமுமில்லை.

"வேதனையுள்ள இந்த இடம்" - நரகமே வேதனையுள்ள இடம்.

(6) தேவனுடைய வார்த்தை இறுதியான அதிகாரம் உடையவை

லூக்கா 16:29 ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான்.

லூக்கா 16:30 அதற்கு அவன்: அப்படியல்ல தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.

லூக்கா 16:31 அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடா விட்டால், மரித்தோரிலி ருந்து ஒருவன் எழுந்து போனாலும், நம்பமாட்டார்கள், என்று சொன்னான் என்றார்.

"அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும்" - மனுஷருக்குத் தேவன் கூறும் ஒரே காரியம் இதுதான். இம்மையில் நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லையேல் அழிவு நிச்சயம். (மாற்கு 16:16; ரோமர் 1:16; ரோமர் 2:12-16).

"அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும், நம்பமாட்டார்கள்" - வேதவாக்கியங்களெல்லாம்தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

"மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும், நம்பமாட்டார்கள்" - இயேசு கிறிஸ்து ஏற்கெனவே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார். இருந்தாலும் இன்னும் ஏராளமான ஜனங்கள் நரகத்தைப் பற்றியும் அதன் வேதனைகளைப் பற்றியும் கவலையற்றவர்களாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் அவர் கூறிய வேத வாக்கியங்களெல்லாம் நிறைவேறிற்று. (வெளி 1:18; வெளி 2:11; வெளி 6:8-11; வெளி 14:9-11; வெளி 20:4-15; வெளி 21:8) லூக்கா 16:19-32 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற பிரகாரம் சத்திய வசனங்கள் மிகவும் தெளிவாக உள்ளன. இதற்குச் செவிகொடுத்துக் கீழ்ப்படிய வேண்டியது மனுஷனே. தங்களுடைய முடிவிற்கு தாங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.

17 அதிகாரம்

120. விசுவாசிகளுக்கு இடறல்கள் - (மத் 18:5)

லூக்கா 17:1 பின்பு அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: இடறல்கள் வராமல்போவது கூடாதகாரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!

லூக்கா 17:2 அவன் இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும் அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டுபோவது அவனுக்கு நலமாயிருக்கும்.

"அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி" - இயேசு கிறிஸ்து மறுபடியுமாகத் தம்முடைய சீஷர்களிடம் பேசுகிறார். (லூக்கா 16:1, 14-15).

"இடறல்கள் வரும்" - (மத் 18:6-7; மாற்கு 9:42)

"அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" - புதிய ஏற்பாட்டில் "ஐயோ" என்னும் சொல் 40 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து 31 இடங்களில் ஐயோ என்னும் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். பட்டணங்கள், வேதபாரகர், பரிசேயர், விசுவாசமில்லாத ஜனங்கள் ஆகியோர்மீது நியாயத்தீர்ப்பை அறிவிப்பதற்காக ஐயோ என்னும் சொல்லை இயேசு பயன்படுத்துகிறார்.

121. மன்னிப்பது பற்றிய பிரமாணம் - (மத் 6:14; 18:21; மாற்கு 11:25-26; எபே 4:32)

லூக்கா 17:3 உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக.

லூக்கா 17:4 அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார்.

"உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்" - (மத் 11:29)

"அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக." - (மத் 18:21-35)

122. அளவில்லாத விசுவாசம் - (மத் 17:20; 21:21; மாற்கு 9:23)

லூக்கா 17:5 அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி: எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும் என்றார்கள்.

லூக்கா 17:6 அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.

"எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும்" - பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்ட போது, இயேசு கிறிஸ்து இந்த விண்ணப்பத்திற்குப் பதில் கொடுத்தார். நாம் எல்லோருமே விசுவாசம் என்னும் வரத்திற்காக ஜெபிக்க வேண்டும். அதை நாடவேண்டும். (1கொரி 12:8-11,30) விசுவாசம் வேதவசனத்தைக் கேட்பதினாலேயே வரும். (ரோமர் 10:17)

"கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால்" - விசுவாசத்தின் அளவைக் குறித்து இயேசு கிறிஸ்து மறுபடியுமாகக் கூறுகிறார். விசுவாசத்தினால் மலைகளும், மரங்களும் அகன்று போகும். (மத் 17:20; லூக்கா 17:6) விசுவாசத்தினால் எல்லாவற்றையும் செய்ய முடியும். (மத் 21:22) விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும். (மத் 17:20; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16).

17 அதிகாரம்

123. உண்மையுள்ள ஊழியத்தைப் பற்றிய உவமை - (மாற்கு 24:45; லூக் 12:41)

லூக்கா 17:7 உங்களில் ஒருவனுடைய ஊழியக்காரன் உழுது அல்லது மந்தைமேய்த்து வயலிலிருந்து வரும் போது, எஜமான் அவனை நோக்கி: நீ முன்பு போய்ச் சாப்பிட்டுவா என்று அவனுக்குச் சொல்வானோ?

லூக்கா 17:8 நீ எனக்குச் சாப்பாடு ஆயத்தம் பண்ணி அரைகட்டிக்கொண்டு, நான் போஜனபானம்பண்ணுமளவும் எனக்கு ஊழியஞ்செய், அதற்குப்பின் நீ புசித்துக் குடிக்கலாம் என்று அவனுக்குச் சொல்லுவானல்லவா?

லூக்கா 17:9 தான் கட்டளையிட்டவைகளை அந்த வேலைக்காரன் செய்ததற்காக அவனுக்கு உபசாரஞ்செய்வானோ? அப்படிச் செய்யமாட்டானே.

லூக்கா 17:10 அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்.

உவமை எண் - 38

"உங்களில் ஒருவனுடைய ஊழியக்காரன் உழுது அல்லது மந்தைமேய்த்து வயலிலிருந்து வரும்போது, எஜமான் அவனை நோக்கி: நீ முன்பு போய்ச் சாப்பிட்டுவா என்று அவனுக்குச் சொல்வானோ?.................." (லூக்கா 17:7-10) தேவனுடைய ஊழியக்காரர்கள் தாங்கள் செய்யும் காரியங்களுக்குப் பெருமைப்படக் கூடாது. நம்மிடம் எப்போதும் தாழ்மை இருக்க வேண்டும். நாம் செய்ய வேண்டியதை மாத்திரமே செய்திருக்கிறோம் என்று எண்ண வேண்டும். (லூக்கா 18:1)

"அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்" - லூக்கா 17:7-9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உவமையின் மையக்கருத்து இதுதான். பிரதிபலன் எதிர்பாராமல் நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும். உண்மையோடும், உத்தமமாகவும் மனத்தாழ்மையோடும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும். நமது ஊழியத்தில் பெருமைப்பாராட்டக்கூடாது. (மத் 6:1-6; யோவான் 12:43)

124. இயேசு பத்து குஷ்டரோகிகளைச் சுத்தமாக்குகிறார்

லூக்கா 17:11 பின்பு அவர் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணுகையில், அவர் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார்.

லூக்கா 17:12 அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று:

லூக்கா 17:13 இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்.

லூக்கா 17:14 அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.

லூக்கா 17:15 அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி,

லூக்கா 17:16 அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்குஸ்தோத்திரஞ்செலுத்தினான்; அவன் சமாரியனாயிருந்தான்.

லூக்கா 17:17 அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே?

17 அதிகாரம்

லூக்கா 17:18 தேவனை மகிமைப்படுத்து கிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே என்று சொல்லி,

லூக்கா 17:19 அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

"எருசலேம்" - இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு வருகிறார். லூக்கா 13:32-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு மூன்று நாட்களுக்குப் பின்பு, இயேசு கிறிஸ்துவின் ஒரு ஊழியப்பகுதி நிறைவு பெறுகிறது. இதுவரையிலும் இயேசு கிறிஸ்து கூறியதும், செய்ததும் இந்த மூன்று நாட்களில் நடைபெற்ற காரியங்களாகும்.

"குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்றார்கள்" - குஷ்டரோகிகள் சமுதாயத்திலிருந்து தள்ளிவைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் தூரத்தில்தான் நிற்க வேண்டும். (லேவி 13:21,45-46; லேவி 14:2). ஜனங்களைவிட்டு 300 அடி தூரத்தில் தான் குஷ்டரோகிகள் இருக்க வேண்டுமென்று யூதருடைய பாரம்பரியம் கூறுகிறது. (யாத் 4:6)

ஐயர் (Master) - ἐπιστάτης - epistatees - 1988

ஆண்பால் பெயர்ச்சொல் - ஐயர் (லூக்கா 9:38)

"நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்" - (மத் 8:4; லூக்கா 5:14; லேவி 13, லேவி 14)

"அவர்கள் போகையில் சுத்தமானார்கள்" - குஷ்டரோகிகள் கொஞ்சம் கொஞ்சமாக குணமாகவில்லை. அவர்கள் உடனடியாக சுத்தமானார்கள். நாம் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும்போது உடனடியாக அவர்கள் குணமடைய வேண்டுமென்று எதிர்பார்க்க வேண்டும்.

"அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கிய மானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப் படுத்தினான்" - பத்துபேர் குணமடைந்தாலும், ஒருவன் மட்டுமே இயேசு கிறிஸ்துவிடம் திரும்பி வந்து, அவரை மகிமைப் படுத்துகிறான்.

"சமாரியன்" - சமாரியருக்கு தெய்வீக அற்புதம் நடைபெறாது என்று யூதர்கள் நினைத்தார்கள். இப்போது சமாரியனும், குணமடைந்திருக்கிறான். ஆகையினால் தனது நன்றியைத் தெரிவிப்பதற்காக இயேசு கிறிஸ்துவிடம் உடனடியாகத் திரும்பி வருகிறான். (லூக்கா 10:33)

"சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே?" - இன்றைய தினம் இயேசு கிறிஸ்து ஆயிரக்கணக்கான ஜனங்களைச் சொஸ்தமாக்கிக் கொண்டிருக்கிறார். அவர்களில் எத்தனைபேர் தேவனை மகிமைப் படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை.(யாத் 16:2)

"அந்நியன்" - புறதேசத்தான். இஸ்ரவேல் ஜனத்தைச் சேர்ந்தவன் அல்ல. ஒருவேளை குணமடைந்த மற்ற ஒன்பதுபேரும் யூதர்களாக இருக்கலாம். நகரத்திற்கு வெளியே இருக்கும் குஷ்டரோகிகள் யூதன் என்றும், சமாரியன் என்றும் வேறுபாடு இல்லாமல் இருந்திருக்கிறார்கள்.

125. தேவனுடைய இராஜ்ஜியம்

லூக்கா 17:20 தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது.

லூக்கா 17:21 இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப் படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

பிரத்தியட்சம் (observation) - παρατήρησις - parateereesis – 3907

17 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - பிரத்தியட்சம், காணக்கூடிய விதமாக, கோபத்தோடு பார்ப்பது (hostile watching)

நோக்கமாயிரு (watching) - παρατηρέω - parateereoo - 3906

வினைச்சொல் - நோக்கமாயிரு, பார், காத்துக்கொண்டிரு, கோபத்தோடு பார்ப்பதைப் போன்றது (மாற்கு 3:2; லூக்கா 6:7; லூக்கா 14:1; லூக்கா 20:20; அப் 9:24)

"உங்களுக்குள்" - தேவனுடைய ராஜ்யம் நமக்குள் இருக்கிறது. ஆனாலும் நாம் அவரைப் புரிந்துகொள்வதில்லை.

உட்புறம் (within) - ἐντός - entos - 1787

இடைச்சொல் - உள், உட்புறம்

126. இயேசு தமது இரண்டாம் வருகையை முற்குறித்துக் கூறுகிறார் - (மத் 24-25; மாற்கு 13; லூக் 21)

(1) அவர் வரும் விதம் - (மத் 24:27)

லூக்கா 17:22 பின்பு அவர் சீஷர்களை நோக்கி: மனுஷ குமாரனுடைய நாட்களிலொன்றைக் காண வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங் காலம் வரும்; ஆனாலும் அதைக் காணமாட்டீர்கள்.

லூக்கா 17:23 இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும், சிலர்உங்களிடத்தில் சொல்லுவார்கள்; நீங்களோ போகாமலும் பின் தொடராமலும் இருங்கள்.

லூக்கா 17:24 மின்னல் வானத்தின் ஒரு திசையில் தோன்றி மறுதிசைவரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்.

லூக்கா 17:25 அதற்கு முன்பு அவர் அநேகம் பாடுபட்டு, இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்படவேண்டியதாயிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 35

"மனுஷகுமாரனுடைய நாட்களிலொன்றைக் காணவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங் காலம் வரும்; ஆனாலும் அதைக் காண மாட்டீர்கள்........................" (லூக்கா 17:22-37) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா17:22,25 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. லூக்கா 17:23-24, 26-37 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

"இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும், சிலர் உங்களிடத்தில் சொல்லுவார்கள்; நீங்களோ போகாமலும் பின்தொடராமலும் இருங்கள்" - தாங்களே மேசியா என்று பலர் தங்களைப் பற்றிக் கூறுவார்கள். தேவனுடைய ராஜ்யம் இதுதான் என்று பலர் கூறுவார்கள். (மத் 24:5,23-26) நீங்கள் வஞ்சிக்கப்படாத படிக்கு எச்சரிக்கையாக இருங்கள். இயேசு கிறிஸ்து வரும்போது மேகங்கள்மீது வருவதை எல்லோரும் காண்பார்கள். (லூக்கா 17:24; லூக்கா 21:27; மத் 24:27-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; யூதா 1:14; வெளி 19:11-21; சக 14; ஏசா 63).

"அதற்கு முன்பு அவர் அநேகம் பாடுபட்டு, இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்படவேண்டியதாயிருக்கிறது" - இந்த வசனம் அப்படியே நிறைவேறியிருக்கிறது. அதுபோலவே லூக்கா 17:22-24, 26-37 ஆகிய வசனங்களும் நிறைவேறும்.

(2) அவர் வரும்போது அழிவு உண்டாகும் - (மத் 24:37, 40)

லூக்கா 17:26 நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்.

லூக்கா 17:27 நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது.

17 அதிகாரம்

லூக்கா 17:28 லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள்.

லூக்கா 17:29 லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப் போட்டது.

லூக்கா 17:30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்.

நோவா, லோத்து ஆகியோரின் நாட்களில் நடந்த காரியங்கள்

1. தேவனைப் புறக்கணித்து விட்டார்கள் (ஆதி 4:1-7; ரோமர் 1:17-32)
2. பிரமாணத்திற்குப் புறம்பாக தேவ தூதரோடும் உறவு வைத்திருந்தார்கள். (ஆதி 6:1-4; 2பேதுரு 2:4; யூதா 1:6-7)
3. ஆண் புணர்ச்சிக்காரர்களாக இருந்தார்கள். (ஆதி 19; லூக்கா 17:28; லூக்கா 1:17-32)
4. பெண்கொண்டார்கள், தள்ளினார்கள். (ஆதி 6:1-4; மத் 24:38; லூக்கா 17:27)
5. புதிய காரியங்களைக் கண்டுபிடித்தார்கள். (ஆதி 4:17-24; ரோமர் 1:30; தானி 12:4; லூக்கா 17:28)
6. தேவதூஷணம் சொன்னார்கள் (2பேதுரு 2:4-8; மத் 24:38; லூக்கா 17:27-28; 2தெச 2:3)
7. பிரசங்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை (2பேதுரு 2:5; 2தீமோ 4:1-4; மத் 24:38)
8. முரட்டாடமாக இருந்தார்கள் (ஆதி 6:1-13; ரோமர் 1:17-32; 2தீமோ 3)
9. ஒழுக்கமில்லாமல் இருந்தார்கள் (ஆதி 4:17-24; ஆதி 6:1-13; மத் 24:38; லூக்கா 17:26-28; ரோமர் 1:17-32; 2தீமோ 3)
10. குடித்து வெறித்திருந்தார்கள். (மத் 24:38; லூக்கா 17:26-39; லூக்கா 21:34-36; ரோமர் 1:17-32; 2தீமோ 3)
11. கொண்டார்கள், விற்றார்கள் (லூக்கா 17:28; ரோமர் 1:17-32; 2தீமோ 3)
12. நட்டார்கள், கட்டினார்கள் (லூக்கா 17:28; ரோமர் 1:17-32; தானி 12:4)

"நோவாவின் நாட்கள்" - (ஆதி 6:8-9:29; மத் 24:38)

"எல்லாரையும் அழித்துப் போட்டது" - (மத் 24:37-39)

"லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும்" - (ஆதி 12:1-19:38; 2பேதுரு 2:6-8)

"வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது" - (ஆதி 19:24; மத் 11:24; லூக்கா 10:12)

"மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்" - நோவாவின் நாட்களில் ஜலப்பிரளயம் எல்லோரையும் அழித்துப் போட்டது. லோத்தின் நாட்களில் அக்கினியும், கந்தகமும் சோதோமை அழித்துப் போட்டது. இந்த அழிவிலிருந்து ஒருசிலர் மட்டுமே தப்பினார்கள். (ஆதி 6,19) இயேசு கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையில் திரளான ஜனங்களை அழித்துப் போடுவார். ஒருசிலர் மட்டுமே ஆயிரம் வருஷ அரசாட்சிக்குக் கடந்து போவார்கள். (யோவே 3; சக 14; வெளி 19:11-21; வெளி 20:1-10; மத் 25:31-46).

"வெளிப்படும்நாள்" - சபை ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்டது. (1தெச 4:16) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் பூமிக்கு வரும்பொழுது அவரோடே எடுத்துக்கொள்ளப் பட்ட பரிசுத்தவான்களும் வருவார்கள். இந்தக் காட்சியை எல்லாக் கண்களும் காணும். (சக 14:1-5; யூதா 1:14; வெளி 19:11-12; மத் 24:29-31; 2தெச 1:7-10).

17 அதிகாரம்

(3) இயேசுவின் இரண்டாம் வருகை குறித்த எச்சரிப்பு

லூக்கா 17:31 அந்த நாளிலே வீட்டின் மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக் கடவன்.

லூக்கா 17:32 லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்.

லூக்கா 17:33 தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்து போவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக்கொள்ளுவான்.

"அந்த நாளில்" - சபை எடுத்துக் கொள்ளப்படும் நாளைக் குறிக்காது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாளைக் குறிக்கும். (லூக்கா 17:34-37; மத் 24:27-31; மத் 25:31-46; வெளி 19:11-21).

"வீட்டின்மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக் கொண்டுபோக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன்" - சபை எடுத்துக் கொள்ளப் படும்போது பரிசுத்தவான்கள் ஒரு நிமிஷத்திலே ஒரு கணப்பொழுதிலே எடுத்துக் கொள்ளப் படுவார்கள். (1கொரி 15:51-58) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது ஜனங்களுக்கு தங்கள் பண்டங்களை எடுத்துக் கொள்ளவும், வயலிலிருந்து வீட்டிற்குத் திரும்பிவரவும் நேரம் இருக்கும்.

"லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்." - லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்து, உப்புத்தூணானாள். இயேசு கிறிஸ்து இந்த வரலாற்று நிகழ்ச்சியை அங்கீகரிக்கிறார். பஞ்சாகம புஸ்தகங்களும், சுவிசேஷ புஸ்தகங்களும், பரிசுத்த வேதாகமத்தில் உள்ள மற்ற புஸ்தகங்களும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவையே.

இவை எல்லாமே ஒரே தேவனைப் பற்றியும் அவருடைய கிரியைகளைப் பற்றியும் கூறுகிறது. (ஆதி 19:26).

"தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்துபோவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான்" - (லூக்கா 9:24; மத் 10:39; மாற்கு 8:35)

(4) அர்மகெதோன் யுத்தம் - (எசே 38:17; 39:17; யோவேல் 3; சக 14; மத் 24:27; வெளி 19:11)

லூக்கா 17:34 அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்.

லூக்கா 17:35 திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப் படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள்.

லூக்கா 17:36 வயலிலிருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப் படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 17:37 அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: எங்கே, ஆண்டவரே, என்றார்கள். அதற்கு அவர்: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார்.

"அந்த இராத்திரியில்" - இதுவும் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்காது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையே குறிக்கும். (மத் 24:27-31,37-42) இயேசு கிறிஸ்து வரும்போது அர்மெகதோனில் யுத்தம் நடைபெறும். இதில் பலர் அழிந்து போவார்கள். வானத்தின் பறவைகளுக்கு அவர்கள் இரையாகிவிடுவார்கள். (மத் 24:27-28; வெளி 19:17-21; எசே 39:4,17-21)

17 அதிகாரம்

"ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்" - இந்த வசனம் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிப்பதாகச் சிலரும், இரண்டாம் வருகையைக் குறிப்பதாகச் சிலரும் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். (மத் 24:27-42, லூக்கா 17:23-37) சபை எடுத்துக் கொள்ளப்படும்போது பரிசுத்தவான்கள் மத்திய ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இந்த வசனங்களில் கூறப்பட்டிருப்பதுபோல யாரும் அழிக்கப்பட மாட்டார்கள். (மத் 24:38, லூக்கா 17:27, 29) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அழிக்கப் பட்டவர்களை ஆகாயத்துப் பறவைகள் புசிக்கும். இது மத் 24:27-28; லூக்கா 17:34-37; வெளி 19:17-21; எசே 39:17-21 ஆகிய வசனங்களின் நிறைவேற்றமாகும். அர்மெகதோனில் நடைபெறும் யுத்தத்திற்குத் தேசத்தார் அனைவரும் கூடிவருவார்கள். அங்கு அவர்களை இயேசு கிறிஸ்துவும், அவருடைய பரமசேனைகளும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அழிப்பார்கள். (சக 14:1-5; வெளி 19:11-21).

"மற்றவன் கைவிடப்படுவான்" - அர்மெகதோன் யுத்தத்தில் கொல்லப் படாதவர்களே கைவிடப்பட்டவர்கள். நோவாவும், லோத்தும், அவனுடைய குடும்பத்தாரும் ஜலப்பிரளயத்திலிருந்தும், அக்கினி, கந்தகத்திலிருந்தும் தப்பித்தார்கள். (லூக்கா 17:27,29) இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு பூமிக்கு வரும்பொழுது நடைபெறும் அர்மெகதோன் யுத்தத்தில் ஒருசிலர் தப்பிப்பார்கள். இவர்கள் ஆயிரம் வருஷ ஆட்சியில் பூமியை நிரப்புவதற்காக அனுமதிக்கப் பட்டவர்கள். (சக 14:16-21; மத் 25:31-46; வெளி 19:11-20:10; எசே 39:2)

"எங்கே, ஆண்டவரே" - பிணங்கள் எங்கே கிடக்கும். கழுகுகள் எங்கே வந்து அவைகளைப் புசிக்கும் என்று சீஷர்கள் கேட்கிறார்கள். அர்மெகதோன் என்னும் இடமே இதற்குரிய சரியான விடையாகும். (மத் 24:27-28; வெளி 16:13-16; வெளி 19:17-21; எசே 39:17-21).

18 அதிகாரம்

127. அநீதியான நியாயாதிபதியைப் பற்றிய உவமை - சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுவதன் வல்லமை

லூக்கா 18:1 சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்:

லூக்கா 18:2 ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான்.

லூக்கா 18:3 அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள்.

லூக்கா 18:4 வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரைமதி யாமலும் இருந்தும்,

லூக்கா 18:5 இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிற படியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றான்.

லூக்கா 18:6 பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப் பாருங்கள்.

லூக்கா 18:7 அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?

லூக்கா 18:8 சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்.

"சோர்ந்துபோகாமல்" - இருதயம் தளர்ந்து விடக்கூடாது. சந்தேகம், பயம், அவிசுவாசம், மனத்தளர்ச்சி ஆகியவற்றிற்கு இடம் கொடுத்து, நாம் மனம் தளர்ந்துவிடக் கூடாது. நமது ஜெபத்திற்கு உடனடியாகப் பதில் கிடைக்கவில்லையென்றால் சோர்ந்துபோய்விடக் கூடாது. ஜெபத்திற்குப் பதில் நிச்சயமாகக் கிடைக்கும். இது தெய்வீக சித்தம். இயேசு கிறிஸ்து தமது திருஇரத்தத்தின் மூலமாக நம்மோடு ஏற்படுத்தியிருக்கும் இரத்த உடன்படிக்கை. ஆகையினால் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில்சோர்ந்துபோகாமல் இருப்போமாக.

உவமை எண் - 39

"ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்;........................" (லூக்கா 18:1-8) ஜெபத்திற்கு உடனே பதில் கிடைக்கவில்லை யென்றாலும், தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது.

"விதவைகள்" - பரிசுத்த வேதாகமத்தில் 84 இடங்களில் விதவைகளைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. 15 இடங்களில் பெற்றோர் இல்லாதவர், விதவை என்று அழைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் நியாயப் பிரமாணத்தின் பிரகாரம் பராமரிக்கப்பட்டு வந்தார்கள்.(யாத் 22:22-24; உபா 10:18; உபா 14:28-29; உபா 16:11-14; உபா 24:17-21; உபா 27:19) தேவனுடைய விசேஷித்த பராமரிப்பும், விதவைகளுக்கு எப்போதும் உள்ளது. (சங் 68:5; சங் 94:6; சங் 146:9; நீதி 15:25). விதவைகளை ஒடுக்கியதற்காக தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் புத்திரரைக் கடிந்து கொண்டார்கள். (ஏசா 1:17,23; ஏசா 10:1-2; எரே 7:6-7; எரே 22:3; சக 7:10; மல் 3:5). பரிசேயர் விதவைகளை ஒடுக்கினார்கள். இதற்காக இயேசு அவர்களைக் கடிந்து கொண்டார். (மத் 23:14; மாற்கு 12:40; லூக்கா 20:47) விதவைகளைக் குறித்த காரியத்தில் சபைகளுக்கு அறிவுரைகள் கொடுக்கப் பட்டுள்ளன. (1கொரி 7:8-9; 1தீமோ 5:16; யாக் 1:27). விதவைகளைக் குறித்த பொருத்தனைகள். (எண் 30:9).

18 அதிகாரம்

ஆசாரியரின் குமாரத்திகளை அவர்களுடைய பெற்றோர் பராமரிக்க வேண்டும். (லேவி 22:13). ஆசாரியர் விதவைகளைத் திருமணம் செய்யக்கூடாது. (லேவி 21:14) ஒரு சகோதரன் விதவையாக இருக்கும் தன்னுடைய சகோதரனின் மனைவியைத் திருமணம் செய்து தங்களுடைய குடும்பத்தின் சுதந்தரத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். (உபா 25:5-10; மத்22:23-33). ஆதித்திருச்சபையில் முதலாவது பிரச்சனை விதவைகள் விசாரிப்பது தொடர்பாகவே எழுந்தது. (அப் 6:1-7)

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதவைகள்

1. தாமார் (ஆதி 38:1-39)
2. நகோமி, ஓர்பாள், ரூத் (ரூத் 1)
3. தெக்கோவா (2சாமு 14:5)
4. ஈராமின் தாயார் (1இராஜா 7:14)
5. செரூபாள் (1இராஜா 11:26)
6. சாரிபாத் ஊரிலுள்ள விதவை (1இராஜா 17)
7. தீர்க்கதரிசியின் மனைவி (2இராஜா 4)
8. அன்னாள் (லூக்கா 2:36-37)
9. ஏழை விதவை (மாற்கு 12:41; லூக்கா 21:2)
10. நாயீன் ஊர் விதவை (லூக்கா 7:11-15)
11. விடாமுயற்சியோடு தொடர்ந்து விண்ணப்பம் பண்ணிய விதவை (லூக்கா 18:1-8)
12. தபித்தாள், அல்லது தொற்காள் (அப் 9:36-42)

"அவள் அவனிடத்தில் போய்" - அந்த விதவை நியாயாதிபதி இடத்தில் நீடிய பொறுமையோடு தொடர்ந்து போய், தன்னுடைய வழக்கைக் குறித்துப் பேசி, தனக்கு நியாயம் பண்ண வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறாள். அவளுடைய நீடிய பொறுமையும், விடாமுயற்சியும் அவளுக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

நியாயஞ்செய் (Avenge) - ἐκδικέω - **ekdikeoo** - 1556

வினைச்சொல் - தண்டனை செலுத்து, பழிவாங்கு, நியாயஞ்செய் **(do me justice)** (லூக்கா 18:3,5; ரோமர் 12:19; 2கொரி 10:6; வெளி 6:10; வெளி 19:2).

"வெகுநாள் வரைக்கும்" - அந்த விதவைக்கு நியாயம் செய்ய, நியாயாதிபதிக்கு வெகுநாள் வரைக்கும் மனதில்லை. எத்தனை நாள் என்று தெரியவில்லை. ஆனால் எல்லா நாட்களிலும் இந்த விதவை தனக்கு நியாயம் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணிக் கொண்டே இருந்தாள்.

"நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும்...................தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்" - விதவை நியாயாதிபதியை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறாள். அவளுடைய தொந்தரவை அவனால் தாங்கமுடியவில்லை. அவள் தன்னை இனிமேல் அலட்டக்கூடாது என்று விரும்புகிறான். இதற்காகவாவது அவளுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்று தன் மனதிலே சொல்லிக் கொண்டான்.

18 அதிகாரம்

தொந்தரவுபடுத்துதல் (troubleth) - **κόπος** - **kopos** - 2873

ஆண்பால் பெயர்ச்சொல் - தொந்தரவு படுத்துதல், தொந்தரவு செய்தல், வேலைக்குட்படுதல், வருத்தம் உண்டாக்குதல் **(a beating, toil, trouble, suffering, pain, weariness)** - இந்த வசனத்தில் இவள் அவனுக்கு அதிக மனஉளைச்சலைக் கொடுக்கிறாள். *(2கொரி 6:5; 2கொரி 11:23,27)*

"இவள் அடிக்கடி வந்து" - இவள் தொடர்ந்து வருவது நியாயாதிபதிக்குத் தொந்தரவாக இருக்கிறது. அவளைச் சமாளிக்கக்கூடிய பொறுமை அவனுக்கு இல்லை.

அலட்டு (weary) - **ὑπωπιάζω** - **hypopiazoo** - 5299

வினைச்சொல் - அலட்டு, கீழ்ப்படுத்து **(to tease, annoy into compliance, subdue by repeated attacks, to bring or keep under, to wear one out, or wear down to helplessness)** *(1கொரி 9:27)*

"அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?" - இந்த உவமையின் முக்கியக் கருத்து இதுதான். அநீதியுள்ள நியாயாதிபதியிடம் விதவை விடாமுயற்சியோடு தொடர்ந்து சென்று தனக்கு நியாயம் கேட்டுக் கொண்டாள். இதுபோலவே தேவனுடைய பிள்ளைகளும் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். தேவன் நீதியுள்ளவர். கிருபையுள்ளவர். அநீதியுள்ள நியாயாதிபதியே அந்த விதவையின் விண்ணப்பத்திற்குப் பதில் கொடுத்தான் என்றால் நம்முடைய பரமபிதா தமது பிள்ளைகளின் ஜெபத்திற்குப் பதில் கொடுப்பது அதிக நிச்சயம்.

அநீதி (unjust) - **ἀδικία** - **adikia** - 93

பெண்பால் பெயர்ச்சொல் - அநீதி, அக்கிரமம், அநீதம் **(unrighteousness, wrongdoing, injustice)** - அநீதியுள்ள நியாயாதிபதி நீதியுள்ள நியாயாதிபதியாக இந்த வசனத்தில் மாறுகிறான்.

தெரிந்துகொள்ளப்பட்ட (elect) - **ἐκλεκτός** - **eklektos** - 1588

பெயரடை - தெரிந்துகொள்ளப்பட்ட **(picked out, chosen)**

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

1. கிறிஸ்து *(ஏசா 42:1; 1பேதுரு 2:6)*
2. எல்லா விசுவாசிகளும் *(ரோமர் 8:33; கொலோ 3:12; தீத்து 1:1; யோவான் 15:16; எபே 1:4; எபே 2:10; 2தெச 2:13; 2யோவான்1:1,13)*
3. இஸ்ரவேல் *(ஏசா 45:4; ஏசா 65:9,22; மத் 24:21-31; மாற்கு 13:22,27; 1பேதுரு 1:2)*
4. தேவதூதர்கள் *(1தீமோ 5:21)*

18 அதிகாரம்

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் யூதராக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் அவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே. (ரோமர் 9:11; ரோமர் 11:5,7,28; 1தெச 1:4; 1பேதுரு 5:13; 2பேதுரு 1:10). தேவனை யார் தங்களுடைய கர்த்தராக தெரிந்து கொள்கிறார்களோ அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். (மத் 11:28-30; மத் 20:16; யோவான் 1:12; யோவான் 3:16-20; யோவான் 6:37; எபே 1:4; 2தெச 2:13; யாக் 2:5; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 17:14; வெளி 22:17)

“நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?” - அநீதியுள்ள நியாயாதிபதி தனது சொந்த விருப்பத்தின் பிரகாரமாக விதவைக்கு நியாயம் செய்யாமல் தாமதம் பண்ணினான். கர்த்தர் தம்மிடம் ஜெபிக்கும் பிள்ளைகளுக்குப் பதில் தராமல் தாமதம் செய்கிறார் என்றால் அதற்கு ஒரு தெய்வீக நோக்கம் இருக்கும். (எபி 11:6; யாக் 1:5-8). இம்மைக்குரிய வாக்குத்தத்தங்கள் நமக்கு இம்மையிலேயே கிடைக்கும்.

மறுமைக்குரிய வாக்குத்தத்தங்கள்நமக்கு மறுமையிலேயே தான் கிடைக்கும். இம்மைக்குரிய வாக்குத்தத்தங்களை நாம் தொடர்ந்து ஜெபித்து, பெற்றுக் கொள்ள பழகிக் கொள்ள வேண்டும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8)

“சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” - நமது ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கப்படும் என்று கிறிஸ்து நமக்குக் கூறும் வாக்குறுதி. (ரோமர் 4:17-25).

“மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ” - இது கடைசிக்கால விசுவாசத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாகவே அவர் சபையை எடுத்துக் கொள்கிறார். (1தெச 4:16; 2தெச 2:7-8) உபத்திரவக்காலத்தில் பலவிதமான தேவ தூஷணங்கள் மிகுந்திருக்கும். (மத் 24:24; 1தீமோ 4; 2தீமோ 3:5; 2தீமோ 4:1-4; 2தெச 2; வெளி 9:20-21; வெளி 13:1-18) உபத்திரவக்காலத்தில் இரட்சிக்கப் படுகிறவர்களை திரளான ஜனங்கள் கொன்று போடுவார்கள். (வெளி 6:9-11; வெளி 7:9-17; வெளி 13:16-18; வெளி 15:2-4; வெளி 20:4-6)

128. பரிசேயனையும் ஆயக் காரனையும் பற்றிய உவமை - (மத் 23)

லூக்கா 18:9 அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமா யெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்.

லூக்கா 18:10 இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.

லூக்கா 18:11 பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

லூக்கா 18:12 வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்.

லூக்கா - தொகுப்புரை

18 அதிகாரம்

லூக்கா 18:12 வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்.

லூக்கா 18:13 ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்.

லூக்கா 18:14 அவனல்ல, இவனே நீதிமானாக்கப் பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப் படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

"தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலர்" - நம்மை நாமே நீதிமான்களாக எண்ணக்கூடாது. இது நமது பலவீனம். (மாற்கு 10:24; பிலி 3:4; 1தீமோ 6:17) நாம் நம்மைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாகக் கர்த்தரையே சார்ந்திருக்க வேண்டும்.

உவமை எண் - 40

"இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்..............." (லூக்கா 18:9-14) சுயநீதி, சுயபெருமை ஆகியவற்றை இந்த உவமை விளக்குகிறது.

பரிசேயனும், ஆயக்காரனும்

1. சமுதாயத்தில் அந்தஸ்து உள்ளவர்கள் (லூக்கா 18:10)
2. நம்பிக்கையின் ஆதாரங்கள் (லூக்கா 18:9,13)
3. தேவனிடத்தில் விண்ணப்பங்கள் (லூக்கா 18:11-13)
4. தேவனுக்கு நேராக அவர்களுடைய மனப்பாங்குகள் (லூக்கா 18:11-13)
5. மற்றவருக்கு நேராக அவர்களுடைய மனப்பாங்குகள் (லூக்கா 18:11-13)
6. மார்க்கப் பின்னணிகள் (லூக்கா 18:9-13)
7. ஜெபத்தின் முடிவுகள் (லூக்கா 18:14)

பரிசேயன் தன் ஜெபத்தில் கூறும் காரியங்கள்

1. நான் பாவிகளோடு ஜெபிக்கவில்லை.
2. நான் மற்றவர்களைப்போல இல்லை
3. நான் அநியாயக்காரன் இல்லை
4. நான் பறிகாரன் இல்லை.
5. நான் விபச்சாரக்காரன் இல்லை.
6. நான் ஆயக்காரனைப் போல இல்லை (லூக்கா 18:11).
7. வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்
8. என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் (லூக்கா 18:12)

பரிசேயன் தன் பாவங்களைப் பற்றி தேவனிடம் ஒரு வார்த்தை கூட கூறவில்லை. அவன் சுயநீதியுடையவனாக இருந்தான். (லூக்கா 18:14)

"வாரத்தில்இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்" - யூதர்கள் வாரத்தில் திங்கள்கிழமையும், வியாழக்கிழமையும் உபவாசம் பண்ணுவார்கள். வருஷத்தில் ஒருமுறை அவர்கள் உபவாசம் பண்ண வேண்டுமென்றுபிரமாணம்கட்டளையிடுகிறது. (லேவி 23:27-32). 1,200 வருஷங்களுக்குப் பின்பு சகரியாவின் காலத்தில் யூதர்கள் 4 முறை உபவாசம் பண்ணினார்கள். (சக 8:19) 500 வருஷங்களுக்குப் பின்பு கிறிஸ்துவின் காலத்தில் யூதர்கள் வருஷத்திற்கு 104 தடவைகள் உபவாசம் பண்ணினார்கள். (லூக்கா 18:12). அவர்கள் பிரமாணத்தில் வளர்ந்தார்கள். ஆனால் கிருபையில் வளரவில்லை.

18 அதிகாரம்

"தன் மார்பிலே அடித்துக்கொண்டான்" - தன் மனதிலுள்ள துக்கத்தை வெளிப் படுத்துகிறான். (லூக்கா23:48; எரே 31:19; நாகூம் 2:7).

"பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" - பரிசேயன் தன் ஜெபத்தில் 34 வார்த்தைகளைப் பேசினான். ஆயக்காரனோ மொத்தம் 7 வார்த்தைகளை மட்டுமே தன் ஜெபத்தில் பயன்படுத்துகிறான். ஆனால் ஆயக்காரனுடைய ஜெபமே கேட்கப்படுகிறது. அவன் உண்மையோடும், மனத் தாழ்மையோடும் குற்ற உணர்வோடும், எதிர்பார்ப்போடும், தேவனுடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான்.

கிருபையாயிரு (be merciful) - ἱλάσκομαι - hilaskomai - 2433

வினைச்சொல் - கிருபையாயிரு, நிவர்த்திசெய் - கிருபாசனத்தின்மீது பாவநிவாரண இரத்தம் தெளிக்கப் படுவதன் மூலமாக வரும் தேவனுடைய கிருபை. (எபி 9:5; ரோமர் 3:25; யாத் 25:17-21)

"பாவி" - ஆயக்காரன் தன்னைப் பொதுவான பாவியாகக் கூறாமல் "தான் ஒரு பாவி" என்று பொருள்படும் விதத்தில் தன்னுடைய நிலைமையைக் கூறுகிறான். (1தீமோ 1:15) ஆயக்காரனுடைய ஜெபத்தில் தான் ஒரு பாவி என்பதும், தேவன் கிருபையுள்ளவர் என்பதும் வெளிப்படுத்தப் படுகிறது. பாவநிவாரண இரத்தத்தின் மூலமாக தேவனுடைய கிருபை தனக்குக் கிடைக்கும் என்று ஆயக்காரன் நம்புகிறான். (லூக்கா 18:14) நாமும் ஜெபத்தில் ஆயக்காரனைப் போலவே ஜெபிக்க வேண்டும். (1யோவான் 1:9; ரோமர் 10:9-10).

"அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவன்" - ஒரு மனுஷனை நீதிமானாக்க இயேசு கிறிஸ்துவினால் முடிகிறது. ஒருவனுடைய பாவத்தை அவரால் மன்னிக்க முடிகிறது. இதற்குரிய அதிகாரம் இயேசுகிறிஸ்துவிற்கு உள்ளது.

"தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான்,தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" - (மத் 20:16)

129. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் - (மத் 19:13; மாற்கு 10:13)

லூக்கா 18:15 பின்பு குழந்தைகளையும் அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். சீஷர்கள் அதைக்கண்டு, கொண்டு வந்தவர்களை அதட்டினார்கள்.

லூக்கா 18:16 இயேசுவோ அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டு: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவைகளைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.

லூக்கா 18:17 எவனாகிலும் சிறுபிள்ளையைப் போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அதில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"குழந்தைகளையும் அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். சீஷர்கள் அதைக்கண்டு, கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள்" - (மத் 19:13-15; மாற்கு 10:13-16)

130. ஐசுவரியமுள்ள வாலிபன் - (மத் 19:16; மாற்கு 10:17)

லூக்கா 18:18 அப்பொழுது தலைவன் ஒருவன் அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்.

லூக்கா 18:19 அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே.

18 அதிகாரம்

லூக்கா 18:20 விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே என்றார்.

லூக்கா 18:21 அதற்கு அவன்: இவைகளை யெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

லூக்கா 18:22 இயேசு அதைக் கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.

லூக்கா 18:23 அவன் அதிக ஐசுவரியமுள்ள வனான படியினால், இதைக் கேட்டபொழுது, மிகுந்த துக்கமடைந்தான்.

"நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்" - (மத் 19:16-30; மாற்கு 10:17-31)

"கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே" - மனுஷனுக்கு மனச்சாட்சி இருக்கிறது. நன்மை எது, தீமை எது என்பதை அவன் அறிந்திருக்கிறான். (ரோமர் 2:12-16) வேதாகமம் தேவனுடைய வார்த்தை. தேவனுடைய சித்தம் இதில் எழுதப்பட்டிருக்கிறது. நாம் இரட்சிக்கப் படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிற தெளிவான உபதேசம் வேதாகமத்தில் உள்ளது. தேவனுடைய வார்த்தையை அறிந்து கொண்டால் மட்டும் போதாது. அதற்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

"இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்" - இவன் கற்பனைகளைக் கைக்கொண்டிருக்கிறான் என்பதில் இயேசு கிறிஸ்துவிற்குச் சந்தேகம் எதுவுமில்லை. அவன் உண்மையாகவே இந்த ஐந்து கற்பனைகளையும் கைக் கொண்டிருக்கிறான். "இயேசு அவனிடத்தில் அன்புகூர்ந்தார்" (மாற்கு 10:21) என்று வாசிக்கிறோம். இதன்பின்பு, இயேசு அவனிடம் இன்னும் ஒரு கற்பனையையும் கூறுகிறார். "உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு". அவன் இதுவரையிலும் இந்தக் கற்பனையைக் கைக்கொள்ளவில்லை. உன்னைப்போல பிறனையும் நேசிப்பாயாக என்னும் கற்பனைக்கு (மத் 22:37-39) ஒப்பாக இந்தக் கற்பனை இருக்கிறது. பிறர் ஏழையாக இருக்கலாம். நம்மிடம் உதவி எதிர்பார்க்கலாம். நம்மால் அவருக்கு உதவி செய்ய முடியலாம். தேவனுக்கு நாம் முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும். (லூக்கா 10:27-37)

தரித்திரன் (poor) - πτωχός - **ptoochos** - 4434

பெயரடை - எளிமையுள்ள, தரித்திரரான, ஏழைகளான **(destitute, in want)** - பிச்சைக்காரன் **(beggar)** (லூக்கா 16:20,22), பிச்சை எடுத்தல் **(beggarly)** (கலா 4:9) தரித்திரன் **(poor man)** (யாக் 2:2)

"என்னைப் பின்பற்றிவா" - இதுவே கிறிஸ்தவ ஜீவியத்தின் இரகசியம். மத்தேயு சுவிசேஷத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் உள்ள புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்களின் மையக்கருத்து இதுதான். "இயேசுவை நாம் பின்பற்றி வரவேண்டும்". இதைச் செய்யாதவருக்கு நித்திய ஜீவன் இல்லை. (யோவான் 10:27-29). விசுவாசிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எல்லா உபதேசங்களுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். (யாக் 1:18-27; யாக் 2:8-26; 1யோவான் 1:7; 1யோவான் 2:3-6,15-17; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-5,18).

18 அதிகாரம்

131. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - (மத் 6:19; 19:23; மாற்கு 10:23)

லூக்கா 18:24 அவன் மிகுந்த துக்கமடைந்ததை இயேசுகண்டு: ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது.

லூக்கா 18:25 ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றான்.

லூக்கா 18:26 அதைக் கேட்டவர்கள்: அப்படியானால் யார் இரட்சிக்கப்படக் கூடும் என்றார்கள்.

லூக்கா 18:27 அதற்கு அவர்: மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் என்றார்.

"ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" - ஐசுவரியவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கலாம். ஆனாலும் அது அவர்களுக்குக் கடினமான செயல்.

ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்குக் கடினமாக இருப்பதற்குக் காரணங்கள்

1. தங்களைச் செல்வந்தர்களாக்குவதற்கு ஏழைகளை ஒடுக்குகிறார்கள். (நெகே 5:1-13; யாக் 2:6-7; யாக் 5:1-7; நீதி 18:23; எரே 22:13-19)
2. தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதில்லை. (யோபு 21:7-15; சங் 52:1-6)
3. தங்கள் ஐசுவரியத்தை நம்புகிறார்கள். (யோபு 31:24-28; சங் 52:1-6; நீதி 18:11; 1தீமோ 6:17)
4. தங்கள் வெற்றியில் பெருமைப் படுகிறார்கள். (சங் 52:1-6; சங் 73:3-9; நீதி 28:11; எசே 28:5; 1தீமோ 6:4-19)
5. தங்கள் பாவத்தில் சந்தோஷப் படுகிறார்கள். (எரே 7-9,27-31; ஆமோ 6:1-6)
6. தங்களைக் குறித்துப் பெருமை அடைகிறார்கள். (எரே 9:23; உபா 8:17-18; 1தீமோ 6:4-19)
7. தங்களுடைய செல்வங்களை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதில்லை. (மாற்கு 10:17-27; லூக்கா 18:22-26; 1தீமோ 6:17-19; 1யோவான் 3:17)
8. இன்னும் அதிக செல்வம் சேர்க்க வேண்டுமென்று பேராசைப் படுகிறார்கள். (லூக்கா 12:15-21; லூக்கா 16:13-31)
9. கடின இருதயமுடையவர்களாக இருக்கிறார்கள். (1தீமோ 6:17-18; யாக் 1:10; உபா 8:17)
10. தேவனுக்குக்கீழ்ப்படிய மறுக்கிறார்கள். (மாற்கு 10:21; லூக்கா 12:15; 1தீமோ 6:17-18; மத் 6:19-21; நீதி 23:4)

மனுஷருக்கு ஐசுவரியத்தைத் தருகிறவர் தேவனே. ஆகையினால் ஐசுவரியவான்கள் தேவனை அங்கீகரிக்க வேண்டும். ஒருவனிடத்திலுள்ள ஐசுவரியத்தைக் கர்த்தரால் எடுத்துப் போடவும் முடியும். (1சாமு 2:7; உபா 8:17-18; 1தீமோ 6:17-18; ஆதி 24:1; 1இராஜா 3:12-14; யோபு 42:10). ஐசுவரியவான்களுக்குக் கர்த்தர் பல எச்சரிப்புக்களைக் கூறியிருக்கிறார். (உபா 6:10-12; உபா 8:10-18; உபா 31:20; நீதி 23:4; நீதி 27:23-24; நீதி 28:8,20-22; நீதி 30:8-9; பிர 5:9-19; பிர 6:1-2; ஏசா 5:8; மத் 6:19-21; மத் 13:22; மாற்கு 4:19; லூக்கா 12:15; 1தீமோ 6:4-19).

"ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" - (மத் 19:24)

18 அதிகாரம்

"அப்படியானால் யார் இரட்சிக்கப் படக்கூடும்" - தேவனிடத்தில் பட்சபாதமில்லை. அவர் ஐசுவரியவானையும், ஏழையையும் ஒன்று போலவே பார்க்கிறார். இரட்சிப்பிற்கும், ஐசுவரியத்திற்கும் சம்பந்தமில்லை. இரட்சிக்கப் படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது வேதாகமத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு யாரெல்லாம் கீழ்ப்படிந்து நடக்கிறார்களோ அவர்கள் ஐசுவரியவான்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

132. முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்களுக்கு வெகுமதிகள் - (மத் 19:29; மாற்கு 10:28)

லூக்கா 18:28 அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினாமே என்றான்.

லூக்கா 18:29 அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் வீட்டையாவது, பெற்றாரையாவது, சகோதரரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டுவிட்ட எவனும்,

லூக்கா 18:30 இம்மையிலே அதிகமானவைகளையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடையாமற் போவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினாமே" - (மத் 19:27-30)

தீர்க்கதரிசன எண் - 36

"தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் வீட்டையாவது, பெற்றாரையாவது, சகோதரரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டுவிட்ட எவனும், இம்மையிலே அதிகமானவைகளையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடையாமற் போவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ...."(லூக்கா 18:29-33) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 18:29-30 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. லூக்கா 18:31-33 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன.

133. தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இயேசு மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

லூக்கா 18:31 பின்பு அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப் பட்டவைகளெல்லாம் நிறைவேறும்.

லூக்கா 18:32 எப்படியெனில், அவர் புறஜாதி யாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார்.

லூக்கா 18:33 அவரை வாரினால் அடித்து, கொலைசெய்வார்கள்; மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.

லூக்கா 18:34 இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை; அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது, அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

"எருசலேமுக்குப் போகிறோம்" - லூக்கா 13:32-33 ஆகிய வசனங்களில் காணப்படும் மூன்று நாள் ஊழியத்தின் முடிவுப் பகுதிக்கு இயேசு கிறிஸ்து வருகிறார்.

"மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும்" - இயேசு கிறிஸ்துவைக் குறித்து, தீர்க்கதரிசிகள் பல காரியங்களை எழுதியிருக்கிறார்கள். அவைகளெல்லாம் நிறைவேறும்.

18 அதிகாரம்

மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்க தரிசிகளால் எழுதப்பட்டு நிறைவேறியவை

1. புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப் பட்டார் (லூக்கா 18:32; மத் 27:2; அப் 4:27; சங் 2:1-3)
2. பரியாசம் பண்ணப்பட்டார். (லூக்கா18:32; மத் 27:27-32,41; சங் 22:13,16,18; சங் 69:21-26; சங் 109:25)
3. நிந்தை அடைந்தார். (லூக்கா 18:32; மத் 27:27-32; சங் 22:13,16,18; ஏசா 52-53)
4. துப்பப்பட்டார். (லூக்கா 18:32; மத் 26:67; மத் 27:30; மாற்கு 14:65; மாற்கு 15:19; ஏசா 50:6)
5. வாரினால் அடித்தார்கள். (லூக்கா 18:33; மத் 27:26; மாற்கு 15:15; யோவான் 19:1; ஏசா 52:14; ஏசா 53:1-12)
6. சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள். (லூக்கா 18:33; மத் 26:2; மத் 27:22-24; அப் 2:23; அப் 3:15; சங் 22:1,16; சக 13:6)
7. மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருந்தார். (லூக்கா 18:33; மத் 12:40; மத் 28; லூக்கா 24; யோவான் 20-21; சங் 16:10)

"அவர் சொன்னவைகள்" - மேசியா வருவார் அவர் தங்களை விடுதலை செய்வார். தங்களுக்கொரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று யூதர்கள் நம்பினார்கள். இயேசு கிறிஸ்துவே அந்த மேசியா என்பதை பலர் அறிந்து கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்புகூட ஏராளமான யூதர்கள் இயேசு கிறிஸ்துவே மேசியா என்பதை அறிந்து கொள்ளாமல் இருந்தார்கள். (அப் 1:6-7).

134. இயேசு குருடனைக் குணப் படுத்துகிறார் - (மத் 9:27; 20:29; மாற்கு 10:46)

லூக்கா 18:35 பின்பு அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான்.

லூக்கா 18:36 ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான்.

லூக்கா 18:37 நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான்.

லூக்கா 18:38 முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான்.

லூக்கா 18:39 இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார்.

லூக்கா 18:40 அவன் கிட்டவந்தபொழுது, அவர் அவனை நோக்கி:

லூக்கா 18:41 நான் உனக்கு என்னசெய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்.

லூக்கா 18:42 இயேசு அவனை நோக்கி: நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

லூக்கா 18:43 உடனே அவன் பார்வையடைந்து, தேவனை மகிமைப்படுத்திக்கொண்டே, அவருக்குப் பின்சென்றான். ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்.

"ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான்" - (மாற்கு 10:49)

லூக்கா - தொகுப்புரை

18 அதிகாரம்

"தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்" - இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரன் என்பதும், அவரே மேசியா என்பதும் ஜனங்களுக்கு மிகவும் பிரபல்யமாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்தக் குருடனுக்கு இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரன் என்று தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. (மத் 1:6)

"முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும் படி அவனை அதட்டினார்கள்" - ஜனங்கள் இயேசுவோடு கூட இருந்தாலும், அவர்களுடைய இருதயத்தில் இயேசுவின் சிந்தையில்லை. இயேசுகிறிஸ்து மனதுருக்கம் உடையவர். ஆனால் இவர்களோ மனுஷப்பிரகாரமாகச் சிந்தித்து அந்தக் குருடனை அதட்டுகிறார்கள். இயேசுவின் சித்தத்தை அவரோடு இருக்கும் ஜனங்கள் புரிந்து கொள்ளவில்லை.

"நீ பார்வையடைவாயாக" - குணமடைவதற்கு இது மிகவும் எளிதான வைத்தியம். இயேசு கிறிஸ்து பரமவைத்தியர். அவருடைய வாயின் வார்த்தையிலிருந்து சுகமாதல் வருகிறது. அவர் ஒரு வார்த்தை சொன்னால் போதும். குருடன் பார்வையடைகிறான். தேவனுடைய வல்லமையினால் மட்டுமே இப்பேர்ப்பட்ட அற்புதங்கள் நடைபெறும்.

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" - நோய்கள் குணமடைவதற்கு நோயாளியின் விசுவாசமும் தேவைப்படுகிறது. இயேசு கிறிஸ்து நம்மைக் குணப்படுத்துவார் என்னும் விசுவாசம் நமக்குள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட விசுவாசம் காணப்படவில்லையென்றால் தேவனுடைய ஊழியக்காரர்கள் பரிசுத்த ஆவியானவரின் வரத்தை வெளிப்படுத்த வேண்டும். தேவன் தமது வசனங்களை அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிபண்ணுவார். (யோவான் 14:12).

"உடனே அவன் பார்வையடைந்தான்" - தெய்வீக சுகமாதல் நடைபெறுகிறது. அவன் உடனே தேவனை மகிமைப்படுத்துகிறான்.

"தேவனைப் புகழ்ந்தார்கள்" - அற்புதங்கள் நடைபெறும்போது தேவநாமம் மகிமைப்படும். தோல்வி, வியாதி ஆகியவை வரும்போது யாரும் தேவனை மகிமைப்படுத்தமாட்டார்கள். வியாதியின் மூலமாகத் தேவன் ஒரு ஆத்துமாவைச் சந்திப்பார் என்று சிலர் கூறுகிறார்கள். அதே சமயத்தில் வியாதியிலிருக்கும் ஒரு நபரைக் குணப்படுத்தியும், தேவனால் அந்த ஆத்துமாவைச் சந்திக்க முடியும். வியாதி குணமாகும்போது நாம் தேவனையே புகழவேண்டும். மனுஷரையும், ஊழியக்காரரையும் புகழ்ந்துவிடாதவாறு மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும்.

19 அதிகாரம்

135. சகேயுவின் மனமாற்றம்

(1) இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்க விரும்பினான்

லூக்கா 19:1 அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்து போகையில்,

லூக்கா 19:2 ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன்,

லூக்கா19:3 இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகை தேடினான்.அவன் குள்ளனானபடியால், ஜனக் கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல்,

லூக்கா 19:4 அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்திமரத்தில் ஏறினான்.

"எரிகோ" - (லூக்கா 10:31)

"சகேயு" - இந்த வசனத்தில் மட்டுமே இவனைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

"ஆயக்காரருக்குத் தலைவன்" - எரிகோ பட்டணத்தில் வரிவசூல் பண்ணுகிறவர்கள் அநேகர் இருந்தார்கள். அவர்கள் எல்லோருக்குமே சகேயு தலைவன். உயர்ந்த உத்தியோகம் பார்த்து வருகிறான்.

"இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனான படியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணமுடியவில்லை" - இவனைப் பற்றி வேதாகமத்தில் அதிகமாக எதுவும் கூறப்படவில்லை. அவன் ஒரு குள்ளன். இயேசு கிறிஸ்து எப்படிப்பட்டவரோ என்று இவன் பார்க்க விரும்பினான். வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவின் சுபாவம் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் அவர் கருப்பா, சிவப்பா, நெட்டையா, குட்டையா என்பதுபோன்ற விவரம் வேதவசனங்களில் இல்லை. ஓவியர்கள் இயேசு கிறிஸ்து இப்படித்தான் இருப்பார் என்று கற்பனை செய்து அவருடைய உருவத்தை ஓவியமாக வரைகிறார்கள். அது உண்மையா பொய்யா என்று யாருக்கும் தெரியாது. ஒரு நாளில் நாம் அவரை முகமுகமாகத் தரிசிப்போம் என்று வேதவாக்கியம் கூறுகிறது. இயேசு எப்படிப்பட்டவரோ என்னும் கேள்விக்கு அன்றுதான் விடைதெரியும்.

"காட்டத்திமரம்" - (1இராஜா 10:27)

(2) தயக்கமில்லாத கீழ்ப்படிதல்

லூக்கா 19:5 இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்.

லூக்கா 19:6 அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டுபோனான்.

"இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும்" - ஒரு ஊரின் வழியாக ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர் பிரயாணம் பண்ணும் போது, அவர் இப்படிப்பட்ட கட்டளையைக் கொடுப்பார். இயேசு கிறிஸ்து ராஜாதிராஜா. ஆகையினால் தமக்குரிய உரிமையோடு சகேயுவிடம் அவனுடைய வீட்டில் தாம் தங்க வேண்டும் என்று கூறுகிறார்.

"சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான்" - விருந்தினர்களை நாம் நம்முடைய முகத்திலும், இருதயத்திலும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவை எப்போதுமே நாம் சந்தோஷமாகவே நமது இருதயங்களில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(3) மார்க்க உபத்திரவங்கள்

லூக்கா 19:7 அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படிபோனார் என்று முறுமுறுத்தார்கள்.

(4) பாவம் உணர்த்தப்பட்டு தன்னை அர்ப்பணிக்கிறான்

லூக்கா 19:8 சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கின துண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்.

19 அதிகாரம்

"என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்" - இயேசு கிறிஸ்து சகேயுவினுடைய வீட்டிற்கு வந்தவுடன், அவன் பாவஅறிக்கை செய்ய ஆரம்பித்து விடுகிறான். தன்னுடைய ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுப்பதாக வாக்குப் பண்ணுகிறான். பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் பிரகாரம் ஒருவன் ஒரு ஆட்டைத் திருடினால் அவன் நான்கு ஆடுகளைத் திருப்பிச் செலுத்த வேண்டும். (யாத் 22:1) சகேயு அதுபோலவே நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்று அறிவிக்கிறான். அவனுடைய இருதயத்தில் ஒரு உண்மையான மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

(5) சகேயுவின் மனமாற்றமும் புதிய பிறப்பும்

லூக்கா 19:9 இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே.

லூக்கா 19:10 இழந்துபோனதைத் தேடவும்இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

"இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" - லூக்கா 23:43 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பதுபோல இதுவும் ஒரு சத்திய அறிக்கையாகும்.

"இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே" - இயேசு கிறிஸ்து காணாமல்போனவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, இரட்சிப்பதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார். யூதர்கள் தங்களை ஆபிரகாமின் குமாரர் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்பட்டார்கள். மார்க்கத்தலைவர்களும், தங்களை ஆபிரகாமின் குமாரர் என்றே கூறிக்கொண்டார்கள். ஆனால் அவர்களில் யாரும் சகேயு இரட்சிக்கப்படுவதற்கு உதவி புரியவில்லை.

இயேசு கிறிஸ்து சகேயுவின் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டவுடன் அவனும் ஆபிரகாமின் குமாரன் என்று அறிவிக்கிறார். இயேசு கிறிஸ்து பாவிகள் இருக்கும் இடத்திற்குச் சென்று, அவர்களை இரட்சிக்கிறார். (லூக்கா 19:10)

"இழந்துபோனதைத்தேடவும்இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" - (லூக்கா 5:32)

136. பத்து ராத்தல் திரவியம் பற்றிய உவமை - பரலோக இராஜ்ஜியம் தாமதமாகிறது - (மத் 25:14; அப் 1:7)

லூக்கா 19:11 அவர்கள் இவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவர் எருசலேமுக்குச் சமீபித்திருந்தபடியினாலும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள் நினைத்தபடியினாலும், அவர் ஒரு உவமையைச் சொன்னார்:

லூக்கா 19:12 பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான்.

லூக்கா 19:13 புறப்படும்போது, அவன் தன் ஊழியக்காரரில் பத்துப்பேரை அழைத்து, அவர்களிடத்தில் பத்துராத்தல் திரவியங் கொடுத்து: நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம் பண்ணுங்கள் என்று சொன்னான்.

லூக்கா 19:14 அவனுடைய ஊரார் அவனைப் பகைத்து, இவன் எங்கள்மேல் ராஜாவாயிருக்கிறது எங்களுக்கு மனதில்லையென்று சொல்லும்படி அவன் பின்னே ஸ்தானாபதிகளை அனுப்பினார்கள்.

லூக்கா 19:15 அவன் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தபோது, தன்னிடத்தில் திரவியம் வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில் அவனவன் வியாபாரம்பண்ணிச் சம்பாதித்தது இவ்வளவென்று அறியும்படி, அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரச் சொன்னான்.

19 அதிகாரம்

லூக்கா 19:16 அப்பொழுது முந்தினவன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான்.

லூக்கா 19:17 எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்த படியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்.

லூக்கா 19:18 அப்படியே இரண்டாம் ஊழியக்காரன் வந்து: ஆண்டவனே, உம்முடையராத்தலினால் ஐந்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான்.

லூக்கா 19:19 அவனையும் அவன் நோக்கி:நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்.

லூக்கா 19:20 பின்பு வேறொருவன் வந்து: ஆண்டவனே, இதோ, உம்முடைய ராத்தல், இதை ஒரு சீலையிலே வைத்திருந்தேன்.

லூக்கா 19:21 நீர் வைக்காததை எடுக்கிறவரும், விதைக்காததை அறுக்கிறவருமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்து, உமக்குப் பயந்திருந்தேன் என்றான்.

லூக்கா 19:22 அதற்கு அவன்: பொல்லாத ஊழியக்காரனே, உன் வாய்ச்சொல்லைக்கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன்.நான்வைக்காததை எடுக்கிறவனும், விதைக்காததை அறுக்கிறவனுமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்தாயே,

லூக்கா 19:23 பின்னை ஏன் நீ என் திரவியத்தைக் காசுக்கடையிலே வைக்கவில்லை; வைத்திருந்தால் நான் வரும்போது, அதை வட்டியோடே வரபற்றிக் கொள்வேனே என்று சொல்லி:

லூக்கா19:24சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி: அந்த ராத்தலை அவன் கையிலிருந்தெடுத்து, பத்துராத்தல் உள்ளவனுக்குக்கொடுங்கள் என்றான்.

லூக்கா 19:25 அதற்கு அவர்கள்: ஆண்டவனே, அவனுக்குப் பத்துராத்தல் இருக்கிறதே என்றார்கள்.

லூக்கா 19:26 அதற்கு அவன்: உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 19:27 அன்றியும் தங்கள்மேல் நான் ராஜாவாகிறதற்கு மனதில்லா திருந்தவர்களாகிய என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டுவந்து, எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்கள்என்று சொன்னான் என்றார்.

உவமை எண் - 41

"பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான்.........." (லூக்கா 19:12-27) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரும்வரையிலும், தேவனுடைய ராஜ்யம் தாமதமாகிறது என்பதை இந்த உவமை விளக்குகிறது. இந்த உவமையும், மத் 25:14-30 ஆகிய வசனங்களில் காணப்படும் உவமையும் ஒருசில வித்தியாசங்களைத் தவிர மற்றவை ஒன்றுபோல் உள்ளது.

இந்த உவமை ஏரோதுவைக் குறிப்பதாகத் திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கூறுகிறார்கள். ஏரோது யூதேயா ராஜ்யத்தைப் பெற்றுக் கொள்வதற்காக எரிகோவிலிருந்து ரோமாபுரிக்கு பிரயாணம் செய்தான். இயேசு கிறிஸ்து இந்தச் சம்பவத்தை உவமையாக கூறுகிறாரா, அல்லது வேறுஏதாவது சம்பவத்தைக் கூறுகிறாரா என்று தெரியவில்லை.

தீர்க்கதரிசன எண் - 37

"பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான்.........." (லூக்கா 19:12-27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது முழுமையாக நிறைவேறும்.

19 அதிகாரம்

ராத்தல் (pounds) - μνᾶ - mna - 3414

பெண்பால் பெயர்ச்சொல் - ராத்தல்

"அவனுடைய ஊரார் அவனைப் பகைத்து, இவன் எங்கள்மேல் ராஜாவாயிருக்கிறது எங்களுக்கு மனதில்லையென்று சொல்லும்படி அவன் பின்னே ஸ்தானாபதிகளை அனுப்பினார்கள்" - தேவனுடைய ராஜ்யம் காலதாமதமாக வருவதற்கு மற்றொரு காரணம் ஜனங்களுடைய கிரியைகளும், ஊழியக் காரருடைய செயல்களும் ஆகும். இந்த உவமையில் ஊழியக்காரர் என்பது ராஜாவினுடைய விசேஷித்த வேலையாட்களைக் குறிக்கும். ஊரார் என்பது ராஜாவின் ஆளுகைக்கு உட்பட்ட ஜனங்களைக் குறிக்கும்.

இந்த உவமையைத் தேவனுடைய ராஜ்யத்திற்கும் ஒப்பிட்டுக் கூறலாம். ஊழியக்காரர்கள் என்பது தேவனுடைய ஊழியக்காரர்களையும், விசுவாசிகளையும் குறிக்கும். இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். ஊரார் என்பது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத யூதரையும், சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாத அவிசுவாசிகளையும் குறிக்கும். (யோவான் 1:11; யோவான் 15:18-25; மத் 27:21-25).

"ஸ்தானாபதிகள்" - செய்தி (message). அகஸ்து ராயன் ஆட்சிபுரிந்தபோது, யூதர்கள் ஏரோதுவிற்கு எதிராக ராயனுக்குச் செய்தி அனுப்பினார்கள். இந்த உவமையில் கூறப்பட்டிருக்கும் செய்தி அதுபோன்ற ஒரு காரியமாக இருக்கலாம்.

"உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது" - இந்த ஊழியக்காரனுக்கு அதிக திறமை இருந்ததினால் இவனைப் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாக ராஜா நியமித்தான்.

"உம்முடைய ராத்தலினால் ஐந்துராத்தல் ஆதாயம் கிடைத்தது" - இந்த ஊழியக்காரனுக்கு அதிக திறமை இருந்ததினால் இவனைப் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாக ராஜா நியமித்தான்.

"சீலை" - கைக்குட்டை அல்லது வியர்வையைத் துடைக்கும் துணி. இந்த வசனத்திலும் யோவான் 11:44; யோவான் 20:7; அப் 19:12 ஆகிய வசனங்களிலும் இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவன் பின்விளைவுகளை நினைத்துப் பயந்தான். லாபம் கிடைக்கும் என்னும் நம்பிக்கை இல்லை. நஷ்டமாகிவிடுமோ என்று பயந்தான். இப்படிப்பட்டவனிடத்தில் எந்தப் பொறுப்பையும் நம்பி ஒப்படைக்க முடியாது.

கடினமுள்ள (austere) - αὐστηρός - austeeros - 840

பெயரடை - கடினமுள்ள (dry, hard, harsh) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் லூக்கா 19:22 ஆவது வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"நீர் வைக்காததை எடுக்கிறவரும், விதைக்காததை அறுக்கிறவருமான கடினமுள்ள மனுஷன்" - அக்காலத்தில் காணப்பட்ட அநீதியை இந்த உவமை விளக்குகிறது. ராஜாக்கள் கடினமானவர்களாக இருந்தார்கள். தங்கள் விருப்பத்தை நிறைவேற்றினார்கள். ஜனங்களை ஒடுக்கிக் கொள்ளையடித்தார்கள்.

"பின்னை ஏன் நீ என் திரவியத்தைக் காசுக்கடையிலே வைக்கவில்லை; வைத்திருந்தால் நான் வரும்போது, அதை வட்டியோடே வரபற்றிக்கொள்வேனே" - ஊழியக்காரனுக்கு ராஜாவைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்தது. அவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த திரவியத்தை வட்டிக்குக் கடன் கொடுத்திருக்கலாம். இவனால் வட்டி வாங்கமுடியவில்லை யென்றாலும் ராஜா வந்து வாங்கிக் கொள்வான்.

"நான் வரும்போது" - இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கிறது. அவர் வரும்போது தமது ஊழியக்காரர்களை நியாயந்தீர்ப்பார். (மத் 16:27).

லூக்கா - தொகுப்புரை

19 அதிகாரம்

"பத்துராத்தல்" - (லுக்கா 19:13)

"உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்" - கிழக்கு தேசங்களில் ஐசுவரியவான்களுக்கு மட்டுமே வெகுமதி கொடுப்பார்கள். ஏழைக்கு ஒன்றும் கிடைக்காது. அவனிடத்திலுள்ள கொஞ்சத்தையும் எடுத்துக் கொள்வார்கள். லூக்கா 19:12-இல் கூறப்பட்டிருக்கும் பிரபு இந்த வசனத்தைக் கூறுகிறான். இயேசு கிறிஸ்துவின் உபதேசமும் இதுதான். (மத் 13:12; மாற்கு 4:25; லூக்கா 8:18) பாத்திரவான்களுக்கு மட்டுமே வெகுமதி கொடுக்கப்படும். (மத் 16:27; மத் 25:29; 2கொரி 5:9-10).

"தங்கள்மேல் நான் ராஜாவாகிறதற்கு மனதில்லாதிருந்தவர்களாகிய என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டு வந்து, எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்கள் என்று சொன்னான்" - இந்த வசனத்தையும் பிரபுவே கூறுகிறான். (லூக்கா 19:12) இயேசு கிறிஸ்துவும் மறுபடியும் வரும்போது தமது ராஜ்யத்தை ஸ்தாபித்து, தமது விரோதிகளைத் தண்டிப்பார். (மத் 25:31-46; 2தெச 1:7-10; யூதா 1:14; வெளி 19:11-21; சக 14).

137. வெற்றிப்பவனி - (சக 9:9; மத் 21:1; மாற்கு 11:1; யோவான் 12:12)

லூக்கா 19:28 இவைகளை அவர் சொன்ன பின்பு எருசலேமுக்குப் புறப்பட்டு, முந்தி நடந்துபோனார்.

லூக்கா 19:29 அவர் ஒலிவ மலையென்னப்பட்ட மலையின் அருகான பெத்பகே பெத்தானியா என்னும் ஊர்களுக்குச் சமீபித்தபோது, தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி:

லூக்கா 19:30 உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள், அதிலே பிரவேசிக்கும்போது மனுஷரிலொருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள்.

லூக்கா 19:31 அதை ஏன் அவிழ்க்கிறீர்க ளென்று யாராவது உங்களிடத்தில் கேட்டால், அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள் என்றார்.

லூக்கா 19:32 அனுப்பப்பட்டவர்கள் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டார்கள்.

லூக்கா 19:33 கழுதைக்குட்டியை அவர்கள் அவிழ்க்கும்போது, அதற்கு உடையவர்கள்: குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள் என்றுகேட்டார்கள்.

லூக்கா 19:34 அதற்கு அவர்கள்: அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லி,

லூக்கா 19:35 அதை இயேசுவினிடத்தில் கொண்டு வந்து, தங்கள் வஸ்திரங்களை அதின்மேல்போட்டு, இயேசுவை அதின்மேல் ஏற்றினார்கள்.

லூக்கா 19:36 அவர் போகையில், அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்.

லூக்கா 19:37 அவர் ஒலிவமலியின் அடிவாரத்துக்குச் சமீபமாய் வருகையில் திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங் குறித்துச் சந்தோஷப்பட்டு,

லூக்கா 19:38 கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்.

லூக்கா 19:39 அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும் என்றார்கள்.

லூக்கா 19:40 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்.

19 அதிகாரம்

"எருசலேமுக்குப் புறப்பட்டு, முந்தி நடந்துபோனார்" - எரிகோவிலிருந்து எருசலேம் 3,500 அடி உயரத்தில் உள்ளது. பாதை கடினமாகவும் செங்குத்தான உயரமாகவும் இருக்கும்.

"அவர் ஒலிவமலையென்னப்பட்ட மலையின் அருகான பெத்பகே பெத்தானியா என்னும் ஊர்களுக்குச் சமீபித்தார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வெற்றி பவனி. இந்தப் பவனியை ஜனங்கள் எதிர்பார்த்தார்கள். இயேசுவை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள். (யோவான் 12:12-13) இயேசு கிறிஸ்துவின் முதலாவது பவனியின்போது ஜனங்கள் அவரை எதிர்பார்க்கவில்லை. (மத் 21:1-17)

தீர்க்கதரிசன எண் - 38

"உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்..............." (லூக்கா 19:30-31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"கழுதைக்குட்டி" - முதலாவது பவனியின்போது அங்கு இரண்டு மிருகங்கள் இருந்தன. (மத் 21:1-6)

ஏற்றினார்கள் **(set ... thereon)** - **ἐπιβιβάζω** - **epibibazoo** - 1913

வினைச்சொல் - ஏற்று **(to cause to mount, to place upon)** (லூக்கா 19:35; லூக்கா 10:34; அப் 23:24)

"தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்" - ரோமாபுரியாரின் ஆட்சிப் பிடியிலிருந்து தங்களை விடுவிக்கிறவர் வந்துவிட்டார் என்று ஜனங்கள் நினைத்தார்கள். தேவனுடைய ராஜ்யம் உடனே தோன்றும் என்று எதிர்பார்த்தார்கள். (லூக்கா 19:11)

ஜனங்களுக்குத் தெரியாத காரியங்கள்

1. தேவனுடைய ராஜ்யம் வருவதற்கு இது ஏற்ற காலமல்ல. (லூக்கா 19:11-27)

2. மேசியா முதலாவது பாடுகள்பட்டு, பின்பு ஜனங்களை மீட்பதற்காக மரிக்க வேண்டும். (லூக்கா 17:20-25)

3. இயேசு கிறிஸ்துவின் யுத்தம் ஆவிக்குரிய யுத்தம் (எபி 2:14-15; கொலோ 2:14-17)

4. அவர்கள் மத்தியில் இயேசு கிறிஸ்து யுத்தத்தைச் சந்திக்கப் போகிறார். (யோவான் 12:31; கொலோ 2:14-17; எபி 2:14-15)

5. சிலுவையில் தாம் மரிக்கப்போகும் தமது மரணத்தின் மூலமாக சாத்தானுடைய அந்தகாரச் சக்திகள் எல்லாம் தோற்று அழிந்து போகும். (கொலோ 2:14-17; 1பேதுரு 2:24)

6. மனுஷருடைய மீட்பின் அச்சாரம் அந்த வேளையில் நிறைவேற்றப்படும். (எபி 2:9-15; எபி 10:10-13; கலா 3:13; 1கொரி 15:24-28; யோவான் 19:30)

7. தேவனுடைய ராஜ்யம் வருவதற்கு முன்பாக சபை கட்டப்பட வேண்டும். சபையின் ஊழியம் நடைபெற வேண்டும். (அப் 15:13-18; எபே 3:1-6; எபே 5:25-31; 2தெச 2:7)

8. யூதர்கள் சிதறிப்போதல், மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுதல், அந்திக் கிறிஸ்துவின் ஆட்சி, மகாஉபத்திரவக் காலம் ஆகிய தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறும். (எசே 37; சக 14; வெளி 19-20)

"அவர் ஒலிவமலையின் அடிவாரத்துக்குச் சமீபமாய் வருகையில் திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங்குறித்துச் சந்தோஷப் பட்டார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்கு ஆயிரக்கணக்கான சீஷர்கள் இருந்திருக்க வேண்டும். இயேசுவைப் போற்றிப் புகழுகிறார்கள். ஆனால் இதே ஜனங்களே சில மணி நேரங்களுக்குப் பின்பு "இயேசுவைச் சிலுவையில் அறையும்" என்று கோபத்தோடு கத்தினார்கள்.

19 அதிகாரம்

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக" (லூக்கா 19:38; சங் 118:26; சக 9:9)

கர்த்தர் (Lord) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர் - இந்த வசனத்தில் கர்த்தர் என்னும் வாக்கியம் பிதாவாகிய தேவனைக் குறிக்கும். (லூக்கா 9:38)

"பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக" - பரலோகத்திலும், பூமியிலும் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக இன்னும் ஒருசில மணிநேரங்களுக்குள் இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவித்து, சிலுவையில் மரிக்கப் போகிறார். (கொலோ 2:14-17; எபி 2:14-15) தேவனுக்கும், மனுஷருக்கும் இயேசு கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கிறார். தமது ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நிறைவேற்றுகிறார். (எபே1:10; 1கொரி 15:24-28)

"இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்" - இந்தச் சூழ்நிலையில் சீஷர்களுடைய உணர்வுகளை அடக்குவது கடினம். அவர்களால் அமைதியாக இருக்க முடியாது. அவர்கள் அமைதியாக இருந்தால் அங்கிருக்கும் கல்லுகளே கூப்பிடும்.

138. இயேசு எருசலேமிற்காக அழுகிறார்

லூக்கா 19:41 அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுது,

லூக்கா 19:42 உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.

லூக்கா 19:43 உன்னைச் சந்திக்குங் காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில் போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி,

லூக்கா 19:44 உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப் போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லி ராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்.

அழு (wept) - κλαίω - klaioo - 2799

வினைச்சொல் - அழு (to wail) - யோவான் 11:35-இல் பயன்படுத்தப் பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "டக்ரூவோ"(dakruo) லூக்கா 19:41 -இல் பயன்படுத்தப் பட்டிருக்கும் "க்லையோ" (klaioo). இது வெளிப்படையாக எல்லோருக்கும் தெரியும் விதமாக அழுது புலம்புதல் என்று பொருள்படும். (to hard crying, lamentation, bewailing) (மத் 2:18; மத் 26:75; மாற்கு 5:38-39; மாற்கு 14:72; மாற்கு 16:10;லூக்கா 6:21,25; லூக்கா 7:13,32,38; லூக்கா 8:52; லூக்கா 19:41;லூக்கா 22:62; லூக்கா 23:28; யோவான் 11:31,33; யோவான்16:20; யோவான் 20:11-15; அப் 9:39; அப் 21:13; ரோமர் 12:15; 1கொரி 7:30; பிலி 3:18; யாக் 4:9; யாக் 5:1; வெளி 5:4,5; வெளி 18:9-19) திரளான ஜனங்களுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து அழுது புலம்புகிறார்.

கண்ணீர்விடு (wept) - δακρύω - dakryoo - 1145

வினைச்சொல் - கண்ணீர்விடு (யோவான் 11:35)

19 அதிகாரம்

இயேசு கிறிஸ்து அழுத இடம் பெத்தானியாவிலிருந்து எருசலேமிற்குச் செல்லும் பாதையாகும். ஒலிவ மலைக்கு வந்தபோது, எருசலேமின் காட்சி நன்றாகத் தெரியும். கீதரோன் பள்ளத்தாக்கிலிருந்து பார்க்கும்போது மோரியா மலையும், அதன் தேவாலயமும் நன்றாகத் தெரியும். சீயோன் மலை மோரியா மலையைவிட உயர்ந்தது. அங்கு ஏரோதின் அரண்மனை இருந்தது. இந்த இடத்திலிருந்து தான் இயேசு கிறிஸ்து எருசலேம் நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டு அழுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 39

"உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது............."(லூக்கா19:42-44) இந்தத் தீர்க்கதரிசனம் கிபி. 70இல் நிறைவேறிற்று.

"அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது" - வெளிச்சத்தைவிட அவர்கள் இருளை விரும்புகிறார்கள். ஆகையினால் சத்தியமும், தீர்க்க தரிசனங்களும் அவர்களுக்கு மறைவா யிருக்கிறது. (யோவான் 3:16-20).

"உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்குவார்கள்" - கிபி. 70ஆம் ஆண்டில் ரோமர்கள் எருசலேம் நகரத்தாருக்கு இந்தக் காரியங்களைச் செய்தார்கள். (லூக்கா 21:20-24)

"மதில்" (trench, a rampart) - தீத்து என்பவன் ரோமப்பேரரசின் படைத்தளபதி. இவன் எருசலேமைத் தாக்குவது மிகவும் கடினம் என்று நினைத்தான். ஏனெனில் அது இயற்கையான மலையின் உயரத்தில் அமைந்திருந்தது. தீத்து எருசலேமைச் சுற்றிலும் மதில்போட்டான். அந்தப் பட்டணத்திற்குள் எந்தப் பொருட்களும் செல்லாதவாறு தடை பண்ணினான். இதனால் செழிப்போடு இருந்த எருசலேம் பட்டணம், பஞ்சத்திற்குத் தள்ளப்பட்டது.

"உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராது" - எருசலேம் பட்டணம் தரைமட்டமாக ஆக்கப்பட்டது. (மத் 24:2; மாற்கு 13:2; லூக்கா 21:6; சங் 137:9; ஓசி 10:14).

"உன்னைச் சந்திக்குங்காலம்" - தானி 9:24-27 ஆகிய வசனங்களில் 69 ஆவது வாரத்தின் முடிவு என்பது எருசலேமையும், தேவாலயத்தையும் திரும்பக் கட்டுவதற்குப் பாபிலோனிய சிறையிருப்பு முடிந்து 483 வருஷங்களைக் குறிக்கும். இந்தக் காலத்தில் இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுகிறார். (தானி 9:25)

139. தேவாலயத்தின் இரண்டாவது சுத்திகரிப்பு - (மத் 21:12; மாற்கு 11:15. முதலாவது சுத்திகரிப்பு (யோவான் 2:13))

லூக்கா 19:45 பின்பு அவர் தேவாலயத்தில் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர் களையும் புறம்பே துரத்தத்தொடங்கி:

லூக்கா 19:46 என்னுடைய வீடு ஜெப வீடாயிருக்கிறதென்றுஎழுதியிருக்கிறது நீங்களோ அதைக் கள்ளர்குகை யாக்கினீர்கள் என்றார்.

லூக்கா 19:47 அவர் நாடோறும் தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும் அவரைக் கொலைசெய்ய வகைதேடியும்.

லூக்கா 19:48 ஜனங்களெல்லாரும் அவருக்குச் செவிகொடுத்து அவரை அண்டிக்கொண்டிருந்த படியால், அதை இன்னபடி செய்யலாமென்று வகை காணாதிருந்தார்கள்.

"அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத்தொடங்கினார்" - இயேசு கிறிஸ்து மூன்றாம் முறையாக தேவாலயத்தைச் சுத்தப்படுத்துகிறார். தமது ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் இயேசு தேவாலயத்தை முதன்முறையாக சுத்திகரித்தார். (யோவான் 2:15) இயேசு கிறிஸ்துவின் வெற்றிப் பவனியின்போது, இந்தச் சுத்திகரிப்பிற்கு ஒருசில நாட்களுக்கு முன்பாக இரண்டாம் சுத்திகரிப்பு நடைபெற்றது. (மத் 21:12; மாற்கு 11:15)

19 அதிகாரம்

எரிகோவிலுள்ள சகேயுவின் வீட்டில் இரவு தங்கிவிட்டு, பின்பு எருசலேமிற்குப் போகிறார். (லூக்கா 19:1-21) இது இயேசு கிறிஸ்து எருசலேமிற்குச் சென்ற முதலாவது பவனி. (மத் 21:1-16)

இதன்பின்பு, அவர் பெத்தானியாவிற்குச் சென்று, ஓய்வுநாளை ஆசரிக்கிறார். அங்கு மூன்று இராப்போஜனங்களில் முதலாவது இராப்போஜனம் பண்ணுகிறார். இங்கு இரண்டு அபிஷேகங்களில் முதலாவது அபிஷேகம் நடைபெறுகிறது. (மத் 21:17; யோவான் 12: 1-11)

பின்பு இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு இரண்டாம் முறையாகப் பவனி செல்கிறார். அதன்பின்பு, பெத்தானியாவிற்குத் திரும்பி வருகிறார். (மாற்கு 11:1-11; லூக்கா 19:29-44; யோவான் 12:12-19)

இயேசு கிறிஸ்து மறுபடியும் எருசலேமிற்குத் திரும்பி வருகிறார். தேவாலயத்தைச் சுத்திகரிக்கிறார். உபதேசம் பண்ணுகிறார். அத்திமரத்தைச் சபிக்கிறார். பட்டணத்திற்கு வெளியே செல்கிறார். (மத் 21:18-22; மாற்கு 11:12-19; லூக்கா 19:45-48; யோவான் 12:20-50).

மறுபடியும் இயேசு கிறிஸ்து எருசலேமிற்குத் திரும்பி வந்து, உபதேசம் பண்ணுகிறார். மத் 24-25; மாற்கு 13; லூக்கா 21 ஆகிய வசனங்களைத் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். அதன் பின்பு, பெத்தானியாவிற்குத் திரும்பி வந்து, இரண்டாவது இராப்போஜனம் பண்ணுகிறார். இரண்டாவது அபிஷேகம் இங்கு நடைபெறுகிறது. (மத் 21:23-26:13; மாற்கு 11:20-14:9 லூக்கா 20:1-21:38).

இயேசு கிறிஸ்து மூன்றாம் இராப்போஜனம் பண்ணுகிறார். ஜீதாஸ் காரியோத்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறான். கெத்செமனே தோட்டத்தில் இயேசு கிறிஸ்து ஜெபம் பண்ணும்போது அவரைக் கைது பண்ணுகிறார்கள். இரவு முழுவதும் இயேசுவை விசாரிக்கிறார்கள்.

மறுநாள் காலையில், இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைகிறார்கள். அன்றுமாலை அவர் அடக்கம் பண்ணப்படுகிறார். (மத் 26:14-27:66; மாற்கு 14:10-15:47; லூக்கா 22:1-23:56; யோவான் 12:1-19:42).

இது யூதரின் விசேஷித்த ஓய்வுநாளில் நடைபெறுகிறது. (லேவி 23:7,24,35; யோவான் 19:31)

இயேசு கிறிஸ்துவின் சரீரம் கல்லறையில் மூன்றுநாள் இருக்கிறது. அவருடைய ஆவியும், ஆத்துமாவும் பாதாளத்திற்குச் சென்று அங்கு சிறைப்பட்டவர்களை விடுவித்துக் கூட்டிக் கொண்டு வருகிறார். (மத் 12:40)

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"என்னுடைய வீடு ஜெப வீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது, நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள்" (லூக்கா 19:46; ஏசா 56:7; எரே 7:11)

குகை **(den)** - σπήλαιον - **speelaion** - 4693

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - குகை (மத் 21:13; மாற்கு 11:17; லூக்கா 19:46; யோவான் 11:38; எபி 11:38; வெளி 6:15).

கள்ளர் **(thieves)** - λῃστής - **leestees** - 3027

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளர் **(robber)** (யோவான் 10:1,8; யோவான் 18:40; 2கொரி 11:26) திருடன் **(thief)** (மத் 21:13; மத் 26:55; மத் 27:38,44; மாற்கு 11:17; மாற்கு 14:48; மாற்கு 15:27; லூக்கா 10:30,36; லூக்கா 19:46; லூக்கா 22:52).

"அவர் நாடோறும் தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார்" - இயேசு கிறிஸ்து தாம் கைதுபண்ணப்பட்டு, விசாரிக்கப்படுவதற்கு முன்பு ஐந்து நாட்களாக தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார். (யோவான் 12:1; மத் 21:1-17)

செவிகொடு **(attentive)** - ἐκκρεμάννυμι - **ekkremannymi** - 1582

வினைச்சொல் - செவிகொடு, பேசுபவரின் வாயையே பார்த்துக் கொண்டிருத்தல், அவருடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்தல்.

20 அதிகாரம்

140. இயேசுவின் அதிகாரத்தை கேள்வி கேட்கிறார்கள் - (மத் 21:23; மாற்கு 11:27)

லூக்கா 20:1 அந்நாட்களில் ஒன்றில், அவர் தேவாலயத்திலே ஜனங்களுக்கு உபதேசித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது, பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் கூடிவந்து:

லூக்கா 20:2 நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? அதை எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்.

லூக்கா 20:3 அவர்களுக்கு அவர் பிரதியுத்தமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்லுங்கள்.

லூக்கா 20:4 யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? என்று கேட்டார்.

லூக்கா 20:5 அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணி: தேவனால் உண்டாயிற்று என்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்க வில்லை என்று கேட்பார்.

லூக்கா20:6 மனுஷரால் உண்டாயிற்று என்று சொல்வோமானால், ஜனங்களெல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசி யென்றுஎண்ணுகிறபடியினால் நம்மேல் கல்லெறிவார்கள் என்று சொல்லி:

லூக்கா 20:7 அது யாரால் உண்டாயிற்றோ, எங்களுக்குத் தெரியாது என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்.

“தேவாலயத்திலே ஜனங்களுக்கு உபதேசித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்” - சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு நாம் முக்கியத்துவம் தரவேண்டும். சுவிசேஷச் செய்தியில் தெய்வீக வல்லமை வெளிப்படும். விசுவாசம் கேள்வியினாலே வரும். ஆதித்திருச்சபையார் சுவிசேஷத்தை எல்லா இடங்களிலும் பிரசங்கித்தார்கள். நாமும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதை நிறுத்திவிடக் கூடாது. (ரோமர் 1:18; 1கொரி 1:18-24).

“நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?” - (லூக்கா 20:2-7, மத் 21:23-27)

இயேசு கிறிஸ்துவிடம் கேட்கப்பட்ட கேள்விகள்

1. மார்க்கக் காரியங்கள் (லூக்கா 20:1-8)
2. அரசியல் காரியங்கள் (லூக்கா 20:19-26)
3. தெய்வீகக் காரியங்கள் (லூக்கா 20:27-38)
4. வீட்டுக் காரியங்கள் (லூக்கா 20:28-33)

141. திராட்சைத் தோட்டத்தின் எஜமானைப் பற்றிய உவமை - (மத் 21:33; மாற்கு 12:1)

லூக்கா 20:8 அப்பொழுது இயேசு: நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்.

லூக்கா 20:9 பின்பு அவர் ஜனங்களுக்குச் சொல்லத்தொடங்கின உவமையாவது: ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைத் தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டு, நெடுநாளாகப் புறத்தேசத்துக்குப் போயிருந்தான்.

லூக்கா 20:10 அந்தக் தோட்டக்காரர் திராட்சத்தோட்டத்தின் கனிகளில் தன் பாகத்தைக் கொடுத்தனுப்பும்படி, பருவகாலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான். அந்தத் தோட்டக்காரர் அவனை அடித்து, வெறுமையாக அனுப்பி விட்டார்கள்.

20 அதிகாரம்

லூக்கா 20:11 பின்பு அவன் வேறொரு ஊழியக்காரனை அனுப்பினான்; அவனையும் அவர்கள் அடித்து, அவமானப்படுத்தி, வெறுமையாக அனுப்பிவிட்டார்கள்.

லூக்கா 20:12 அவன் மூன்றாந்தரமும் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான்; அவனையும் அவர்கள் காயப்படுத்தி, துரத்திவிட்டார்கள்.

லூக்கா 20:13 அப்பொழுது திராட்சத் தோட்டத்தின் எஜமான்: நான் என்ன செய்யலாம், எனக்குப் பிரியமான குமாரனை அனுப்பினால், அவனையாகிலும் கண்டு அஞ்சுவார்கள் என்று எண்ணி, அவனை அனுப்பினான்.

லூக்கா 20:14 தோட்டக்காரர் அவனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளி, சுதந்தரம் நம்முடையதாகும்படிக்கு இவனைக் கொல்லுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு,

லூக்கா 20:15 அவனைத் திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளி, கொன்றுபோட்டார்கள். இப்படியிருக்க, திராட்சத்தோட்டத்தின் எஜமான் அவர்களை என்னசெய்வான்?

லூக்கா 20:16 அவன் வந்து அந்தத் தோட்டக்காரரைச் சங்கரித்து, திராட்சத் தோட்டத்தை வேறு தோட்டக்காரரிடத்தில் கொடுப்பான் அல்லவா என்றார். அவர்கள் அதைக்கேட்டு, அப்படியாகா திருப்பதாக என்றார்கள்.

லூக்கா 20:17 அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து: வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன?

லூக்கா 20:18 அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார்.

உவமை எண் - 42

"ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைத் தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டு, நெடுநாளாகப் புறத்தேசத்துக்குப் போயிருந்தான்......." (லூக்கா 20:9-18) யூதர்கள் இயேசு கிறிஸ்துவை மறுதலிப்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 21:33-46; மாற்கு 12:1-11)

"அவனைத் துரத்திவிட்டார்கள்" - லூக்கா 20:10-11 ஆகிய வசனங்கள் மத் 23:37; லூக்கா 13:33; எபி 11:36-37 ஆகிய வசனங்களை விளக்குகிறது.

"பிரியமானவர்" (beloved, dear, favorite, or one highly esteemed) - பிதா குமாரனைப் பிரியமானவர் என்று அழைக்கிறார். (மத் 3:17; மத் 12:18; மத் 17:5; மாற்கு 1:11; மாற்கு 9:7; லூக்கா 3:22; லூக்கா 9:35) ஒருவனுடைய குமாரனை இயேசு பிரியமானவர் என்று அழைக்கிறார். அது தம்மையே விளக்குகிறது. (மாற்கு 12:6; லூக்கா 20:13) விசுவாசிகளை அழைப்பதற்கு இவ்வார்த்தை நிருபங்களில் 52 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ரோமர் 1:7; ரோமர் 11:28; ரோமர் 16:8-12; பிலி 2:12; 1யோவான் 3:2; 1யோவான் 4:1,7,11)

பிரியமான (beloved) - ἀγαπητός - agapeetos - 27

பெயரடை - நேச, பிரியமான

(அ) கிறிஸ்துவிற்கு பயன்படுத்தப்பட்ட பெயரடை - மத். 3:17

(ஆ) சக கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தப் பட்டுள்ள பெயர்கள் - 1கொரி 4:14

(இ) 1யோவா. 4:7ல் பிரியமானவர்களே என்னும் உரிச்சொல்

20 அதிகாரம்

"திராட்சத்தோட்டத்தின் எஜமான் அவர்களை என்னசெய்வான்?" - இந்தக் கேள்விக்குரிய பதில் யூதருக்கு நன்றாக தெரியும். ஆகையினால் அவர்கள் "அப்படியாகாதிருப்பதாக" என்றார்கள். (லூக்கா 20:16) இந்தக் கேள்விக்கு யூதர்கள் தங்களுக்குள் பதில் கூறிக்கொண்டார்கள். (மத் 21:41) இந்த உவமையின் கருத்து மத் 21:42-45 ஆகிய வசனங்களில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது.

இந்த உவமையின் மூலமாக யூதர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளி விடுவதையும், தேவன் யூதர்களைத் தள்ளிவிடுவதையும் விளக்குகிறது. தேவனுடைய ராஜ்யத்தை யூதர்களிடமிருந்து எடுத்து அதைப் புறஜாதியார் கையில் கொடுக்கிறார். ஆகையினால்தான் அவர்கள் "அப்படியாகாதிருப்பதாக" என்று அலறுகிறார்கள். இப்படி நடைபெறுவது யூதருக்குப் பிடிக்கவில்லை.

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக் கல்லாயிற்று" (லூக்கா 20:17; சங் 118:22).

தீர்க்கதரிசன எண் - 40

"அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப்போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்" (லூக்கா 20:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மத் 21:44)

142. வரிப்பணத்தைப் பற்றிய கேள்வி
– (மத் 17:24; 22:15; மாற்கு 12:13)

லூக்கா 20:19 பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களைக்குறித்து இந்த உவமையைச் சொன்னாரென்று அறிந்து, அந்நேரத்திலே அவரைப் பிடிக்க வகைதேடியும் ஜனங்களுக்குப் பயந்திருந்தார்கள்.

லூக்கா 20:20 அவர்கள் சமயம்பார்த்து, தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக் கொடுக்கும்படி அவருடைய பேச்சிலே குற்றங்கண்டு பிடிக்கலாமென்று, தங்களை உண்மையுள்ள வர்களாய்க் காண்பிக்கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பினார்கள்.

லூக்கா 20:21 அவர்கள் வந்து; போதகரே, நீர் நிதானமாய்ப் பேசி உபதேசிக்கிறீரென்றும், முகதாட்சணிய மில்லாமல் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீரென்றும்அறிந்திருக்கிறோம்.

லூக்கா 20:22 இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ, எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்.

லூக்கா 20:23 அவர்களுடைய தந்திரத்தை அவர் அறிந்து, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?

லூக்கா 20:24 ஒரு பணத்தை எனக்குக் காண்பியுங்கள். இதிலி ருக்கிற சொரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். அதற்கு அவர்கள்: இராயனுடையது என்றார்கள்.

லூக்கா 20:25 அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்.

லூக்கா 20:26 அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பேச்சிலே குற்றம்பிடிக்கக்கூடாமல், அவர் சொன்ன உத்தரவைக் குறித்து ஆச்சரியப்பட்டு, மவுனமாயிருந்தார்கள்.

"அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்" - இயேசு கிறிஸ்துவின் வேளை வரும்வரையிலும், அவரை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. தமது வேளை வந்தபோது, இயேசு கிறிஸ்து தம்மையே ஒப்புக்கொடுக்கிறார். அதுவரையிலும் அந்த ஜனங்களுக்கு எந்த அதிகாரமும் கிடைக்கவில்லை. (மத் 26:3)

20 அதிகாரம்

"சமயம்பார்த்தார்கள்" - (லூக்கா 17:20)

வேவுகாரன்(spies) - ἐγκάθετος - egkathetos - 1455

பெயரடை - வேவுகாரரான (liers in wait, secret agents). இந்த வார்த்தை இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. வேவுகாரரைப் பற்றிய குறிப்புக்களை எண் 13; யோசு 8:13; யோபு 31:9 ஆகிய வசனங்களில் காணலாம்.

யூதர்கள் எதிர்பார்த்த காரியங்கள்

1. இயேசு கிறிஸ்துவின் பேச்சிலே குற்றம் கண்டுபிடிக்கலாம். அவர்களால் ஒரு குற்றமும் காணமுடியாது. ஏனெனில் இயேசு கிறிஸ்து சுயமாய்ப் பேசாமல் பரிசுத்த ஆவியானவர் ஏவியதை மட்டுமே பேசினார். எந்த இடத்தில் எதைப் பேசவேண்டுமென்பது பரிசுத்த ஆவியானவருக்கு நன்றாகத் தெரியும். (யோவான் 8:28,38; யோவான் 12:49).

2. தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக் கொடுக்கலாம். இயேசு கிறிஸ்துவின் ஜீவனையே அவர்கள் தங்கள் மனதில் நினைத்திருந்தார்கள். தேவனுடைய வேளை வரும்போதுதான் இதை அவர்களால் செய்ய முடியும். தமது ஜீவனைக் கொடுப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். (லூக்கா 22:53; யோவான் 10:18; யோவான் 18:37)

மாய்மாலக்காரர்கள் அறிந்திருக்கும் காரியங்கள்

1. இயேசு கிறிஸ்து நிதானமாய்ப் பேசி உபதேசிக்கிறார்.

2. முகதாட்சணியமில்லாமல் பேசுகிறார்.

3. தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறார்.

வரி (tribute) - φόρος - phoros - 5411

ஆண்பால் பெயர்ச்சொல் - வரி - யூதேயா தேசத்திற்குள் கொண்டுவரப்படும் எந்தப் பொருளுக்கும் வரி செலுத்த வேண்டும். யூதர்கள் மத்தியில் இந்த வரியைக் குறித்து, கருத்து வேறுபாடு இருந்தது. (லூக்கா 23:2; ரோமர் 13:6-7)

தந்திரம் (craftiness) - πανουργία - panourgia - 3834

பெண்பால் பெயர்ச்சொல் - தந்திரம் (cunning)(1கொரி3:19; 2கொரி 4:2; 2கொரி 11:3; எபே 4:14).

தந்திரமானவர்களுக்குஎடுத்துக்காட்டுக்கள்

1. சாத்தான்- மனுஷர்களை வீழ்த்துவதில் சாத்தானுடைய தந்திரம் (ஆதி 3:1-8)

2. யாக்கோபு - சேஷ்டபுத்திர பாகத்தை வாங்குவதிலும், ஆசீர்வாதத்தைத் திருடுவதிலும் (ஆதி 25: 31-33; ஆதி 27:6-29)

3. யாக்கோபு - லாபானுடைய மந்தையை மேய்ப்பதில் (ஆதி 30:31-43)

4. கிபியோனியர் - யோசுவாவை ஏமாற்றியதில் (யோசு 9:3-15)

5. சன்பல்லாத் - நெகேமியாவை வஞ்சித்தது (நெகே 6)

6. யூதர்கள் - இயேசுவைக் கண்ணியில் சிக்க வைக்க முயற்சி பண்ணியது (மத் 22:15-28; லூக்கா 20:19-26)

7. யூதர்கள் - இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடியது ((மத் 26:3)

பணம் (penny) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

20 அதிகாரம்

"அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பேச்சிலே குற்றம்பிடிக்கக்கூடாமல், அவர் சொன்ன உத்தரவைக் குறித்து ஆச்சரியப்பட்டு, மவுனமாயிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவிடம் அவர்களால் எந்தக் குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்துவை மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பதற்கான காரணத்தையும், அவர்களால் கண்டுபிடிக்க இயலவில்லை. ஏதாவது ஒரு காரணம் அவர்கள் கண்டுபிடித்தே ஆக வேண்டும். யூதாஸ்காரியோத்து அவர்களுக்கு உதவி புரிய முன்வந்தான். யூதாஸ் பணத்திற்கு ஆசைப்பட்டான். யூதருக்கு எப்படியாவது இயேசுவைக் கொல்ல வேண்டுமென்னும் ஆசை இருந்தது. இரண்டு ஆசைக்காரர்களும் ஒன்றுசேர்ந்து, சதித்திட்டம் தீட்டினார்கள். (மத் 26:14-16; மாற்கு 14:10-11).

143. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - (மத் 22:23; மாற்கு 12:18)

லூக்கா 20:27 உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயரில் சிலர் அவரிடத்தில் வந்து:

லூக்கா 20:28 போதகரே, ஒருவன் மனைவியை யுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்க வேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே.

லூக்கா 20:29 சகோதரர் ஏழு பேரிருந்தார்கள். அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனான்.

லூக்கா 20:30 பின்பு இரண்டாஞ்சகோதரன் அவளை விவாகம் பண்ணி, அவனும் பிள்ளை யில்லாமல் இறந்துபோனான்.

லூக்கா 20:31 மூன்றாஞ்சகோதரனும் அவளை விவாகம்பண்ணினான். அப்படியே ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனார்கள்.

லூக்கா 20:32 எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள்.

லூக்கா 20:33 இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள்.

லூக்கா 20:34 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள்.

லூக்கா 20:35 மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப் படுகிறவர்களோ பெண்கொள்வது மில்லை பெண் கொடுப்பதுமில்லை.

லூக்கா 20:36 அவர்கள் இனி மரிக்கவு மாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைக ளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப் பார்கள்.

லூக்கா 20:37 அன்றியும் மரித்தோர் எழுந்திருப் பார்களென்பதை மோசேயும் முட்செடியைப்பற்றிய வாசகத்தில் காண்பித்திருக்கிறார். எப்படியெனில், கர்த்தரை ஆபிரகாமின் தேவனென்றும் ஈசாக்கின் தேவனென்றும் யாக்கோபின் தேவனென்றும் சொல்லியிருக்கிறார்.

லூக்கா 20:38 அவர் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்; எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே என்றார்.

"உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயரில் சிலர் அவரிடத்தில் வந்தார்கள்" - (லூக்கா 20:27-38, மத் 22:23-33; மாற்கு 12:18-27)

20 அதிகாரம்

"போதகரே, ஒருவன் மனைவியையுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே" - (உபா 25:5) தேவனுடைய சத்துருக்களுக்கும், வேதவாக்கியம் நன்றாகத் தெரியும். தாங்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாத சத்தியத்தை எப்படி ஒதுக்கி வைப்பது என்று நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். தங்களுக்குத் தேவையான வசனங்களை மனப்பாடம் செய்து வைத்திருப்பார்கள். தங்களுடைய விருப்பத்தின் பிரகாரம் வேதவசனங்களைத் தங்களுக்கேற்ற படி வியாக்கியானம் பண்ணுவார்கள். தங்களுடைய அழிவுக்கு ஏதுவாக அவர்கள் அப்படி நடந்து கொள்கிறார்கள். (2பேதுரு 3:16)

"உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்" - இம்மையில் இருப்பதுபோலவே மறுமையிலும், மனுஷர் மனைவிகளோடும், பிள்ளைகளோடும், உற்றார் உறவினரோடும் இருப்பார்கள் என்று யூதரில் சிலர் நினைத்தார்கள். சதுசேயர்கள் இதை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் உயிர்த்தெழுதலே இல்லை என்று கூறுகிறவர்கள். (லூக்கா 20:27)

"இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வருகிறார்கள்" - (யோவான் 17:12)

"பிரபஞ்சம்" - காலம், நீண்டகாலம் அல்லது குறுகிய காலம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலம். இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் என்பது இந்தக் காலத்தின் பிள்ளைகள் என்று பொருள்படும். இவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். உயிர்த்தெழுதலின் காலத்திலுள்ள பிள்ளைகள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள். ஆயிரம் வருஷ அரசாட்சியில் மனுஷர் திருமணம் செய்து கொள்வார்கள். (வெளி 20; ஏசா 65:20-25) உயிர்த்தெழுந்த பின்பு, திருமணம் இல்லையென்றாலும், அவர்கள் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ தான் இருப்பார்கள். (1கொரி 15:35-58)

தங்களுடைய இனவிருத்திக்காக உயிர்த்தெழுந்தவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் அவசியம் இல்லை. அவர்கள் தேவதூதரைப் போல இருப்பார்கள். அவை இனவிருத்தி செய்வதில்லை. வேதாகமத்தில் மனுஷருடைய திருமணத்தைப் பற்றி மிகவும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. (ஆதி 8:22; ஆதி 9:12,16; ஆதி 17:19; 2சாமு 7; ஏசா 9:6-7; ஏசா 59:20-21; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14: 16-21; எசே 43:7; லூக்கா 1:31-33; மத் 25:31-46; வெளி 11:15; வெளி 20:1-15; வெளி 22:4-5).

பிரபஞ்சம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32; மாற். 10:30

தீர்க்கதரிசன எண் - 45

"மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண்கொள்வதுமில்லை பெண்கொடுப்பதுமில்லை................" (லூக்கா 20:35-38) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை.

மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்கள். முதலாவது உயிர்த்தெழுதலில் பாக்கியவான்களாகவும், பரிசுத்தவான்களாகவும் இருப்பார்கள். (லூக்கா 21:34; யோவான் 5:28-29; யோவான் 14:1-3; 1கொரி 15:23,51-58; எபே 5:26-28; பிலி 3:20-21; 1தெச 4:13-17; 2தெச 2:7; வெளி 20:4-6).

"மறுமை" (world, The eternal age, the age of the ages) - பூமியை மேசியா நித்திய காலமாக ஆளுகை செய்யும் காலம். (ஏசா 9:6-7; தானி 2: 44-45; தானி 7:13-14,27; சக 14; மத் 13:43; மத் 25:31-46; லூக்கா 1:31-33; வெளி 11:15; வெளி 20:1-15; வெளி 22:4-5).

20 அதிகாரம்

"மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதல்" - முதலாவது உயிர்த்தெழுதல். மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள். அதன்பின்பு ஆயிரம் வருஷம் கழித்து, மரித்த துன்மார்க்கர் உயிர்த்தெழுவார்கள். (வெளி 20:4-6). சபை எடுத்துக் கொள்ளப்படும்போது கிறிஸ்துவில் மரித்தோர் மட்டுமே உயிர்த்தெழுவார்கள். (யோவான் 14:1-3; 1தெச 4:13-18; 1கொரி 15:23, 51-58).

இதிலிருந்து (from) - ἐκ - ek - 1537

முன்னிடைச்சொல் - இல், ஆல், இதிலிருந்து, விட்டு, இடத்தில், முதல், தரம் இல்லாமல், ஆறாம் வேற்றுமையுடன் உடைய, இன், கொண்டு, புறம்பே, முதற்கொண்டு, ஒடு, வழியாய், தொடங்கி

மரித்தோர் (dead) - νεκρός - nekros - 3498

பெயரடை - மரித்தோரான, செத்துப்போன

"அவர்கள் இனி மரிக்கவு மாட்டார்கள்....... தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய் இருப்பார்கள்" - உயிர்த்தெழுதலின்போது கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் மறுரூபமடைவார்கள். லாசரு மரித்து நான்கு நாட்கள் சென்ற பிறகு மறுபடியும் உயிர் பெற்றான். ஆனால் அது உயிர்த்தெழுதல் ஆகாது. அவன் மறுபடியும் மரித்துப் போய் விட்டான். இந்த வசனத்தில் நாம் உயிர்த்தெழுந்தவர்களாக காண்கிறவர்கள் எவருமே இனிமேல் மரிக்கப்போவதில்லை. அவர்கள் நித்திய காலமாக ஜீவிப்பார்கள். (1கொரி 15: 51-58; பிலி 3:20-21) தேவதூதர்களைப் போல உயிர்த்தெழுந்தோரின் சரீரங்கள் சாகாமல் இருக்கும். (லூக்கா 20:36)

"தேவனுக்குப் பிள்ளைகள்" - முதலாவது உயிர்த்தெழுதலில் பங்கு பெறும் பரிசுத்தவான்கள் தேவனுக்குப் பிள்ளைகளாக இருப்பார்கள். முதலாவது உயிர்த்தெழுதலின் போது மரித்தவர்களாக இருக்கிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள். ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பே இவர்கள் உயிர்த்தெழுவார்கள். இவர்கள் பாக்கியவான்களோ, பரிசுத்தவான்களோ அல்ல. தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற நித்திய ஆக்கினையை அடைவதற்காக இவர்கள் உயிர்த்தெழுகிறார்கள். (வெளி 20:4-6,11-15; யோவான் 5:28-29; தானி 12:2).

"உயிர்த்தெழுதலின் பிள்ளைகள்" - இவர்கள் எல்லோருமே தேவனுக்குப் பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள். ஏனெனில் பரிசுத்தவான்களும் உயிர்த்தெழுவார்கள். துன்மார்க்கரும் உயிர்த்தெழுவார்கள். உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் மட்டுமே தேவனுக்குப் பிள்ளைகளாக இருப்பார்கள். (1கொரி 15:21-23; யோவான் 5:28-29; தானி 12:2; வெளி 20:4-6,11-15) உயிர்த்தெழுவதினால் ஒருவர் தேவனுடைய பிள்ளையாக ஆகமுடியுமென்றால் கிறிஸ்து சிலுவையில் மரித்தது வீணாய் இருக்குமே.

"கர்த்தரை ஆபிரகாமின் தேவனென்றும் ஈசாக்கின் தேவனென்றும் யாக்கோபின் தேவனென்றும் சொல்லியிருக்கிறார்" - (யாத் 3:3-6)

"மரித்தோர்" - மரித்த சரீரங்கள் (யாக் 2:26). கர்த்தர் ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார். மரிக்காத ஆத்துமாக்களின் தேவன். மனுஷருடைய ஆவியும், ஆத்துமாவும் மரிக்காது. அவை நித்திய காலமாக ஜீவிக்கும். (1பேதுரு 3:4).

144. இயேசு பரிசேயரிடம் கேட்ட கேள்விகள் - (மத் 22:41; மாற்கு 12:35)

லூக்கா 20:39 அப்பொழுது வேதபாரகரில் சிலர் அதைக்கேட்டு: போதகரே, நன்றாய்ச் சொன்னீர் என்றார்கள்.

லூக்கா 20:40 அதன்பின்பு அவர்கள் அவரிடத்தில் வேறொன்றுங்கேட்கத் துணியவில்லை.

லூக்கா 20:41 அவர் அவர்களை நோக்கி: கிறிஸ்து தாவீதின் குமாரனென்று எப்படிச் சொல்லுகிறார்கள்?

20 அதிகாரம்

லூக்கா 20:42 நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று,

லூக்கா 20:43 கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று தாவீது தானே சங்கீத புஸ்தகத்தில் சொல்லுகிறானே.

லூக்கா 20:44 தாவீது அவரை ஆண்டவ ரென்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்.

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று, கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார்" (லூக்கா 20:42-43; சங் 110:1,5, மத் 22:41-46; மாற்கு 12:35-37)

145. பரிசேயரின் அடையாளங்கள் - (மத் 23:1; மாற்கு 12:38; லூக் 18:9)

லூக்கா 20:45 பின்பு ஜனங்களெல்லாரும் கேட்கையில் அவர் தம்முடைய சீஷரை நோக்கி:

லூக்கா 20:46 நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரியவும், சந்தை வெளிகளில் வந்தனங்களை அடையவும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி,

லூக்கா 20:47 விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் என்றார்.

"பின்பு ஜனங்களெல்லாரும் கேட்கையில் அவர் தம்முடைய சீஷரை நோக்கி.........என்றார்" - எல்லா மனுஷரும் கேட்குமாறு பேசுவது ஒரு தலைவரின் தகுதி. ஆனால் மாய்மாலக்காரர்கள் இரகசியமாக சதியாலோசனை பண்ணுவார்கள். (மத் 23:2)

"நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரியவும், சந்தை வெளிகளில் வந்தனங்களை அடையவும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" - (மத் 23:2)

தீர்க்கதரிசன எண் - 42

"அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள்" (லூக்கா 20:47) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. (லூக்கா 18:24)

21 அதிகாரம்

146. விதவை காணிக்கையாக போட்ட இரண்டு காசுகள் - (மாற்கு 12:41)

லூக்கா 21:1 அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப்பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார்.

லூக்கா 21:2 ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு:

லூக்கா 21:3 இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 21:4 அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்து தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த தெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.

"ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறார்கள்" - (லூக்கா 18:24)

ஏழை (poor) - πενιχρός - penichros - 3998

பெயரடை - ஏழை - தன்னுடைய ஜீவனத்திற்காக மிகவும் கடினமாக உழைக்கிறவர். இந்த வாக்கியம் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" - கொடுப்பதில் இது ஒரு புதிய பிரமாணம். ஒருவர் குறைவாக கொடுத்தாலும், தனக்கு உரிமையானது அனைத்தையும் கொடுத்து விட்டால் அதிகமாகக் கொடுத்துவிட்டதாக பொருள். ஐசுவரியவான்கள் அதிகமாகக் கொடுப்பதைவிட ஏழை விதவை கொடுத்தது இரண்டு காசாக இருந்தாலும், அதுவே அதிகம். (லூக்கா 21:3-4) எல்லாவற்றையும் வேண்டாம் என்று வெறுத்து, கர்த்தரிடம் காணிக்கையாக அர்ப்பணிக்க வேண்டும். நமது ஜீவனைக்கூட வெறுத்து, கர்த்தரிடம் அர்ப்பணித்துவிட வேண்டும். (லூக்கா 14:33; மத் 19:27-29).

147. தேவாலயத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம் - (மத் 24-25; மாற்கு 13)

(1) எருசலேமின் அழிவை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 23:39; 24:1)

லூக்கா 21:5 பின்பு, சிறந்த கற்களினாலும் காணிக்கைகளினாலும் தேவாலயம் அலங்கரிக்கப் பட்டிருக்கிறதைக் குறித்து சிலர் சொன்னபோது,

லூக்கா 21:6 அவர்: நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின் மேலிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும் என்றார்.

"தேவாலயம்" - இயேசு கிறிஸ்து லூக்கா 21ஆவது அதிகாரத்தில் உள்ள வசனங்களைப் பேசுகிறபோது, அவர் இன்னும் தேவாலயத்திலேயே இருக்கிறார். காணிக்கைப் பெட்டியிலே ஜனங்கள் காணிக்கை போடுவதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். (லூக்கா 21:1-4)

"சிறந்த கற்களினாலும் காணிக்கைகளினாலும் தேவாலயம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது" - அர்ப்பணிக்கப் பட்ட வெகுமதிகளினால் தேவாலயம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

21 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 43

"நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின்மேலிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும்" (லூக்கா 21:6) இந்தத் தீர்க்கதரிசனம் கிபி. 70இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது நிறைவேறிற்று.

(2) இரண்டு கேள்விகள் - (மத் 24:3; மாற்கு 13:3)

லூக்கா 21:7 அவர்கள் அவரை நோக்கி: போதகரே, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும், இவைகள் சம்பவிக்கும் காலத்துக்கு அடையாளம் என்ன என்று கேட்டார்கள்.

(3) இயேசுவின் இரண்டாம் வருகைக்கு பத்து அடையாளங்கள் - (மத் 24:5; மாற்கு 13:5)

லூக்கா 21:8 அதற்கு அவர்: நீங்கள் வஞ்சிக்கப்படாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு: நான்தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள்; அவர்களைப் பின்பற்றாதிருங்கள்.

லூக்கா 21:9 யுத்தங்களையும் கலகங்களையும் குறித்து நீங்கள் கேள்விப்படும்போது, பயப்படாதிருங்கள்; இவைகள் முன்னதாகச் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது என்றார்.

லூக்கா 21:10 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்.

லூக்கா 21:11 பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும் உண்டாகும்; வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்.

தீர்க்கதரிசன எண் - 44

"நீங்கள் வஞ்சிக்கப்படாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு: நான்தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள்; அவர்களைப் பின்பற்றாதிருங்கள்........." (லூக்கா 21:8-36) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 21:12-24 ஆகிய வசனங்கள் கிபி. 70-இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது நிறைவேறிற்று. லூக்கா 21:8-11,25-36 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

இந்தக் காலத்தின் முடிவில் கிறிஸ்துவின் வருகையின்போது காணப்படும் அடையாளங்கள் (லூக்கா 21:8-11)

1. வஞ்சனைகள் (Deceptions) (லூக்கா 21:8; மத் 24:4-5,11,24; 2தெச 2:8-12; 2தீமோ 3:13)
2. அநேக கள்ளக்கிறிஸ்துக்கள் (Many false Christs) (லூக்கா 21:8; மத் 24:5,23-26; 2தெச 2:1-12; வெளி 13)
3. யுத்தங்கள் (Wars) (லூக்கா 21:9; மத் 24:6-7)
4. கலகங்கள் (Commotions) (லூக்கா 21:9; 1கொரி 14:33; 2கொரி 6:5; 2கொரி 12:20; யாக் 3:16)
5. உலக யுத்தங்கள் (World wars) (லூக்கா 21:10; மத் 24:4-7; தானி 7:23-24; தானி 11:40-45)

லூக்கா – தொகுப்புரை

21 அதிகாரம்

6. பூமியதிர்ச்சிகள் **(Great earthquakes)** (லூக்கா 21:11; மத் 24:7; மாற்கு 13:8; வெளி 6:12-17; வெளி 11:13; வெளி 12:16; வெளி 16:17-21)

7. பஞ்சங்கள் **(Famines)** (லூக்கா 21:11; மத் 24:7; மாற்கு 13:8; வெளி 6:5-6; வெளி 7:16)

8. கொள்ளைநோய்கள் **(Pestilences)** (லூக்கா 21:11; மத் 24:7; வெளி 6:8; வெளி 9:5,18; வெளி 16:2)

9. பயங்கரமான தோற்றங்கள் **(Fearful sights)** (லூக்கா 21:11; மத் 24:21-22; மாற்கு 13:19-20; வெளி 6:8-17; வெளி 8:7-9:21; வெளி 11:5-6; வெளி 16:1-17)

10. வானத்திலிருந்து பெரிய அடையாளங்கள் **(Great signs from heaven)** (லூக்கா 21:11; வெளி 6:12-17; வெளி 8:7-9:21; வெளி 16:1-21, யோவே 2:30-32; மத் 24:9, அப் 2:19-21)

கலகம் **(Commotions)** - **ἀκαταστασία** - **akatastasia** - 181

பெண்பால் பெயர்ச்சொல் - கலகம் **(instability, a state of disorder, disturbance, confusion)**

பயப்படு **(terrified)** - **πτοέω** - **ptoeoo** - 4422

வினைச்சொல் - பயப்படு **(scared)** - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் லூக்கா 24:37 ஆவது வசனத்திலும் மட்டுமே வந்திருக்கிறது.

"முடிவு" **end** - இதற்கான கிரேக்கச்சொல் "டெலோஸ்" **(telos) (to-telos)** மத்தேயு 13:39 ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச்சொல் "சன்தெலேயா" **(sunteleia)** இதற்குக் காலத்தின் முடிவு என்று பொருள்.

முடிவு **(end)** - **τέλος** - **telos** - 5056

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - முடிவு, அழிவு, அந்தம், தொந்தரவு, விலகிப்போதல்

கடைசிக்காலம் **(end)** - **συντέλεια** - **synteleia** - 4930

பெண்பால் பெயர்ச்சொல் - முடிவு, கடைசிக்காலம்

"உடனே" **(by and by, immediately)** - (மத் 24:6; மாற்கு 13:7; லூக்கா 17:7; மாற்கு 6:25)

"ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்" - ஏற்கெனவே நடைபெற்ற இரண்டு உலக யுத்தங்களை இந்த வசனம் குறிப்பதாக பலர் கூறுகிறார்கள். ஆனால் அதைத் தொடர்ந்து நடைபெறும் என்று கூறப்பட்ட காரியங்கள் எதுவும் நடைபெறவில்லை. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற யுத்தங்கள் பத்து ராஜ்யங்களின் யுத்தமாகும். (தானி 7:23-24; வெளி 17:12) அந்திக்கிறிஸ்துவின்கீழ் பத்து ராஜ்யங்கள் ஒன்றுசேர்ந்து, யுத்தம் பண்ணும். (தானி 11:40-45).

(4) இந்த அடையாளங்களெல்லாம் நடப்பதற்கு முன்பாக எருசலேம் அழியும், இஸ்ரவேலர்கள் புறஜாதிகளுக்குள்ளே சிறைப் பட்டுப் போவார்கள்

லூக்கா 21:12 இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம் அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெபஆலயங் களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக் கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்.

21 அதிகாரம்

லூக்கா 21:13 ஆனாலும் அது உங்களுக்குச் சாட்சியாவதற்கு ஏதுவாயிருக்கும்.

லூக்கா 21:14 ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப் படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம்பண்ணிக் கொள்ளுங்கள்.

லூக்கா 21:15 உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்.

லூக்கா 21:16 பெற்றாராலும் சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிராலும் காட்டிக் கொடுக்கப் படுவீர்கள்; உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள்.

லூக்கா 21:17 என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்.

லூக்கா 21:18 ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது.

லூக்கா 21:19 உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

லூக்கா 21:20 எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்.

லூக்கா 21:21 அப்பொழுது யூதேயா விலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப் புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள்.

லூக்கா 21:22 எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே.

லூக்கா 21:23 அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்க் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, பூமியின்மேல் மிகுந்த இடுக்கணும் இந்த ஜனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும்.

லூக்கா 21:24 பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.

"இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே" - கி.பி. 70-இல் எருசலேம் அழிந்ததை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. லூக்கா 21:8-11 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளமாக நிறைவேறும். இயேசு கிறிஸ்து எருசலேம், தேவாலயம் ஆகியவற்றின் அழிவை முன்னறிவிக்கிறார். (லூக்கா 21:6) எருசலேம் எப்பொழுது அழிக்கப்படும் என்று சீஷர்கள் கேட்கிறார்கள். (லூக்கா 21:7) இயேசு கிறிஸ்து லூக்கா 21:12-24 ஆகிய வசனங்களில் சீஷர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறுகிறார். அதைத் தொடர்ந்து, தமது இரண்டாம் வருகைக்கு அடையாளங்களைக் கூறுகிறார். (லூக்கா 21:25-36)

"அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெபஆலயங்களுக்கும் சிறைச் சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்" - லூக்கா 21:12-19 ஆகிய வசனங்கள் விசுவாசிகள் எப்படித் துன்புறுத்தப்படுவார்கள் என்று விளக்குகிறது. லூக்கா 21:20-24 ஆகிய வசனங்கள் எருசலேமின் அழிவையும், உலகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் யூதர்கள் சிதறி ஓடப் போவதையும் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது புறஜாதியாரின் கடைசிக்காலம் வரையிலும் இந்த வசனங்கள் கூறுகின்றன. (ரோமர் 11:25-29; சக 14; வெளி 19:11-21).

"என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம்பண்ணிக் கொள்ளுங்கள்" - (மத் 10:19-20; லூக்கா 12:11)

21 அதிகாரம்

"உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்" - இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகளுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம். நமக்கு எதிர்ப்புக்கள் வரும். ஆனாலும் கலங்கவேண்டாம். எதைப் பேசவேண்டும், எப்படி பேசவேண்டும் என்றும் கவலைப்படவேண்டாம். கர்த்தர் சகலத்தையும் பார்த்துக் கொள்வார். (அப் 2:11-40; அப் 3:11-26; அப் 4:1-22; அப் 5:17-42; அப் 6:9-7:60)

"பெற்றாராலும் சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள்; உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள்" - இது மிகவும் கொடுமையான காரியம். ஆனாலும் பிசாசின் வல்லமையினால் இப்படிப்பட்ட துன்மார்க்கமான காரியங்கள் நடைபெறும். மார்க்கப் பிரிவினைகளினால் ஜனங்கள் ஒருவரையொருவர் கொலைசெய்வார்கள். வேதாகமத்தில் நாம் வாசிக்கும் முதலாவது துரோகமும், முதலாவது கொலையும் மார்க்கம் சம்பந்தமாகவே நடைபெற்றது. (ஆதி 4) கடைசிக் காலத்திலும் இதுபோலவே நடைபெறும். (வெளி 6:9-11; வெளி 7:9-17; வெளி 14:13; வெளி 15:2-4; வெளி 20:4-6; மத் 24:4-24)

கள்ளமார்க்கங்கள் மனுஷரைத் துன்மார்க்கமாக ஜீவிக்குமாறு வழிநடத்தும். துன்மார்க்கமான காரியங்களைப் பேசி, அவர்கள் துன்மார்க்கமான கிரியைகளைச் செய்வார்கள். அவைகளைச் செய்யும்போது, தாங்கள் தெய்வீக காரியத்தைச் செய்வதாகவும், தங்கள் தேவனுக்கே இவற்றைச் செய்வதாகவும் கூறுவார்கள். இதையே அவர்கள் தங்களுடைய மார்க்கம் என்று உபதேசம் பண்ணுகிறார்கள். (யோவான் 16:2).

"என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே அவருடைய விசுவாசிகள் பகைக்கப்படுகிறார்கள். அந்தப் பகை வளர்ந்து, இப்போது உச்ச நிலையை எட்டியிருக்கிறது. (மத் 24:9-22; எரே 30:6-7) புறஜாதியார் எழும்பி, தங்களை உயர்த்தி, தேவனுக்கு எதிராகவும், தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராகவும் கலகம் பண்ணுவார்கள். தங்களுடைய தேவனே உயர்ந்தவர். தங்களுடைய மார்க்கமே உயர்ந்தது என்று வைராக்கியம் பேசுவார்கள்.

"உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது" - எருசலேம் அழியும்போது இயேசு கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுவோர் எவரும் அழிவதில்லை. (மத் 10:30)

"உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" - விசுவாசிகளுக்கு ஆவியின் கனியாகிய நீடிய பொறுமை இருக்க வேண்டும். தேவனோடு நம்முடைய ஆத்துமா சமாதானமாக ஜீவிக்க வேண்டும். (மத் 10:39; மத் 16:25; மாற்கு 8:35; லூக்கா 17:33).

"எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்" - ரோமாபுரியின் சேனைகள் எருசலேம் பட்டணத்தைச் சுற்றி, பதிவிருந்தார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் மற்ற ஜீவாதாரப் பொருட்கள் எதுவும் எருசலேமிற்குள் செல்லாதவாறு தடைபண்ணினார்கள். இது லூக்கா 19:43 ஆவது வசனத்தின் நிறைவேற்றம். எருசலேமின் அழிவு சமீபமாக இருந்தது. (லூக்கா 21:20-24) லூக்கா 21 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து வலியுறுத்திக் கூறும் காரியம் இதுதான். லூக்கா 21:7 ஆவது வசனத்தில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விக்கு இயேசு கூறிய பதிலை இந்த அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். மத் 24, மாற்கு 13 ஆகிய அதிகாரங்களில் இந்தக் கேள்விக்குப் பதில் கூறப்படவில்லை.

21 அதிகாரம்

"நீதியைச் சரிக்கட்டும் நாட்கள்" - "விசாரிப்பின் நாட்கள் வரும். நீதிச் சரிக்கட்டும் நாட்கள் வரும்" என்று ஓசி 9:7 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. மேசியா சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் அருளுவதற்காக கிருபையில் வரும் நாட்களை இது குறிக்காது. (லூக்கா 19:41-44) அவர்கள் சமாதானத்தோடு வரும் நாட்களை ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுவதற்காக வரும் நாட்கள் தேவைப்படாது. (மத் 23:37-39; லூக்கா 13:33-35).

"எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்" - எருசலேமின் அழிவைக் குறித்து, எழுதப்பட்டிருக்கிற எல்லாக் காரியங்களும் நிறைவேறும். மற்ற தீர்க்கதரிசனங்களின் பூரண நிறைவேற்றத்தைப் பற்றி இந்த வசனம் கூறவில்லை.

"அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ" - புறஜாதி ஜனங்கள் யுத்தம் பண்ணும்போது கர்ப்பவதிகளையும், அவர்களுடைய பிள்ளைகளையும், தாய்மார்களையும் அழித்துப் போடுவார்கள். இது மத் 24:15-22 ஆகிய வசனங்களைப் போல் உள்ளது. ஆனால் இது தனிப்பட்ட நிகழ்ச்சி. கிபி. 70-இல் இது நிறைவேறிற்று. மத்தேயு கூறியிருக்கிற காரியங்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக உபத்திரவக்காலத்தில் நிறைவேறும். அப்போது எருசலேம் புறஜாதியாரிடமிருந்து விடுவிக்கப்படும். அந்தக் காலத்திலும், அந்திக் கிறிஸ்துவின் சேனைகள் எருசலேமைச் சுற்றி வலைப்பார்கள். எருசலேமின் பாதிப்பட்டணத்தைப் பிடித்துவிடுவார்கள். (சக 14:1-5) இந்தக் காலத்திலும், கர்ப்பவதிகளுக்கும், தாய்மார்களுக்கும், பிள்ளைகளுக்கும் மிகுந்த இடுக்கண் உண்டாகும். சக 14 ஆவது அதிகாரத்தில் ஸ்திரீகள் சீரழிக்கப்படுவார்கள் என்று வாசிக்கிறோம்.

"மிகுந்த இடுக்கண்" - ரோமாபுரியார் யூதர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்தார்கள். அவர்களைச் சிலுவைகளில் அறைந்து, கொல்ல வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் போதுமான அளவு சிலுவைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த சிலுவைகளை வைத்து, எருசலேமின் அலங்கங்களில் ரோமாபுரியார் யூதர்களைச் சிலுவைகளில் அறைந்தார்கள். திரளான ஜனங்கள் பஞ்சத்தினால் எருசலேம் பட்டணத்திற்குள்ளேயே மாண்டுபோனார்கள். எருசலேம் பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள பள்ளத்தாக்குகளில் யூதர்களுடைய பிணங்கள் குவியலாக நிறைந்தது. ரோமாபுரியாரின் படைத்தளபதி தீத்து, இந்தப் படுகொலைக்குத் தான் காரணமல்ல என்று தன் கரங்களைத் தன்னுடைய தெய்வத்திற்கு முன்பாகக் கழுவியதாக வரலாறு கூறுகிறது. மாண்டுபோன ஆறு இலட்சம் யூதர்களுடைய சடலங்களை ரோமர்கள் எருசலேம் பட்டணத்திற்கு வெளியே எண்ணி எறிந்தார்கள். எருசலேமில் பதினொரு இலட்சம் யூதர்கள் மடிந்தார்கள். 97 ஆயிரம் யூதர்களைக் குறைந்தவிலைக்கு அடிமைகளாக விற்றார்கள். 40 ஆயிரம் யூதர்களை விலைக்கு வாங்குவதற்கு ஆளில்லாமல் போனதினால் அவர்களை விடுதலை பண்ணிவிட்டார்கள். இதுதவிர, 347,490 யூதர்கள் மற்ற வழிகளில் அழிந்தார்கள். இதுவே மிகுந்த இடுக்கண் என்று வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும்" - எருசலேமின் ஒரு பகுதி இன்னும் புறஜாதியாரின் கைகளிலேயே இருக்கும். ஒரு குறுகிய காலத்திற்கு மட்டும், அது விடுவிக்கப்பட்டு, யூதருடைய தலைநகரமாக இருக்கும். தானியேலின் 70 ஆவது வாரத்தின் மையப்பகுதி வரைக்கும் அவ்வாறு இருக்கும். அதன்பின்பு, அந்திக் கிறிஸ்து வருகிறான். அவன் இஸ்ரவேலோடு செய்து கொண்ட ஏழு வருஷ உடன்படிக்கையை முறித்து, பாலஸ்தீன தேசத்திற்குள் வருகிறான்.

அந்திக் கிறிஸ்து எருசலேமைக் கைப்பற்றுவான். யூதருடைய வருங்கால தேவாலயத்தையும் கைப்பற்றுவான். அதைத் தனக்கு தலைநகரமாக்கி, அதில் மிருகங்களை ஆராதனை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துவான். (தானி 9:27; தானி 11:4-45; தானி 12:7; மத் 24:15-21; 2தெச 2:1-12; வெளி 13; வெளி 14:9-11; வெளி 15:2-4; வெளி 20:4-6)

21 அதிகாரம்

எருசலேம் புறஜாதியாரின் கைகளில் 42 மாதங்களுக்கு இருக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எருசலேம் விடுவிக்கப்படும். (வெளி 11:1-3; வெளி 12:6,14; வெளி 13:5; வெளி 19:11-21; செப் 14; 2தெச 2:8-12) இத்துடன் புறஜாதியாரின் காலம். முடிவடைகிறது.

புறஜாதியாரின் காலம் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே அடிமையாக இருந்த காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. அதன்பின்பு, அசீரியர்கள், பாபிலோனியர்கள் ஆகியோரின் கரங்களில் யூதர்கள் துன்பங்களை அனுபவித்தார்கள். வெளி 17:8-17 ஆகிய வசனங்கள் எட்டு உலக ராஜ்ஜியங்கள் புறஜாதியாரின் காலத்தில் இஸ்ரவேலை ஒடுக்கும் என்று கூறுகிறது.

(5) இக்காலத்தின் முடிவு - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - புறஜாதியாருடைய காலங்களின் முடிவு - (யோவேல் 3; மத் 24:27; 25:31; மாற்கு 13:24; ரோமர் 11:25; 2தெச 1:7; 2:8; யூதா 14; வெளி 1:7; 19:11; சக 14)

லூக்கா 21:25 சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்

லூக்கா 21:26 வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர் பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்.

லூக்கா 21:27 அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.

லூக்கா 21:28 இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார்.

"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்" - இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகைக்கு அடையாளமாக இருக்கும் காரியங்களுக்கு மறுபடியும் வருகிறார். (லூக்கா 21:8-11). இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது எட்டு அடையாளங்கள் உண்டாகும் என்று லூக்கா 21:25-28 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. கிபி. 70-இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது, இந்த வசனங்கள் நிறைவேறவில்லை. தேவாலயத்தைப் பற்றி இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனம் கூறி முடித்தபின்பு, அவர் தேவாலயத்தை விட்டு ஒலிவமலைக்குப் போகும்போது இந்த வசனங்களை மேலும் விரிவாகக் கூறுகிறார். (மத் 24-25, மாற்கு 13)

"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்" - (மத் 24:29-31; மாற்கு 13:24-26)

"அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்" - லூக்கா 21:25-26 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற அடையாளங்கள் நடைபெறும் போதும் மத் 24:15-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உபத்திரவக்காலத்திற்குப் பின்பும், இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு தமது ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார். (மத் 24:29-31; மத் 25:31-46; சக 14; வெளி 19-20).

"இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது" - லூக்கா 21:8-11,25-26 ஆகிய வசனங்களிலுள்ள அடையாளங்கள் சம்பவிக்கத் துவங்கும்போது.

"நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" - அண்ணாந்து பார்த்து, கர்த்தரை எதிர்பாருங்கள். (லூக்கா 13:11; யோவான் 8:7,10).

21 அதிகாரம்

"உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால்" - சபை எடுத்துக் கொள்ளப்படுவதை இந்த வாக்கியம் குறிக்காது. இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு இரண்டாம் முறையாக வரும்போது அவர் இஸ்ரவேலை மீட்பார். (மத் 24:29-31; ரோமர் 11:25-29; ஏசா 11:10-12; ஏசா 66:7-8; சக 14).

(6) அத்தி மரத்தைப் பற்றிய உவமை - (மத் 24:32; மாற்கு 13:28)

லூக்கா 21:29 அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்: அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள்.

லூக்கா 21:30 அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்.

லூக்கா 21:31 அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.

உவமை எண் - 43

"அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்.........." (லூக்கா 21:29-31) தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று என்பதை இந்த உவமை விளக்குகிறது.

(7) அடையாளங்களெல்லாம் ஒரே சந்ததியில் நிறைவேறும் - (மத் 24-34; மாற்கு 13:30)

லூக்கா 21:32 இவையெல்லாம் சம்பவிக்கும்முன் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 21:33 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.

"இவையெல்லாம் சம்பவிக்கும்முன் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது" - (மத் 24:34)

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" - (மத் 24:35)

(8) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த எச்சரிப்புக்கள்

லூக்கா 21:34 உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையா நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

லூக்கா 21:35 பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும்.

"எச்சரிக்கையாயிருங்கள்" - (மத் 6:1, மத் 11:29)

"நீங்கள்" - சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு உபத்திரவக்காலத்தில் ஜீவிக்கும் ஜனங்கள். (மத் 24:15-22; வெளி 6-19)

பாரமடை (overcharged) - βαρύνω - barynoo - 925

வினைச்சொல் - பாரமடை (weighed down) - இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. லூக்கா 9:32; 2கொரி 5:4 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தையோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

பெருந்திண்டி (surfeiting) - κραιπάλη - kraipalee - 2897

21 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - பெருந்திண்டி, பாரமடைதல் - அதிகமாக சாப்பிட்ட பிறகு அல்லது குடித்து வெறித்த பிறகு வாந்தி பண்ணும் நிலைமை.

வெறி (**drunkenness**) - **μέθη** - **methee** - 3178

பெண்பால் பெயர்ச்சொல் - வெறி (**intoxication**) - இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ரோமர் 13:13; கலா 5:21; நீதி 20:1; ஏசா 28:7; எசே 23:32; எசே 39:19 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கும் வார்த்தையோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்

"லவுகீக கவலைகள்" (**cares of this life**) - (மத் 6:25-33) பெருந்திண்டியும், வெறியும் வருங்காலத்தில் அந்த மனுஷனுக்கு நோய்களையும், சரீரத்தில் உபத்திரவங்களையும் உண்டாக்கும். அவன் ஜெபத்தோடும், சுயகட்டுப்பாடோடும் இருந்தால் கவலைப்படாமல் இருக்கலாம். தேவையில்லாத பிரச்சனைகளைத் தவிர்க்கலாம்.

"அந்த நாள் வரும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள். (மத் 24:43-51; மத் 25:1-13; லூக்கா 12:35-48; லூக்கா 13:24-30).

நினையாத (**unawares**) - **αἰφνίδιος** - **aiphnidios** - 160

பெயரடை - நினையாத, சடிதியாய் (**suddenly**) - இந்த வசனத்திலும், 1தெச 5:3 ஆகிய வசனத்திலும் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

(9) இரண்டாம் வருகைக்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்படும் -

(யோவான் 14:1; 1தெச 4:16)

லூக்கா 21:36 ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக் கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப் படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்.

"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" - சபை எடுத்துக் கொள்ளப்படுவதை இந்த வாக்கியம் கூறுகிறது. லூக்கா 21:25-28 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பயங்கரமான நிகழ்ச்சிகளுக்குத் தப்பிக்கிறவர்கள். அவர்கள் மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படவேண்டும். எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருந்தால் மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவார்கள். (யோவான் 14:1-3; 1தெச 4:13-18)

(10) இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகிறார்

லூக்கா 21:37 அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே உபதேசம்பண்ணிக் கொண்டிருந்து, இராக்காலங்களில் வெளியிலே போய், ஒலிவமலை என்னப்பட்ட மலையிலே தங்கிவந்தார்.

லூக்கா 21:38 ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படி அதிகாலமே தேவாலயத்தில் அவரிடத்திற்கு வருவார்கள்.

"அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே உபதேசம்பண்ணிக்கொண்டிருந்து, இராக் காலங்களில் வெளியிலே போய், ஒலிவமலை என்னப்பட்ட மலையிலே தங்கிவந்தார்" - இயேசு கிறிஸ்து தமது உலக ஊழியத்தில் கடைசி ஆறு நாட்களில் செய்த காரியங்கள் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

21 அதிகாரம்

"மலையில் தங்கிவந்தார்" - இது வசந்த காலம். பனிகாலமல்ல. வசந்தகாலத்தில் ஜனங்கள் வீட்டிற்கு வெளியிலும், வீட்டின் கூரைமீதும், இரவில் படுத்துத் தூங்குவார்கள். இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் செய்ததுபோலவே பல இரவு வேளைகளில் அவர் வெளியே தங்கியிருந்திருக்கிறார்.

22 அதிகாரம்

148. இயேசுவைக் கொல்வதற்கு சதியாலோசனை - (மத் 26:3; மாற்கு 14:1)

லூக்கா 22:1 பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகை சமீபமாயிற்று.

லூக்கா 22:2 அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச்செய்யலாமென்று வகைதேடினார்கள்.

"பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகை" - நிசான் மாதத்தில் இது ஏழு நாட்கள் நடைபெறும். (லேவி 23:5-8, மத் 26:17-19; மாற்கு 14:12-16)

"ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச்செய்யலாமென்று வகைதேடினார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்கு எதிராகத் திரளான ஜனங்களைத் தூண்டி விடுவதற்குப் பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் முயற்சி பண்ணினார்கள். அந்தத் திட்டம் தோல்வியடைந்தால் இயேசு கிறிஸ்துவை ஒரு இரகசியமான இடத்திற்குக் கடத்திச் சென்று, அங்கு அவரைக் கொல்ல வேண்டுமென்பது அவர்களுடைய திட்டம். இந்த வசனத்தில் "கொலைசெய்தல்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்கச் சொல் "அனைரீயோ" **anaireoo** என்பதாகும். இதற்கு ஒருவரை தூக்கிச்சென்று கொல்லுதல் அல்லது கடத்திச் சென்று கொல்லுதல் என்று பொருள்.

கொலைசெய் (kill) - ἀναιρέω - **anaireoo** - 337

வினைச்சொல் - கொலைசெய், மடிந்து போகவை, கொன்று போடு, நீக்கிப்போடு

இவர்களுக்கு உதவி புரிவதற்கு யூதாஸ்காரியோத்து இன்னும் இவர்களிடத்தில் வரவில்லை.

149. இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (மத் 26:14; மாற்கு 14:10)

லூக்கா 22:3 அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்.

லூக்கா 22:4 அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத் தலைவர்களிடத்திலும்போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான்.

லூக்கா 22:5 அவர்கள் சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்கொடுக்க உடன்பட்டார்கள்.

லூக்கா 22:6 அதற்கு அவன் சம்மதித்து, ஜனக்கூட்டமில்லாத வேளையில் அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி சமயந்தேடினான்.

"யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்" - யூதாசிற்குள் சாத்தானுடைய சிந்தை வந்தது. சாத்தான் அவனை ஆளுகை செய்தான். சாத்தான் சரீரப் பிரகாரமாக யூதாசிற்குள் புகவில்லை. சாத்தானுடைய சிந்தை யூதாசிற்குள் புகுந்தது. சரீரப் பிரகாரமாக ஒரு நபர் இன்னொரு நபருக்குள் புகுவதை "கூடுவிட்டுக் கூடுபாய்தல்" என்கிறார்கள். இதற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

பவுலின் இருதயத்தில் கொரிந்தியரும், பிலிப்பியரும் இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. (2கொரி 7:3; பிலி 1:7); இதுபோலவே தேவன் கிறிஸ்துவிடத்திலும் (2கொரி 5:19) கிறிஸ்து தேவனிடத்திலும் (யோவான் 14:10-11) இருக்கிறார்கள். தேவனும் கிறிஸ்துவும் ஒருவருக்குள் ஒருவர் இருக்கிறார்கள். (யோவான் 14:10-11);

மனுஷர் பிதாவிடத்திலும், குமாரனிடத்திலும் இருக்கிறார்கள். (1யோவான் 2:24) மனுஷர் கிறிஸ்துவில் இருக்கிறார்கள். (2கொரி 5:17) மனுஷரும், ஆவியானவரும் ஒருவருக்குள் ஒருவர் இருக்கிறார்கள். (ரோமர் 8:9) கிறிஸ்து மனுஷருக்குள் இருக்கிறார்.

22 அதிகாரம்

(கொலோ 1:27; ரோமர் 8:10) மனுஷரும், கிறிஸ்துவும் ஒருவருக்குள் ஒருவர் இருக்கிறார்கள். (யோவான் 14:20) எல்லா சிருஷ்டிகளும் தேவனுக்குள் இருக்கின்றன. (அப் 17:28) சாத்தான் மனுஷருக்குள் புகுகிறான். (லூக்கா 22:3; யோவான் 13:27)

மேலே கூறப்பட்டிருக்கும் வாக்கியங்கள் ஒருவருக்கொருவர் சிந்தையிலும், நோக்கத்திலும், செயலிலும் இணைந்திருப்பதைக் குறிக்கும். சரீரப் பிரகாரமாக ஒருவருக்குள் ஒருவர் புகுவதில்லை. கணவனும், மனைவியும் ஒரே சரீரமாக இருக்கிறார்கள் என்றால் அவர்கள் இருவரும் ஒரே மனதுடனும், ஒரே நோக்கத்துடனும், ஒரே சிந்தையுடனும் இருக்கிறார்கள் என்று பொருள்.

யூதாசிற்குள் சாத்தான் புகுந்தான் என்பது யூதாஸ் சாத்தானுடைய சோதனைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து இயேசுவைக் காட்டிக் கொடுக்க தீர்மானம் பண்ணினான் என்று பொருள். யூதாசின் எண்ணமும், செயலும் சாத்தானுடையதுபோலவே ஆயிற்று.

நாம் தேவனுடைய சிந்தை உடையவர்களாக இருக்க வேண்டும். தேவன் நம்மை ஆளுகை செய்ய வேண்டும். சாத்தானுடைய சிந்தை நமக்குள் வருவதற்கும் சாத்தான் நம்மை ஆளுகை செய்வதற்கும் நாம் நம்மை ஒப்புக் கொடுக்கக்கூடாது. (1கொரி 6:17)

“சேனைத்தலைவர்கள்” (captains) - தேவாலயத்துச் சேவகர்களுக்கு அதிகாரிகள்.

“அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்” - பிரதான ஆசாரியரும், பரிசேயரும் இயேசுவைக் கொலை செய்வதற்குச் சதித்திட்டம் தீட்டுகிறார்கள். யூதாஸ்காரியோத்து, அவர்களிடத்தில் வந்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் விதத்தைப் பற்றி ஆலோசனை கூறியபோது அவர்கள் சந்தோஷம் அடைந்தார்கள். இயேசு கிறிஸ்துவோடு எப்போதும் திரளான ஜனங்கள் கூடியிருப்பார்கள். அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும், அவரால் சுகம்பெறுவதற்கும், ஏராளமான ஜனங்கள் கூடி வருவார்கள். (லூக்கா 22:6) ஜனக்கூட்டத்தார் இல்லாமல் இயேசு எப்பொழுது எங்கு தனிமையாக இருப்பார் என்பது அவருடைய சீஷர்களுக்கு மட்டுமே தெரியும். அது யூதாஸ்காரியோத்திற்கும் தெரிந்திருந்தது. ஜனக்கூட்டம் இல்லாத இடத்தில் இயேசுவைக் கைதுபண்ணினால் கலகம் வராது என்று நினைத்தார்கள்.

150. பஸ்காவின் ஆயத்தம் - (மத் 26:17; மாற்கு 14:12)

லூக்கா 22:7 பஸ்காவைப் பலியிட வேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தது.

லூக்கா 22:8 அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம் பண்ணுங்கள் என்றார்.

லூக்கா 22:9 அதற்கு அவர்கள்: நாங்கள் அதை எங்கே ஆயத்தம் பண்ணும்படி சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.

லூக்கா 22:10 அதற்கு அவர்: நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது, தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்; நீங்கள் அவனுக்குப் பின்சென்று அவன் போகும் வீட்டிற்குள் நீங்களும் போய்,

லூக்கா 22:11 அந்த வீட்டெஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள்.

லூக்கா 22:12 அவன் கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.

22 அதிகாரம்

லூக்கா 22:13 அவர்கள் போய், தங்களிடத்தில் அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

"புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள்" - பஸ்கா பண்டிகைக்கு முந்திய நாள். அது ஆயத்தநாள் என்று அழைக்கப்பட்டது. மாலையில் சூரியன் அஸ்தமனம் ஆவதிலிருந்து மறுநாள் மாலையில் சூரியன் அஸ்தமனமாவது வரையிலும் ஒரு நாள் என்று கணக்கிடப்படுகிறத. அந்த நாளில் இயேசு கிறிஸ்துவின் கடைசி இராப்போஜனம், அவர் காட்டிக்கொடுக்கப் படுவது, கெத்செமனே தோட்டத்து அனுபவம், இயேசு கிறிஸ்து கைதுபண்ணப்படுதல், விசாரிக்கப்படுதல், சிலுவையில் அறையப்படுதல், அடக்கம் பண்ணப்படுதல் ஆகிய காரியங்கள் நடைபெற்றன. (மத் 26:14-27:66; மாற்கு 14:10-15:47; லூக்கா 22:1-23:56; யோவான் 13:1-19:42)

தீர்க்கதரிசன எண் - 45

"நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது, தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்............" (லூக்கா 22:10-12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன்" - ஆண்கள் பொதுவாகத் தண்ணீர்க் குடம் சுமப்பதில்லை. பெண்களே குடத்தில் தண்ணீர் சுமந்து வருவார்கள். ஆண்கள் துருத்திகளில் தண்ணீரை நிரப்பி, அவற்றைக் கழுதைகளில் ஏற்றி வருவார்கள்.

வீட்டெஜமான் (goodman) - οἰκοδεσπότης - oikodespotees - 3617

ஆண்பால் பெயர்ச்சொல் - வீட்டெஜமான் (லூக்கா 9:38)

"நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே" - பஸ்காவை எல்லோரும் புசிப்பதற்கு ஒரு நாளுக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்து பஸ்காவைப் புசிக்கிறார். (லூக்கா 22:13-16)

"மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறை" - (மாற்கு 14:15, அப் 1:13; அப் 2:1)

151. கடைசி பஸ்கா

(1) கர்த்தருடைய பந்தி - (மத் 26:26; மாற்கு 14:22; யோவான் 13)

லூக்கா 22:14 வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்.

லூக்கா 22:15 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்.

லூக்கா 22:16 தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

லூக்கா 22:17 அவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்.

லூக்கா 22:18 தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 22:19 பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

22 அதிகாரம்

லூக்கா 22:20
போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்.

"வேளைவந்தபோது" - பஸ்கா ஆயத்தமாக இருந்தபோது. (லேவி 23:32).

பந்தியிரு (**sat down**) - **ἀναπίπτω** - **anapiptoo** - 377

வினைச்சொல் - சாய்ந்து அமரு, பந்தியிரு, உட்காரு (**recline**) (யோவான் 13:25).

"அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்" - யூதாஸ்காரியோத்து இன்னும் இயேசு கிறிஸ்துவோடுகூட இருக்கிறான்.

தீர்க்கதரிசன எண் - 46

"நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்........" (லூக்கா 22:15-22) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 22:16,18 ஆகிய வசனங்கள் நிறைவேறவில்லை. லூக்கா 22:15,17,19-22 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன.

"தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லை" - நித்திய ராஜ்ஜியத்தில் பஸ்கா ஆசரிக்கப்படும். (லூக்கா 22:16,18).

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

கர்த்தருடைய பந்தி

1. பஸ்காபோஜனத்தின்போது இது ஆரம்பிக்கப்பட்டது. (லூக்கா 22:14-20).
2. இது கர்த்தருடைய பந்தி (**the Lord's Supper**) (1கொரி 11:20), இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தோடும், (**the communion of the blood of Christ**) கிறிஸ்துவின் சரீரத்தோடும் உடன்படிக்கை. (**the communion of the body of Christ**) (1கொரி 10:16).
3. கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்படும் பொருட்கள். திராட்சைரசம், (**the fruit of the vine, grape juice**) (மாற்கு 14:25; லூக்கா 22:18) புளிப்பில்லா அப்பம் "**unleavened bread**" (மத் 26:17,26; மாற்கு 14:12,22; லூக்கா 22:7,19).
4. அப்பம் பிட்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் பிட்கப்பட்ட சரீரத்திற்கு அடையாளம். நமது சரீர சுகமாதலுக்காக அவர் அடிக்கப்பட்டார். (மத் 26:26; லூக்கா 22:19; 1கொரி 10:16; 1கொரி 11:24-29; ஏசா 52:14; ஏசா 53:4-5; 1பேதுரு 2:24).
5. திராட்சைரசம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளம். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காக அவர் இரத்தம் சிந்தினார். (மத் 26:28; மாற்கு 14:24; லூக்கா 22:20; 1கொரி 10:16; 1கொரி 11:25-29; எபே 1:7; கொலோ 1:14,20).
6. ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும். (மத் 26:26-27; மாற்கு 14:22; லூக்கா 22:17; 1கொரி 10:16-17; 1கொரி 11:28).
7. கர்த்தருடைய பந்திக்காக ஸ்தோத்திரம் பண்ணி அதை ஆசீர்வதிக்க வேண்டும். (மத் 26:26-27; மாற்கு 14:22-23; லூக்கா 22:17,19; 1கொரி 10:16; 1கொரி 11:24).
8. இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும் வரையிலும் அவருடைய மரணத்தை நினைவுகூரும் விதமாக நாம் இதில் பங்குபெற வேண்டும். (லூக்கா 22:19; 1கொரி 11:24-26).

22 அதிகாரம்

9. கர்த்தருடைய பந்தியில் அனுதினமும் பங்குபெறலாம். (அப் 2:42,46), வாரம் ஒருமுறையோ (அப் 20:7; 1கொரி 10:17) அல்லது அடிக்கடியோ (1கொரி 11:26) நாம் பங்குபெறலாம். ஆதித்திருச்சபையார் கர்த்தருடைய பந்தியில் அனுதினமும் பங்கு பெற்றார்கள். அதன்பின்பு அவர்கள் வாரம் ஒருமுறை கூடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அப்போது ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றார்கள். (அப் 20:7; 1கொரி 16:2)

10. தேவனுடைய ராஜ்ஜியத்தில் கிறிஸ்துவும், எல்லா விசுவாசிகளும் கர்த்தருடைய பந்தியில் நித்திய காலமாகப் பங்கு பெறுவார்கள். (மத் 26:29; மாற்கு 14:25; லூக்கா 22:18,30)

11. இது ஒரு சபை ஒழுங்கு. இதனால் விசுவாசிகள் ஒன்றுசேர வேண்டும். விசுவாசிகளிடையே அன்பு பெருக வேண்டும். பிரிவினை வந்துவிடக்கூடாது. (1கொரி 10:16-17; 1கொரி 11:16-30).

12. கர்த்தருடைய பந்தியில் விசுவாசத்தோடு பங்குபெற வேண்டும். பங்கு பெறுகிறவர் தன்னைத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும். அபாத்திரவானாகப் பங்குபெறுகிறவன் ஆக்கினையையும், வியாதியையும் சிலர் மரணத்தையும் அடைவார்கள். (1கொரி 11:17-30)

திராட்சைப்பழம் (fruit of the vine) - γένημα - geneema - 1081

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- திராட்சைப்பழம், விளைச்சல் - திராட்சைப்பழரசம் ஊறவைக்கப்பட்ட மது அல்ல. பழங்கள் செடியில் கொத்தாக இருக்கும்போது அதை ஆங்கிலத்தில் **wine** என்று அழைக்கிறார்கள். (ஏசா 65:8)

குடிவெறி

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் குடித்து வெறிப்பது கடிந்து கொள்ளப் பட்டிருக்கிறது. (உபா 21:20-21; உபா 29:19-21; 1சாமு 1:14; நீதி 23:20,29-35; நீதி 31:4-6; ஏசா 5:11-22; ஏசா 28:1-8; ஆமோ 6:1-6; ஆப 2:15-17; லூக்கா 21:34; ரோமர் 13:13; 1கொரி 5:11; 1கொரி 6:9-10; கலா 5:19-21; எபே 5:18; 1தெச 5:7-8) குடித்து வெறிப்பதினால் ஏற்படும் விளைவுகள். (உபா 21:20-21; சங் 69:12; நீதி 20:1; நீதி 23:20-21,29-35; நீதி 31:4-7; ஏசா 19:14; எரே 25:27; ஓசி 4:11; யோவே 3:3; ஆமோ 2:6-12; மீகா 2:11; ஆப 2:15-17; மத் 24:49)

குடித்து வெறித்திருந்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. நோவா (ஆதி 9:21-27)
2. லோத்து (ஆதி 19:33-38)
3. ஆசாரியர்கள் (லேவி 10:1-9)
4. நாபால் (1சாமு 25:36)
5. உரியா (2சாமு 11:13)
6. ஏலா (1இராஜா 16:9)
7. முப்பத்தி மூன்று இராஜாக்கள் (1இராஜா 20:16)
8. அகாஸ்வேரு (எஸ் 1:10-11)
9. பெல்ஷாத்சார் (தானி 5:1-6)
10. இஸ்ரவேலரும், சபையாரும் (ஏசா 5:11; ஏசா 28:1; 1கொரி 11:21)

(2) தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை இயேசு முன் குறித்துக் கூறுகிறார் - (மத் 26:20; மாற்கு 14:17; யோவான் 13:18)

லூக்கா 22:21 பின்பு: இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனே கூடப் பந்தியிலிருக்கிறது.

22 அதிகாரம்

லூக்கா 22:22 தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார், ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார்.

லூக்கா 22:23 அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்.

"என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனே கூடப் பந்தியிலிருக்கிறது" - யூதாஸ்காரியோத்தும் கர்த்தருடைய பந்தியில் போஜனம் பண்ணினான். அவனுடைய கால்களும் கழுவப்பட்டிருந்தது. (மத் 26:20-25; மாற்கு 14:17; லூக்கா 22:21-23; யோவான் 13:2-19)

(3) தங்களில் எவன் பெரியவனாய் இருப்பான் என்னும் வாக்குவாதம் - (மத் 20:24; மாற்கு 10:41)

லூக்கா 22:24 அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று.

லூக்கா 22:25 அவர் அவர்களை நோக்கி: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள். அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள்

லூக்கா 22:26 உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்.

லூக்கா 22:27 பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக் காரனைப்போல் இருக்கிறேன்.

"தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று" - வாக்குவாதம் பண்ணுவதற்கு இது நேரமல்ல. அவர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவர் அனுபவிக்கபோகும் பாடுகளையும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரம். இயேசு கிறிஸ்து மரித்துவிட்டால், அவருடைய இடத்திற்குத் தங்களுக்குள் யார் வருவான் என்று ஒருவேளை அவர்கள் வாக்குவாதம் பண்ணியிருக்கலாம். இது சாத்தானுடைய தந்திரம். சாத்தான் அந்தக் காலத்தில் சீஷர்களைக் குழப்பியது போலவே, இன்றும் ஊழியக்காரர்களைக் குழப்புகிறான். அதிகாரத்திற்காகவும், பதவிக்காகவும், அந்தஸ்திற்காகவும் கர்த்தருடைய பிள்ளைகள் வாக்குவாதம் பண்ணுகிறார்கள்.

"சிறியவன்" (younger) - கேட்கிறவன், கற்றுக் கொள்கிறவன், ஊழியக்காரன்.

"நான் உங்கள் நடுவிலே பணிவிடைக் காரனைப்போல் இருக்கிறேன்" - மனுஷருடைய கோட்பாட்டின் பிரகாரம் பணிவிடை செய்கிறவன் சிறியவன். பந்தி இருக்கிறவன் பெரியவன். ஆனால் இயேசு கிறிஸ்து பணிவிடைக்காரராக இருக்கிறார். அதுவே அவருக்கு மேன்மையாகத் தெரிகிறது. தேவன் கொடுக்க விரும்புகிறார். மனுஷன் பெற்றுக் கொள்ள விரும்புகிறான். மனுஷன் மற்றவர்களைத் தாழ்த்த விரும்புகிறான். ஆனால் கிறிஸ்துவோ தம்மையே தாழ்த்துகிறார். தேவனுடைய எண்ணத்தைப் புரிந்து கொள்ளாததினாலேயே லூசிபர் என்னும் சாத்தான் வீழ்ந்துபோனான். தன்னை உயர்த்தினான் கீழே விழுந்தான். (ஏசா14:12-14; எசே 28:11-17; 1தீமோ 3:6) ஆதாமும் தன்னை உயர்த்தினான் பாவத்தில் விழுந்தான். (ஆதி 3).

(4) இராஜ்ஜியத்தில் அப்போஸ்தலரின் வருங்கால ஸ்தலம் - (மத் 19:28)

லூக்கா 22:28 மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே.

லூக்கா 22:29 ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்.

22 அதிகாரம்

லூக்கா 22:30 நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின் மேல் உட்காருவீர்கள் என்றார்.

"எனக்கு நேரிட்ட சோதனைகள்" - இயேசு கிறிஸ்துவின் விசாரணைகள், அவமானங்கள், உபத்திரவங்கள், பாடுகள், அவருடைய ஜீவனுக்கு எதிரான சதியாலோசனைகள்.

தீர்க்கதரிசன எண் - 47

"என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்................" (லூக்கா 22:29-30) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது இந்த ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார். உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் எல்லோருக்குமே இந்த ராஜ்ஜியத்தில் ஒரு பங்கு இருக்கும். (தானி 7:18,27; 1கொரி 4:8; 1கொரி 6:2-3; ரோமர் 8:17; 2தீமோ 2:12; வெளி 5:10; வெளி 20:4-6).

"என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி" - (லூக்கா 14:15)

"இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இந்தப் பூமியில் உண்மையிலேயே நடக்கப் போகும் காரியம். சபையின்மீது ஆவிக்குரிய ஆளுகையை இந்த வசனம் குறிப்பிடவில்லை. உண்மையான இராஜ்ஜியத்தையே குறிப்பிடுகிறது. (லூக்கா 22:29)

132. பேதுரு தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 26:31; மாற்கு 14:27; யோவான் 13:36)

லூக்கா 22:31 பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான்.

லூக்கா 22:32 நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.

லூக்கா 22:33 அதற்கு அவன்: ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.

லூக்கா 22:34 அவர் அவனை நோக்கி: பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உத்தரவுகேள் **(desired)** - **ἐξαιτέω** - **exaiteoo** - 1809

வினைச்சொல் - உத்தரவுகேள், உத்தரவு, கேள் **(demand; to obtain by asking)**

யோபுவைச் சோதிக்க சாத்தான் தேவனிடம் அனுமதி கேட்டான். அவரும் அவனுக்கு அனுமதி கொடுத்தார். (யோபு 1:6; யோபு 2:1) இந்த இடத்தில் இயேசு கிறிஸ்து சீமோனுக்காக வேண்டிக் கொண்டதாக கூறுகிறார். "நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்" (லூக்கா 22:32) கோதுமையை சுளகினால் புடைப்பதற்கு முன்பாக கோதுமைக் கதிரின்மீது மிருகங்களை நடக்க விடுவார்கள். பேதுருவிற்கு இது கடினமான அனுபவமாக இருக்கும். காற்றில் புடைக்கும்போது பதரெல்லாம் பறந்துபோகும்.

22 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 48

"நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" (லூக்கா 22:32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. பேதுரு மனம் திருந்தி இரட்சிக்கப்பட்டவன். மூன்று வருஷங்களாக இயேசு கிறிஸ்துவோடு ஊழியம் செய்தவன். ஆனாலும் அவனுக்கும் சாத்தானுடைய சோதனை வருகிறது. சோதனையில் விழுந்தான். பலவீனனாக இருந்தான். பேதுரு கர்த்தருடைய கிருபையினால் மறுபடியும் எழுந்து நின்றான். அதிக பலமுள்ளவனானான். கர்த்தருக்காக வல்லமையாக ஊழியம் செய்தான்.

"ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன்" - பேதுருவினுடைய உள்ளத்தில் பெருமை இருந்தது. அந்தப் பெருமையே அவன் விழுவதற்குக் காரணமாயிற்று. (நீதி 16:18) நிற்கிறேன் என்று நினைக்கிற யாரும் விழுந்து விடாதவாறு மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும். (1கொரி 10:12-13)

தீர்க்கதரிசன எண் - 49

"இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய்" (லூக்கா 22:34) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

153. புதிய பொருட்களுக்கு அனுமதி - (மத் 10:9-10; லூக் 10:4)

லூக்கா 22:35 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நான் உங்களைப் பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது, ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள்.

லூக்கா 22:36 அதற்கு அவர்: இப்பொழுதோ பணப்பையும் சாமான்பையும் உடையவன் அவைகளை எடுத்துக் கொள்ளக்கடவன்; பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்.

லூக்கா 22:37 அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிற வாக்கியம் என்னிடத்தில் நிறைவேற வேண்டியதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னைப்பற்றிய காரியங்கள் முடிவு பெறுங்காலம் வந்திருக்கிறது என்றார்.

லூக்கா 22:38 அதற்கு அவர்கள்: ஆண்டவரே, இதோ, இங்கே இரண்டு பட்டயம் இருக்கிறது என்றார்கள். அவர்: போதும் என்றார்.

"இப்பொழுதோ பணப்பையும் சாமான்பையும் உடையவன் அவைகளை எடுத்துக் கொள்ளக்கடவன்" - இயேசு கிறிஸ்து இதற்கு முன்பாகப் பணப்பையைக் கொண்டுபோக வேண்டாம் என்று கூறினார். (மத் 10:9-10) ஆனால் அதை இப்பொழுது மாற்றிக் கூறுகிறார். இயேசு இனிமேல் அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பதற்கு அவர்களோடுகூட இருக்கமாட்டார். ஜனங்கள் சீஷர்களை ஏற்றுக் கொள்ளாமல் துன்புறுத்துவார்கள். ஆகையினால் அவர்கள் பிரசங்கம் பண்ணப்போகும்போது தகுந்த ஆயத்தத்தோடு போவது நல்லது என்று நினைத்து இயேசு இவ்வாறு கூறுகிறார்.

"பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்" - யூதேயாவைச் சுற்றிலும் கொடிய விலங்குகளும், திருடர்களும் இருந்தார்கள். அவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கே இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறினார். மிருகங்களிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காகப் பட்டயத்தைப் பயன்படுத்தலாம். மற்றவர்களைத் தாக்குவதற்குப் பயன்படுத்தக்கூடாது. சுவிசேஷத்தைப் பட்டயத்தின் மூலமாக அறிவிக்க முடியாது.

22 அதிகாரம்

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார்............ என்னைப்பற்றிய காரியங்கள் முடிவு பெறுங்காலம் வந்திருக்கிறது" (லூக்கா 22:37; ஏசா 53:12)

"போதும்" **(It is enough)** - இதுபோதும் என்று ஒருமையில் கூறினார். அவை போதும் **(they are enough)** என்று பன்மையில் கூறவில்லை. யூதாசோடோ, அவனோடு வரும் கூட்டத்தாரோடோ அவர்கள் சண்டையிடப் போவதில்லை. இயேசு கிறிஸ்துவின் வேளை வந்துவிட்டது. அவர் தம்மை ஒப்புக்கொடுக்கப் போகிறார்.

VI. கிறிஸ்துவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (மத் 26:36; மாற்கு 14:32; யோவான் 18:1)

லூக்கா 22:39 பின்பு அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார், அவருடைய சீஷரும் அவரோடே கூடப் போனார்கள்.

லூக்கா 22:40 அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் சோதனைக்குட் படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள் என்று சொல்லி,

லூக்கா 22:41 அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங்கால்படியிட்டு:

லூக்கா 22:42 பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.

லூக்கா 22:43 அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.

லூக்கா 22:44 அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.

லூக்கா 22:45 அவர் ஜெபம்பண்ணி முடித்து, எழுந்திருந்து, தம்முடைய சீஷரிடத்தில் வந்து, அவர்கள் துக்கத்தினாலே நித்திரை பண்ணுகிறதைக் கண்டு:

லூக்கா 22:46 நீங்கள் நித்திரை பண்ணு கிறதென்ன? சோதனைக்குட் படாதபடிக்கு எழுந்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்றார்.

"ஒலிவமலைக்குப் போனார், அவருடைய சீஷரும் அவரோடேகூடப் போனார்கள்" - யூதாஸ் இயேசுவோடு போகவில்லை. பதினொரு சீஷர்கள் மட்டுமே போனார்கள்.

"பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" - (மத் 20:22; மத் 26:39)

"வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" - இயேசு கிறிஸ்து மிகுந்த வியாகுலம் அடைந்தார். தேவதூதன் ஒருவன் அவரைப் பலப்படுத்தினான். (மத் 4:11) அவருடைய வியாகுலத்தையும், இரத்த வியர்வையையும் அவருடைய மானிட பலத்தினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சாத்தானும், அவனுடைய பிசாசுகளும் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் மரிக்க விடாதவாறு வதைக்கிறார்கள். தோட்டத்திலேயே அவரைக் கொன்றுபோட வேண்டுமென்று பிரச்சனையை எழுப்புகிறார்கள். (எபி 5:7)

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்க வேண்டும். இதற்காகவே அவர் இந்த உலகத்திற்கு வந்தார். மனுக்குலத்தின் இரட்சிப்பின் திட்டத்தில் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் முக்கிய பங்கு வகிக்கிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்காமல் வேறு ஏதாவது ஒரு வழியில் மரித்துப் போனால், அவருடைய சித்தம் நிறைவேறாது.

22 அதிகாரம்

ஆகையினால், சாத்தான் இயேசுவை வேறு ஏதாவது வழியில் கொல்வதற்கு முயற்சி பண்ணுகிறான். இயேசு கிறிஸ்து சாத்தானை ஜெயித்தார். மனுஷருடைய பாவங்களை மன்னிக்கும் கிரயமாக தமது திருஇரத்தத்தைக் கல்வாரி சிலுவையிலே சிந்துகிறார். (கொலோ 1:20; கொலோ 2:14-17; எபி 2:14-15)

"அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்" - வியாகுலப்படுதல் என்பதன் கிரேக்க வார்த்தை "அகோனியா" **(agonia)** என்பதாகும். இதற்கு போராடுதல், முரண்படுதல் **(struggle, conflict)** என்று பொருள். இந்த வார்த்தை "அகோன்" **(agon)** என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு கூடும் இடம் **(a place of assembly)** என்று பொருள். விளையாட்டு மைதானம், போட்டிகள் நடைபெறும் இடம், வெற்றி பெறவேண்டிய இடம், எல்லாத் தடைகளையும் வென்று, ஜெயம் பெறவேண்டிய இடம் என்று இதற்குப் பொருள் கூறலாம். விசுவாசிகள் சுவிசேஷ ஊழியம் செய்வது ஒரு போராட்டமான காரியம். பல பிரச்சனைகள் வரலாம். இருந்தாலும் முடிவில் கர்த்தர் நமக்கு ஜெயம் தருவார். (1தெச 2:2; பிலி 1:30; 1தீமோ 4:12; 2தீமோ 4:7) இயேசு கிறிஸ்து கெத்செமனே தோட்டத்தில் தமது ஜீவனுக்கும், மரணத்திற்கும் இடையே போராடிக் கொண்டிருக்கிறார். அது சாதாரண ஜெப அனுபவம் அல்ல. போராடும் அனுபவம். இதனால் அவருக்கு மிகுந்த வியாகுலம் உண்டாயிற்று.

வியாகுலம் (agony) - **ἀγωνία** - **agoonia** - 74

பெண்பால் பெயர்ச்சொல் - வியாகுலம், ஆர்வம்

விளையாட்டு மைதானம் (assembly) - **ἀγών** - **agoon** - 73

ஆண்பால் பெயர்ச்சொல்

(அ) விளையாட்டுப்போட்டி, ஓட்டம்

(ஆ) கிறிஸ்தவ வாழ்க்கையின் போராட்டம் பிலி. 1:30

(இ) ஆர்வத்தினால் ஏற்படும் மனப் போராட்டம் 2 கொலோ. 2:1

"அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" - இயேசு கிறிஸ்துவின் வியாகுலம் மிகவும் அதிகமாக இருந்தது. ஆகையினால் அவருடைய வியர்வைச் சுரப்பிகளில் இரத்தம் புகுந்து, அவருடைய சரீரத்திலிருந்து சிவப்பு நிறத்தில் இரத்தம் கலந்த வியர்வை வடிந்தது. மருத்துவ ரீதியாக இவ்வாறு நடைபெறும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

"நீங்கள் நித்திரைபண்ணுகிறதென்ன? சோதனைக்குட்படாதபடிக்கு எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" - இயேசு கிறிஸ்துவின் இந்த வார்த்தை மற்ற சுவிசேஷங்களில் வேறு விதமாக எழுதப்பட்டிருக்கிறது. நமக்குச் சோதனை வரலாம். நமது ஆவி பலமுள்ளதுதான். ஆனாலும் நமது சரீரமோ பலவீனமானது. ஆகையினால் நாம் விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும்.

2. இயேசுவை கொல்வதற்கு முயற்சி - யூதாஸ் காட்டிக்கொடுக்கிறான் - இயேசு காதை சொஸ்தப் படுத்துகிறார் - (மத் 26:47; மாற்கு 14:43; யோவான் 18:2)

லூக்கா 22:47 அவர் அப்படிப் பேசுகையில் ஜனங்கள் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான்.

லூக்கா 22:48 இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷ குமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார்.

லூக்கா 22:49 அவரைச் சூழநின்றவர்கள் நடக்கப் போகிறதைக் கண்டு: ஆண்டவரே, பட்டயத்தினாலே வெட்டுவோமா என்றார்கள்.

22 அதிகாரம்

லூக்கா 22:50 அந்தப்படியே அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்.

லூக்கா 22:51 அப்பொழுது இயேசு: இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத்தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்.

லூக்கா 22:52 பின்பு இயேசு தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத் தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி: ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டு வருகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டுவந்தீர்களே.

லூக்கா 22:53 நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனேகூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை; இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார்.

"அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்" - இது பேதுரு செய்த காரியம். (யோவான் 18:10)

"இம்மட்டில் நிறுத்துங்கள்" - இயேசு இவ்வாறு கூறி, அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார். லூக்கா சுவிசேஷத்தில் மட்டுமே இந்த சுகமாதலைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவைக் கைதுபண்ண வந்தவர்கள்

1. பிரதான ஆசாரியர் - தேவாலயத்துச் சேவையில் 24 வகுப்புகளுக்குத் தலைவர்கள்
2. சேனைத்தலைவர்கள் - தேவாலயத்தின் சேனைக்குத் தலைவர்கள்
3. மூப்பர்கள் - ஆலோசனைச் சங்கத்தின் மூப்பர்கள்
4. ரோமாபுரியின் போர்வீரர்கள்
5. திரளான ஜனங்கள்

எல்லா யூதர்களும் இயேசுவின் விரோதிகள் என்று கூறமுடியாது. நிக்கோதேமுவும், அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் இயேசுவின் சிநேகிதர்கள். (யோவான் 19:38-39).

"இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது" - அந்தகாரத்தின் வல்லமை இப்போது கிரியை செய்கிறது. இயேசு கிறிஸ்துவை ஆளுகை செய்யப் போகிறது. இந்த வேளைக்காகவே இயேசு கிறிஸ்து இதுவரையிலும் காத்திருக்கிறார்.

3. பேதுரு மறுதலிக்கிறான் - (மத் 26:69; மாற்கு 14:66; யோவான் 18:15, 25)

லூக்கா 22:54 அவர்கள் அவரைப் பிடித்த பின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள். பேதுருவும் தூரத்திலே பின்சென்றான்.

லூக்கா 22:55 அவர்கள் முற்றத்தின் நடுவிலே நெருப்பை மூட்டி, அதைச் சுற்றி உட்கார்ந்தபோது, பேதுருவும் அவர்கள் நடுவிலே உட்கார்ந்தான்.

லூக்கா 22:56 அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து: இவனும் அவனோடிருந்தான் என்றாள்.

லூக்கா 22:57 அதற்கு அவன்: ஸ்திரீயே, அவனை அறியேன் என்று மறுதலித்தான்.

லூக்கா 22:58 சற்றுநேரத்துக்குப்பின்பு வேறொருவன் அவனைக் கண்டு: நீயும் அவர்களில் ஒருவன் என்றான். அதற்குப் பேதுரு: மனுஷனே, நான் அல்ல என்றான்.

22 அதிகாரம்

லூக்கா 22:59 ஏறக்குறைய ஒருமணி நேரத்துக்குப்பின்பு வேறொருவன் அவனைப் பார்த்து: மெய்யாகவேஇவனும் அவனோடிருந் தான், இவன் கலிலேயன்தான் என்று சாதித்தான்.

லூக்கா 22:60 அதற்குப் பேதுரு: மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன் என்றான். அவன் இப்படிச் சொன்னவுடனே சேவல் கூவிற்று.

லூக்கா 22:61 அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து,

லூக்கா 22:62 வெளியேபோய், மனங்கசந்து அழுதான்.

"அவர்கள் அவரைப் பிடித்தபின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள். பேதுருவும் தூரத்திலே பின்சென்றான்" - (லூக்கா 22:54-62, மத் 26:57-75; மாற்கு 14:53-72)

"சேவல் கூவிற்று" - லூக்கா 22:34 ஆவது வசனம் நிறைவேறிற்று.

"கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார்" - இயேசு கிறிஸ்துவின் இந்தப் பார்வையை பேதுருவால் மறக்கவே முடியாது. அந்தப் பார்வையில் பேதுரு தன்னுடைய உணர்வுகளுக்குத் திரும்பி வருகிறான். தான் செய்த பாவங்களுக்கு மனம் வருந்துகிறான்.

"மனங்கசந்து அழுதான்" - (லூக்கா 19:41)

4. இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும் - (மத் 26:57; மாற்கு 14:53; யோவான் 18:12,19)

லூக்கா 22:63 இயேசுவைப் பிடித்துக் கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம் பண்ணி, அடித்து,

லூக்கா 22:64 அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து: உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டதுமன்றி,

லூக்கா 22:65 மற்றும் அநேக தூஷண வார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்.

லூக்கா 22:66 விடியற்காலமானபோது ஜனத்தின் மூப்பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூடிவந்து, தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டுவந்து நிறுத்தி:

லூக்கா 22:67 நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல் என்றார்கள். அதற்கு அவர்: நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள்.

லூக்கா 22:68 நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள், என்னை விடுதலை பண்ணவுமாட்டீர்கள்.

லூக்கா 22:69 இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார்.

லூக்கா 22:70 அதற்கு அவர்களெல்லாரும்: அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா என்று கேட்டார்கள். அதற்கு அவர்: நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான் என்றார்.

லூக்கா 22:71 அப்பொழுது அவர்கள்: இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே என்றார்கள்.

"இயேசுவைப் பிடித்துக்கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம் பண்ணி, அடித்தார்கள்" - அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து: உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டார்கள். மற்றும் அநேக தூஷணவார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள். இயேசு கிறிஸ்துவிடம் ஆவியின் வரம் உள்ளது.

22 அதிகாரம்

தம்மை அறைந்தது யாரென்று அவரால் நிச்சயமாகக் கூறமுடியும். இயேசு கிறிஸ்துவை அறைந்தவர்கள் சற்று நேரத்திற்கு முன்பாக அவர் ஒரு சேவகனின் காதைக் குணப்படுத்தினார். இதை அவர்கள் தங்கள் கண்களால் கண்டார்கள். இயேசு கிறிஸ்து தேவாலயத்திலும், மற்ற இடங்களிலும் வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கியதைத் தங்கள் கண்களால் பார்த்தவர்கள். இப்படிப்பட்டவர்கள் தான் இயேசு கிறிஸ்துவே தேவகுமாரன் என்று தெரிந்தும், அவரை உபத்திரவப்படுத்துகிறார்கள்.

'விடியற்காலமானபோது ஜனத்தின் மூப்பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூடிவந்து, தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள்" - இரவு முழுவதும் இயேசு கிறிஸ்துவை விசாரித்தார்கள். நடுஇரவிற்கு முன்பாகவே யூதர்களும், பிலாத்துவும் இயேசுவை விசாரித்தார்கள். (யோவான் 19:14) இயேசு கிறிஸ்துவை ஏற்கெனவே வாரினால் அடித்துவிட்டார்கள். (யோவான் 19:1) நடுஇரவிலிருந்து காலை வரையிலும் அவரைக் கொல்ல வேண்டும் என்னும் முயற்சியைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். விடியற்காலத்தில் இயேசு கிறிஸ்துவை யூதருடைய ஆலோசனைச் சங்கத்திற்கு அழைத்துக் கொண்டு வருகிறார்கள். தேவனுடைய குமாரனா, கிறிஸ்துவா என்று இயேசு கிறிஸ்துவிடம் கேள்வி கேட்கிறார்கள். இயேசு கிறிஸ்து கூறும் பதில் அவர்களுக்குத் தேவதூஷணமாக ஆயிற்று. ஆகையினால் அவர்கள் இயேசுவை மறுபடியும் பிலாத்துவிடம் அழைத்துச் செல்கிறார்கள். (லூக்கா 22:66-23:5). பிலாத்து இயேசுவை ஏரோதிடம் அனுப்புகிறான். ஏரோது இயேசுகிறிஸ்துவைப் பரியாசம் பண்ணிவிட்டு, அவரை மறுபடியும் பிலாத்துவிடமே அனுப்பி விடுகிறான். பிலாத்து கடைசியில் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக் கொடுக்கிறான். (லூக்கா 23:6-26)

தீர்க்கதரிசன எண் - 50

"நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள்............" (லூக்கா 22:67-69) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா22:67-68 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. லூக்கா 22:69 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

இயேசு கிறிஸ்துவே மேசியா. இதை நிரூபிப்பதற்கு அவர் ஏற்கெனவே பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். ஆனால் அவர்கள் இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கவில்லை. ஆகையினால் இப்போது இயேசு அவர்களிடம் "நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள், என்னை விடுதலை பண்ணவுமாட்டீர்கள். இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார்" என்று கூறுகிறார். (லூக்கா 22:67-69; மத் 26:63-65).

"நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான்" - எபிரெய மொழியில் ஒரு காரியத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்வதற்குப் பயன்படுத்தும் வார்த்தை. இயேசு கிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினார். இது யூதருக்கு தேவதூஷணமாகத் தெரிகிறது. இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு அவர்கள் இதை ஒரு காரணமாகக் கூறினார்கள். (யோவான் 8:40).

23 அதிகாரம்

5. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (மத் 27:1,11; மாற்கு 15:1; யோவான் 18:28; 19:8)

லூக்கா 23:1 அவர்களுடைய கூட்டத்தாரெல்லாரும் எழுந்திருந்து, அவரைப் பிலாத்து வினிடத்திற்குக் கொண்டுபோய்:

லூக்கா 23:2 இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்.

லூக்கா 23:3 பிலாத்து அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.

லூக்கா 23:4 அப்பொழுது பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் ஜனங்களையும் நோக்கி: இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்றான்.

லூக்கா 23:5 அதற்கு அவர்கள்: இவன் கலிலேயா நாடுதொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதேயா தேசமெங்கும் உபதேசம்பண்ணி, ஜனங்களைக் கலகப் படுத்துகிறான் என்று வைராக்கியத்தோடே சொன்னார்கள்.

"அவர்களுடைய கூட்டத்தாரெல்லாரும் எழுந்திருந்து, அவரைப் பிலாத்துவினிடத்திற்குக் கொண்டு போனார்கள்" - பிரதான ஆசாரியர், மூப்பர், பிசாசின் வல்லமைகள் ஆகியவற்றிற்குத் திரளான கூட்டத்தார் செவிகொடுக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு இயேசு கிறிஸ்து எருசலேமிற்குள் பவனி வந்தபோது இவர்கள் இயேசுவை "ஓசன்னா" என்று கூறி, வரவேற்றார்கள். அதையெல்லாம் மறந்துவிட்டு, இப்போது ஜனங்கள் பிரதான ஆசாரியரின் பின்னால் போகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள்

1. தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்று சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம். ஆனால் இயேசு கிறிஸ்துவோ இதற்கு நேர்எதிராகச் செயல்பட்டார். (ஏசா 41:8; ஏசா 42:1; மத் 12:19).

2. ராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லை என்று இயேசு கூறியதாகக் குற்றம் சுமத்தினார்கள். ஆனால் இயேசுவோ ராயனுக்கு உரியதை ராயனுக்கும், தேவனுக்குரியதை தேவனுக்கும் கொடுங்கள் என்று கூறியிருக்கிறார். (லூக்கா 20:25).

3. இராயனுக்குப் பதிலாக தாமே ராஜா என்று இயேசு கிறிஸ்து கூறியதாக அவர்மீது குற்றம் சுமத்தினார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அப்படிச் சொல்லவில்லை. தமது ராஜ்ஜியம் இந்த உலகத்திற்குரியதல்ல என்று இயேசு ஏற்கெனவே கூறியிருக்கிறார். (யோவான் 18:36). ஜனங்கள் இயேசுவை ராஜாவாக்க முயற்சி பண்ணியபோது அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தமது ராஜ்ஜியத்திற்கு ஏற்றவேளை இன்னும் வரவில்லையென்று இயேசு அவர்களுக்கு உபதேசம் பண்ணினார். (யோவான் 6:15; லூக்கா 19:11-27; அப் 1:6-7) யூதருக்கு ராஜவாகப் பிறந்திருக்கிறவர் என்பதை இயேசு கிறிஸ்து அங்கீகரிக்கிறார். ஆனாலும் தமது ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்கு இது ஏற்ற வேளையல்ல என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

"இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" - கண்ணியமான நபர் யாரும் இயேசு கிறிஸ்துவிடம் எந்தக் குற்றத்தையும் காணமுடியாது. அவருடைய உபதேசத்திலும் குறைகூறமுடியாது.

"கலகப்படுத்துகிறான்" - லூக்கா 23:2 -இல் கலகப்படுத்துதல் (pervert) என்னும் வார்த்தையைவிட இந்த வசனத்தில் பயன் படுத்தப்பட்டிருக்கும் (stirreth up) என்னும் வார்த்தை சற்றுக் கடினமான வார்த்தையாகும். பிலாத்துவிற்கு முன்பாக ஜனங்களால் எதிர்த்துப் பேசமுடியவில்லை.

23 அதிகாரம்

இயேசு கிறிஸ்து தம்மை யூதருடைய ராஜா என்று அங்கீகரித்ததினால் பிலாத்து, அவர்மீது பொறாமையாக இருந்தான். சீஷருக்கு எதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டைக் கூட மறந்துவிட்டான். இருந்தாலும், இயேசு கிறிஸ்துவிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லையென்று நியாயமாகக் கூறுகிறான்.

கலகப்படுத்து (stirreth up) - ἀνασείω - anaseioo - 383

வினைச்சொல் - ஏவி விடு, கலகப்படுத்து

6. ஏரோது இயேசுவை பரியாசம் பண்ணுகிறான் - (23:6-12) (13:31)

லூக்கா 23:6 கலிலேயா என்பதைப் பிலாத்து கேட்டபொழுது, இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்து,

லூக்கா 23:7 அவர் ஏரோதின் அதிகாரத்துக் குள்ளானவர் என்றறிந்து, அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்பினான்.

லூக்கா 23:8 ஏரோது இயேசுவைக் குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்க வேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு,

லூக்கா 23:9 அநேக காரியங்களைக் குறித்து அவரிடத்தில் வினாவினான். அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.

லூக்கா 23:10 பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேல்பிடிவாதமாய்க் குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள்.

லூக்கா 23:11 அப்பொழுது ஏரோது தன் போர்ச்சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான்.

லூக்கா 23:12 முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள்.

"ஏரோது" - கலிலேயாவின் ஆளுநரான ஏரோது அந்திபாஸ் (Herod Antipas). இவன் யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணினவன். பஸ்கா ஆசரிப்பதற்காக ஏரோது எருசலேமிற்கு வந்திருக்கிறான். குற்றமில்லாத ஒரு மனுஷனைக் கொல்லும் பொறுப்பிலிருந்து தப்பிப்பதற்கு பிலாத்து எடுத்துக் கொண்ட முதலாவது முயற்சி. ஏரோது ஒரு கலிலேயன். ஒருவேளை ஏரோது இயேசுவைத் தண்டித்தாலும் தண்டிப்பான். விடுதலை பண்ணினாலும் விடுதலை செய்வான். இயேசு கிறிஸ்துவை விடுதலை பண்ணுவதற்கு மேலும் மூன்று முறை முயற்சி பண்ணுகிறான். ஒவ்வொரு முறையும் இயேசுவிடத்தில் குற்றமில்லை என்பதை அறிக்கை செய்கிறான். (லூக்கா 23:13-23).

"ஏரோது அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டான்" - ஏரோது அடுத்த முறை இயேசுவைப் பார்க்கும்போது, மிகுந்த வருத்தமடைவான். தன்னுடைய பாவங்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பைப் பெற்றுக் கொள்வான். நித்திய ஆக்கினையிலிருந்து இயேசு கிறிஸ்துவால் தன்னை விடுவிக்க முடியும் என்று அப்போது நினைப்பான். ஏரோதுவினுடைய முழங்கால்களும் எல்லா முழங்கால்களும், கர்த்தருக்கு முன்பாக முடங்கும். (பிலி 2:9-11).

"வெகுநாள்" - இயேசுவைக் காணும்படி வெகுநாளாய் ஏரோது ஆசைப்பட்டுக் கொண்டிருந்தான். இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்தான். அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்க வேண்டுமென்று ஏரோது விரும்பினான். அதனால் அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். இயேசுவைப் பரியாசம் பண்ணியதற்காக அவனுடைய நியாயத்தீர்ப்பு நாளில் ஏரோது மிகுந்த வேதனைப்படுவான்.

23 அதிகாரம்

"அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினான்" - இயேசுகிறிஸ்து அற்புதங்களைச் செய்கிறவர் என்பது ஏரோதுவிற்கு நன்றாக தெரிந்திருந்தது. இருந்தாலும் பரிசேயரைப் போல அவன் இயேசுவைப் பரியாசம் பண்ணினான். இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்தார். மனுஷருக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காகவே அவர் அற்புதங்களைச் செய்தார். மனுஷரைத் திருப்திப்படுத்துவதற்காக அவர் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது அவர் இன்றும் நம் மூலமாக அற்புதங்களைச் செய்கிறார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12).

"அடையாளம்" (a sign) - இயேசுவே மேசியா என்பதை உறுதிபண்ணுவதற்கு ஏரோது ஒரு அடையாளத்தைக் காணவேண்டுமென்று விரும்பினான். இயேசு கிறிஸ்து ஏற்கெனவே பல அற்புதங்கள் மூலமாகவும், அடையாளங்கள் மூலமாகவும் தாமே மேசியா என்பதை நிரூபித்திருக்கிறார். மூன்று வருஷ காலமாக அவன் இயேசு கிறிஸ்து செய்த காரியங்களைக் கேட்டறிந்து, மனந்திரும்பியிருந்திருக்கலாம். தனக்குக் கிடைத்த எல்லா வாய்ப்புக்களையும், ஏரோது தவறவிட்டுவிட்டான். அவனொரு மாய்மாலக்காரன். இயேசு கிறிஸ்துவிற்கு அவனுடைய மாய்மாலம் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகையினால் இயேசு கிறிஸ்து மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. (லூக்கா 23:9).

அடையாளம் (miracle) - σημεῖον - **seemeion** - 4592

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அடையாளம், அற்புதம், அதிசயம்

"பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேல் பிடிவாதமாய்க் குற்றஞ்சாட்டிக் கொண்டே நின்றார்கள்" - இயேசு கிறிஸ்து ஒரு பதிலும் சொல்லாமல் அமைதியாக இருக்கிறார். பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் தம்மீது குற்றம் சாட்டுவதற்கு அனுமதிக்கிறார்.

பிடிவாதமாய் (vehemently) - εὐτόνως - **eutonoos** - 2159

வினையடை - பிடிவாதமாய், பலமாய் **(forcibly)** - இந்த வார்த்தை இந்த வசனத்திலும், அப் 18:28 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"ஏரோது தன் போர்ச்சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணினான்" - இயேசு கிறிஸ்துவைப் பரியாசம்பண்ணி, அவரைப் பிலாத்துவிடம் திருப்பி அனுப்பி விட்டான். இயேசு கிறிஸ்து பரியாசம் பண்ணப்பட்டபோது, யூதருக்கு மிகவும் சந்தோஷமாக இருந்திருக்கும்.

"மினுக்கான வஸ்திரம்" **(shining, brilliant)** - வெள்ளைநிற வஸ்திரம். ரோமாபுரியில் தலைவர்கள் அணியும் வெள்ளைநிற வஸ்திரம். ஏரோது இயேசுவைப் பரியாசம் பண்ணுகிறான். இயேசு கிறிஸ்து தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறியதினால் அவரை ஒரு ராஜாவாக பரியாசம்பண்ணி, மினுக்கான வெள்ளை வஸ்திரத்தை இயேசு கிறிஸ்துவிற்கு உடுத்துகிறான்.

இயேசு கிறிஸ்துவிற்கு மரண தண்டனை கொடுப்பதற்கு எந்த காரணத்தையும் ஏரோதுவினால் கண்டுபிடிக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்து ஒரு குற்றமும் செய்யவில்லை என்பது மறுபடியுமாக நிரூபணமாகிறது. யூதேயாவின் ஆட்சியாளரும், கலிலேயாவின் ஆட்சியாளரும், இயேசுகிறிஸ்துவிடம் எந்தக் குற்றத்தையும் காணவில்லை. ஆகையினால் இயேசு கிறிஸ்துவிற்கு மரணதண்டனை கொடுக்கக்கூடாது. இருந்தாலும் தேவனுடைய தெய்வீக சித்தம் ஏற்கெனவே வெளிப்படுத்தப் பட்டுவிட்டது. ஜனங்களின் பாவத்திற்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்க வேண்டும். இது தேவனுடைய சித்தம்.

மினுக்கான (gorgeous) - λαμπρός - **lampros** - 2986

பெயரடை - மினுக்கான, பிரகாசமான, தெளிவான

"முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள்" - பிலாத்து கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளில் கலந்தான். இதனால் கலிலேயனாகிய ஏரோதுவும், பிலாத்துவும் பகைவரானார்கள். (லூக்கா 13:1-2)

23 அதிகாரம்

7. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (மத் 27:15; மாற்கு 15:7; யோவான் 18:38)

லூக்கா 23:13 பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் அதிகாரிகளையும் ஜனங்களையும் கூடி வரச்செய்து,

லூக்கா 23:14 அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடு கிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை.

லூக்கா 23:15 உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே.

லூக்கா 23:16 ஆனபடியால் இவனை தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்.

லூக்கா 23:17 பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்த படியால் அப்படிச் சொன்னான்.

லூக்கா 23:18 ஜனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக் கேட்டார்கள்.

லூக்கா 23:19 அந்த பரபாசென்பவன் நகரத்தில் நடந்து ஒரு கலக்கத்தினிமித்தமும் கொலை பாதகத்தினிமித்தமும் காவலிலே வைக்கப்பட்டிருந்தான்.

லூக்கா 23:20 பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய், மறுபடியும் அவர்களிடத்தில் பேசினான்.

லூக்கா 23:21 அவர்களோ: அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள்.

லூக்கா 23:22 அவன் மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: ஏன், இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே; ஆகையால் நான் இவனை தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்.

லூக்கா 23:23 அப்படியிருந்தும் அவரைச் சிலுவையில் அறையவேண்டுமென்று அவர்கள் உரத்த சத்தத்தோடு கேட்டுக்கொண்டேயிருந் தார்கள். அவர்களும் பிரதான ஆசாரியரும் இட்ட சத்தம் மேற்கொண்டது.

லூக்கா 23:24 அப்பொழுது அவர்கள் கேட்டுக் கொண்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்புசெய்து,

லூக்கா 23:25 கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலில் போடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக்கொண்டபடியே விடுதலை யாக்கி, இயேசுவையோ அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்.

லூக்கா 23:26 அவர்கள் இயேசுவைக் கொண்டு போகிறபோது, நாட்டிலி ருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள்.

"இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை" - இயேசுகிறிஸ்துவிடம் ஒரு குற்றமும் காணவில்லை என்று பிலாத்து இரண்டாம் முறையாக அறிக்கை செய்கிறான். கலிலேயாவின் தேசாதிபதியாகிய ஏரோதும், இயேசுவின்மீது ஒரு குற்றமும் சுமத்தவில்லை என்று பிலாத்து கூறுகிறான்.
(லூக்கா 23:4,13-15) பிலாத்து இப்போது இயேசுவை விடுவிக்கத் திட்டமிடுகிறான். இயேசுவை இன்னும் கொஞ்சம் தண்டித்தால் ஜனங்கள் திருப்தியடைந்து விடுவார்கள் என்று நினைத்தான். ஆனால் அவனுடைய எண்ணம் தவறு. இயேசுவை எப்படியும்

23 அதிகாரம்

கொல்ல வேண்டுமென்று ஜனங்கள் தீர்மானமாக இருந்தார்கள். அதன்பின்பு, இயேசுவை விடுதலை பண்ண வேண்டுமா அல்லது பரபாசை விடுதலைபண்ண வேண்டுமா என்று கேட்கிறான். ஒருவேளை இயேசுவை விடுதலை பண்ண வேண்டும், குற்றவாளியாகிய பரபாசை கொல்ல வேண்டும் என்று ஜனங்கள் கூறுவார்கள் என்று நினைத்தான். மறுபடியும் அவனுடைய எண்ணம் தவறாகிவிட்டது.

"எல்லாரும்" **(all at once)** - ஜனங்கள் எல்லாரும் மொத்தமாக சத்தமிட்டு, கேட்கிறார்கள். பிலாத்து குழம்பி விடுகிறான். தனது தீர்மானத்தை மாற்றிக் கொள்கிறான். பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய், மறுபடியும் அவர்களிடத்தில் பேசினான். ஆனால் ஜனங்களோ பிலாத்துவிற்குச் செவிசாய்க்க வில்லை. (லூக்கா 23:20-22)

"ஏன், இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்?" - இந்தக் கேள்விக்கு அவர்களால் பதில் கூறமுடியவில்லை. பிலாத்து இந்தக் கேள்வி கேட்டதினால், ஜனங்களுடைய கோபமும், வேகமும் அதிகமாயிற்று.

கேட்டுக்கொண்டேயிரு **(instant)** - **ἐπίκειμαι - epikeimai** - 1945

வினைச்சொல் - நெருக்கு, கேட்டுக்கொண்டேயிரு **(to press upon, be urgent)** (லூக்கா 7:4; அப் 26:7; ரோமர் 12:12; 2தீமோ 4:2). தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே யிருக்கிறார்கள், அவசரமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

"மேற்கொண்டது" - இயேசுகிறிஸ்துவை விடுதலை பண்ண வேண்டுமென்று பிலாத்து விரும்பினான். இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று ஜனங்கள் விரும்பினார்கள். ஜனங்களே ஜெயித்தார்கள். பிலாத்து ஜனங்களுடைய சித்தத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான். (லூக்கா 23:23-26)

"அவர்கள் இயேசுவைக் கொண்டு போகிறபோது, நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்து கொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள்" - (மத் 27:31-34; மாற்கு 15:20-23)

8. அழும் ஸ்திரீகள்

லூக்கா 23:27 திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள்.

லூக்கா 23:28 இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.

லூக்கா 23:29 இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும்.

லூக்கா 23:30 அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக் கொள்ளுங்களென்றும் சொல்லத் தொடங்குவார்கள்.

லூக்கா 23:31 பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள் என்றார்.

"ஸ்திரீகள்" - ஆதியிலே ஏவாள் பாவம் செய்தாள். சாத்தானால் வஞ்சிக்கப்பட்டாள். இந்த ஸ்திரீகளோ சாத்தானால் வஞ்சிக்கப் படாமல் இயேசுவிற்குப் பின்சென்றார்கள். (1தீமோ 2:14)

"அவருக்காகப் புலம்பி அழுதார்கள்" - தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு புலம்பி அழுதார்கள்.

23 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 51

"எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள்பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்............" (லூக்கா 23:28-31) இந்தத் தீர்க்கதரிசனம் கிபி. 70-இல் எருசலேம் அழிக்கப்பட்ட போது நிறைவேறிற்று.

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஸ்திரீகள் எருசலேமில் உள்ளவர்கள். கலிலேயாவிலிருந்து வந்தவர்கள் அல்ல. (லூக்கா 23:49,55) இந்த ஸ்திரீகள் தங்களுக்காகவும், தங்கள் பிள்ளைகளுக்காகவும் அழவேண்டும். 40 வருஷங்களுக்குப் பின்பு, எருசலேம் பட்டணத்திற்கு வரப்போகும் அழிவை இயேசு கிறிஸ்து காண்கிறார். எருசலேம் பட்டணம் அழிக்கப்படும். எருசலேமில் உள்ளவர்கள் கொலைசெய்யப்படுவார்கள். (லூக்கா 21:20-24)

"இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும்" - எருசலேமை ரோமாபுரியார் முற்றுகையிட்டார்கள். பசியினாலும், பட்டினியினாலும் ஆயிரக்கணக்கான சிறுபிள்ளைகள் மடிந்துபோனார்கள். அப்போது ஏராளமான ஸ்திரீகள் இந்த வாக்கியங்களைக் கூறியிருப்பார்கள்.

"அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக் கொள்ளுங்களென்றும் சொல்லத் தொடங்குவார்கள்" - "அப்பொழுது" என்னும் வாக்கியம் எருசலேம் கிபி. 70-இல் அழியப்போகும் தீர்க்கதரிசனத்தோடு தொடர்புடையது. வெளி 6:12-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆறாவது முத்திரையை இந்த வசனம் குறிப்பிடாது. தானியேலின் 70 ஆவது வாரத்தின் முதல் பாதிப்பகுதியில் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, ஆறாவது முத்திரையைப் பற்றிய காரியம் நிறைவேறும். எருசலேம் ஜனங்கள் எப்படியும் சாகப்போகிறார்கள். ஆனாலும் தங்களுக்கு இப்படிப்பட்ட மரணம் வரக்கூடாது என்று நினைத்து இந்த வசனங்களைக் கூறுவார்கள்.

"பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்" - இது யூதருடைய வழக்குச்சொல். இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், கிபி. 70 ஆம் ஆண்டில் யூதருக்கு வரும் பாடுகளையும் இந்த வாக்கியம் ஒப்பிட்டுக் கூறுகிறது. இயேசு கிறிஸ்து பச்சை மரத்திற்கு ஒப்பானவர். அழகானவர், கனிகொடுக்கிறவர். யூதர்கள் பட்ட மரத்திற்கு ஒப்பானவர்கள். மரித்துப் போனவர்கள். கனியற்றவர்கள். ஒரு பாவமும் செய்யாத இயேசு கிறிஸ்துவையே ரோமாபுரியார் சிலுவையில் அறைவார்கள் என்றால் பாவத்தில் மூழ்கியிருக்கும் யூதருக்கு அவர்கள் அதிகமான தண்டனையைக் கொடுப்பார்கள் என்று இந்த வாக்கியம் விளக்குகிறது. பச்சைமரம் இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தைக் குறிக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் மனுஷத்துவத்தைக் குறிக்கும் காரியங்கள்

1. மானிடப்பெயர்கள் (மத் 1:1,21; மத் 2:2; மத் 8:20; மத் 9:19; யோவான் 1:29,41; யோவான் 4:25; யோவான் 20:16; ரோமர் 1:3; 1கொரி 15:45; வெளி 5:5; வெளி 22:16)
2. மானிட தாய் (ஆதி 3:15; ஏசா 7:14; ஏசா 9:6-7; ஏசா 11:1; மத் 1:18-23; கலா 4:4)
3. மானிட குழந்தைப்பருவம் (லூக்கா 2:16), பிள்ளைப்பருவம் (லூக்கா 2:40,52), வளர்ந்து பெரியவரான பருவம் (1தீமோ 2:5)
4. மானிட சரீரமும், மாம்சமும் (யோவான் 1:14; எபி 2:14-18; 1யோவான் 4:1-6)
5. எல்லா மனுஷரையும் போலவே மனுஷனாக இருந்தார். (எபி 2:9-18; எபி 4:14-16)
6. பூமியில் மனுஷ ஜீவியம் (லூக்கா 2:40,52; யோவான் 5:30-46; யோவான் 6:57; யோவான் 7:16; யோவான் 8:27-29; பிலி 2:5-11; எபி 2:9-18; எபி 4:14-16; எபி 5:7-9)

23 அதிகாரம்

7. மனுஷருக்குரிய வரையறைகள் இருந்தது. சரீரத்திலும் ஆவியிலும் வளர்ந்தார். (லூக்கா 2:40,52), அழுதார் (யோவான் 11:35), பசியண்டாயிற்று (மத் 4:1-11; மாற்கு 11:12), தாகம் உண்டாயிற்று (யோவான் 4:7; யோவான் 19:28), உறங்கினார் (மத் 8:24), களைப்படைந்தார் (யோவான் 4:6), வருத்தப்பட்டார் (ஏசா 53:3-4), சரீர வேதனையை அனுபவித்தார் (லூக்கா 22:44; 1பேதுரு 3:18; 1பேதுரு 4:1); பிதாவிடம் இரக்கத்திற்காக ஜெபித்தார் (மத் 26:36-40; லூக்கா 22:15-27), சோதிக்கப்பட்டார் (மத் 4;எபி 4:14-16), சரீரத்தில் மரித்தார் (யோவான் 19:30; அப் 1:3; அப் 2:23; 1பேதுரு 2:24), மறுபடியும் உயிர்த்தெழுந்தார், நித்திய காலமாக ஜீவிக்கிறார் (லூக்கா 24:49; யோவான் 20:27; 1கொரி 5; சக 13:6)

9. **இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்** - (மத் 27:33; மாற்கு 15:22; யோவான் 19:16)

லூக்கா 23:32 குற்றவாளிகளாகிய வேறே இரண்டு பேரும் அவரோடேகூடக் கொலை செய்யப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்கள்.

லூக்கா 23:33 கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்த பொழுது, அங்கே அவரையும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளி யையும் சிலுவைகளில் அறைந்தார்கள்.

லூக்கா 23:34 அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்.

லூக்கா 23:35 ஜனங்கள் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடனேகூட அதிகாரிகளும் அவரை இகழ்ந்து: இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும் என்றார்கள்.

லூக்கா 23:36 போர்ச்சேவகரும் அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொடுத்து:

லூக்கா 23:37 நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம் பண்ணினார்கள்.

லூக்கா 23:38 இவன் யூதருடைய ராஜா என்று, கிரேக்கு லத்தீன் எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது.

"குற்றவாளிகள்" **(malefactors)** - திருடர்கள், குற்றம் புரிந்தவர்கள், துன்மார்க்கர். இயேசு கிறிஸ்துவோடு இரண்டு பேரைச் சிலுவையில் அறைந்தார்கள். சிறிது வேளைக்குப் பின்பு மேலும் இரண்டுபேரைச் சிலுவையில் அறைந்தார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். இவர்களுடைய கருத்தின்படி ஐந்துபேர்கள் சிலுவையில் அறையப்பட்டிருக்க வேண்டும். (மத் 27:38)

"கபாலஸ்தலம்" **(Calvary)** - எபிரெய மொழியில் கொல்கொதா **(Golgotha)** என்று அழைக்கப்படுகிறது. இந்த மலை பார்ப்பதற்குக் கபாலம் அதாவது மண்டையோடு போலவே இருக்கும். (மத் 27:33)

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" - இயேசுகிறிஸ்துவின் கடைசி ஏழு ஜெபங்களை லூக்கா எழுதியிருக்கிறார். (லூக்கா 3:21, அப் 7:60)

"அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்" - (மத் 27:35; மாற்கு 15:24; யோவான் 19:23)

"அவரை இகழ்ந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் பக்கமாக திரும்பி, அவரைப் பரியாசம்பண்ணி இகழ்ந்தார்கள். (லூக்கா 16:14; சங் 2:4; சங் 22:7; சங் 35:16).

23 அதிகாரம்

"இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளட்டும்" - அவர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய ஊழியத்தையும் அறியாதிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனை இரட்சித்துக் கொண்டால் நமக்கு இரட்சிப்பு இல்லை. (மத் 16:25; மாற்கு 8:35; லூக்கா 9:24; லூக்கா 17:33).

"போர்ச்சேவகரும்.........அவரைப் பரியாசம் பண்ணினார்கள்" - இவர்கள் ரோமாபுரியாரின் போர்ச்சேவகர்கள். யூதருடைய தேவாலயத்து சேவகர்கள் அல்ல. இவர்கள் ராயனுக்கு விசுவாசமாக இருப்பார்கள். இயேசு கிறிஸ்து தம்மை யூதரின் ராஜா என்று கூறியது போர்ச்சேவகர்களுக்குப் பிடிக்கவில்லை. தங்கள் ராயனுக்கு விரோதமாகக் கூறப்பட்ட அவமானமாகக் கருதினார்கள். இதனால் அவர்களும் இயேசுவைப் பரியாசம் பண்ணினார்கள்.

"நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள்" - யூதமார்க்கத்துத் தலைவர்களும், புறஜாதியாரும் இயேசு கிறிஸ்துவைப் பரியாசம் பண்ணுகிறார்கள். இந்த வசனங்களில் நாம் மூன்று விதமான பரியாசங்களைப் பார்க்கிறோம். அவையாவன:

1. யூதமார்க்கத்தாரின் பரியாசம் - "இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்து வானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும்". (லூக்கா 23:35)

2. போர்ச்சேவகர் - "நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக் கொள்" (லூக்கா 23:37)

3. சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் - "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்" (லூக்கா 23:39)

" இவன் யூதருடைய ராஜா என்று, கிரேக்கு லத்தீன் எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது" - (மாற்கு 15:26)

10. சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் மனந்திருந்துகிறான்

லூக்கா 23:39 அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்.

லூக்கா 23:40 மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட் பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?

லூக்கா 23:41 நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவை களுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்க வில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு,

லூக்கா 23:42 இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.

லூக்கா 23:43 இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்" - இயேசு கிறிஸ்துவோடு மேலும் நான்குபேர் சிலுவையில் அறையப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறவர்கள் இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஏற்கெனவே இரண்டு கள்ளர்கள் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டார்கள். இப்போது குற்றவாளிகளில் ஒருவன் என்று வாசிக்கிறோம். ஒருவேளை இரண்டு கள்ளர்களும், இரண்டு குற்றவாளிகளும் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கலாம் என்பது இவர்களுடைய வியாக்கியானம். (மத் 27:44; மாற்கு 15:32).

லூக்கா – தொகுப்புரை

23 அதிகாரம்

குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவைப் பரியாசம் பண்ணினான். மற்றவனோ தனது குற்றத்தை உணர்ந்து, இயேசு கிறிஸ்துவிடம் மன்னிப்புக் கோருகிறான்.

மனந்திரும்பிய குற்றவாளியின் சுபாவங்கள்

1. தேவனுக்குப் பயந்தான் (லூக்கா 23:40)
2. மற்றவன் தேவனுக்குப் பயப்படாமல் இருந்ததினால் அவனைக் கடிந்து கொண்டான். (லூக்கா 23:40)
3. தன்னுடைய ஆக்கினையையும், தன்னுடைய பரிதாபமான நிலையையும் அங்கீகரிக்கிறான். (லூக்கா 23:40)
4. தான் நியாயப்படி தண்டிக்கப்படுவதாக அறிவிக்கிறான். (லூக்கா 23:41)
5. இயேசு கிறிஸ்து ஒரு குற்றமும் செய்யவில்லையென்று அறிக்கையிடுகிறான். (லூக்கா 23:41)
6. இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறான். (லூக்கா 23:42)
7. இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்ஜியத்தில் வெற்றியோடு வருவார் என்று தன்னுடைய விசுவாசத்தை அறிக்கை செய்கிறான். (லூக்கா 23:42)
8. இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தையும், மன்னிப்பையும் கோருகிறான். (லூக்கா 23:42)

தீர்க்கதரிசன எண் - 52

"இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" - (லூக்கா 23:43) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து பூமியின் பாதாளத்திற்குச் சென்று சிறைப்பட்டவர்களை விடுவித்து வந்தபோது, இவனுடைய ஆத்துமாவையும் விடுவித்து வந்தார். (எபே 4:8-10; சங் 16:10; மத் 12:40; எபி 2:14-15). சிலுவையில் தொங்கிய மற்றொரு குற்றவாளி நரகத்திற்குப் போனான். (லூக்கா 16:19-31; வெளி 20:11-15)

"பரதீசு" - இந்த வசனத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் பரதீசு பூமியின் ஆழத்தில் இருக்கிறது. மூன்றாம் வானத்தில் இந்தப் பரதீசு இல்லை. (2கொரி 12:1-3) இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு முன்பாக மரித்துப்போன பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் பரதீசியில் இருந்தது. இயேசுகிறிஸ்து மரித்த பின்பு, பரதீசு என்னப்படும் பாதாளத்திற்குச் சென்று, அங்கு சாத்தானால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த பரிசுத்தவான்களை விடுவித்து மீட்டுக் கொண்டு வந்தார். அவர்களில் சிலுவையில் மரித்த மனந்திரும்பிய குற்றவாளிகளில் ஒருவனும் இருந்திருப்பான். அவன் இயேசுவோடு வானத்திலுள்ள பரதீசிற்கு மற்ற பரிசுத்தவான்களோடு போயிருப்பான். (2கொரி 12:1-4; வெளி 2:7, லூக்கா 16:23)

11. இயேசுவின் மரணம் - (மத் 27:45; மாற்கு 15:33; யோவான் 19:28)

லூக்கா 23:44 அப்பொழுது ஏறக்குறை ஆறாம் மணி நேரமாயிருந்தது; ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று.

லூக்கா 23:45 சூரியன் இருளடைந்து, தேவாலயத்தில் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது.

லூக்கா 23:46 இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்.

லூக்கா 23:47 நூற்றுக்கு அதிபதி சம்பவித்ததைக் கண்டு: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினான்.

லூக்கா 23:48 இந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்திருந்த ஜனங்க ளெல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப் போனார்கள்.

லூக்கா 23:49 அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கலி லேயாவிலிருந்து அவருக்குப் பின்சென்று வந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

23 அதிகாரம்

"ஆறாம் மணி நேரம்" - மதியம் 12 மணி

"ஒன்பதாம் மணிநேரம்" - மாலை 3 மணி.

"தேவாலயத்தில் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது" - (மத் 4:6; மத் 27:51)

"ஜீவனை விட்டார்" (commend, Commit or entrust) - (சங் 31:5; அப் 7:59; 1பேதுரு 2:23). இயேசு கிறிஸ்து தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். தேவனை மனுஷனால் கொல்லமுடியாது. ஆகையினால் இயேசு கிறிஸ்து தமது ஜீவனை ஒப்புக் கொடுக்கிறார்.

"ஜீவன்" (spirit) - சரீர மரணத்தின்போது, ஆவியும், ஆத்துமாவும் சரீரத்தை விட்டுப் பிரியும். (யாக் 2:26) இயேசு கிறிஸ்து மரித்த போது, அவருடைய சரீரத்தை கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். சாத்தானால் சிறைப்பிடிக்கப் பட்டவர்களை மீட்பதற்காக அவர் பாதாளத்திற்குச் சென்றார். (லூக்கா 23:43)

"மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான்" - இது நூற்றுக்கதிபதி சம்பவித்ததைக் கண்டு, கூறிய வார்த்தை. இவன் ஏற்கெனவே இயேசு கிறிஸ்துவை "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்று கூறியிருக்கிறான். (மத் 27:54)

"தங்கள் மார்பில் அடித்துக்கொண்டார்கள்" - பயங்கரமான காட்சிகளையும், அற்புதமான நிகழ்ச்சிகளையும் ஜனங்கள் கண்டார்கள். தாங்கள் மிகப்பெரிய பாவம் செய்திருப்பதை உணர்ந்தார்கள். ஆகையினால் தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு, தங்களுக்குக் கேடுண்டாக இப்படிப்பட்ட தவறுகளைச் செய்துவிட்டோமே என்று அழுது புலம்பினார்கள்.

"அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கலிலேயாவிலிருந்து அவருக்குப் பின்சென்று வந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் தூரத்தில் நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருசிலர் சிலுவைக்கருகில் சிறிது நேரம் இருந்தார்கள். (யோவான் 19:25-27) அதன்பின்பு, சிலுவையை விட்டு, சற்றுத் தூரத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (லூக்கா 23:49; மத் 27:55-56).

12. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (மத் 27:57; மாற்கு 15:42; யோவான் 19:38)

லூக்கா 23:50 யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான்; அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான்.

லூக்கா 23:51 அவன் யூதருடைய பட்டணங்களி லொன்றாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவனும், தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும், யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான்.

லூக்கா 23:52 அவன் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு,

லூக்கா 23:53 அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்.

லூக்கா 23:54 அந்த நாள் ஆயத்த நாளா யிருந்தது; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று.

லூக்கா 23:55 கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து,

23 அதிகாரம்

லூக்கா 23:56 திரும்பிப்போய், கந்தவர்க்கங் களையும் பரிமள தைலங்களையும் ஆயத்தம் பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

"யோசேப்பு" - இயேசு கிறிஸ்துவின் இரண்டு இரகசிய சீஷர்கள் அவரை அடக்கம் பண்ணினார்கள். நிக்கொதேமுவும், யோசேப்புமே அந்தச் சீஷர்கள். (யோவான் 3:1-9; யோவான் 7:50; யோவான் 19:38-39).

"யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான்" - யோசேப்பும், நிக்கொதேமுவும் இயேசுவிற்காகப் பேசினார்கள். (யோவான் 7:50) இருவரும் ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தினர்கள். (லூக்கா 23:50; யோவான் 3:1,10). இயேசுவைக் கொலை செய்ய வேண்டுமென்று ஆலோசனைச் சங்கம் தீர்மானம் பண்ணியபோது, இவர்கள் இருவரும் அந்தத் தீர்மானத்திற்குத் தங்களுடைய சம்மதத்தை வழங்கவில்லை.

"தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவன்" - இஸ்ரவேல் தேசத்தில் இருந்த பக்திமான்கள் எல்லோருமே தேவனுடைய ராஜ்ஜியத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். (லூக்கா 2:25,38; லூக்கா 19:11; அப் 1:6-7).

கேள் (begged) - αἰτέω - aiteoo - 154

வினைச்சொல் - கேள், வேண்டிக்கொள், விண்ணப்பம் பண்ணு **(required)** (லூக்கா 23:23) **(desired)** (லூக்கா 23:25).

"அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப் படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்" - யோசேப்பு ஒரு ஐசுவரியவான். இவன் மூலமாக ஏசா 53:9 ஆவது வசனம் நிறைவேறுகிறது. (மத் 27:57; மாற்கு 14:51; மாற்கு 15:46)

"அந்த நாள் ஆயத்தநாளாயிருந்தது" - பண்டிகையின் ஆயத்தநாள்.

"ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று" - இது வாரத்தின் ஓய்வுநாள் அல்ல. பண்டிகையின் முதலாவது நாள். இது பிரதான ஓய்வுநாள். புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதலாவது ஓய்வுநாள் பிரதான ஓய்வுநாளாகும். நிசான் மாதம் 15 ஆம் தேதி இந்த ஓய்வுநாள் ஆசரிக்கப்படும். இந்த நாள் எந்தக் கிழமையில் வந்தாலும் அதை யூதர்கள் பிரதான ஓய்வுநாளாகவே ஆசரிப்பார்கள். இயேசு கிறிஸ்து கல்லறையில் மூன்று முழு இரவுகளும், மூன்று முழு பகல்களும் அடக்கம்பண்ணப்பட்டிருந்தார். (மத் 12:40).

24 அதிகாரம்

VII. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1. உயிர்த்தெழுதலுக்கு கர்த்தருடைய தூதனின் சாட்சி - (மத் 28:1; மாற்கு 16:1; அப் 1:11)

லூக்கா 24:1 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள்.

லூக்கா 24:2 கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப் பட்டிருக்கிறதைக் கண்டு,

லூக்கா 24:3 உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல்,

லூக்கா 24:4 அதைக்குறித்து மிகுந்த கலக்கமடைந் திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள்.

லூக்கா 24:5 அந்த ஸ்திரீகள் பயப்பட்டு தலைகவிழ்ந்து தரையை நோக்கி நிற்கையில், அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?

லூக்கா 24:6 அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்.

லூக்கா 24:7 மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள்.

லூக்கா 24:8 அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவுகூர்ந்து,

“வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே” - வாரத்தின் முதலாம்நாள் என்பது சனிக்கிழமை மாலை சூரியன் அஸ்தமனமாகும் வேளையிலிருந்து, ஞாயிற்றுக்கிழமை மாலை மறுபடியும் சூரியன் அஸ்தமனமாகும் வேளை வரையிலும் உள்ள 24 மணி நேரம் கொண்ட நாள். ஸ்திரீகள் ஞாயிற்றுக்கிழமை காலையில் கல்லறையினிடத்தில் வந்தார்கள். இயேசு கிறிஸ்து ஏற்கெனவே உயிர்த்தெழுந்து விட்டதைக் கண்டார்கள். இயேசு கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, உயிர்த்தெழுந்தார். அவருடைய சரீரம் கல்லறையில் இருந்தது. அவர் பாதாளத்திற்குச் சென்று சிறைப்பட்டிருந்த பரிசுத்தவான்களை விடுதலை பண்ணினார். (மத் 12:40; மத் 28:1; மாற்கு 16:1; யோவான் 20:1)

“கர்த்தராகிய இயேசு” - இந்த வாக்கியம் புதிய ஏற்பாட்டில் 33 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவே அவற்றின் முதலாவது பயன்பாடாகும். இந்த வாக்கியம் வெளி 22:20 ஆவது வசனத்தில் கடைசித் தடவையாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. “கர்த்தராகிய இயேசுவே வாரும்”.

“பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள்” - மத்தேயுவும், மாற்குவும் ஒரே ஒரு தூதனைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறார்கள். ஒருவேளை ஒரு தூதன் கல்லறையிலும், மற்றொரு தூதன் கல்லறையை மூடியிருந்த கல்லின் அருகிலும் இருந்திருக்கலாம். லூக்கா கல்லறை நிகழ்ச்சியைத் தெளிவாக விளக்குகிறார்.

“உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?” - இயேசு கிறிஸ்து சரீரப்பிரகாரமாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார். அவர் நித்திய காலமாக ஜீவிக்கிறார். (லூக்கா 24:5-51; 1கொரி 15:1-23; ரோமர் 8:34; எபே 1:20-23; எபி 7:8,25; வெளி 1:18)

24 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 53

"மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டும்" (லூக்கா 24:7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (மத் 28:8; மாற்கு 16:8; யோவான் 20:11)

லூக்கா 24:9 கல்லறையை விட்டுத் திரும்பிப் போய், இந்தச் சங்கதிகளெல்லாவற்றையும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தார்கள்.

லூக்கா 24:10 இவைகளை அப்போஸ்தலருக்குச் சொன்னவர்கள் மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், இவர்களுடனேகூட இருந்த மற்ற ஸ்திரீகளுமே.

லூக்கா 24:11 இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீண்பேச்சாகத் தோன்றினதினால், அவர்கள் இவர்களை நம்பவில்லை.

"பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும்" - சீஷர்களுக்குப் பொதுவாகக் கூடும் இடம் ஒன்று இருந்திருக்க வேண்டும். ஒருவேளை அவர்கள் கடைசி இராப்போஜனப்பந்தியிருந்த இடமாக இருக்கலாம். இந்த மேலறையில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரிக்காகக் காத்திருந்தார்கள். (லூக்கா 22:12; அப் 1:13)

"மகதலேனா மரியாள்" - வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு மரியாள்களில் ஒரு நபர். இயேசு கிறிஸ்து இவளைக் குணப்படுத்தினார். (மாற்கு 16:9; லூக்கா 8:2-3). இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தபோது அவள் அங்கு இருந்தாள். (மத் 27:56; மாற்கு 15:40; யோவான் 19:25), கல்லறையிலும் அவள் இருந்ததாக வாசிக்கிறோம். (மத் 27:61; மத் 28:1-7; மாற்கு 15:47; மாற்கு 16:1-7; லூக்கா 23:49,55; லூக்கா 24:1-7; யோவான் 20:1,11-13). இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு அவரை முதலாவது பார்த்தவளும் இந்த மகதலேனா மரியாளே. (மாற்கு 16:9; யோவான் 20:14-18).

"யோவன்னாள்" - கூசாவின் மனைவி. இவன் ஏரோதின் காரியக்காரன். இயேசுவின் சீஷர்களில் ஒருவன். (லூக்கா 8:3; லூக்கா 24:10).

"யாக்கோபின் தாயாகிய மரியாள்" - வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு மரியாள்களில் ஒரு நபர். இவள் கிலெயோப்பாவின் மனைவி. இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி. (மத் 27:56; மாற்கு 15:40; யோவான் 19:25) இவள் மற்ற ஸ்திரீகளோடு கல்லறையில் இருந்தாள். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு இவளும் ஒரு சாட்சி. (மத் 27:61; மத் 28:1; மாற்கு 15:47; மாற்கு 16:1; லூக்கா 24:10).

"யாக்கோபு" - அல்பேயுவின் குமாரன். இயேசுவின் உறவினன். யூதாசின் (யூதாஸ்காரியோத்து அல்ல) சகோதரன். மத்தேயு, செலோத்தே என்னப்பட்ட சீமோன் ஆகியோரின் சகோதரன். (லூக்கா 6:16). பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன். (மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப் 1:13) இந்த யாக்கோபும், மத் 13:55; மாற்கு 6:3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யாக்கோபும் வெவ்வேறு நபர்கள். இந்த யாக்கோபு இயேசுவின் கூடப்பிறந்த சகோதரன். லூக்கா 8:19). இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபும், இந்த யாக்கோபும் அப் 1:13-14 ஆகிய வசனங்களில் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வீண்பேச்சு (idle tales) - λῆρος - leeros – 3026

லூக்கா - தொகுப்புரை

24 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - வீண்பேச்சு **(silly nonsense)** - இது ஒரு மருத்துவச் சொல். ஜன்னி, குடிவெறியில் உளறுதல், காய்ச்சல் அதிகமாகும்போது அனத்துதல் என்று பொருள்படும். இந்த வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"அவர்கள் இவர்களை நம்பவில்லை" - இவர்கள் கூறியது வீண்பேச்சாகத் தோன்றியது. வீண்பேச்சை யாரும் நம்புவதில்லை.

3. வெறுமையான கல்லறை - (லூக் 24:34)

லூக்கா 24:12 பேதுருவோ எழுந்திருந்து, கல்லறையினிடத்திற்கு ஓடி, அதற்குள்ளே குனிந்துபார்க்கையில், சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக்கண்டு, சம்பவித்ததைக் குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டுபோனான்.

"பேதுருவோ எழுந்திருந்து, கல்லறையினிடத்திற்கு ஓடி, அதற்குள்ளே குனிந்துபார்க்கையில், சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக்கண்டு, சம்பவித்ததைக் குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டுபோனான்" - பேதுரு ஆறு காரியங்கள் செய்ததாக நாம் இந்த வசனத்தில் வாசிக்கிறோம். அவையாவன:

1. எழுந்திருந்தான்.
2. ஓடினான்
3. குனிந்து பார்த்தான்.
4. சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக் கண்டான்.
5. திரும்பிப் போனான்
6. ஆச்சரியப்பட்டான்.

"சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக் கண்டான்" - இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை சீஷர்கள் திருடி விட்டதாக யூதர்கள் பொய்குற்றம் சுமத்தினார்கள். சரீரத்தை யாரும் திருடவில்லை. அவர் உயிர்த்தெழுந்தார் என்பதற்கு இந்த வசனம் ஒரு முக்கியமான சாட்சியாகும். (மத் 28:12-15)

4. இயேசு இரண்டு சீஷர்களுக்கு தரிசனம் கொடுக்கிறார்

(1) எம்மாவு என்னும் கிராமத்திற்குப் பிரயாணம்

லூக்கா 24:13 அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள்.

லூக்கா 24:14 போகையில் இந்த வர்த்தமானங்கள் யாவையுங்குறித்து அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள்.

"அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள்" - ஒருவன் கிலெயோப்பா, சின்ன யாக்கோபின் தந்தை. மரியாளின் சகோதரியாகிய மரியாளின் கணவன். (லூக்கா 24:10,18; யோவான் 19:25) இவன் கூடப்போனது யாரென்று தெரியவில்லை. திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் லூக்கா அவன் கூடப் போனதாகக் கூறுகிறார்கள். லூக்கா எழுபதுபேரில் ஒருவர். (லூக்கா 10) இந்தச் சுவிசேஷத்தின் ஆசிரியர் லூக்கா. ஆகையினால் லூக்கா தன் பெயரை இந்த வசனத்தில் குறிப்பிடவில்லை.

"எம்மாவு" **(Emmaus)** - யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் எம்மாவுவைப் பற்றி எழுதும்போது அது எருசலேமிலிருந்து 7 அல்லது 8 மைல் தூரத்தில் உள்ளதாக உறுதிபண்ணுகிறார். எம்மாவு எந்த இடத்தில் உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை. எருசலேமிற்குத் தென்மேற்கில் இந்தக் கிராமம் இருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள்.

24 அதிகாரம்

(2) இயேசு தரிசனம் தந்து சீஷர்களிடம் கேள்வி கேட்கிறார்

 லூக்கா 24:15 இப்படி அவர்கள் பேசி, சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்து போனார்.

 லூக்கா 24:16 ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது.

 லூக்கா 24:17 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார்.

"மறைக்கப்பட்டிருந்தது" - இந்த வார்த்தைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "க்ராதேயோ" (krateo) என்பதாகும் (to hold in check, restrain; to retain, keep, lay hold upon). இயேசு கிறிஸ்துவை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. தம்முடைய தோற்றத்தில் அவர் ஒருவேளை மாற்றம் அடைந்திருக்கலாம். அல்லது அங்கு வேறுஏதாவது அற்புதம் நடைபெற்றிருக்கலாம். இந்த வசனத்திலிருந்து நாம் ஒரு காரியத்தைத் தெளிவாக காண்கிறோம். இயேசு கிறிஸ்துவால் தோன்றவும் முடியும், மறையவும் முடியும். தம்மை அறிவிக்கவும் முடியும், மறைக்கவும் முடியும். பல்வேறு வழிகளில் தோன்றுமாறு தம்மை மாற்றவும் அவரால் முடியும். (மாற்கு 16:9,12; லூக்கா 24:16,31,36-43; யோவான் 20:14-16,19,26; யோவான் 21:4; வெளி 1:12-17; வெளி 10:1-3). அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்ததாக லூக்கா 24:16,31; யோவான் 20:14-15 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். மற்ற வசனங்களில் வாசிக்கும்போது அவர் தமது தோற்றத்தை மாற்றினார் எனவும் அவர் சாதாரணமாக தோன்றும் பிரகாரமாகத் தோன்றவில்லை என்றும் தெரியவருகிறது. ஆகையினால் அவர்கள் அவரை அறிய முடியவில்லை.

மறைக்கப்பட்டிருந்தது (holden) - κρατέω - krateoo - 2902

வினைச்சொல் - பிடி, தழுவு, கைக்கொள், மறைக்கப்பட்டிரு, மன்னியாதிரு, பற்றிக்கொள், ஏந்திக்கொள்

"நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்ன" என்று இயேசு அவ்விருவரிடமும் கேட்கிறார். அதற்கு அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்.

சமீப நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அவர்கள் பேசிக்கொண்டு போனார்கள். இயேசு கிறிஸ்து அவர்கள் பேசுவதை அறிந்து கொள்ள விரும்பினார். தமக்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினார். அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் அவரைப் பற்றி நடந்த காரியங்களை எல்லாம் கூறினார்கள். (லூக்கா 24:19-24) ஒருவர் உண்மையிலே அந்நியராக இருப்பார் என்றால் அவர்கள் கூறிய காரியம் அந்நியருக்குப் புரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை.

(3) நிகழ்ச்சிகளின் வரலாறு

 லூக்கா 24:18 அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்.

 லூக்கா 24:19 அவர்: எவைகள் என்றார். அதற்கு அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்.

 லூக்கா 24:20 நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள்.

24 அதிகாரம்

லூக்கா 24:21 அவரே இஸ்ரவேலை மீட்டி ரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது.

லூக்கா 24:22 ஆனாலும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சில ஸ்திரீகள் அதிகாலமே கல்லறையினிடத்திற்குப் போய்,

லூக்கா 24:23 அவருடைய சரீரத்தைக் காணாமல், திரும்பிவந்து, அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி, எங்களைப் பிரமிக்கப் பண்ணினார்கள்.

லூக்கா 24:24 அப்பொழுது எங்களிலே சிலர் கல்லறையினிடத்திற்குப் போய், ஸ்திரீகள் சொன்னபடியே கண்டார்கள்; அவரையோ காணவில்லை என்றார்கள்.

"அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம்" - இந்த நிகழ்ச்சிகள் அவர்களுக்குப் பிரமிப்பாக இருந்தது. நடைபெற்றவைகளை அவர்களால் நம்ப முடியவில்லை. வீண்பேச்சுகள்போல அவர்களுக்குத் தோன்றிற்று. (லூக்கா 24:11) தேவதூதர்கள் உண்மையிலேயே தோன்றினார்கள். இயேசுவைத் தேடி கல்லறைக்குப் போனவர்கள் கல்லறை வெறுமையாய் இருந்ததைக் கண்டார்கள். இயேசுவை அவர்களால் காணமுடியவில்லை. (லூக்கா 24:24)

(4) இயேசு அவர்களுடைய அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார்

லூக்கா 24:25 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே,

லூக்கா 24:26 கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி,

லூக்கா 24:27 மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங் களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.

"விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே" - இதன் கிரேக்கச் சொல் "அநோதோஸ்" **(anoeetos) (dull, foolish, slow of understanding, faith)** ஞானமற்றவர்கள் **(unwise)** (ரோமர் 1:14); புத்தியில்லாதவர்கள் **(fool)** (லூக்கா 24:25); புத்தியில்லாத **(foolish)** (கலா 3:1,3; 1தீமோ 6:9; தீத்து 3:3).

புத்தியில்லாத **(fool)** - **ἀνόητος** - **anoeetos** - 453

பெயரடை - புத்தியில்லாத, மூடமான, புத்தியீனமான, மதிக்கேடான

"தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும்" - எல்லா தீர்க்கதரிசனங்களையும் நாம் விசுவாசிக்க வேண்டும். தேவனுடைய மகிமையையும், தேவ ராஜ்ஜியத்தின் மகத்துவத்தையும் யூதர்கள் விசுவாசித்தார்கள். புறஜாதியார் மத்தியில் இந்தக் காரியங்கள் அவர்களை மேன்மைப்படுத்திற்று. ஆனால் யூதர்கள் மேசியாவின் தாழ்மையையும், பாடுகளையும் விசுவாசிக்கவில்லை. யூதர்களின் எதிர்பார்ப்புகளை இயேசு கிறிஸ்து நிறைவேற்றவில்லை. ஆகையினால் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள்.

"கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா" - இயேசு கிறிஸ்து பாடுபடவும் வேண்டும். இயேசுகிறிஸ்துவைப் பற்றி பல தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளன. அவருடைய மகிமை, அவருடைய வல்லமை ஆகியவற்றைப் பற்றி பல தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அதேசமயத்தில் மேசியா பாடுபடவும் வேண்டும் என்றும் தீர்க்கதரிசனம் கூறுகிறது. வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது தீர்க்கதரிசனம் மேசியாவின் பாடுகளையும், சாத்தானோடு அவர் செய்ய

24 அதிகாரம்

வேண்டிய போராட்டங்களையும் பற்றிக் குறிப்பிடுகிறது. (ஆதி 3:15) இதுதவிர, சங் 22; ஏசா 53; யாத் 12 ஆகிய அதிகாரங்கள் மேசியாவின் பாடுகளை விளக்குகின்றன. மேசியாவின் பாடுகளை விளக்கும் வசனப்பகுதிகளும் பல உள்ளன. (ஏசா 50:4-7; ஏசா 52:14; தானி 9:26; சக 13:6-7) ஆபேலின் காலத்திலிருந்து பலிகளும், காணிக்கைகளும் பாடுகளுக்கு அடையாளமாகும். மோசே முதல் எல்லா தீர்க்கதரிசிகள் வரையிலும் மேசியாவின் பாடுகளைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து பாடுபட்ட பின்பு, அவர் தமது மகிமையில் பிரவேசிப்பார். (லூக்கா 24:25-27).

(5) இயேசு அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார்

லூக்கா 24:28 அத்தருணத்தில் தாங்கள் போகிற கிராமத்துக்குச் சமீபமானார்கள். அப்பொழுது அவர் அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார்.

லூக்கா 24:29 அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று, என்று அவரை வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்.

லூக்கா 24:30 அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்.

லூக்கா 24:31 அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்.

லூக்கா 24:32 அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி, வேத வாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக் கொண்டு,

"அவர் அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார்" - இயேசுகிறிஸ்து அவர்களை ஏமாற்றவில்லை. இரண்டு சீஷர்களும் தாங்கள் போகவேண்டிய ஊருக்குச் சமீபமாய் போனார்கள். தம்மை அவர்கள் வீடுகளில் ஏற்றுக் கொள்ளுமாறு இயேசு கிறிஸ்து அவர்களைப் பலவந்தம் பண்ணவில்லை. ஆனால் அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று, என்று அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுடைய வேண்டுதலை ஏற்றுக் கொண்டு, அவர்களோடு தங்குவதற்காக அந்த ஊருக்குள்ளே போனார்.

வருந்திக்கேட்டுக்கொள் (constrained) - παραβιάζομαι - parabiazomai - 3849

வினைச்சொல் - வருந்திக்கேட்டுக்கொள் (to constrain one by entreaties; to compel by force) - இந்தக் கிரேக்கச் சொல் இந்த வசனத்திலும் அப் 16:15 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்" - கர்த்தருடைய பந்தியில் இயேசு கிறிஸ்து செய்த காரியங்களைப் போல உள்ளது. (மத் 26:26) அவர்களுடைய கண்களைத் திறப்பதற்காகவும், தாம் அவர்களுக்கு அந்நியரல்ல என்பதை நிரூபிப்பதற்காகவும் இயேசு கிறிஸ்து இவ்வாறு செய்திருக்கலாம்.

24 அதிகாரம்

"உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்" - இயேசு கிறிஸ்துவை அவர்களால் காணமுடியவில்லை. ஒரு தரிசனம் கண்டதாகத்தான் அவர்களால் கூறமுடியும். தேவதூதனைக் கண்டதுபோலக் கண்டார்கள். (லூக்கா 24:23) ஆனால் இயேசு கிறிஸ்து அவர்களோடு இருந்தது தரிசனமல்ல. உண்மை. இயேசு கிறிஸ்து அவர்களோடு பல மைல்கள் நடந்துபோனார். அவர்களிடம் கேள்விகளைக் கேட்டார். வேதவசனங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறினார். தங்களோடு தங்க வேண்டும் என்று கேட்டதற்கு அவர்களுக்குச் சம்மதம் தெரிவித்தார். அத்துடன் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். ஆகையினால் இது தரிசனம் அல்ல. உண்மையிலேயே நடைபெற்ற காரியம்.

(6) அப்போஸ்தலர்களிடம் அவர்களுடைய அறிவிப்பு

லூக்கா 24:33 அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போய், பதினொருவரும் அவர்களோடிருந் தவர்களும் கூடியிருக்கக் கண்டு:

லூக்கா 24:34 கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக் கேட்டு,

லூக்கா 24:35 வழியில் நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள்.

"அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள்" - அவர்கள் எம்மாவு ஊருக்கு என்ன காரியமாகப் போனார்கள் என்று தெரியவில்லை. அதையெல்லாம் தள்ளிவைத்து விட்டு, உடனே எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள். தாங்கள் இயேசு கிறிஸ்துவைக் கண்டதையும், அவர் தங்களுக்குக் கூறியதையும் மற்றவர்களுக்கு உடனே அறிவிப்பதற்காக எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள்.

"அவர்களோடிருந்தவர்களும்" - எல்லா விசுவாசிகளும். அவர்கள் எல்லோரும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததைப் பற்றி கலந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு முழு நாளும் ஆயிற்று. கிறிஸ்துவும், தேவதூதர்களும் மரியாளுக்கும், மற்ற ஸ்திரீகளுக்கும், பேதுருவிற்கும் தரிசனமானார்கள். (லூக்கா 24:34) கல்லறையைத் தேடிப்பார்த்தார்கள். இயேசுவை அங்கே காணவில்லை. இந்தச் செய்தி எருசலேம் முழுவதும் வேகமாகப் பரவிற்று. வாரத்தின் முதலாவது நாளில் விசுவாசிகளெல்லாம் ஓரிடத்தில் கூடியிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து பல காரியங்களைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வாரத்தின் இரண்டாம் நாளில் இரவுப் பொழுதுமாயிற்று. அப்படிப்பட்ட சமயத்தில் எம்மாவு ஊரிலிருந்து ஒரு ஆச்சரியமான செய்தியோடு இவ்விருவரும் அங்கு வருகிறார்கள். அவர்கள் கூறியதைக் கேட்ட பின்பு, அன்றிரவும், அவர்களால் தூங்கியிருக்க முடியாது.

"கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக் கேட்டார்கள்" - சீஷர்களும், விசுவாசிகளும் கூடியிருந்து, ஒவ்வொரு விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கடைசியாகப் பேசின காரியம். கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து, சீமோனுக்குத் தரிசனமான நிகழ்ச்சியாகும். கர்த்தர் இப்போது பேதுருவை மன்னித்து விட்டார். பேதுரு மனந்திரும்பி விட்டான். சகோதரரைப் பலப்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கிறான். (லூக்கா 22:32)

"வழியில் நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள்" - எம்மாவு ஊரிலிருந்து வந்த இருவரும் தங்கள் அனுபவங்களைக் கூறினார்கள். அவர்கள் இவர்களைக் குறித்து, பேசிக்கொண்டிருக்கையில் இயேசு திடீரென்று அவர்கள் நடுவிலே தோன்றுகிறார். (லூக்கா 24:36) இயேசு திடீரென்று வந்ததினால் சீஷர்கள் பயந்துவிட்டார்கள். அவரை ஏதோ ஒரு ஆவி என்று நினைத்தார்கள். (லூக்கா 24:37).

24 அதிகாரம்

"உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்" - இயேசு கிறிஸ்துவை அவர்களால் காணமுடியவில்லை. ஒரு தரிசனம் கண்டதாகத்தான் அவர்களால் கூறமுடியும். தேவதூதனைக் கண்டதுபோலக் கண்டார்கள். (லூக்கா 24:23) ஆனால் இயேசு கிறிஸ்து அவர்களோடு இருந்தது தரிசனமல்ல. உண்மை. இயேசு கிறிஸ்து அவர்களோடு பல மைல்கள் நடந்துபோனார். அவர்களிடம் கேள்விகளைக் கேட்டார். வேதவசனங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறினார். தங்களோடு தங்க வேண்டும் என்று கேட்டதற்கு அவர்களுக்குச் சம்மதம் தெரிவித்தார். அத்துடன் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். ஆகையினால் இது தரிசனம் அல்ல. உண்மையிலேயே நடைபெற்ற காரியம்.

(6) அப்போஸ்தலர்களிடம் அவர்களுடைய அறிவிப்பு

லூக்கா 24:33 அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போய், பதினொருவரும் அவர்களோடிருந் தவர்களும் கூடியிருக்கக் கண்டு:

லூக்கா 24:34 கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக் கேட்டு,

லூக்கா 24:35 வழியில் நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள்.

"அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள்" - அவர்கள் எம்மாவு ஊருக்கு என்ன காரியமாகப் போனார்கள் என்று தெரியவில்லை. அதையெல்லாம் தள்ளிவைத்து விட்டு, உடனே எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள். தாங்கள் இயேசு கிறிஸ்துவைக் கண்டதையும், அவர் தங்களுக்குக் கூறியதையும் மற்றவர்களுக்கு உடனே அறிவிப்பதற்காக எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள்.

5. இயேசு பத்து பேருக்கு தரிசனம் தருகிறார் - தோமா அங்கில்லை - (யோவான் 20:19)

லூக்கா 24:36 இவைகளைக்குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.

லூக்கா 24:37 அவர்கள் கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள்.

(7) இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலுக்கு சான்று - (யோவான் 21:14)

லூக்கா 24:38 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிற தென்ன?

லூக்கா 24:39 நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி,

லூக்கா 24:40 தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

லூக்கா 24:41 ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில்: புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார்.

லூக்கா 24:42 அப்பொழுது பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள்.

லூக்கா 24:43 அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்து,

24 அதிகாரம்

லூக்கா 24:44 அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவை களெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்.

லூக்கா 24:45 அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும் படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி:

"நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?" - இயேசு கிறிஸ்து அவர்களோடு பல வருஷங்களாக கூடவே இருந்திருக்கிறார். அவர் ஒரு ஆவியல்ல. அவருக்கு மானிட சரீரம் உள்ளது. எலும்பும், சதையும் அவருடைய சரீரத்தில் இருக்கிறது. அவருடைய ஆவியும், ஆத்துமாவும் மரிக்கவில்லை. சரீரம் மாத்திரமே மரித்திருக்கிறது. ஆகையினால் சரீரம் மாத்திரமே உயிர்த்தெழும். (யாக் 2:26; சங் 16:10; 1கொரி 15) உள்ளான மனுஷன் நித்தியமானவன். (1பேதுரு 3:4) மனுஷன் பாவம் செய்யும்போது அவனுடைய ஆத்துமா தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுகிறது. (ஏசா 59:2; எபே 2:1-9; 1தீமோ 5:6).

இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலுக்குச் சான்றுகள்

1. என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள் (லூக்கா 24:39).
2. இது நான்தான். வேறு நபரல்ல. (லூக்கா 24:39).
3. என்னைத் தொட்டுப்பாருங்கள் (லூக்கா 24:39).
4. நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது (லூக்கா 24:39).
5. தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். (லூக்கா 24:40; யோவான் 20:20).
6. பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையையும் அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்தார். (லூக்கா 24:41-43).
7. அவர் உயிர்த்தெழுந்தார். அவருடைய சரீரம் உயிர்த்தெழுந்தது. அவருடைய ஆத்துமாவும், ஆவியும் மரிக்கவில்லை. ஆகையினால் அவை உயிர்த்தெழாது. இயேசு கிறிஸ்துவின் ஆவியும், ஆத்துமாவும் பாதாளத்திற்குச் சென்று சாத்தானால் சிறைப் பிடிக்கப்பட்டவர்களை விடுதலை யாக்கினார். (சங் 16:10; லூக்கா 23:43; எபே 4:8-10; 1பேதுரு 3:9; எபி 2:14-15) அவருடைய சரீரம் மட்டுமே மரித்தது. (யாக் 2:26) ஆகையினால் அவருடைய சரீரம் மட்டுமே உயிர்த்தெழும். (லூக்கா 24:39; சக 13:6; அப் 1:11)
8. அவர்கள் அவர் பாதங்களைத் தழுவினார்கள். (மத் 28:9; லூக்கா 24:39-40).
9. அவர்கள் அவரைக் கண்டார்கள். (மத் 28:17; யோவான் 20:19-20).
10. இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை அவர்களால் காணமுடியவில்லை. (லூக்கா 24:3,23). ஏனென்றால் அவருடைய சரீரம் உயிர்த்தெழுந்து விட்டது. (லூக்கா 24:39-43)
11. உயிரோடு இருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? (லூக்கா 24:5-6; யாக் 2:26)
12. இயேசு கிறிஸ்து தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்துபோனார். அவர்களுக்கு அப்பம் பிட்டுக் கொடுத்தார். அவர்கள் அவரை அறிந்தார்கள். (லூக்கா 24:15,30-31).
13. அவர் உயிரோடிருக்கிறார் என்று தேவதூதர்கள் கூறினார்கள். (லூக்கா 24:23; மத் 28:6-7; மாற்கு 16:6).

24 அதிகாரம்

14. இயேசு கிறிஸ்து தாமே அவர்கள் நடுவிலே நின்றார். (லூக்கா 24:36; யோவான் 20:19) அவர்கள் இயேசுவை ஆவி என்று நினைத்தார்கள். (லூக்கா 24:37) தாம் ஒரு ஆவியல்ல என்று இயேசு சீஷர்களிடத்தில் கூறினார். அவர்களோடு பல வருஷங்களாக கூட இருந்த தமது சரீரமே அது என்பதை உறுதிபண்ணினார். (லூக்கா 24:39-43).

15. எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதா யிருந்தது. (லூக்கா 24:46). சிலுவையில் எது அறையப்பட்டதோ அது உயிர்த்தெழுந்தது.

16. தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். (லூக்கா 24:50-51)

17. கர்த்தரை கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டுபோய்விட்டார்கள் என்று மகதலேனா மரியாள் கூறினாள். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவேண்டும் என்னும் வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. (யோவான் 20:2,9) காணாமல்போனதாக கூறப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை பன்னிரெண்டு தடவைகளுக்கு மேலாகக் கண்டார்கள். (யோவான் 21:14) இயேசுவின் சரீரத்தை யாரும் எடுத்துக் கொண்டுபோய்விடவில்லை. இயேசு கிறிஸ்துவின் சரீரம் உயிர்த்தெழுந்தது. அவர் இன்றும், பிதாவின் வலதுபாரிசத்தில் ஜீவிக்கிறார். (மாற்கு 16:19; அப் 2:33; ரோமர் 8:34; எபி 1:3; எபி 12:2).

18. அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்று தோமா கூறினான். எட்டு நாட்களுக்குப் பின்பு, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு தோமாவிற்குக் கிடைத்தது. (யோவான் 20:25-29; லூக்கா 24:37-43).

19. எல்லா உயிர்த்தெழுதல்களிலும் சரீரங்கள் மறுபடியும் ஜீவனைப் பெறும். உயிர்த்தெழுதலுக்கும், ஆத்துமாக்களுக்கும் சம்மந்தமில்லை. (1இராஜா 17:17-24; 2இராஜா 4:18-37; 2இராஜா 13:21; யோவான் 11) கிறிஸ்துவின் சரீரம் உயிர்த்தெழ வேண்டியதில்லை என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் அது துர்உபதேசம். இயேசுவின் சரீரம் உயிர்த்தெழுந்தது என்று வேதவசனங்கள் கூறுகின்றன. ((அப் 2:31; அப் 4:33; ரோமர் 1:4; 1பேதுரு 3:21)

20. நித்தியத்தில் நாம் இயேசு கிறிஸ்துவைக் காணும்போது, "உம் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள்" என்பார். (சக 13:6).

21. அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். அவர் மறுபடியும் உயிரோடு எழும்பினார். (1கொரி 15:1-58) இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை விசுவாசிக் காதவர்கள் இரட்சிக்கப்படவே முடியாது.

"மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும்" - பஞ்சாகமம் மோசேயின் நியாயப்பிரமாணமாகும். தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் என்பது யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல், ராஜாக்கள், தானியேலைத் தவிர மற்ற எல்லாத் தீர்க்கதரிசிகளும் ஆகும். சங்கீதங்கள் என்பது வேதாகமத்திலுள்ள மற்ற எல்லாப் புஸ்தகங்களையும் குறிக்கும்.

24 அதிகாரம்

"வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்தார்" - அவர்களுடைய உள்ளங்களில் காணப்பட்ட எல்லா சந்தேகங்களையும், கேள்விகளையும் நிவர்த்தி பண்ணினார். (அப் 1:3) அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் போதித்தார். (யோவான் 20:22).

6. பிரதான கட்டளை - (மத் 28:18; மாற்கு 16:15; அப் 1:1-8)

லூக்கா 24:46 எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது;

லூக்கா 24:47 அன்றியும் மனந் திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப் படவும் வேண்டியது.

லூக்கா 24:48 நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

"மூன்றாம்நாள்" - (லூக்கா 9:22)

மனந்திரும்புதலின் உபதேசம்

1. பாவஅறிக்கை, விசுவாசம், பாவநிவாரணம் (2கொரி 7:8-11)
2. தேவை (லூக்கா 13:1-5)
3. அதிகாரம் (ரோமர் 10:9-10; லூக்கா 18:14)
4. எப்படி மனந்திரும்ப வேண்டும். (யோவான் 16:8; எபி 4:12; ரோமர் 2:4; 2கொரி 10:8-11)
5. தாழ்மையோடு மன்னிப்பைப் பெறவேண்டும். (1யோவான் 1:9; அப் 2:38; அப் 3:19; ரோமர் 10:9-10)
6. எல்லா ஜனங்களும் மனந்திரும்ப வேண்டும். (லூக்கா 13:1-5; லூக்கா 24:47; அப் 10:35; அப் 17:30)
7. யார் பிரசங்கிக்க வேண்டும். (லூக்கா 24:48; அப் 1:8; மத் 28:19-20; மாற்கு 16:15-20)
8. எப்படிப் பிரசங்கிக்க வேண்டும். (லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 5:31-32; 2கொரி 2:1-5; 2கொரி 4:20; ரோமர் 15:18-19,29; எபி 2:1)
9. தாமதம் பண்ணக்கூடாது (2கொரி 6:2; எபி 4:7; எபே 5:14)
10. எப்படி உறுதிப்பண்ணப்படவேண்டும். (லூக்கா 3:8; ரோமர் 1:5; ரோமர்10:16; அப் 5:32; 2கொரி 10:11)

7. உன்னதத்திலிருந்து வரும் பெலன் - (மத் 18:18)

லூக்கா 24:49 என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 54

"என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக்கா 24:49) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (அப் 2)

"என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினது" - எல்லாவிசுவாசிகளுக்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பிதா வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். (மத் 3:11; யோவான் 1:31-33; யோவான் 7:37-39; யோவான் 14:12-17,26; யோவான் 15:26; யோவான் 16:13-15; அப் 1:4-8; அப் 2:1-21,33, 38-39; அப் 5:32; அப் 10:44-48; அப் 11:14-18; அப் 15:7-13; அப் 19:1-7)

24 அதிகாரம்

"எருசலேம் நகரத்தில் இருங்கள்" - ஆதித்திருச்சபை விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எருசலேம் நகரத்திலே இருக்க வேண்டுமென்று அவர்களுக்கு இயேசு கிறிஸ்து கூறினார். (லூக்கா 24:49; அப் 1:4-8; லூக்கா 11:13).

தரிப்பிக்கப்படு **(clothed)** - ἐνδύω - **endyoo** - 1746

வினைச்சொல் - தரிப்பிக்கப்படு, உடுத்து, வஸ்திரந்தரி - **(put on)** (மத் 27:31; மாற்கு 15:20; லூக்கா 15:22); **(be clothed)** (மாற்கு 15:17; வெளி 1:13); **(be clothed in)** (வெளி 15:6; வெளி 19:14); **(arrayed in)** (அப் 12:21). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறவர் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவார். தேவனுடைய வசனம் அடையாளத்தினாலும், அற்புதத்தினாலும் உறுதிபண்ணப்படும். (யோவான் 14:12; மாற்கு 16:16-20).

பெலன் **(power)** - δύναμις - **dynamis** - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - பெலன், வல்லமை, பலத்த செய்கைகள், அற்புதங்கள், திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி **(inherent power)** - இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்குப் பெலன். (யோவான் 14:12; மாற்கு 16:17-18; அப் 1:4-8).

8. இயேசு பரமேறுகிறார் - (மாற்கு 16:29-20; யோவான் 3:13; அப் 1:9-11)

லூக்கா 24:50 பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்.

லூக்கா 24:51 அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

"தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர் ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது தங்களுடைய கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார்கள். அதுபோன்று இயேசு கிறிஸ்து அவர்களை ஆசீர்வதித்தார். (யாத் 17:12; 1இராஜா 8:22,38,54; எஸ்றா 9:5).

"பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" - (அப் 1:9-11; மாற்கு 16:19)

9. பரிசுத்த ஆவியானவருக்காக கீழ்ப்படிதலோடு காத்திருக்கிறார்கள் - (அப் 1:12-2; 13)

லூக்கா 24:52 அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்து:

லூக்கா 24:53 நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள். ஆமென்.

"அவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து இப்போது ஆராதிக்கப்படும் தேவத்துவ நபராக இருக்கிறார். (வெளி 5:8-14; வெளி 7:10).

"மிகுந்த சந்தோஷம்" - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் விளைவினால் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் பெந்தெகொஸ்தே நாள் வரையிலும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் சீஷர்களுக்குக் கிடைக்கவில்லை. (அப் 1:4-8; அப் 2:1-21,33). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறாத தேவதூதரும், மனுஷரும் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறார்கள்.

நாடோறும் **(continually)** - διαπαντός - **diapantos** - 1275

24 அதிகாரம்

"எருசலேம் நகரத்தில் இருங்கள்" - ஆதித்திருச்சபை விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எருசலேம் நகரத்திலே இருக்க வேண்டுமென்று அவர்களுக்கு இயேசு கிறிஸ்து கூறினார். (லூக்கா 24:49; அப் 1:4-8; லூக்கா 11:13).

தரிப்பிக்கப்படு (clothed) - ἐνδύω - endyoo - 1746

வினைச்சொல் - தரிப்பிக்கப்படு, உடுத்து, வஸ்திரந்தரி - (put on) (மத் 27:31; மாற்கு 15:20; லூக்கா 15:22); (be clothed) (மாற்கு 15:17; வெளி 1:13); (be clothed in) (வெளி 15:6; வெளி 19:14); (arrayed in) (அப் 12:21). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறவர் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவார். தேவனுடைய வசனம் அடையாளத் தினாலும், அற்புதத் தினாலும் உறுதிபண்ணப்படும். (யோவான் 14:12; மாற்கு 16:16-20).

பெலன் (power) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - பெலன், வல்லமை, பலத்த செய்கைகள், அற்புதங்கள், திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி (inherent power) - இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்குப்பெலன். (யோவான் 14:12; மாற்கு 16:17-18; அப் 1:4-8).

8. இயேசு பரமேறுகிறார் - (மாற்கு 16:29-20; யோவான் 3:13; அப் 1:9-11)

லூக்கா 24:50 பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்.

லூக்கா 24:51 அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

"தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர் ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது தங்களுடைய கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார்கள். அதுபோன்று இயேசு கிறிஸ்து அவர்களை ஆசீர்வதித்தார். (யாத் 17:12; 1இராஜா 8:22,38,54; எஸ்றா 9:5).

"பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" - (அப் 1:9-11; மாற்கு 16:19)

9. பரிசுத்த ஆவியானவருக்காக கீழ்ப்படிதலோடு காத்திருக்கிறார்கள் - (அப் 1:12-2; 13)

லூக்கா 24:52 அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்து:

லூக்கா 24:53 நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள். ஆமென்.

"அவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து இப்போது ஆராதிக்கப்படும் தேவத்துவ நபராக இருக்கிறார். (வெளி 5:8-14; வெளி 7:10).

"மிகுந்த சந்தோஷம்" - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் விளைவினால் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் பெந்தெகொஸ்தே நாள் வரையிலும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் சீஷர்களுக்குக் கிடைக்கவில்லை. (அப் 1:4-8; அப் 2:1-21,33). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறாத தேவதூதரும், மனுஷரும் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறார்கள்.

நாடோறும் (continually) - διαπαντός - diapantos - 1275

முன்னிடைச்சொல் - எப்பொழுதும், நாடோறும், நித்தமும் - சீஷர்கள் நாடோறும் தேவாலயத்தில் இருக்கிறார்கள். (எபி 13:15) பத்து நாட்களும் சீஷர்கள் தேவாலயத்திற்குச் சென்று, தேவனைத் துதித்தார்கள். (மாற்கு 5:5; அப் 10:2; அப் 24:16; ரோமர் 11:10; எபி 9:6)